(அ–கை) ஸர்வசாஸ்திரங்களையும் விட ஸ்ரேஷ்டமாக இருப்பதைக் கொண்டுமட்டும் இந்தப் பாகவதத்தின் ஸ்ரவணம் விதிக்கப்படவில்லை. பின்னேயோவெனில் எல்லாச் சாஸ்திரங்களுடையவும் பலரூபமாக விருப்பதுபற்றியும் இதுவே மேலான ஆதரவுடன் ஸ்ரவணஞ் செய்யத்தக்கது என்பதை இந்த ஸ்லோகத்தினுலுபதேசிக்கிறார்—

(ப–ரை) **निगमकल्पतरोः**—**निगम**=வேதமாகிற **कल्पतरोः**=சல்பவிருக்ஷத்தினுடைய **फलम्**=பழமாகவுள்ளதும், **भागवतम्**=பாகவதம் என்ற பெயருள்ளதும், [**वैकुण्ठगतम्**=வைகுண்டத்திலிருந்ததுப், **नारदेन**=நாரதமஹருஷியினுல் **ततः**=அங்கிருந்து **आनीय**=கொண்டுவந்து **मह्यम्**=என்னிடம் **दत्तम्**=கொடுக்கப்பட்டதும், **मया**=என்னுல் **शुकस्य**=சுகருடைய **मुखे**=முகத்தில், **निहितम्**=வைக்கப்பட்டதும், பிறகு] **शुकमुखात्**=சுகருடைய முகத்தினின்றும் **भुवि**=பூமியில் **गलितम्**=நழுவிவந்து சேர்ந்ததும் அதாவது:—சிஷ்யர் அவரதுசிஷ்யர் ஆகிய இலைகளில் விழுந்து பெள்ளமெள்ள சிதறுபடலே பூமியில் வந்து சேர்ந்ததும், என்பது கருத்து. **अमृतद्रवसंयुतम्**=அமிருதரூபமான சாருடன் கூடினதுமான **रसम्**=ரஸத்தை **भावुकाः**!=ரஸவிசேஷத்தையறியும் திறமைவாய்ந்த **हे रसिकाः**!=ஹேரஸிகர்காள், **आलयम्**=முக்திவரும்வரை **पिबत**=பானஞ்செய்வீர்களாக. (3) (எ–று)

குறிப்பு—மரத்தின் நுனியிலுள்ளதும் எவராலும் அனுபவிக்கவேண்டுமான ஆவலுடன் எதிர்பார்க்கப்பட்டதுமான பழத்தையே கினியானது கொத்தும் என்பதும், கிளிகொத்தின பழம் ஏனைய பழங்களைவிட மிகச் சிறந்ததாகவே இருக்கும் என்பதும் மிக்க ப்ரஸித்தமாகவுள்ளது. ஸ்ரீமத்பாகவதமென்ற இந்தப்பழமானது வேதமாகிற கல்பவிருக்ஷத்தின் நுனியில் (ஸ்ரீவைகுண்டத்தில்) முதலில்

இருந்தது. அங்கிருந்து ஸ்ரீமன் நாரதர் கொண்டுவந்து வியாஸருக்கு உபதேசித்தார். வியாஸர் சுகருக்கு உபதேசித்தார். பிறகு அவரது சிஷ்யப்ரசிஷ்ய பரம்பரையாக பூமியில் வந்தது. இவ்விதம் நிவிருத்தி நிஷ்டரான சுகாசாரியரால் அனுபவிக்கவும், உபதேசிக்கவும் பட்டிருப்பதால் இது மிக்கச் சிறப்புடையது என்பது பெறப்படுகிறது. மேலும், "**शुकमुखादमृतद्रवसंयुतम्**=அந்தச் சுகாசாரியரின் முகத்தினின்றும் நழுவிவந்தது" என்றதிலிருந்து உயரத்திலிருந்து பூமியில் விழும்பழம் உடைந்து சிதறுண்டு போவதுபோல் அல்லாது அவரது சிஷ்யப்ரசிஷ்ய பரம்பரையாகிற இலைகளில் மெதுவாய்ப் புரண்டு மெள்ளமெள்ள பூமியில் கொண்டுவரப்பட்டது என்பதும் ஆதிரஸத்தில் அற்பமும் குறைவற்றது என்பதும் பெறப்படுகிறது. மேலும், ஆனல் நாரதர் வியாஸருக்கும், வியாஸர் சுகருக்கும் உபதேசிப்பதானது பின்னரே சொல்லப்படப்போவதாக இருப்பினுங் கூட முன்னரே நடந்ததுபோலவே வைத்து உபதேசிக்கப்பட்டது. பின்னர்வரும் பொருளை முன்னரே உபதேசிக்கும் முறைமையொட்டியே அதாவது:—**अनागताख्यानेनैव**=அனுதியாக இருத்தல் மூலமாகவே இந்தப்பாகவத சாஸ்திரத்தின் ப்ரவிருத்தி இருப்பதே அதன் காரணமாகும். அதாவது:—இந்தப் பாகவதம் வேதமானதுபோல நித்யமாகையாலும், வியாஸாசாரியர் இதை வெளியிட்டவராக மட்டும் கொள்ளப்படுகிறரேயொழிய இதைச் செய்தவராக ஒப்பப்படவில்லையாதலாலும் இது நித்யமாகவாகிறது. ஆகவே பின்னர் வருவதை முன்னரே சொல்லுவதில் தவறு எதுவுமில்லை என்றும். மேலும் **अमृतद्रवसंयुतम्**=என்றதனால் பரமானந்தரூபமான ரஸமே இதிலுபதேசிக்கப்படுவதால் முக்திசாஸ்திரமாகவாகிறது என்பதும், **रसिकाः भावुकाः** என்றதனால் மஹாரஸிகர்களான முமுக்ஷுக்கள் இதில் அதிகாரிகள் என்பதும் **फलम्**=என்றதனால் இதுதான் மனிதஜன்மமெடுத்ததற்குச் சிறந்த பயனுகவுள்ளது என்பதும் பெறப்பட்டது. மேலும், பழத்தில் தோலையும் கொட்டையையும் தள்ளவேண்டி வருவதுபோல இந்தப் பாகவதத்தில் விலக்கவேண்டிய அம்சம் அணுவும் சொல்லப்படவில்லையென்பதும் **रसम्** என்ற பதத்தினால் தெரிவிக்கப்பட்டதாகவாகிறது. (எ—று)

नैमिशेऽनिमिषक्षेत्र ऋषयः शौनकादयः। सत्त्रं स्वर्गायलोकाय सहस्रसममासत ॥ ४ ॥ त एकदा तु मुनयः प्रातर्हुतहुताग्नयः। सत्कृतं सूतमासीनं पप्रच्छुरिदमादरात् ॥५॥ ऋषय ऊचुः—त्वया खलु पुराणानि सेतिहासानि चानघ। आख्यातान्यप्यधीतानि धर्मशास्त्राणि यान्युत ॥६॥ यानि वेदविदां श्रेष्ठो भगवान्बादरायणः। अन्ये च मुनयः सूत परावर-

---

†அநிமிஷனுன பகவானுடைய க்ஷேத்திரமான நைமிசத்தில் சௌனகாதிகளான முனிகள் ஸ்வர்க்கத்திலுள்ளவர்களாலும்கொண் டாடப்படுகின்றவரும், பக்தர்களுக்கு இருப்பிடமானவருமான பக வானுடைய ப்ராப்த்திக்குவேண்டி ஆயிரம் ஆண்டுகள் அனுஷ்டிக்க வேண்டிய ஸத்திரம் என்ற யாகத்தை அனுஷ்டித்தனர். (4) ப்ரா தஃகாலத்தில் ஹோமஞ்செய்யப்பட்டவைகளான அக்னிகளிலேயே மாலையிலும் ஹோமஞ்செய்கின்றவர்களும், முனிகளுமான அவர்கள் ஒருஸமயம் பூஜைசெய்யப்பட்டவரும், ஆஸனத்திலுட்கார்ந்தவரு மான ஸூதபௌராணிகரைப்பார்த்து ஆதரவுடன் பின்வரும் கேள் வியைக் கேட்டனர். (5) ருஷிகள் சொல்லலுற்றனர்—ஹே அனக! உம்மாலோ இதிஹாஸத்துடன் கூடின புராணங்களும், தர்மசாஸ்திரங்கள் எவைகளுண்டோ (அவைகளும்) அத்யயனஞ் செய்யப்பட்டும், பிறர்க்கு உபதேசிக்கப்பட்டும் இருக்கின்றன. (6) ஹே சூத! ஸௌம்ய! வித்வான்களுக்குள் ச்ரேஷ்டரும், பகவா

---

† निमिशक्षेत्रे=என்று பாடங்கொண்டு "ப்ரப்ஹுதேவன், தவஞ் செய்வதற்குற்ற தேசத்தை முனிகளுக்கு நேரில் காண்பிக்கவேண்டி மநோமயமான சக்கிராயுதத்தை அனுப்பி அதன் கூர் எங்கு முறிகிறதோ அதே தவத்துக்குரிய தேசமாகும் என்று சொன்னர். அதன்படி निमियின்=(மநோமயமான ப்ரப்ஹுதேவனுடைய சக்கிரத்தின்,) கூர் னது இங்கு முறிந்தது ஆனதுபற்றி இது निमिशமாகும். ஆகவே நிமிசக்ஷேத்திரமான நைமிசாரண்யத்தில்" என்று ஸ்ரீதரீயத்தில் வேறு பொருளும் கூறப்பட்டிருக்கிறது. அல்லது नैमिषक्षेत्रे=என வேறு பாடங்கொண்டு ஒரு நிமிஷத்துக்குள் அஸுரர்கள் இங்கு அழிக்கப் பட்டனர். ஆனதுபற்றி இது நைமிஷ க்ஷேத்திரமாகும் என்று வேறு பொருளும் சொல்லப்பட்டிருக்கிறது. अनिमिषक्षेत्रे என்று பாடங் கொண்டு மொழிபெயர்ப்பில் பொருள் எழுதப்பட்டிருக்கிறது.

विदो विदुः॥ ७ ॥ वेत्थ त्वं सौम्य तत्सर्वं तत्त्वतस्तदनुग्रहात्। ब्रूयुः स्निग्धस्य शिष्यस्य गुरवो गुह्यमप्युत ॥ ८ ॥ तत्र तत्राञ्जसायुष्मन्भवता यद्विनिश्चितम्। पुंसामेकान्ततः श्रेयस्तन्नः शंसितुमर्हसि ॥ ९ ॥ प्रायेणाल्पायुषः सभ्य कलावस्मिन्युगे जनाः। मन्दाः सुमन्दमतयो मन्दभाग्या ह्युपद्रुताः॥१०॥ भूरीणि भूरिकर्माणि श्रोतव्यानि विभागशः। अतः साधोऽत्र यत्सारं समुद्धृत्य मनीषया। ब्रूहि नः श्रद्दधानानां येनात्मा संप्रसीदति ॥११॥ सूत जानासि भद्रं ते भगवान्सात्वतां पतिः। देवक्यां वसुदेवस्य जातो

னுமான வியாஸர் எவற்றையறிவாரோ, ஸகுண நிர்க்குண ப்ரம்ஹத் தையறிந்தவர்களான மற்றுமுள்ள ருஷிகள் எவற்றையறிவார்களோ, அவையாவையும் அவர்களின் அனுக்கிரஹத்தினல் உண்மையாக நீர் அறிவீர். குருக்கள், பக்தியுள்ள சிஷ்யனுக்கு மிக்க ரஹஸ்ய மானவற்றையுங்கூட உபதேசிப்பரன்றே? (7–8) ஹே ஆயுஷ் மன்! அவ்வவற்றுள் ஜீவர்களுக்கு நிஸ்சிதமாக ஸ்ரேயஸ்ஸைத் தரக் கூடியதாக எது உம்மால் நிஸ்சயிக்கப்பட்டதோ அதை எங்களுக் குச் சொல்லுவீராக. (9) ஹே ஸப்ய! இந்தக் கலியுகத்திலுள்ள ஜனங்கள் பெரும்பாலும் அற்பமான ஆயுளுள்ளவர்களாகவும், மந்தர் (சோம்பேறி) களாகவும், அத்துடன் மிக்க மந்தபுத்தியுள்ளவர்களா கவும், அத்துடன் அற்பமான பாக்கியமுள்ளவர்களாகவும், (வெகு இடையூறுள்ளவர்களாகவும்) ரோகாதிகளினல் பீடிக்கப்பட்டவர் களாகவும் இருக்கின்றனர். (10) பலதறப்பட்ட கர்மங்களை யுப தேசிக்கின்ற வெகுசாஸ்திரங்கள் வெவ்வேறாக அத்தியயனஞ்செய்ய வேண்டியனவாக இருக்கின்றன. ஆனதுபற்றி ஹே ஸாதோ! இந் தச் சாஸ்திரங்களுள் எது ஸாரமானதோ, எதனல் புத்தியானது தெளியுமோ அதைச் சொந்தப் புத்தியினல் தெரிந்தெடுத்து அவ் விஷயத்தில் ஸ்ரத்தையுள்ளவர்களான எங்களுக்குச் சொல்லுவீராக.

*ஹே சூத! உமக்கு மங்களமுண்டாகுக. பக்தஸம்ரக்ஷகனான பகவான் எந்த அர்த்தவிசேஷத்தைச்செய்யவிருப்பங்கொண்டு வஸு தேவருடைய பாரியையான தேவகியினிடம் ஜனித்தாரோ, எவரு

---

* இதுமுதல் ஐந்துஸுலோகங்களினல் வேறுகேள்வியைக் கேட்கின் றனர்.

यस्य चिकीर्षया ॥१२॥ तन्नः शुश्रूषमाणानामर्हस्यङ्गानुवर्णितुम्। यस्यावतारो भूतानां क्षेमाय च भवाय च ॥ १३ ॥ आपन्नः संसृतिं घोरां यन्नाम विवशो गृणन्। ततः सद्यो विमुच्येत यद्बिभेति स्वयं भयम् ॥ १४ ॥ यत्पादसंश्रयाः सूत मुनयः प्रशमायनाः। सद्यः पुनन्त्युपस्पृष्टाः स्वर्धुन्यापोऽनुसेवया ॥१५॥ को वा भगवतस्तस्य पुण्यश्लोकेड्यकर्मणः। शुद्धिकामो न शृणुयाद्यशः कलिमलापहम् ॥ १६ ॥ तस्य कर्माण्युदाराणि परिगीतानि

டைய அவதாரமானது ப்ராணிகளின் பாலனத்துக்குவேண்டியும் விருத்திக்குவேண்டியும் ஏற்பட்டதோ, எந்த நாமத்தினுல் பயாபிமானிதேவதைகூட பயத்தையடையுமோ அந்த எவரது நாமத்தைக்கொடூரமான ஸம்ஸாரத்தையடைந்தஜீவன், விவசனுக இருந்துகொண்டு சொல்லி அந்த ஸம்ஸாரத்திலிருந்து அப்பொழுதே முக்தியையடைவானே, ஹேஸூத! எவருடைய சரணத்தை யாஸ்ரயித்தவர்களும், சாந்திமார்க்கத்தையவலம்பித்தவர்களுமான முனிகள் ஸன்னிதிமாத்திரத்தினுல்ஸேவிக்கப்பட்டவர்களாய்க்கொண்டு அந்தக்ஷணத்திலேயே பரிசுத்தமாக்குவரேயன்றி (*)எவரது பாதஸம்பந்தம்பெற்றதாயினுங்கூட கங்காதீர்த்தமானது அடிக்கடி ஸேவையினுலேயே பரிசுத்தமாக்குமே யொழிய அப்பொழுதே பரிசுத்தமாக்காதோ அவரையும்நீர் அறிந்திருக்கிறீர். ஆனதுபற்றிஹே அங்க! கேட்க விருப்பமுள்ள எங்களுக்கு அதை அடிக்கடி வர்ணிப்பீராக. (12-15) புண்ணியமான கீர்த்தியுள்ளவர்களாலும் ஸ்துதிக்கத்தக்க கர்மங்களை யுடையவரான அந்தப் பகவானுடைய, கலிமலத்தை (ஸம்ஸாரதுக்கத்தை) ப்போக்குகின்ற யசஸ்ஸை, விருத்தியில் விருப்பமுள்ள எவன்தான் கேட்காதிருப்பான். (16) ஆகவே லீலையினுல் கலை களை (ப்ரம்ஹருத்ராதி மூர்த்திகளை) த்தரிக்கின்ற அவருடைய,

---

(*) கங்கையானது அவருடைய பாதத்தினின்றும் பெருகினபோதிலும் அவரது சரணத்திலேயே அசையாது நிற்பதில்லை. ஆகவே அவருடைய பாதஸம்பந்தம் பெற்றதன்மூலம் அதுசுத்தியைத் தரும்தானுயினும் அடிக்கடி ஸேவிப்பதாற்ருன் அப்பலனுண்டாகும். ஸாதுக்களோ எப்பொழுதுமே பகவத்சரணத்யானத்துடனிருப்பதால் அப்பொழுதே பரிசுத்தமாக்குகின்றனர் என்பது கருத்து.

सूरिभिः। ब्रूहि नः श्रद्दधानानां लीलया दधतः कलाः॥ १७॥ अथाख्याहि हरेर्धीमन्नवतारकथाः शुभाः। लीला विदधतः स्वैरमीश्वरस्यात्ममायया॥ १८॥ वयं तु न वितृप्याम उत्तमश्लोकविक्रमे। यच्छृण्वतां रसज्ञानां स्वादुस्वादु पदे पदे॥ १९॥ कृतवान्किल वीर्याणि सह रामेण केशवः। अतिमर्त्यानि भगवान्गूढः कपटमानुषः॥ २०॥ कलिमागतमा-

---

நாரதாதி ஸரிகளினுல் பலவழியிலும் கானஞ்செய்யப்பட்ட ப்ரபஞ்சஸிருஷ்டி முதலிய கர்மங்களை அவற்றில் ஸ்ரத்தையுள்ள எங்களுக்குச் சொல்லுவீராக. (17)

ஹே புத்திமன்! [*]மேலும், தனது மாயையினுல் ஸ்வச்சந்தமாக லீலைகளைச் செய்கின்றவரும், ஈஸ்வரனுமான ஹரியினுடைய சுபங்களான மத்ஸ்யாதி அவதாரங்களின் கதைகளையும் சொல்லுவீராக. (18) †எந்த விக்ரமமானது ரஸமறிந்தஸ்ரோதாக்களுக்கு அடிக்கடி ருசியுள்ளவற்றைக் காட்டிலுங்கூட அதிகம் ருசியுள்ளதாக இருக்கிறதோ, உத்தம ஸ்லோகனுடைய அந்த விக்ரம (லீலா)விஷயத்தில் நாங்கள் திருப்த்தியை (கேட்டது போதுமென்ற எண்ணத்தை) அடைகின்றேமில்லை. (19) கபட மானுஷனும், (மாயையினுல்) தன்னைமறைத்துக் கொண்டவனும் பகவானுமான கேசவன் பலராமனுடன் கூட மனிதர்களிடத்தில் ஸம்பவிக்கமுடியாத கோவர்த்தனோத்தரணம் முதலிய காரியங்களைச் செய்திருக்கின்றானன்றே?. (20) ‡கலிவந்ததை யறிந்துகொண்டு அதன்மூலமுண்டான பயத்தினுல் விஷ்ணுபதத்தையடைய வெண்ணங் கொண்டு தீர்க்கஸத்ரம் என்ற நிமித்தத்தினுல் இந்த வைஷ்ண

---

[*] மூலத்திலுள்ள अथ என்ற பதத்தினுல் இது வேறுகேள்வி என்பது தெரிவிக்கப்படுகிறது.

† திரும்பவும் ஆவல்கொண்டு அவருடைய சரித்திரங்களையே கேட்க விருப்பங் கொண்டவர்களாய் அதில் தங்களுக்குப் போதுமென்ற எண்ணமுண்டாகவில்லை என்பதைத் தெரிவிக்கின்றனர்.

‡ யாஜனம், அத்யாபனம் முதலிய காரியத்திலீடுபட்ட உங்களுக்குக் கதாசிரவணத்தில் அவகாசம் ஏது எனின்? அதற்கு இதனுல் பதில் சொல்லுகின்றனர்.

ज्ञाय क्षेत्रेऽस्मिन्वैष्णवे वयम्। आसीना दीर्घसत्त्रेण कथायां सक्षणा हरेः ॥ २१ ॥ त्वं नः संदर्शितो धात्रा दुस्तरं निस्तितीर्षताम्। कलिं सत्त्वहरं पुंसां कर्णधार इवार्णवम् ॥ २२ ॥ ब्रूहि योगेश्वरे कृष्णे ब्रह्मण्ये धर्मवर्मणि। स्वां काष्ठामधुनोपेते धर्मः कं शरणं गतः॥ २३ ॥

इति श्रीमद्भागवते महापुराणे पारमहंस्यां संहितायां प्रथमस्कन्धे नैमिषेयोपाख्यान निरूपणं नाम प्रथमोऽध्यायः॥ १ ॥

க்ஷேத்திரத்தில் இருக்கின்ற நாங்கள் ஹரியின் கதையைக் கேட்கும் விஷயத்தில் அவகாச முள்ளவர்களாக இருக்கின்றோம். (21) *ஸமுத்திரத்தைத் தாண்ட வெண்ணமுள்ளவனுக்குக் கப்பலோட்டுபவன்போல, ஜீவர்களின் ஸத்வகுணத்தை யபஹரிக்கின்றதும், தாண்டுவதற்கரிதானதுமான கலியைத் தாண்டவிரும்பின எங்களுக்கு ஈச்வரனுலேயே நீர் காண்பிக்கப்பட்டீர். (22) யோகேச்வரனும், ப்ராப்ஹண ப்ரியனும், தர்மத்தைக் கவசமாகக் கொண்டவனுமான ஸ்ரீகிருஷ்ணன் சொந்த ஸ்வரூபத்தை யடைந்த பிறகு இப்பொழுது தர்மமானது யாரைச்சரணமாக அடைந்திருக்கிறது என்றனர். (23) (எ–று)

இவ்விதம் ஸ்ரீமத்பாகவத மஹாபுராண ப்ரதமஸ்கந்தத்தில் நைமிஷேயோபாக்கியானத்தில் முதலாவது அத்தியாயம் முற்றிற்று.

இரண்டாவது அத்தியாயம்.

(அ–கை) तदेवं प्रथमाद्ध्याये षट्प्रश्ना मुनिभिः कृताः। द्वितीये तूत्तरं सूतश्चतुर्णामाह तेष्वथ ॥ १ ॥

(க–ரை) இவ்விதம் முதலாவது அத்தியாயத்தில் "पुंसामेकान्ततः श्रेयः" என்றதால் ஸாதனவிஷயமான ப்ரச்னமும்(1) "ब्रूहि नः

---

* இந்த ஸமயத்தில் உம்முடைய தரிசனமானது ஈசுராணுக்கிரஹத்தினுலேயே எங்களுக்குக் கிடைத்திருக்கிறது எனத் தெரிவிக்கின்றனர்.

अथ द्वितीयोऽध्यायः ॥

व्यास उवाच—इति संप्रश्नसंहृष्टो विप्राणां रौमहर्षणिः। प्रतिपूज्य वचस्तेषां प्रवक्तुमुपचक्रमे ॥ १ ॥ सूत उवाच—यं प्रव्रजन्तमनुपेतमपेत-कृत्यं द्वैपायनो विरहकातर आजुहाव। पुत्रेति तन्मयतया तरवोऽभिनेदुस्तं

श्रद्दधानां येनात्मा संप्रसीदति" என்றதால் ஸர்வசாஸ்திர ஸாரவிஷய மான ப்ரஶ்னமும்(2) "तन्नः शुश्रूषमाणानामर्हस्यङ्गानुवर्णितुम्" என்ற தால் தேவகியினிடக்தில் அவதரித்ததகாரண விஷயமான ப்ரஶ்னமும் (3) ब्रूहि नः श्रद्दधानां लीलया दधतः कलाः" என்றதால் அவருடைய கர்மவிஷயமான ப்ரஶ்னமும்(4) "अथाख्याहि हरेर्धीमन्नवतारकथा-श्शुभाः" என்றதால் பகவதவதார கதைகளைப்பற்றிய ப்ரஶ்னமும்(5) "ब्रूहि योगेश्वरे कृष्णे ब्रह्मण्ये धर्मवर्मणि। स्वाङ्कां तामधुनोपेते धर्मः कं शरणं गतः॥" என்றதால் பகவதந்தர்த்தானத்துக்குப் பிறகு தர்ம ரக்ஷணம் செய்தது யார் என்ற ப்ரஶ்னமுமாக (6) ஆறு ப்ரஶ்னங் கள் மஹரிஷிகளால் செய்யப்பட்டன. இந்த இரண்டாவது அத் தியாயத்தில் அவற்றுள் முறையே நான்கு கேள்விகளுக்குப் பதில் சொல்லப்படுகிறது. (1) (எ–று)

வியாஸர் சொல்லலுற்றார்—ப்ராம்ஹணர்களின் இம்மாதிரி யான சிறந்தப்ரஶ்னங்களினால் நன்கு ஸந்தோஷத்தை யடைந்த ரோமஹர்ஷணரின் புத்திரரான உக்ரஶ்ரவஸ்ஸானவர் அவர்களின் வார்த்தையைப்புகழ்ந்து பதில் சொல்ல வாரம்பித்தார். (1) (*)ஸன் யாஸஞ்செய்துகொண்டு செல்லுகின்றவரும், உபநயனத்துக்கு வேண்டி ஆசாரியரையடையாதவரும், அல்லது अनुपेतम्=ஒருவரா லும் பின்தொடரப்படாதவரும், நைஷ்டிகராக இருப்பதுபற்றி கர்ம மார்க்கத்தில் ப்ரவிருத்திக்காதவருமான எவரை வியாஸர் விரஹத்தி னால் பயந்தவராய்க் கொண்டு 'ஹே புத்ரா!" என்பதாய் ப்லுத

(*) கேள்விக்குப் பதில் சொல்லவாரம்பித்தல் எனபது குரு, தேவ தை இவர்களின் நமஸ்காரந்தான் என இதுமுதல் மூன்று சுலோகங்களி னால் சொல்லுகிறார். அவற்றுள் தனது குருவான சுகாசாரியருடைய ஈசுவரியத்தை அவருடைய சரித்திரமூலமே காண்பிக்கவேண்டி முதலா வது சுலோகம் சொல்லப்படுகிறது.

सर्वभूतहृदयं मुनिमानतोऽस्मि ॥ २ ॥ यः स्वानुभावमखिलश्रुतिसारमेक-
मध्यात्मदीपमतितितीर्षतां तमोऽन्धम् । संसारिणां करुणयाऽऽह पुराणगुह्यं
तं व्याससूनुमुपयामि गुरुं मुनीनाम् ॥ ३ ॥ नारायणं नमस्कृत्य नरं चैव
नरोत्तमम् । देवीं सरस्वतीं व्यासं ततो जयमुदीरयेत् ॥४॥ मुनयः साधु
पृष्टोऽहं भवद्भिर्लोकमङ्गलम् । यत्कृतः कृष्णसंप्रश्नो येनात्मा सुप्रसीदति
॥ ५ ॥ स वै पुंसां परो धर्मो यतो भक्तिरधोक्षजे । अहैतुक्यप्रतिहता

ஸ்வரத்தினுல் அழைக்க, அப்பொழுது தன்மயமாக (சுகரூபமாக) இருப்பதன்மூலம் மரங்கள் பதில் [*]வார்த்தை சொல்லிற்றே அத்தகைய மஹிமைவாய்ந்தவரும், ஸர்வப்ராணிகளுடைய ஹிருதயத்தையும் தனது யோகபலத்தினுல் அடைந்தவரும், முனியுமான அந்தச் சுகாசாரியரை நான் வணங்கினவனுக இருக்கிறேன்.(2) †தேஹேந்திரியாதிகளையாஸ்ரயித்திருக்கின்ற ஆத்மதத்துவத்தைப்ரகாசப்படுத்துகின்றதும், தன்னிடத்தில் மட்டுமமைந்துள்ள பெருமையையுடையதும், எல்லா ஸ்ருதிகளுடையவும் ஸாரமாகவுள்ளதும், ஒப்பற்றதும், புராணங்களுக்குள் ரஹஸ்யமாகவுள்ளதுமான பாகவதத்தை எவர் ஸம்ஸாரமெனப்பெயரிய அந்த தமஸ்ஸை(அடர்ந்த இருளை)க்கடக்கவெண்ணங்கொண்ட ஸம்ஸாரிகளுக்குவேண்டி கருணையினுல் உபதேசித்தாரோ முனிகளுக்கெல்லாம் குருவான அந்த வியாஸகுமாரரைச் சரணமாகவடைகிறேன்.(3) புருஷோத்தமான நாராயணரையும், ‡நரனையும் ஸரஸ்வதீ தேவியையும், வியாஸரையும் நமஸ்கரித்துப் பின்னரே ஸம்ஸாரஜயத்தைத்தருகின்ற பாகவதத்தைச்சொல்லவேண்டும்.* (4)

ஹே முனிகாள்! உங்களால் நான் நன்கு கேட்கப்பட்டேன். எதனுல் ஆத்மா (மனது) நன்கு தெளிவையடையுமோ அத்தகைய கிருஷ்ண விஷயமான கேள்வியானது யாதுகாரணம்பற்றி கேட்கப்

---

[*] பிதாவினது ஸ்னேஹரூபமான அனுபந்தத்தைப் போக்கவேண்டி எவர் விருக்ஷரூபத்தினுல் பதில்சொன்னரோ என்பது பொருள்.
† சுகாசாரியரிடமுள்ள கிருபையை விளக்கவேண்டி இந்தச் சுலோகம் சொல்லப்படுகிறது. ‡ இவர் பகவதம்சம்வாய்ந்த ஒரு ரிஷியாவர்.
* ஸ்ரீதபௌராணிகர் ஸ்வயம் அவ்விதம் அனுஷ்டித்துப் பிறரையும் அவ்விதமே அனுஷ்டிக்கச்செய்கிறார்.

ययात्मा संप्रसीदति ॥ ६ ॥ वासुदेवे भगवति भक्तियोगः प्रयोजितः। जनयत्याशु वैराग्यं ज्ञानं यत्तदहैतुकम् ॥ ७ ॥ धर्मः स्वनुष्ठितः पुंसां विष्वक्सेनकथासु यः। नोत्पादयेद्यदि रतिं श्रम एव हि केवलम् ॥ ८ ॥

பட்டதோ அக்காரணம்பற்றி இக்கேள்வி உலகுக்கு மங்களகரமாக வன்றே இருக்கின்றது. (5) (*)எந்த மேலான தர்மத்தினுல் அதோ க்ஷஜனை பகவானிடத்தில் பலானுஸந்தானமற்றதும், இடையூறு களினுல் போக்கப்படாததுமான பக்தியானது உண்டாகுமோ, எந்தப் பக்தியினுல் மனதானது தெளியுமோ, அதுவே ஜீவர்களுக்கு மேலான தர்மமாகும்.[*] (6) †பகவானை வாஸுதேவனிடத்தில் செய்யப்பட்ட பக்தியோகமானது விரைவில் வைராக்கியத்தையுண் டாக்கி அஹைதுகமான=(வாட்டுத்தர்க்கம் முதலியவற்றுக்கு விஷய மாகவாகாத) ஔபநிஷதமான யாதொரு க்ஞானமுண்டோ அதையு முண்டாக்குகிறது. (7) தர்மமென்பது யாதுண்டோ அது விஷ்வக் ஸேனனை பகவானுடைய கதைகளில் புருஷர்களுக்கு ஆசையை யுண்டாக்காதிருக்குமானுல் நன்கு அனுஷ்டிக்கப்பட்டதாக இருப்பி னுங்கூட பயனற்ற வெரும் ஶ்ரமமென்றே அறியத்தக்கது. (ஸ்வர்க் காதி சுகத்தைத்தராதோ எனின்? அது அழியக்கூடியதாக இருப்ப தால் அது பலனுகாது என்பது கருத்து.) (8)

(*) ஸர்வசாஸ்திரார்த்த ஸாரவிஷயான எந்தக்கேள்வி முதலில் கேட்கப்பட்டதோ அதற்குப் பதில் சொல்லப்படுகிறது.

[*] ஸ்வர்க்காதிகளை யுத்தேசித்துச் செய்யப்படும் தர்மமானது அபரம்-தாழ்ந்ததென்றும், அதுவே ப்ரவிருத்திதர்மமென்றும் சொல்லப் படும். எதனுல் பகவத்குணசிரவணதிரூபமான பக்தியுண்டாகுமோ அதுவே மேலான தர்மமென்றும், அதுவே நிவிருத்தி தர்மமென்றும் சொல்லப்படும். அதுதான் அழியாத சிரேயஸ்ஸாகவுமாகும் என்பது கருத்து.

† तमेतं वेदानुवचनेन ब्राह्मणा विविदिषन्ति यज्ञेन दानेन तपसाऽनाशकेन என்ற சுருதியினுல் தர்மமானது க்ஞானத்துக்கு அங்கமாகச் சொல்லப்பட்டி ருக்க அதைப் பக்திக்கு அங்கமாகச் சொன்னது எங்ஙனமெனின்? அந் தத் தர்மமானது பக்தித்வாராவாக க்ஞானத்தை யுண்டாக்குகிறது என இதனுலுபதேசிக்கப்படுகிறது.

धर्मस्य ह्यापवर्ग्यस्य नार्थोऽर्थायोपकल्पते। नार्थस्य धर्मैकान्तस्य कामो लाभाय हि स्मृतः॥ ९ ॥ कामस्य नेन्द्रियप्रीतिर्लाभो जीवेत यावता। जीवस्य तत्त्वजिज्ञासा नार्थो यश्चेह कर्मभिः॥ १० ॥ वदन्ति तत्तत्त्वविद-स्तत्त्वं यज्ज्ञानमद्वयम्। ब्रह्मेति परमात्मेति भगवानिति शब्द्यते ॥ ११ ॥

---

†இதுவறை சொன்ன நியாயத்தையொட்டி அபவர்க்கத்தை (முக்தியை) மூடிவான பலனுகவுடைய தர்மத்துக்கு அர்த்தமானது பலனுகவாகத் தகுதியுடையதன்று. இம்மாதிரியான தர்மத்துக்கு மூறண்படாத அர்த்தத்துக்கு, காமமானது பலனுக முனிகளினுல் எண்ணப்படவுமில்லையன்றே? காமத்துக்கு (விஷயானுபவத்துக்கு) இந்திரிய ப்ரீதியானது பலனுகவாகமாட்டாது. எவ்வளவு விஷய போகத்தினுல் உயிர் வாழுக்கூடுமோ அவ்வளவேதான் அதன் பல னுகவாகும்.* உயிர் வாழ்வதற்கோவெனில் கர்மானுஷ்டானம் வாயிலாகக் கர்மங்களினுல் யாதொரு பலன் பரவித்தமோ அது பயனுகவாகமாட்டாது. பின்னேயோவெனில் தத்துவவிசாரஞ்செய் தலே ஜீவனத்தின் பலனுகவாகும் (9–10) (*)அத்வயமான (தன்னை விட இரண்டாவது பொருளற்ற) க்ஞானமானது யாதுண்டோ அதையே தத்துவமெனத் தத்துவமறிந்த பெரியார் சொல்லுகின்ற னர். அந்தத் தத்துவமோ உபநிஷத்தை ப்ரமாணமாகக் கொண்ட வர்களினுல் ப்ரம்ஹமென்றும், ஹிரண்யகர்ப்போபாஸகர்களினுல் பரமாத்மாவென்றும், ஸத்துவகுணம் நிறைந்தபக்தர்களினுல் பகவா

---

† ஹரிபக்தியை யுண்டாக்கி அதற்குப் புறம்பானவற்றில் வைராக்கி யத்தையும், ஆத்மக்ஞானத்தையும் தருவது எதுவோ அதுவே மேலான தர்மமென்பதுபெறப்பட்டது. வேறுசிலரோ "धर्मादर्थश्च कामश्च स किमर्थं न सेव्यते என்ற வசனத்தினுல் தர்மத்துக்கு அர்த்தம் பலன், அர்த்தத் துக்குக் காமம் பலன், காமத்துக்கு இந்திரியப்ரீதி பலன், ப்ரீதியிலிருந்து திரும்பவும் தர்மார்த்தங்களின் பரம்பரை யேற்படுகிறது" என்கின்றனர். அவ்விதம் அவர்கள் சொல்லுவதை இதுமுதல் இரண்டு சுலோகங்களி னுல் மறுக்கிறார். * உயிர்வாழ்வதற்குரிய விஷயபோகம் மட்டுமே ஸே விக்கத்தக்கது என்பது கருத்து. (*) தத்துவவிசாரமாவது தர்மவிசாரந் தான். தர்மமே தான் தத்துவமாகவாகும் எனச் சிலர் சொல்லுகின்ற னர்: அவ்விஷயத்தில் பின்வருமாறு பதில் சொல்லப்படுகிறது.

तच्छ्रद्दधाना मुनयो ज्ञानवैराग्ययुक्तया। पश्यन्त्यात्मनि चात्मानं भक्त्या श्रुतगृहीतया॥ १२॥ अतः पुम्भिर्द्विजश्रेष्ठा वर्णाश्रमविभागशः। स्वनुष्ठितस्य धर्मस्य संसिद्धिर्हरितोषणम्॥ १३॥ तस्मादेकेन मनसा भगवान् सात्वतां पतिः। श्रोतव्यः कीर्तितव्यश्च ध्येयः पूज्यश्च नित्यदा॥ १४॥ यदनुध्यासिना युक्ताः कर्म ग्रन्थिनिबन्धनम्। छिन्दन्ति कोविदास्तस्य को न कुर्यात्कथारतिम्॥ १५॥ शुश्रूषोः श्रद्दधानस्य वासुदेवकथारुचिः।

னென்றுமாகச் சொல்லப்படுகிறது. (11) அந்தத் தத்துவத்தை, குரு, சாஸ்திரம் இவற்றில் நம்பிக்கையுள்ளவர்களான முனிகள், [*]க்ஞானம், வைராக்கியம் இவற்றுடன் கூடினதும், வேதாந்தாதி ஸ்ரவணத்தினால் அடையப்பட்டதுமான பக்தியினால் தனது ஆத்மாவினிடத்தில் (க்ஷேத்திரக்ஞனிடத்தில்) ப்ரகாசிக்கும் ஆத்மாவாக (ப்ரத்யகாத்மாவாக) ப்பார்க்கின்றனர். (12) †ஆகவே ஹே த்விஜ ஸ்ரேஷ்டர்காள்! புருஷர்களினால் வர்ணாஸ்ரமவிபாகமூலம் நன்கு அனுஷ்டிக்கப்பட்ட தர்மத்துக்கு *ஹரியினாராதனமொன்றே தான் பலனுகவாகும். (13) ‡ஆனதுபற்றி ஏகாக்ரமான மனஸ்ஸினால் பாகவதர்களுக்குப் பதியான பகவானே நித்யம் ஸ்ரவணஞ்செய்யத் தக்கவராகவும், கீர்த்தனஞ்செய்யத்தக்கவராகவும், தியானஞ்செய்யத் தக்கவராகவும், பூஜிக்கத்தக்கவராகவும் ஆகிறார். (14) பக்தியோ கத்திலீடுபட்ட விவேகிகள் சரீராதிகளில் அஹங்காரத்தை நிலைக்கச் செய்கின்ற கர்மத்தை எவருடைய அனுத்யானமாகிற கத்தியினால் வெட்டியெறிகின்றனரோ அந்தப் பகவானுடைய கதையில் ஆசையை எவன்தான் அடையாதிருப்பான். (15)

*ஹே ப்ராம்ஹணர்காள்! புண்ணியமான கங்கா தீர்த்தத்தை ஸேவித்தல் மூலம் பாபத்தைப் போக்கிக்கொண்டவனுக்கு மஹான்

---

[*] இந்த க்ஞானம் பரோக்ஷமாகும். † தர்மத்துக்குப் பலன் பக்தியேயொழிய அர்த்தகாமங்களன்று என்பதை விளக்கி முடிவுகூறுகிறார். ‡யாதுகாரணத்தால் பக்திஹீனமான தர்மமானது கேவலம் சிரமத்தையும் பொருட்டே ஆகுமோ அக்காரணத்தால் பக்திப்ரதானமான தர்மமே அனுஷ்டிக்கத்தக்கது எனவுபதேசிக்கிறார். *ஹரிகதையானது கர்மாவை மூலத்துடன் தொலைக்கும் என்பது உண்மைதான். ஆயினும் அதில் ருசியுண்டாகவில்லையே யாதுசெய்வோமெனின்? அவ்விஷயத்தில் சொல்லுகிறார்.

स्यान्महत्सेवया विप्राः पुण्यतीर्थनिषेवणात् ॥१६॥ शृण्वतां स्वकथां कृष्णः पुण्यश्रवणकीर्तनः। हृद्यन्तःस्थो ह्यभद्राणि विधुनोति सुहृत्सताम् ॥ १७ ॥ नष्टप्रायेष्वभद्रेषु नित्यं भागवतसेवया। भगवत्युत्तमश्लोके भक्तिर्भवति नैष्ठिकी ॥ १८ ॥ तदा रजस्तमोभावाः कामलोभादयश्च ये। चेत एतैरनाविद्धं स्थितं सत्त्वे प्रसीदति ॥ १९ ॥

एवं प्रसन्नमनसो भगवद्भक्तियोगतः। भगवत्तत्त्वविज्ञानं मुक्तसङ्गस्य जायते ॥ २० ॥ भिद्यते हृदयग्रन्थिश्छिद्यन्ते सर्वसंशयाः। क्षीयन्ते चास्य

களின் ஸேவை ஏற்படும். அதனால் அவர்களனுஷ்டிக்கும் தர்மத்தில் ஸ்ரத்தையுண்டாகும். அதனால் பகவத்குண ஸ்ரவணேச்சையுண்டாகும். அதனால் ருசியுண்டாகிவிடும்.(16) புண்ணியங்களான ஸ்ரவண கீர்த்தனங்களையுடையவரும், ஸாதுக்களுக்கு ஹிதத்தைச்செய்கின்றவருமான ஸ்ரீகிருஷ்ணன் தனது கதையைக்கேட்பவர்களின் ஹிருதயத்தினுள்ளிலிருந்துகொண்டு அவர்களின் மனத்திலுள்ள காமாதி வாஸனைகளைத்(*)தேய்த்துவிடுகிறார். (17) இடையறாது பாகவதர்களின், அல்லது பாகவத சாஸ்திரத்தின், ஸேவையினால் அமங்களங்கள் (காமாதி வாஸனைகள்) பெரும்பாலும் நாசமடைந்ததும் உத்தமஸ்லோகனான பகவானிடத்தில் நிலைத்த பக்தியானது உண்டாகிறது. (18) அப்பொழுது ரஜஸ்தமோ குணங்கள் மூலமுண்டான காமம் லோபம் முதலியன எவையுண்டோ இவற்றினால் சித்தமானது கெடுக்கப்படாததாகவாகி ஸத்துவகுணத்தில் நிலைத்துத் தெளிந்து (வைராக்கியத்தையடைந்து) விடுகிறது. (19) பகவத்பக்தியோகத்தினால் இவ்விதம் தெளிந்த மனதுள்ளவனும், ஆனதுபற்றியே எதிலும் பற்றற்றவனுமான அதிகாரிக்குப் பகவானுகிற தத்துவத்தின் விக்ஞானமானது (அபரோக்ஷ ஸாக்ஷாத்காரமானது) உண்டாகிவிடு

(*) विधुनोति என்பதுமூலம். இதற்குத் தேய்த்து விடுகிறார் என்று பொருள் கூறப்பட்டது. கதாசிரவணமூலம் எவ்வளவுக்கெவ்வளவு பகவன் மூர்த்தியானது மனஸ்ஸில் நிலைக்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு காமாதிவாஸனையும் தேய்ந்து கொண்டேவரும் என்றேற்பட்டது. ஆகவே மீதமின்றி காமாதி வாஸனை நிவிருத்தியில் விருப்பமுள்ளவர் அடிக்கடி பகவத்கதாசிரவணம் செய்தல் அவசியம் என்பது பெறப்பட்டது.

कर्माणि दृष्ट एवात्मनीश्वरे ॥ २१ ॥ अतो वै कवयो नित्यं भक्तिं परमया मुदा । वासुदेवे भगवति कुर्वन्त्यात्मप्रसादनीम् ॥ २२॥ सत्त्वं रजस्तम इति प्रकृतेर्गुणास्तैर्युक्तः परः पुरुष एक इहास्य धत्ते । स्थित्यादये हरिविरिञ्चि हरेति संज्ञाः श्रेयांसि तत्र खलु सत्त्वतनोर्नृणां स्युः॥ २३ ॥ पार्थिवाद्दारुणो

கிறது. (20) ஆத்மஸ்வரூபபூதனான ஈச்வரனுடைய ஸாக்ஷாத் காரமானது ஏற்பட்டதும் இந்த ஜீவனுடைய ஹிருதயமாகிற முடிச்சானது (சேதனாசேதன ஸம்பந்தரூபமான அஹங்காரமானது) நாசத்தையடைகிறது. எல்லாவித ஸந்தேஹங்களும் நாசத்தையடைகின்றன. ப்ராரப்தத்தைக்காட்டிலும் வேறான கர்மங்கள் யாவும் தேய்ந்துவிடுகின்றன. (21) [*]ஆனதுபற்றியே தான் கவிகளான மஹான்கள் பகவானான வாஸுதேவனிடத்தில் சித்தசுத்தியைத்தருகின்ற பக்தியை மேலான ஸந்தோஷத்துடன் எப்பொழுதும் செய்துவருகின்றனர். (22) †ஸத்வமென்றும், ரஜஸ் என்றும், தமஸ் என்றுமாக ப்ரகிருதிக்கு மூன்று குணங்களுண்டு. அவற்றுடன் கூடின பரமபுருஷனொருவனே இதுபோழ்து இந்த ப்ரபஞ்சத்தினுடைய ஸ்திதி (ரக்ஷணம்) ஸிருஷ்டி, ஸம்ஹாரம் இவற்றுக்குவேண்டி ஹரி என்றும், ப்ரம்ஹதேவன் என்றும், ஹரன் என்றுமான பெயர்களைத் தரிக்கின்றார். ஆயினும், அம்மூன்று மூர்த்திகளுள் மனிதர்களுக்கு ஸத்துவமூர்த்தியான பகவானிடத்திலிருந்துதான் ச்ரேயஸ்ஸுகளுண்டாகின்றன. (23) ‡இயற்கையில் ப்ரவிருத்தி, ப்ரகாசம் இவையற்றதும் பார்த்திவமுமான அரணிக்கட்டையிலிருந்து ப்ரவிருத்தி ஸ்வபாவமுள்ளதும், அற்பம் கர்மஸம்பந்தமுள்ளதுமான புகையும், அந்தப் புகையிலிருந்து நேரில் கர்மஸாதனமாக இருப்பதுபற்றி மூன்றுவேதஸ்வரூபமானதும்,

---

[*] இவ்விஷயத்தில் ஸாதகக்களின் ஆசாரத்தைப் பிரமாணமாகக்காட்டுகிறார். †முந்தின ச்லோகத்தில் வாஸுதேவே என்றதால்பஜனீயன் இன்னார் எனவுபதேசிக்கப்பட்டது. அதை விளக்கவேண்டி ப்ரம்ஹாதி மும்மூர்த்திகளுக்கும் ஏகாத்மகத்வமானது இருந்தபோதிலுங்கூட வாஸுதேவனுக்கு ஆதிக்யம் இதனாலுபதேசிக்கப்படுகிறது.

‡ ஒரே பகவானுக்கு ஸத்வம், ரஜஸ், தமஸ் இவைகள் உபாதிகளாக இருந்தபோதிலுங்கூட உபாதிபேதத்தையொட்டி பலனிலும் பேதமுண்டு என்பதைத் திருஷ்டாந்தமூலம் விளக்குகிறார்.

धूमस्तस्मादग्निस्त्रयीमयः। तमसस्तु रजस्तस्मात्सत्त्वं यद्ब्रह्मदर्शनम् ॥२४॥ भेजिरे मुनयोऽथाग्रे भगवन्तमधोक्षजम्। सत्त्वं विशुद्धं क्षेमाय कल्पन्ते येऽनु तानिह ॥ २५ ॥ मुमुक्षवो घोररूपान्हित्वा भूतपतीनथ। नारायण-कलाः शान्ता भजन्ति ह्यनसूयवः ॥ २६ ॥ रजस्तमःप्रकृतयः समशीला भजन्ति वै। पितृभूतप्रजेशादीन् श्रियैश्वर्यप्रजेप्सवः॥ २७ ॥ वासुदेवपरा

ஆனதுபற்றியே ப்ரவிருத்திஸ்வபாவமுள்ளதுமான அக்னியும் உண்டாவதுபோல தமோகுணத்திலிருந்து ஸ்வல்பம் ப்ரம்ஹப்ரகாசகமான ரஜோகுணமும், அந்த ரஜோகுணத்திலிருந்து நேரில் ப்ரம்ஹஜ்ஞானஹேதுவான யாதொரு ஸத்துவகுணமுண்டோ அதுவுமுண்டாகிறது. (ஆகவே அத்தகைய குணங்களை யுபாதியாகக் கொண்ட ப்ரம்ஹாதிமூர்த்திகளுக்குப் ஒன்றைவிட மற்றொன்றுக்கு மேன்மையானது ஏற்படுகிறது.) (24) * ஆனதுபற்றியேதான் முன்னருள்ள முனிகள் விசுத்தஸத்வமூர்த்தியுள்ளவரும் அதோக்ஷஜனுமான பகவானைப் பஜித்தனர். ஆனதுபற்றி அந்தப் பகவது பாஸகர்களை எவர்கள் அனுஸரிக்கின்றனரோ அவர்களே இந்த ஸம்ஸாரத்தில் மோக்ஷத்தையடைய யோக்கியர்களாக வாகின்றனர்.(25) மோக்ஷத்தையடைய விருப்பமுள்ளவர்கள் கோரமான ரூபமுள்ளவர்களான பூதபதிகளைவிட்டும், தேவதாந்தர நிந்தைசெய்யாதவர்களாய்க் கொண்டும், சாந்தங்களான நாராயணகலைகளைப் பஜிக்கின்றனர். (26) ரஜோகுண தமோகுணங்களை ஸ்வபாவத்திலுடையவர்களும் பிதிருபூதாதிகளுக்கு ஸமமான சீலமுள்ளவர்களுமான ஜனங்களே ஸ்ரீயுடன்கூட ஐஸ்வரியம், ப்ரஜை இவற்றில் விருப்பமுள்ளவர்களாய்க்கொண்டு பிதிருக்கள், பூதங்கள் ப்ரஜேசர்கள் இவர்களைப் பஜிக்கின்றனர். (27)

(*)வேதங்கள் வாஸுதேவனையே முக்யதாத்பர்ய விஷயமாகவுடையன. யாகங்கள் வாஸுதேவாராதனரூபங்களேயாகும. யோக

---

* வாஸுதேவனிடம் பக்திசெய்யும் விஷயத்தில் பூர்வாசாரத்தை ப்ரமாணமாகக் காட்டுகிறார்.

(*) மோக்ஷ ப்ரதமாக இருப்பதுபற்றி வாஸுதேவனைப் பஜிக்கவேண்டும் என முன்னர் சொல்லப்பட்டது. ஸர்வசாஸ்திரங்களுடையவும் தாத்பரியவிஷயமாக இருப்பதுபற்றியும் அவரையே பஜிக்கவேண்டும் என இந்த இரண்டு சுலோகங்களிலுபதேசிக்கப்படுகிறது.

वेदा वासुदेवपरा मखाः। वासुदेवपरा योगा वासुदेवपराः क्रियाः॥२८॥ वासुदेवपरं ज्ञानं वासुदेवपरं तपः। वासुदेवपरो धर्मो वासुदेवपरा गतिः॥२९॥ स एवेदं ससर्जाग्रे भगवानात्ममायया। सदसद्रूपया चासौ गुणमय्याऽगुणो विभुः॥ ३० ॥ तया विलसितेष्वेषु गुणेषु गुणवानिव। अन्तःप्रविष्ट आभाति विज्ञानेन विजृम्भितः॥ ३१ ॥ यथा ह्यवहितो

சாஸ்திரங்களும் வாஸுதேவ ப்ராப்த்திக்குவேண்டியே ஏற்பட்டன வாகும். ஏனையக்ரியைகளும் வாஸுதேவப்ரீதிக்குவேண்டியேசெய் யப்படுவனவாகும். (28) வேதாந்தசாஸ்திரமும் வாஸுதேவனையே முக்கிய தாத்பர்யவிஷயமாகக்கொண்டதாக இருக்கிறது. க்ஞானமா கிற தபஸ்ஸும் வாஸுதேவனையே விஷமாகக்கொண்டதாகவாகும். தானம், விரதம் முதலியவற்றைச் சொல்லும் தர்மசாஸ்திரமும் வாசு தேவனையே விஷயமாகக் கொண்டதாகவும். ஸ்வர்க்காதிபான பல னும் வாஸுதேவனையே [*]பரமாகக் கொண்டதாகவுமாகும். (29) †ஸ்வபாவத்தில் எவ்வித குணஸம்பந்தமு மற்றவராயினுங்கூட ப்ரபு வும் பகவானுமான அந்த இந்த வாஸுதேவனே ஆதியில் காரியகா ரண ரூபமுள்ளதும், முக்குணவடிவுமான தனது மாயையினால் இந்த ப்ரபஞ்சத்தை ஸிருஷ்டித்தார் (30) எக்காரணம்பற்றி சித்சக் தியினல் நிலைத்தவரோ அக்காரணம்பற்றி அந்தமாயையினல் உண்டு பண்ணப்பட்ட ஆகாசாதிகளில் உள்ளில் ப்ரவேசித்தவராய்க் கொ ண்டும் "இவை என்னை யாஸ்ரயித்தவை" என்ற அபிமானமுள்ள வர்போலும், தோற்றத்தையடைகிறார் (உண்மையிலோ அவ்வித மில்லை.) (31) தன்னை ப்ரகாசப்படுத்தும் கட்டைகளில் வைக்கப்

---

[*] "एतस्यैवानन्दस्यान्यानि भूतानि मात्रामुपजीवन्ति" எனற சுருதியின் மூலம் ஸ்வர்க்காதிஸுகம் யாவும் ஆனந்தரூபியான வாஸுதேவனுடைய அம்சமாகவாகின்றமைபற்றி இவ்விதம் சொல்லப்பட்டது என்றும்.

† ஜகத்தின் ஸிருஷ்டி ப்ரவேசம் நியமனம் முதலிய லீலையுடன் கூடின வஸ்துவினிடத்திலேயே ஸர்வ சாஸ்திரங்களுக்கும் ஸமன்வய மானது காணப்படுவதால் அவற்றுக்கு வாஸுதேவபரத்துவம் எப்படி ஸம்பவிக்கும் என்ற ஆசங்கையை இதுமுதல் நான்கு சுலோகங்களினல் போக்குகிறார். இதிலிருந்து "அவருடைய உதாரமான கர்மங்களைச் சொல்லும்" என்ற கேள்விக்குப் பதில் சொல்லப்பட்டதாகவுமாகிறது.

वह्निर्दारुष्वेकः स्वयोनिषु। नानेव भाति विश्वात्मा भूतेषु च तथा पुमान् ॥ ३२ ॥ असौ गुणमयैर्भावैर्भूतसूक्ष्मेन्द्रियात्मभिः। स्वनिर्मितेषु निर्विष्टो भुङ्क्ते भूतेषु तद्गुणान् ॥ ३३ ॥ भावयत्येष सत्त्वेन लोकान्वै लोकभावनः। लीलावतारानुरतो देवतिर्यङ्नरादिषु ॥ ३४ ॥

इति श्रीमद्भागवते महापुराणे प्रथमस्कन्धे द्वितीयोऽध्यायः ॥ २ ॥

பட்ட நெருப்பானது எவ்விதமோ இவ்விதமே விஶ்வாத்மாவும் ஏகனுமான புருஷன்=(பரமேஶ்வரன்) ப்ராணிகளிடங்களில் வெவ் வேறானவன்போலத் தோற்றத்தையடைகிறான். (32) இந்த ஹரி யானவர், குணமயங்களும், பஞ்சபூதஸூக்ஷ்மங்கள், இந்திரியங் கள், மனஸ், இவைரூபமுமான பதார்த்தங்கள் மூலம் தன்னால் ஸிருஷ்டிக்கப்பட்ட நான்குவிதங்களான ப்ராணிகளிலும் ப்ரவே சித்தவராய் அந்தந்தவிஷயங்களை யனுபவிக்கிறார். (33) லோக பர்த்தாவான இந்தப் புருஷோத்தமன் தேவர், பசு, மனிதர் முதலிய வற்றில் லீலையினால் செய்யப்படும் அவதாரங்களில் பற்றுள்ளவராய்க் கொண்டு ஸத்வகுணத்தினால் உலகங்களைப் பரிபாலனஞ் செய் கிறார். (34) (எ–று)

இவ்விதம் ஶ்ரீமத்பாகவத மஹாபுராண ப்ரதமஸ்கந்தத்தில் இரண்டாவது அத்தியாயம் முற்றிற்று.

மூன்றுவது அத்தியாயம்.

(அ–கை) अवतारकथाप्रश्ने तृतीये तूत्तराभिधा।
पुरुषाद्यवतारोक्त्या तत्तच्चारित्रवर्णनैः ॥ १ ॥

(க–ரை) இந்த மூன்றுவது அத்தியாயத்தில், அந்தந்த அவதார சரித்திரங்களை வர்ணித்தலைமுன்னிட்டு புருஷாத்யவதாரங்களை நிரூ பிக்கும் வாயிலாக அவதாரகதாப்ரஶ்னத்துக்குப் பதிலானது சொல் லப்படுகிறது. "ஹே தீமன்! சுபங்களான ஹரியின் அவதார கதைகளைச் சொல்லும்" என யாதொன்று சொல்லப்பட்டதோ அதற்குப் பதில் சொல்லவேண்டி அவதாரங்களைச் சொல்லப் போ

अथ तृतीयोऽध्यायः ॥

सूत उवाच—जगृहे पौरुषं रूपं भगवान्महदादिभिः । संभूतं षोड शकलमादौ लोकसिसृक्षया ॥ १ ॥ यस्याम्भसि शयानस्य योगनिद्रां वितन्वतः । नाभिह्रदाम्बुजादासीद्ब्रह्मा विश्वसृजां पतिः ॥ २ ॥ यस्या-वयवसंस्थानैः कल्पितो लोकविस्तरः । तद्वै भगवतो रूपं विशुद्धं सत्त्व-मूर्जितम् ॥ ३ ॥ पश्यन्त्यदो रूपमदभ्रचक्षुषा सहस्रपादोरुभुजाननाद्भुतम् ।

கின்றவராய்க் கொண்டு முதலில் புருஷாவதாரத்தை ஐந்து சுலோகங்களினுல் சொல்லத் தொடங்குகிறார். (1) (எ–று)

சூதர் சொல்லலுற்றார்—ப்ரளயஜலத்தில் சயனித்துக் கொண்டிருப்பவரும், யோக நித்திரையை (ஸமாதிரூபமான நித்திரையை) செய்கின்றவருமான எவருடைய உந்தியாகிற மடுவிலிருக்கின்ற தாமரஸ புஷ்பத்திலிருந்து உலகத்தை ஸிருஷ்டிப்பவர்களுக்கெல்லாம் பதியான ப்ரம்ஹதேவன் உண்டானாரோ அந்தப் பகவான் ஆதியில் மஹத், அங்காரம், பஞ்சதன்மாத்திரைகள் இவற்றுடன் கூடினதும், பதினொரு இந்திரியங்கள் பஞ்சமஹாபூதங்கள் ஆகிய பதினாறுகலைகளை=(அம்சங்களை) உடையதுமான ‡ பௌருஷரூபத்தை லோகத்தை ஸிருஷ்டிக்க வேண்டுமென்ற எண்ணத்துடன் கிரஹித்தார். (1–2) எவருடைய அவயவ அமைப்புகளினுல் உலகின் விஸ்தாரமானது கல்பிக்கப்பட்டதோ அந்தப் பகவானுடைய அந்த ஸ்வரூபமோவெனில் விசுத்தமும்=(ரஜோகுண தமோகுணங்களின் ஸம்பந்தம் பெறுததும்) ஆனதுபற்றியே ஊர்ஜிதமும் (ஒப்புயர்வற்றதுமான) ஸத்துவமயமாகவாகும். (3) ஆயிரக்கணக்கான பாதங்கள், தொடைகள், தோள்கள், முகங்கள் இவற்றுல் ஆஸ்சரியம் வாய்ந்ததும், ஆயிரக்கணக்கான தலைகள், காதுகள், கண்கள், மூக்குகள் இவற்றையுடையதும், ஆயிரக்கணக்கான கிரீடங்கள் வஸ்திரங்

---

‡ பகவானுடைய விக்ரஹமானது, மஹத்தத்துவம் தொடங்கி பஞ்சமஹாபூதமீறுகவுள்ள ப்ராகிருத பதார்த்தங்களால் அமைக்கப் பட்டதில்லை தானுயினும், விராட்ஜீவாந்தர்யாமியான பகவானே விராட்ரூபத்தாலுபாஸனம் செய்யவேண்டி இவ்விதமுபதேசிக்கப்பட்டதெனக் கண்டு கொள்ளவேண்டும்.

सहस्रमूर्धश्रवणाक्षिनासिकं सहस्रमौल्यम्बरकुण्डलोल्लसत् ॥ ४ ॥ एतन्ना-नावतारााणां निधानं बीजमव्ययम्। यस्यांशांशेन सृज्यन्ते देवतिर्यङ्नरा-दयः ॥ ५ ॥ स एव प्रथमं देवः कौमारं सर्गमास्थितः। चचार दुश्चरं ब्रह्मा ब्रह्मचर्यमखण्डितम् ॥ ६ ॥ द्वितीयं तु भवायास्य रसातलगतां महीम्। उद्धरिष्यन्नुपादत्त यज्ञेशः सौकरं वपुः ॥ ७ ॥ तृतीयमृषिसर्गं च देवर्षि-

---

கள், குண்டலங்கள் இவற்றால் ப்ரகாசிக்கின்றதுமான இந்த ரூபத்தைச் சிறந்ததான ஞானமாகிறகண்ணினால் (யோகிகள்) பார்க்கின்றனர். (4) ஆதியிலுள்ள நாராயணனுடைய இந்த ஸ்வரூபமானது பலவிதமான அவதாரங்கள் *ஒடுங்குமிடமாகவும், அந்த அவதாரங்களுக்கு (*)விதையாகவும், ஆயினும் அழிவற்றதாகவும் ஆகும். இந்தப் பகவத்ஸ்வரூபத்தினுடைய அம்சமான ப்ரம்ஹதேவன், ப்ரம்ஹதேவனுடைய அம்சர்களான மரீசி முதலியோர் ஆகிய இவர்களாலேயே தேவர், பசு, மனிதர் முதலியோர் ஸிருஷ்டிக்கப்படுகின்றனர் (5) [*] அந்தத் தேவனே முதலாவதான கௌமாரமெனப் பெயரிய ஸிருஷ்டியை யடைந்து ப்ராம்ஹணராகவாகி செய்தற்கரிதானதும், அகண்டிதமுமான ப்ரம்ஹசரியத்தை யனுஷ்டித்தார். (6) இந்த ப்ரபஞ்சத்தினுடைய உத்பத்திக்கு வேண்டி பாதளத்திலிருந்து பூமியை உயரெடுக்கப்போகின்றவராய் யக்ஞேஸ்வரனான பகவான் இரண்டாவதான வாராஹசரீரத்தை யடைந்தார். (7)

அவர் தேவர்ஷித்வரூபமான மூன்றுவதான ருஷிஸர்க்கத்தை யடைந்து எந்தத் தந்திரத்திலிருந்து கர்மங்களுக்கே மோசகத்துவ

---

* அந்தந்த அவதாரங்களின் காரியங்கள் முடிந்ததும் அந்த அவதாரங்கள்யாவும் இந்தப் பகவத்ஸ்வரூபத்திலேயே ஒடுங்கிவிடுகின்றன என்பது கருத்து.

(*) அவையாவும் இந்தப் பகவத்ஸ்வரூபத்திலிருந்தே உண்டாவதால் இவ்விதம் சொல்லப்பட்டது.

[*] இதுமுதல் ஸனத்குமாராதிகளின் அவதாரத்தையும், அவற்றின் சரித்திரத்தையும் உபதேசிக்கிறார். மேலும், இதுமுதலுள்ள சுலோகங்களில் ஸர்க்கத்தை முதலாவது, இரண்டாவது என்று சொல்லுவதானது இங்கு சொல்லும் முறையையொட்டியே எனக் கொள்ளவேண்டும்.

त्वमुपेत्य सः। तन्त्रं सात्वतमाचष्ट नैष्कर्म्यं कर्मणां यतः॥ ८॥ तुर्ये धर्मकलासर्गे नरनारायणावृषी। भूत्वात्मोपशमोपेतमकरोद्दुश्चरं तपः॥९॥ पञ्चमः कपिलो नाम सिद्धेशः कालविप्लुतम्। प्रोवाचासुरये साङ्ख्यं तत्त्वग्रामविनिर्णयम्॥ १०॥ षष्ठे अत्रेरपत्यत्वं वृतः प्राप्तोऽनसूयया। आन्वीक्षिकीमलर्काय प्रह्लादादिभ्य ऊचिवान्॥ ११॥ ततः सप्तम आकूत्यां रुचेर्यज्ञोऽभ्यजायत। स यामाद्यैः सुरगणैरपात्स्वायंभुवान्तरम्॥ १२॥ अष्टमे मेरुदेव्यां तु नाभेर्जात उरुक्रमः। दर्शयन्वर्त्म धीराणां सर्वाश्रमनम-

---

மேற்படுமோ அத்தகைய ஸாத்வத தந்திரத்தை (பஞ்சராத்திராகமத்தை) உபதேசித்தார். (8) தர்மன் என்ற மஹருஷியின் கலையின் (பாரியையின்) ஸிருஷ்டியான நான்காவது அவதாரத்தில் நாலனென்றும், நாராயணனென்றுமான ருஷிகளாகவாகி மனத்தின் சாந்தியுடன் கூடினதும், பிறரால் செய்தற்கரிதானதுமான தபஸ்ஸைச் செய்தார். (9) ஸித்தர்களுக்கு ஈசரான பகவான் ஐந்தாவது அவதாரத்தில் கபிலனெனப் பெயருள்ளவராக அவதரித்து காலத்தினால் அழிந்துபோனதும், தத்துவங்களின் கூட்டத்தை நிச்சயித்துத் தருவதுமான ஸாங்கிய சாஸ்திரத்தை ஆசுரி என்ற ப்ராம்ஹணருக்கு உபதேசித்தார். (10) ஆறுவதான அவதாரத்தில் அத்ரியினால் வரிக்கப்பட்டவராய்க் கொண்டு "எனக்கு ஸமானமான புத்திரன் வேண்டும், என்ற வியாஜமாக என்னையே புத்திரனாக இவர் வரிக்கிறார்" என அவரிடம் அஸூயைப்படாமல் அவருக்குப் புத்திரனாகப் பிறந்து அலர்க்கன் என்ற அரசனுக்கும், ப்ரஹ்லாதன், யது, கார்த்தவீர்யார்ஜுனன் முதலியோருக்கும் ஆத்மவித்யையை யுபதேசித்தார்†. (11) பிறகு ஏழாவது அவதாரத்தில் ருசி என்ற ப்ரஜாபதிக்கு ஆகூதி என்ற பத்நியினிடத்தில் யக்ஞனாக அவதரித்தார். அவர் யாமர் என்றத் தனது புத்திரர்களான தேவர்களை ஆதியாகக்கொண்ட தேவக்கூட்டங்களுடன் கூட ஸ்வாயம்புவமன்வந்தரத்தைக் காப்பாற்றினார்‡. (12) எட்டாவதான அவதாரத்தில்

---

† இதனால் தத்தாத்ரேயாவதாரம் சொல்லப்பட்டது.

‡ அதாவது:—இந்தயக்ஞனே இந்திரனாக இருந்தார் என்பது பொருள்.

स्कृतम् ॥ १३ ॥ ऋषिभिर्याचितो भेजे नवमं पार्थिवं वपुः। दुग्धेमामौषधीर्विप्रास्तेनायं स उशत्तमः ॥ १४ ॥ रूपं स जगृहे मात्स्यं चाक्षुषोदधिसंप्लवे। नाव्यारोप्य महीमय्यामपाद्वैवस्वतं मनुम् ॥ १५ ॥ सुरासुराणामुदधिं मथ्नतां मन्दराचलम्। दध्रे कमठरूपेण पृष्ठ एकादशे विभुः॥१६॥ धान्वन्तरं द्वादशमं त्रयोदशममेव च। अपाययत्सुरानन्यान्मोहिन्या मोहयन्स्त्रिया ॥ १७ ॥

எல்லா ஆஸ்ரமங்களினுலும் நமஸ்கரிக்கப்பட்ட பரமஹம்ஸாஸ்ரம வழியைத் தீரர்களுக்குக் காட்டவெண்ணங்கொண்டவராய் உருக்கிரமனன பகவான் நாபி என்ற ஆக்னீத்ர புத்திரருக்கு மேரு என்ற தேவியினிடத்தில்(ரிஷபன் என்றபெயருடன்)பிறந்தார் (13) ருஷிகளினுல் யாசிக்கப்பட்டவராய் ஒன்பதாவதான பிருதுசக்கிரவர்த்திரூபமான ராஜதேஹத்தையடைந்தார். ஹேவிப்ரார்காள்!(அந்த அவதாரத்தில்) இந்தப் பூமியிலுள்ள ஓஷதிகள் முதலிய யாவையும் கறந்தார். அக்காரணம் பற்றி அந்த அவதாரமானது மிக்க விரும் பத்தக்கதாகவாகிறது. (14) சாக்ஷுஷம் என்ற மன்வந்தரகாலத்தில் *ளமுத்திரங்கள் எல்லாம் ஒன்றுடன் மற்றொன்று கலந்தபோழுது அந்தப் பகவான் மீனுருவத்தையெடுத்தார். பூமிரூபமான ஓடத்தில் (*)வைவஸ்வதமனுவை யேற்றிவைத்து ரக்ஷித்தார் (15) விபுவான பகவான் பதிஞன்றுவது அவதாரத்தில் தேவர்களும் அஸுரர்களும் ஸமுத்திரத்தைக் கடையும்பொழுது ஆமையினுருவமெடுத்து முதுகில் மந்தரமலையைச் சுமந்தார். (16) தன்வந்தரியின் ஸ்வரூபம் பன்னிரண்டாவதாகும். பதிமூன்றுவது அவதாரமெடுத்து மோஹினீ என்ற ஸ்திரீ ரூபத்தினுல் அஸுரர்களை மோஹிக்கச் செய்து தேவர்களுக்கு அமிர்தபானஞ் செய்துவைத்தார். (17)

---

* ஒவ்வொரு மன்வந்தரத்தின் முடிவிலும் ப்ரளயம் கிடையாது. ஆயினும் மார்க்கண்டேயருக்குத் திடீரென ப்ரளயமானது எவ்விதம் காண்பிக்கப்பட்டதோ இவ்விதமே ஸத்யவ்ரதன் என்ற அரசனுக்கும் வேடிக்கையாக ப்ரளயமானது மாயையினுல் காண்பிக்கப்பட்டது என்று கொள்ளவும். (*) இந்த ஸத்யவ்ரதரே பின்னர் வைவஸ்வதமனுவாக ஆகப்போவதால் பின்னர்வரும் பெயரை முன்னரே வைத்து வைவஸ்வதமனு எனவுபதேசிக்கப்பட்டது.

चतुर्दशं नारसिंहं बिभ्रदैत्येन्द्रमूर्जितम्। ददार करजैर्वक्षस्येरकां कटकृद्यथा ॥ १८ ॥ पञ्चदशं वामनकं कृत्वाऽगादध्वरं बलेः। पदत्रयं याचमानः प्रत्यादित्सुस्त्रिविष्टपम् ॥ १९ ॥ अवतारे षोडशमे पश्यन् ब्रह्मद्रुहो नृपान्। त्रिःसप्तकृत्वः कुपितो निःक्षत्रामकरोन्महीम् ॥ २० ॥ ततः सप्तदशे जातः सत्यवत्यां पराशरात्। चक्रे वेदतरोः शाखा दृष्ट्वा पुंसोऽल्पमेधसः ॥ २१ ॥ नरदेवत्वमापन्नः सुरकार्यचिकीर्षया। समुद्रनिग्रहादीनि चक्रे वीर्याण्यतः परम् ॥ २२ ॥ एकोनविंशे विंशतिमे वृष्णिषु प्राप्य जन्मनी। रामकृष्णाविति भुवो भगवानहरद्भरम् ॥ २३ ॥ ततः कलौ

பதினன்காவதான நரஸிம்ஹரூபத்தை எடுத்து மிக்கவலுப் பெற்ற அஸுராராஜனை ஹிரண்யகசிபுவை பாய்மொடைகின்ற வன் கழிக்கோரையைப்போல நகங்களினுல் மார்பில் பிளந்தார்.(18) பதினைந்தாவதான வாமனரூபத்தை எடுத்து ஸ்வர்க்கத்தைத் திருப்பிப்பெறும் நோக்குள்ளவராய் மூன்றடிமண்ணை யாசிக்கவேண்டி பலிசக்கிரவர்த்தியின் யாகத்தையடைந்தார். (19) பதினாறுவதான அவதாரத்தில் அரசர்கள் ப்ராம்ஹண த்ரோஹஞ்செய்வதைக்கண்டு கோபங்கொண்டவராய் இருபத்தோருதடவை பூமியை (ச்சுற்றி வந்து) க்ஷத்திரியர்களற்றதாகச்செய்தார்[*]. (20) பிறகு பதினேழாவது அவதாரத்தில் பாசராருக்கு ஸத்தியவதியினிடத்தில் ஜனித்து (உலகில்) புருஷர்கள் அற்பஞானமுள்ளவர்களாக இருப்பதைக் கண்ணுற்று வேதமாகிற மரத்துக்குப் பலகிளைகளைச் செய்தருளினர்†. (21) ‡இதற்குப் பிறகு (பதினெட்டாவது அவதாரத்தில்) தேவகாரியத்தைச் செய்யும் நோக்குக் கொண்டு நரதேவனுக (தசரதகுமாரனுக) இருத்தலை யடைந்து ஸமுத்திர நிக்ரஹம் முதலிய காரியங்களைச் செய்தார். (22) *பத்தொன்பதும், இருபதுமான அவதாரங்களில் யாதவர்களிடத்தில் ராமகிருஷ்ணர்கள் என்ற பெயரையடைந்து பகவான் பூமியின் சுமையைப் போக்கினர்.(23) பிறகு கலியானது நன்கு பரவ ஆரம்பித்ததும், அஸுரர்களை நன்கு

---

[*] இதனுல் பரசுராமாவதாரம் சொல்லப்பட்டது. † இதனுல் வியாஸாவதாரம் சொல்லப்பட்டது. ‡ ராமாவதாரம் சொல்லப்படுகிறது * ராமகிருஷ்ணவதாரம் சொல்லப்படுகிறது.

संप्रवृत्ते सम्मोहाय सुरद्विषाम्। बुद्धो नाम्नाऽजनसुतः कीकटेषु भविष्यति ॥ २४ ॥ अथासौ युगसन्ध्यायां दस्युप्रायेषु राजसु। जनिता विष्णुयशसो नाम्ना कल्किर्जगत्पतिः ॥ २५ ॥ अवतारा ह्यसङ्ख्येया हरेः सत्त्वनिधेर्द्विजाः। यथाऽविदासिनः कुल्याः सरसः स्युः सहस्रशः ॥ २६ ॥ ऋषयो मनवो देवा मनुपुत्रा महौजसः। कलाः सर्वे हरेरेव सप्रजापतयस्तथा ॥ २७ ॥ एते चांशकलाः पुंसः कृष्णस्तु भगवान्स्वयम्। इन्द्रारि-

---

மயக்கவேண்டி (*)கீகடதேசத்தில் புத்தன் என்ற பெயருடன் அஜனன் என்பவரின் புத்திரனாக அவதரிக்கப் போகிறார். (24) பிறகு ஜகத்பதியான இந்த பகவான் கலியுகத்தின் ஸந்தியில் (முடிவில்) அரசர்கள் திருடர்களுக்கு ஒப்பாக ஆனபொழுது கல்கீ என்ற பெயருடன் விஷ்ணுயசஸ் என்ற ப்ராம்ஹணனிடமிருந்து ஜனிக்கப் போகிறார். (25) ஹே த்விஜர்காள்! வற்றாத பெரியகுளத்திலிருந்து ஆயிரக்கணக்கான சிறு ஊற்றுகள் வருவதுபோல ஸத்வகுணத்துக்கு இருப்பிடமான ஹரியினிடமிருந்து எண்ணவியலாத அவதாரங்கள் ஏற்படுகின்றன. (26) ருஷிகளும், மனுக்களும், தேவர்களும், அதுபோல பிரஜாபதிகளுடன் கூடினவர்களும், அதிகம் சக்திவாய்ந்தவர்களுமான மனுவின் புத்திரர்களும் ஆகியயாவரும் ஹரியின் அம்சங்களே யாவர். (27) இவர்கள் புருஷனான பரமேஸ்வரனுடைய அம்சபூதர்களும், விபூதிகளுமாவர். [*]கிருஷ்

(*) कीकटेषु என்பது மூலம். இதற்கு கீகடதேசத்தின் நடுவிலுள்ள கயாப்ரதேசத்தில் என ஸ்ரீதரர் பொருள் கூறியிருக்கிறார். அங்கம், வங்கம், கலிங்கம், ஸௌராஷ்ட்ரம், மகதம் இவை கீகடதேசமெனப்படும்.

[*] एते चांशकलाः पुंसः कृष्णस्तु भगवान् स्वयम् என்பது மூலம். இது வரை சொல்லப்பட்ட பகவானின் அவதாரங்களுள் சிலவற்றை அம்சாவதாரமாகவும், சிலவற்றை விபூத்யவதாரமாகவும், கிருஷ்ணனைப்பூர்ணாவதாரமாகவும் கொள்ளவேண்டும். அவற்றுள் மத்ஸ்யாத்வதாரங்களுக்கு ஸர்வக்ஞத்வம், ஸர்வசக்திமத்வம் இவ்விரண்டு மிருந்தபோதிலும் அவ்விருசக்திகளும் தேவைக்குத்தக்கபடி வெளிப்படுமே யல்லாது எப்பொழுதும் வெளிப்படுவதில்லை. மேலும் ஸனத்குமாரர் நாரதர் முதலிய ஆதிகாரிக புருஷாவதாரங்களில் தேவைக்குத்தக்கபடி பகவதம்சத்துக்கும்,

व्याकुलं लोकं मृडयन्ति युगे युगे ॥ २८ ॥ जन्म गुह्यं भगवतो य एतत्प्रयतो नरः । सायं प्रातर्गृणन्भक्त्या दुःखग्रामाद्विमुच्यते ॥ २९ ॥ एतद्रूपं भगवतो ह्यरूपस्य चिदात्मनः । मायागुणैर्विरचितं महदादिभिरात्मनि ॥ ३० ॥ यथा नभसि मेघौघो रेणुर्वा पार्थिवोऽनिले । एवं द्रष्टरि दृश्यत्व-

---

ணனே ஸ்வயம் பகவானேயாவர். இவர்கள் ஒவ்வொருயுகம்தோறும் இந்திரனுடைய சத்துருவான அஸுரர்களால் பீடிக்கப்பட்ட வுலகை ஸுகப்படுத்துகின்றனர். (28) எந்த மனிதன் பரிசுத்தனாக இருந்துகொண்டு மாலையிலும் காலையிலும் பக்தியுடன் ரஹஸ்யமான இந்தப் பகவதவதாரத்தைச் சொல்லுவானே அவன் துக்க ஸமுதாயரூபமான ஸம்ஸாரத்திலிருந்து விடுபடுகிறான். (29)

†உண்மையில் எவ்விதரூபமுமற்றவனும் சித்ரூபியுமான ஜீவனுக்கு இந்தஸ்தூலரூப (சரீர) மானது பகவானே ஆஸ்ரயித்துள்ள மாயையின் காரியங்களான மஹத்தத்வம் முதலியவற்றால் தன்விஷயத்தில் செய்யப்பட்டதாகவாகிறது. (30) (வாயுவை ஆஸ்ரயித்த) மேகக்கூட்டமானது ஆகாசத்தில் அக்ஞர்களாலாரோபிக்கப்படுவது எவ்விதமோ, பார்த்திவமான பொடியும், அதை யாஸ்ரயித்துள்ள

பகவத்விபூதிக்கு மாவேசமேற்படுகிறது. அதாவது:—ஸனத்குமாரர், நாரதர் இவர்களிடத்தில் பகவானிடமுள்ள ஞானத்துக்கு ஆவேசமும், பிருதுசக்கிரவர்த்தி முதலியோரிடத்தில் பகவானிடமுள்ள சக்திக்கு ஆவேசமுமேற்படுகிறது என்றும். கிருஷ்ணனிடத்திலோ எல்லாக்குணங்களுக்கும் எப்பொழுதும் பிரகாசமிருப்பதால் அவர் ஸாக்ஷாத்நாராயணனேயாவர்.

† முந்தினசுலோகத்தில் ஸம்ஸாரத்தினின்றும் விடுபடுகிறான் என்று உபதேசிக்கப்பட்டது. ஸ்தூல ஸூக்ஷ்மரூபமான இரண்டு தேஹங்களின் ஸம்பந்தம் தொடர்ந்து இருக்கும் பொழுது அதனின்றும் எவ்விதம் விடுபடமுடியும் என்ற ஆசங்கை ஏற்படவே, முற்கூறிய தேஹங்களின் ஸம்பந்தமானது பகவன்மாயாகாரியமான அவித்யாமூலமேற்படுவதால், பகவதவதார ச்ரவணத்தாலுண்டான வித்யையினால் அவித்யாநிவிருத்தி ஏற்படவே, அவித்யைகாரணமாயேற்பட்ட இருதேஹங்களின் நிவிருத்தியும் தானே ஏற்பட்டுவிடும் என்பதை இதுமுதல் 5 சுலோகங்களினாலுபதேசிக்கிறார்.

मारोपितमबुद्धिभिः॥३१॥ अतः परं यदव्यक्तमव्यूढगुणव्यूहितम्। अदृष्टाश्रुतवस्तुत्वात्स जीवो यत्पुनर्भवः॥ ३२ ॥ यत्रेमे सदसद्रूपे प्रतिषिद्धे स्वसंविदा। अविद्ययात्मनि कृते इति तद्ब्रह्म दर्शनम् ॥ ३३ ॥ यद्येषोपरता देवी माया वैशारदी मतिः। संपन्न एवेति विदुर्महिम्नि स्वे महीयते ॥३४॥

அழுக்கும் காற்றில் ஆலோபிக்கப்படுவது எவ்விதமோ, இவ்விதமே த்ரஷ்டாவான ஆத்மாவினிடத்தில் திருப்யத்வமானது (திருப்யத்வாதிதர்மமுள்ள சரீரமானது) அவிவேகிகளினுல் ஆரோபிக்கப்பட்டிருக்கிறது. (31) மேலும் இந்த ஸ்தூலரூபத்தைக்காட்டிலும் வேறுபட்டதும், அவ்யக்த (ஸூக்ஷ்ம) மானதும், அதிருஷ்டமாயும் (கண்ணுல் பார்க்கப்பட்ட நம்போன்ற சரீரங்களுக்கு மாறுபட்டதாயும்) அஸ்ருதமாயும் (காதால் கேட்கப்பட்ட இந்திராதி சரீரங்களுக்கு மாறுபட்டதாயும்) இருக்கின்ற வஸ்துவாக இருப்பதுபற்றி கைகால் முதலியனவாக பரிணுமத்தை (மாறுதலை) யடையாதகுணங்களினுல் செய்யப்பட்டதுமான யாதொரு ஸூக்ஷ்மசரீரமுண்டோ இதுவும் அவிவேகிகளினுல் ஆத்மாவினிடத்தில் ஆரோபிக்கப்பட்டிருக்கிறது. அந்த ஸூக்ஷ்மசரீரமானது ஜீவனுக்கு உபாதியாகக்ல்பிக்கப்படுகிறது. இந்த ஸூக்ஷ்மசரீரம் காரணமாகவே மறுபிறப்பு முதலியனவும் ஏற்படுகின்றது. (32) ‡எப்பொழுது இந்த ஸ்தூலஸூக்ஷ்மரூபங்கள் ச்ரவணமனனுதியாலும் பக்தியாலுமுண்டான ஸ்வரூப ஸாக்ஷாத்காரத்தினுல், அவித்யையினுல் ஆத்மாவினிடத்தில் கல்பிக்கப்பட்டன என்பதுபற்றி போக்கப்பட்டனவாகவாகின்றனவோ, அப்பொழுது ஜீவன் ஞானஸ்வரூபமான ப்ரம்ஹமாக வாகிறுன். (33) *எப்பொழுது வித்யையானதுண்டாகிறதோ, அப்பொழுது ஸர்வக்ஞனன பகவானே ஆச்ரயித்ததும் ஸம்ஸாரசக்கிரத்தில் விளையாடுகின்றதுமான இந்த மாயை

---

‡ இவ்விதம் ஸ்தூலஸூக்ஷ்மரூபமான ஜீவனது இரண்டு உபாதிகளை நிரூபித்து அவற்றின் நிவிருத்திமூலம் ஜீவனுக்கு ஏற்படும் ப்ரம்ஹபாவத்தை உபதேசிக்கிறூர்.

* ஸம்ஸாரத்துக்குக் காரணமான பகவன்மாயையானது விலகாததாக இருப்பதால் ஜீவனுக்கு ப்ரம்ஹத்வம் எங்ஙனம் என்ற ஆசங்கைக்கு இதனுல் பதில் சொல்லப்படுகிறது.

एवं जन्मानि कर्माणि ह्यकर्तुरजनस्य च। वर्णयन्ति स्म कवयो वेद-गुह्यानि हृत्पतेः॥ ३५ ॥ स वा इदं विश्वममोघलीलः सृजत्यवत्यत्ति न सज्जतेऽस्मिन्। भूतेषु चान्तर्हित आत्मतन्त्रः षाड्वर्गिकं जिघ्रति षड्गु-णेशः॥ ३६ ॥ न चास्य कश्चिन्निपुणेन धातुरवैति जन्तुः कुमनीष ऊतीः। नामानि रूपाणि मनोवचोभिः संतन्वतो नटचर्यामिवाज्ञः॥ ३७ ॥ स वेद

யானது உபாதமாக (நிவிருத்தமாக) ஆகிவிடுவதுபற்றி ஜீவனே ஸம் பன்னன் என்றே (ப்ரம்ஹத்துடன் கலந்தவனென்றே) தத்வமறிந் தவர்கள் எண்ணுகின்றனர். இவ்விதம் தனது பரமானந்த ஸ்வ ரூபத்தில் நிலைபெற்றவனாகவாகிறான். (34) (*)இவ்விதமே கவிகள் அந்தர்யாமியும், அகர்த்தாவும், ஜனனமற்றவருமான பகவானுக்கு வேதங்களால் ரஹஸ்யமாக உபதேசிக்கப்பட்ட ஜன்மங்களையும் கர் மங்களையும் வர்ணிக்கின்றனர். (35) [*]அமோகமான (பயன்தரத் தக்க) லீலையையுடையவரும், ஸ்வதந்திரரும், ஆறு இந்திரியங்களை அடக்கி யாளுபவருமான அந்த ஈச்வரனே இந்த ஜகத்தை ஸிருஷ்டிக்கவும், ரக்ஷிக்கவும், அழிக்கவும் செய்கிறார். ஆயினும் இந்த ப்ரபஞ்சத்தில் பற்றையடைவதில்லை. தன்னால் ஸிருஷ்டிக்கப் பட்ட ப்ராணிகளில் அந்தர்யாமியாக இருந்துகொண்டு ஆறு இந்தி ரியங்களின் விஷயத்தை வெகுதூரத்திலிருந்து வாஸனையை முகரு வதுபோல க்ரஹிக்கின்றாரே யொழிய அதில் ஸங்கத்தை (பற்றை) அடைவதில்லை. (36) மனத்தினால் ரூபங்களையும், வார்த்தைகளினால் (சுருதிகளினால்) பெயர்களையும் நன்கு விஸ்தாரப்படுத்துகின்றவரும், ப்ரபஞ்சஸ்ரஷ்டாவுமான இந்த ஈச்வரனுடைய லீலைகளை, நடனு டைய காரியங்களை மூடஜனமானது போல கெட்டபுத்தியுள்ள எந்த ஜந்துவும் (ஜீவனும்) தர்க்காதிகளிலுள்ள திறமையைக் கொ

(*) ஜீவனுக்கு ஜன்மாதிகள் மாயாமூலம் எவ்விதமேற்படுகின்றன வோ அவ்விதமே ஈச்வரனுக்கும் மாயாமூலமே ஜன்மங்கள் ஏற்படுகின்றன என்பதை இதனாலுபதேசிக்கிறார்.

[*] அங்ஙனமாயின் ஜீவனைவிட ஈச்வரனுக்கு என்ன விசேஷ மெனின்? ஜீவனுக்கு ஸ்வாதந்திரியமில்லை. ஈசுவரனுக்கு ஸ்வாதந்திரிய மிருக்கின்றது. இது தான் விசேஷம் என வுபதேசிக்கிறார்.

धातुः पद्वीं परस्य दुरन्तवीर्यस्य रथाङ्गपाणेः। योऽमायया संततयानुवृत्त्या भजेत तत्पादसरोजगन्धम् ॥ ३८ ॥ अथेह धन्या भगवन्त इत्थं यद्वासुदेवेऽखिललोकनाथे। कुर्वन्ति सर्वात्मकमात्मभावं न यत्र भूयः परिवर्त उग्रः॥३९॥ इदं भागवतं नाम पुराणं ब्रह्मसंमितम्। उत्तमश्लोक-

---

ண்டு அறியவியலாது. (37) †எவன் கபடமற்றதும், தொடர்ந்துள்ளதுமான அனுவிருத்தியினுல் (ஆனுகூலமான காரியத்தினுல்) அவருடைய சரணாரவிந்தங்களின் மணத்தைசேவிப்பானே அவனே முடிவற்ற பராக்கிரமமுடையவரும், ஜகத்ஸ்ரஷ்டாவும், பரமாத்மாவுமான சக்கிரபாணியினுடைய(ஸ்ரீமந்நாராயணனுடைய)ஸ்வரூபத்தை யறிவான். (38) ‡எக்காரணம் பற்றி இம்மாதிரியான ப்ரஶ்னங்களினுல் அகிலலோகநாதனுன இந்த வாஸுதேவனிடத்தில் நிலைத்த மனோவிருத்தியைச் சேய்கின்றீர்களோ, எந்த மனோவிருத்தியானது ஏற்பட்டதும் உக்ரமான(கர்ப்பவாஸாதி துக்கரூபமான) பரிவர்த்தமானது (ஜன்மமரணதிரூபமான சுழலானது) மருபடியு முண்டாகமாட்டாதோ, அக்காரணம் பற்றி பூஜ்யர்களான நீங்களே கிருதகிருத்யர்களாகவாகின்றீர்கள். (39) *பாகவதமென்ற பெயருள்ளதும், (*)ப்ரம்ஹரூபியான ஸ்ரீகிருஷ்ணனுக்குத் துல்லியமானதும், உத்தமஶ்லோகனுன பகவானுடைய சரித்திரத்தைக் கூறுவதும், ஸர்வ புருஷார்த்தத்தையும் தருவதும், ஸர்வ மங்களத்தையு முண்டுபண்ணுவதும், சிறந்ததுமான இந்தப் புராணத்தைப் பகவானுன வியாஸ மஹரிஷியானவர் லோகத்துக்கு மோக்ஷம் ஏற்படவேண்டி செய்தருளினுர். அந்த இந்தப் பாகவத புராணத்தை மனோஜய முள்ளவர்களுள் சிறந்தவரான புத்திர

---

† பக்தனேதான் அவருடைய ஸ்வரூபத்தை யறிவான் என வுபதேசிக்கிறார். ‡ எக்காரணம்பற்றி பக்தனே பகவத்தத்துவத்தை யறிவானே அக்காரணம் பற்றி பக்திமார்க்கத்தில் ப்ரவிருத்திக்க ருஷிகளைக் கொண்டாடுகிறார். * ஹே ஸூத! நீர் சொல்லும் இத்தகைய அபூர்வசாஸ்திரம் எது எனின்? அதற்குப் பதில் சொல்லுகிறார்.

(*) ब्रह्मसंमितम्=என்பதுமூலம். இதற்கு सर्वज्ञतुल्यम्=என ஸ்ரீதரர் பொருள் கூறியிருக்கிறார். இதற்கு வம்சீதரீயத்தில் सर्वज्ञ=வேதத்துக்கு तुल्यम्=ஒப்பானது, அல்லது सर्वज्ञனன ஸ்ரீகோபாலனுக்குத் துல்லியமானது என இரண்டு விதமான பொருள் கூறப்பட்டிருக்கிறது.

चरितं चकार भगवानृषिः॥ ४० ॥ निःश्रेयसाय लोकस्य धन्यं स्वस्त्ययनं महत्। तदिदं ग्राहयामास सुतमात्मवतां वरम् ॥४१॥ सर्ववेदेतिहासानां सारं सारं समुद्धृतम्। स तु संश्रावयामास महाराजं परीक्षितम् ॥४२॥ प्रायोपविष्टं गङ्गायां परीतं परमर्षिभिः। तत्र कीर्तयतो विप्रा विप्रर्षेर्भूरितेजसः॥ ४३ ॥ अहं चाध्यगमं तत्र निविष्टस्तदनुग्रहात्। सोऽहं वः श्रावयिष्यामि यथाऽधीतं यथामति ॥ ४४ ॥ कृष्णे स्वधामोपगते धर्मज्ञानादिभिः सह। कलौ नष्टदृशामेष पुराणार्कोऽधुनोदितः ॥ ४५ ॥

इति श्रीमद्भागवते महापुराणे प्रथमस्कन्धे भगवदवतारादिवर्णनं नाम तृतीयोऽध्यायः ॥ ३ ॥

(சுக) ருக்கு அத்தியயனஞ் செய்துவைத்தார். (40–41) அந்தச் சுகரோ ஸர்வவேதங்கள், இதிஹாஸங்கள், இவற்றினின்றும் கடைந் தெடுக்கப்பட்ட மிக்க மிக்கஸாரபூதமான (இந்தப் புராணத்தை) கங்கைக்கரையில் உயிர்போகும் வரை ஆஹாரமின்றி படுத்திருப்ப வரும், சிறந்தருஷிகளினால் சூழப்பட்டவரும், மஹாராஜனுமான பரீக்ஷித்துக்கு உபதேசித்தார். ஹே விப்ரர்காள்! அதிகமான தேஜஸ் ஸுள்ளவரும்,ப்ரம்ஹரருஷியுமான அந்தச் சுகர் உபதேசிக்குங்கால் அவ்விடத்தில் உட்கார்ந்திருந்த நானும் அந்தச் சுகருடைய அனுக் கிரஹத்தினால் (இந்தப் பாகவதத்தை) அறிந்துகொண்டேன். அந்த நான் அறிந்துகொண்டபடியே எனது புத்திக்கெட்டியவளவு உங் களுக்குச் சொல்லப்போகிறேன். (42–44) ஸ்ரீகிருஷ்ணன், தர்மம், க்ஞானம் முதலியவற்றுடன்கூட சொந்தமான ஸ்தானத்தையடைந் ததும், கலியில் நஷ்டமான ஞானக்கண்ணையுடையவர்களான ஜனங் களுக்குவேண்டி இந்தப் புராணமாகிற ஸூரியன் இதுபோழ்து உதயமாகி இருக்கிறது[*]. (45) (எ–று)

இவ்விதம் ஸ்ரீமத்பாகவத மஹாபுராண ப்ரதமஸ்கந்தத்தில் பகவதவதாராதி வர்ணனமென்ற மூன்றுவது அத்தியாயம் முற்றிற்று.

---

[*] பகவானை நேரில் பார்க்கும்பொழுது அவரிடமுள்ள எந்த தர்ம க்ஞானாதிகளை ஜீவன் நேரில் கண்டுகொள்ளக்கூடுமோ அவற்றைப் பக வான் தனது ஸ்ரீமூர்த்தியை மறைத்துக்கொண்ட காலத்திலுங்கூட இந் தப் பாகவத சாஸ்திரமூலம் தெளிவாய்க் கண்டுகொள்ளக்கூடுமாதலால் இந்தப் புராணமானது பகவானுக்கு ப்ரதிநிதியாகவாகிறது என்பது கருத்து.

अथ चतुर्थोऽध्यायः ॥

व्यास उवाच—इति ब्रुवाणं संस्तूय मुनीनां दीर्घसत्रिणाम्। वृद्धः कुलपतिः सूतं बह्वृचः शौनकोऽब्रवीत् ॥ १ ॥ शौनक उवाच—सूत सूत महाभाग वद नो वदतां वर। कथां भागवतीं पुण्यां यदाह भगवाञ्छुकः ॥ २ ॥ कस्मिन्युगे प्रवृत्तेयं स्थाने वा केन हेतुना। कुतः सञ्चोदितः कृष्णः कृतवान्संहितां मुनिः॥ ३ ॥ तस्य पुत्रो महायोगी समदृङ्निर्विकल्पकः। एकान्तमतिरुन्निद्रो गूढो मूढ इवेयते ॥ ४ ॥ दृष्ट्वाऽनुयान्तमृषि-

---

நான்காவது அத்தியாயம்.

(அ–கை) तुर्ये भागवतारंभकारणत्वेन वर्ण्यते।
व्यासस्यापरितोषस्तु तपस्संयमनादिभिः॥ १ ॥

(க–ரை) இந்த நான்காவது அத்தியாயத்தில் வியாஸாசாரியருக்கு தவம், ஸம்யமனம் முதலியவற்றாலும் அபரிதோஷமானது (லோகோபகாரமாகத்தான் செய்தகாரியம் போதாது என்ற எண்ணமானது) உண்டாயிற்று என்பது ஸ்ரீமத் பாகவதாரம்பத்துக்குக் காரணம் கூறவேண்டி வர்ணிக்கப்படுகிறது. (1) (எ–று)

வியாஸர் சொல்லலுற்றார்—இவ்விதம் சொல்லுகின்ற ஸூத பௌராணிகரைப் புகழ்ந்து, நீண்டகாலம் ஸத்ரயாகத்தைச் செய்கின்ற முனிகளுக்குள் வயதுமுதிர்ந்தவரும், குலபதியும், சிறந்த குணமுள்ளவரும், ருக்வேதமறிந்தவருமான சௌனகர் சொல்லலுற்றார். (1) சௌனகர் சொல்லலுற்றார்—ஹே சூத! ஹே சூத! ஹே மஹாபாக! பேசுபவர்களுக்குள் சிறந்தவரே! பகவானை சுகாசாரியர் எந்தக்கதையைச் சொன்னாரோ அந்தப்புண்ணியமான பாகவத கதையை எங்களுக்குச் சொல்லுவீராக. (2) எந்த யுகத்தில் எந்த ஸ்தானத்தில் எந்தக் காரணத்தினால் இந்தக் கதையானது ஆரம்பமாயிற்று. எவரால் கேட்கப்பட்டு முனியான வியாஸர் இந்தப்பாகவத ஸம்ஹிதையைச் சொன்னார். (3) மேலும், அவருடைய புத்திரரான சுகாசாரியரோ மஹாயோகியும், ஸமமான ப்ரம்ஹத்தையறிந்தவரும், ஆனதுபற்றியே பேதத்தோற்றமற்றவரும், ஒன்றிலேயே முடிவையடைந்த (நிலைத்த) புத்தியையுடையவரும்,

मात्मजमप्यनग्नं देव्यो ह्रिया परिदधुर्न सुतस्य चित्रम्। तद्वीक्ष्य पृच्छति मुनौ जगदुस्तवास्ति स्त्रीपुंभिदा न तु सुतस्य विविक्तदृष्टेः॥ ५॥ कथमालक्षितः पौरैः संप्राप्तः कुरुजाङ्गलान्। उन्मत्तमूकजडवद्विचरन् गजसाह्वये॥ ६॥ कथं वा पाण्डवेयस्य राजर्षेर्मुनिना सह। संवादः समभूत्तात यत्रैषा सात्वती श्रुतिः॥ ७॥ स गोदोहनमात्रं हि गृहेषु गृहमेधि-

---

மாயாரூபமான சயனத்தினின்றும் எழுந்தவரும், ஆனதுபற்றியே வெளிப்படையாகக் காணமுடியாதவரும், மூடன்போன்றவருமாகவன்றே காணப்படுபவராகிறார். (4) இடையில் வஸ்திரமற்றவரும் தனது புத்திரருமான சுகரைப் பின்தொடர்ந்து செல்லுகின்றவரும், இடையில் வஸ்திரமணிந்தவருமான வியாஸ மஹரிஷியைக் கண்டு, ஜலக்ரீடை செய்கின்ற அப்ஸரஸ் ஸ்திரீகள் வெட்கத்தினால் இடையில் தமதுவஸ்திரத்தைக் கட்டிக்கொண்டனரேயன்றி இடையில் வஸ்திரமின்றி முன்னர் செல்லுகின்ற அவரது புத்திரரைக் கண்டு வஸ்திரத்தைத் தரித்துக்கொண்டனரில்லை. அந்த ஆச்சரியத்தைக் கண்டு வியாஸ மஹரிஷியானவர் அதன் காரணத்தை ஸ்திரீகளிடம் கேட்கும்பொழுது "உமக்கு இவள் ஸ்திரீ, இவன் புருஷன்" என்ற பேதக்ஞானமிருக்கிறது. பரிசுத்தமான திருஷ்டியையுடைய உமது புத்திரனுக்கோ அவ்விதமில்லை (அதனுற்றான் இவ்விதம் செய்தோம்) என்றனர். (5) †முதலில் குருதேசங்களையும் ஜாங்கலதேசங்களையும் அடைந்தவரும், பிறகு கஜத்துடன் கூடின பெயரையுடைய அதாவது:—ஹஸ்தி என்ற அரசனால் நிர்மானஞ்செய்யப்பட்டதுபற்றி ஹாஸ்தினம் என்ற பெயரையுடைய, பட்டினத்தில் பித்தன்போலும், ஊமைபோலும், மூடன்போலும் ஸஞ்சரிக்கின்றவருமான அவர் பட்டினத்து ஜனங்களால் எவ்விதம் கண்டு பிடிக்கப்பட்டார். (6) ஹே தாத! பாண்டுவின் வம்சத்திற் பிறந்த ராஜரிஷியான பரீக்ஷித்துக்கு, முனியான சுகருடன்கூட இந்தப் பாகவதஸம்ஹிதை ஏற்படக்கூடிய ஸம்வாதமானது எவ்விதம் நிகழ்ந்தது. (7) அந்த மஹாபாகரான சுகரோ கிருஹஸ்தர்களின் கிருஹங்களில் அவர்களது அந்த கிருஹங்களைப்பரிசுத்தமாக்கவெண்

---

† இவ்விதமுள்ள இவரை க்ஞானி என எவ்விதம் கண்டு கொண்டனர் எனக்கேட்கிறார்.

नाम्। अवेक्षते महाभागस्तीर्थीकुर्वंस्तदाश्रमम्॥ ८॥ अभिमन्युसुतं सूत प्राहुर्भागवतोत्तमम्। तस्य जन्म महाश्चर्यं कर्माणि च गृणीहि नः॥ ९॥ स सम्राट् कस्य वा हेतोः पाण्डूनां मानवर्धनः। प्रायोपविष्टो गङ्गायामनाहृत्याधिराट्श्रियम्॥ १०॥ नमन्ति यत्पादनिकेतमात्मनः शिवाय हानीय धनानि शत्रवः। कथं स वीरः श्रियमङ्ग दुस्त्यजां युवैषतोत्स्रष्टुमहो सहासुभिः॥ ११॥ शिवाय लोकस्य भवाय भूतये य उत्तमश्लोकपरायणा जनाः। जीवन्ति नात्मार्थमसौ पराश्रयं मुमोच निर्विद्य कुतः कलेबरम्

ணங்கொண்டு பசுகறப்பதற்குப் பிடிக்கும் காலம் எவ்வளவோ அவ்வளவு காலம் மட்டும் தானே தங்கியிருப்பார். (8) ஹே ஸூத! அபிமன்யுவின் புத்திரரை(பரீக்ஷித்தை)பாகவதோத்தமரெனச் சொல்லுகின்றனர். மிக்கவாஸ்சரியம் வாய்ந்த அவருடைய பிறவியையும், அவரது கர்மங்களையும் எங்களுக்குச்சொல்லுவீராக. (9) பாண்டுக்களின் கௌரவத்தை வளர்ப்பவரும், சக்கிரவர்த்தியுமான அந்தப் பரீக்ஷித்தானவர் சக்கிரவர்த்திகளுக்குரிய ஐஸ்வரியத்தை அலக்ஷியம் செய்துவிட்டு என்னகாரணத்துக்காக கங்கைக்கரையில் ப்ராயோபவேசம் செய்தார்.(10) சத்துருக்கள் தங்களது க்ஷேமத்துக்கு வேண்டி தனங்களைக் கொண்டுவந்துவைத்து எவருடைய சரண பீடத்தை நிஸ்சிதமாக வணங்குகின்றனரோ, யுவாவும் வீரனுமான அந்தப் பரீக்ஷித்தானவர் விடுதற்கரிதான ஐஸ்வரியத்தை ப்ராணன்களுடன்கூட விடுவதற்கு இச்சிக்கக் காரணமென்ன. இது வெகு ஆஸ்சரியமன்றே? (11) உத்தமஸ்லோகனான பகவானே மேலான புகலிடமாகக்கொண்ட ஜனங்கள் எவர்களோ அவர்கள் உலகத்தின் சுகத்துக்குவேண்டியும், ஸமிருத்திக்குவேண்டியும், ஐஸ்வரியத்துக்கு வேண்டியும் ஜீவிக்கின்றனரே அன்றி தமக்குவேண்டியன்று. இவ்விதமிருக்க இந்தப் பரீக்ஷித்தானவர் வைராக்கியத்தையடைந்து பிறர்க்கு ஆஸ்ரயமான (சொந்தமான) சரீரத்தை என்ன காரணம் பற்றி விடத்துணிந்தார்‡. (12) இவ்விஷயமாக எங்களால் ஏதோ சிலவற்றைப்பற்றி கேட்கப்பட்டபோதிலும் கூட அவையாவற்றை

---

‡ பரோபஜீவனமான பொருளை தான் விடுவது பொருந்துமோ? என்பது பொருள்.

॥ १२ ॥ तत्सर्वं नः समाचक्ष्व पृष्टो यदिह किञ्चन । मन्ये त्वां विषये वाचां स्नातमन्यत्र छान्दसात् ॥ १३ ॥

सूत उवाच—द्वापरे समनुप्राप्ते तृतीये युगपर्यये । जातः पराशरा-द्योगी वासव्यां कलया हरेः॥ १४ ॥ स कदाचित्सरस्वत्या उपस्पृश्य जलं शुचि । विविक्तदेश आसीन उदिते रविमण्डले ॥ १५ ॥ परावरज्ञः स ऋषिः कालेनाव्यक्तरंहसा । युगधर्मव्यतिकरं प्राप्तं भुवि युगे युगे ॥ १६ ॥ भौतिकानां च भावानां शक्तिह्रासं च तत्कृतम् । अश्रद्दधानान्निःसत्त्वा-

---

யும் எங்களுக்குச் சொல்லுவீராக. *வேதவாக்கைத்தவிர்த்து மீத முள்ள வாக்விஷயத்தில் ஸமர்த்தராக நான் உம்மை எண்ணுகி றேன் என்றார். (13)

ஸூதர் சொல்லலுற்றார்—(*) மூன்றுவதான துவாபரயுகமா னது ப்ராப்தமானபொழுது அதன் கடசிபாகத்தில் உபரிசரவஸு வின் வீரியத்தினின்றும் பிறந்தவளான வாஸவி(ஸத்யவதி)யினிடத் தில் பராசரரிடமிருந்து ஹரியின் அம்சத்தினுல் யோகி (க்ஞானி) யான வியாஸர் அவதரித்தார். (14) அவர் ஒருஸமயம் ஸரஸ்வதி நதியின் சுத்தமான ஜலத்தில் ஸ்னானதிகளைச் செய்துமுடித்து ஸூரியமண்டலம் உதயமானபொழுது பரிசுத்தமான தேசத்தில் (பதரிகாஸ்ரமத்தில்) உட்கார்ந்துகொண்டவராக இருந்தார். (15) சென்றதையும், வரப்போவதையும் அறிந்தவரான அந்த ருஷி எவ ராலுமறியவியலாத வேகத்தையுடைய காலத்தினுல் யுகதர்மங்களுக் கேற்படும் மாறுபாட்டையும், அவ்விதமே பூமியில் ஒவ்வொரு யுகந் தோரும் அந்தக் காலத்தினுல் செய்யப்பட்ட பௌதிகமான பொ ருள்களின் (சரீராதிகளின்) சக்திக்குறைவையும், அவ்விதமே ஸ்ரத் தையற்றவர்களும், தைரியமற்றவர்களும், மந்தபுத்தியுள்ளவர்களும்,

---

*अत्रैवर्णिकत्वात्=ப்ராம்ஹண க்ஷத்திரிய வைசியஜாதியிற்சேராது ப்ரதிலோம ஜாதியிற்பிறந்தவராக இருப்பதுபற்றி வேதோச்சாரணத் துக்கு உமக்கு அதிகாரமில்லை என்பது கருத்து என்று स्नातमन्यत्र छान्दसात् என்றதற்கு ஸ்ரீதரர் உரை செய்திருக்கிறார்.

(*) "எந்தயுகத்தில் ஏற்பட்டது" என்ற தாதிகேள்விகளுக்கு வியா ஸோத்பத்தியைச் சொல்லுதல் மூலம் பதில் சொல்லுகிறார்.

न्दुर्मेधान्हसितायुषः ॥ १७ ॥ दुर्भगांश्च जनान्वीक्ष्य मुनिर्दिव्येन चक्षुषा। सर्ववर्णाश्रमाणां यद्दध्यौ हितममोघदृक् ॥ १८ ॥ चातुर्होत्रं कर्म शुद्धं प्रजानां वीक्ष्य वैदिकम्। व्यदधाद्यज्ञसन्तत्यै वेदमेकं चतुर्विधम् ॥ १९ ॥ ऋग्यजुःसामाथर्वाख्या वेदाश्चत्वार उद्धृताः। इतिहासपुराणं च पञ्चमो वेद उच्यते ॥ २० ॥ तत्रर्ग्वेदधरः पैलः सामगो जैमिनिः कविः। वैशम्पायन एवैको निष्णातो यजुषामुत ॥ २१ ॥ अथर्वाङ्गिरसामासी-

---

குறைந்த ஆயுளுள்ளவர்களும், மந்தமான பாக்கிய முள்ளவர்களு மான ஜனங்களையும் வீண்போகாத க்ஞான முள்ள முனியானவர் தவத்தாலுண்டான யோகதிருஷ்டியினல் கண்டு எல்லாவர்ணங் களுக்கும், எல்லா ஆச்ரமங்களுக்கும் எது ஹிதமோ அதைத் தியா னித்தார்.(16–18) [*]சாதுர்ஹோத்ரமான வைதிககர்மாவே ப்ரஜை களுக்குச் சுத்தியை (சித்த சுத்தியைத்) தரக்கூடியது எனக்கண்டு யக்ஞவிச்சேதம் வராதிருக்கவேண்டி ஒரேவேதத்தை நான்குவிதமா கப் பிரித்தார். (19) அதாவது:—வேதங்கள் ருக், யஜுஸ், ஸாம, அதர்வம் என நான்குகளாகப்பிரிக்கப்பட்டன என்றும். †இதிஹாஸ ‡புராணங்கள் ஐந்தாவது வேதமாகச் சொல்லப்படுகின்றன. (20) அவற்றுள் பைலர் ருக்வேதத்தைக் சுற்றார். கவியான (பூர்வமீமாம் ஸையைச் செய்தவரான) ஜைமினியானவர் ஸாமவேதத்தைக் கானஞ்செய்தார். வைசம்பாயனர் ஒருவரே யஜுர்வேதத்தில் தேர்ச்சி பெற்றவராகவானார். அபிசாராதிகளைச் செய்வதுபற்றி கொடூரரான ஸுமந்து என்ற முனியானவர் அதர்வவேதங்கள்

---

[*] ருக்வேதமறிந்தவர் ஹோதாவெனப் படுவர். அவரை உபலக்ஷணமாகக்கொண்ட—அவர்கொண்டு அறியப்படுகின்ற,நான்கு ருத்விக்குகள் சதுர்ஹோதாக்களாவர். அந்நால்வராலும் செய்யப்படும் கர்மம் சாதுர் ஹோத்ரம் எனப்படும்.

† आर्षादि बहुधाख्यानं देवर्षिचरिताश्रयम्। इति हासमितिप्रोक्तं भविष्यद्भूतधर्मयुक् ॥ अथवा—धर्मार्थिकाममोक्षाणामुपदेशसमन्वितम्। पूर्ववृत्तकथायुक्तमितिहासं प्रचक्षते ॥ என்ற லக்ஷணமுள்ளது இதிஹாஸமெனப்படும்.

‡ वर्ण्यन्ते यत्र सर्गाद्याः पञ्च वा दश वा च तत्। पुराणं प्रोच्यते वेदखिलार्थानां प्रपूरणात् ॥ என்ற லக்ஷணமுள்ளது புராணமெனப்படும்.

त्सुमन्तुर्दारुणो मुनिः। इतिहासपुराणानां पिता मे रोमहर्षणः॥ २२ ॥ त एत ऋषयो वेदं स्वं स्वं व्यस्यन्ननेकधा। शिष्यैः प्रशिष्यैस्तच्छिष्यैर्वेदास्ते शाखिनोऽभवन्॥ २३ ॥ त एव वेदा दुर्मेधैर्धार्यन्ते पुरुषैर्यथा। एवं चकार भगवान्व्यासः कृपणवत्सलः॥ २४ ॥ स्त्रीशूद्रद्विजबन्धूनां त्रयी न श्रुतिगोचरा। कर्मश्रेयसि मूढानां श्रेय एवं भवेदिह। इति भारताख्यानं कृपया मुनिना कृतम्॥ २५ ॥

एवं प्रवृत्तस्य सदा भूतानां श्रेयसि द्विजाः। सर्वात्मकेनापि यदा नातुष्यद्धृदयं ततः॥ २६ ॥ नातिप्रसीदद्धृदयः सरस्वत्यास्तटे शुचौ।

விஷயத்தில் தேர்ச்சி பெற்றவராகவானார். எனது பிதாவான ரோமஹர்ஷணர் இதிஹாஸ புராணவிஷயத்தில் தேர்ச்சிபெற்றவராகவானர். (21–22) அந்த இந்த ருஷிகள் தத்தமது வேதத்தைப் பலவாறுகப் பிரித்தனர். பிரிக்கப்பட்ட அந்த வேதங்கள் சிஷ்யர்களாலும், அவர்களுடைய சிஷ்யர்களாலும் அவர்களுடைய சிஷ்யர்களாலும் சாகைகள் (பிரிவுகள்) உள்ளனவாகவாயின. (23)

தீனர்களிடத்தில் வாத்ஸல்யமுள்ளவரும், பகவானுமான வியாஸர் முன்னர் அதிமேதாவிகளால் எந்த வேதங்கள் தரிக்கப்பட்டனவோ அந்த வேதங்களே மூடர்களான புருஷர்களாலும் எவ்விதம் தரிக்கப்படுமோ அவ்விதம் செய்தார். (24) மேலும், ஸ்திரீகள், சூத்திரர்கள், *த்விஜபந்துக்கள் இவர்களின் காதில் வேதம் கேட்கலாகாது ஆயினும் கர்மரூபமான ஸ்ரேயஸ் ஸாதனவிஷயத்தில் மூடர்களான அவர்களுக்கு இம்முறைப்படியே ஸ்ரேயஸ்ஸானது உண்டாகட்டும் எனக் கருதியேதான் முனியான வியாஸரால் பாரதம் என்ற ஆக்யானமானது செய்யப்பட்டது. அதாவது:—முனியானவர் வேதார்த்தத்தை நன்கு தெரிந்தெடுத்து பாரதத்தில் சொல்லியிருக்கிறார் என்றும். ஹே த்விஜர்காள்! இவ்விதம் ஸர்வவிதமான கர்மத்தினாலும் ப்ராணிகளின் ஸ்ரேயஸ்ஸில் (நன்மையில்) ப்ரவிருத்தித்தவரான வியாஸருடைய மனதானது தான் செய்தது போதுமென்று எப்பொழுது நினைக்கவில்லையோ அப்பொழுது தர்மமறிந்த

---

* ப்ராம்ஹண க்ஷத்ரிய வைசியர்களுக்குள் அதமர்கள் த்விஜ பந்துக்களெனப்படுவர்.

वितर्कयन्विविक्तस्थ इदं प्रोवाच धर्मवित् ॥२७॥ धृतव्रतेन हि मया छन्दांसि गुरवोऽग्नयः । मानिता निर्व्यलीकेन गृहीतं चानुशासनम् ॥ २८ ॥ भारतव्यपदेशेन ह्याम्नायार्थश्च दर्शितः । दृश्यते यत्र धर्मादि स्त्रीशूद्रादिभिरप्युत ॥ २९ ॥ तथापि बत मे दैह्यो ह्यात्मा चैवात्मना विभुः । असंपन्न इवाभाति ब्रह्मवर्चस्यसत्तमः ॥ ३० ॥ किंवा भागवता धर्मा न प्रायेण

வரான அவர் மிக்கத்தெளிவற்ற ஹிருதயமுள்ளவராய்ச் சுத்தமான ஸரஸ்வதி நதியின் கரையில் தனித்து இருந்து கொண்டு பலவாறு எண்ணுகின்றவராய்ப் பின்வருமாறு தன்னுள்ளில் சொல்லிக் கொண்டார். (25-27) விரதங்களை யனுஷ்டித்த என்னுல் கபட மற்ற புத்தியுடன் வேதங்களும், குருக்களும், அக்னிகளும் பூஜிக் கப்பட்டன. அவர்களின் கட்டளையும் அனுஷ்டிக்கப்பட்டது. (28) எதில் ஸ்திரீ சூத்திராதிகளாலுங்கூட தர்மாதியானது காணப்படு மோ, அந்தப் பாரதம் என்ற வியாஜமாக, வேதார்த்தமானது நிரூ பிக்கப்பட்டிருக்கிறது. (29) இவ்விதம் ப்ராணிகளின் நன்மையில் ப்ரவிருத்தித்த வனுயினுங்கூட என்னுடைய தேகத்திலுள்ளதும், உண்மையில் விபுவும், (*)ப்ரம்ஹதேஜஸ்ஸுள்ளவர்களுக்குள் மிக் கச் சிறந்ததுமான ஆத்மா (ஜீவன்) ஸ்வரூபத்திலுல் வேறுபட்டவன் போலத் தோற்றத்தை யடைகிறான். (30) பரம ஹம்ஸர்களுக்கு= பக்தர்களுக்கு, ப்ரியங்களாகவுள்ள பாகவத தர்மங்கள் அதிகமாய் நிரூபணஞ் செய்யப்படவில்லையா என்னே? அவைகளேயன்றே

(*) ब्रह्मवर्चस्यसत्तमः=ब्रह्मवर्चसम्=वेदश्रवणाध्यापनोत्कर्षजं तेजः, तत्र साधवः=ब्रह्मवर्चस्याः, तेषु सत्तमः=अतिश्रेष्ठोऽपि வேதஶ்ரவணம், அதன் அத்யாபனம் இவற்றின் மேன்மையிலுலுண்டான தேஜஸ், ப்ரம்ஹவர்ச்சஸம் எனப் படும். அதில் ஸாதுக்கள்–சிறந்தவர்கள், எவர்களோ அவர்கள் ப்ரம்ஹ வர்ச்சஸ்யர்களாவர். அவர்களுக்குள் சிறந்தவனுயினுங்கூட என்பது பொருள். அல்லது ब्रह्मवर्चसी=ப்ரம்ஹதேஜஸ்ஸுள்ளவனுயினுங்கூட असत्तम इव உபயோகமற்ற பொருள் போலத்தோற்றுகிறான் என்றும் பொருள் கொள்ளலாம். அல்லது ब्रह्मवर्चस्युशत्तमः என்ற பாடப்படி ब्रह्मवर्चसी=ப்ரம்ஹதேஜஸ்ஸுள்ளதாகவும், उशत्तमः=உண்மையில் ஆனந்த ரூபமானதுபற்றி ஆசைப்படத்தக்கதாகவுமிருந்தபோதிலுங்கூட என்ன வேறு பொருளும் கொள்ளலாம்.

निरूपिताः । प्रियाः परमहंसानां त एव ह्यच्युतप्रियाः ॥ ३१ ॥ तस्यैवं खिलमात्मानं मन्यमानस्य खिद्यतः । कृष्णस्य नारदोऽभ्यागादाश्रमं प्रागुदाहृतम् ॥ ३२ ॥ तमभिज्ञाय सहसा प्रत्युत्थायागतं मुनिः । पूजयामास विधिवन्नारदं सुरपूजितम् ॥ ३३ ॥

इति श्रीमद्भागवते महापुराणे प्रथमस्कन्धे व्यासनिर्वेदनिरूपणं नाम चतुर्थोऽध्यायः ॥ ४ ॥

अथ पञ्चमोऽध्यायः ॥

सूत उवाच—अथ तं सुखमासीनं उपासीनो बृहच्छ्रवाः । देवर्षिः प्राह विप्रर्षिं वीणापाणिः स्मयन्निव ॥ १ ॥ नारद उवाच—पाराशर्य महा-

---

அச்யுதனுக்கு (பக்தர்களைக் கைசோரவிடாத ஸ்ரீகிருஷ்ணனுக்கு) ப்ரியங்களாகவாகும். (31) இவ்விதம் தன்னைக் குறைவுள்ளவனாக எண்ணுகின்றவரும், ஆனதுபற்றியே கஷ்டத்தை யடைந்தவருமான அந்த வியாஸருடைய, முன்னர் கூறப்பட்ட ஆஸ்ரமத்துக்கு நாரதர் வந்தார். (32) முனியான வியாஸர் அதையறிந்து உடனே ஆஸனத்தினின்று மெழுந்து யாவராலும் நன்கு பூஜிக்கப்பட்டவரும் தனதருகில் வந்தவருமான அந்த நாரதரை முறைப்படி பூஜித்தார். (33) (எ–று)

இவ்விதம் ஸ்ரீமத்பாகவதமஹாபுராண ப்ரதமஸ்கந்தத்தில்
வியாஸநிர்வேத நிரூபணமென்ற நான்காவது
அத்தியாயம் முற்றிற்று.

ஐந்தாவது அத்தியாயம்.

(அ–கை) पञ्चमे सर्वधर्मेभ्यो हरिकीर्तनगौरवम् ।
व्यासचित्तप्रसादाय नारदेनोपदिश्यते ॥ १ ॥

(க–ரை) வியாஸருடைய சித்தத்துக்குத் தெளிவு உண்டாக வேண்டி எல்லா தர்மத்தைக் காட்டிலும் ஹரிகீர்த்தனத்தின் மஹிமையானது நாரதராலுபதேசிக்கப்படுகிறது என இந்த ஐந்தாவது அத்தியாயத்தில் சொல்லப்படுகிறது. (1) (எ–று)

भाग भवतः कच्चिदात्मना। परितुष्यति शारीर आत्मा मानस एव वा। जिज्ञासितं सुसंपन्नमपि ते महदद्भुतम्। कृतवान्भारतं यस्त्वं सर्वार्थपरिबृंहितम् ॥ ३ ॥ जिज्ञासितमधीतं च यत्तद्ब्रह्म सनातनम्। अथापि शोचस्यात्मानमकृतार्थ इव प्रभो ॥ ४ ॥ व्यास उवाच—अस्त्येव मे सर्वमिदं त्वयोक्तं तथापि नात्मा परितुष्यते मे। तन्मूलमव्यक्तमगाधबोधं पृच्छामहे

ஸூதர் சொல்லலுற்றார்—பிறகு ஸுகமாக உட்கார்ந்திருப்பவரும் ப்ரம்ஹருஷியுமான அந்த வியாஸரைப் பார்த்து அவரது அருகிலுட்கார்ந்தவரும், பெரியகீர்த்தியையுடையவரும், வீணையைக் கையிலுடையவருமான தேவருஷியான நாரதர் கொஞ்சம் சிரிக்கின்றவர்போலவாகிச் சொல்லத்தொடங்கினர். நாரதர் சொல்லலுற்றார்—மஹாபாகரும் பராசரகுமாரருமான ஹே வ்யாஸரே! சரீராபிமானியான ஆத்மாவானது அந்தச் [*]சரீரத்திலுல் ஸந்தோஷத்தையடைகின்றதா?. மனோபிமானியான ஆத்மாவானது அந்த †மனத்திலுல் ஸந்தோஷத்தை யடைகிறதா? (2) உம்மால் அறியவிரும்பப்பட்ட யாதொரு தர்மாதியுண்டோ அவையாவும் நன்கு அறியப்பட்டே இருக்கவேண்டும். ஏன்? யாதொரு நீர் ஸ்வார்த்தங்களும் (தர்மம் அர்த்தம், காமம், மோக்ஷம் ஆகிய நான்கு புருஷார்த்தங்களும்) நிறைந்ததும், பெரிதும் அத்புதமுமான பாரதத்தையன்றே செய்திருக்கின்றீர். (3) மேலும், ஸனாதன (நித்ய) மான யாதொரு பரம்ப்ரம்ஹமுண்டோ அது நன்கு விசாரிக்கப்பட்டும், அனுபவிக்கப்பட்டு மன்றே இருக்கின்றது. அவ்விதமிருந்தும் ஹே ப்ரபோ! அகிருதார்த்தன் (கர்மபத்த ஜீவன்) போல ஆத்மாவைக் குறித்துச் சோகப்படுகின்றீரே? அதன் காரணம் யாது? என்றார். (4) வியாஸர் சொல்லலுற்றார்—உம்மால் சொல்லப்பட்ட இவையாவும் எனக்கு இருக்கவேதான் செய்கிறது. ஆயினும் எனது ஆத்மா (மனது) அவை போதுமென்ற எண்ணத்தையடையாதிருக்கின்றது. ஆகவே தெளிவுபடாத காரணம் யாதென்பதை, ப்ரம்ஹதேவனுடைய சரீரத்திலிருந்து உண்டான

---

[*] சரீரத்தில் வியாதி முதலியன இல்லாதிருக்கின்றனவா?

† மனத்தில் வேறுகவலை முதலியன இல்லாதிருக்கின்றனவா? என்பது கருத்து.

त्वात्मभवात्मभूतम् ॥ ५ ॥ स वै भवान्वेद समस्तगुह्यमुपासितो यत्पुरुषः पुराणः। परावरेशो मनसैव विश्वं सृजत्यवत्यत्ति गुणैरसङ्गः॥ ६ ॥ त्वं पर्यटन्नर्क इव त्रिलोकीमन्तश्चरो वायुरिवात्मसाक्षी। परावरे ब्रह्मणि धर्मतो व्रतैः स्नातस्य मे न्यूनमलं विचक्ष्व ॥ ७ ॥

श्रीनारद उवाच—भवतानुदितप्रायं यशो भगवतोऽमलम्। येनैवासौ न तुष्येत मन्ये तद्दर्शनं खिलम्॥ ८ ॥ यथा धर्मादयश्चार्था मुनिवर्यानु-

---

வரும் ஆனதுபற்றியே ஆழ்ந்த அறிவையுடையவருமான உம்மைக் கேட்கின்றேன். (5) பராவரேசனும் (காரியகாரண நியந்தாவும்) புராண புருஷனும், அஸங்கனுமான எந்தப் பகவான் ஸங்கல்ப மாத்திரத்தினாலேயே ஸத்வாதிகுணங்களைக்கொண்டு ப்ரபஞ்சத்தை ஸிருஷ்டிக்கவும் காக்கவும் அழிக்கவும் செய்கின்றாரோ அவர் எக் காரணம்பற்றி உம்மாலுபாஸிக்கப்பட்டிருக்கின்றாரோ அக்காரணம் பற்றி அந்த நீரே ஸகல ரஹஸ்யத்தையுமறிவீர். (6) மேலும், நீர் மூவ்வுலகிலும் ஸஞ்சரிக்கின்றவராய் ஸூரியன் போல எல்லாவற் றையும் நேரில் காண்பவராகவும், யோகபலத்தினால் ப்ராணவாயு போல எல்லாப்ராணிகளுடையவும் உள்ளில் ஸஞ்சரிக்கின்றவராய்க் கொண்டு மனத்திலுள்ள எண்ணங்கள் யாவையும் அறிகின்றவராக வும் இருக்கின்றீர். ஆனதுபற்றி பரப்ரம்ஹத்தினிடத்தில் தர்மத்தி னால் (யோகத்தினால்) நன்கு ஈடுபட்டவனும், அவரப்ரம்ஹமான வேதத்தில் ப்ரம்ஹசர்ய நியமங்களினால் ஈடுபட்டவனுமான எனக்கு நேர்ந்துள்ள †குறைவை இன்னதெனத் தெளிவாகச் சொல்லுவீராக என்றார். (7)

நாரதர் சொல்லலுற்றார்—உம்மால் பகவானுடைய நிர்த்தோஷ மான யசஸ்ஸானது பெரும்பாலும் சொல்லப்படாததாக இருக்கிறது. எந்த தர்மக்ஞானதிகளைக்கொண்டு மட்டும் இந்தப் பகவான் திருப்தியையடையமாட்டாரோ அந்த தர்மக்ஞானதிகளைக் குறைவுடைய

---

† न्यूनमलं विचक्ष्व என்பது மூலம். இதிலிருந்து தனது அவதார ப்ரயோஜன ரூபமான காரியத்தில் ஏதோ குறைவு இருப்பதாக மட்டும் எண்ணிக் கவலைப்பட்டாரேயொழிய வேறு எவ்வழியிலும் அவருக்குச் சோகாதிகளில்லை என்பது பெறப்பட்டது.

कीर्तिता:। न तथा वासुदेवस्य महिमा ह्यनुवर्णित:॥ ९ ॥ न यद्वचश्चित्र-पदं हरेर्यशो जगत्पवित्रं प्रगृणीत कर्हिचित्। तद्वायसं तीर्थमुशन्ति मानसा न यत्र हंसा निरमन्त्युशिक्क्षया:॥ १० ॥ तद्वाग्विसर्गो जनताघविप्लवो यस्मिन्प्रतिश्लोकमबद्धवत्यपि। नामान्यनन्तस्य यशोऽङ्कितानि यच्छृण्वन्ति

னவென்றே நான் எண்ணுகிறேன். (8) *ஹே முனிவர்ய! தர்மாதிகளும், அர்த்தங்களும் (அவற்றின் ஸாதனங்களும்) உம்மால் எவ்விதம் வர்ணிக்கப்பட்டனவோ அவ்விதம் வாஸுதேவனுடைய மஹிமையானது வர்ணிக்கப்படவில்லையன்றே? (9) (*)விசித்திரங்களான பதங்களையுடையதாயினுங்கூட எந்த வாக்கானது ஜகத்துக்குப் பரிசுத்தியைத்தருகின்ற ஹரியினுடைய யசஸ்ஸை ஒருவிடத்திலும் வர்ணிக்காதிருக்கின்றதோ அதை வாயஸமான தீர்த்தமாக (காக்கைக்கொப்பான காமிகளுக்கு ஸந்தோஷத்தைத் தரக்கூடிய தாக) ப்பெரியார் எண்ணுகின்றனர். ஏன்? யாவராலுமாவலுடன் விரும்பப்படும் ப்ரம்ஹத்தில் வஹிப்பவர்களுப், ஸத்துவகுணப்ரதானமான மனத்திலிருப்பவர்களுமான துறவிகள் இந்த வாக்கில் ஒருபொழுதும் ரமிக்காதிருப்பதாலென்க (உலகப்ரஸித்தங்களான ஹம்ஸங்கள் மானஸமென்ற ஸரஸ்ஸில் ஸஞ்சரிக்கின்றவைகளாகவும், அழகிய தாமரையில் வஸிப்பவைகளாகவும் இருக்கும்பொழுது விசித்திரமான அன்னம் முதலியன அற்றதும், காக்கையின் விளையாட்டுக்கு இடமுமான எச்சில் குழியில் விழமாட்டாவன்றே!)(10) [*]எவற்றை ஸாதுக்கள் உபதேசிப்பவர் கிடைக்கும்பொழுது அவரிடமிருந்து கேட்பரோ, கேட்பவர் இருக்கும் பொழுது அவருக்கு

---

* பகவானுடைய யசஸ்ஸை ஆங்காங்கு வர்ணித்திருக்கின்றேனே என்பீரேல் அவ்விஷயத்தில் சொல்லுகிறேன் கேளும் என்று பதில் சொல்லுகிறார்.

(*) ஸ்ரீவாஸுதேவனைவிட வேறுபட்ட விஷயத்தைப்பற்றின ஞானமானது எவ்விதம் வீணோ அவ்விதமே வேறு விஷயங்களைச் சொல்லும் வாக்சாதுரியமும் வீணையாகும் என இதனாலுபதேசிக்கிறார்.

[*] பதங்களில் சாதுர்யமில்லாவிடினுங்கூட பகவத் யசோவர்ணப்ரதானமான வாக்கானது மிக்கப் பரிசுத்தமேயாகும் என இதனாலுபதேசிக்கிறார்.

गायन्ति गृणन्ति साधवः॥ ११ ॥ नैष्कर्म्यमप्यच्युतभाववर्जितं न शोभते ज्ञानमलं निरञ्जनम्। कुतः पुनः शश्वदभद्रमीश्वरे न चार्पितं कर्म यदप्यकारणम्॥ १२ ॥ अथो महाभाग भवानमोघदृक्शुचिश्रवाः सत्यरतो धृतव्रतः। उरुक्रमस्याखिलबन्धमुक्तये समाधिनानुस्मर तद्विचेष्टितम्॥१३॥ ततोऽन्यथा किंचन यद्विवक्षतः पृथग्दृशस्तत्कृतरूपनामभिः। न कुत्र-

---

உபதேசிப்பரோ, இவ்விதம் நேராதபொழுது தாங்களே கானஞ் செய்வரோ, அத்தகையனவும், அனந்தனுடைய கீர்த்தியுடன் கூடினவுமான நாமாக்கள் தப்பானசப்தாதிகளுடன் கூடினதாயினுங்கூட எந்த வாக்ப்ரயோகத்தில் ஒவ்வொரு சுலோகந்தோரும் இருக்கின்றனவோ அந்த வாக்ப்ரயோகந்தான் ஜன ஸமூஹத்தின் பாபத்தைப்போக்குவதாகவாகும். (11) †நைஷ்கர்மியமும்(எவ்வித கர்மஸம்பந்தமுமற்ற ப்ரம்ஹாகாரமாகவானதும்)நிரஞ்ஜனமும்(உபாதிநிவர்தகமும்)ஆன க்ஞானமே அச்யுதனுன பகவானுடைய பக்தியில்லாதிருக்குமாயின் மிக்கச்†சோபையை யடைவதில்லை. இவ்விதமிருக்க ஸாதனகாலத்திலும் பலகாலத்திலும் அபத்ரமான (துக்கரூபமான) காம்யகர்மம் யாதுண்டோ அதுவும், அகாரணமான (பலனற்ற) நிஷ்காமகர்மம் யாதுண்டோ அதுவும், ஈஶ்வரனிடத்தில் அர்ப்பணஞ் செய்யப்படாவிடில் எங்கிருந்து சோபையை யடையப்போகிறது. (பஹிர்முகமாக இருப்பதுபற்றி சித்தசுத்தியைத் தரவேமாட்டாது என்பது கருத்து.) (12) ஆகவே ஹே மஹாபாக! நீர் உண்மையான புத்தியையுடையவரும், சுத்தமான யசஸ்ஸையுடையவரும், ஸத்யத்தில் பற்றுள்ளவரும், விரதங்களைத் தரித்த (அனுஷ்டித்த) வருமாக இருக்கின்றீர். அந்த நீர் எல்லா ப்ராணிகளுக்கும் பந்த நிவிருத்தியேற்படவேண்டி உருக்கிரமனுன பகவானுடைய அந்த லீலையை சித்தைகாக்ரியத்தினுல் த்யானித்து அவ்விதமே வர்ணிப்பீராக. (13) அந்த உருக்கிரம சேஷ்டிதத்தைவிட வேறொன்றில் திருஷ்டியையுடையவனும், ஆனதுபற்றியே வேறுமுறையினுல் ஏதோவொரு

---

† பகவத் பக்தியற்ற க்ஞானமே பயனற்றதாக வாகும்பொழுது பக்திஹீனமான கர்மம் எவ்விதம் பயன்படப் போகிறது என இதனுலுபதேசிக்கிறார். ‡ அபரோக்ஷானுபவத்தைத் தருவதில்லை என்பது கருத்து.

चित्क्वापि च दुःस्थिता मतिर्लतेत वाताहतनौरिवास्पदम् ॥ १४ ॥ जुगुप्सितं धर्मकृतेऽनुशासतः स्वभावरक्तस्य महान्व्यतिक्रमः। यद्वाक्यतो धर्म इतीतरः स्थितो न मन्यते तस्य निवारणं जनः॥१५॥ विचक्षणोऽस्यार्हति वेदितुं विभोरनन्तपारस्य निवृत्तितः सुखम्। प्रवर्तमानस्य गुणैरनात्मन-

---

பொருளைச் சொல்லவிருப்பங்கொண்டவனும் ஆன மனிதனுடைய புத்தியானது, அவ்விருப்பங்காரணமாகத் தோற்றத்தை யடைந்த ரூபங்களினுலும் பெயர்களினுலும் நிலைபெறுததாய்க் கொண்டு பெரும் காற்றிலடிபட்ட கப்பலானது போல ஒருபொழுதும் ஒரு விஷயத்திலும் நிலைபெறுததாகவாகிவிடுகிறது.* (14) (*)இயற்கையிலேயே ராகமுள்ள (விஷயப்பற்றுள்ள) புருஷனுக்கு, தர்மத்துக்கு வேண்டி நிந்த்யமானகாம்யகர்மாதிகளை நீர் உபதேசித்தது பெருத்த அன்னியாயமாகும். ஏன்? எந்த உமதுவாக்யத்தைக் கொண்டு "இது முக்கியமான தர்மமாகும்" என வெண்ணங்கொண்ட ப்ராகிருத (மூட) ஜனமானது தத்துவமறிந்தவர்களால் செய்யப்படும் காம்யகர்மாதிகளின் நிவாரணத்தை உண்மையென நம்பாததாகவாகிவிடுவதாலென்க. (15) [*]ஸமர்த்தனுகவுள்ள ஒருவனே ஸர்வகர்ம நிவிருத்திமூலம் விபுவும், தேசகாலவஸ்து பரிச்சேதமற்ற வருமான பரமாத்மாவினுடைய நிர்விகல்பக சுகாத்மகமான ஸ்வரூபத்தை அறிந்து கொள்ளுவதற்குத் தகுதியுள்ளவனுக வாகின்

---

* இவ்விதமே கீதையிலும் व्यवसायात्मिका बुद्धिरेकेह कुरुनन्दन। बहुशाखाह्यनन्ताश्च बुद्धयोऽव्यवसायिनाम् ॥ என்றதாலுபதேசிக்கப்பட்டிருக்கிறது.

(*) இவ்விதம் பாரதாதிகளில் ஹரியின் யசஸ்ஸை விடுத்து தர்மாதிகளை வர்ணித்ததானதுபயனற்றது என முன்னர் சொல்லப்பட்டது. இந்தச் சுலோகத்திலுல் அவ்விதம் செய்தது விருத்தமாகவே ஆகிவிட்டது எனவுபதேசிக்கப்படுகிறது.

[*] இவ்விதம் ப்ரவிருத்திமார்க்கமானது நிந்திக்கப்படுமாயின் நிவிருத்திமார்க்கத்தை யடைந்து எல்லாக் கர்மங்களையும் தியாகஞ்செய்தல் வாயிலாகவே பரமேசுவரனுடைய சுகஸ்வரூபத்தின் அனுபவமானது ஏற்பட்டுவிடலாமானதால் அவருடைய லீலைகளை வர்ணிக்கவேண்டிய அவசியமென்னை எனின்? அதற்கு இந்தச் சுலோகத்திலுல் பதில் சொல்லப்படுகிறது.

स्ततो भवान्दर्शय चेष्टितं विभो ॥ १६ ॥ त्यक्त्वा स्वधर्मं चरणाम्बुजं हरेर्भजन्नपक्वोऽथ पतेत्ततो यदि । यत्र क्व वाऽभद्रमभूदमुष्य किं कोवार्थ आप्तोऽभजतां स्वधर्मत: ॥ १७ ॥

तस्यैव हेतो: प्रयतेत कोविदो न लभ्यते यद्भ्रमतामुपर्यध: । तल्लभ्यते दु:खवदन्यत: सुखं कालेन सर्वत्र गभीररंहसा ॥ १८ ॥ न वै जनो जातु

ருனே யொழிய ப்ரவிருத்திஸ்வபாவமுள்ள மூடன் தகுதியுள்ளவனு யாகான். ஆகவே ஹே விபோ! தேஹாதிகளில் அபிமானமுள்ள வனும், ஆனதுபற்றியே ஸத்துவாதிகுணங்கள் மூலம் ப்ரவிருத்திக் கின்றவனுமான ஜனத்துக்குவேண்டி நீர் பகவத் லீலையை உபதே சிப்பீராக. (16) †ஸ்வதர்மத்தை விடுத்து ஹரியின் சரணாரவிந்த பஜனஞ்செய்பவர் பக்தியின் பரிபாகத்தினுல் கிருதார்த்தராக ஆவ ரேயானுல் அவர் விஷயத்தில் எவ்வித சிந்தைக்குமிடமில்லை. அவ் விதமின்றிப் பக்திபரிபாகமில்லாதவன் அந்தப் பஜனத்திலிருந்து நழுவினுலும், அல்லது மரணத்தை யடைந்தாலும் அப்பொழுதும் பக்திரவிகனுன மனிதனுக்கு கர்மாவில் அதிகாரமில்லாமைபற்றி அனர்த்த சங்கைக்கே இடமில்லை. அனர்த்தம் வருவதாக சங்கை யேற்பட்டபோதிலுங்கூட இந்தப் பக்திரவிகனுன மனிதனுக்கு யாதேனும் நீசயோனியில் பிறவியேற்பட்ட போதிலுங்கூட அப் பிறவியிலும் பக்திவாஸனை இவனைவிட்டு விலகாதிருப்பதால் ஆபங் களம் உண்டாகுமோ? (உண்டாகமாட்டாது)பகவத்பஜனமே செய் யாதவர்களுக்கு ஸ்வதர்மத்தினுல் மட்டும் என்ன புருஷார்த்தம் அடையப்பட்டதாக வாகிவிடுகிறது. (17) ‡மேலுள்ள ப்ரம்ஹ

---

† காம்யமான தர்மாதிகள் அனர்த்த ஹேதுவாக இருப்பன பற்றி அவற்றை விடுத்து ஹரியின் லீலையே வர்ணிக்கத்தக்கது என முன்னரு பதேசிக்கப்பட்டது. இப்பொழுது நித்யநைமித்திகரூபமான ஸ்வதர்ம நிஷ்டையிலுள்ள பற்றையும் கூட குறைத்துக் கொண்டு ஹரிபக்தி ஒன்றே உபதேசிக்கத்தக்கது எனச் சொல்லப்படுகிறது.

‡"கர்மத்தினுல் பிதிருலோகத்தை யடைகிறான்" எனச் சுருதியிருப் பதன் மூலம் ஸ்வதர்மானுஷ்டான மாத்திரத்தினுல் பிதிருலோக ப்ராப்த் திரூபமான பலன் இருக்கின்றதன்றே எனின்? அவ்விஷயத்தில் சொல் லப்படுகிறது.

कथञ्चनाव्रजेन्मुकुन्दसेव्यन्यवदङ्ग संसृतिम्। स्मरन्मुकुन्दाङ्घ्र्युपगूहनं पुनर्विहातुमिच्छेन्न रसग्रहो यतः॥ १९ ॥ इदं हि विश्वं भगवानिवेतरो यतो जगत्स्थाननिरोधसंभवाः। तद्धि स्वयं वेद भवांस्तथापि वै प्रादेशमात्रं

தேவஜன்மம் வரையிலும், கீழிலுள்ள ஸ்தாவரஜன்மம் வரையிலும் பிறந்து பிறந்து சுற்றுகின்ற ஜீவர்களால் எதானது(ஸ்வரூபஸாக்ஷாத்காரத்தை முன்னிட்ட பரமானந்தசுகமோ, பகவத் விக்ரஹத்யானுதிகளினாலுண்டாகும் பக்திசுகமோ) அடையமுடியாததோ அதற்கு வேண்டியே புத்திமானாகவுள்ளவன் முயற்சிக்கவேண்டும். விஷயமூலமுண்டாகும் அந்தச் சுகமோவெனில் வேறு ப்ராசீனகர்மத்தினால் எங்கும் (நரகம் முதலிய விடங்களிலும்) கூட *துக்கமானதுபோல இவனது முயற்சியின்றித் தானாகவே மிக்கவேகமுள்ள காலத்தினால் கிடைத்துவிடக் கூடுமன்றே? (18)

ஹே அனக! முகுந்தனைஸேவிக்கும் ஜனமானது, கேவலகர்மநிஷ்டன்போல கெட்டயோனியில் பிறந்திருந்த போதிலுங்கூட திரும்பவும் ஒருபொழுதும் ஸம்ஸார (கர்மபலபோக)த்தையடையமாட்டாது. ஏன்? எக்காரணம்பற்றி இவன் ரஸனீயனான பகவானிடத்தில் ஆக்ரஹமுள்ளவனாக இருக்கின்றானோ அக்காரணம்பற்றி முகுந்தனான பகவானுடைய சரணங்களின் ஆலிங்கனத்தைத் திரும்பவும் நினைத்துக்கொண்டு அதைவிடுவதற்கு விரும்பாதவனாக இருப்பதாலென்க. (19) (*) இந்த ப்ரபஞ்சமானது பகவானேயாகும். அவரோ இந்த ப்ரபஞ்சத்தைக் காட்டிலும் வேறுபட்டவரேயாவார். [*]ஏன்? இந்த ஈஸ்வரனிடமிருந்து ஜகத்தின் ஸ்ருஷ்டி ஸ்திதி ப்ரளயங்கள் ஏற்படுவதே அதன் காரணமாகும். அவ்விஷயத்தையோ

---

*अप्रार्थितानि दुःखानि यथैवायान्ति देहिनाम्। सुखान्यपि तथा मन्ये दैन्यमत्रातिरिच्यते॥ என்றபடி இவனது ப்ரயத்தினமின்றியே துக்கமானது எவ்விதமுண்டாகின்றதோ அவ்விதமே விஷயசுகமும் தானாகவே உண்டாகிவிடலாமானதால் அதற்காக இவன் முயற்சிக்க வேண்டிய அவசியமில்லை என்பது கருத்து. (*) பகவத் லீலையை வர்ணிக்கவேண்டுமென உபதேசித்து இந்தச் சுலோகத்தினால் அந்தப் பகவானையும், அவரது லீலைகளையுமுபதேசிக்கிறார். [*] ஈசுவரனைக் காட்டிலும் ப்ரபஞ்சம் வேறில்லை. ஈசுவரனை ப்ரபஞ்சத்தைவிட வேறுபட்டவர் என்பது கருத்து.

भवत: प्रदर्शितम् ॥ २० ॥ त्वमात्मनात्मानमवेह्यमोघदृक्परस्य पुंस: परमात्मन: कलाम्। अजं प्रजातं जगत: शिवाय तन्महानुभावाभ्युदयोऽधिगण्यताम् ॥ २१ ॥ इदं हि पुंसस्तपस: श्रुतस्य वा स्विष्टस्य सूक्तस्य च बुद्धिदत्तयो:। अविच्युतोऽर्थ: कविभिर्निरूपितो यदुत्तमश्लोकगुणानुवर्णनम् ॥ २२ ॥ अहं पुरातीतभवेऽभवं मुने दास्यास्तु कस्याश्चन वेदवादिनाम्। निरूपितो बालक एव योगिनां शुश्रूषणे प्रावृषि निर्विविक्षताम् ॥ २३ ॥ ते मय्यपेताखिलचापलेऽर्भके दान्तेऽधृतक्रीडनकेऽनुवर्तिनि।

ஸ்வயமாகவே நீர் அறிவீர். அவரது ஸ்வரூபத்தின் ஏகதேசம் மட்டுமே உமக்குச் சொல்லப்பட்டது. (20) வீண்போகாத அறிவையுடைய ஹே வியாஸரே! நீர் உம்மை அஜனுகவும், புருஷசப்தவாச்யனான பரமாத்மாவினுடைய அம்சமாகவும், ஜகத்தின் க்ஷேமத்துக்குவேண்டி அவதரித்தவராகவும் அறிந்துகொள்ளும். ஆகவே (கவலையையொழித்து) மஹானுபாவனான ஹரியினுடைய அப்யுதய (பராக்கிரம) மானது (உம்மால்) அதிகமாக நிரூபிக்கப்படட்டும். (21) †உத்தமஸ்லோகனுடைய குணங்களை அடிக்கடி வர்ணித்தல் என்பது யாதுண்டோ இதுவேயன்றோ ஜீவனது தபஸ்ஸுக்கும், சாஸ்திரக்ஞானத்துக்கும், சிறந்தமுறையில் செய்த யாகத்துக்கும், சிறந்தமுறையில் செய்த வேதாத்யயனத்துக்கும், க்ஞானம், தானம் இவற்றுக்கும், நித்யமானபலன் என மஹான்களால் நிஸ்சயிக்கப் பட்டிருக்கிறது. (22)

‡ஹே முனே! நானே முந்தின கல்பத்தில் முந்தினபிறவியில் வேதவாதிகளான ப்ராம்ஹணர்களின் வேலைக்காரியான ஒரு ஸ்திரீயினிடமிருந்து பிறந்தேன். சாதுர்மாஸ்யகாலத்தில் ஒரே இடத்தில் வஸிக்க விருப்பங்கொண்டவர்களான யோகிகளுக்குப் பணிவிடை செய்யும் விஷயத்தில் குழந்தைப் பருவத்திலிருக்கும் பொ

---

† இதனுற்றான் உம்முடைய தபஸ் முதலியன ஸபலமாகும் என வுபதேசிக்கிறார்.

‡ ஸாதுஸங்கத்தினால் ஹரிகதாசிரவணதிரூபமான பலமானது ஸித்திக்கிறது என்பதற்குத் தனது விருத்தாந்தத்தைத் திருஷ்டாந்தமாகக் காட்டுகிறார்.

चक्रः कृपां यद्यपि तुल्यदर्शनाः शुश्रूषमाणे मुनयोऽल्पभाषिणि ॥ २४ ॥ उच्छिष्टलेपाननुमोदितो द्विजैः सकृत्स्म भुञ्जे तदपास्तकिल्बिषः। एवं प्रवृत्तस्य विशुद्धचेतसस्तद्धर्म एवात्मरुचिः प्रजायते ॥ २५ ॥ तत्रान्वहं कृष्णकथाः प्रगायतामनुग्रहेणाशृणवं मनोहराः। ताः श्रद्धया मेऽनुपदं विशृण्वतः प्रियश्रवस्यङ्ग ममाभवद्रुचिः ॥ २६ ॥ तस्मिंस्तदा लब्धरुचेर्महामुने प्रियश्रवस्यस्खलिता मतिर्मम। ययाहमेतत्सदसत्स्वमायया पश्ये मयि ब्रह्मणि कल्पितं परे ॥ २७ ॥ इत्थं शरत्प्रावृषिकावृतू हरेर्विशृण्वतो

மூதே நான் ஏவப்பட்டேன். (23) அந்தமுனிகள் யாவரிடத்திலும் ஒரேமாதிரியான எண்ணமுள்ளவர்களாக இருந்தபோதிலுங்கூட அற்பமான வார்த்தை பேசுகின்றவனும் (மழலைச் சொல்மாறுத வனும்) குழந்தைக்குரிய சாபல்யமெதுவுமற்றவனும், இளம்பிராயத் திலுள்ளவனும், இந்திரியங்களை யடக்கினவனும், விளையாட்டுக் குரிய ஸாதனங்களில் பற்றில்லாதவனும், அனுகூலனாக இருந்து கைங்கரியஞ் செய்கின்றவனுமான என்னிடத்தில் கிருபையைச் செய்தனர். (24) ப்ராம்ஹணர்களிஞல் அனுமோதிக்கப்பட்ட வனுய்க் கொண்டு அவர்கள் சாப்பிட்ட பாத்திரத்தில் ஒட்டின பருக்கைகளை ஒரேதடவை சாப்பிட்டேன். அதனல் போக்கப்பட்ட பாபத்தையுடையவனுக ஆனேன். இவ்விதம் ப்ரவிருத்தித்தவனும் மிக்கசுத்தமான சித்தமுள்ளவனுமான எனக்கு அவர்கள் செய்யும் பரமேஸ்வர பஜனரூபமான தர்மத்தில் மனத்துக்குப் பற்று ஏற்பட்டு விட்டது. (25) ஹே அங்க! அப்பொழுது ப்ரதினமும் கானஞ்செய்கின்ற அவர்களின் அனுக்கிரஹத்தினல் மனேஹரங் களான கிருஷ்ண கதைகளைக் கேட்டேன். இயற்கையிலேற்பட்ட ஸ்ரத்தையினல் அடிக்கடி ஸ்ரவணஞ்செய்கின்ற எனக்கு ப்ரியமான கீர்த்தியையுடைய பகவானிடத்தில் ருசியானது (மனப்பற்றுனது) உண்டாகிவிட்டது. (26) ஹே மஹாமுனே! எந்த புத்தியினல் ப்ரபஞ்சாதீதமும், ப்ரம்ஹஸ்வரூபமுமான என்னிடத்தில் ஸ்தூல ஸூக்ஷ்மரூபமான இந்தச்சரீரமானது ஸ்வரூபத்தில் அத்யஸ்தமான மாயையினல் கல்பிதமே யொழிய உண்மையில் கிடையாது என அந்தக்ஷணத்திலேயே கண்டுகொள்ளுவேனே அந்தப் புத்தியானது,

मेऽनुसवं यशोऽमलम्। सङ्कीर्त्यमानं मुनिभिर्महात्मभिर्भक्तिः प्रवृत्ताऽऽत्मरजस्तमोपहा ॥ २८ ॥

तस्यैवं मेऽनुरक्तस्य प्रश्रितस्य हतैनसः। श्रद्दधानस्य बालस्य दान्तस्यानुचरस्य च ॥ २९ ॥ ज्ञानं गुह्यतमं यत्तत्साक्षाद्भगवतोदितम्। अन्ववोचन्गमिष्यन्तः कृपया दीनवत्सलाः ॥ ३० ॥ येनैवाहं भगवतो वासुदेवस्य वेधसः। मायानुभावमविदं येन गच्छन्ति तत्पदम् ॥ ३१ ॥ एतत्संसूचितं

ப்ரியமான கீர்த்தியையுடைய அந்தப் பகவானிடத்தில் அடையப் பட்ட ருசி (பக்தி) யையுடைய எனக்கு நிலைத்ததாக வுண்டாயிற்று. (27) இவ்விதம் சரத்ருது, வர்ஷருது இவைமுழுதும் மூன்று காலங்களிலும் மஹாத்மாக்களான முனிகளினால் நன்கு வர்ணிக்கப்படுகின்ற ஹரியின் நிர்மலமான யசஸ்ஸை ப்ரவணஞ் செய்கின்ற எனக்கு மனத்திலுள்ள ரஜஸ்தமோகுணங்களைப் போக்குகின்ற பக்தியானது ஏற்பட்டுவிட்டது. (28)

இவ்விதம் பக்தியோகத்தை யடைந்தவனும், வணக்கமுள்ளவனும், பாபமற்றவனும், ப்ரத்தையுள்ளவனும், இந்திரிய ஜயமுள்ளவனும், கைங்கரியபரனும், பாலனும், அறியப்பட்ட த்வம்பதார்த்தனுமான எனக்கு, வேறிடம் செல்லப்போகின்றவர்களும், தீனவத்ஸலர்களுமான அந்த ப்ராம்ஹணர்கள், எந்த க்ஞானத்தினால், வாஸுதேவனும், ஜகத்ஸ்ரஷ்டாவுமான பகவானுடைய மாயையின் வைபவத்தை நான் அறிந்தேனோ, எந்தக்ஞானத்தினால் மஹான்கள் அவரது ஸ்வரூபத்தை யடைகின்றரோ அத்தகைய மஹிமைவாய்ந்ததும், பகவானுபதேசிக்கப்பட்டதும், *மிக்க மிக்க ரஹஸ்யமுமான யாதொரு ஈச்வரதத்துவக்ஞானமுண்டோ அதை (பகவத்தத்துவ ஸாக்ஷாத்காரத்தையுண்டாக்குகிற சாஸ்திரத்தை) கிருபையினால் நேரிலுபதேசித்தனர். (29–31) (*)ஹே ப்ரம்ஹன்! ஈச்வரனும்

---

* गुह्यतमम्=என்பது மூலம். ஸாதன பூதமான தர்மதத்துவக்ஞானம் குஹ்யமாகும். அதன்மூலமேற்படும் உபாதிவிவிக்த ஆத்மக்ஞானம் குஹ்யதரமாகும். அதனால் அடையக்கூடிய ஈச்வரஸ்வரூபக்ஞானம் குஹ்யதமமாகும் என ஸ்ரீதரீயத்தில் பொருள் கூறப்பட்டிருக்கிறது. (*)இவ்விதம் பகவத்தத்துவக்ஞானத்தையுபதேசித்து அதற்கு ஸாதனமான தர்மரஹஸ்யத்தையுமுபதேசித்தனர் என இதனால் சொல்லுகிறார்.

ब्रह्म स्तापत्रयचिकित्सितम्। यदीश्वरे भगवति कर्म ब्रह्मणि भावितम्॥३२॥ आमयो यश्च भूतानां जायते येन सुव्रत। तदेव ह्यामयं द्रव्यं न पुनाति चिकित्सितम्॥ ३३॥ एवं नृणां क्रियायोगाः सर्वे संसृतिहेतवः। त एवात्मविनाशाय कल्पन्ते कल्पिताः परे॥ ३४॥ यदत्र क्रियते कर्म भगवत्परितोषणम्। ज्ञानं यत्तदधीनं हि भक्तियोगसमन्वितम्॥३५॥ कुर्वाणा

ஸர்வநியந்தாவும், ப்ரம்ஹமும் (குறைவற்ற பூர்ண ஸ்வரூபத்தை யுடையவரும்) ஆன பகவானிடத்தில் அர்ப்பணஞ் செய்யப் பட்டதாய்க் கொண்டு எந்தக் கர்மமானது ஆத்யாத்மிகம், ஆதிதை விகம், ஆதிபௌதிகம் ஆகிய தாபத்ரயத்தைப் போக்குமோ இது வும் நன்கு உபதேசிக்கப்பட்டது. (32) [*]ஹே ஸுவ்ரத! ப்ரா ணிகளுக்கு எந்தப் பொருளினால் எந்த வியாதியானது உண்டாகு மோ அந்தத்ரவியமே †வேறுதிரவியங்களினால் சுத்தஞ்செய்யப்பட் டதாய்க் கொண்டு அதேவியாதியைப் போக்கிவிடவில்லையோ? இவ் விதமே எந்தக் கர்மயோகங்கள் யாவும் மனிதர்களுக்கு ஸம்ஸாரத் தைத் தரக்கூடியனவோ அவைகளே பரமேச்வரனிடத்தில் அர்ப்ப ணஞ்செய்யப்பட்டனவாய்க்கொண்டு ஆத்மவிஞ்ஞசத்தை (கர்மநாசத் தைச்) செய்கின்றனவாக வாகின்றன. (33–34) ‡பக்தியோகத் துடன் கூடின க்ஞானமானது யாதொன்றோ அது, பகவத்ப்ரீதிக்கு

---

[*] ஸம்ஸாரத்துக்கு ஹேதுவான கர்மமானது தாபத்ரய நிவர்த்தக மாகவாவது எங்ஙனமெனில்? ஸாதனபேதத்தை யொட்டி அவ்விதமாகி றது என இரண்டு சுலோகங்களிலு லுபதேசிக்கிறார்.

†"ज्वरमरणकार्ययोरपि दधिविषयोः शर्करामन्त्रसंयुक्तयोः ज्वरमरणनिवर्तकत्वदर्शनात्" தயிர் ஜ்வரத்தையும் விஷம் மரணத்தையும் தருவனவாயினும், சர்க்கரை யுடன் கலந்த தயிர் ஜ்வரநிவிருத்தியையும், அபிமந்த்ரணம் செய்யப்பட்ட விஷம் மரண நிவிருத்தியையும் செய்வதை அனுபவத்தில் காண்கிறோம். என சங்கரபகவத்பாதாசாரிய பாஷ்யத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

‡ ஞானத்தினால் அக்ஞானப்ராப்த்தமான கர்மநாசமேற்படுகிறது. அந்தக்ஞானமோ பக்தியோகத்தினாலேற்படுகிறது என்ற க்ரமமிருக்கி றது. ஆகவே கர்மத்தினால் கர்மநாசமேற்படுவது எப்படி எனின்? இதற்கு இந்தச் சுலோகத்தினால் பதில் சொல்லப்படுகிறது.

यत्र कर्माणि भगवच्छिक्षयाऽसकृत्। गृणन्ति गुणनामानि कृष्णस्यानुस्मरन्ति च ॥ ३६ ॥ नमो भगवते तुभ्यं वासुदेवाय धीमहि। प्रद्युम्नायानिरुद्धाय नमः सङ्कर्षणाय च ॥३७॥ इति मूर्त्यभिधानेन मन्त्रमूर्तिममूर्तिकम्। यजते यज्ञपुरुषं स सम्यग्दर्शनः पुमान् ॥ ३८ ॥ इमं स्वनिगमं ब्रह्मन्नवेत्य मदनुष्ठितम्। अदान्मे ज्ञानमैश्वर्यं स्वस्मिन्भावं च केशवः ॥ ३९ ॥ त्व-

---

வேண்டி யாதொரு கர்மமானது இங்கு செய்யப்படுகிறதோ அதை யொட்டியன்றே ஏற்படுகிறது. (35)

*எப்பொழுது பகவானுடைய உபதேசத்தையொட்டி கர்மங்களைச் செய்கின்றனரோ அப்பொழுது அடிக்கடி ஸ்ரீகிருஷ்ணனுடைய குணநாமங்களை உச்சரிப்பதுடன், ஸ்ரீகிருஷ்ணனையும் ஸ்மரிக்கின்றனர். (36) (*)பகவானுனை உமக்கு நமஸ்காரம். வாஸுதேவனும், ப்ரத்யும்னனும், அநிருத்தனும், ஸங்கர்ஷணனுமான உமக்கு மனஸ்வினுல் நமஸ்காரத்தைச்செய்கிறேம். என பகவன் மூர்த்தியைச் சொல்லிக்கொண்டு மந்திரமயமான மூர்த்தியை யுடையவரும், மந்திரங்களிற் சொல்லிய மூர்த்தியைத் தவிர்த்து வேறு மூர்த்தியற்றவருமான யக்ஞபுருஷனை எவன் பூஜிக்கிறனே அந்தப் புருஷன் ஸம்யக்ஞானமுள்ளவனுகவாகிறன். (37-38) ஹே ப்ரம்ஹன்! ஸ்ரீநாராயணன், இவ்விதமான தனது உபதேசம் என்னுல் அனுஷ்டிக்கப்பட்டதாகவறிந்து முதலில் ஸ்வானுபவரூபமான க்ஞானத்தையும், பிறகு அணிமாதிரூபமான ஐஸ்வரியத்தையும் (அவற்றில் எனக்குப் பற்றில்லாதிருப்பதைக்கண்டு) தன்னிடத்தில் பக்தியையும் எனக்குக் கொடுத்தார். (39) அதிகமான கீர்த்தியுள்ள ஹே வியாஸரே! எந்த பகவத்கீர்த்தியையறிந்ததனுல் வித்வான்களுக்குப் பிறவற்றை அறிவதில் இச்சையானது முடிந்துவிடுகிறதோ, துக்கங்களினுல் அடிக்கடி பீடிக்கப்பட்ட மனதுள்ளவர்களின் [*]க்லேசத்தைப் போக்கக்கூடியது இந்தக் கீர்த்தியே

---

*பகவதர்ப்பணஞ்செய்யப்படும் கர்மமானது பக்தியோகத்தைத் தருகிறது என்பதில் ஸாதுக்களின் ஆசாரத்தைத் தெரிவிக்கிறார். (*) கர்மங்களுக்கு கீர்த்தனஸ்மரணரூபமான பக்தி ஹேதுத்வத்தைச் சொல்லிப் பிறகு இரண்டு சுலோகங்களினுல் ஞானஹேதுத்வத்தை யுபதேசிக்கிறார். [*] அவித்யை, அஸ்மிதை, ராகம், துவேஷம், அபிநிவேசம் இவ்

32974

मप्यदभ्रश्रुत विश्रुतं विभोः समाप्यते येन विदां बुभुत्सितम्। प्रख्याहि दुःखैर्मुहुरर्दितात्मनां संक्लेशनिर्वाणमुशन्ति नान्यथा ॥ ४० ॥

इति श्रीमद्भागवते महापुराणे प्रथमस्कन्धे व्यासनारदसंवादो नाम पञ्चमोऽध्यायः ॥ ५ ॥

-•••-

अथ षष्ठोऽध्यायः ॥

सूत उवाच—एवं निशम्य भगवान्देवर्षेर्जन्म कर्म च। भूयः पप्रच्छ तं ब्रह्मन्व्यासः सत्यवतीसुतः॥ १ ॥ व्यास उवाच—भिक्षुभिर्विप्रवसिते

யொழிய பிறவன்று எனப் பெரியார் எதை யுபதேசிக்கின்றனரோ, அந்தப் பகவத்கீர்த்தியை நீரும் விரிவுபடுத்துவீராக என்றார். (40)

இவ்விதம் ஸ்ரீமத்பாகவத மஹாபுராண ப்ரதமஸ்கந்தத்தில் வியாஸ நாரதஸம்வாதம் என்ற ஐந்தாவது அத்தியாயம் முற்றிற்று.

ஆறுவது அத்தியாயம்.

(அ–கை) व्यासस्य प्रत्ययार्थं च षष्ठे प्राग्जन्मसंभवम्।
स्वभाग्यं नारदः प्राह कृष्णसङ्कथनोद्भवम् ॥ १ ॥

(க–ரை) ஸ்ரீகிருஷ்ணகீர்த்தன மூலமேற்பட்டதும் முந்தின பிறவியில் நிகழ்ந்ததுமான தனது பாக்கியத்தை நாரதர், வியாஸருக்கு விஶ்வாஸமுண்டாக்கவேண்டி இந்த ஆறுவது அத்தியாயத்தில் உபதேசிக்கிறார். (1) (எ–று)

ஸூதர் சொல்லலுற்றார்—ஹே ப்ரம்ஹன்! சௌனக! ஸத்யவதியின் புத்திரரும் பகவானுமான வியாஸர், தேவர்ஷியான நாரதருடைய பிறவியையும், கர்மத்தையும் கேட்டுத் திரும்பவும் அந்த நாரதரைக் கேட்கத்தொடங்கினர். (1) வியாஸர் சொல்லலுற்றார்—

வைத்தும் கிலேசமெனப்படும். இவற்றின் பொருளை நமது பாதஞ்ஜல யோகஸூத்ர மொழிபெயர்ப்பில் கண்டுகொள்க.

विज्ञानादेष्टृभिस्तव। वर्तमानो वयस्याद्ये ततः किमकरोद्भवान् ॥ २ ॥ स्वायंभुव कया वृत्त्या वर्तितं ते परं वयः। कथं चेदमुदस्राक्षीः काले प्राप्ते कलेबरम् ॥ ३ ॥ प्राक्कल्पविषयामेतां स्मृतिं ते सुरसत्तम। न ह्येष व्यवधात्काल एष सर्वनिराकृतिः॥ ४ ॥ नारद उवाच—भिक्षुभिर्विप्रवसिते विज्ञानादेष्टृभिर्मम। वर्तमानो वयस्याद्ये तत एतदकारषम् ॥ ५ ॥ एकात्मजा मे जननी योषिन्मूढा च किङ्करी। मय्यात्मजेऽनन्यगतौ चक्रे स्नेहानुबन्धनम् ॥ ६ ॥ साऽस्वतन्त्रा न कल्पाऽसीद्योगक्षेमं ममेच्छती।

---

†உமக்கு விக்ஞானத்தை யுபதேசித்தவர்களான ஸன்யாஸிகள் வேறிடஞ்சென்றதும் அதன்பிறகு இளம்வயதிலிருந்த நீர் என்ன செய்தீர். (2) ப்ரம்ஹகுமாரரான ஹே நாரத! பின்னுள்ள வயஸ்ஸானது உம்மால் எத்தகைய ஜீவனோபாயத்தினால் கழிக்கப்பட்டது. காலமானது ப்ராப்தமானபொழுது தாஹீபுத்திரனுகப் பிறந்த இந்தச் சரீரத்தை எப்படிவிட்டீர். (3) ஹே ஸுரஸத்தம! வேறுகல்பரூபமான இந்தக் காலமானது முந்தின கல்பத்தில் நிகழ்ந்ததை விஷயமாகக் கொண்ட உமது நினைவை தடுக்காதிருப்பது எப்படி?. இந்தக் காலமானது ஸர்வத்தையும் அழிக்கக்கூடியதாகவன்றே இருக்கின்றது என்றூர். (4) நாரதர் சொல்லலுற்றூர்—எனக்குத் தத்துவக்ஞானத்தை யுபதேசித்தவர்களான ஸன்னியாஸிகள் வேறுதேசம் சென்றதும், அதன் பிறகு இளம்வயதிலிருந்த நான் பின்வருமாறு செய்தேன். (5) ஒரே புத்திரனையுடையவளும், வேலைக்காரியும், மூடையும், ‡ஸ்திரீயுமான எனது தாயானவள் வேறுகதியற்றவனும் புத்திரனுமான என்னிடத்தில் அதிகம் ஸ்னேஹபந்தத்தைச் செய்தாள். (6) எனது *யோக (*)க்ஷேமத்தில் விருப்பமுள்ளவளும் ஆயினும் பரதந்திரையுமான அவள்

---

† தானும் அவ்விதமே செய்யவென்ணங்கொண்டவராய் உபதேசத்துக்குப் பிறகு நடந்த அவரது சரித்திரத்தை வியாஸர் கேட்கிறூர்.

‡ மூடர்களுக்கே புத்திராதிகளிடத்தில் ஸ்னேஹ பந்தமேற்படுவது இயற்கை. அதிலும் ஸ்திரீயாகவுள்ள ஜீவன் விஷயத்தில் சொல்லவும் வேண்டுமோ? என்பது கருத்து.

* கிடைக்காததின் லாபம் யோகமெனப்படும். (*) கிடைத்ததைக் காற்றல் க்ஷேமமெனப்படும்.

ईशस्य हि वशे लोको योषा दारुमयी यथा ॥ ७ ॥ अहं च तद्ब्रह्मकुल ऊषिवांस्तदवेक्षया। दिग्देशकालाव्युत्पन्नो बालकः पञ्चहायनः॥ ८ ॥ एकदा निर्गतां गेहाद्दुहन्तीं निशि गां पथि। सर्पोऽदशत्पदा स्पृष्टः कृपणां कालचोदितः॥ ९ ॥ तदा तदहमीशस्य भक्तानां शमभीप्सतः। अनुग्रहं मन्यमानः प्रातिष्ठं दिशमुत्तराम् ॥ १० ॥ स्फीतान्नपदांस्तत्र

அதைச் செய்யச் சக்தியற்றவளாக விருந்தாள். மரத்தாற் செய்யப் பட்ட பெண்பொம்மையானது ஆட்டுபவனுக்கதீனமாக இருப்பது போல உலகமானது ஈசனுடைய வசத்திலன்றே இருக்கின்றது.(7) ஐந்துவயதுள்ளவனும், திக்கு தேசம் காலம் இவற்றில் தேற்சி பெறுதவனும் பாலகனுமான நானும் அந்த அன்னையின் ஸ்னேஹ பந்தமொழியும் காலத்தை எதிர்பார்த்துக்கொண்டு அந்த ப்ராம் ஹண கிருஹத்திலேயே வஸித்துவந்தேன். (8)

ஒருநாள் இரவில் மாடுகறக்கவேண்டி வீட்டிலிருந்து வெளியில் மார்க்கத்தில் வந்தவளும் துக்கிக்கத் தக்கவளுமான அவளைக் காலத் தினாலேவப்பட்டதும், ஆனதுபற்றியே காலால் சிறிது மிதிக்கப் பட்டதுமான பாம்பானது கடித்து விட்டது. (9) அப்பொழுது நான் அந்த மாதாவின் மரணத்தைப் பக்தர்களுக்கு க்ஷேமத்தை விரும்புகின்ற ஈச்வரனுடைய அனுக்கிரஹமாக வெண்ணிக் கொ ண்டு வடக்கு திக்கை நோக்கிக்கிளம்பினேன். (10) அந்தத் திக்கி லுள்ள விசாலமான தேசங்களையும், புரம், †கிராமம், இடைச்சேரி, பொன் விளையுமிடம் இவற்றையும், கேடங்களையும்=ஏர் ஓழுபவர் வஸிக்கும் கிராமங்களையும், ‡கர்வடங்களையும்=நதிமலைச்சார்பிலுள்

---

† विप्राश्च विप्रभृत्याश्च यत्र चैव वसन्ति ते। स तु ग्राम इतिप्रोक्तः शूद्राणां वास एव च ॥ என்ற ப்ருகுவசனப்படி ப்ராம்ஹணர்களும், அவர்களின் வே லைக்காரர்களும், எங்கு வஸிக்கின்றனரோ எங்கு சூத்திரர்களின் கிரஹ மிருக்கின்றதோ அது கிராமமெனப்படும்.

‡ एकतो यत्रतु ग्रामो नगरञ्चैकतः स्थितम्। मिश्रन्तु खर्वटं नाम नदीगिरिसमाश्र-यम् ॥ என்ற ப்ருகுவசனப்படி ஒருபக்கத்தில் கிராமமும், ஒருபக்கத் தில் நகரமுமாகக் கலந்து நதிமலை இவற்றை யொட்டியுள்ள இடம் கர் வடமெனப்படும்.

पुरग्रामव्रजाकरान्। खेटखर्वटवाटीश्च वनान्युपवनानि च ॥ ११ ॥ चित्र-धातुविचित्राद्रीनिभभग्नभुजद्रुमान्। जलाशयाञ्छिवजलान्नलिनीः सुरसे-विताः॥ १२ ॥ चित्रस्वनैः पत्ररथैर्विभ्रमद्भ्रमरश्रियः। नलवेणुशरस्तम्ब-कुशकीचकगह्वरम् ॥ १३ ॥ एक एवातियातोऽहमद्राक्षं विपिनं महत्। घोरं प्रतिभयाकारं व्यालोलूकशिवाजिरम् ॥ १४ ॥ परिश्रान्तेन्द्रियात्माहं तृट्परीतो बुभुक्षितः। स्नात्वा पीत्वा ह्रदे नद्या उपस्पृष्टो गतश्रमः ॥ १५ ॥ तस्मिन्निर्मनुजेऽरण्ये पिप्पलोपस्थ आस्थितः। आत्मनात्मानमात्मस्थं यथा श्रुतमचिन्तयम् ॥ १६ ॥ ध्यायतश्चरणाम्भोजं भावनिर्जितचेतसा। औत्क-

---

ளக் கிராமங்களையும், வாடிகளையும்=பாக்கு, புஷ்பம் இவை நிறைந்த இடங்களையும், தானுகவே முளைத்த மரங்களுள்ள வனங்களையும், தோட்டங்களையும், யானைகளினுல் முறிக்கப்பட்ட கிளைகளையுடைய மரங்களையுடையனவும் சித்திரங்களான தாதுக்களினுல் (பொன் வெள்ளிமுதலியவற்றுல்) விசித்திரங்களுமான மலைகளையும், சுத்த மான ஜலத்தையுடைய மடுக்களையும், தேவர்களால் ஸேவிக்கப்பட் டனவும், அழகாகச் சப்திக்கின்ற பக்ஷிகளின் நாதங்களினுல் விழித் துக்கொண்டு இங்கு மங்கும் அலைகின்ற வண்டுகளின் சோபையுள்ள னவுமான ஓடைகளையும் நான் ஒருவனுகவே தாண்டிக்கொண்டு நளம் என்ற புல், மூங்கில், நாணல் இவற்றின் கூட்டங்களினுலும் குசம், வண்டுதுளைத்த மூங்கில் இவற்றுலும் ப்ரவேசிக்கவியலாத தும், கோரமானதும், பயங்கரமான ரூபமுள்ளதும், துஷ்டயானை கள் ஊளைமக்கோட்டான் குள்ளநரி இவைகளின் விளையாடுமிடமு மான பெரிய காட்டைக் கண்டேன். (11–14)

மிகக்களைத்த இந்திரியங்கள், தேஹம் இவற்றை யுடையவ னும், தாகம் மேலிட்டவனும், பசியுள்ளவனுமான நான் அங்குள்ள நதியின் மடுவில் கால்களை யலம்பிக்கொண்டு முதலில் ஆசமனஞ் செய்து பிறகு ஸ்னானஞ்செய்து ஜலத்தையும் குடித்து களைதீங்கின வனுகவாகி மனிதர்களற்ற அந்தக் காட்டிலுள்ள அரசமரத்தினடியி லுட்கார்ந்துகொண்டு ஹிருதயத்திலிருக்கின்ற பரமாத்மாவை முன் னர் பெரியாரிடமிருந்து கேட்டபடி புத்தியினுல் தியானித் தேன். (15–16) பக்தியினுல் வசப்படுத்தப்பட்ட சித்தத்தினுல்

पश्याश्रुकलाक्षस्य हृद्यासीन्मे शनैर्हरिः॥ १७ ॥ प्रेमातिभरनिर्भिन्नपुलकाङ्गोऽतिनिर्वृतः। आनन्दसंप्लवे लीनो नापश्यमुभयं मुने ॥ १८ ॥ रूपं भगवतो यत्तन्मनःकान्तं शुचापहम्। अपश्यन्सहसोत्तस्थे वैक्लव्याद्दुर्मना इव ॥ १९ ॥ दिदृक्षुस्तदहं भूयः प्रणिधाय मनो हृदि। वीक्षमाणोऽपि नापश्यमवितृप्त इवातुरः॥ २० ॥

एवं यतन्तं विजने मामाहागोचरो गिराम्। गम्भीरश्लक्ष्णया वाचा शुचः प्रशमयन्निव ॥ २१ ॥ हन्तास्मिञ्जन्मनि भवान्न मां द्रष्टुमिहार्हति। अविपक्वकषायाणां दुर्दर्शोऽहं कुयोगिनाम्॥ २२ ॥ सकृद्यदर्शितं रूपमे-

---

சாஞ்ஞரவிந்தத்தைத் தியானிப்பவனும், பேராவலினுலுண்டான நீர் பெருக்குடன் கூடின கண்களையுடையவனுமான என்னுடைய ஹிருதயத்தில் ஹரியானவர் மெள்ள மெள்ள ஆவிர்பாவத்தை யடைந்தார். (17) அதிகப்ரேமையினுலுண்டான மயிர்கூச்சலை யுடைய அங்கங்களுள்ளவனும், மிகவும் ஸுகத்தையடைந்தவனும், ஆனந்தப் பெருக்கில் முழுகினவனுமான நான் தன்னையும் பிறவற்றையு மறிந்திலேன். (18) மனஸ்ஸுக்குப் பிடித்ததும், சோகத்தைப் போக்குகின்றதுமான பகவானுடைய யாதொருரூபமுண்டோ அதைக்காணுதவனுய் மனக்கலக்கத்தினுல் குழம்பினவன் போல உடனே ஸமாதியினின்று மெழுந்தேன். (19) திருப்தியையடையாதவனும், திரும்பவும் அந்த ரூபத்தைக்காண வெண்ணங்கொண்டவனுமான நான் ஹிருதயத்தில் மனதை நிறுத்திப் பார்த்தபோதிலுங்கூட அதைக் கண்டேனில்லை. அதுகாரணமாய் ஆதுரன்போலவுமானேன். (20) இவ்விதம் ஜனமற்ற காட்டில் முயற்சிக்கின்ற என்னைப் பார்த்து வாக்குக்கெட்டாத ஈச்வரன் சோகத்தைப் போக்க வெண்ணங்கொண்டவர்போல கம்பீரமாயும் (அர்த்தபுஷ்டியுள்ளதாயும்) சிறிதாயுமிருக்கின்ற வாக்கினுல் சொல்லத் தொடங்கினர். (21)

அப்பனே குழந்தாய்! பொசுக்கப்படாத காமாதிகளான கஷாயங்களை=மலங்களை, யுடையவர்களும், ஆனதுபற்றியே யோக நிஷ்பத்தியை யடையாதவர்களுமான ஜனங்களால் நான் காணக்கூடாதவன், ஆகையால் நீ இப்பிறவியில் என்னைக் காண்பதற்குத் தகுதி

तत्कामाय तेऽनघ । मत्कामः शनकैः साधुः सर्वान्मुञ्चति हृच्छयान् ॥२३॥ सत्सेवयाऽदीर्घया ते जाता मयि दृढा मतिः। हित्वाऽवद्यमिमं लोकं गन्ता मज्जनतामसि ॥ २४ ॥ मतिर्मयि निबद्धेयं न विपद्येत कर्हिचित्। प्रजासर्गनिरोधेऽपि स्मृतिश्च मदनुग्रहात् ॥ २५ ॥ एतावदुक्त्वोपरराम तन्महद्भूतं नभोलिङ्गमलिङ्गमीश्वरम्। अहं च तस्मै महतां महीयसे शीर्ष्णाऽवनामं विदधेऽनुकम्पितः॥ २६ ॥ नामान्यनन्तस्य हतत्रपः पठन्गुह्यानि भद्राणि कृतानि च स्मरन्। गां पर्यटंस्तुष्टमना गतस्पृहः कालं प्रतीक्षन्वि-

---

யுடையவனுகவாகவில்லை. (22) ஹே அனக! ஒருதடவை என்னுல் (எனது)ரூபம் காண்பிக்கப்பட்டது என்பதுயாதுண்டோ இது என்னிடத்தில் அனுராகத்தை (பக்தியை) யுண்டாக்கவேண்டியேயாகும். என்னிடத்தில் காமனை (பக்தி) யுள்ள ஸாதுவானவன் ஹிருதயத்திலுள்ள மற்றெல்லாக்காமனைகளையும் மெதுவாகப்போக்கிக்கொள்ளுகிறன். (23) ஸ்வல்பகாலம் செய்தபோதிலுங்கூட ஸாதுக்களின் ஸேவையினுல் உனக்கு என்னிடத்தில் நிலைத்த புத்தியானது உண்டாகியிருக்கிறது. ஆகவே நிந்தியமான இந்தத் தேஹத்தைவிட்டு எனது பார்ஷதனுக வாகப்போகின்றுய். (24) என்னிடத்தில் நன்கு ஊன்றின இந்தப் புத்தியும், நினைவும் ப்ரஜைகளின் ஸிருஷ்டிப்ரளயம் இவை நேர்ந்தபோதிலுங்கூட என்னுடைய அனுக்கிரஹத்தினுல் ஒருபொழுதும் அழிந்துவிட மாட்டாது. (25) மஹத்தும்=ஸர்வ காரணமும், பூதமும்=நித்யமாகவுள்ளதும், ஆகாசத்தில் மூர்த்தியையுடையதும், அருகிலிருப்பினுங்கூட எளிதில் காணமுடியாததும், ஈச்வரமும்=ஸர்வ நியந்தாவுமான ரூபமானது இவ்வளவுதூரம் சொல்லிவிட்டு ஓய்வையடைந்தது. அந்தரூபத்தினுல் அனுக்கிரஹிக்கப்பட்ட நானும் மஹத்துக்கெல்லாம் மஹத்தான அந்த ரூபத்துக்குத் தலையினுல் நமஸ்காரத்தைச்செய்தேன். (26) நான் வெட்கத்தைவிட்டு ரஹஸ்யங்களும் மங்களகரங்களுமான அனந்தனுடைய நாமங்களைச் சொல்லிக் கொண்டும், அவருடைய லீலைகளை ஸ்மரித்துக் கொண்டும், எதிலும் பற்றற்றவனுகவும், ஸந்துஷ்டமான (கிடைத்தது போதுமென்ற) மனதுள்ளவனுவும், பூமியில் சுற்றிக் கொண்டும், தேஹ நிர்யாண காலத்தை எதிர்பார்த்துக்கொண்டும், மதமற்றவனுகவும், பொறுமையற்றவனுகவும் ஆனேன். (27)

मदो विमत्सरः॥ २७ ॥ एवं कृष्णमतेर्ब्रह्मन्नसक्तस्यामलात्मनः। कालः प्रादुरभूत्काले तट्टित्सौदामनी यथा ॥ २८ ॥ प्रयुज्यमाने मयि तां शुद्धां भागवतीं तनुम्। आरब्धकर्मनिर्वाणो न्यपतत्पाञ्चभौतिकः॥२९॥ कल्पान्त इदमादाय शयानेऽम्भस्युदन्वतः। शिशयिषोरनुप्राणं विविशेऽन्तरहं विभोः॥ ३० ॥ सहस्रयुगपर्यन्त उत्थायेदं सिसृक्षतः। मरीचिमिश्रा ऋषयः प्राणेभ्योऽहं च जज्ञिरे॥ ३१ ॥ अन्तर्बहिश्च लोकांस्त्रीन्पर्येम्यस्क-

---

இவ்விதம் ஹே ப்ரம்ஹன்! நான் அழுக்கற்ற (காமங்களற்ற) சித்தமுள்ளவனுகவும், எதிலும் பற்றற்றவனுகவும், கிருஷ்ணனிடம் புத்தியையுடையவனுமாக இருக்குங்கால் மாலையின் வடிவமுள்ள மின்னலானதுபோல தனக்குரிய காலத்தில் மரணமானது ப்ராப்த்த மாயிற்று. (28) சுத்த *ஸத்வவடிவமான பகத்பார்ஷத சரீரத்தைக் குறித்து பகவானுல் நானிழுக்கப்படும் பொழுது ப்ராரப்த்தகர்மத் தின் முடிவையுடைய பாஞ்சபௌதிக தேஹமானது கீழேவிழுந்து விட்டது. (29) (*)கல்பத்தின் முடிவில் இந்த மூவ்வுலகையும் தன்னுள் ஒடுக்கிக்கொண்டு ப்ரளயஸமுத்திரத்தின் ஜலத்தில் சய னித்துக் கொண்டிருக்கின்ற நாராயணனிடத்தில் சயனிக்க வெண் ணங்கொண்ட விபுவான ப்ரம்ஹதேவனுடைய உள்ளில் ப்ராண (மூச்சுக்காற்று) னுடன்கூட நான் ப்ரவேசத்தையடைந்தேன்.(30) ஆயிரம் நான்கு யுகங்களின் முடிவில் எழுந்து இந்த ப்ரபஞ்சத் தை ஸ்ருஷ்டிக்க விரும்புகின்ற ப்ரம்ஹதேவனுடைய இந்திரி

---

* शुद्धां भागवतीं तनुम् என்றதிலிருந்து பகவத்பார்ஷத சரீரமானது கர்மாவினுல் ஆரம்பிக்கப்பட்டதன்று என்பதும், சுத்த ஸத்துவமய மானது என்பதும், நித்யமென்பதும் பெறப்படுகிறது.

(*) நாரதருக்கு சுத்த ஸத்துவமயமானதும் நித்யமுமான பார்ஷத சரீரம் சொல்லப்பட்டிருக்கிறது. அங்ஙனமாயின் "उत्संगान्नारदो जज्ञे" ப்ரம்ஹதேவனுடைய மடியிலிருந்து ஸ்வாயம்புவமன்வந்தரத்தில் நாரதர் அவதரித்தார் என்றுகூறியது எப்படிப்பொருந்தும் எனின்?. ஸ்ரீமந்நாரா யணன் நித்யமான தனது ஸ்ரீமூர்த்தியை தேவகியின் கர்ப்பத்தில் ப்ரவே சிக்கச் செய்ததுபோல நாரதருக்கும் ப்ரம்ஹபுத்திரத்வ லீலைக்குவேண்டி முந்தின கல்பத்திலேயே ப்ரம்ஹதேவனுடைய சரீரப்ரவேசம் ஏற்பட்டது எனக் கண்டுகொள்ளவேண்டும்.

न्दितव्रतः। अनुग्रहान्महाविष्णोरविघातगतिः क्वचित् ॥ ३२ ॥ देवदत्ता-
मिमां वीणां स्वरब्रह्मविभूषिताम्। मूर्च्छयित्वा हरिकथां गायमानश्चरा-
म्यहम् ॥ ३३ ॥ प्रगायतः स्ववीर्याणि तीर्थपादः प्रियश्रवाः। आहूत इव
मे शीघ्रं दर्शनं याति चेतसि ॥३४॥ एतद्ध्यातुरचित्तानां मात्रास्पर्शेच्छया
मुहुः। भवसिन्धुप्लवो दृष्टो हरिचर्यानुवर्णनम् ॥ ३५ ॥ यमादिभिर्योगपथैः
कामलोभहतो मुहुः। मुकुन्दसेवया यद्वत्तथाऽऽत्माऽद्धा न शाम्यति ॥३६॥
सर्वं तदिदमाख्यातं यत्पृष्टोऽहं त्वयाऽनघ। जन्मकर्मरहस्यं मे भवतश्चात्म-

---

யங்களிலிருந்து நானும்(நாரதரும்)மரீசி முதலிய ருஷிகளும் ஜனித்
தோம். (31) காலே மஹாவிஷ்ணுவின் அனுக்கிரஹத்தினல் எங்
கும் கதிக்குத்தடையில்லாதவனுகவும், குறைவுபடாத ப்ரம்ஹசர்ய
விரதமுள்ளவனுகவும் கொண்டு மூன்று வுலகங்களிலும் உள்ளிலும்
வெளியிலும் ஸஞ்சரித்துவருகின்றேன். (32) நான் ஈச்வரனல்
கொடுக்கப்பட்டதும், நிஷாதம், ரிஷபம், காந்தாரம். ஷட்ஜம்,
மத்யமம், தைவதம் பஞ்சமம் என்ற ஸப்தஸ்வரங்களாகிற நாதப்ரம்
ஹத்தினல் அலங்கரிக்கப்பட்டதுமான (மஹதீ என்ற) இந்த வீணை
யை மீட்டி ஹரிகதையைக் கானஞ்செய்துகொண்டு ஸஞ்சரித்து
வருகின்றேன். (33)

கங்காதிதீர்த்தங்களுக்கிருப்பிடமான பாதங்களையுடையவரும்,
ப்ரியமான கீர்த்தியை யுடையவருமான பகவான் தனது லீலைகளைக்
கானஞ்செய்கின்ற என்னுடைய சித்தத்தில் அழைக்கப்பட்டவர்
போல தரிசனத்தைத் தருகிறார். (34) இந்த ஹரிலீலானுவர்ண
னமே விஷயானுபவேச்சையினல் அடிக்கடி பீடிக்கப்பட்ட சித்த
முள்ளவர்களுக்கு, ஸம்ஸாரமாகிற ஸமுத்திரத்தின் ஓடமாக(சுருதி
யுக்தி அனுபவம் இவைகள் மூலம்)அறியப்படுகிறது. (35) காமத்
தாலும் லோபத்தாலும் அடிக்கடி கெடுக்கப்பட்ட மனதானது
முகுந்தனுடைய ஸேவையினல் எவ்விதம் தெளிகிறதோ அவ்விதம்
யமம் முதலிய யோகமார்க்கங்களினல் சாந்தியையடைவதில்லை.(36)
ஹே அனக! என்னுடைய ஜன்ம கர்மரஹஸ்யத்தைப் பற்றியும்,
உமக்குச் சித்தஸந்தோஷம் வரும் விதத்தைப்பற்றியும் உம்மால்
எவ்விதம் நான் கேட்கப்பட்டேனே அவ்விதம் இவையாவும் விரி
வாகச் சொல்லப்பட்டுவிட்டன என்றார். (37) ஸுதர் சொல்ல

तोषणम् ॥ ३७ ॥ सूत उवाच—एवं संभाष्य भगवान्नारदो वासवीसुतम्। आमन्त्र्य वीणां रणयन्ययौ यादृच्छिको मुनिः॥ ३८ ॥ अहो देवर्षिर्धन्योऽयं यत्कीर्तिं शार्ङ्गधन्वनः। गायन्माद्यन्निदं तन्त्या रमयत्यातुरं जगत् ॥ ३९ ॥

इति श्रीमद्भागवते महापुराणे प्रथमस्कन्धे व्यासनारदसंवादे नारदपूर्वजन्मोपाख्यानवर्णनं नाम षष्ठोऽध्यायः॥ ६ ॥

अथ सप्तमोऽध्यायः ॥

शौनक उवाच—निर्गते नारदे सूत भगवान्बादरायणः। श्रुतवांस्तदभिप्रेतं ततः किमकरोद्विभुः॥ १ ॥ सूत उवाच—ब्रह्मनद्यां सरस्वत्यामा-

---

ஔற்ரூர்—தனது நலத்தைப் பற்றிய ஸங்கல்பமற்றவரும், பகவானுமான நாரதமுனியானவர் இவ்விதம் சொல்லிவிட்டு ஸத்யவதியின் குமாரரான வியாஸரிடம் விடைபெற்று வீணையை மீட்டிக்கொண்டு சென்று விட்டார். (38) சார்ங்கம் என்ற வில்லையுடைய ஸ்ரீநாராயணனுடைய கீர்த்தியைக் கானஞ் செய்துகொண்டும், தானும் ஸந்தோஷத்தை யடைந்துகொண்டும் துக்கத்தினால் வருந்துகின்ற இந்த ஜகத்தை எவர் ஸந்தோஷப்படுத்துகிறாரோ இந்தத் தேவர்ஷியான நாரதரே மஹாபாக்கியசாலியாவார். (39) (எ-று)

இவ்விதம் ஸ்ரீமத்பாகவத மஹாபுராண ப்ரதமஸ்கந்தத்தில் வியாஸநாரத ஸம்வாதத்தில் நாரதபூர்வஜன்மோபாக்கியான வர்ணனம் என்ற ஆறுவது அத்தியாயம் முற்றிற்று.

ஏழாவது அத்தியாயம்.

(அ-கை) अथ भागवतश्रोतुर्जन्म वक्तुं परीक्षितः।
सुप्तबालवधात् द्रौणेर्दण्डः सप्तम उच्यते ॥ १ ॥

(க-ரை) பிறகு தூங்கும் பாலர்களை வதஞ்செய்ததற்காகத்ரோணகுமாரரான அஸ்வத்தாமாவுக்குச் செய்த சிக்ஷையானது பாகவதஸ்ரவணஞ்செய்த பரீக்ஷித்தின் பிறவியைச் சொல்லவேண்டி இந்த ஏழாவது அத்தியாயத்தில் சொல்லப்படுகிறது. (1) (எ-று)

श्रमः पश्चिमे तटे। शम्याप्रास इति प्रोक्त ऋषीणां सत्रवर्धनः॥ २॥ तस्मिन्स्व आश्रमे व्यासो बद्रीषण्डमण्डिते। आसीनोऽप उपस्पृश्य प्रणिदध्यौ मनः स्वयम्॥ ३॥ भक्तियोगेन मनसि सम्यक्प्रणिहितेऽमले। अपश्यत्पुरुषं पूर्वं मायां च तदुपाश्रयाम्॥ ४॥ यया संमोहितो जीव आत्मानं त्रिगुणात्मकम्। परोऽपि मनुतेऽनर्थं तत्कृतं चाभिपद्यते॥ ५॥ अनर्थोपशमं साक्षाद्भक्तियोगमधोक्षजे। लोकस्याजानतो विद्वांश्चक्रे सात्वतसंहिताम्॥६॥ यस्यां वै श्रूयमाणायां कृष्णे परमपूरुषे। भक्तिरुत्पद्यते

சௌனகர் சொல்லலுற்றார்—ஹே ஸூத! நாரதர் வெளியேறினதும் அவருடைய அபிப்ராயத்தைக் கேட்ட பகவானும் விபுவுமான வியாஸர் பிறகு என்னசெய்தார் என்றார். (1) ஸூதர் சொல்லலுற்றார்—ப்ரம்ஹாவைத் தேவதையாகவுடையதும், ப்ராம்ஹணர்களினால் ஆஸ்ரயிக்கப்பட்டதுமான ஸரஸ்வதி நதியின் மேல்கறையில் ருஷிகளின் ஸத்ரமென்ற கர்மத்தை விருத்திசெய்கின்றதும், சம்யாப்ராஸம் என்று சொல்லப்பட்டதுமான ஆஸ்ரமமொன்றுண்டு. (2) வியாஸர் இலந்தை மரக்கூட்டங்களினால் அலங்கரிக்கப்பட்டதும் சொந்தமுமான அந்த ஆஸ்ரமத்தில் இருந்துகொண்டு தீர்த்தத்தை ஆசமனஞ்செய்து மனதைத் தியானத்தில் செலுத்தினார். (3) பக்தியோகத்தினால் சுத்தமான மனதானது நன்கு தியானத்தில் செலுத்தப்பட்டபொழுது முதலில் புருஷசப்தவாச்யனை பகவானையும், பிறகு, உண்மையில் குணத்ரயங்களைக் காட்டிலும் வேறுபட்டவனையினுங்கூட ஜீவன் எந்தப் பகவன்மாயையினால் நன்கு மோஹிக்கும்படி செய்யப்பட்டவனைய்க் கொண்டு தன்னை த்ரிகுணஸ்வரூபனாக வெண்ணுவதுடன் அத்தகைய அபிமான மூலமேற்பட்ட அனர்த்தத்தையுமடைகிறானே, பகவானையாஸ்ரயித்துள்ள அந்த மாயையையும் கண்டார். (4–5) அதோக்ஷஜனான பகவானிடத்தில் செய்யப்படும் பக்தியோகமானது நேரில் அனர்த்தத்தை (ஸம்ஸாரபந்தத்தை) நிவிருத்திக்கும் என்பதைத் தானறிந்து, அவ்விதம் அறியாததான ஜனத்துக்குவேண்டி ஸ்ரீமத்பாகவதம் என்ற ஸாத்வஸம்ஹிதையைச் செய்தார்[*]. (6)

---

[*] 4, 5, 6 ஆகிய மூன்று ஸுலோகங்களினாலும் ஸ்ரீபாகவதத்தின் பொருளானது ஸுருக்கமாகவுபதேசிக்கப்பட்டதாகவாகிறது. அதாவது:—

पुंसः शोकमोहभयापहा ॥ ७ ॥ स संहितां भागवतीं कृत्वाऽनुक्रम्य चात्मजम् । शुकमध्यापयामास निवृत्तिनिरतं मुनिः॥ ८ ॥ शौनक उवाच—स वै निवृत्तिनिरतः सर्वत्रोपेक्षको मुनिः। कस्य वा बृहतीमेतामात्मारामः समभ्यसत् ॥ ९ ॥

सूत उवाच—आत्मारामाश्च मुनयो निर्ग्रन्था अप्युरुक्रमे। कुर्वन्त्यहैतुकीं भक्तिमित्थंभूतगुणो हरिः॥ १० ॥ हरेर्गुणाक्षिप्तमतिर्भगवान्बादरा-

---

எந்த ஸாத்வதஸம்ஹிதையானது (பெரியோர்களிடமிருந்து) ப்ரவணஞ் செய்யப்படும் பொழுது ஜீவனது சோகமோஹபயாதிகளைப் போக்கும் புருஷோத்தமனை ஸ்ரீகிருஷ்ணனிடத்தில் பக்தியானது உண்டாகுமோ அந்தப்பாகவதஸம்ஹிதையை அந்தவியாஸமுனியானவர் செய்து பரீக்ஷை செய்தும் பார்த்து நிவிருத்தி நிஷ்டரும், புத்திரருமான சுகருக்கு அதை அத்யயனஞ் செய்தும் வைத்தார் என்றூர். (7–8)

சௌனகர் சொல்லுற்றூர்—நிவிருத்தி நிஷ்டரும், எதிலும் பற்றற்றவரும், ஆத்மாராமருமான அந்தச் சுகமுனியானவர் விஸ்தீர்ணமான இந்த ஸம்ஹிதையை எதற்காக அத்யயனஞ் செய்தார் என்றூர். (9) ஸூதர் சொல்லலுற்றூர்—ஆத்மாராமர்களும், விலகின † ஹிருதய க்ரந்தியையுடையவர்களுமாக இருந்தபோதிலுங்

ஈசுவரன் வித்யாசக்தியிலுல் மாயாநியந்தாவும், எப்பொழுதும் ஆவிர்ப்பாவத்தையடைந்த பரமானந்த ஸ்வரூபனும், ஸர்வக்ஞனும், ஸர்வசக்தனுமாகிறூர். ஜீவனே அவருடைய மாயையிலுல் நன்கு மோஹத்தையடைந்தவனும், மறைக்கப்பட்ட ஸ்வரூபத்தையுடையவனும், ஈசுவரவிபரீத தர்மமுள்ளவனும்–(அற்பக்ஞனும் அற்பசக்தியுள்ளவனும்) ஆகிறான். ஈசுவரபக்தியிலுல் அடையப்பட்ட க்ஞானத்திலுல் அவனுக்கு மோக்ஷ மேற்படுகிறது என்றும். இவ்விதமே விஷ்ணு ஸ்வாமி என்பவரும், "ह्लादिन्या संविदा श्लिष्टः सच्चिदानन्द ईश्वरः। स्वाविद्यासंवृतो जीवः संक्लेशनिकराकरः॥" "स ईशो यद्वशे माया स जीवो य स्तयार्दितः। स्वाविर्भूतपरानन्दः स्वाविर्भूतसुदुःखभूः। स्वाद्गुत्थविपर्यासभवभेदजभीशुचः। यन्मायया जुषन्नास्ते तमिमं नृहरिं नुमः॥" என்றதால் சொல்லியுமிருக்கிறூர்.

† निर्ग्रन्थाः என்பது மூலம். ग्रन्थिरेव—ग्रन्थः=निवृत्तहृदयग्रन्थय इत्यर्थः என்ற ஸ்ரீதர வியாக்கியானத்தையொட்டி உரை எழுதப்பட்டது. அல்

यणि:। अध्यगान्महदाख्यानं नित्यं विष्णुजनप्रिय:॥ ११ ॥ परीक्षितोऽथ राजर्षेर्जन्मकर्मविलायनम्। संस्थां च पाण्डुपुत्राणां वक्ष्ये कृष्णकथोदयम् ॥ १२ ॥ यदा मृधे कौरवसृञ्जयानां वीरेष्वथो वीरगतिं गतेषु। वृकोदराविद्धगदाभिमर्शभग्नोरुदण्डे धृतराष्ट्रपुत्रे ॥ १३ ॥ भर्तुः प्रियं द्रौणिरिति

கூட முனிகள் உருக்கிரமஞன பகவானிடத்தில் காரணமற்றதான பக்தியைச் செய்கின்றனர். ஏன்? ஹரியானவர் †ஆத்மாராமர்களையும் தன்வசப் படுத்தும் குணங்களுள்ளவராகவன்ரோ இருக்கிறார். (10) *எப்பொழுதும் விஷ்ணுஜனங்களை=பகவத்பக்தர்களை, (*)ப்ரியர்களாகவுடையவரும், பகவானுமான சுகாசாரியர் ஹரியின் குணங்களினை லிழுக்கப்பட்ட புத்தியையுடையவராய்க் கொண்டு இந்தப்பெரிய ஆக்யானத்தை (பாகவதத்தை) அத்யயனஞ் செய்தார். (11) இதற்குப் பிறகு ராஜர்ஷியான பரீக்ஷித்தினுடைய பிறப்பு, கர்மம், முக்தி இவற்றையும், பாண்டுபுத்திரர்களின் மஹாப்ரஸ்தான கமனத்தையும், ஸ்ரீகிருஷ்ணனுடைய கதை ஆங்காங்கு உதயமாகுமாறு உமக்குச் சொல்லப்போகிறேன். (12)

[*]கௌரவர்களுடையவும்,ஸிருஞ்ஜய வம்சத்திற்பிறந்த திருஷ்டத்யும்னனை ஸைந்திபதியாகக்கொண்ட பாண்டவர்களுடையவும் வீரர்கள், போரில் வீரஸ்வர்க்கத்தை எப்பொழுது அடைந்தனரோ,

---

लत निर्ग्रन्था:—ग्रन्थेभ्यो निर्गता:=निर्ग्रन्था:=ஸர்வ சாஸ்திரக் கிரந்தங்களையும் விலக்கினவர்கள் என வேறு பொருளும் ஸ்ரீதரீயத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. † ஸ்ரீ ஹரியின் குணங்கள் ஆத்மாராமர்களையும் தன்வசப் படுத்தும் பொழுது மற்றவர் விஷயத்தில் சொல்லவும் வேண்டுமோ? என்பது கருத்து. * பக்தி செய்யட்டும். சுகர் இந்தச் சாஸ்திரத்தை அத்யயனஞ்செய்ததற்குக் காரணம் என்னை எனின்? அதற்கு இதனுல் பதில் சொல்லப்படுகிறது. (*) பக்தர்களுக்கு பகவத்குணங்களையுபதேசிக்கும் வாயிலாக அவர்களின் ஸங்கத்தில் ஆவல் கொண்டார் என்பது கருத்து.

[*] பரீக்ஷித்தின் பிறவியைச் சொல்லப்போகின்றவராய் முதலில் கர்ப்பத்திலிருக்கும்பொழுதே அச்வத்தாமாவின் ப்ரம்ஹாஸ்திரத்தினின்றும் ஸ்ரீகிருஷ்ணனுல் காப்பாற்றப்பட்டார் என வுபதேசிக்கவேண்டிக் கதையைத் தொடங்குகிறார்.

स्म पश्यन्कृष्णासुतानां स्वपतां शिरांसि । उपाहरद्विप्रियमेव तस्य तज्जुगुप्सितं कर्म विगर्हयन्ति ॥१४॥ माता शिशूनां निधनं सुतानां निशम्य घोरं परितप्यमाना । तदाऽरुदद्बाष्पकलाकुलाक्षी तां सान्त्वयन्नाह किरीटमाली ॥ १५ ॥ तदा शुचस्ते प्रमृजामि भद्रे यद्ब्रह्मबन्धोः शिर आततायिनः। गाण्डीवमुक्तैर्विशिखैरुपाहरे त्वाक्रम्य यत्स्नास्यसि दग्धपुत्रा ॥ १६ ॥ इति प्रियां वल्गुविचित्रजल्पैः स सान्त्वयित्वाऽच्युतमित्रसूतः। अन्वाद्रवद्दंशित उग्रधन्वा कपिध्वजो गुरुपुत्रं रथेन ॥ १७ ॥ तमापतन्तं स विलक्ष्य दूरा-

---

திருதராஷ்ட்ரபுத்திரனன துரியோதனன் பீமஸேனனுல் வீசப்பட்ட கதையின் அடியினுல் முறிந்த துடை இலும்பையுடையவனுக எப் பொழுது ஆனனே, துரோணசாரியரின் குமாரரான அஸ்வத்தாமா தூங்குகின்றவர்களான திரௌபதி குமாரர்களின் தலைகளைப் பர்த் தாவான துரியோதனனுக்கு இவ்விதம் செய்தால் தன்னிடம் ப்ரிய முண்டாகும் என எண்ணிக்கொண்டு எப்பொழுது கொண்டுவந்தா ரோ, உண்மையில் அது அந்தத்துரியோதனனுக்கு அப்ரியமாகவே இருந்தமையின் வெறுக்கத்தக்க அந்தக்காரியத்தை யாவரும் எப் பொழுதுநிந்தித்தனரோ, அப்பொழுது தாயான திரௌபதியானவள் சிசுக்களான புத்திரர்களின் மரணத்தைக்கேட்டு அதிகம் தாபத்தை யடைந்தவளாயும், கண்ணீர்த் திவிலைகளினுல் கலங்கின கண்களை யுடையவளாயும் கொண்டு கொடூரமாக இருக்கும்படி அழுதாள். கிரீடமாலியான அர்ஜுனன் அவளை ஸமாதானப்படுத்தவேண்டி ஹே பத்ரே! எப்பொழுது காண்டீவத்தினின்றும் விடப்பட்ட பாணங்களினுல் ஆயுதம்தாங்கிப் புத்திரர்களைக்கொன்ற ப்ராம்ஹணு தமனன அஸ்வத்தாமாவினுடைய தலையை உனது அருகில் கொண்டு வருவேனே, கொல்லப்பட்ட புத்திரர்களையுடையவளான நீ எந்தத் தலையை ஆஸனமாகச்செய்துகொண்டு எப்பொழுது ஸ்னானஞ்செய் யப்போகின்றனையோ அப்பொழுது உனது கண்ணீரைத் துடைக் கின்றேன் என ப்ரதிக்ஞை செய்தான். (13–16) இவ்விதம் உக்கிர மான வில்லையுடையவனும், அச்யுதனை மித்திரனுகவும் தேரோட்டு பவனுகவுமுடையவனும், வானரக்கொடியோனுமான அந்த அர்ஜு னன் அழகியவைகளும், விசித்திரங்களுமான வார்த்தைகளினுல்

त्कुमारहोद्विग्नमना रथेन । पराद्रवत्प्राणपरीप्सुरुर्व्यां यावद्गमं रुद्रभयाद्यथा कः॥ १८ ॥ यदाऽशरणमात्मानमैक्षत श्रान्तवाजिनम् । अस्त्रं ब्रह्मशिरो मेन आत्मत्राणं द्विजात्मजः॥ १९ ॥ अथोपस्पृश्य सलिलं संदधे तत्समाहितः। अजानन्नुपसंहारं प्राणकृच्छ्र उपस्थिते॥ २० ॥ ततः प्रादुष्कृतं तेजः प्रचण्डं सर्वतो दिशम् । प्राणापदमभिप्रेक्ष्य विष्णुं जिष्णुरुवाच ह ॥

ப்ரியையான திரௌபதியை ஸமாதானப்படுத்திவிட்டுக் கவசமணிந்துகொண்டு தேரிலேல் குருபுத்திரனைப் பின்தொடர்ந்தோடினான். (17) குழந்தைகளைக்கொன்றவனான அச்வத்தாமாவானவர் வெகுதூரத்தில் அர்ஜுனன் ஓடிவருவதைக்கண்டு நடுங்கின மனமுடையவராயும், ப்ராணனைக் காப்பாற்றிக்கொள்ள விருப்பமுள்ளவராயும் கொண்டு, ருத்திரனிடமிருந்துண்டான பயத்தினால் ஓடும் †ப்ரம்ஹதேவன் போல, எவ்வளவு தூரமோடமுடியுமோ அவ்வளவு தூரம் தேருடன் பூமியிலோடினார். (18) த்ரோணாசாரியரின் குமாரரான அச்வத்தாமாவானவர் களைத்த குதிரைகளையுடைய தன்னை வேறு ரக்ஷகனற்றவனாக எப்பொழுது கண்டுகொண்டாரோ அப்பொழுது ‡ப்ரம்ஹசிரஸ் என்ற அஸ்திரம் தான் தன்னைக் காப்பாற்றக்கூடியது எனவெண்ணினார். (19) பிறகு ஜலத்தை ஆசமனஞ்செய்துகொண்டும், தியானஞ்செய்துகொண்டும், உயிருக்கு ஆபத்துவந்தமைபற்றி உபஸம்ஹாரத்தை (திருப்பிப்பெறும் முறையை) அறியாதவராக இருந்தபோதிலுங்கூட அந்த ப்ரம்ஹசிரஸ் என்ற அஸ்திரதத்தை ப்ரயோகித்தார். (20) அந்த அஸ்திரத்திலிருந்து எல்லாத்திக்குகளிலும் பரவின கொடூரமான தேஜஸ்ஸை நாலாபக்கத்திலும் கண்டும் அதன்மூலம் உயிருக்கு ஆபத்து வந்திருப்பதைக்கண்டும் அர்ஜுனன் ஸ்ரீகிருஷ்ணனைப் பார்த்துச் சொல்லத்தொடங்கினான். (21)

---

† தனது பெண்ணைப் புணரவாரம்பித்த ப்ரம்ஹதேவனைக் கண்டு ருத்திரன் கோபங்கொள்ள அதுகண்டு ப்ரம்ஹதேவன் மானுருவமெடுத்துக்கொண்டு ஓடினார். அவரை ஸ்ரீருத்திரன் பின்தொடர்ந்து விரட்டினார் என்ற கதையை இங்கு கண்டுகொள்க.

‡ இதையே ப்ரம்ஹாஸ்திரமெனப் பின்னர் சொல்லவும் போகிறார்.

अर्जुन उवाच—कृष्ण कृष्ण महाभाग भक्तानामभयङ्कर। त्वमेको दह्यमानानामपवर्गोऽसि संसृते:॥ २२॥ त्वमाद्य: पुरुष: साक्षादीश्वर: प्रकृते: पर:। मायां व्युदस्य चिच्छक्त्या कैवल्ये स्थित आत्मनि॥ २३॥ स एव जीवलोकस्य मायामोहितचेतस:। विधत्से स्वेन वीर्येण श्रेयो धर्मादिलक्षणम्॥ २४॥ तथायं चावतारस्ते भुवो भारजिहीर्षया। स्वानां चानन्यभावानामनुध्यानाय चासकृत्॥ २५॥ किमिदं स्वित्कुतो वेति देवदेव न वेद्म्यहम्। सर्वतोमुखमायाति तेज: परमदारुणम्॥ २६॥ श्रीभगवानुवाच—वेत्थेदं द्रोणपुत्रस्य ब्राह्ममस्त्रं प्रदर्शितम्। नैवासौ वेद

அர்ஜுனன் சொல்லலுற்றான்—*ஹே கிருஷ்ண! கிருஷ்ண! ஹே மஹாபாக! பக்தர்களுக்கு அபயந்தருபவரே! ஸம்ஸாரம் காரணமாய் பொசுக்கப்படுகின்றவர்களுக்கு நீர் ஒருவரே அந்த ஸம்ஸார நாசகராக இருக்கின்றீர். (22) எக்காரணம்பற்றி நீர் ஸர்வத்துக்கும் ஆத்யரோ (காரணபூதரோ) அக்காரணம் பற்றியே ப்ரகிருதியைக்காட்டிலும் பரனான(வேறுபட்ட)புருஷனும், ஆனது பற்றியே ஸாக்ஷாத் ஈச்வரனுமாவீர். அவ்விதமாயினுங்கூட ஸ்வரூபபூதமான சைதன்னியத்தினால் மாயையைப் போக்கிக்கொண்டு கைவல்யரூபமான (அத்விதீயமான) ஆத்மாவில் (ஸ்வரூபத்தில்) இருக்கின்றீர். (23) அந்தநீரே மாயையினால் மோஹத்தை யடைந்த சித்தத்தையுடைய ஜீவலோகத்துக்குத் தர்மாதிரூபமான ச்ரேயஸ்ஸைச் சொந்தமானப்ரபாவத்தினால் செய்கின்றீர். (24) ஆகவே இந்த உமது அவதாரமானது பூமியின் பாரத்தைப்போக்கவேண்டியும், சொந்தக்ஞாதிகளுக்கும், ஏகாந்தபக்தர்களுக்கும் அடிக்கடி அனுத்யானத்துக்கு வேண்டியும் ஏற்பட்டதாக இருக்கிறது. (25) (*)ஹே தேவதேவ! மிகக்கொடூரமான இந்தத் தேஜஸ்ஸானது நாலாபக்கத்திலும் சூழ்ந்துகொண்டு எதிர்த்து வருகிறது. இது என்னே? எங்கிருந்து வருகிறது? என நான் அறிகின்றேனில்லை என்றான். (26) ஸ்ரீபகவான் சொல்லலுற்றார்—இது துரோண

---

* ப்ரகிருதஸமாசாரத்தைத் தெரிவிக்கவேண்டி முதலில் நான்கு சுலோகங்களினால் பகவானே ஸ்துதிக்கிறான்.

(*) இவ்விதம் ஸ்துதித்து ப்ரகிருதவிஷயத்தைத் தெரிவிக்கிறான்.

संहारं प्राणबाध उपस्थिते ॥ २७ ॥ नह्यस्यान्यतमं किञ्चिदस्त्रं प्रत्यवकर्शनम् । जह्यस्त्रतेज उन्नद्धमस्त्रज्ञो ह्यस्त्रतेजसा ॥ २८ ॥ सूत उवाच—श्रुत्वा भगवता प्रोक्तं फाल्गुनः परवीरहा । स्पृष्ट्वाऽपस्तं परिक्रम्य ब्राह्मं ब्राह्माय सन्दधे ॥ २९ ॥ संहत्यान्योन्यमुभयोस्तेजसी शरसंवृते । आवृत्य रोदसी खं च ववृधातेऽर्कवह्निवत् ॥ ३० ॥ दृष्ट्वास्त्रतेजस्तु तयोस्त्रींल्लोकान्प्रदहन्महत् । दह्यमानाः प्रजाः सर्वाः सांवर्तकममंसत ॥ ३१ ॥ प्रजोपप्लवमालक्ष्य लोकव्यतिकरं च तम् । मतं च वासुदेवस्य सञ्जहारार्जुनो द्वयम् ॥ ३२ ॥

குமாரரான அஸ்வத்தாமாவினுடைய ப்ராம்ஹமான அஸ்திரமென்றும், ப்ராணனுக்கு ஆபத்துவந்தகாலத்தில் அவரால் அது வெளிக்காட்டப்பட்டதென்றும், இவர் அதன் உபஸம்ஹாரத்தை யறியமாட்டார் என்றும் அறிந்து கொள்ளுரு. (27) இந்த அஸ்திரத்தை நிவிருத்தி செய்யக்கூடிய அஸ்திரம் வேறு எதுவுமில்லையன்றே?. விருத்தியடைந்த ப்ராம்ஹாஸ்திர தேஜஸ்ஸை உன்னிடமுள்ள ப்ரம்ஹாஸ்திரதேஜஸ்ஸினால் ஜயிப்பாயாக. நீ அதை [*] அறிந்தவனுகவன்றே இருக்கின்றாய் என்றார். (28)

ஸூதர் சொல்லலுற்றார்—சத்துருவீரர்களைக் கொல்லும் அர்ஜுனன், பகவானால் சொல்லப்பட்ட வார்த்தையைக் கேட்டு சுத்தமான ஜலத்தை ஆசமனஞ்செய்து அந்தக் கிருஷ்ணனை வலம்வந்து ப்ரம்ஹாஸ்திரத்தை நிவிருத்தி செய்யவேண்டி தன்னிடமுள்ள ப்ரம்ஹாஸ்திரத்தை ப்ரயோகித்தான். (29) இரண்டு ப்ரம்ஹாஸ்திரங்களுடையவும் தேஜஸ்ஸுகள் அம்புகளாற் சூழப்பட்டும் ஒன்றுடன் ஒன்றுகலந்தும் த்யுலோக பூலோகங்களையும், ஆகாசத்தையும் மறைத்துக் கொண்டும் ப்ரளயகாலத்தில் ஸங்கர்ஷணமுகத்திலிருந்துண்டான அக்னியும் ஆகாசத்திலுள்ள சூரியனும் போல விருத்தியையடைந்தன. (30) மூவ்வுலகங்களையும் பொசுக்குகின்றதும், பெரிதுமான அர்ஜுன அஸ்வத்தாமாக்களின் அஸ்திர தேஜஸ்ஸைக் கண்டு, அதனுல் பொசுக்கப்படுகின்ற எல்லாப்ரஜைகளும் அதை ப்ரளயாக்னியென வெண்ணினர். (31) அர்ஜுனன்,

---

[*] அதாவது:—உன்னுல்விடப்பட்ட அஸ்திரமானது அதை உபஸம்ஹாரஞ் செய்துகொண்டு தானும் சாந்தமாகிவிடும் என்பது கருத்து.

तत आसाद्य तरसा दारुणं गौतमीसुतम्। बबन्धामर्षताम्राक्षः पशुं रशनया यथा ॥ ३३ ॥ शिबिराय निनीषन्तं दास्या बद्ध्वा रिपुं बलात्। प्राहार्जुनं प्रकुपितो भगवानम्बुजेक्षणः ॥ ३४ ॥ मैनं पार्थार्हसि त्रातुं ब्रह्मबन्धुमिमं जहि। योऽसावनागसः सुप्तानवधीन्निशि बालकान् ॥ ३५ ॥ मत्तं प्रमत्तमुन्मत्तं सुप्तं बालं स्त्रियं जडम्। प्रपन्नं विरथं भीतं न रिपुं हन्ति धर्मवित् ॥ ३६ ॥ स्वप्राणान्यः परप्राणैः प्रपुष्णात्यघृणः खलः।

ப்ரஜைகளின் பீடையையும், உலகங்களுக்கேற்படும் நாசத்தையும் வாஸுதேவனுடைய கருத்தையும் கண்டுகொண்டு அவ்விரண்டையும் உபஸம்ஹாரம் செய்தான். (தன்னிடம் திருப்பி வரவழைத்துக் கொண்டான்.) (32) பிறகு கோபத்தினால் சிவந்தகண்களையுடைய அர்ஜுனன் கொடூரனும், கௌதமியின் புத்திரனுமான அஸ்வத்தாமாவை வேகமாக அடைந்து யாகஞ்செய்பவன் கயிற்றினால் பசுவைக் கட்டுவதுபோலக் கட்டினான். (33) †சத்துருவான அஸ்வத்தாமாவைக்கயிற்றினால் வலுவாகக்கட்டிக் கூடாரத்தை நோக்கி அழைத்துச் செல்லவிருப்புகின்ற அர்ஜுனனைப் பார்த்து புண்டரீகாக்ஷனான பகவான் மிக்க கோபங்கொண்டவர் (போல) சொல்லலுற்றார். (34) ஹே பார்த்த! எந்த இவன் இரவில் தூங்குகின்றவர்களும், எவ்விதக்குற்றமும் மற்றவர்களுமான குழந்தைகளைக் கொன்றானே இவனை உயிருடன் விடுவதற்கு நீ அர்ஹனல்லன். ப்ராம்ஹணதமனான இவனைக்கொல்லுவாயாக.(35) யுத்ததர்மமறிந்தவன், மத்யபானதிகளினால் மதங்கொண்டவனும், அஜாக்ரதையாகவுள்ளவனும், க்ரஹதோஷத்தாலோ, வாயுதோஷத்தாலோ சித்தஸ்வாதீனமற்றவனும், தூங்குகின்றவனும்,எவ்விதமுயற்சியும்செய்யாதவனும், சரணாகதனும்,தேரற்றவனும்,பயந்தவனும் ஆகவுள்ள சத்துருவைக் கொல்லமாட்டான். (36) எந்தத் துஷ்டன் தயையில்லாதவனுய்க் கொண்டு தனது உயிர்களைப் பிறரது உயிர்களைக்கொண்டு ரக்ஷித்துக்கொள்ளுகின்றானே அவனைக் கொல்லுவதானது அவனுக்கே

---

† சோகம், பொறுமை இவற்றுடன் கூடினவனுயினுங்கூட அர்ஜுனனுக்குத் தர்மத்திலுள்ள பற்றை ப்ரகாசப்படுத்தவேண்டி ஸ்ரீகிருஷ்ணன் சொல்லும் வார்த்தையானது இதுமுதல் ஆறு சுலோகங்களினால் சொல்லப்படுகிறது.

तद्वधस्तस्य हि श्रेयो यद्दोषाद्यात्यधः पुमान्॥ ३७ ॥ प्रतिश्रुतं च भवता पाञ्चाल्यै शृण्वतो मम। आहरिष्ये शिरस्तस्य यस्ते मानिनि पुत्रहा ॥ ३८ ॥ तदसौ वध्यतां पाप आतताय्यात्मबन्धुहा। भर्तुश्च विप्रियं वीर कृतवान्कुलपांसनः ॥ ३९ ॥ एवं परीक्षता धर्म पार्थः कृष्णेन चोदितः। नैच्छद्धन्तुं गुरुसुतं यद्यप्यात्महनं महान्॥ ४० ॥ अथोपेत्य स्वशिबिरं गोविन्दप्रियसारथिः। न्यवेदयत्तं प्रियायै शोचन्त्या आत्मजान्हतान् ॥ ४१ ॥ तथाहृतं पशुवत्पाशबद्धमवाङ्मुखं कर्मजुगुप्सितेन। निरीक्ष्य

ஸ்ரேயஸ்ஸாக=புருஷார்த்த ஸாதனமாகவாகிறது. தண்டரூபமான ப்ராயஸ்சித்தம் செய்துகொள்ளாத தோஷத்தினால் அந்தப் புருஷன் நரகத்தையன்றே அடைவான். (37) மேலும், "ஹே மானினி! எவன் உனது புத்திரர்களைக்கொன்றவனே அவனுடைய தலையை அறுத்தக்கொண்டு வரப்போகிறேன்" என நான் கேட்டுக்கொண்டிருக்கும் பொழுது திரௌபதிக்கு உன்னால் ப்ரதிக்ஞை செய்யப்பட்டிருக்கிறதே? (38) ஆகவே ஹே வீர! பர்த்தாவுக்கும் (துரியோதனனுக்குப்) அப்ரியத்தைச் செய்தவனும், குலபாம்ஸனனும், பாபியும், அஸ்திரபெடுத்தவனும், ஆத்ம பந்துவான புத்திரனைக் கொன்றவனுமான இந்த அஸ்வத்தாமாவானவன் கொல்லப்படட்டும் என்றார். (39)

தர்மத்தைப் பரீக்ஷிக்கின்ற ஸ்ரீ கிருஷ்ணனால் ஏவப்பட்ட போதிலுங்கூட பஹுஜனை அர்ஜுனன், தனது புத்திரனைக் கொன்றவனுக இருந்தபோதிலுங் கூட குரு புத்திரனுக இருப்பதுபற்றி அஸ்வத்தாமாவைக் கொல்லுவதற்கு விரும்பவில்லை. (40) பிறகு கோவிந்தனே ப்ரியனுகவும் தேர்பாகனுவுமுடைய அர்ஜுனன் தனது கூடாரத்துக்கு வந்து கொல்லப்பட்ட புத்திரர்களைக் குறித்துச் சோகிக்கின்றவளான திரௌபதியினிடத்தில் அந்த அஸ்வத்தாமாவைத் காண்பித்தான். (41) பசுவைப்போல கயிற்றால் கட்டப்பட்டவனும், அத்தகைய அவமானத்துடன் கொண்டுவரப்பட்டவனும், கர்மதோஷத்தினால் (தான்செய்த கெட்டகாரிய நிமித்தம்) தலைகுனிந்தவனும், அபகாரியுமான குருவின் புத்திரனைத் திரௌபதியானவள் கிருபையுடன் பார்த்து நல்ல ஸ்வபாவமுள்ளவளானது

कृष्णाऽपकृतं गुरोः सुतं वामस्वभावा कृपया ननाम च ॥ ४२ ॥ उवाच चासहन्त्यस्य बन्धनानयनं सती। मुच्यतां मुच्यतामेष ब्राह्मणो नितरां गुरुः॥ ४३ ॥ सरहस्यो धनुर्वेदः सविसर्गोपसंयमः। अस्त्रग्रामश्च भवता शिक्षितो यदनुग्रहात् ॥ ४४ ॥ स एष भगवान्द्रोणः प्रजारूपेण वर्तते। तस्यात्मनोऽर्धं पत्न्यास्ते नान्वगाद्वीरसूः कृपी ॥ ४५ ॥ तद्धर्मज्ञ महाभाग भवद्भिर्गौरवं कुलम्। वृजिनं नार्हति प्राप्तुं पूज्यं वन्द्यमभीक्ष्णशः॥ ४६ ॥ मा रोदीदस्य जननी गौतमी पतिदेवता। यथाहं मृतवत्सार्ता रोदिम्यश्रुमुखी मुहुः॥ ४७ ॥ यैः कोपितं ब्रह्मकुलं राजन्यैरकृतात्मभिः। तत्कुलं प्रदहत्याशु सानुबन्धं शुचार्पितम् ॥ ४८ ॥

பற்றி வணங்கினுள். (42) பதிவிரதையான திரௌபதியானவள் இவரை கட்டுடன் அழைத்துவந்ததைப் பொருக்காதவளாய் 'இவர் ப்ராம்ஹணர், அதிலும் முக்கியமான குரு, ஆனதுபற்றிவிட்டுவிடுங்கள். விட்டுவிடுங்கள் என்றும்' சொன்னுள். (43) 'ரஹஸ்யமான மந்திரத்துடன் கூடின தனுர்வேதமும், விடுதல் திருப்பிப்பெறல் இவற்றுடன் கூடின அஸ்திரஸமூஹமும் எவரது அனுக்கிரஹத்தினுல் உம்மால் அப்யஸிக்கப்பட்டதோ பகவானன அந்தத் துரோணசாரியரே புத்திரரூபத்துடன் இருக்கிறூர். அவரதுசரீரத்தின் பாதியும், பத்னியுமான கிருபியானவள். உயிருடனிருக்கிறுள் வீரனன புத்திரனைப் பெற்றவளானதுபற்றி அவருடன்கூட மரிக்காமலுமிருக்கிறுள். (45) ஆனதுபற்றி ஹே தர்மக்ஞ! மஹாபாக! அடிக்கடி பூஜிக்கத்தக்கதும், நமஸ்கரிக்கத்தக்கதுமான குருவின் குலமானது உங்களால் துக்கத்தையடைய அர்ஹமன்று (46) இறந்த குழந்தைகளையுடையவளும், ஆனதுபற்றியே துக்கத்தையடைந்தவளுமான நான் அடிக்கடி கண்ணீரை முகத்தில் வழியவிட்டுக்கொண்டு எவ்விதம் அழுகின்றேனே அவ்விதம் பதிவிரதையும் இவருடைய தாயுமான கௌதமியானவள் அழவேண்டாம். (47) அசுத்த புத்திகளான எந்த ராஜாக்களால் ப்ராம்ஹணகுலமானது கோபமூட்டப்பட்டதோ அந்த ராஜகுலத்தைச் சோகவியாப்தமான ப்ராம்ஹணகுலமானது பரிவாரத்துடன் கூட நாசமாக்கிவிடும்' என்றுள். (48) ஸூதர் சொல்லுற்றுர்—ஹே த்விஜர்காள்! தர்மத்தைவிட்டு விலகாததும், நியாயம்

सूत उवाच—धर्म्यं न्याय्यं सकरुणं निर्व्यलीकं समं महत्। राजा धर्मसुतो राज्ञयाः प्रत्यनन्दद्वचो द्विजाः॥ ४९ ॥ नकुलः सहदेवश्च युयुधानो धनञ्जयः। भगवान्देवकीपुत्रो ये चान्ये याश्च योषितः॥ ५० ॥ तत्राहामर्षितो भीमस्तस्य श्रेयान्वधः स्मृतः। न भर्तुर्नात्मनश्चार्थे योऽहन्त्सुप्ता ञ्शिशून्वृथा ॥ ५१ ॥ निशम्य भीमगदितं द्रौपद्याश्च चतुर्भुजः। आलोक्य वदनं सख्युरिदमाह हसन्निव ॥ ५२ ॥ श्रीकृष्ण उवाच—ब्रह्मबन्धुर्न हन्तव्य

தவறுததும், கருணையுடன் கூடினதும், கபடமற்றதும், ஸமமானதும், பெரிதுமான ராணியான திரௌபதியினுடைய வார்த்தையைத் தர்மபுத்திரர் புகழ்ந்து கொண்டாடினர். (49) நகுலனும், ஸஹதேவனும், யுயுதானனும் (ஸாத்யகியும்) அர்ஜுனனும், தேவகீபுத்திரனான பகவானும், மற்றுமுள்ள யாதொருபுருஷர்களும், யாதொரு ஸ்திரீகளுமுண்டோ அவர்களும் புகழ்ந்தனர். (50) அப்பொழுது கோபங்கொண்ட பீமஸேனன் மட்டும் எவன் பர்த்தாவான தூரியோதனனுக்கும் தனக்கும் பயன்படாதபடி தூங்குகின்ற குழந்தைகளைக் கொன்றானே, அவனைக் கொல்லுவதுதான் மேலானது என்றான். (51) ‡சதுர்புஜனான பகவான், பீமஸேனன் சொன்னதையும், திரௌபதி சொன்னதையும் கேட்டு ஸந்தோஷப்படுகின்றவர் ஸகாவான அர்ஜுனனுடைய முகத்தைப் பார்த்து சிரிக்கின்றவர் போல பின்வருமாறு சொல்லத்தொடங்கினர். (52)

ஸ்ரீபகவான் சொல்லலுற்றார்—*ப்ரம்ஹபந்துவாயினும் அவன் கொல்லத்தகாதவன் என்றும், ஆததாயியாயின்=(தன்னைக் கொல்ல

---

‡ பீமஸேனன் அச்வத்தாமாவைக் கொல்லவும், திரௌபதி அதைத் தடுக்கவும் பிரவிருத்தித்தபொழுது அவ்விருவரையும் ஸமாதானப்படுத்த வேண்டித் தனது சதுர்புஜங்களை பகவான் வெளிக்காட்டினர் என்பது கருத்து.

* “न ब्राह्मणं हन्यात्” ப்ராம்ஹணனைக் கொல்லலாகாது என்றும், आततायिनमायान्तमपि वेदान्तपारगम्। जिघांसन्तं जियांसीयान्न तेन ब्रह्महा भवेत्॥ ஆததாயியானவன் வேதாந்தபாரமான ப்ரம்ஹத்தைக் கண்டவனுயினும் தன்னைக் கொல்லவிரும்புவானுயின் அவனைக் கொல்லலாம். அதனல் ப்ரம்ஹஹத்திதோஷம் ஸம்பவிக்காது என்றும் சாஸ்திரங்களில் சொல்லப்பட்டிருக்கிறது.

आततायी वधार्हणः। मयैवोभयमाम्नातं परिपाह्यनुशासनम् ॥ ५३ ॥ कुरु प्रतिश्रुतं सत्यं यत्तत्सान्त्वयता प्रियाम्। प्रियं च भीमसेनस्य पाञ्चाल्या मह्यमेव च ॥ ५४ ॥ सूत उवाच—अर्जुनः सहसाऽऽज्ञाय हरेर्हार्दमथासिना। मणिं जहार मूर्धन्यं द्विजस्य सहमूर्धजम् ॥ ५५ ॥ विमुच्य रशना बद्धं बालहत्याहतप्रभम्। तेजसा मणिना हीनं शिबिरान्निरयापयत् ॥ ५६ ॥ वपनं द्रविणादानं स्थानान्निर्यापणं तथा। एष हि ब्रह्मबन्धूनां वधो नान्योऽस्ति दैहिकः ॥ ५७ ॥ पुत्रशोकातुराः सर्वे पाण्डवाः सह कृष्णया। स्वानां मृतानां यत्कृत्यं चक्रुर्निर्हरणादिकम् ॥ ५८ ॥

इति श्रीमद्भागवते महापुराणे प्रथमस्कन्धे सुप्तबालहन्तृ द्रौणिनिग्रहो नाम सप्तमोऽध्यायः ॥ ७ ॥

வந்தனுயின்) கொல்லத்தக்கவனே என்றும் என்னுலேயே சொல்லப் பட்டிருக்கிறது. அவ்விரு உபதேசத்தையும் காப்பாயாக. (53) ப்ரியையான திரௌபதியை ஸமாதானப்படுத்துகின்ற உன்னுல் எந்த வதமானதுப்ரதிக்ஞைசெய்யப்பட்டதோ அதை ஸத்தியமாகச்செய். பீமஸேனனுக்கும், திரௌபதிக்கும், எனக்கும் எது ப்ரியமோ அதைச் செய்வாயாக. (அச்வத்தாமாவைக்கொன்றுல் பீமஸேனனுக்கு ப்ரியமாகும். கொல்லாவிடில் திரௌபதிக்கு ப்ரியமாகும். கொல்லுவதும், கொல்லாதுவிடுதலும் எனக்கு ப்ரியமாகும் என்பது கருத்து) என்றார். (54) சூதர் சொல்லலுற்றார்—அர்ஜுனன் ஹரியினுடைய அபிப்ராயத்தை அப்பொழுதே அறிந்துகொண்டு(செய்யவியலாதஇரண்டுகாரியத்தைக் கிருஷ்ணன் விதிக்கமாட்டார். ஆகவே அவரது அபிப்பிராயம் இவ்விதம் தானிருக்கவேண்டுமென உடனே அறிந்துகொண்டு) பிறகு கத்தியினுல் ப்ராம்ஹணனை அச்வத்தாமாவினுடைய தலையிலுள்ள மணியைத் தலைமயிருடன் கூட எடுத்தான். (55) கயிற்றுல் கட்டப்பட்டவனும், பாலஹத்தியினுல் ஆழிந்த காந்தியுள்ளவனும், ப்ரம்ஹதேஜஸ்ஸும், மணியுமற்றவனுமான அவனைக் கட்டினின்று அவிழ்த்துவிட்டுக் கூடாரத்தினின்றும் வெளியேறும்படி செய்தான். (56) தலைமயிரை எடுத்தலும், பொருளைப் பிடுங்குதலும், அவ்விதமே ஸ்தானத்தினின்றும் விரட்டுதலும்

अथ अष्टमोऽध्यायः ॥

सूत उवाच—अथ ते संपरेतानां स्वानामुदकमिच्छताम्। दातुं सकृष्णा गङ्गायां पुरस्कृत्य ययुः स्त्रियः॥१॥ ते निनीयोदकं सर्वे विलप्य

ஆகிய இதுவே ப்ரம்ஹபந்துக்களின் வதமாகவாகுமே யொழிய வேறுவிதமாகத் தேஹத்துக்குச் செய்யக்கூடியவதமானது கிடை யாதன்றே? (57) புத்திர சோகத்தினால் பீடிக்கப்பட்டவர்களான எல்லாப் பாண்டவர்களும் திரௌபதியுடன்கூட இறந்தவர்களான பந்துக்களுக்குச் செய்யவேண்டிய (*)நிர்ஹரணம் முதலிய காரியத் தைச் செய்தனர். (58) (எ–று)

இவ்விதம் ஸ்ரீமத்பாகவத மஹாபுராண ப்ரதமஸ்கந்தத்தில் தூங்கின பாலர்களைக்கொன்ற அஸ்வத்தாம நிக்ரஹகதனமென்ற ஏழாவது அத்தியாயம் முற்றிற்று.

எட்டாவது அத்தியாயம்.

(அ–கை) अष्टमे कुपितात् द्रौणेरस्त्राद्रक्षा परीक्षितः।
श्रीकृष्णेन स्तुतिः कुन्त्या राज्ञः शोकश्च कीर्त्यते ॥ १ ॥

(க–ரை) கோபங்கொண்ட அஸ்வத்தாமாவினுடைய அஸ்தி ரத்திலிருந்து பரீக்ஷித்தை ஸ்ரீகிருஷ்ணன் ரக்ஷித்தலும், குந்தியம் மாள் செய்த பகவத்ஸ்துதியும், ராஜாவான தர்மபுத்திரருக்குண் டான சோகமும் இந்த எட்டாவது அத்தியாயத்தில் உபதேசிக்கப் படுகிறது. (1) (எ–று)

ஸூதர் சொல்லலுற்றார்—நிர்ஹரணஞ்செய்த பிறகு திரௌப தியுடன் கூடின அந்தப் பாண்டவர்கள் மரித்தவர்களும், உதகத் தை இச்சிக்கின்றவர்களுமான பந்துக்களுக்கு கங்கையில் உதகத் தை (தர்ப்பணஜலத்தைக்) கொடுக்கவேண்டி அவரவர்களின் ஸ்திரீ களை முன்னிட்டுக் கொண்டு சென்றனர். (1) அவர்கள் யாவரும்,

---

(*) நிர்ஹரணம்—பொசுக்கவேண்டிய இடத்துக்குக்கொண்டு போ குதல், ஆதி–என்றதால் தர்ப்பணம் செய்தல், பிண்டம்போடுதல் முதலிய வற்றைக் கிரஹித்துக் கொள்ளவேண்டும்.

च भृशं पुनः। आप्लुता हरिपादाब्जरजःपूतसरिज्जले ॥ २ ॥ तत्रासीनं कुरुपतिं धृतराष्ट्रं सहानुजम्। गान्धारीं पुत्रशोकार्तां पृथां कृष्णां च माधवः॥३॥ सान्त्वयामास मुनिभिर्हतबन्धूञ्छुचार्पितान्। भूतेषु कालस्य गतिं दर्शयन्नप्रतिक्रियाम्॥ ४ ॥ साधयित्वाऽजातशत्रोः स्वं राज्यं कित-वैर्हृतम्। घातयित्वाऽसतो राज्ञः कचस्पर्शक्षतायुषः॥ ५ ॥ याजयित्वाश्व-मेधैस्तं त्रिभिरुत्तमकल्पकैः। तद्यशः पावनं दिक्षु शतमन्योरिवातनोत्॥६॥ आमन्त्र्य पाण्डुपुत्रांश्च शैनेयोद्धवसंयुतः। द्वैपायनादिभिर्विप्रैः पूजितैः प्रतिपूजितः॥ ७॥ गन्तुं कृतमतिर्ब्रह्मन्द्वारकां रथमास्थितः। उपलेभेऽभि-

---

உதகத்தை (தர்ப்பணஜலத்தைக்) கொடுத்துத் திரும்பவும் அதிகமாக அழுது ஹரியின் சரணாரவிந்த தூளிகளினுல் பரிசுத்தமான கங்கா நதியின் ஜலத்தில் ஸ்னானஞ்செய்தனர்.(2) அந்தக் கங்கைகரையில் உட்கார்ந்திருப்பவரும் ஸஹோதரர்களான பீமஸேனாதிகளுடன் கூடினவரும் குருபதியுமான தர்மபுத்திரரையும், திருதராஷ்டிரனை யும், புத்திரசோகத்தினுல் பீடிக்கப்பட்ட காந்தாரி யையும், குந்தியை யும், திரௌபதியையும், கொல்லப்பட்டபந்துக்களையுடையவர்களும் சோகத்தினுல் பீடிக்கப்பட்டவர்களுமான மற்றவர்களையும், மாதவ னான ஸ்ரீகிருஷ்ணன் முனிகளை முன்னிட்டுக்கொண்டு ப்ராணிகள் விஷயத்தில் தடுக்கவியலாத காலத்தின் கதியைக் காட்டுகின்றவராய் ஸமாதானப்படுத்தினர். (3–4) திரௌபதியின் கூந்தலைப் பிடித் ததன்மூலம் குறைந்த ஆயுளையுடையவர்களும், அஸாதுக்களுமான அரசர்களைக் கொன்று துஷ்டர்களால் பிடுங்கிக்கொள்ளப்பட்டதும் சொந்தமுமான ராஜ்யத்தை அஜாதசத்துருவான தர்மபுத்திரருக்கு ஸாதித்துக்கொடுத்தும், மூன்று அஸ்வமேதங்களை உயர்ந்த ருத்விக் குகளைக் கொண்டு அந்தத் தர்ம புத்திரருக்கு செய்துவைத்தும், இந்திரனுடையது போன்று பரிசுத்தமான அவருடைய யசஸ்ஸை திக்குகளில் பரவும்படி செய்தார். (5–6) ஹே ப்ரம்ஹன்! சினி யின் பேரனான ஸாத்யகி, உத்தவர் இவர்களுடன் கூடினவரும், பூஜிக்கப்பட்டவர்களான வ்யாஸர் முதலிய ப்ராம்ஹணர்களினுல் பூஜிக்கப்பட்டவரும், பாண்டவர்களிடம் விடைபெற்றுக் கொண்டு துவாரகையை யடையவெண்ணங்கொண்டவராய் தேரிலேறினவரு

धावन्तीमुत्तरां भयविह्वलाम् ॥ ८ ॥ उत्तरोवाच—पाहि पाहि महायोगिन्देवदेव जगत्पते। नान्यं त्वदभयं पश्ये यत्र मृत्युः परस्परम् ॥ ९ ॥ अभिद्रवति मामीश शरस्तप्तायसो विभो। कामं दहतु मां नाथ मा मे गर्भो निपात्यताम् ॥ १० ॥ सूत उवाच—उपधार्य वचस्तस्या भगवान्भक्तवत्सलः। अपाण्डवमिदं कर्तुं द्रौणेरस्त्रमबुध्यत ॥ ११ ॥ तर्ह्येवाथ मुनिश्रेष्ठ पाण्डवाः पञ्च सायकान्। आत्मनोऽभिमुखान्दीप्तानालक्ष्यास्त्राण्युपाददुः ॥ १२ ॥ व्यसनं वीक्ष्य तत्तेषामनन्यविषयात्मनाम्। सुदर्शनेन स्वास्त्रेण

மான ஸ்ரீகிருஷ்ணன், பயத்தினால் கலங்கி எதிரில் ஓடிவருகின்ற உத்தரையைக் கண்டார். (7–8) உத்தரை சொல்லலுற்றாள்—ஹே மஹாயோகின்! தேவதேவ! ஜகத்பதே! எந்தவுலகில் ஒவ்வொரு ப்ராணியும், ஒன்றுக்கொன்று மிருத்யுவாக விருக்கின்றதோ அந்த வுலகில் உம்மைத்தவிற வேறு எவரையும் பயத்தை விலக்குபவராக நான் காணவில்லை. (9) ஹே ஈச! விபோ! நாத! பழுக்கக் காய்ச் சப்பட்ட இரும்பு மயமான கூரையுடைய பாணமானது என்னைக் குறித்து ஓடிவருகிறது. என்னை வேண்டுமானால் இஷ்டப்படி அது பொசுக்கட்டும். எனது கர்ப்பமானது அழியாதிருக்க வேண் டுவது அவசியமானது என்றாள். (10) ஸூதர் சொல்லலுற்றார்—பக்தவத்ஸலனான பகவான் அவளுடையவார்த்தையை மனதில் வாங் கிக் கவனித்து இவ்வுலகைப்பாண்டவர்களற்றதாகச் செய்யவேண்டி துரோணகுமாரரால் விடப்பட்ட அஸ்திரமாக அதையறிந்துகொண் டார். (11) பிறகு ஹே முனிஸ்ரேஷ்ட! அப்பொழுதே பஞ்சபாண் டவர்களும், தங்களுக்கெதிரில் வருகின்றனவும், ஜ்வலிக்கின்றனவு மான ஐந்துபாணங்களைக் கண்ணுற்று தாங்களும் அம்புகளைக் கையி லெடுத்தனர். (12) விபுவான ஸ்ரீகிருஷ்ணன் தன்னைத் தவிர்த்து வேறு எதையும் விஷயமாகக்கொள்ளாத மனஸ்ஸை யுடையவர் களான அந்தப் பாண்டவர்களுக்குண்டான வியஸனத்தைப் *பரிஹ ரிக்கவியலாததாகவறிந்து சொந்தமானஸுதர்சனஸ்திரத்தினால் தன்

---

* ப்ரம்ஹாஸ்திரமானது வேறு அஸ்திரங்களினால் நிவிருத்திக்கச் செய்யமுடியாதானதுபற்றி அவர்களுக்குண்டான வியஸனமானதுப் பிற ரால் போக்கமுடியாதது எனவறிந்தார் என்பது கருத்து.

स्वानां रक्षां व्यधाद्विभुः ॥ १३ ॥ अन्तस्थः सर्वभूतानामात्मा योगेश्वरो हरिः। स्वमायया ऽवृणोद्गर्भं वैराट्याः कुरुतन्तवे ॥ १४ ॥ यद्यप्यस्त्रं ब्रह्मशिरस्त्वमोघं चाप्रतिक्रियम्। वैष्णवं तेज आसाद्य समशाम्यद्भृगूद्वह ॥ १५ ॥ मा मंस्था ह्येतदाश्चर्यं सर्वाश्चर्यमयेऽच्युते। य इदं मायया देव्या सृजत्यवति हन्त्यजः॥ १६ ॥ ब्रह्मतेजोविनिर्मुक्तैरात्मजैः सह कृष्णया। प्रयाणाभिमुखं कृष्णमिदमाह पृथा सती ॥ १७ ॥

कुन्त्युवाच—नमस्ये पुरुषं त्वाद्यमीश्वरं प्रकृतेः परम्। अलक्ष्यं सर्वभूतानामन्तर्बहिरवस्थितम् ॥ १८ ॥ मायाजवनिकाच्छन्नमज्ञाऽधोक्षज-

---

னைச் சேர்ந்தவர்களான அவர்களுக்கு ரக்ஷையைச் செய்தார். (13) ஸர்வபூதங்களுக்கும் ஆத்மாவும், யோகேச்வரனுமான ஹரியானவர் உத்தரையினுடைய உள்ளிலுமிருந்து கொண்டு குருவம்சத்தின் ஸந்தானத்துக்குவேண்டித் தனதுமாயையினால் கர்ப்பத்தை மரைத்தார். (14) ஹே ப்ருகூத்வஹ! ப்ரம்ஹசிரஸ்ஸென்ற அஸ்திரமோ வீண்போகாததும், பதில் செய்யமுடியாததுமாக இருந்தபோதிலுங் கூட வைஷ்ணவமான தேஜஸ்ஸை யடைந்து நன்கு சாந்தமாகத் (தனதுசக்தியை இழந்ததாக) ஆகிவிட்டது. (15) அஜனை எவர் இந்த ஜகத்தை மாயையாகிற தேவியினால் ஸிருஷ்டிக்கவும், ரக்ஷிக்கவும், அழிக்கவும் செய்கிறாரோ ஸர்வாச்சரியமயனை அந்த அச்யுதன் விஷயத்தில் ப்ரம்ஹாஸ்திரத்தைச் சாந்தமாக்குதல் என்ற இந்தக் காரியத்தை ஆச்சரியமாக வெண்ணுதே. (16) பதிவ்ரதையான குந்தியானவள் ப்ரம்ஹாஸ்திர தேஜஸ்ஸினின்றும் விடுபட்டவர்களான புத்திரர்களுடனும், திரௌபதியுடனும் கூடினவளாய் ஊருக்குச் செல்லுவதற்குத்தயாராக இருக்கும் ஸ்ரீகிருஷ்ணனைப் பார்த்துப் பின்வருமாறு சொல்லத்தொடங்கினள். (17)

(*)உலகம் படைக்கப்படுவதற்கு முன்னுள்ள புருஷனும், ப்ரகிருதியைக் காட்டிலும் பரனும், ஈச்வரனும், (அதாவது:—ப்ர

(*) இந்தப் பதினெட்டாவது சுலோகம் முதல் 43-வது சுலோகம் முடியவுள்ள 26-சுலோகங்களால் குந்தியம்மாள் செய்யும் பகவத் ஸ்துதியில் அடங்கியிருக்கும் பல அபூர்வார்த்தங்களை எனது சிற்றறிவுக்கெட்டிய வரை இம்மொழிபெயர்ப்பில் எழுதியிருக்கின்றேனையினும் பகவத் பக்தர்

मव्ययम्। न लक्ष्यसे मूढदृशा नटो नाट्यधरो यथा ॥ १९ ॥ तथा परम-हंसानां मुनीनाममलात्मनाम्। भक्तियोगविधानार्थं कथं पश्येमहि स्त्रियः ॥ २० ॥ कृष्णाय वासुदेवाय देवकीनन्दनाय च। नन्दगोपकुमाराय गो-विन्दाय नमो नमः॥ २१ ॥ नमः पङ्कजनाभाय नमः पङ्कजमालिने। नमः

கிருதிக்கும் நியந்தாவும்) ஆனதுபற்றியே ஸர்வபூதங்களுடைய உள்ளிலும் வெளியிலும் பூர்ணமாக இருப்பவரும், மாயையாகிற படுதாவினல் மரைக்கப்பட்டவரும், ஆனதுபற்றி எளிதில் காணமுடியாதவரும், அதோக்ஷஜரும்=இந்திரியஜன்யஞானத்துக்கு விஷயமாகாதவரும், அவ்யயரு (அபரிச்சின்னரு) மான உம்மை, பக்தியோகமறியாதவளான நான் நமஸ்கரிக்கின்றேன். நாட்டியதாரனை நடன மூடமான அறிவுள்ளவனுல் எவ்விதம் அறியமுடியாதவனுக வாகிரூனே அவ்விதமே தேஹாபிமானமுள்ள புருஷனுல் நீர் உள்ளபடி அறியப்படாதவராக வாகின்றீர். (18–19) மேலும், பரமஹம்ஸர்களும் = (ஆத்மானுத்ம விவேகமுள்ளவர்களும்,) ஆனதுபற்றியே முனிகளும் (மனனஞ்செய்யும் ஸ்வபாவமுள்ளவர்களும்,) அதிலிருந்து அமலமான (ராகாதிகளற்ற) மனஸ்ஸுள்ளவர்களுமான மஹான்களுக்குக்கூட அத்தகைய மஹிமையுடன் காணமுடியாதவராகவாகின்றீர். ஆனதுபற்றி ஸ்திரீகளான நாங்கள் பக்தியோகத்தைச் செய்வதற்கு உம்மை எவ்விதம் அறிந்துகொள்ளுவோம். (20) [*]கிருஷ்ணனும், வசுதேவகுமாரனும், தேவகீநந்தனனும்,நந்தகோபகுமாரனும்,கொவிந்தனுமான உனக்கு அடிக்கடி நமஸ்காரம். (21) தாமரைப்புஷ்பத்தை உந்தியிலுடையவரான உமக்கு நமஸ்காரம். தாமரைப்புஷ்பங்களின் மாலையையுடையவ

கள் இந்த 26-சுலோகங்களையும் மனப்பாடம் செய்துகொண்டு பாகவத ஸம்ப்ரதாயமறிந்த மஹான்களிடம் காலக்ஷேபமுறையில் அவற்றின் பொருளைத்தெரிந்து கொள்ளுவார்களாக. மேலும், இந்த 26-சுலோகங்களையும் காலையிலும் மாலையிலும் பாராயணஞ் செய்பவர்களுக்கு ஸகலதுரிதங்களும் விலகி பரிபூர்ண பகவத்ப்ரஸாதமுண்டாகும் எனப்பெரியாருபதேசித்து அவ்விதமே நடந்த அனுபவமுமிருக்கிறது.

[*] ஞானயோக பக்தியோகங்களில் தனக்குள்ள சக்திக்குறைவைச் சொல்லித் திரும்பவும் இரண்டு சுலோகங்களினுல் நமஸ்கரிக்கிறுள்.

पङ्कजनेत्राय नमस्ते पङ्कजाङ्घ्रये ॥ २२ ॥ यथा हृषीकेश खलेन देवकी कंसेन रुद्धाऽतिचिरं शुचार्पिता। विमोचिताहं च सहात्मजा विभो त्वयैव नाथेन मुहुर्विपद्गणात् ॥ २३ ॥ विषान्महाग्नेः पुरुषाददर्शनादसत्सभाया वनवास-कृच्छ्रतः। मृधे मृधेऽनेकमहारथास्त्रतो द्रौण्यस्त्रतश्चास्म हरेऽभिरक्षिताः ॥ २४ ॥ विपदः सन्तु नः शश्वत्तत्र तत्र जगद्गुरो। भवतो दर्शनं यत्स्याद्

ரான உமக்கு நமஸ்காரம். தாமரைப் புஷ்பங்கள்போல ப்ரஸன்னங்களான நேத்திரங்களை யுடையவரான உமக்கு நமஸ்காரம். தாமரைப் புஷ்பங்கள் போன்ற சரணங்களையுடைய உமக்கு நமஸ்காரம். (22) ஹே ஹிருஷீகேச! ஹே விபோ! துஷ்டனான கம்ஸனால் வெகுகாலம் ஜயிலில் அடைக்கப்பட்டவளும், சோகத்தினால் பீடிக்கப்பட்டவளுமான தேவகியாவள் எவ்விதம் உம்மால் விடுவிக்கப்பட்டாளோ, அவ்விதமேயா நானும் †புத்திரர்களுடன் கூட ஆபத்கூட்டத்திலிருந்து அடிக்கடி நாதனான உம்மாலேயே விடுவிக்கப்பட்டேன். தேவகியை விடுவித்ததைவிட என்னை விடுவித்ததில் விசேஷமண்ரே இருக்கின்றது. (23) ‡ஹே ஹரே! விஷத்திலிருந்தும், (பீமனுக்கு விஷம் கலந்த மோதகத்தை கொடுத்ததிலிருந்தும்) அரக்குமாளிகையில் நேர்ந்த பெரியநெருப்பிலிருந்தும், புருஷர்களைச் சாப்பிடக்கூடிய ஹிடிம்பன் முதலிய ராக்ஷஸர்களின் தரிசனத்திலிருந்தும், அஸாதுக்கள் நிறைந்த சூதாடுமிடத்திலிருந்தும், வனவாஸத்தில் நேர்ந்த கஷ்டத்திலிருந்தும், ஒவ்வொரு யுத்தத்திலும் அனேகம் மஹாரதர்களின் அஸ்திரங்களிலிருந்தும், முடிவில் துரோண குமாரருடைய ப்ரம்ஹாஸ்திரத்திலிருந்தும் காக்கப்

---

† தேவகியானவள் வெகுகாலம் ஜயிலில் அடைக்கப்பட்டிருந்தபொழுது ஒரேதடவை விடுவிக்கப்பட்டாள். அவ்விதமாயினும் அவளுடைய புத்திரர்கள் ரக்ஷிக்கப்படாமல் சோகமடையும்படி செய்யப்பட்டாள். மேலும், அவளுக்கு வேறுநாதனும் இருந்தார். நானோ அனேகம் ஆபத்திலிருந்து ரக்ஷிக்கப்பட்டேன். அதிலும் அடிக்கடியும், வெகுசீக்கிரமாயும் புத்திரர்களுடனும், நாதனான உன்னாலேயே ரக்ஷிக்கப்பட்டேனன்ரோ. ஆகவேதேவகியைக் காட்டிலும் என்னிடம் நீர் அதிகம் ப்ரேமைகாட்டியிருக்கிறீர் என்பது தெளிவாகிறது.

‡ தனக்கு நேர்ந்த ஆபத் கூட்டத்தை இதனால் தெரிவிக்கிறாள்.

पुनर्भवदर्शनम् ॥२५॥ जन्मैश्वर्यश्रुतिश्रीभिरेधमानमदः पुमान्। नैवार्हत्यभिधातुं वै त्वामकिंचनगोचरम् ॥२६॥ नमोऽकिंचनवित्ताय निवृत्तगुणवृत्तये। आत्मारामाय शान्ताय कैवल्यपतये नमः॥ २७ ॥ मन्ये त्वां कालमीशानमनादिनिधनं विभुम्। समं चरन्तं सर्वत्र भूतानां यन्मिथः कलिः॥ २८ ॥

பட்டவர்களாக இருக்கின்றோமன்றே. (24) *ஹே ஜகத்குரோ! எந்த ஆபத்துகளில் திரும்பவும் பவத்தின் (பிறவியின்) தரிசனத்தைத் தராத உமது ஸ்ரீமூர்த்தியின் தரிசனமானது ஏற்படுமோ அத்தகைய ஆபத்துக்கள் அந்தந்த விஷயங்களில் எங்களுக்கு உண்டாகட்டும். (25) (*)நற்குடிப்பிறப்பு, ஐஸ்வரியம், சாஸ்திரக்ஞானம், தனம் இவற்றால் விருத்தியையடைந்த மதமுள்ளவனான புருஷன் (ஜீவன்) அகிஞ்சனர்களுக்கு=(எதிலும் பற்றற்ற பக்தர்களுக்கு,) விஷயபூதனான உம்மைச் சொல்லுவதற்கு (ஹே கிருஷ்ண! ஹே கோவிந்த! என்ற உனது திருநாமங்களைச் சொல்லுவதற்கு) க்கூட தகுதியுள்ளவனாக வாவதில்லை என்பது நிச்சயம். (26) அகிஞ்சனர்களான பக்தர்களையே வித்தமாக=ஸர்வஸ்வமாக, உடையவரும், தர்மார்த்தகாமரூபங்களான குணவிருத்திகளற்றவரும், ஏன்? ஆத்மாராமரும், ஏன்? ராகாதிகளற்றவரும், கைவல்யத்தை=மோக்ஷசுகத்தைக் கொடுக்கச் சக்தியுள்ளவருமான உமக்குநமஸ்காரம்.(27) [*]உம்மை, ஈசானரும்=ஸர்வநியந்தாவும், ஆத்யந்தமற்றவரும், விபு

---

* பகவத் ஸ்மரணத்துக்கு விரோதியான ஸம்பத் பரம்பரையைவிட, பகவத் ஸ்மரணத்தைத்தரும் ஆபத்பரம்பரையே மேலானது என இதனால் சொல்லப்படுகிறது. இதிலிருந்து பாகவதோத்தமர்களின் பெருமையும் சொல்லப்பட்டதாகவாகிறது. மேலும், ஜகத்குரோ! என்றதால் ஆபத்தைத்தருபவனும், அதைப்போக்குபவனும் நீயேயாகையால், எந்த ஆபத்துவந்தால் நீ ஓடிவரவேண்டியிருக்கும் என்பதை நீயே அறிந்துகொண்டு செய். உன்னை எங்களருகில் இழுக்கக்கூடிய ஆபத்தை வெகு ஆவலுடன் எதிர்பார்க்கிறோம். ஆபத்துக்களுஜோம். உம்மைக் காணுமைக்கே அஞ்சுவோம் என்பது கருத்து.

(*) ஸம்பத்துக்கள் சிரேயோமார்க்கத்துக்கு விரோதிகள் என்பதைத் தெரிவிக்கிறாள்.

[*] தேவகீ புத்திரனை என்னை என் இவ்விதம் ஸ்துதிக்கிறாய் என்பீரேல்? செல்லுகின்றேன் கேளும்.

न वेद कश्चिद्भगवंश्चिकीर्षितं तवेहमानस्य नृणां विडम्बनम्। न यस्य कश्चिद्दयितोऽस्ति कर्हिचिद्द्वेष्यश्च यस्मिन्विषमा मतिर्नृणाम्॥ २९॥ जन्म कर्म च विश्वात्मन्नजस्याकर्तुरात्मनः। तिर्यङ्नृषिषु यादःसु तदत्यन्तविडम्बनम्॥३०॥ गोप्यादद्दे त्वयि कृतागसि दाम तावद्या ते दशाऽश्रुकलिलाञ्जनसंभ्रमाक्षम्। वक्त्रं निनीय भयभावनया स्थितस्य सा मां विमोहयति भीरपि यद्बिभेति॥ ३१॥

வும், எல்லாவிடத்திலும் ஸமமாக இருக்கும்படி ஸஞ்சரிக்கின்றவரு மான காலஸ்வரூபியாக எண்ணுகின்றேன். நிமித்தபூதரான உம்மிடமிருந்து ப்ராணிகளுக்குள் பரஸ்பரம் கலஹம் ஏற்படுகின்றதே யொழிய உம்மிடத்தில் வைஷம்யம் எதுவும் கிடையாது. (28) ஹே பகவன்! எவருக்கு வேண்டியவன் என ஒருவனும், வேண்டாதவன் என ஒருவனும் ஒருபொழுதும் கிடையாதோ? அவ்விதமிருந்தும் எவரிடத்தில் மனிதர்களுக்கு விஷமமான (அனுக்கிரஹநிக்ரஹரூபமான) புத்தியானது ஏற்படுகிறதோ, மனிதர்களின் அனுகரணத்தைச் செய்கின்றவரான அந்த உம்முடைய ஸங்கல்பத்தை ஒருவனும் உள்ளபடி அறியவேமாட்டான். (29)

ஹே விஶ்வாத்மன்! அஜனும், அகர்த்தாவும், ஆத்மாவுமான உமக்கு விலங்கினங்களில் வராஹாதி ரூபத்தினாலும், மனிதர்களிடத்தில் ராமாதிரூபத்தினாலும், ருஷிகளிடத்தில் வாமனாதி ரூபத்தினாலும், ஜலஜந்துக்களிடத்தில் மத்ஸ்யாதி ரூபத்தினாலும் பிறப்பும், அவற்றுக்கேற்ற கர்மமும் யாதுண்டோ அது கேவலம் அனுகரணமே (அபிநயமே) யொழிய உண்மையானதன்று. (30) †நீர் தயிர் சட்டியையுடைத்தல் ரூபமான குற்றத்தைச் செய்தபொழுது யசோதையானவள் எவ்வளவுக்குள் கயிற்றை எடுத்தாளோ அவ்வளவுக்குள், கண்ணீருடன் கலந்த மையையுடையலைகளும், இங்குமங்

---

† அவற்றுள் நரவிடம்பனமானது வெகு ஆச்சரியகரமானது எனச் சொல்லுகிறாள். மேலும், இந்த 31-வது சுலோகத்திலுல் குந்தியம்மாள் ஆண்டவனுடையலீலை, அவனது ஸ்ரீமுகம், அக்காலத்திய அபிநயம் இவற்றைத் தியானிக்கும் வாயிலாக ஆண்டவனுக்கு அடியாரிடமுள்ள அன்பையும், அனுஸந்திக்கிறாள்.

केचिदाहुरजं जातं पुण्यश्लोकस्य कीर्तये। यदो:†प्रियस्यान्ववाये मलयस्येव चन्दनम्॥ ३२॥ अपरे वसुदेवस्य देवक्यां याचितोऽभ्यगात्। अजस्त्वमस्य क्षेमाय वधाय च सुरद्विषाम्॥ ३३॥ भारावतरणायान्ये भुवो नाव इवोदधौ। सीदन्त्या भूरिभारेण जातो ह्यात्मभुवार्थित:॥३४॥ भवेऽस्मिन्क्लिश्यमानानामविद्याकामकर्मभि:। श्रवणस्मरणार्हाणि करिष्य-

---

கும் அசைகின்றவைகளுமான கண்களையுடைய முகத்தைக் கீழில் தொங்கவிட்டுக்கொண்டு அடிப்பாளோ என்ற பயாபிநயத்துடன் கூட நின்றவரும், எவரிடமிருந்து பயாபிமானிதேவதைகூட பயத்தையடைகிறதோ அத்தகைய மஹிமையுள்ளவருமான உம்முடைய நிலையானது யாதுண்டோ அது என்னை மிக்க மோஹிக்கச்செய்கின்றது. (31) †புண்ணியச்லோகனுன தர்மபுத்திரனுடைய கீர்த்திக்கு வேண்டி, மலயபர்வதத்தின் மரபில் சந்தனமானதுபோல, ப்ரியனுன யதுமஹாராஜனுடைய வம்சத்தில் பிறவியற்றவரான நீர் ஜனித்தீர் எனச் சிலர் சொல்லுகின்றனர்.(32) வேறு சிலர், பிறவியற்றவரான நீர் (முந்தின பிறவியில் சுதபஸ் என்றும் ப்ருச்நி என்றுமான தம்பதிகளினுல்) யாசிக்கப்பட்டவராய்க்கொண்டு இந்த ஜகத்தின் கேஷமத்துக்குவேண்டியும், அஸுரர்களின் வதத்துக்குவேண்டியும், வஸுதேவருக்குத் தேவகியினிடத்தில் புத்திரத்தன்மையை அடைந்தீர் என்று சொல்லுகின்றனர். (33) மற்றுஞ்சிலர் ஸமுத்திரத்தில் கப்பல் போல அதிகமான சுமையினுல் முழுகக்கூடிய நிலையையடைந்த பூமியினுடைய பாரத்தை இரக்கவேண்டி ப்ரம்ஹதேவனுல் ப்ரார்த்திக்கப்பட்டு நீர் அவதரித்தீர் என்கின்றனர். (34) வேறுசிலர் *அவித்யை, காமம் கர்மம் இவைமூலம் இந்தஸம்ஸாரத்தில் கிலேசத்தை யடைகின்ற ஜீவர்களுக்கு அவித்யாதிகளின் நிவி

---

† ஆகவே ஜகன்மோஹனமாக இருத்தல்பற்றி அறிய வியலாததாக இருப்பதாற்றுன் உமது அவதாரத்தைப் பலர் பலவிதமாக வர்ணிக்கின்றனர் என நான்கு சுலோகங்களினுல் தெரிவிக்கின்றுள்.

* பரமானந்தஸ்வரூப விஷயகமான அக்ஞானமானது அவித்யை எனப்படும். அந்த அவித்யாமூலமேற்படும் தேஹாத்யபிமானத்தினுல் காமமேற்படுகிறது. அந்தக் காமத்திலிருந்து கர்மங்களேற்படுகின்றன. அவற்றினுல் கிலேசமேற்படுகிறது என்பதுகருத்து.

न्निति केचन ॥३५॥ शृण्वन्ति गायन्ति गृणन्त्यभीक्ष्णशः स्मरन्ति नन्दन्ति तवेहितं जनाः। त एव पश्यन्त्यचिरेण तावकं भवप्रवाहोपरमं पदाम्बुजम् ॥ ३६ ॥ अप्यद्य नस्त्वं स्वकृतेहित प्रभो जिहाससि स्वित्सुहृदोऽनुजीविनः। येषां न चान्यद्भवतः पदाम्बुजात्परायणं राजसु योजितांहसाम् ॥ ३७ ॥ के वयं नामरूपाभ्यां यदुभिः सह पाण्डवाः। भवतोऽदर्शनं

ருத்தியேற்படவேண்டி ப்ரவணம் ஸ்மரணம் இவற்றுக்குத் தகுந்த வைகளான கர்மங்களைச் செய்யப்போகின்றவராய் அவதரித்தீர் என்கின்றனர்.(35) (*)எந்த ஜனங்கள் உம்முடைய சரித்திரத்தை, உபதேசிக்கின்ற பிறரிடமிருந்துக் கேட்கின்றனரோ, கேட்பவர் கிடைக்கும்பொழுது தாங்களே சொல்லுகின்றரோ, இவ்விதமில்லாத பொழுது தங்களுக்குள்ளேயே சொல்லிக்கொள்ளுகின்றனரோ, மனத்தினுல் அடிக்கடி ஸ்மரிக்கின்றனரோ, பிறர் சொல்லுவதைக் கொண்டாடுகின்றனரோ அவர்களே ஜன்மபரம்பரைக்கு ஓய்வைத் தருகின்ற உமது சரணாரவிந்தத்தைச் சீக்கிரமாகவே பார்க்கின்றனர்.

[*]ஹே ப்ரபோ! பக்தர்களின் அபேக்ஷிதத்தைப் பூர்த்தி செய்பவரே! அரசர்களிடம் தக்கத்தையுண்டுபண்ணினவர்களான எந்த எங்களுக்கு உம்முடைய சரணாரவிந்தத்தைக்காட்டிலும் வேறு புகலிடமானது கிடையாதோ அத்தகையவர்களும், மிகவும் ஸ்னேஹத்துக்குப் பாத்திரர்களும் பக்தர்களுமான எங்களைக்கூட இப்பொழுது நீர் விட்டுவிட விரும்புகின்றீரா என்னே? (37) †இந்திரியங்

(*) இந்தப் பக்ஷமானது ஸித்தாந்தமாகவுள்ளது என்பதை மனத்தில் கொண்டு ச்ரவணாதிகளின் பலனைத் தெரிவிக்கிறுள்.

[*] நீர் எங்களைப் பரித்யாகஞ்செய்வது உசிதமன்று என இதுமுதல் நான்கு சுலோகங்களினுல் தெரிவிக்கிறுள். அவற்றுள் முதலாவது சுலோகத்தினுல் எங்களுக்கு சுகமும் துக்கமும் உம்மைப் பார்ப்பதும் பார்க்காததுமே தானுகும். அவற்றுள் சுகஸமயம் கடந்துவிட்டது. இப்பொழுது துக்கஸமயமானது ப்ராப்த்தமாகி இருக்கிறது எனத் தெரிவிக்கிறுள்.

† உனக்கு யாதவர்களோ பந்துக்கள், புத்திரர்களான பாண்டவர்களோ அதி சூர்களும், ஸமர்த்தர்களுமாவர். அப்படியிருக்க என்வீணில் கார்ப்பண்ணியத்தைக் காட்டுகின்றனை? எனின். அதற்குப் பதில் சொல்லுகிறுள்.

यर्हि हृषीकाणामिवेशितुः॥ ३८ ॥ नेयं शोभिष्यते तत्र तथेदानीं गदाधर। त्वत्पदैरङ्किता भाति स्वलक्षणविलक्षितैः॥ ३९ ॥ इमे जनपदाः स्वृद्धाः सुपक्वौषधिवीरुधः। वनाद्रिनद्युदन्वन्तो ह्येधन्ते तव वीक्षितैः॥ ४० ॥ अथ विश्वेश विश्वात्मन्विश्वमूर्ते स्वकेषु मे। स्नेहपाशमिमं छिन्धि दृढं पाण्डुषु वृष्णिषु॥ ४१ ॥ त्वयि मेऽनन्यविषया मतिर्मधुपतेऽसकृत्। रति-

---

களுக்கு நியந்தாவான ஜீவனில்லாவிடில் தேஹத்திலுள்ள பெயரும் ரூபமும் எப்படியோ, அப்படியே எப்பொழுது உம்முடைய அதர்சனமானது ஏற்படுகிறதோ அப்பொழுது நாமாவினாலும்=புகழினாலும், ரூபத்தினாலும்=ஐஸ்வர்யத்தினாலும், யதுக்களுடன் கூடின பாண்டவர்களெனப் பெயரிய நாங்கள் எதற்குப் பயன்படுவோம். (உபயோகமற்றவர்களாகவே ஆகிவிடுவோம்.) (38) ஹே கதாதர! (எங்களால் ரக்ஷிக்கப்படுகின்ற) இந்தப் பூமியானது இப்பொழுது, அதற்கு மட்டுமுரிய வஜ்ரம் அங்குசம் முதலிய லக்ஷணங்களினால் அடையாளஞ் செய்யப்பட்டவைகளான உமது அடிவைப்புகளினால் அடையாளம் செய்யப்பட்டதாக இருந்துகொண்டு எவ்விதம் விளங்குகிறதோ அவ்விதம் நீர் இவ்விடம் விட்டுப்போனபொழுது சோபையை யடையப்போவதில்லை. (39) மேலும், இந்தத் தேசங்களும், நன்கு பழுத்த செடி கொடிகளும், காடு மலை ஆறு ஸமுத்திரம் இவைகளும் உமது கடாக்ஷங்களினால் அன்றே நன்கு ஸமிருத்தங்களாக இருந்துகொண்டு மேன்மேலும் விருத்தியை யடைகின்றன.(40) †ஹே விஶ்வேச! ஹே விஶ்வாத்மன்! ஹே விஶ்வமூர்த்தே! பந்துக்களான பாண்டவர்களிடத்திலும், யாதவர்களிலும் (எனக்கு) திருடமாக இருக்கின்ற இந்த ஸ்னேஹமாகிற பாசத்தை அறுத்தெரிவீராக*. (41) ஹே மதுபதே! கங்கையானது (எவ்

---

† பகவத்ப்ரயாணத்திலால் பாண்டவர்களுக்கு அமங்களமும், துவாரகை போகாவிடில் யாதவர்களுக்கு அமங்களமுமுண்டாகிறது என இவ்விரண்டையுமாலோசித்துக் கலங்கின சித்தமுள்ளவளாய்க்கொண்டு யாதவர் பாண்டவர் இவர்களிடத்தில் தனக்கு ஸ்னேஹ நிவிருத்தியை ப்ரார்த்திக்கிறாள்.

* ஸர்வஜகத்துக்கும் ஈசுவரனும் கருணைக்கடலுமான நீர் உமது பக்தர்களான யாதவ பாண்டவர்களைக் காக்கத் தயாராகவிருக்கும் பொழுது அவர்களைப்பற்றின கவலை எனக்கு எதற்கு? என்பது கருத்து.

मुह्यहतादद्धा गङ्गेवौघमुदन्वति ॥ ४२ ॥ श्रीकृष्ण कृष्णसख वृष्ण्यृषभाव-निध्रुग्राजन्यवंशदहनानपवर्गवीर्य । गोविन्द गोद्विजसुरार्तिहरावतार योगेश्वराखिलगुरो भगवन्नमस्ते ॥ ४३ ॥

सूत उवाच—पृथयेत्थं कलपदैः परिणूताखिलोदयः। मन्दं जहास वैकुण्ठो मोहयन्निव मायया ॥ ४४ ॥ तां बाढमित्युपामन्त्र्य प्रविश्य गज-साह्वयम् । स्त्रियश्च स्वपुरं यास्यन्प्रेम्णा राज्ञा निवारितः॥ ४५ ॥ व्यासाद्यैरीश्वरेहाज्ञैः कृष्णेनाद्भुतकर्मणा। प्रबोधितोऽपीतिहासैर्नाबुध्यत शुचार्पितः ॥ ४६ ॥

வித இடையூறையும் பொருட்படுத்தாது) தனது ப்ரவாஹத்தை ஸமுத்திரத்தில் சேர்ப்பதுபோல, எனது புத்தியானது வேறுவிஷயமெதையும் தன்னுள் வாங்காததாய்க்கொண்டு உம்மிடத்தில் நிலைத்த ப்ரீதியை நேரில் அடையட்டும். (42) ஹே ஸ்ரீகிருஷ்ண! அர்ஜுனனுக்குத் தோழனே! ஹே யாதவச்ரேஷ்ட! பூமிக்கு த்ரோஹம் செய்கின்ற அரசர்களின் வம்சமாகிற வம்சத்துக்கு=மூங்கிலுக்கு, நெருப்பாக ஆனவனே! குறைவற்ற ப்ரபாவத்தை யுடையவனே! ஹே கோவிந்த! (காமதேனுவினுல் கிடைத்த ஐச்வரியமுள்ளவனே!) பசுக்கள், ப்ராம்ஹணர், தேவர் இவர்களின் கஷ்டத்தைப் போக்கவேண்டி அவதரித்தவனே! ஹே யோகேச்வர! ஹே அகிலகுரோ! ஹே பகவன்! உமக்கு நமஸ்காரம் என்றுள்.(43) ஸூதர் சொல்லலுற்றார்—குந்தியினுல் இவ்விதம் இனிமையான பதங்களையுடைய வாக்கியங்களினுல் ஸ்துதிக்கப்பட்ட ஸகலமஹிமையையுடையவரான வைகுண்டன்=ஸ்ரீகோபாலன், சிரிப்பாகிற மாயையினுல் மோஹிக்கச் செய்கின்றவர்போல மெதுவாகச் சிரித்தார். (44) நீ கேட்டுக்கொண்டபடி என்னிடத்தில் உனக்கு நிலைத்த பக்தியுண்டாகட்டும் என அனுக்ரஹித்துவிட்டு தேர்நிற்குமிடத்திலிருந்து ஹஸ்தினபுரத்தையடைந்து பிறகு அந்தக் குந்தியையும், மற்றுமுள்ள ஸுபத்ரை முதலிய ஸ்த்ரீகளையும் அனுமதி தரும்படிசெய்துகொண்டு தனது பட்டினத்தைக் குறித்துச் சொல்லபோகின்ற ஸ்ரீகிருஷ்ணன் ப்ரேமைமூலம் தர்மபுத்திரரால் தடுக்கப்பட்டார். (45)

र्पित:॥ ४६ ॥ आह राजा धर्मसुतश्चिन्तयन्सुहृदां वधम्। प्राकृतेनात्मना विप्रा: स्नेहमोहवशं गत:॥ ४७ ॥ अहो मे पश्यताज्ञानं हृदि रूढं दुरात्मन:। पारक्यस्यैव देहस्य बह्वचो मेऽक्षौहिणीर्हता:॥ ४८ ॥ बालद्विज-

---

(*)ஈஶ்வரனுடைய [*]ஸங்கல்பத்தையறியாதவர்களான வியாஸாதிகளினாலும், †அத்புதமான கர்மத்தையுடைய ஸ்ரீகிருஷ்ணனாலும் இதிஹாஸங்கள் மூலம் அறிவுறுத்தப்பட்ட போதினுங்கூட சோகம் நிறைந்தவராகவே ஆகி தர்மபுத்திரர் விவேகத்தையடைந்தாரில்லை. (46) ஹே விப்ரர்காள்! அவிவேகம் நிறைந்த சித்தத்தினால் ஸ்னேஹமும் மோஹமும் இவற்றுக்கு வசப்பட்டவரும், அரசனுமான தர்மபுத்திரர் ஸாஹிருத்துக்களின் வதத்தைச் சிந்திக்கின்றவராய்க்கொண்டு சொல்லத்தொடங்கினார். (47) அந்தோ! துராத்மாவான என்னுடைய மனஸ்ஸில் வேரூன்றின அக்ஞானத்தைப் பாருங்கள். நாய் நரி முதலியவற்றுக்கு ஆஹாரமாகவாகக்கூடிய தேஹத்துக்குவேண்டி என்னால் வெகு ‡அக்ஷௌஹிணிகள் கொல்லப்பட்டன. (48) பாலர், ப்ராம்ஹணர், ஸுஹிருத்துக்கள்=ஸம்

(*) பீஷ்மநிர்யாண கதையைக் சொல்லவேண்டி முன்னுரை கூறுகிறார். [*]தனது பக்தரான பீஷ்மாசாரியரின் நிர்யாண மஹோத்ஸவத்துக்குவேண்டி தர்மபுத்திரருடன் குருக்ஷேத்திரம் செல்லவேண்டும். அங்கு அவர் முகமாகவே இவருக்கு விவேகத்தை யுண்டாக்கவேண்டும் என்ற ஆண்டவனுடைய ஸங்கல்பமானது இரண்டுகாரியத்தை ஸாதிக்கக்கூடியதாக இருக்கிறது, அதை வியாஸாதிகளறியவில்லை என்பது கருத்து.

† अद्भुतकर्मणा=குருபாண்டவ ஸமாதானத்துக்குவேண்டி ஹஸ்தினபட்டினஞ்சென்று அதற்கேற்றபடி பேசினவராக இருந்தபோதினுங்கூட முடிவில் சண்டையையே எவ்விதம் திருடப்படுத்தினரோ, அவ்விதமே இங்கும் விவேகத்தை யுண்டுபண்ணவேண்டி உபதேசிக்கின்றவராய்க் கொண்டு அக்ஞான (அவிவேக)த்தையே திருடப்படுத்தினர் என்பது பொருள்.

‡ அக்ஷௌஹிணியாவது — 21870 தேர்கள். 21870 யானைகள் 65610 குதிரைகள். 109350 காலாள்கள். ஆகமொத்தம். 218700 கொண்டது அக்ஷௌஹிணியாகும் என மஹாபாரதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

सुहृन्मित्रपितृभ्रातृगुरुद्रुहः। न मे स्यान्निरयान्मोक्षो ह्यपि वर्षायुतायुतैः॥ ४९ ॥ नैनो राज्ञः प्रजाभर्तुर्धर्मयुद्धे वधो द्विषाम्। इति मे न तु बोधाय कल्पते शासनं वचः॥ ५० ॥ स्त्रीणां मद्धतबन्धूनां द्रोहो योऽसाविहोत्थितः। कर्मभिर्गृहमेधीयैर्नाहं कल्पो व्यपोहितुम् ॥ ५१ ॥ यथा पङ्केन पङ्काम्भः सुरया वा सुराकृतम्। भूतहत्यां तथैवैकां न यज्ञैर्मार्ष्टुमर्हति ॥

इति श्रीमद्भागवते महापुराणे प्रथमस्कन्धे कुन्तीस्तुतियुधिष्ठिरानुतापवर्णनं नामाष्टमोऽध्यायः ॥ ८ ॥

பந்திகள், மித்திரர்கள், சிறியதகப்பன்மார்கள், ப்ராதாக்கள், குருக்கள் இவர்களைக் கொன்றவனுன எனக்கு கோடிவருஷங்களான போதிலும் கூட நரகத்திலிருந்து மோக்ஷணம் ஸம்பவிக்கப் போவதில்லை. (49) "போர்க்களத்தில் சத்துருக்களின் வதமானது பாபமாகாது" எனயாதொருசிக்ஷாரூபமான வசனமுண்டோ அது ப்ரஜைகளை ரக்ஷிக்கும் அரசனுக்குவேண்டி ஏற்பட்டதாக விருப்பதால் எனக்கு போதத்தை யுண்டுபண்ண=ஸமாதானத்தை யுண்டு பண்ண, போதுமான தன்று*. (50) மேலும், இந்த யுத்தத்தில் என்னல் கொல்லப்பட்ட பந்துக்களையுடையவர்களான ஸ்திரீகளுக்கு எதிர்பாரூவிடினும் யாதொரு துரோஹமானது உண்டுபண்ணப் பட்டிருக்கிறதோ அந்தத்துரோகஹத்தைக் கிருஹஸ்தாச்ரமத்துக்கு விதிக்கப்பட்ட கர்மங்களினுல் போக்கொள்ள நான் சக்தனல்லன். (51) (*)கெட்டியான சேற்றினுல் சேறுள்ளஜலமும், ஸ்வ

---

* சொந்தமான ப்ராஜைகளுக்கு வேறு சத்துருக்களால் பீடையானது ப்ராப்த்தமாகவானபொழுது அந்தச் சத்துருக்களின் வதம் தோஷமன்று எனச் சாஸ்திரம் ஸம்மதிக்கிறது. துரியோதனனே ப்ரஜைகளை நியாயமாகப் பாலனஞ் செய்யும்பொழுது நான் கேவலம் ராஜ்யத்தில் ஆசைசொண்டு அவர்களைக் கொன்றிருப்பதால் எனக்குப் பாபந்தான் ஸம்பவிக்கும் என்பது கருத்து.

(*) "सर्वं पाप्मानं तरति। तरति ब्रह्महत्यां योऽश्वमेधेन यजते य उचैनमेवं वेद" எனற சுருதியினுல் பாபமானது அசுவமேதயாகத்திஞல் போகத்தான் செய்யுமென ஆசங்கித்து அவிவேக மூலம் வளர்ந்த ஹேதுவாதத்தைக் கொண்டு அதை நிராகரணஞ் செய்கிறார்.

अथ नवमोऽध्यायः ॥

सूत उवाच—इति भीतः प्रजाद्रोहात्सर्वधर्मविवित्सया। ततो विनशनं प्रागाद्यत्र देवव्रतोऽपतत् ॥ १ ॥ तदा ते भ्रातरः सर्वे सदश्वैः स्वर्णभूषितैः। अन्वगच्छन्रथैर्विप्रा व्यासधौम्यादयस्तथा ॥ २ ॥ भगवानपि

ல்பமத்யத்திலுல் செய்யப்பட்ட அசுத்தியானது அதிகமான மத்யத்திலுலும் எவ்விதம் சுத்தஞ்செய்யமுடியாதோ, அவ்விதமே தவறுதலாக நேர்ந்த ஒரு ப்ராணிவததோஷத்தைப் புத்திபூர்வமாகச் செய்யப்படும் ப்ராணிஹிம்ஸாப்ராயங்களான யாகங்களிலுல் போக்கிக்கொள்ளவே முடியாது. (52) (எ–று)

இவ்விதம் ஸ்ரீமத்பாகவத மஹாபுராண ப்ரதமஸ்கந்தத்தில் குந்தீஸ்துதி யுதிஷ்டிர அனுதாப வர்ணனமென்ற எட்டாவது அத்தியாயம் முற்றிற்று.

ஒன்பதாவது அத்தியாயம்.

(அ–கை) युधिष्ठिराय भीष्मेण सर्वधर्मनिरूपणम्।
कृष्णस्तुतिश्च मुक्तिश्च नवमे तस्य वर्ण्यते ॥ १ ॥

(க–ரை) தர்மபுத்திரருக்குப் பீஷ்மாசாரியர் அவர்களால் செய்யப்பட்ட ஸர்வதர்மங்களின் நிரூபணமும், பீஷ்மர்செய்த கிருஷ்ணஸ்துதியும், பீஷ்மமுக்தியும் இந்த ஒன்பதாவது அத்தியாயத்திலுபதேசிக்கப்படுகிறது. (1) (எ–று)

ஸூதர் சொல்லலுற்றார்—இவ்விதம் ப்ரஜைகளுக்குச் செய்த துரோஹத்திலுல் பயத்தையடைந்த தர்மபுத்திரர் எங்கு தேவவ்ரதரான பீஷ்மர் விழுந்து கிடக்கின்றாரோ அந்தக் குருக்ஷேத்திரத்தை ஹஸ்தினுபட்டினத்திலிருந்து அடைந்தார்.(1) அப்பொழுது சிறந்த குதிரைகள் கட்டினவும், ஸ்வர்ணங்களிலுல் அலங்கரிக்கப்பட்டனவுமான தேர்களிலேறிக்கொண்டு அந்த எல்லா ப்ராதாக்களும், அவ்விதமே வியாஸர் தௌம்யர் முதலிய ப்ராம்ஹணர்களும் சென்றனர். (2) ஹே விப்ரர்ஷே! பகவானான கிருஷ்ணனும் அர்ஜுனனுடன் கூடத் தேரிலேறிக்கொண்டு சென்றார். அவர்களால்

विप्रर्षे स्थेन सधनञ्जयः। स तैर्व्यरोचत नृपः कुबेर इव गुह्यकैः॥ ३ ॥ दृष्ट्वा निपतितं भूमौ दिवश्च्युतमिवामरम्। प्रणेमुः पाण्डवा भीष्मं सानुगाः सहचक्रिणा॥ ४ ॥ तत्र ब्रह्मर्षयः सर्वे देवर्षयश्च सत्तम। राजर्षयश्च तत्रासन्द्रष्टुं भरतपुङ्गवम्॥ ५ ॥ पर्वतो नारदो धौम्यो भगवान्बादरायणः। बृहदश्वो भरद्वाजः सशिष्यो रेणुकासुतः॥ ६ ॥ वसिष्ठ इन्द्रप्रमदस्त्रितो गृत्समदोऽसितः। कक्षीवान्गौतमोऽत्रिश्च कौशिकोऽथ सुदर्शनः॥ ७ ॥ अन्ये च मुनयो ब्रह्मन्ब्रह्मरातादयोऽमलाः। शिष्यैरुपेता आजग्मुः कश्यपाङ्गिरसादयः॥ ८ ॥ तान्समेतान्महाभागानुपलभ्य वसूत्तमः। पूजयामास धर्मज्ञो देशकालविभागवित्॥ ९ ॥ कृष्णं च तत्प्रभा-

---

சூழப்பட்ட அந்தத் தர்மபுதிரர், [*]குஹ்யகர்களினுல் சூழப்பட்ட குபேரன்போல விளங்கினர். (3) பரிவாரங்களுடன் கூடின பாண்டவர்கள் ஸ்ரீகிருஷ்ணனுடன் கூட,ஸ்வர்க்கத்திலிருந்து பூமியில்விழுந்த தேவனைப்போலிருக்கின்றவரும்,சரதல்பத்தில் படுத்திருப்பவருமான பீஷ்மரைக்கண்டு வணங்கினர். (4) ஹே ஸத்தம! அப்பொழுது எல்லா ப்ரம்ஹருஷிகளும், தேவருஷிகளும் ராஜர்ஷிகளும், பரதச்ரேஷ்டரான பீஷ்மரைக் காணவேண்டி அந்த க்ஷணத்திலேயே வந்துசேர்ந்தனர்.(5) ஹே ப்ரம்ஹன்! பர்வதர், நாரதர், தௌம்யர், பகவானான வியாஸர், ப்ருஹதச்வர், பரத்வாஜர், சிஷ்யர்களுடன் கூடின பரசுராமர், வஸிஷ்டர், இந்த்ரப்ரமதர், த்ரிதர், கிருத்ஸமதர், அஸிதர், கக்ஷீவான், கௌதமர், அத்ரி, கௌசிகர் சுதர்சனர், இவர்களும், பரிசுத்தர்களான சுகர் முதலிய மற்றுமுள்ள முனிகளும், கச்யபர், அங்கிரஸ் முதலியோரும் சிஷ்யர்களுடன் கூடினவர்களாய் அங்குவந்து சேர்ந்தனர். (6-8) †தேசம் காலம் இவற்றின் பிரிவை யறிந்தவரும், தர்மமறிந்தவரும், வஸுச்ரேஷ்டருமான பீஷ்மர் மஹாபாகர்களான அவர்கள்வந்ததைக்கண்டு (அவர்களைப்) பூஜித்தார். (9) ஹிருதயத்திலிருப்பவரும், மாயையினுல் (ஸ்வ

---

[*] குபேரனின் பரிசாரகர்கள் குஹ்யகர் எனப்படுவர்.

† देशकालविभागवित्=என்றதால் அப்பொழுது எழுந்திருக்க முடியாதிருப்பதுபற்றி படுத்துக்கொண்டபடியே மனஸ்ஸினுலும் வாக்கினுலும் பூஜித்தாரென்பது பெறப்பட்டது.

वज्र आसीनं जगदीश्वरम्। हृदिस्थं पूजयामास माययोपात्तविग्रहम् ॥१०॥ पाण्डुपुत्रानुपासीनान्प्रश्रयप्रेमसङ्गतान्। अभ्याचष्टानुरागाश्रैरन्धीभूतेन चक्षुषा॥ ११॥

अहो कष्टमहोऽन्याय्यं यद्यूयं धर्मनन्दनाः। जीवितुं नार्हथ क्लिष्टं विप्रधर्माच्युताश्रयाः॥ १२॥ संस्थितेऽतिरथे पाण्डौ पृथा बालप्रजा वधूः। युष्मत्कृते बहून्क्लेशान्प्राप्ता तोकवती मुहुः॥ १३॥ सर्वं कालकृतं मन्ये भवतां च यदप्रियम्। सपालो यद्वशे लोको वायोरिव घनावलिः ॥ १४॥ यत्र धर्मसुतो राजा गदापाणिर्वृकोदरः। कृष्णोऽस्त्री गाण्डिवं

ஸங்கல்பத்தினுல்) எடுத்துக்கொண்ட ஸ்ரீமூர்த்தியையுடையவராய்த் தனக்கு எதிரிலிருப்பவரும், ஜகதீஸ்வரருமான ஸ்ரீகிருஷ்ணனையும் அவரது மஹிமையை யறிந்தபீஷ்மர் பூஜித்தார். (10) அருகிலுட் கார்ந்தவர்களும், வணக்கம் ஸ்னேஹம் இவற்றுடன் கூடினவர்களு மான பாண்டு புத்திரர்களைப்பார்த்து ப்ரேமையினுலுண்டான கண் ணீரினுல் மறைக்கப்பட்ட கண்களுடன் கூடினவராய்ச் சொல்ல வாரம்பித்தார். (11)

‡ஹே தர்மநந்தனர்களே! நீங்கள் வெகுகஷ்டப்பட்டு ஜீவிப் பதற்கே முடியாதவர்களாக இருக்கின்றீர்கள் என்பது யாதுண்டோ இது அந்தோ! வெறுக்கத்தக்கதே. அந்தோ இது அன்னியாயமுமா கும். ஏன்? (நீங்கள்) ப்ராம்ஹணர்களையும், தர்மங்களையும், அச்யு தனையும் ஆஸ்ரயித்தவர்களாயிற்றே? (12) அதிரதனான பாண்டு மரித்ததும் பாலர்களான புத்திரர்களையுடையவளும், ஸ்திரீயுமான குந்தியானவள் குழந்தைகளான உங்கள் நிமித்தமாக பலதடவை களில் வெகுகிலேசங்களை யடைந்திருக்கிறுள். (13) உங்களுக்கும் அபரியம் (கஷ்டம்) மூண்டாயிற்று என்பது யாதுண்டோ இவை யாவும், மேகக்கூட்டம் வாயுவின் அதீனமாக இருப்பதுபோல, பால கனுடன் கூடின உலகமானது எந்தக்காலத்தின் வசத்திலிருக்கின் றதோ அந்தக் காலத்தினுலேயே செய்யப்பட்டது என எண்ணு

---

‡ இதுமுதல் 11சுலோகங்களினுல் பீஷ்மருடைய வார்த்தை சொல் லப்படுகிறது.

चापं सुहृत्कृष्णस्ततो विपत् ॥ १५ ॥ न ह्यस्य कर्हिचिद्राजन्पुमान्वेद विधित्सितम् । यद्विजिज्ञासया युक्ता मुह्यन्ति कवयोऽपि हि ॥१६॥ तस्मादिदं दैवतन्त्रं व्यवस्य भरतर्षभ । तस्यानुविहितोऽनाथा नाथ पाहि प्रजाः प्रभो ॥ १७ ॥ एष वै भगवान्साक्षादाद्यो नारायणः पुमान् । मोहयन्मायया लोकं गूढश्चरति वृष्णिषु ॥ १८ ॥ अस्यानुभावं भगवान्वेद गुह्यतमं शिवः।

கறேன். (14) *எந்தப் பக்ஷத்தில் தர்மபுத்திரன் அரசனாகவும், பீமஸேனன் கதையைக் கையிற்றாங்கினவனாகவும், அர்ஜுனர் வில்லாளியாகவும், காண்டீவம் வில்லாகவும், கிருஷ்ணன் ஸாஹிருத்தாகவும் இருக்கின்றனரோ அங்கும் ஆபத்துநேர்ந்திருக்கிறதே? (*) (15) [*]ஹே ராஜன்! கவிகளான=ஸர்வக்ஞர்களான, ப்ரம்ஹாதிகளுங்கூட எவரது காரியத்தையறியவேண்டுமென்ற ஆவலுடன்கூட முயற்சித்தபோதிலும் மோஹத்தையே அடைகின்றனரோ. அந்தக் கிருஷ்ணன் செய்யவிரும்பின காரியத்தை ஒரு மனிதனும் எந்தக் காலத்திலும் அறியமாட்டான். (இவ்விதமிருக்க உன்னாலும் என்னாலும் அது எவ்விதமறியமுடியப்போகிறது என்பது கருத்து.) (16) ஆகவே ஹே பரதர்ஷப! ப்ரபோ! ஹே நாத! (குலபரம்பரையாக வந்த ஹே ஸ்வாமின்!) இந்தச்சுகமும் துக்கமும், தைவாதீனமென நிஸ்சயித்துக்கொண்டும், அந்த ஈஸ்வரனை யாஸ்ரயித்துக்கொண்டும் அனுதர்களான ப்ரஜைகளைக் காப்பீராக. (17) ஸாக்ஷாத் நாராயணனாக இருப்பதுபற்றி ஆத்யனான புமானும், ஆனதுபற்றியே பகவானும், ஸர்வேஸ்வரனும் ஆன இவரே தனது மாயையினால் உலகை மோஹிக்கச்செய்துகொண்டுயாதவர்களிடத்தில் மறைந்து ஸஞ்சரிக்கிறார். (18) எவரை நீ அப்மான் சேய் என்றும், ப்ரீதிக்கு விஷயனென்றும், ப்ரீதியைச்செய்பவனென்றும், பதிலுபகாரத்தை எதிர்

---

* பொருந்தாததையும் காலமானது பொருந்தும்படி செய்கிறது என இதனாலுபதேசிக்கிறார்.

(*) புண்ணியம், சாரீரமானபலம், அஸ்திரம், ஸாமர்த்தியம், சஸ்திரம், தேவதை இவை நிறைந்திருந்த போதிலுங்கூட தீங்கானது விலக்கவியலாததாகவே இருக்கிறது என்பது பொருள்.

[*] காலமானது கிருஷ்ணனை எவ்விதம் அதிக்கிரமிக்கும் எனின்? அதற்கு இதனால் பதில் சொல்லுகிறார்.

देवर्षिर्नारदः साक्षाद्भगवान्कपिलो नृप ॥ १९ ॥ यं मन्यसे मातुलेयं प्रियं मित्रं सुहृत्तमम्। अकरोः सचिवं दूतं सौहृदादथ सारथिम् ॥ २० ॥ सर्वात्मनः समदृशो ह्यद्वयस्यानहङ्कृतेः। तत्कृतं मतिवैषम्यं निरवद्यस्य न क्वचित् ॥ २१ ॥ तथाप्येकान्तभक्तेषु पश्य भूपानुकम्पितम्। यन्मेऽसूंस्त्यजतः साक्षात्कृष्णो दर्शनमागतः ॥ २२ ॥ भक्त्यावेश्य मनो यस्मिन्वाचा यन्नाम कीर्तयन्। त्यजन्कलेबरं योगी मुच्यते कामकर्मभिः ॥ २३ ॥ स देवदेवो भगवान्प्रतीक्षतां कलेबरं यावदिदं हिनोम्यहम्। प्रसन्नहासारुणलोचनोल्लसन्मुखाम्बुजो ध्यानपथश्चतुर्भुजः ॥ २४ ॥

பாராமல் உபகாரம் செய்பவனென்றும், எண்ணுகின்றனையோ, பின்னும் எவரை ஸ்னேஹத்தினுல் மந்திரியாகவும், தூதனுகவும், தேரோட்டுபவனுகவும் செய்தனையோ, ஹே ந்ருப! இவருடைய மிக்கமிக்க ரஹஸ்யமான ப்ரபாவத்தைப் பகவானுன சிவனும், தேவர்ஷியான நாரதரும், பகவானுன கபிலருமே அறிவர்.(19-20)

நிரவத்யனும்=ராகாதிகளற்றவரும், ஆனதுபற்றியே அஹங் காரமற்றவரும், ஆனதுபற்றியே தனக்குஸமானமான வேறுபொரு ளற்றவரும், ஆனதுபற்றியே ஸமமான அறிவுடையவரும், ஆனது பற்றியே ஸர்வத்துக்கும் ஆத்மாவுமான பகவானுக்கு உயர்வு தாழ் வுள்ள கர்மங்களினுல் செய்யப்பட்ட புத்தி வைஷம்யமானது (இது யோக்யமானகாரியம், இது அயோக்கியமான காரியம் என்ற எண் ணமானது) ஒருபொழுதும் ஏற்படமாட்டாது. (21) அப்படி இருந்த போதிலுங்கூட ஹே ராஜன்! ஏகாந்த பக்தர்கள் விஷயத் திலுள்ள அவரது தயவை ஆலோசித்துப்பார். ஸ்ரீகிருஷ்ணன் உயிரை விடுகின்றவனுன எனக்கு நேரில் தரிசனத்தைத் தந்திருக் கின்றனரே. (22) பக்தியினுல் மனதை எவரிடத்தில் செலுத்தி யும், வாக்கினுல் எவருடைய நாமத்தைச்சொல்லிக்கொண்டும் சரீ ரத்தை விடுகின்ற யோகியானவன் காமம் கர்மம் இவற்றினுல் விடுபடுகின்றனனே, தெளிந்த சிரிப்பினுலும், சிவந்த கண்களினு லும் ப்ரகாசிக்கின்ற முகாரவிந்தத்தையுடையவரும், தியானத் துக்கு விஷயமாகவுள்ளவரும், நான்கு கைகளையுடையவரும் தேவர்களுக்கெல்லாம் தேவனுமான அந்தப் பகவான் நானிந்தச் சரீ

सूत उवाच—युधिष्ठिरस्तदाकर्ण्य शयानं शरपञ्जरे। अपृच्छद्विविधान्धर्मानृषीणां चानुशृण्वताम् ॥ २५ ॥ पुरुषस्वभावविहितान्यथावर्णं यथाश्रमम्। वैराग्यरागोपाधिभ्यामाम्नातोभयलक्षणान् ॥ २६ ॥ दानधर्मान्राजधर्मान्मोक्षधर्मान्विभागशः। स्त्रीधर्मान्भगवद्धर्मान्समासव्यासयोगतः ॥ २७ ॥ धर्मार्थकाममोक्षांश्च सहोपायान्यथा मुने। नानाख्यानेतिहासेषु वर्णयामास तत्त्ववित् ॥ २८ ॥ धर्म प्रवदतस्तस्य स कालः प्रत्युपस्थितः। यो योगिनश्छन्दमृत्योर्वाञ्छितस्तूत्तरायणः ॥ २९ ॥ तदोपसंहृत्य गिरः

ரத்தை விடும்வரை எதிரில் நின்று பார்த்துக் கொண்டிருக்கவேண்டும் என்றார். (24)

ஸூதர் சொல்லலுற்றார்—தர்மபுத்திரர் அந்த வார்த்தையைக் கேட்டு ருஷிகளெல்லாம் கேட்டுக்கொண்டிருக்குங்கால் சரதல்பத்தில் சயனித்திருக்கின்ற பீஷ்மாசாரியரிடம் பலதரப்பட்ட தர்மங்களைக் கேட்டார். (25) ஹே முனே! தத்துவத்தை யறிந்தவரான பீஷ்மாசாரியர், வைராக்கியம், ராகம் இவையாகிற உபாதிகளை முன்னிட்டுச் சொல்லப்பட்ட நிவிருத்தி ப்ரவிருத்தி இரண்டையும் லக்ஷணமாகக் கொண்டவைகளான வர்ணதர்மங்களையும், ஆஶ்ரமதர்மங்களையும், வெவ்வேறான தானதர்மங்களையும், ராஜதர்மங்களையும், மோக்ஷதர்மங்களான சமதமாதிகளையும், ஸ்திரீ தர்மங்களையும், பகவானுக்குஸந்தோஷத்தைத் தருகின்ற தர்மங்களையும், சுருக்கமும் விரிவுமான முறையை யொட்டி மனுஷ்யஜாதிக்குப் பொதுப்படையாகவுள்ளனவும் உபாய (ஸாதன) ங்களுடன் கூடினவுமான தர்மார்த்த காம மோக்ஷங்களையும், பலதறப்பட்ட கதைகளிலுள்ள பழைமையான சரித்திரங்களில் எவ்வித மிருக்கின்றனவோ அவ்வித முபதேசித்தார். (26–28) தர்மத்தையுபதேசிப்பவரும், தான் விரும்பும்பொழுது வரக்கூடிய மரணத்தையுடையவரும், யோகியுமான அந்தப் பீஷ்மாசாரியரால் விரும்பப்பட்ட யாதொரு உத்தராயண காலமுண்டோ அந்தக் காலமானது வந்தது. (29) அப்பொழுது, போரில் ஆயிரம் தேராளிகளை நடத்திச் சென்றவரான பீஷ்மாசாரியர், வாக்குகளை ஒடுக்கிக்கொண்டும் கண்களை †மூடாதவராகவே இருந்துகொண்டும்,

---

† अमीलितदृक्=என்பது மூலம். இதற்கு अमीलितदृगेव=என ஶ்ரீதராசாரியர் பொருள் கூறியிருப்பதன் கருத்து பின்வருமாறு—அம்மாதிரி

सहस्रणीर्विमुक्तसङ्गं मन आदिपूरुषे। कृष्णे लसत्पीतपटे चतुर्भुजे पुरः स्थितेऽमीलितदृग्व्यधारयत् ॥ ३० ॥ विशुद्धया धारणया हताशुभस्तदीक्षयैवाशु गतायुधव्यधः। निवृत्तसर्वेन्द्रियवृत्तिविभ्रमस्तुष्टाव जन्यं विसृजञ्जनार्दनम् ॥ ३१ ॥ श्रीभीष्म उवाच—

ஸங்கத்தை யொழித்த மனத்தை ஆதிபுருஷனும், ப்ரகாசிக்கின்றவை களும் பொன்மயங்களுமான வஸ்திரங்களை யுடையவரும், நான்கு கைகளையுடையவரும், எதிரில் நிற்பவருமான ஸ்ரீகிருஷ்ணனிடத்தில் செலுத்தினார். (30) விசுத்தமான தாரணையினால் போக்கப் பட்ட அசுபத்தை யுடையவரும், அந்தப் பகவானுடைய கிருபை யுடன் கூடின திருஷ்டியினாலேயே அப்பொழுதே விலகின ஆயுதப்ர மத்தை யுடையவரும், எல்லா இந்திரிய விருத்திகளுடையவும் பல தறப்பட்ட வியாபாரங்களை துவுமற்றவருமான பீஷ்மாசாரியர் சரீரத் தை விடப்போகின்றவராய்க்கொண்டு ஜனார்த்தனனான ஸ்ரீகிருஷ் ணனை ஸ்துதிக்கவாரம்பித்தார். (31)

†பீஷ்மர் சொல்லலுற்றார்—ஸாத்வதர்களுக்குள் சிறந்தவரும், விபூமாவும்=எல்லாவற்றுக்கும் மேலானமஹத்துவம் வாய்ந்தவரும்,

---

யான காலத்தில் கண்களை மூடிக்கொண்டு உள்ளில் தியானிக்கவேண்டி யவனான ஸ்ரீகோபாலன் நேரில்வந்து விட்டமையின் கண்களை மூடுவதில் பயனில்லை எனக்கருதி ஆண்டவனது நகம்தொடங்கி சிகைமுடியவுள்ள அவயவங்களைக் கண்ணுற்கண்டு களித்து அருமையான அவயவங்களையு டைய அவயியான ஆண்டவனிடத்தில் மனத்தைச் செலுத்தினார் என் றும். †என்னுடைய மரணகாலத்தில் தானுகவே எனதருகில் வந்த ப்ரபு வினிடம் ஏதேனுமுபாயனம் (காணிக்கை) ஸமர்ப்பிப்பது பொருத்தமா னது. என்னிடமோ நான் என்றும், என்னுடையது என்றுமான எண் ணத்துக்கு விஷயமான பொருள்களுள் நல்லதாக ஒன்றுமில்லை. ஆகவே இந்தப் புத்தியையே ஆண்டவனிடம் காணிக்கையாக ஸமர்ப்பிக்கிறேன் என இதனால் சொல்லுகிறார். 33 முதல் 42 முடியவுள்ள 10 சுலோகங் களால் பீஷ்மாசாரியர் ஸ்ரீகோபாலனை ஸ்துதிக்கிறார். அவற்றின் பொ ருளை இம்மொழிபெயர்ப்பு மூலம் அறிந்துகொண்டு அந்த 10 சுலோகங்க ளையும் மனப்பாடம் செய்து காலையிலும் மாலையிலும் பாராயணஞ் செய் பவர்க்குப் பகவத்ப்ரஸாதம் நிச்சயமாகவுண்டாகும் எனப்பெரியாருபதே சிக்கின்றனர்.

इति मतिरुपकल्पिता वितृष्णा भगवति सात्वतपुङ्गवे विभूम्नि ।
स्वसुखमुपगते क्वचिद्विहर्तुं प्रकृतिमुपेयुषि यद्भवप्रवाहः ॥ ३२ ॥
त्रिभुवनकमनं तमालवर्णं रविकरगौरवराम्बरं दधाने ।
वपुरलककुलावृताननाब्जं विजयसखे रतिरस्तु मेऽनवद्या ॥ ३३ ॥
युधि तुरगरजोविधूम्रविष्वक्कचलुलितश्रमवार्यलङ्कृतास्ये ।
मम निशितशरैर्विभिद्यमानत्वचि विलसत्कवचेऽस्तु कृष्ण आत्मा ॥

ஸ்வரூபபூதமான சுகத்தையடைந்தவராகவே (அதாவது:—ஸ்வரூப சுகானுபவத்துக்கு எவ்விதக்குறைவுமில்லாமலே என்றும்) இருப்பவரும் எந்த ப்ரகிருதியிலிருந்து பவப்ரவாஹமானது (ஸிருஷ்டிபரம்பரையானது) உண்டாகிறதோ அந்த ப்ரகிருதியை (யோகமாயையை) விளையாடுவதற்கு ஒருஸமயத்தில் ஸ்வீகரித்துக்கொண்டவரும், பகவானுமான ஸ்ரீகிருஷ்ணனிடத்தில் இவ்விதம்=பலதறப்பட்ட தர்மாதிகளாகிற ஸாதனங்கள் மூலம் காமனையையொழித்த, அல்லது ஸ்ரீகிருஷ்ணன் விஷயத்தில் திருப்தியை=போதுமென்ற எண்ணத்தை, யடையாத, மதியான து=தாரணைரூபமான புத்திவிருத்தியான து (என்னால்) ஸமர்ப்பிக்கபட்டது.(32) *மூவ்வுலகிலுமுள்ள அழகுவாய்ந்த பொருள்களுக்கெல்லாம்மேலான அழகுவாய்ந்ததும், தமாலம்போன்று கருத்த நிறமுள்ளதும், விடியற்காலத்திலுள்ள ஸூரியனுடைய கிரணங்கள்போல இயற்கையாகவே பொன்னிறமுள்ளனவும் அழுக்கற்றனவுமான இரண்டு வஸ்திரங்களை (பீதாம்பரங்களை) யுடையதும், அளககுலங்களினால்=சுருட்டைமயிர்களினால், மறைக்கப்பட்ட முகாரவிந்தத்தையுடையதுமான சரீரத்தைத் தரிப்பவரும், அர்ஜுனனுக்குத் தோழனுமான ஸ்ரீகிருஷ்ணனிடத்தில் பலாபேக்ஷையற்றதான ப்ரீதியானது எனக்கு உண்டாகட்டும். (33) யுத்தத்தில்,

---

* இதனால் ஸ்ரீகிருஷ்ணனுடைய ஸ்ரீமூர்த்தியை வர்ணிக்கின்ற வாய் அதில் தனக்கு மனப்பற்றுண்டாக வேண்டும் என ப்ரார்த்திக்கிறார். 32-வது சுலோகத்தினால் பகவத்விஷயகமான தாரணையும், 33வது சுலோகத்தினால் பகவத்விஷயகமான ரதியும், 34-வது சுலோத்தினால் மனதின் அர்ப்பணமும் சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது:—ப்ரேமாத்மகமான பகவத் விஷயகதாரணை தியானம் ஸமாதி இவைகள் சொல்லப்பட்டன என்றேறற்பட்டது.

सपदि सखिवचो निशम्य मध्ये निजपरयोर्बलयो रथं निवेश्य ।
स्थितवति परसैनिकायुरक्षणा हृतवति पार्थसखे रतिर्ममास्तु ॥३५॥
व्यवहितपृतनामुखं निरीक्ष्य स्वजनवधाद्विमुखस्य दोषबुद्ध्या ।
कुमतिमहरदात्मविद्यया यश्चरणरतिः परमस्य तस्य मेऽस्तु ॥३६॥

குதிரைகளின் குளம்புகளினு லுண்டுபண்ணப்பட்ட மண்பொடி களினுல் அழுக்கேறினவும், இங்குமங்கு மசைகின்றனவுமான குந்த ளங்களினுல் நாலாபக்கத்திலும் பரவின (பக்த வாத்ஸல்யத்தை வெளியிடுகின்ற) வியர்வை ஜலத்தினுல் அலங்கரிக்கப்பட்ட முகத் தையுடையவரும், என்னுடைய கூர்மைவாய்ந்த பாணங்களினுல் தூளக்கப்பட்ட தோலையுடையவரும், பாணங்களுடன் கூடவே விளங்குகின்றதும் உடைந்ததுமான கவசத்தையுடையவருமான ஸ்ரீகிருஷ்ணனிடத்தில் என்னுடைய மனதானது ரமிக்கட் டும். (34) மேலும், தோழனான அர்ஜுனனுடைய வார்த்தையைக் கேட்டு அப்பொழுதே தன்னுடையவும், சத்துருவான துரியோதன னுடையவுமான சைன்னியங்களின் நடுவில் தேரை நிறுத்தி நின்ற வரும், சத்துருவான துரியோதனனுடைய சேனையிலுள்ள வீரர் களின் ஆயுளை (“இவர் துரோணர்” “இவர் பீஷ்மர்” “இவன் கர்ணன்” எனக் காட்டும் வியாஜமாக) காலதிருஷ்டியினுலேயே அபஹரித்து அர்ஜுனனுக்கு ஜயத்தையுண்டுபண்ணினவரும், அர் ஜுனனுக்குத் தோழனுமான ஸ்ரீகிருஷ்ணனிடத்தில் எனக்கு ரதி (ப்ரீதி) யானது இருக்கட்டும். (35) (*)வெகுதூரத்திலிருந்த சேனை யின் முகத்தை (முகம் போன்று எதிரில் நின்ற பீஷ்மதுரோணதி யரை) கண்டு தோஷபுத்தியினுல் ஸ்வஜனங்களின் வதத்திலிருந்து நிவிருத்தித்த அர்ஜுனனுடைய கெட்டபுத்தியை (நான் கொல்லு கின்றவன், அவர்கள் கொல்லப்படுகின்றவர்கள் என்ற எண்ணத் தை) எவர் ஆத்மவித்யோபதேசத்தினுல் போக்கினரோ பரமேஸ்வர னுன அவருடைய சரணங்களில் ரதியானது எனக்கு இருக்கட்

(*) சத்துருக்களின் ஆயுளை அபஹரித்துமட்டும் அர்ஜுனனுக்கு ஜயத்தையுண்டுபண்ணினர் என்பது இல்லை. பின்னேயோவெனில்? அவித் யாஹரணத்தினுலும் ஜயத்தையுண்டாக்கினர் என இதனுலுபதேசிக்கிறார்.

स्वनिगममपहाय मत्प्रतिज्ञामृतमधिकर्तुमवप्लुतो रथस्थः।
धृतरथचरणोऽभ्ययाच्चलद्गुर्हरिरिव हन्तुमिभं गतोत्तरीयः॥ ३७॥

டும். (36) [*] "சஸ்திரமில்லாமலே நான் உதவியைமட்டும் செய்யப்போகிறேன்" என்றதான தனது ப்ரதிக்ஞையைவிட்டு "ஸ்ரீகிருஷ்ணனே அஸ்திரம் எடுக்கும்படி செய்கிறேன்" என்றதான எனது ப்ரதிக்ஞையை ஸத்யமாகவாகும்படியும், மேன்மையுள்ளதாகவாகும்படியும் செய்வதற்காக எவர் †தேரிலிருந்தபடியே ஒரேதாவ

---

[*] என் விஷயத்திலோ அதிகமான அனுக்கிரஹத்தைச்செய்திருக்கிறார் என இரண்டு சுலோகங்களினால் தெரிவிக்கிறார்.

† இங்கு रथस्थः=रथस्थस्सन् अवप्लुतः=தேரிலிருந்து கொண்டே பூமியில் குதித்தார் என்றதனால் அச்சமயம் ஆண்டவன் தேரிலிருப்பதாக எண்ணினார்களே யொழிய அவர் குதித்ததை ஒருவரும் காணவில்லையாயினும் நான்மட்டும் கண்டுகொண்டேன் என்பது கருத்து. அல்லது அச்சமயம் இரண்டு ரூபமெடுத்து ஒருரூபத்தினால் தேரிலிருந்துகொண்டு மற்றொரு ரூபத்தினால் கீழேகுதித்தார் என்றும் பொருள் கொள்ளலாம். अवप्लुतस्सन् अभ्ययात्=என்றதனால் தேரிலிருந்து குதித்ததை மட்டும் சிலர் கண்டனரேயன்றி அவர் ஓடிவந்தது எவர்க்குந்தெரியாது, நான் மட்டும்தான் அதைகண்டு கொண்டேன் என்பது கருத்து. அல்லது ஒரு ரூபத்தினால் குதித்து நின்று கொண்டு மற்றொரு ரூபத்தாலோடிவந்தா ரென்றும் பொருள் கொள்ளலாம். மேலும், மூலத்தில் चलद्गुः=என்றதற்கு संरम्भेण मनुष्यनाट्यविस्मृतेः उदरस्थसर्वभूतभुवनभारेण प्रतिपदं चलती गौः=पृथ्वी यस्मात् सः என ஸ்ரீதராசாரியர் பொருள் கூறியிருப்பதற்குப் பின் வருமாறு கருத்துகொள்ளவேண்டும்.

அதாவது:—பகவான் தனது ப்ரதிக்ஞையைவிட்டு விடுவதைக் கண்ட பூதேவியானவள் தனது பாரத்தை இரக்குவதாகச்செய்த ப்ரதிக்ஞையையும் விட்டுவிடுவார் போலிருக்கிறதே? என நடுங்கினாள். அவளைச் சமாதானப்படுத்துவதற்காகத் गतोत्तरीयः=தனது உத்தரீயத்தைப் பூமியில் போட்டு அதைத்தாண்டி ஹே பூமி, நீ பயப்படாதே "உன்பாரத்தை இரக்காமலிருக்கும்படி செய்கிறேன்" எனப் பீஷ்மர் நல்லவேளையாக ப்ரதிக்ஞை செய்யவில்லை. "என்னைத் தான் அஸ்திரமெடுக்கும்படி செய்கிறேன்" என ப்ரதிக்ஞை செய்தார். ஆகையால் உனது தலையில் அடித்து மறுபடியும் ப்ரதிக்ஞை செய்துதருவதற்காகவே இந்த

शितविशिखहतो विशीर्णदंश: क्षतजपरिप्लुत आततायिनो मे।
प्रसभमभिससार मद्वधार्थं स भवतु मे भगवान्गतिर्मुकुन्द:॥ ३८ ॥
विजयरथकुटुम्ब आत्ततोत्रे धृतहयरश्मनि तच्छ्रियेक्षणीये।
भगवति रतिरस्तु मे मुमूर्षोर्यमिह निरीक्ष्य हता गता: सरूपम्॥

லாகத் தாவிக் குதித்து கையில் சக்கிரத்தைத் தாங்கிக்கொண்டும், அப்பொழுதுண்டான அந்த வேகத்தினுல் தனது மானுஷ நாட்டியத்தை மறந்தமையின் வயிற்றிலுள்ள எல்லாப் பூதங்கள் எல்லா லோகங்கள் இவற்றின் சுமையினுல் தனது ஒவ்வொரு அடிவைப்பு தோரும் அசைகின்ற பூமியையுடைவரும், அதேவேகத்தினுல் வழியில் நழுவிவிழுந்த மேலுத்தரீயத்தை யுடையவருமாக யானையைக் கொல்ல சிங்கம் வருவதுபோல எனக்கெதிரிலோடிவந்தாரோ, இவ்விதம் வந்தபொழுது கர்வங்கொண்டவனும், ஆததாயியும் (வில்லாளியும்) ஆன என்னுடையகூர்மையான அம்புகளினுல் அடிக்கப்பட்டவராகவும், அதனுலேயே உடைந்தகவசத்தை யுடையவராகவும், ரக்தத்தினுல் நாலாபக்கத்தில் சூழப்பட்டவராகவும் கொண்டு பலாத்காரமாகத் தடுக்கும் அர்ஜுனனையும் கூடத் தள்ளிவிட்டு என்னைக் கொல்லவேண்டி எதிரில் ஓடிவந்தாரோ அந்தமுகுந்தனை பகவான் எனக்குப் புகலிடமாகவாகட்டும். (37–38)

மேலும், அர்ஜுனனுடைய *தேரைக் குடும்பமாகவுடையவரும், (வலது கையினுல்) எடுக்கப்பட்ட குதிரையோட்டும் சாட்

உத்தரீயத்தை உன்மேல் போடுகிறேன் எனச் சொல்லுவான் கருதி தனது உத்தரீயத்தைப் பூமியில் போட்டார் என்று பெரியார் பொருள் கூறுகின்றனர். மேலும், 38-வது ஸ்லோகத்தில் प्रसभमभिससार=என்றதனுல் பகவான் தேரினின்றும் குதித்து ஓடுவதைக்கண்ட அர்ஜுனன் எவ்வளவு தடுத்தும் கேளாமல் ஓடும்பொழுறு அவரது உத்தரீயத்தைப் பிடித்திழுக்கவே அது பூமியில்விழ, அதையும் தாண்டி ஆண்டவன் ஓடினுன் என்றதிலிருந்து தனது மேல்வேஷ்டிபோனதைக் கூடக்கவனிக்காமல் பக்தப்ரதிக்ஞாரக்ஷணத்தில் எவன் ஈடுபட்டாலே அவனையே யாவரும் ஆச்ரயிக்கவேண்டும் என்பதும் பெறப்பட்டது.

* वृद्धौ च मातापितरौ सती भार्या सुतश्शिशु:। अप्यकार्यशतं कृत्वा भर्तव्या मनुरब्रवीत्॥ வயது முதிர்ந்த தாய் தந்தையர்கள், பதிவிரதையான பாரி

யை, சிசுவான பிள்ளை இவர்களை ஆயிரம் தகாதகாரியங்களைச் செய்தா வது ரக்ஷிக்கக்கடவன்" என்றதனால் மனுவானவர் குடும்பியாக உள்ளவன் குடும்பபரணவிஷயத்தில் தகாதகாரியஞ்செய்தலெக் கூட ஒருவாறு ஸம்ம தித்திருப்பதிலிருந்துகுடும்பவாத்ஸல்யம்அவச்யம்வேண்டுமென்றேற்படுவ தால், ஆண்டவனும் தனதுகுடும்பமாகவான அர்ஜுனனுடைய தேரைக் காப்பாற்றவேண்டி எவ்விதத்திலும் தனது பெருமைக்கொவ்வாத காரி யத்தையும் திருப்தியுடன் செய்து காட்டியிருப்பதிலிருந்து அவனது வாத்ஸல்யம் வெளியாகிறது. அதாவது:—சார்ங்கமென்ற மிகப் புண்ணி யமானவில்லைத் தாங்கவேண்டிய கையினால் வெகு அசுத்தமானதும் தோ லால் செய்யப்பட்டதுமான குதிரையின் கடிவாளத்தைத் தாங்கினன். இதிலிருந்து தனது சார்ங்கத்தினிடம் தனக்கிருந்த ப்ரீதியை விடத் தனதுபக்தனான அர்ஜுனனுக்குப் பணிவிடைசெய்வதிலும்,சேதனனான குதிரையை அடக்கியாளுவதிலும், அசேதனமும் தோலாலானதுமான கடிவாளத்தைத் தரிப்பதிலும் அதிகம் ப்ரீதியேற்பட்டது. ஆகையாற் றான் இதைத் தனது திருக்கரத்தினால் தாங்கி மிகுந்தமகிழ்சியுடன் தேர் தட்டில் வீற்றிருந்தான். அச்சமயம் அவன் காட்டின மகிழ்சி அவனது திருமுகமண்டலத்தில் வழிந்தோடிற்று. அதைக் காண்பதற்கு இவ்வி ரண்டுகண்களும் போதுமோ! ஆயிரம் கண்களிருந்தாலும் போதாதே! என்பது तच्छ्या ईक्षणीये என்றதால் சொல்லப்பட்டது. மேலும், போர்க்களத்தில் தனது பக்தவாத்ஸல்யத்தைக் காட்டிக்கொண்டு நின்ற ஆண்டவனுடைய திருமுகமண்டலத்தை நானும் பார்த்துக் கொண்டே போர்புரிந்தேன். மற்றவர்களும் போர்புரிந்தனர். ஆயினும் அந்த முக மண்டலத்தைப் பார்த்துக் கொண்டிருக்கும் பொழுதே அர்ஜுனபாணத் தினால் அடிக்கப்பட்டு உயிர் துறந்தவர்களே மஹாபாக்கியசாலிகளாவர். அவர்களோ அத்தகைய பாக்கியத்தினால் எனக்கு முந்தியே முக்தியை அடைந்துவிட்டனர். நானே ஸ்வச்சந்தமிருத்யுவுள்ளவனாக இருந்த தோ ஷத்தினால் அந்தப் பாக்கியம் பெறுதவனாகவாகிவிட்டேன். அதை நினை த்து வருந்துவதால் பயனுண்டோ? ஆயினும் பக்தவாத்ஸல்ய நிதியான பகவானிடம் என்மனம் பற்றையடையட்டும் என இதுபோழ்து ப்ரார்த் திக்கிறேன் என்பது यमिह निरीक्ष्य हता गतास्सरूपम् என்றதால் சொல்லப் பட்டது.

மேலும், இந்தச் சுலோகத்திலுள்ள आत्ततोत्रे என்றதால் ஸர்வோத் தமமான சக்கிராயுதத்தைத் தாங்கும் வலதுகையினால் ஸர்வநிகிருஷ் டமான குதிரையோட்டும் சாட்டைக் கொம்பைத் தாங்கினதாகவும்,

ललितगतिविलासवल्गुहासप्रणयनिरीक्षणकल्पितोरुमानाः।
कृतमनुकृतवत्य उन्मदान्धाः प्रकृतिमगन्किल यस्य गोपवध्वः ॥४०॥

டைக் கொம்புடையவரும், (இடது கையிலுல்) பிடிக்கப்பட்ட குதிரையின் கடிவாளக் கயிற்றையுடையவரும், அந்த ஸாரத்ய சோபையிலுல் திகட்டாதுப் பார்க்கத்தக்கவரும், இந்தப்போர்க்களத்தில் அடிபட்டவர்கள்யாவரும் எந்த ஸ்ரீகிருஷ்ணரை பார்த்துக்கொண்டு அவருக்குஸமானமான ரூபத்தை யடைந்திருக்கின்றரோ அத்த கைய மஹிமைவாய்ந்தவரும் பார்த்தஸாரதியுமான பகவானிடத் தில் மரிக்கவிரும்பும் எனக்கு ரதியானது (மனப்பற்றுனது) உண் டாகட்டும். (39) (*)அழகான நடையிலுலும், விலாஸத்திலுலும், அழகான மந்தஹாஸத்திலுலும், (மனத்திலுள்ள எல்லாவிதமான எண்ணங்களையும் வெளியிடக்கூடிய) ப்ரீதிபூர்வகமான பார்வையி லுலும், செய்யப்பட்ட அதிகமான பூஜையை யுடையவர்களும், ஆனதுபற்றியே அதிகமான மதத்திலுல் அந்தர்களும்=தன்னிலை பை இழந்தவர்களும், ஆனதுபற்றியே (அவரிடமீடுபட்ட சித்தமுள் ளவர்களாக இருப்பதுபற்றியே) அவரால் செய்யப்பட்ட கோவர்த்த னோத்தரணம் முதலிய காரியத்தைத் தாங்களும் [*]செய்து காட்டு

धृतहयरश्मनि=என்றதால் ஸர்வோத்தமமான சார்ங்கமென்ற வில்லைத் தாங்கும் இடதுகையிலுல் ஸர்வ நிகிருஷ்டமான குதிரைக்கடிவாளக்கயிற் றைத் தாங்கினதாகவும் கூறியதிலிருந்து பக்தஸம்ரக்ஷண விஷயத்தில் எத்தகைய இழிவான காரியத்தையும் செய்யப் பின் வாங்கமாட்டீரென் றும் அதிலிருந்தே உமக்கு பக்தர்களிடமுள்ள வாத்ஸல்யம் பூர்ணமாய் வெளியாகிறதென்றும் தெரிவித்ததாகக் கொள்ளவேண்டும்.

(*) க்ஷத்திரிய தர்மத்துடன் சண்டைசெய்தவர்கள் உமக்கு ஸமான மான ரூபத்தை யடைந்தனர் என்பது ஆச்சரியமன்று. மதத்திலுல் அறி விழந்தவர்களுங்கூடவன்றே உமது ஸாரூப்யத்தை யடைந்திருக்கின்றனர் என இதலுல் தெரிவிக்கிறார்.

[*] ஒருவன் செய்தகாரியத்தை மற்றவன் செய்தால் அது கோபத் தை யுண்டாக்குவதாக இருப்பதை உலகில் காண்கிறோம். உம்விஷயத்தி லோ அதற்கு நேர்மாறாக விருக்கிறது. அதாவது:—நீர் செய்தகாரியங் களையே செய்த கோபஸ்திரீகள் உமது ப்ரீதியை யடைந்ததுடன் உமது ஸ்வரூபத்தையும் அடைந்திருக்கின்றனர் என்றும்.

मुनिगणनृपवर्यसंकुलेऽन्त:सदसि युधिष्ठिरराजसूय एषाम् ।
अर्हणमुपपेद ईक्षणीयो मम दृशि गोचर एष आविरात्मा ॥ ४१ ॥
तमिममहमजं शरीरभाजां हृदि हृदि धिष्ठितमात्मकल्पितानाम् ।
प्रतिदृशमिव नैकधार्कमेकं समधिगतोऽस्मि विधूतभेदमोह:॥ ४२ ॥

सूत उवाच—कृष्ण एवं भगवति मनोवाग्दृष्टिवृत्तिभि:। आत्मन्या-
त्मानमावेश्य सोऽन्त:श्वास उपारमत् ॥ ४३ ॥ संपद्यमानमाज्ञाय भीष्मं

கின்றவர்களுமான கோபஸ்திரீகள் எவருடைய ஸ்வரூபத்தை யடைந்தனர் என்பது ப்ரஸித்தமோ, அந்த ஸ்ரீகிருஷ்ணனிடத்தில் எனக்கு மனப்பற்று ஏற்படட்டும். (40) †முனிகணங்களினாலும், ராஜஸ்ரேஷ்டர்களினாலும், நிறையப்பெற்ற ஸபையின் நடுவில் தர்ம புத்திரருடைய ராஜஸூயயாகத்தில் இந்தமுனிகண ராஜஸ்ரேஷ்டர் களால் "என்ன ரூபம், என்ன மஹிமை" என ஆஸ்சரியத்து டன் பார்க்கக் கூடியவராக இருந்து கொண்டு எவர் அக்ரபூஜை யைப் பெற்றாரோ ஜகத்துக்கு ஆத்மாவான இவர் எனது திருஷ்டி க்கு விஷயமாக இருந்துகொண்டு வெளிவந்திருக்கிறார். எனது பாக்கியம் தான் என்னேயோ? (41) ‡தன்னால் நிர்மாணஞ் செய் யப்பட்டவர்களான ப்ராணிகளுடைய ஒவ்வொரு ஹிருதயம் தோ ரும் அதிஷ்டாதாவாக இருப்பவரும், ஒரே ஸூரியன் ஸர்வ ப்ரா ணிகளுடையவும் ஒவ்வொரு கண்தோரும் வெவ்வேறுகத் தோன்று வதுபோல அதிஷ்டான பேதத்தை யொட்டிப் பலவாகத்தோற்று கின்றவரும், உண்மையில் அஜனுப்=ஜனனமற்றவரும் ஆன அந்த இந்த ஸ்ரீகிருஷ்ணனே பேதமூலமேற்பட்ட மோஹமற்றவனுய் நான் நன்கு அடைந்துவிட்டேன் என்றார்.(42) ஸூதர் சொல்லலுற்றார்— இவ்விதம் பீஷ்மர், பகவானும் பரமாத்மாவுமான ஸ்ரீகிருஷ்ணனி டத்தில் மனஸ், வாக், திருஷ்டி இவற்றின் விருத்திகளுடன் தனது ஆத்மாவை லயிக்கச் செய்து உள்ளிலேயே ஒடுங்கின ப்ரவாஸத்தை யுடையவராய்க்கொண்டு ஒய்ந்தார். (43) பீஷ்மர் நிருபாதிகமான

---

† பகவானிடமுள்ள ஜகத்பூஜ்யத்துவத்தை நினைத்துக் கொண்டு சொல்லுகிறார். ‡ அந்த நான் கிருதார்த்தனுக வாகிவிட்டேன் என இத னால் தெரிவிக்கிறார்.

ब्रह्मणि निष्कले। सर्वे बभूवुस्ते तूष्णीं वयांसीव दिनात्यये॥ ४४॥ तत्र दुन्दुभयो नेदुर्देवमानववादिताः। शशंसुः साधवो राज्ञां खात्पेतुः पुष्पवृष्टयः॥ ४५॥ तस्य निर्हरणादीनि संपरेतस्य भार्गव। युधिष्ठिरः कारयित्वा मुहूर्तं दुःखितोऽभवत्॥ ४६॥ तुष्टुवुर्मुनयो हृष्टाः कृष्णं तद्गुह्यनामभिः। ततस्ते कृष्णहृदयाः स्वाश्रमान्प्रययुः पुनः॥ ४७॥ ततो युधिष्ठिरो गत्वा सहकृष्णो गजाह्वयम्। पितरं सान्त्वयामास गान्धारीं च तपस्विनीम्॥ ४८॥ पित्रा चानुमतो राजा वासुदेवानुमोदितः। चकार राज्यं धर्मेण पितृपैतामहं विभुः॥ ४९॥

इति श्रीमद्भागवते महापुराणे प्रथमस्कन्धे भीष्मनिर्याण युधिष्ठिरराज्य प्राप्तिवर्णनं नाम नवमोऽध्यायः॥ ९॥

ப்ரம்ஹத்தில் கலந்ததைக்கண்டு அவர்கள்யாவரும் மாலைப்பொழுதில் பறவைகள்போல மௌனமாக இருந்தனர். (44) அப்பொழுது தேவர்களாலும், மனிதர்களாலும் வாசிக்கப்பட்ட துந்துபி வாத்தியங்கள் முழங்கின. அங்குள்ள அரசர்களுக்குள் ஸாதுக்களாகவுள்ளவர்கள் கொண்டாடினர். ஆகாசத்திலிருந்து பூமாரிகள் பொழிந்தன. (45) ஹே பார்க்கவ! பீஷ்மர் முக்தராயினுங்கூட அவரது சரீரதாஹம் முதலிய காரியங்களைத் தர்மபுத்திரர் செய்து முடித்து ஒரு முகூர்த்தகாலம் துக்கிதராக ஆனர். (46) முனிகள் ஸந்துஷ்டர்களாகவாகி ஸ்ரீகிருஷ்ணனை அவருடைய ரஹஸ்ய நாமங்களைச் சொல்லி ஸ்துதித்தனர். பிறகு அவர்கள் ஸ்ரீகிருஷ்ணனிடத்திலேயே ஈடுபட்ட ஹிருதயமுள்ளவர்களாய்க் கொண்டு அங்கிருந்து தத்தமது ஆஸ்ரமங்களைக் குறித்துச் சென்றனர். (47) தர்மபுத்திரர் ஸ்ரீகிருஷ்ணனுடன் கூட அங்கிருந்து ஹஸ்திநாபட்டினத்தை யடைந்து பிதாவான திருதராஷ்டிரரையும், துக்கமுள்ளவளான காந்தாரியையும் ஸமாதானப்படுத்தினர். (48) விபுவான தர்மபுத்திரர் பிதாவான திருதராஷ்டிரரின் அனுமதி பெற்றும், வாஸுதேவனுல் அனுமோதிக்கப்பட்டவராய்க்கொண்டும் தகப்பன், பாட்டன் பரம்பரையாய் கிடைத்தராஜ்யத்தைத் தர்மமாக ஆண்டுவந்தார் (49

இவ்விதம் ஸ்ரீமத்பாகவத மஹாபுராண ப்ரதமஸ்கந்தத்தில் பீஷ்மநிர்யாண யுதிஷ்டிரராஜ்யப்ராப்த்தி நிரூபணமென்ற ஒன்பதாவது அத்தியாயம் முற்றிற்று.

अथ दशमोऽध्यायः ॥

शौनक उवाच—हत्वा स्वरिक्थस्पृध आततायिनो युधिष्ठिरो धर्मभृतां वरिष्ठः। सहानुजैः प्रत्यवरुद्धभोजनः कथं प्रवृत्तः किमकारषीत्ततः॥ १ ॥ सूत उवाच—वंशं कुरोर्वंशदवाग्निनिर्हृतं संरोहयित्वा भवभावनो हरिः। निवेशयित्वा निजराज्य ईश्वरो युधिष्ठिरं प्रीतमना बभूव ह। २ ॥ निशम्य भीष्मोक्तमथाच्युतोक्तं प्रवृत्तविज्ञानविधूतविभ्रमः।

பத்தாவது அத்தியாயம்.

(அ–கை) दशमे कृतकार्यस्य हस्तिनापुरतो हरेः।
स्त्रीभिः संस्तूयमानस्य वर्ण्यते द्वारकागमः ॥ १ ॥

(க–கை) யுதிஷ்டிரருக்கு ராஜ்யப்ராப்திவிஷயமாகச் செய்ப வேண்டிய காரியத்தைச் செய்துமுடித்தவரும், ஸ்தரீகளினுல் நன்கு ஸ்துதிக்கப்படுகின்றவருமான ஸ்ரீகிருஷ்ணன் ஹஸ்தினுபட்டினத்திலிருந்து துவாரகைக்குச் சென்றூர் என்பது இந்தப் பத்தாவது அத்தியாயத்தில் வர்ணிக்கப்படுகிறது. (1) (எ–று)

சௌனகர் சொல்லுற்றூர்—தர்மவான்களுக்குள் சிறந்தவரான தர்மபுத்திரர் தனது பொருள் விஷயத்தில் பொறுமை கொண்டவர்களும், தன்னைக் கொல்லவிருப்பங் கொண்டவர்களுமான சத்துருக்களைத் தம்பிகளுடன் கூடக் கொன்று விட்டு அடையப்பட்ட ராஜ்யபோகத்தை யுடையவராய்க் கொண்டு அல்லது ராஜ்ய போகத்தில் வெறுப்புக்கொண்டவராய்க்கொண்டு அதன் பிறகு என்ன செய்தார் என்றூர். (1) ஸுதர் சொல்லுற்றூர்—*பக்தர்களுக்கு மேன்மேலும் விருத்தியைத் தருபவரும், க்ஷேமத்தை விருத்திசெய்பவரும், ஹரியுமான ஈச்வரன் வம்சமாகிற வம்சத்திலிருந்து (மூங்கிலிலிருந்து) உண்டான கோபமாகிற நெருப்பினுல் பொசுக்கப்பட்ட குருவின் வம்சத்தைத் திரும்பவும் முளைக்கச்செய்தம், தர்மபுத்திரரைத் தனது ராஜ்யத்தில் நிலைநிறுத்தியும் ஸந்தோ

---

* ராஜ்யத்தை ஏற்றுக்கொண்டால் ஸ்ரீகிருஷ்ணனுடைய ப்ரீதியுண்டாகும் என நினைத்து ராஜ்யத்தை ஏற்றூர் என இதனுல் பதில் சொல்லுகிறூர்.

शशास गामिन्द्र इवाजिताश्रयः परिध्युपान्तामनुजानुवर्तितः॥ ३ ॥ कामं ववर्ष पर्जन्यः सर्वकामदुघा मही। सिषिचुः स्म व्रजान्गावः पयसोधस्वतीर्मुदा ॥ ४ ॥ नद्यः समुद्रा गिरयः सवनस्पतिवीरुधः। फलन्त्योषधयः सर्वाः काममन्वृतु तस्य वै ॥ ५ ॥ नाधयो व्याधयः क्लेशा दैवभूतात्महेतवः। अजातशत्रावभवञ्जन्तूनां राज्ञि कर्हिचित् ॥ ६ ॥ उषित्वा हास्तिनपुरे मासान्कतिपयान्हरिः। सुहृदां च विशोकाय स्वसुश्च प्रिय-

---

ஷமடைந்த மனதுள்ளவராகவானூர். (2) தர்மபுத்திரர் முதலில் பீஷ்மர் செய்த உபதேசசத்தையும், பிறகு அச்யுதன் செய்த உபதேசத்தையும் கேட்டு உண்டான யாதொரு க்ஞானமுண்டோ (ஜகத்தானது பரமேஸ்வராதீனமேயொழிய ஸ்வதந்திரமன்று என்ற யாதொரு க்ஞானமுண்டோ) அதனல் போக்கப்பட்ட நான் கர்த்தா என்ற மயக்கத்தை யுடையவராகவும், தம்பிகளினுல் பின்தொடரப் பட்டவராகவும் ஆகி வெல்லவியலாத ஆண்டவனே ஆச்ரயித்தவராய்க்கொண்டு ஸமுத்திரத்தை எல்லையாகக்கொண்ட பூமியை இந்திரன் போல ஆண்டுவந்தார் (3) மேகமானது வேண்டியவளவு வர்ஷித்தது. பூமியானது வேண்டின பொருளைத்தருவதாக இருந்தது. பெரிய மடிகளையுடைய பசுக்கள் ஸந்தோஷத்துடன் தனது பாலினல் கோகுலங்களை நனைத்தன. (4) (*)ஆறுகள், [*]ஸமுத்திரங்கள், †மலைகள், மரத்துடன் கூடின செடிகள், கொடிகள் ஆகியயாவும் அந்தத் தர்மபுத்திரருக்கு ஒவ்வொரு ருதவிலும் பலித்தன. (5) அஜாதசத்ருவான தர்மபுத்திரர் அரசு புரியுங்கால் ஜந்துக்களுக்கு மனோவியாதிகளோ, தேஹவியாதிகளோ, ஆதிதைவிகங்களாகவோ, ஆதிபௌதிகங்களாகவோ ஆத்யாத்மிகங்களாகவோ உள்ளகிலேசங்களோ ஒருபொழுதுமுண்டானதில்லை. (6) ஹரியானவர் ஸ்ரீஹஸ்தினாபுரத்தில் வஸித்துக்களுக்குச் சோகமுண்டாகாதிருக்கவேண்டியும், தங்கையான ஸுபத்திரைக்கு ப்ரியத்தைச் செய்யவிருப்பங்கொண்டும், பலமாதங்கள் ஹஸ்தினாபட்டினத்தில் வஸித்து "துவாரகைக்குச் செல்லுகிறேன்" எனச் சொல்லிக்கொண்டு விடைபெற்று அந்தத் தர்மபுத்தி

(*) ஆறுகள் சரியான காலத்தில் பெருகிபூமியை வளப்படுத்தியன. [*] ஸமுத்திரமானது சரியானகாலத்தில் நல்முத்து முதலியவற்றைத் தந்தது. † மலைகள் வேண்டின பொருளைத் தந்தன என்பது கருத்து.

काम्यया ॥ ७ ॥ आमन्त्र्य चाभ्यनुज्ञातः परिष्वज्याभिवाद्य तम्। आरुरोह रथं कैश्चित्परिष्वक्तोऽभिवादितः॥ ८ ॥ सुभद्रा द्रौपदी कुन्ती विराट्तनया तथा। गान्धारी धृतराष्ट्रश्च युयुत्सुर्गौतमो यमौ ॥ ९ ॥ वृकोदरश्च धौम्यश्च स्त्रियो मत्स्यसुतादयः। न सेहिरे विमुह्यन्तो विरहं शार्ङ्गधन्वनः ॥ १० ॥ सत्सङ्गान्मुक्तदुःसङ्गो हातुं नोत्सहते बुधः। कीर्त्यमानं यशो यस्य सकृदाकर्ण्य रोचनम् ॥ ११ ॥ तस्मिन्न्यस्तधियः पार्थाः सहेरन्वि-

---

ரரைத் தழுவிக்கொண்டு நமஸ்கரித்தும், சிலரால் ஆலிங்கனம் செய்யப்பட்டும் நமஸ்கரிக்கப்பட்டும் கொண்டு தேரிலேறினர். (7–8) ஸுபத்ரையும், திரௌபதியும், குந்தியும் அதுபோல உத்தரையும், காந்தாரியும், திருதராஷ்டிரரும், ‡யுயுத்ஸுவும், கிருபாசாரியரும், நகுல ஸஹதேவர்களும், பீமஸேனனும், தௌம்யரும், *விராடன் பெண்ணே ஆதியாகக்கொண்ட வேறுஸ்திரீகளும் மிக்கமோஹத்தையடைந்தவர்களாய்ச் சார்ங்கபாணியான கோபாலனுடைய பிரிவைப் பொருக்காதவர்களாகவாயினர். (9–10)

(*)ஸாதுஸங்கம் காரணமாக விடப்பட்ட புத்திராதி விஷயமான அபிமானத்தையுடையவரான வித்வானனவர் ஸாதுக்களினால் சொல்லப்படுவதும், ருசிகரமுமான எவருடைய யசஸ்ஸை ஓரேதடவை கேட்டபோதிலுங்கூட அதை விடுவதற்கு முடியாதவராகவிருக்கின்றாரோ, அந்தக் கிருஷ்ணனிடத்தில் தரிசனத்தினாலும், ஸ்பர்சனத்தினாலும், வார்த்தையாடுவதனாலும், கூடவுட்காருவதனாலும், கூடச்சேர்ந்து போஜனம் செய்வதனாலும் பதிந்துபோன புத்

---

‡ திருதராஷ்ட்ரருக்குத் தாஸியினிடத்தில் பிறந்தவர் யுயுத்ஸு எனப்படுவர்.

* முதலில் विराट्तनया என்று சொல்லிவிட்டுத் திரும்பவும் मत्स्यसुता என்று சொன்னது தனது கர்ப்பரக்ஷகனான பகவானுடைய விரஹநிமித்தம் அவளுக்குண்டான மோஹாதிக்கியத்தைக் காட்டவேண்டி எனக் கண்டுகொள்ளவும். அல்லது मत्स्यसुता=ஸத்யவதி என்று வேறுபொருள் கொள்ளலாமென ஸ்ரீதராசாரியர் சொல்லியிருக்கிறார்.

(*) அவர்களுக்குண்டான பிறிவாற்றுமை நியாயந்தான் எனச்சொல்லுகிறார்.

रहं कथम् । दर्शनस्पर्शसंलापशयनासनभोजनैः॥ १२ ॥ सर्वे तेऽनिमिषै-
रक्षैस्तमनुद्रुतचेतसः। वीक्षन्तः स्नेहसंबद्धा विचेलुस्तत्र तत्र ह ॥ १३ ॥

न्यरुन्धन्नुद्गलद्बाष्पमौत्कण्ठ्याद्देवकीसुते । निर्यात्यगारान्नोऽभद्रमिति
स्याद्बान्धवस्त्रियः॥ १४ ॥ मृदङ्गशङ्खभेर्यश्च वीणापणवगोमुखाः। धुन्धुर्या
नकघण्टाद्या नेदुर्दुन्दुभयस्तथा ॥ १५ ॥ प्रासादशिखरारूढाः कुरुनार्यो
दिदृक्षया। ववृषुः कुसुमैः कृष्णे प्रेमव्रीडास्मितेक्षणाः॥ १६ ॥ सित तपत्रं
जग्राह मुक्तादामविभूषितम्। रत्नदण्डं गुडाकेशः प्रियः प्रियतमस्य

தியையுடையவர்களான பார்த்தர்கள் (குந்தியின் புத்திரர்கள்) அவ
ரது பிரிவை எவ்விதம் பொறுப்பர். (11–12) அவர்கள் யாவரும்
ஸ்னேஹத்தினால் நன்கு கட்டப்பட்டவர்களாக இருந்தனராதலால்
இமைக்கொட்டாத கண்களினால் அவரையே பார்க்கின்றவர்களாக
வும், பூஜைக்குரிய பொருள்களைக்கொண்டு வரவேண்டி ஆங்காங்கு
ஓடுகின்றவர்களாகவும், ஆனதுபற்றியே அவரைப்பின்பற்றின சித்த
முள்ளவர்களாகவும் ஆயினர். (13) தேவகியின் புத்திரனான ஸ்ரீ
கோபாலன் வீட்டிலிருந்து வெளியிற் செல்லும்பொழுது இவ்விதம்
கண்ணீர் வடிப்பது நமக்கு அமங்களமென வெண்ணிக்கொண்டு
பிரிவாற்றுமையினால் பொங்கிவழிகின்ற கண்ணீரை பந்துஸ்த்ரீகள்
வெளிவராது அடக்கிக்கொண்டனர்.(14) மிருதங்கம், சங்கம், பேரீ,
வீணை, பணவம், கொம்பு, துந்துரி, ஆனகம், மணி முதலியனவும்,
அதுபோல துந்துபி என்றவாத்தியங்களும் முழங்கின. (15) குரு
வம்சத்து ஸ்த்ரீகள் அவரைப் பார்க்குமெண்ணத்துடன் மாடியின்
சிகரத்திலேறிக் கொண்டும், ப்ரேமை, வெட்கம், புன்சிரிப்பு
இவற்றை முன்னிட்ட பார்வையை யுடையவர்களாய்க் கொண்டும்
ஸ்ரீகிருஷ்ணன்மேல் புஷ்பங்களினால் வர்ஷித்தனர். (16) ப்ரிய
னான ‡குடாகேசன் (அர்ஜுனன்) ப்ரியதமனான ஸ்ரீகிருஷ்ணனுக்கு
முத்துமாலைகளினால் அலங்கரிக்கப் பட்டதும், ரத்தினமயமான கழி
யையுடையதுமான வெண்குடையைப் பிடித்தான். (17) உத்த
வரும், ஸாத்யகியும் மிக்க அத்புதங்களான வெண்சாமரங்களை வீசி

---

‡ गुडाकेशः–गुडाकायाः=निद्रायाः ईशः जितनिद्रः = நித்திரையை ஜயித்த
வன் என்பது பொருள்.

ह ॥ १७ ॥ उद्धवः सात्यकिश्चैव व्यजने परमाद्भुते। विकीर्यमाणः कुसुमै रेजे मधुपतिः पथि ॥ १८ ॥ अश्रूयन्ताशिषः सत्यास्तत्र तत्र द्विजेरिताः। नानुरूपानुरूपाश्च निर्गुणस्य गुणात्मनः॥ १९ ॥ अन्योन्यमासीत्संजल्प उत्तमश्लोकचेतसाम्। कौरवेन्द्रपुरस्त्रीणां सर्वश्रुतिमनोहरः॥ २० ॥ स वै किलायं पुरुषः पुरातनो य एक आसीदविशेष आत्मनि। अग्रे गुणेभ्यो जगदात्मनीश्वरे निमीलितात्मन्निशि सुप्तशक्तिषु ॥ २१ ॥ स एव भूयो

னர். புஷ்பங்களினுல் வர்ஷிக்கப்படுகின்ற மதுபதியான ஸ்ரீகிருஷ்ணன் வழியில் அழகாக ப்ரகாசித்தார். (18) நிர்க்குணனுக (பரமானந்தரூபனுக) இருப்பதுபற்றிப் பொருத்தமற்றனவும், குணத்மகனுக (மனுஷ்யனுக) நடிப்பதுபற்றி பொருத்தமானவைகளும் ப்ராம்ஹணர்களால் சொல்லப்பட்டனவுமான "சுகீபவ கிருஷ்ண!" என்றதாதி ஆசீர்வாதங்கள் ஆங்காங்கு கேட்கப்பட்டன. (19) உத்தமஶ்லோகனுன ஸ்ரீகோபாலனிடத்தில் சித்தத்தைச் செலுத்தினவர்களான தர்மபுத்திரருடைய பட்டினத்திலுள்ள ஸ்திரீகள் ஒருவருக்கொருவர் போசிக்கொண்ட வார்த்தையானது †எல்லா ஶ்ருதிகளுடையவும் மனதைக்கவரத்தக்கதாக இருந்தது. (20)‡

ஸ்திரீகள் சொல்லலுற்றனர்—ப்ரளயகாலத்தில் ஜீவோபாதிகளான ஸத்வாதிசக்திகள் ஸுப்தங்களாக=எவ்வித வியாபாரங்களுமற்றனவாக, இருக்குங்கால் ஜீவன் ஸர்வஜகத்துக்கும் ஆத்மாவான ஈஶ்வரனிடத்தில் ஒடுங்கின ஸ்வரூபமுள்ளவனுக இருக்க புராண புருஷனுன எவர் நிஷ்ப்ரபஞ்சமான தனது ஸ்வரூபத்தில் ஒருவராகவே இருந்தாரோ, அவரேதான் இவர் என்பது தக்கப்ரமாணங்களில் ப்ரஸித்தமாகவே இருக்கிறது. (21) *குறையாத ஸ்வரூப

---

† உபநிஷதபிமானி தேவதைகளுங் கூட மூர்த்திகளை எடுத்துக் கொண்டு அவர்கள் பேசின வார்த்தையைக் கொண்டாடின என்பது கருத்து. ‡ பகவானிடமுள்ள தேஜஸ், ஸௌந்தரியம் முதலியவற்றினுல் ஆச்சரியத்தை அடைந்தவர்களான தோழிகளிடம் வேறு ஸ்திரீகள் "இவன் ஸாக்ஷாத் ஈசுவரனுனதால் இதில் ஆச்சரியப்பட வேண்டுவது ஒன்றுமில்லை" என நான்கு சுலோகங்களினுல் சொல்லுகின்றனர்.

* ஸிருஷ்டிக்கு முந்தியும் ப்ரளயத்துக்குப் பிந்தியும் நிஷ்ப்ரபஞ்சாவஸ்தானத்தைச்சொல்லி ஸிருஷ்டி ப்ரளயங்களுக்கு மத்தியில் ஸப்ரபஞ்சாவஸ்தானத்தைச் சொல்லுகின்றனர்.

निजवीर्यचोदितां स्वजीवमायां प्रकृतिं सिसृक्षतीम्। अनामरूपात्मनि रूपनामनी विधित्समानोऽनुससार शास्त्रकृत्॥ २२॥ स वा अयं यत्पदमत्र सूरयो जितेन्द्रिया निर्जितमातरिश्वनः। पश्यन्ति भक्तयुत्कलितामलात्मना नन्वेष सत्वं परिमार्ष्टुमर्हति॥२३॥ स वा अयं सख्यनुगीतसत्कथो वेदेषु गुह्येषु च गुह्यवादिभिः। य एक ईशो जगदात्मलीलया सृजत्यवत्यत्ति न तत्र सज्जते॥ २४॥ यदा ह्यधर्मेण तमोधियो नृपा जीवन्ति तत्रैष हि

ஸ்திதியை யுடையவரான அவரே திரும்பவும், தனது வீரியமான காலசக்தியினுல் ப்ரேரணை செய்யப்பட்டதும், தனது அம்சபூதர்களான ஜீவர்களுக்கு மோஹத்தைத் தருகின்றதும், ஆனதுபற்றியே ஸிருஷ்டிக்க விருப்பமுள்ளதுமான ப்ரகிருதியை, நாமங்களும் (பெயர்களும்) ரூபங்களும் (சரீரங்களும்) அற்ற ஜீவனிடத்தில் நாமரூபங்களை ஏற்படுத்த வெண்ணங்கொண்டு அனுஸரித்தார். வேதங்களாகிற சாஸ்திரங்களையும் வெளியிட்டார். (22) இவ்வுலகில் எவருடைய சரணத்தை=அல்லது ஸ்வரூபத்தை, ஜிதேந்திரியர்களும், ப்ராணவாயுவை அடக்கினவர்களுமான வித்வான்கள் பக்தியினுல் பரிசுத்தமான மனத்தினுல் பார்க்கின்றனரோ அவரே தான் இவர். ஆகவே ஹே ஸகி! இவரே புத்தியைச் சுத்தமாக்குவதற்குத் தக்கவரே அன்றி யோகாதிகளன்று. (23) ஹே ஸகி! வேதங்களிலும், ரஹஸ்யங்களான ஆகமங்களிலும், உள்ள ரஹஸ்யார்த்தவிசாரத்தில் ஸமர்த்தர்களான மஹான்களால் "ஒருவனுன ஈச்வரன் தனதுலீலையினுல் ஜகத்தை ஸிருஷ்டிக்கிறார், காக்கிறார், அழிக்கிறார், ஆயினும் அவற்றில் பற்றையடைவதில்லை" என எவர் சொல்லப்பட்ட ஸத்யங்களான கதைகளை யுடையவரோ அவரே தான் இவர். (24) எப்பொழுது அரசர்கள், தமோகுணம் நிறைந்த புத்தியை யுடையவர்களாய்க் கொண்டு அதர்மத்தினுல் கேவலம் ப்ராணன்களைப் போஷித்துவருகின்றனரோ, அப்பொழுது இவரே யன்றே உலகரக்ஷணத்துக்குவேண்டி விசுத்தமான ஸத்துவகுண மூலம் ரூபங்களை எடுத்துக்கொண்டு ஒவ்வொரு யுகத்திலும் பக (ஐச்வர்ய) த்தையும், ஸத்யப்ரதிக்ஞனுக இருத்தலையும், ருதத்தையும்=உண்மையையுபதேசிப்பவராக இருத்தலையும், பக்தர்களிடத்தில்

सत्त्वतः किल। धत्ते भगं सत्यमृतं दयां यशो भवाय रूपाणि दधद्युगे युगे ॥ २५ ॥ अहो अलं श्लाघ्यतमं यदोः कुलमहो अलं पुण्यतमं मधोर्वनम्। यदेष पुंसामृषभः श्रियः पतिः स्वजन्मना चङ्क्रमणेन चाञ्चति ॥२६॥ अहो बत स्वर्यशसस्तिरस्करी कुशस्थली पुण्ययशस्करी भुवः। पश्यन्ति नित्यं यदनुग्रहेषितस्मितावलोकं स्वपतिं स्म यत्प्रजाः॥ २७ ॥

கிருபையையும், அத்புத கர்மமுள்ளவராக இருத்தலையும் ப்ரகாசப் படுத்திக் காட்டுகிறார். (25) (*)யாதுகாரணத்தினல் புருஷோத்தமனும், ஸ்ரீயஃபதியுமான இவர் தனது அவதாரத்தினல் யதுகுலத்தைப் பூஜிக்கின்றாரோ (பெருமைப் படுத்துகின்றாரோ,) அக்காரணம்பற்றி அது வெகுசிலாக்கியமானதாகவாகும், யாதுகாரணத்தினல் மதுரையைப் பாதநியாஸத்தினல் பெருமைப் படுத்துகிறாரோ அக்காரணம்பற்றி அதுவே வெகுசிலாக்கியமானதாகவாகும். அது வெகு ஆஸ்சரியமேயாகும். (26)

[*]எந்தத் துவாரகையிலிருக்கின்ற ப்ரஜைகள் †அனுக்கிரஹ ஸங்கல்பத்தினல் ப்ரேரணஞ் செய்யப்பட்ட புன்சிரிப்பை முன்னிட்டுண்டான பார்வையையுடையவரும், தங்களது பதியுமான ஸ்ரீகிருஷ்ணனே யாதுகாரணத்தினல் எப்பொழுதும் பார்க்கின்றனரோ அக்காரணத்தினல் குசஸ்தலி(துவாரகை)யானது "ஸ்வர்க்கந்தான் மேலானது" என்பதாய் ஏற்பட்ட தேவலோகத்தின் கீர்த்தியை அவமதிப்பதாகவும், ‡பூமிக்குப் புண்ணியமான கீர்த்தியைத் தருவதாகவும் இருக்கிறது. இது வெகு ஆஸ்சரியமானதேயாகும். (27) ஹே ஸகி! இந்தக் கிருஷ்ணனுடைய எந்த அதாமிருதத்தில் சித்

(*) இதுமுதல் ஐந்துசுலோகங்களினல் கிருஷ்ணவதார ஸௌபாக்கியத்தை வர்ணிக்கின்றனர்.

[*]இந்தச் சுலோகத்தினல் துவாரகையைக் கொண்டாடுகின்றனர்.

† अनुग्रहेषितस्मितावलोकम् என ஸமஸ்த பாடங்கொண்டு உரை எழுதப்பட்டிருக்கிறது.

‡ தேவலோகத்திலுள்ளவர்களும் பகவத்லீலையைப் பார்க்கவேண்டி துவாரகைக்கு வருவதாலும் துவாரகையானது பூமண்டலத்திலிருப்பதாலும் தேவலோகத்தைவிட பூமண்டலம் மேலானது என்பதுகருத்து.

नूनं व्रतस्नानहुतादिनेश्वरः समर्चितो ह्यस्य गृहीतपाणिभिः। पिबन्ति याः सख्यधरामृतं मुहुर्व्रजस्त्रियः संमुमुहुर्यदाशयाः॥ २८ ॥ या वीर्यशुल्केन हृताः स्वयंवरे प्रमथ्य चैद्यप्रमुखान्हि शुष्मिणः। प्रद्युम्नसा-

---

தத்தைச்செலுத்தி கோகுலத்திலுள்ள கோபிகைகள் அடிக்கடி நன்கு மோஹத்தை யடைகின்றனரோ அந்த அதராம்ருதத்தை எவர்கள் பானஞ் செய்கின்றனரோ அந்தக் கிருஷ்ணபத்னிகளினுல் ஜன்மாந்தரத்தில் வ்ரதம், ஸ்னானம், ஹோமம் முதலியவற்றுல் ஈச்வரனை இவரே நன்கு அர்ச்சிக்கப்பட்டிருக்கவேண்டும். இதுநிச்சயம்.(28) ப்ரத்யும்னனைப் புத்திரனாகக் கொண்ட ருக்மிணியையும், ஸாம்பனைப் புத்திரனாகக் கொண்ட ஜாம்பவதியையும், அம்பன் என்பவனைப் புத்திரனாகக்கொண்ட நாக்னஜிதியையும் ஆதியாகக்கொண்ட ஸத்யபாமை முதலிய எந்த ஸ்திரீகள், பலிஷ்டர்களான சிசுபாலன் முதலியோரை ஸ்வயம்வரத்தில் ஜயித்து வீரியமாகிற சுல்கத்தினுல் (கன்னிகைக்காக கொடுக்கவேண்டிய பொருளினுல்) கொண்டுவரப் பட்டனரோ, நரகாஸுரனுடைய வதகாலத்தில் ஆயிரக்கணக்கான (பதினாறுயிரத்து நூறுபேர்களான) எந்த ஸ்திரீகள் கொண்டுவரப் பட்டனரோ, புண்டரீகாக்ஷனும் பதியுமான ஸ்ரீகிருஷ்ணன் பாரிஜாதம் முதலிய ப்ரியமான வஸ்துக்களைக் கொண்டுவந்து கொடுத்தல் மூலம் மனத்தில் ஆனந்தத்தை உண்டுபண்ணிக்கொண்டு ஏவர்களின் (பதினாறுயிரத்து நூற்றெட்டு ஸ்திரீகளின்) வீட்டிலிருந்து ஒருபொழுதும்கூட விலகாதவராகவே இருக்கின்றாரோ, இந்த ஸ்திரீகள், ஸ்வாதந்திரியமற்றதும், சுத்தத்தன்மையற்றதுமான கேவலம் ஸ்திரீதன்மையையே *சோபனமாகச் செய்கின்றனர். இது வெகு

---

*"न स्त्री स्वातन्त्र्यमर्हति ஸ்திரீகள் ஸ்வாதந்திரியமற்றவர்" என்றும், "स्त्रियोऽनृतमिति स्थितिः ஸ்திரீகள் அசுத்தமானவர்" என்றும் சாஸ்திரம் சொல்லியிருந்தபோதிலும், இந்தப் பதினாறுயிரத்து நூற்றெட்டு ஸ்திரீகளுக்கும் ஆண்டவன் ஈடுபட்டு அவர்களின் வீட்டை விட்டு ஒருக்ஷணங் கூடப் பிரியாமலும், அவர்கள் வேண்டின பொருளைக் கொண்டுவந்து கொடுத்து அவர்களை ஆனந்தப்படுத்திக்கொண்டு மிருப்பதிலிருந்து ஸ்திரீகள் ஸ்வாதந்திரியமற்றவர்களென்பதும், சுத்தியற்றவர்களென்பதும் பொதுப்படையாகச் சொல்லப்பட்டதேயொழிய அது நியமமில்லை என்பதை

म्बाम्बसुतादयोऽपरा याश्चाहृता भौमवधे सहस्रशः॥ २९ ॥ एताः परं स्त्रीत्वमपास्तपेशलं निरस्तशौचं बत साधु कुर्वते। यासां गृहात्पुष्कर-लोचनः पतिर्न जात्वपैत्याहृतिभिर्हृदि स्पृशन्॥३०॥ एवं विधा गदन्तीनां स गिरः पुरयोषिताम्। निरीक्षणेनाभिनन्दन्सस्मितेन ययौ हरिः॥ ३१ ॥ अजातशत्रुः पृतनां गोपीथाय मधुद्विषः। परेभ्यः शङ्कितः स्नेहात्प्रायुङ्क्त चतुरङ्गिणीम्॥ ३२ ॥ अथ दूरागतान्शौरिः कौरवान्विरहातुरान्। सन्नि-वर्त्य दृढं स्निग्धान्प्रायात्स्वनगरीं प्रियैः॥ ३३ ॥ कुरुजाङ्गलपाञ्चालान्शूर-

---

ஆஸ்சரியமானதன்றே? (29–30) அந்தக்கிருஷ்ணன் ஒருவருக் கொருவர் பேசிக்கொள்ளுகின்ற பட்டினத்து ஸ்திரீகளின் இது போன்ற விசித்திரங்களான வார்த்தைகளை மந்தஹாஸத்துடன் கூடின பார்வையினால் ஸந்தோஷத்துடன் ஏற்றுக்கொண்டு சென் றார். (31) அஜாதசத்துருவான தர்மபுத்திரர் சத்துருக்களிடமிரு ந்து சங்கையை யடைந்தவராய்க் கொண்டு ஸ்னேஹத்தை முன் னிட்டு (*) மதுவைக்கொன்ற பகவானுடைய ரக்ஷணத்துக்கு வேண்டி சதுரங்கசேனையை அனுப்பினர். (32) பிறகு சௌரி யானவர் தன்னிடத்தில் திருடமான ஸ்னேஹமுள்ளவர்களும், ஆனதுபற்றியே விட்டுப்பிரிதலினால் கஷ்டத்தையடைந்தவர்களும், ஆனதுபற்றியே வெகுதூரம் பின்தொடர்ந்து வந்தவர்களுமான பாண்டவர்களை வெகுஸ்ரமத்துடன் திருப்பியனுப்பிவிட்டு ப்ரியர் களான உத்தவாதிகளுடன் கூட தனது நகரத்தைக் குறித்துப் பயணப்பட்டார். (33) ஹே பார்க்கவ! விபுவான பகவான் [*]குருதேசம், ஜாங்கலதேசம், பாஞ்சாலதேசம், சூரஸேனதேசம், யாமுனதேசம் இ வைகளையும், ப்ரம்ஹாவர்த்தத்தையும், குருக்ஷேத்

யும், ஸ்வாதந்திரியமும், சுத்தியும் உள்ள உத்தமஸ்திரீகள் உலகில் உண்டு என்பதையும் உலகத்தாருக்கு நிதர்சனமாகக் காண்பித்து விட்டனர் என் பது கருத்து.

(*) மது என்பவனைக் கொன்ற ஆண்டவனுக்கு சத்துருவினிட மிருந்து பயமுண்டாவதற்கு இடமுண்டோ? என்பது கருத்து.

[*] இங்கு சொல்லப்படும் தேசங்களின் கிரமத்தில் தாத்பரியமில்லை எனக்கொள்ளவும்.

सेनान्सयामुनान्। ब्रह्मावर्तं कुरुक्षेत्रं मत्स्यान्सारस्वतानथ ॥ ३४ ॥ मरु-धन्वमतिक्रम्य सौवीराभीरयोः परान्। आनर्तान्भार्गवोपागाच्छ्रान्तवाहो मनाग्विभुः॥ ३५ ॥ तत्र तत्र ह तत्रत्यैर्हरिः प्रत्युद्यतार्हणः। सायं भेजे दिशं पश्चाद्रविष्ठो गां गतस्तदा ॥ ३६ ॥

इति श्रीमद्भागवते महापुराणे प्रथमस्कन्धे दशमोऽध्यायः ॥ १० ॥

अथ एकादशोऽध्यायः ॥

सूत उवाच—आनर्तान्स उपव्रज्य स्वृद्धाञ्जनपदान्स्वकान्। दध्मौ दरवरं तेषां विषादं शमयन्निव ॥ १ ॥ स उच्चकाशे धवलोदरो दरोऽप्यु-

---

திரம், மத்ஸ்யதேசம், ஸாரஸ்வததேசம் இவற்றையும், மரு (ஜல மற்ற) தேசத்தையும், கொஞ்சம் ஜலமுள்ள தேசத்தையும் தாண்டி கொஞ்சம் களைத்த குதிரைகளை யுடையவராய் ஸௌவீரம் ஆபீரம் இவற்றுக்கு அடுத்துள்ள ஆனர்த்ததேசத்தையடைந்தார். (34–35) ஹரியானவர் ஆங்காங்கு அங்குள்ளவர்களால் ஸமர்ப்பிக்கப்பட்ட காணிக்கையையுடையவராய் மாலையில் மேற்கு திக்கையடைந்தார். அப்பொழுது ஆகாசத்திலுள்ள ஸூரியனும் ஜலத்தில் ப்ரவேசித்தான் (அஸ்தமனத்தையடைந்தான்.) அல்லதுः — ஸாயங்காலம் ப்ராப்தமானபொழுது தேரிலிருந்து இரங்கி பூமியிலிருந்துகொண்டு அங்கிருந்து ஜலக்கரையை யடைந்தவராய் ஸாயம் ஸந்தியையை உபாஸித்தார் என்றும் பொருள் கொள்ளலாம். (36) (எ–று)

இவ்விதம் ஸ்ரீமத்பாகவத மஹாபுராண ப்ரதமஸ்கந்தத்தில் பத்தாவது அத்தியாயம் முற்றிற்று.

பதினென்றுவது அத்தியாயம்.

(அ–கை) आनर्तैः स्तूयमानस्य पुरीं निर्विश्य बन्धुभिः।
एकादशे रतिः सम्यग्यादवेन्द्रस्य वर्ण्यते ॥ १ ॥

उत्सवैरुच्चलत्पौरमुदश्चत्ध्वजतोरणम्।
उल्लसद्रत्नदीपालि स्वपुरं प्रभुराविशत् ॥ २ ॥

रुक्मस्याधरशोणशोणिमा । दाध्मायमानः करकञ्जसंपुटे यथाब्जषण्डे कलहंस उत्स्वनः॥ २ ॥ तमुपश्रुत्य निनदं जगद्भयभयावहम् । प्रत्युद्ययुः प्रजाः सर्वा भर्तृदर्शनलालसाः॥ ३ ॥ तत्रोपनीतबलयो रवेर्दीपमिवादृताः। आत्मारामं पूर्णकामं निजलाभेन नित्यदा ॥ ४ ॥ प्रीत्युत्फुल्लमुखाः प्रोचुर्हर्ष-

---

(கு-ரை) ஆனர்த்த தேசத்தவர்களால் ஸ்துதிக்கப்படுகின்ற வரும் யாதவர்களுக்குத் தலைவரும்மான ஸ்ரீகிருஷ்ணனுக்கு, பட்டினத்தில் நுழைந்து பந்துக்களுடன் கூடசேர்ந்துண்டான மஹத்தான ஸந்தோஷமானது இந்தப் பதினைன்றுவது அத்தியாயத்தில் வர்ணிக்கப்படுகிறது. (1) ஸந்தோஷங்களினால் இங்குமங்கும் ஓடுகின்றபட்டினத்து ஜனங்களையுடையதும், உயரத்தூக்கிக் கட்டப்பட்ட கொடிமரம் தோரணம் இவற்றையுடையதும், ப்ரகாசிக்கின்ற ரத்தினமயமான தீபக்கூட்டத்தை யுடையதுமான தனது பட்டினத்தில் ப்ரபுவான ஸ்ரீகிருஷ்ணன் ப்ரவேசித்தார். (2) (எ-று)

ஸ்ரீதர் சொல்லுற்றூர்—அவர் நன்கு ஸமிருத்தியையடைந்ததும் சொந்தமுமான ஆனர்த்த தேசத்தையடைந்து அத்தேசத்தவர்களின் துக்கத்தைச் சாந்தமாக்குபவர் போன்று சிறந்த சங்கத்தை ஊதினார். (1) ஸம்புடம் போன்ற கராரவிந்தத்திலிருக்கின்றதும், ஊதப்படுவதும், வெளுத்த உள்ப்ரதேசத்தையுடையதும் பகவானுடைய உதட்டின் சிவப்பினால் சிவந்ததுமான அந்தச் சங்கமானது, தாமரைப் பூவிலிருந்துகொண்டு உறத்து சப்திக்கின்ற கலஹம்ஸம் என்ற பறவைபோல விளங்கிற்று. (2) ஜகத்துக்குப் பயத்தைத் தருகின்ற அஸுரர்களுக்கும் பயத்தைத் தருகின்ற அந்தச் சங்கநாதத்தைக் கேட்டு ஜனங்கள் யாவரும் பர்த்தாவான ஸ்ரீகிருஷ்ணனுடைய தர்சனத்தில் ஆவல்கொண்டவர்களாய் எதிர்கொண்டு ஒடிவந்தனர். (3) ஸூரியனுக்குத் தீபத்தைக் கொடுப்பதுபோல அந்தக் கிருஷ்ணனிடத்தில் ஸமர்ப்பிக்கப்பட்ட காணிக்கைகளையுடையவர்களும், ப்ரீதியினால் மலர்ந்த முகத்தையுடையவர்களுமான அவர்கள், எல்லோருக்கும் ஸுஹிருத்தும், ரக்ஷகனும், எப்பொழுதும் பரமானந்தமான நிஜஸ்வரூபலாபத்திலேயே பூர்ணமான காமமுள்ளவரும், ஆனதுபற்றியே ஆத்மாராமனுமான அவரைப்பார்த்து ப்ரேமை நிரம்பினவர்களாய் குழந்தைகள் பிதா

गद्गदया गिरा। पितरं सर्वसुहृदमवितारमिवार्भकाः॥ ५ ॥ नताः स्म ते नाथ सदाङ्घ्रिपङ्कजं विरिञ्चवैरिञ्चसुरेन्द्रवन्दितम्। परायणं क्षेममिहेच्छतां परं न यत्र कालः प्रभवेत्परप्रभुः॥ ६ ॥ भवाय नस्त्वं भव विश्वभावन त्वमेव माताथ सुहृत्पतिः पिता। त्वं सद्गुरुर्नः परमं च दैवतं यस्यानुवृत्त्या कृतिनो बभूविम ॥ ७ ॥ अहो सनाथा भवता स्म यद्वयं त्रैविष्टपानामपि दूरदर्शनम्। प्रेमस्मितस्निग्धनिरीक्षणाननं पश्येम रूपं तव सर्वसौभगम् ॥ ८ ॥ यर्ह्यम्बुजाक्षापससार भो भवान्कुरून्मधून्वाऽथ सुहृद्दिदृक्षया। तत्राब्दकोटिप्रतिमः क्षणो भवेद्रविं विनाक्ष्णोरिव नस्तवाच्युत ॥ ९ ॥

வினிடம்போல ஸந்தோஷத்தினுல் தழதழத்தவார்த்தையுடன் சொல் லத் தொடங்கினர். (4–5) ஹே நாத! ப்ரம்ஹதேவனுலும், அவ ரது புத்திரர்களான ஸனகாதிகளினுலும், தேவேந்திரனுலும் நமஸ் கரிக்கப்பட்டதும், இந்த ஸம்ஸாரத்தில் மேலான க்ஷேமத்தை விரும் புகின்றவர்களுக்குச் சிறந்த ரக்ஷகமும், ப்ரம்ஹாதிகள் விஷயத்தில் ப்ரபுவான காலத்துக்குக்கூட வசப்படாததுமான உம்முடைய சர ணாரவிந்தத்தை எப்பொழுதும் நாங்கள் நமஸ்கரித்தவர்களாக இருக் கின்றோம். (6) ஹே விஸ்வபாவன! நீரே மாதாவும், ஸுஹிருத் தும், ஆனதுபற்றிப் பதியும், பிதாவுமாக ஆகிறீர். நீரேஸத்குரு வும், எவருடைய பக்தியினுல் நாங்கள் கிருதார்த்தர்களாக ஆனே மோ அத்தகைய பரதைவதமாகவும் ஆகிறீர். ஆகவே எங்களுக்கு க்ஷேமத்தைத் தருபவராக நீர் ஆவீராக. (7) ஸ்வர்க்கலோகவாஸி களுக்குக்கூட வெகுதொலையிலுள்ள (எட்டாத) தரிசனத்தையுடை யதும், ப்ரேமை நிரம்பின புன்சிரிப்புடன் கூடின அழகிய பார்வை வாய்ந்த முகத்தையுடையதும், எல்லா அங்கங்களிலும் அழகுபொ ருந்தினதுமான உம்முடைய ரூபத்தை யாதுகாரணத்தினுல் நாங் கள் பார்க்கின்றோமோ அக்காரணத்தினுல் உம்மால் நாதன் (ரக்ஷ கன்) உள்ளவர்களாகவே ஆகிவிட்டோம். இதுவெகு ஆச்சரிய மாகும். (8) ஹே அம்புஜாக்ஷ! அச்யுத! நீர் எப்பொழுது எங் களை அலக்ஷியஞ் செய்துவிட்டு ஸுஹிருத்துக்களைப் பார்க்கவேண்டு மென்ற விருப்பத்துடன் ஹஸ்தினுபுரத்துக்கோ, அல்லது மதுரைக் கோ போனீரோ அப்பொழுது சூரியன் மறைந்ததனுல் பொட்டை

इति चोदीरिता वाचः प्रजानां भक्तवत्सलः। शृण्वानोऽनुग्रहं दृष्ट्या वितन्वन्प्राविशत्पुरीम् ॥ १० ॥ मधुभोजदशार्हार्हकुकुरान्धकवृष्णिभिः। आत्मतुल्यबलैर्गुप्तां नागैर्भोगवतीमिव ॥ ११ ॥ सर्वर्तुसर्वविभवपुण्यवृक्ष-लताश्रमैः। उद्यानोपवनारामैर्वृतपद्माकरश्रियम् ॥ १२ ॥ गोपुरद्वारमार्गेषु कृतकौतुकतोरणाम्। चित्रध्वजपताकाग्रैरन्तः प्रतिहतातपाम् ॥१३॥ संमार्जितमहामार्गरथ्यापणकचत्वराम्। सिक्तां गन्धजलैरुप्तां फलपुष्पाक्षताङ्कुरैः॥ १४ ॥ द्वारि द्वारि गृहाणां च दध्यक्षतफलेक्षुभिः। अलंकृतां

யான கண்களுக்கு ஒரு க்ஷணமும் கூட கோடி வர்ஷங்களுக்கு ஒப்பாகவாவதுபோல உம்மைச் சார்ந்தவர்களான எங்களுக்கும் ஒரு க்ஷணமும் கோடி வர்ஷங்களுக்கொப்பாகவே ஆயிற்று என்றனர்.

இவ்விதம் சொல்லப்பட்ட ப்ரஜைகளின் வார்த்தைகளைப்பக்த வத்ஸலனான பகவான் கேட்டுக்கொண்டும், பார்வையினால் ப்ரஜைகளுக்கு அனுக்கிரஹத்தைச் செய்துகொண்டும், நாகங்களினால் நாகலோகமான போகவதி என்ற பட்டினம்போலத் தனக்குத் துல்யமான பலமுள்ளவர்களான மது, போஜன், தசார்ஹன், அர்ஹன், குகுரன், அந்தகன், விருஷ்ணி இவர்களினால் ரக்ஷிக்கப்பட்டதும், எல்லா ருதுக்களிலும் எல்லாவிதமான புஷ்பாதிஸம்பத்தையுடைய புண்யவிருக்ஷங்களையும், கொடி மண்டபங்களையுமுடைய உத்யான (பழத்தை முக்கியமாகவுடைய தோட்ட) ங்களினாலும், உபவன (புஷ்பத்தை முக்கியமாகவுடைய தோட்ட) ங்களினாலும், ஆராம (விளையாட்டுக்காக அமைக்கப்பட்ட) இடங்களினாலும் சூழப்பட்ட தடாகங்களினால் லேற்பட்ட சோபையையுடையதும், கோபுரத்திலும் (ஆசாரவாயிலிலும்) துவாரத்தி (வீட்டின் வாயில்) லும், வழியிலும் அமைக்கப்பட்ட மங்களார்த்தங்களான தோரணங்களையுடையதும், சித்திரங்களான (கருடாதி பிம்பங்களமைக்கப்பட்ட) கொடிமரங்களின் நுனிகளினால் போக்கப்பட்ட உள்ளிலுள்ள வெப்பத்தையுடையதும், பெருக்கப்பட்ட ராஜமார்க்கங்கள், வேறு வழிகள், கடைவீதிகள், வீட்டிலுள்ள அங்கணங்கள் இவற்றையுடையதும், மணலுள்ள ஜலங்களினால்(பன்னீரினால்)நனைக்கப்பட்டதும், பழம், புஷ்பம், அக்ஷதம் முளை இவற்றால் பரப்பப்பட்டதும், வீடு

पूर्णकुम्भैर्बलिभिर्धूपदीपकैः॥१५॥ निशम्य प्रेष्ठमायान्तं वसुदेवो महामनाः। अक्रूरश्चोग्रसेनश्च रामश्चाद्भुतविक्रमः॥ १६ ॥ प्रद्युम्नश्चारुदेष्णश्च साम्बो जाम्बवतीसुतः। प्रहर्षवेगोच्छ्वसितशयनासनभोजनाः॥ १७ ॥ वारणेन्द्रं पुरस्कृत्य ब्राह्मणैः ससुमङ्गलैः। शङ्खतूर्यनिनादेन ब्रह्मघोषेण चाहताः। प्रत्युज्जग्मू रथैर्हृष्टाः प्रणयागतसाध्वसाः॥ १८ ॥ वारमुख्याश्च शतशो यानैस्तद्दर्शनोत्सुकाः। लसत्कुण्डलनिर्भातकपोलवदनश्रियः॥ १९ ॥ नट-

---

களின் ஒவ்வொரு வாயிற்படியிலும் தயிர், அக்ஷதங்கள், பழங்கள், கரும்புக்கழிகள் இவற்றாலும், பூர்ண கும்பங்களினாலும், கோலமிடுதல் களினாலும், தூபம் தீபம் இவற்றினாலும் அலங்கரிக்கப்பட்டதுமான பட்டினத்தில் ப்ரவேசித்தார். (10–15) ப்ரேஷ்டனை= அந்தமாத்மாவான, ஸ்ரீகிருஷ்ணன் வருவதைக் கேட்டு உண்டான ஸந்தோஷத்தின் வேகத்தினால் பரித்யாகம் செய்யப்பட்ட படுக்கை, ஆஸனம், போஜனம் இவற்றையுடையவர்களும், ப்ரீதியினால் உண்டான பரபரப்பையுடையவர்களும், ஹர்ஷத்தை = ஸந்தோஷத்தை, அடைந்தவர்களுமான மஹாமனஸ்வியான வஸுதேவர், அக்ரூரர், உக்ரஸேனன், அத்புதமான பராக்கிரமமுடைய பலராமன், ப்ரத்யும்னன், சாருதேஷ்ணன், ஜாம்பவதியின் புத்திரனான ஸாம்பன் இவர்களும், மின்னுகின்ற குண்டலங்களினால் ப்ரகாசிக்கின்ற கன்னங்கள் மூலம் முகத்தில் வீசுகின்ற சோபையையுடையவர்களும், பகவானுடைய தரிசனத்தில் ஆவல்கொண்டு தேரிலேறினவர்களுமான நூற்றுக்கணக்கான தாஸிகளும், (மங்களநிமித்தம்) பட்டத்து யானையை முன்விட்டுக்கொண்டு சோபனமான புஷ்பாதிகளைக் கைகளில் தாங்கின ப்ராம்ஹணர்களுடனும், சங்கம் தூர்யம் இவற்றின் சப்தத்துடனும், வேதகோஷத்துடனும் ஸந்துஷ்டர்களாகவும், ஆதரவுள்ளவர்களாகவும் தேரிலேறிக்கொண்டு அவரை எதிர்கொண்டு சென்றனர். (16–19)

*நடர் (*)நர்த்தகர், [*]கந்தர்வர் இவர்களும், †ஸூதர், ‡மாகதர், *வந்திகள் இவர்களும், உத்தமஶ்லோகனுடைய பக்தவாத்ஸல்

---

* நவரஸாபினயசதுரர். (*) தாளம் முதலியவற்றை யனுஸரித்து நர்த்தனம் செய்பவர். [*] கானஞ்செய்பவர். † புராணம் சொல்லுபவர். ‡ வம்சத்தைச் சொல்லுபவர். * அழுக்கற்ற ப்ரக்ஞையும் ப்ரகிருதத்துக்கேற்றபடி பேசும் திறமையுமுடையவர்.

नर्तकगन्धर्वाः सूतमागधबन्दिनः। गायन्ति चोत्तमश्लोकचरितान्यद्भुतानि च ॥ २० ॥ भगवांस्तत्र बन्धूनां पौराणामनुवर्तिनाम्। यथाविध्युपसङ्गम्य सर्वेषां मानमादधे ॥ २१ ॥ प्रह्वाभिवादनाश्लेषकरस्पर्शस्मितेक्षणैः। आश्वास्य चाश्वपाकेभ्यो वरैश्चाभिमतैर्विभुः॥ २२ ॥ स्वयं च गुरुभिर्विप्रैः सदारैः स्थविरैरपि। आशीर्भिर्युज्यमानोऽन्यैर्बन्दिभिश्चाविशत्पुरम् ॥२३॥

राजमार्गं गते कृष्णे द्वारकायाः कुलस्त्रियः। हर्म्याण्यारुरुहुर्विप्र तदीक्षणमहोत्सवाः॥ २४ ॥ नित्यं निरीक्षमाणानां यदपि द्वारकौकसाम्। न वितृप्यन्ति हि दृशः श्रियो धामाङ्गमच्युतम्॥ २५ ॥ श्रियो निवासो

யம் முதலியதை வெளிக்காட்டும் அத்புதங்களான சரித்திரங்களைக் கானஞ்செய்தனர். (20) பகவானும் விபுவவுமான கிருஷ்ணன் அப் பொழுது, எவர்களுடன்கூட எவ்விதம் செய்வது உசிதமானதோ அவர்களுடன் அவ்விதம் சேர்க்கையையடைந்து, பந்துக்கள், பட்டினத்துஜனங்கள், பரிவாரஜனங்கள் ஆகிய யாவர்க்கும் சிலர்க்குத்தலையினல் வணங்குதல், சிலர்க்கு வாயினல் நமஸ்காரஞ்சொல்லல், சிலரைத் தழுவிக்கொள்ளுதல், சிலரின் கையைப்பிடித்தல், சிலரைப் பார்த்து மந்தஹாஸஞ்செய்தல், சிலரைக் கண்ணல் பார்த்தல் இவற்றலும், ஆஸ்வாஸனஞ்செய்தலாலும், (அபயமளித்தலாலும்) சண்டாளன் முடியவுள்ள ஜனங்களுக்கு அவரவர் விரும்பின வரன்களைக் கொடுத்தலாலும் மரியாதை செய்தார். (21–22) தானும் (ஸ்ரீகிருஷ்ணனும்) குருக்களினலும், பத்நிகளுடன் கூடின ப்ராம்ஹணர்களினலும், வயது முதிர்ந்தவர்களினலும், மற்றும் நமஸ்கரிக்கத்தக்க பேரியோர்களினலும் ஆசீர்வதிக்கப்படுகின்றவராய்க்கொண்டு பட்டினத்தில் ப்ரவேசித்தார். (23) ஹே விப்ர! ஸ்ரீகிருஷ்ணன் ராஜமார்க்கத்தையடைந்தபொழுது துவாரகையிலுள்ள குலஸ்திரீகள் அவரைப் பார்ப்பதில் ஆவல் கொண்டவர்களாய் மாடிகளில் ஏறினர். (24) எவருடைய மார்பு லக்ஷ்மிக்கு இருப்பிடமோ, எவருடைய முகம் எல்லாப்ராணிகளுடையவும் கண்களுக்கு ஸௌந்தர்யாமிருத பானத்துக்குறியப் பாத்திரமோ, எவருடைய கைகள் லோகபாலர்களுக்கு நிவாஸமோ, எவருடைய சரணாரவிந்தம் ஸாரபூதனான ஸ்ரீகிருஷ்ணனைக் கானஞ்செய்கின்ற பக்தர்

यस्योरः पानपात्रं मुखं दृशाम्। बाहवो लोकपालानां सारङ्गाणां पदाम्बुजम्॥ २६॥ सितातपत्रव्यजनैरुपस्कृतः प्रसूनवर्षैरभिवर्षितः पथि। पिशङ्गवासा वनमालया बभौ घनो यथार्कोडुपचापवैद्युतैः॥२७॥ प्रविष्टस्तु गृहं पित्रोः परिष्वक्तः स्वमातृभिः। ववन्दे शिरसा सप्त देवकीप्रमुखा मुदा॥ २८॥ ताः पुत्रमङ्कमारोप्य स्नेहस्नुतपयोधराः। हर्षविह्वलितात्मानः

களுக்கு ஆஸ்ரயமோ சோபைக்கு ஸ்தானமான அங்கத்தையுடைய அந்த அச்யுதனை எப்பொழுதும் பார்க்கின்றவர்களாக இருந்தபோதிலுங்கூட துவாராகவாஸிகளின் நேத்திரங்கள் யாதுகாரணத்தினால் போதுமென்ற எண்ணத்தை யடையவில்லையோ அக்காரணத்தினாலேயே மாடிமீதேறினர்.(25–26) வெண்ணிறமான குடையினாலும் சாமரங்களினாலும் அலங்கரிக்கப்பட்டவரும், வழியில் புஷ்பவர்ஷங்களினால் வர்ஷிக்கப்பட்டவரும், பொன்னிறமான வஸ்திரங்களையுடையவரும், வனமாலையுடன் கூடினவருமாக இருக்கின்ற ஸ்ரீகிருஷ்ணன் (*)ஸூரியன், நக்ஷத்திரங்களுடன் கூடின சந்திரன், இந்திர தனுஸ், மின்னலின் ஒளி இவற்றுடன் கூடின மேகம்போல விளங்குகிறார்.

தாய் தந்தையர்களின் வீட்டில் பிரவேசித்தவரான ஸ்ரீகிருஷ்ணனை தனது தாய்மார்களினால் தழுவிக்கொள்ளப் பட்டவராய் தேவகீ முதலிய [*]ஏழுபேர்களை சந்தோஷத்துடன் தலையினால்

(*) இங்கு ஸ்ரீகிருஷ்ணன் மேகத்துக்கும், ஸூரியன் குடைக்கும், நக்ஷத்திரங்கள் புஷ்பவர்ஷத்துக்கும், சந்திரன் வெண்சாமரங்களுக்கும், இந்திரதனுஸ் வனமாலைக்கும், மின்னலின் ஒளி பீதாம்பரத்துக்கும் உபமையாக்கப்பட்டிருக்கிறது. அதாவது:—இது அபூதோபமையாகவாகும். நீருண்ட மேகத்துக்கு மேல் ஸூரியபிம்பமும், இருபக்கங்களிலும் இரண்டு சந்திரனும், நாலாபக்கங்களிலும் நக்ஷத்திரங்களும், நடுவில் சேர்ந்திருக்கின்ற இந்திர தனுஸ்ஸும், நிலத்த மின்னலின் ஒளியும், ஸம்பவிக்குமானால் அந்த மேகமானது எவ்விதமிருக்குமோ அவ்விதம் ஸ்ரீகிருஷ்ணன் விளங்கினர் என்றும்.

[*] மாதாவின் தங்கைகளானதுபற்றி அவர்களிடம் அதிகம் ஆதரவு காட்டினர் என்பதைக் குறிப்பிடவேண்டி ஏழுபேர்களை என்று சொல்லப்பட்டது. ஆயினும் வஸுதேவரின் பாரியைகள் பதினெட்டு பேர்களையும் வணங்கினர் என்று கொள்ளவேண்டும்.

सिषिचुर्नेत्रजैर्जलैः॥२९॥ अथाविशत्स्वभवनं सर्वकाममनुत्तमम्। प्रासादा यत्र पत्नीनां सहस्राणि च षोडश ॥ ३० ॥ पत्न्यः पतिं प्रोष्य गृहानुपागतं विलोक्य सञ्जातमनोमहोत्सवाः। उत्तस्थुरारात्सहसाऽऽसनाशयात्साकं व्रतैर्व्रीडितलोचनाननाः॥ ३१ ॥ तमात्मजैर्दृष्टिभिरन्तरात्मना दुरन्तभावाः

நமஸ்கரித்தார். (28) அவர்கள் புத்திரனை மடியில் தூக்கிவைத்துக் கொண்டு ஸ்னேகத்தினால் பெருகின ஸ்தனங்களையுடையவர்களாகவும், ஸந்தோஷத்தினால் கலங்கின மனதுள்ளவர்களாகவும் ஆகி நேத்திரங்களினின்றுமுண்டான ஜலங்களினால் அவரை நனைத்தனர்.(29) மாதாபிதாக்களை நமஸ்கரித்த பிறகு எந்த வீட்டில் பத்னிகளின் பதினாயிரத்து நூற்றெட்டு மாடிகளிருக்கின்றனவோ, விரும்பின எல்லாப்பொருள்களையுமுடையதும், எல்லாவற்றிலும் சிறந்ததுமான அந்தத்தனதுவீட்டில் ப்ரவேசித்தார்.(30) பத்னிகள், பதியான கிருஷ்ணன் தேசாந்தரத்தில் வசித்துவிட்டு வீட்டுக்குவந்ததை வெகுதூரத்தில் கண்டு மனத்திலுண்டான மஹோத்ஸவத்தையுடையவர்களாகவும், கடைக்கண்களினால் பார்ப்பதாலும், தலைகுனிந்து நிற்பதாலுமறியப்படுகின்ற வெட்கத்துடன் கூடின கண், முகம் இவற்றையுடையவர்களாகவுமாகி ஆஸனத்திலிருந்து தேஹத்தினாலும், †மனத்திலிருந்து ஆத்மாவினாலும், தாங்களனுஷ்டிக்கும் ‡விரதங்களுடன்கூட சீக்கிரமாக எழுந்தனர். (31) ஹே ப்ருகுவர்ய! இந்த ஆச்சரியத்தைக் கேளும். ஆழ்ந்த கருத்துள்ளவர்களான அந்த ஸ்திரீகள் தங்களை நோக்கிவருகின்ற பர்த்தாவைக் கண்ணால் காண்பதற்கு முந்தி புத்தியினால் நினைத்து மனத்துக்குள் ஆலிங்கனஞ்

---

† ஸ்ரீகிருஷ்ணனுடன் கூடத்தங்களுடைய ஆத்மாவைக் கலப்பதில் மனத்தினாலும்கூட மறைவை ஸஹிக்காதவர்களாகவாயினர் என்பது கருத்து. ‡ क्रीडां शरीरसंस्कारं समाजोत्सवदर्शनम्। हास्यं परगृहे वासं त्यजेत्प्रोषितभर्तृका ॥ பர்த்தா வெளிதேசம் சென்றிருக்கும்பொழுது விளையாடுதலையும், சரீரத்துக்கு அலங்காரம் செய்துகொள்ளுதலையும், கூட்டத்தையோ, உத்ஸவத்தையோ பார்ப்பதையும், ஹாஸ்யத்தையும், பிறர்வீட்டில் வஸித்தலையும், தனியாக வேறிடம் செல்லுதலையும் ஸ்திரீகள் விலக்கவேண்டும்" என யாக்ஞ்யவல்கியர் சொல்லியிருக்கிறார். அவர்களனுஷ்டித்த அந்த விரதத்தை முடித்துக்கொண்டனர் என்பது கருத்து.

परिरेभिरे पतिम्। निरुद्धमप्यास्रवदम्बु नेत्रयोर्विलज्जतीनां भृगुवर्य वैक्लवात् ॥३२॥ यद्यप्यसौ पार्श्वगतो रहोगतस्तथापि तस्याङ्घ्रियुगं नवं नवम्। पदे पदे का विरमेत तत्पदाच्चलापि यच्छ्रीर्न जहाति कर्हिचित् ॥३३॥ एवं नृपाणां क्षितिभारजन्मनामक्षौहिणीभिः परिवृत्ततेजसाम्। विधाय वैरं श्वसनो यथानलं मिथो वधेनोपरतो निरायुधः॥३४॥ स एष नरलोकेऽस्मिन्नवतीर्णः

செய்துகொண்டனர். பிறகு கண்களினுல் ஆலிங்கனஞ் செய்து கொண்டனர். அருகில் வந்ததும் தமது புத்திரர்களின் இருகைகளை யும் தாங்கள் பிடித்துக்கொண்டு அவருடைய கழுத்தைக் கட்டிக் கொள்ளச் செய்கின்றவர்கள்போலத் தாங்களும் ஆலிங்கனஞ்செய்து கொண்டனர். அப்பொழுது மிக்க லஜ்ஜையை அடைந்தவர்க ளான அவர்களின் நேத்திரங்களில் கண்ணீரானது தடுக்கப்பட் டிருந்தபோதிலுங்கூடத் தங்களை மறந்திருப்பதன்மூலம் கொஞ் சம் வெளிவரவாரம்பித்தது. (32) ஒவ்வொரு க்ஷணத்திலும் புதிது புதிதான தோற்றத்தையுடைய எந்த இரண்டு சரணங்களை சஞ்சல ஸ்வபாவமுள்ளவளாயினுங்கூட லக்ஷ்மியானவள் ஒருபொழுதும் விடாதிருக்கின்றனளோ, இந்தப்பகவான் ஸமீபத்தில்தானிருக்கட்டும் ஏகாந்தத்தில்தானிருக்கட்டும் எவ்விதமிருந்தபோதிலும் அவனது அந்தக் சரணத்திலிருந்து எவள்தான் விராமத்தை (போதுமென்ற எண்ணத்தை) அடைவாள். ஒருபொழுதும் அடையமாட்டாள்.

*காற்றுனது மூங்கில்களை ஒன்றுக்கொன்று உறையச்செய்து நெருப்பையுண்டாக்கி மூங்கில்களை முழுதும் நாசமாக்கி எவ்விதம் சாந்தமாகவாகிறதோ, அவ்விதமே ஸ்ரீகிருஷ்ணன் பூமிக்குச் சுமை யாகப் பிறவியையடைந்தவர்களும், அக்ஷௌஹிணிகளைக் கொண்டு எங்கும் பரவின தேஜஸ்ஸை (ப்ரபாவத்தை) யுடையவர்களுமான அரசர்களுக்குள் கலஹத்தையுண்டாக்கித் தான் ஆயுதமெடுக்காத வராகவே இருந்துகொண்டு ஒருவரையொருவர் வதஞ் செய்யும்படி செய்து ஓய்ந்துவிட்டார். (34) ஸ்வஸங்கல்பத்தினுல் மனிதவுல கில் அவதரித்தவரான அந்த இந்தப் பகவான் ப்ரகிருதிவசப்பட்ட

---

* இதுமுதல் இரண்டு சுலோகங்களினுல் ஸ்ரீகிருஷ்ணனுடைய சரித்திரத்தைச் சுருக்கமாகச் சொல்லுகிறார்.

स्वमायया। रेमे स्त्रीरत्नकूटस्थो भगवान्प्राकृतो यथा ॥३५॥ उद्दामभावपिशुनामलवल्गुहासव्रीडावलोकनिहतो मदनोऽपि यासाम्। संमुह्य चापमजहात्प्रमदोत्तमास्ता यस्येन्द्रियं विमथितुं कुहकैर्न शेकुः॥ ३६ ॥ तमयं मन्यते लोको ह्यसङ्गमपि सङ्गिनम्। आत्मौपम्येन मनुजं व्यापृण्वानं यतोऽबुधः ॥३७॥ एतदीशनमीशस्य प्रकृतिस्थोऽपि तद्गुणैः। न युज्यतेऽसदात्मस्थैर्यथा बुद्धिस्तदाश्रया ॥ ३८ ॥ तं मेनिरेऽबला मूढाः स्त्रैणं चानुव्रतं रहः। अप्रमाणविदोभर्तुरीश्वरं मतयो यथा ॥ ३९ ॥

इति श्रीमद्भागवते महापुराणे प्रथमस्कन्धे श्रीकृष्णद्वारकाप्रवेशो नामैकादशोऽध्यायः ॥ ११ ॥

ஜீவன்போல உத்தமஸ்திரீகளின் கூட்ட நடுவிலிருந்துகொண்டு ரமித்துவந்தார். (35) (*)ஸர்வலோகத்தையும் ஜயிக்கும் திறமை வாய்ந்த மன்மதனுங்கூட, எந்த ஸ்திரீகளின் ஆழ்ந்த அபிப்பிராயத்தை வெளிக்காட்டுகின்றதும் நிர்த்துஷ்டமுமான அழகிய சிரிப்பு, வெட்கத்துடன் கூடின பார்வை இவற்றினால் தாக்கப்படுவானுயின் மோஹங்கொண்டு தனது கையிலுள்ளவில்லை ஜ்ஜையினால் நழுவ விடுவானே, அந்தச்சிறந்த ஸ்திரீகள் எவருடைய மனதைக் கபடங்களானலீலைகளினால் கலக்கத் திறமையற்றவர்களாகவாயினரோ, அந்த ஸ்ரீகிருஷ்ணனே, உண்மையையறிந்து கொள்ளாமை காரணமாக இந்த ஜனமானது, தன்னையே திருஷ்டாந்தமாகக்கொண்டு எவ்வித ஸங்கமுமற்றவராயினும் ஸங்கமுள்ளவரென்றும், உலக வியாபாரத்தில் ப்ரவிருத்தித்திருப்பதுபற்றி மனிதனுகவும் அன்றே நினைக்கிறது. (36–37) அஸத்தான தேஹத்திலிருக்கின்ற குணங்களுடன் அதையாஸ்ரயித்த புத்தியை உபாதியாகவுடைய ஜீவன் எவ்விதம்ஸம்பந்தத்தையடைகின்றானே, இவ்விதம் ஆண்டவன் ப்ரகிருதியிலிருந்த போதிலுங்கூட அந்த ப்ரகிருதியின் குணங்களுடன் ஸம்பந்தத்தையடைவதில்லை என்பது யாதுண்டோ இதுவேயன்றே ஈச்வர

(*) இவ்விதம் ஸ்திரீஸங்காதிகளினால் ஸம்ஸாரத்தோற்றமேற்படுவதால் பகவானே அவதரித்தார் என எவ்விதம் சொல்லமுடியுமெனின்? இதற்கு இரண்டு சுலோகங்களினால் பதில் சொல்லுகிறார்.

अथ द्वादशोऽध्यायः ॥

शौनक उवाच—अश्वत्थाम्नोपसृष्टेन ब्रह्मशीर्ष्णोरुतेजसा। उत्तराया हतो गर्भ ईशेनाजीवितः पुनः ॥ १ ॥ तस्य जन्म महाबुद्धेः कर्माणि च महात्मनः। निधनं च यथैवासीत्स प्रेत्य गतवान्यथा ॥ २ ॥ तदिदं श्रोतु-

---

னுடைய ஐஸ்வரியமாக (சக்தியாக) வாகும். (38) அவருடைய ப்ர மாணத்தை (மஹிமையை) அறியாதவர்களும், ஆனதுபற்றியே மூடர்களுமான ஸ்திரீகள் தங்களுடைய புத்திகல்பனைகள் எந்த எந்தவிதங்களாக வுண்டாகின்றனவோ அததற்கேற்ப அந்த ஈஸ்வ ரனே ஸ்திரீகளிடமீடுபட்ட வனென்றும், ரஹஸ்யத்தில் தங்களை யனுஸரித்தவனென்றும் எண்ணினர். (39) (எ–று)

இவ்விதம் ஸ்ரீமத்பாகவத மஹாபுராண ப்ரதமஸ்கந்தத்தில்
ஸ்ரீகிருஷ்ணத்துவாரகாப்ரவேசவர்ணனமென்ற
பதினென்றுவது அத்தியாயம் முற்றிற்று-

பன்னிரண்டாவது அத்தியாயம்.

(அ–கை) पुरोक्तं यत्प्रसङ्गाय द्रौणिदण्डादि विस्तरात्।
द्वादशे तु तदेवाथ परीक्षिज्जन्म वर्ण्यते ॥ १ ॥

(க–ரை) எந்தப் பரீக்ஷித்தின் ஜன்மத்தைச் சொல்லவேண்டி அஸ்வத்தாமாவின் சிலைக்ஷமுதலிய காரியமானது விரிவாக முன்னர் சொல்லப்பட்டதோ அதேபரீக்ஷித்தின் ஜன்மமானது இந்தப் பன் னிரண்டாவது அத்தியாயத்தில் வர்ணிக்கப்படுகிறது. (1) (எ–று)

சௌனகர் சொல்லலுற்றார்—அஸ்வத்தாமாவினல் விடப்பட் டதும், அதிகமான தேஜஸ்ஸுள்ளதுமான ப்ரம்ஹசிரஸ் என்ற அஸ்திரத்தினல் கொல்லப்பட்ட உத்தரையின் கர்ப்பமானது திரும் பவும் ஈசனன ஸ்ரீகிருஷ்ணனல் பிழைப்பிக்கப் பட்டது. (1) மஹா புத்தியுள்ளவரும், மஹாத்மாவுமான அந்தப் பரீக்ஷித்தினு டையஜன்மத்தையும், கர்மங்களையும், எவ்விதம் மரணமேற்பட்டதோ, தேஹத்தைவிட்ட பிறகு எவ்விதம் போனரோ அந்தவிதத்தையும், அவருக்கு சுகர் ஞானோபதேசம் செய்வதற்குரிய காரணத்தையும்,

मिच्छामि गदितुं यदि मन्यसे। ब्रूहि नः श्रद्दधानानां यस्य ज्ञानमदाच्छुकः ॥ ३ ॥ सूत उवाच—अपीपलद्धर्मराजः पितृवद्रञ्जयन्प्रजाः। निःस्पृहः सर्वकामेभ्यः कृष्णपादाब्जसेवया ॥ ४ ॥ संपदः क्रतवो विप्रा महिषी भ्रातरो मही। जम्बूद्वीपाधिपत्यं च यशश्च त्रिदिवं गतम् ॥ ५ ॥ किं ते कामाः सुरस्पार्हा मुकुन्दमनसो द्विजाः। अधिजह्युर्मुदं राज्ञः क्षुधितस्य यथेतरे ॥ ६ ॥ मातुर्गर्भगतो वीरः स तदा भृगुनन्दन। ददर्श पुरुषं कञ्चिद्दह्यमानोऽस्त्रतेजसा ॥ ७ ॥ अङ्गुष्ठमात्रममलं स्फुरत्पुरटमौलिनम्। अपीच्यदर्शनं श्यामं तडिद्वाससमच्युतम् ॥ ८ ॥ श्रीमद्दीर्घचतुर्बाहुं तप्तकाञ्चन-

---

கேட்கவிரும்புகிறேன். சொல்லுவதற்கு விரும்புவீரேல் அவ்விஷயத்தில் ப்ரத்தையுள்ளவர்களான எங்களுக்குச் சொல்லுவீராக என்றார். (2–3)

ஸூதர் சொல்லலுற்றார்—தர்ம புத்திரர் ஸ்ரீகிருஷ்ண சரண ஸேவையினல் எல்லாப் பொருள்களினின்றும் விலகின ஆசையையுடையவராய் ப்ரஜைகளை திருப்திப்படும்படி செய்துகொண்டு பிதாவானவன்போல பரிபாலித்துவந்தார். (4) ஸம்பத்துக்களும், யாகங்களும், அவற்றல் கிடைக்கும் உலகங்களும், பத்நியும், ப்ராதாக்களும், பூமியும், ஜம்பூத்வீபாதிபத்யமும், ஸ்வர்க்கத்தை யடைந்த கீர்த்தியும், தேவர்களாலும் ஆசைப்படத்தகுந்த அந்தந்தக் காமங்களும், அன்னத்திலாவல் கொண்டவனுக்கு மாலை சந்தனம் முதலியனபோல முகுந்தனிடத்திலேயே மனதைச்செலுத்தின அரசனுக்கு தர்மபுத்திரருக்கு ஸந்தோஷத்தைக் கொடுக்குமோ? (கொடுக்கமாட்டா.) (5–6) ஹே ப்ருகுநந்தன! மாதாவின் கர்ப்பத்திலிருக்கின்ற அந்தவீரன் அப்பொழுது அஸ்திரதேஜஸ்ஸினல் பொசுக்கப்படுகின்றவனுய் ஒரு புருஷனைக்கண்டான். (7) *கட்டைவிரல் அளவுள்ளவரும், நிர்மலரும், ப்ரகாசிக்கின்ற பொன்மயமான கிரீடத்தையுடையவரும், அதிகம் சுந்தரமான ரூபத்தை யுடையவரும், நீலமேகஸ்யாமளரும், மின்னல் போன்றவஸ்திரங்களை யுடையவரும், அச்யுதனும் (எவ்வித விகாரமுமற்றவரும்) சோபைநிறைந்தனவும்

---

* கட்டைவிரல் அளவுள்ள ஹிருதயத்தில் காணப்படுவதுபற்றி ஈசுவரன் கட்டைவிரல் அளவுள்ளவராக ஆகிறார்.

कुण्डलम्। क्षतजाक्षं गदापाणिमात्मनः सर्वतोदिशम्। परिभ्रमन्तमुल्काभां भ्रामयन्तं गदां मुहुः ॥ ९ ॥ अस्त्रतेजः स्वगदया नीहारमिव गोपतिः। विधमन्तं सन्निकर्षे पर्यैक्षत क इत्यसौ ॥ १० ॥ विधूय तदमेयात्मा भगवान्धर्मगुब्विभुः। मिषतो दशमास्यस्य तत्रैवान्तर्दधे हरिः॥११॥ ततः सर्वगुणोदर्के सानुकूलग्रहोदये। जज्ञे वंशधरः पाण्डोर्भूयः पाण्डुरिवौजसा ॥१२॥ तस्य प्रीतमना राजा विप्रैर्धौम्यकृपादिभिः। जातकं कारयामास वाच-

---

நீண்டனவுமான நான்கு கைகளையுடையவரும், புடம்போட்ட தங்கமயங்களான குண்டல (கர்ணபரண) ங்களை யுடையவரும், கோபத்தினால் ரக்தம்போலச் சிவந்த நேத்திரங்களையுடையவரும், (*)கதையைக்கையிலுடையவரும், கொள்ளிக்கட்டைக் கொப்பான காந்தியையுடைய கதையைத் தனக்குநாலாபக்கத்திலும் சுத்திக்கொண்டு இங்குமங்கும் சுற்றுகின்றவரும், ஸிங்கியன் பனியைப்போல ப்ரம்ஹாஸ்திரத்தின் தேஜஸை நாசம் செய்கின்றவருமான பகவானை அருகில் கண்டான். பார்த்தபிறகு "இவர்யார்" என ஊஹித்தான். (8–10) அந்த அஸ்திர தேஜஸ்ஸையழித்து எவ்விதமழித்தாரென ஊஹிக்கவியலாத ஸ்வரூபமுள்ளவரும், தர்மஸம்ரக்ஷணம் செய்கின்ற அரசர்களுக்கும் விபுவும் (பாலகரும்) பகவானுமான ஹரியானவர் பத்துமாதம் பூர்ணமான குழந்தையானது பார்த்துக்கொண்டிருக்கும்பொழுதே எங்கு தோன்றினாரோ அங்கேயே மறைந்தார். (11) பகவான் மறைந்த பிறகு எல்லாக்குணங்களையும (நன்மைகளையும்) பின்வரும் பலனுகவுடையதும், அனுகூலங்களான வேறுகிரஹங்களுடன் கூடின சுபக்கிரஹங்களின் உதயத்தை யுடையதுமான லக்கினத்தில், திரும்பவும் சக்தியுடன் வந்த பாண்டு மஹாராஜன் போலிருக்கின்றவனும், பாண்டுவின் வம்சத்தைத்தரிப்பவனுமான புத்திரன் ஜனித்தான். (12) தர்மபுத்திரர்

(*) இங்கு भ्रामयन्तं गदां मुहुः=கதையை அடிக்கடி சுற்றினரெனச் சொல்லப்பட்டிருக்கிறது. தசமஸ்கந்தம் 1-வது அத்தியாயம் 6-வது ச்லோகத்தில் "द्रौण्यस्त्रविप्लुष्टमिदं मदङ्गं सन्तानबीजं कुरुपाण्डवानाम्। जुगोप कुक्षिं गत आत्तचक्रः" என்றதால் சக்கிராயுதத்தைத் தாங்கினர் எனச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆயினும் அதற்கும் சக்கிராகாரமான கதையைத்தாங்கினர் என ஸம்ப்ரதாயமறிந்த பெரியார் பொருள் கூறுகின்றனர்.

यित्वा च मङ्गलम् ॥ १३ ॥ हिरण्यं गां महीं ग्रामान्हस्त्यश्वान्नृपतिर्वरान् । प्रादात्स्वन्नं च विप्रेभ्यः प्रजातीर्थे स तीर्थवित् ॥ १४ ॥ तमूचुर्ब्राह्मणास्तुष्टा राजानं प्रश्रयान्वितम् । एष ह्यस्मिन्प्रजातन्तौ पुरूणां पौरवर्षभ ॥ १५ ॥ दैवेनाप्रतिघातेन शुक्ले संस्थामुपेयुषि । रातो वोऽनुग्रहार्थाय विष्णुना प्रभविष्णुना ॥ १६ ॥ तस्मान्नाम्ना विष्णुरात इति लोके बृहच्छ्रवाः । भविष्यति न सन्देहो महाभागवतो महान् ॥ १७ ॥ युधिष्ठिर उवाच— अप्येष वंश्यान्राजर्षीन्पुण्यश्लोकान्महात्मनः । अनुवर्तिता स्विद्यशसा साधुवादेन सत्तमाः ॥ १८ ॥

சந்தோஷத்தையடைந்த மனதுள்ளவராய் தௌம்யர் கிருபர் முதலிய ப்ராம்ஹணர்களைக் கொண்டு புண்யாஹவாசனம் என்ற மங்களத்தைச் சொல்லச்செய்து அந்தக்குழந்தைக்கு ஜாதகர்மம் என்ற ஸம்ஸ்காரத்தையும் செய்துவைத்தார். (13) பரிசுத்தியைத் தெரிவிக்கும் காலத்தை யறிந்தவரும் அரசனுமான அந்தத் தர்மபுத்திரர் புத்திரோத்பத்திரூபமான புண்ணியகாலத்தில் ப்ராம்ஹணர்களுக்கு ஸ்வர்ணத்தையும், பசுவையும், பூமியையும், கிராமங்களையும், ஸ்ரேஷ்டங்களான யானை குதிரை இவைகளையும், சோபனமான [*] அன்னத்தையும் கொடுத்தார். (14)

"ஹே பௌரவர்ஷப! புருவம்சத்து அரசர்களின் சுத்தமான இந்த ப்ரஜாதந்துவானவன் (குழந்தையானவன்) தடுக்க முடியாத தைவத்தினால் நாசத்தையடைந்தபொழுது உங்களுடைய அனுக்கிரஹத்துக்குவேண்டிப்பலதறப்பட்டரூபமெடுக்கும் திறமையுடையவரான ஸ்ரீவிஷ்ணுவினால் எக்காரணம்பற்றி காக்கப்பட்டாரே அக்காணம்பற்றி **விஷ்ணுராதன்** என்ற பெயருள்ளவனாகவும், பெரிய கீர்த்தியையுடையவனாகவும், மஹாபாகவதனாகவும் மஹானாகவும் ஆகப்போகிறான் இதில் ஸந்தேஹமில்லை" என வினயத்தினால் வணங்கின அந்த அரசனைப்பார்த்து ப்ராம்ஹணர்கள் ஸந்தோஷத்தை யடைந்தவர்தளாய்ச் சொல்லினர். (15–17) தர்மபுத்திரர் சொல்லலுற்றார்—ஹே ஸத்தமர்காள்! இந்தக் குழந்தை எங்களு

---

[*] स्वन्न=என்பதற்கு அரிசியை என வேறுபொருளும் ஸ்ரீதரீயத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

ब्राह्मणा ऊचुः—पार्थ प्रजाविता साक्षादिक्ष्वाकुरिव मानवः। ब्रह्मण्यः सत्यसन्धश्च रामो दाशरथिर्यथा ॥१९॥ एष दाता शरण्यश्च यथा ह्यौशीनरः शिबिः। यशो वितनिता स्वानां दौष्यन्तिरिव यज्वनाम् ॥२०॥ धन्विनामग्रणीरेष तुल्यश्चार्जुनयोर्द्वयोः। हुताश इव दुर्धर्षः समुद्र इव दुस्तरः॥२१॥ मृगेन्द्र इव विक्रान्तो निषेव्यो हिमवानिव। तितिक्षुर्वसुधेवासौ सहिष्णुः पितराविव ॥ २२ ॥ पितामहसमः साम्ये प्रसादे गिरिशोपमः। आश्रयः सर्वभूतानां यथा देवो रमाश्रयः ॥ २३ ॥ सर्वसद्गुणमाहात्म्य एष कृष्णम-

---

டைய வம்சத்திலுதித்தவர்களும், புண்ணிய கீர்த்தியுள்ளவர்களும், மஹாத்மாக்களுமான ராஜருஷிகளே, நல்லவன் என்ற பெயரை அடைவதாலும் யசஸ்ஸினாலும் அனுஸரித்து நடப்பானு? என்றூர். (18) ப்ராம்ஹணர்கள் சொல்லலுற்றனர்—ஹே பார்த்த! இந்தக்குழந்தை மனுவின் புத்திரனான ஸாக்ஷாத் இக்ஷ்வாகு போலவும், தசரதகுமாரனான ராமன்போலவும் ப்ராம்ஹணபக்தியுள்ளவனாகவும், ஸத்யஸந்தனாகவும் இருந்துகொண்டு ப்ரஜைகளை ரக்ஷிப்பான். (19) இந்தக்குழந்தை உசீனரதேசாதிபதியான †சிபிசக்கிரவர்த்திபோல கொடையாளியாகவும், சரணாகதஸம்ரக்ஷணனாகவும், க்ஞாதிகளுக்கும், யாகஞ்செய்பவர்களுக்கும் துஷ்யந்தகுமாரனான பரதன்போல யசஸ்ஸை விஸ்தாரப்படுத்துபவனாகவும் இருப்பான். (20) இவன் வில்லாளிகளுக்குள் சிறந்தவனாகவும், பார்த்தன், கார்த்தவீர்யார்ஜுனன் இருவர்க்கும் ஒப்பானவனாகவும், அக்னிபோலக் கிட்ட அண்டமுடியாதவனாகவும், ஸமுத்திரம் போலத் தாண்டமுடியாதவனாகவும், சிங்கம்போலப் பலசாலியாகவும், ஹிமவான்போல யாவராலும் ஸேவிக்கத்தக்கவனாகவும், பூமிபோலப் பொருமையுள்ளவனாகவும், தாய் தந்தையர்கள்போல ப்ரீதியினால் ஸஹிப்புத்தன்மையுள்ளவனாகவும் இவனிருப்பான். (21–22) ஸமமாக நடக்கும் விஷயத்தில் ப்ரம்ஹதேவனுக் கொப்பானவனாகவும், அனுக்கிரஹம் செய்யும் விஷயத்தில் மஹாதேவனுக்கு ஒப்பாகவும், லக்ஷ்மீகாந்தனான தேவன்போல ஸர்வபூதங்களுக்கும் ஆஸ்ரயபூதனாக

---

† சிபிசக்கிரவர்த்தியானவர் தனது மாம்ஸத்தை பருந்துக்குக் கொடுத்து தன்னைச் சரண்புகுந்த புறுவைக்காப்பாற்றினர் என்பது வேறு புராணங்களில் பிரஸித்மாக இருக்கிறது.

मनुव्रतः । रन्तिदेव इवोदारो ययातिरिव धार्मिकः ॥ २४ ॥ धृत्या बलिसमः कृष्णे प्रह्लाद इव सद्ग्रहः । आहर्तैषोऽश्वमेधानां वृद्धानां पर्युपासकः ॥ २५ ॥ राजर्षीणां जनयिता शास्ता चोत्पथगामिनाम् । निग्रहीता कलेरेष भुवो धर्मस्य कारणात् ॥ २६ ॥ तक्षकादात्मनो मृत्युं द्विजपुत्रोपसर्जितात् । प्रपत्स्यत उपश्रुत्य मुक्तसङ्गः पदं हरेः । २७ ॥ जिज्ञासितात्मयाथात्म्यो मुनेर्व्यासस्तुतादसौ । हित्वेदं नृप गङ्गायां यास्यत्यद्धाऽकुतोभ-

---

வும் இருப்பான். (23) எல்லா நல்லகுணங்களினாலும் மஹிமைபொருந்தினவனாக இருக்கும் விஷயத்தில் இவன் ஸ்ரீகிருஷ்ண துல்யனாகவும், ‡ரந்திதேவன்போல ஔதார்யத்துடன் கூடினவனாகவும், யயாதியானவன் போல தார்மிகனாகவும், இவனிருப்பான். (24) தைரியத்தினால் பலிசக்கிரவர்த்திக்கு ஒப்பாகவும், ப்ரஹ்லாதன் போல ஸ்ரீகிருஷ்ணனிடத்தில் நல்ல பக்தியுள்ளவனாகவும், அஸ்வமேதங்களைச் செய்பவனாகவும், பெரியோர்களை நன்கு உபாஸிப்பவனாகவும், இவனிருப்பான். (25) ஜனமேஜயாதிகளான ராஜருஷிகளை உண்டுபண்ணுபவனாகவும், கெட்டவழி செல்லுபவர்களைச் சிக்ஷிப்பவனாகவும், பூமிக்கும், தர்மத்துக்கும வேண்டிக் கலியை நிக்ரஹம் செய்பவனாகவும் இவனிருப்பான். (26) சமீகர் என்ற ப்ராம்ஹணரின் புத்திரனான சிருங்கி என்பவரால் ப்ரேரணம் செய்யப்பட்ட தக்ஷகன்மூலமாகத் தனக்கு நேர்ந்த மரணத்தைக் கேள்விப்பட்டு ஸங்கத்தை யொழித்து ஹரியின் சரணத்தைப் பஜிக்கப் போகிறான். (27) ஹே நிருப! இவன் வ்யாஸ குமாரரும் முனியுமான சுகாசாரியரிடமிருந்து விசாரித்தறிந்து கொண்ட ஆத்மாவின் உண்மையையுடையவனாய் இந்தச் சரீரத்தைக் கங்கையின் கரையில் விட்டுவிட்டு எங்கிருந்தும் பயமில்லாத பதத்தை நிஸ்சயமாக அடையப்போகிறான்.(28) என ஜாதகமூலம் பின்வரும் பலனைச் சொல்லு

---

‡ ரந்திதேவன் என்ற ப்ராம்ஹணன் 48 நாள் ஆஹாரமில்லாமல் கஷ்டப்பட்டு வருங்கால் தைவச்செயலாய் கிடைத்த ஆஹாரத்தை அதிதிகளுக்குக் கொடுத்தான். பிறகு ஜலத்தையாவது குடிப்போம் என வாரம்பம் செய்யும்பொழுது அச்சமயம் தாஹம் மேலிட்டு வந்து ஒருவன் யாசிக்க அதையும் அவனுக்குக் கொடுத்தான் என 9-வது ஸ்கந்தத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

यम् ॥२८॥ इति राज्ञ उपादिश्य विप्रा जातककोविदाः। लब्धोपचितयः सर्वे प्रतिजग्मुः स्वकान्गृहान् ॥२९॥ स एष लोकविख्यातः परीक्षिदिति यत्प्रभुः। गर्भदृष्टमनुध्यायन्परीक्षेत नरेष्विह ॥ ३० ॥ स राजपुत्रो ववृध आशु शुक्ल इवोडुपः। आपूर्यमाणः पितृभिः काष्ठाभिरिव सोऽन्वहम् ॥ ३१ ॥ यक्ष्यमाणोऽश्वमेधेन ज्ञातिद्रोहजिहासया। राजाऽलब्धधनो दध्यावन्यत्र करदण्डयोः॥ ३२ ॥ तदभिप्रेतमालक्ष्य भ्रातरोऽच्युतचोदिताः। धनं प्रहीणमाजह्रुरुदीच्यां दिशि भूरिशः॥ ३३ ॥ तेन संभृतसंभारो धर्मपुत्रो

வதில் ஸமர்த்தர்களான ப்ராம்ஹணர் தர்மபுத்திரருக்கு உபதேசித்து விட்டு அவரிடமிருந்து வெகுமானங்களையும் பெற்றுக் கொண்டு யாவரும் தங்கள்வீட்டுக்குத் திரும்பினர். (29) யாதகாரணத்தினுல் ப்ரபுவாக (ஸமர்த்தனாக) இருந்துகொண்டு தாயின் கர்ப்பத்தில் பார்க்கப்பட்ட புருஷனை இங்கு காணப்படுகின்ற மனிதர்களுக்குள் "கர்ப்பத்தில் காணப்பட்ட புருஷன் இவனுக இருக்கலாமா? அல்லது இருக்கமுடியாதா?" என விசாரித்தறிவானேனு அக்காரணம்பற்றி அந்த இவன் உலகில் பரீக்ஷித் என பிரஸித்தனுகவானுன். (30) அந்த ராஜகுமாரன் சுக்கிலபக்ஷத்தில் பதினைந்து கலைகளினுல் முறையே நிறைவுபெருகின்ற பிரஸித்தனை சந்திரன் போலப் பிதாக்களான தர்மபுத்திரர் முதலியோரால் வேண்டிய பொருள்களினுலும், அறுபத்து நான்கு கலைகளினுலும் ப்ரதிதினமும் நிறைவுபெறுகின்றவனுய் சீக்கிரமாக வளர்ந்துவந்தான். (31) ராஜாவான தர்மபுத்திரர் ஞாதித்ரோஹத்தால் நேர்ந்தபாபத்தைப் போக்கவெண்ணங்கொண்டு அஸ்வமேதத்தைச் செய்யப்போகின்றவராய்க் கப்பம், அபராதம் விதித்தல் இவ்விரண்டையும் தவிர்த்து வேறு வழியினுல் கிடைக்காத தனமுள்ளவராய்க் கொண்டு ஆலோசிக்கத் தொடங்கினர். (32) ப்ராதாக்கள் அவரது அபிப்பிராயத்தை யறிந்து அச்யுதனான ஸ்ரீகிருஷ்ணனு லேவப்பட்டவர்களாய் வடக்குத்திக்கில் மருத்தன் என்ற அரசனுடைய யாகத்தின் முடிவில் எரியப்பட்ட ஏராளமான ஸுவர்ணபாத்திரம் முதலியதனத்தைக் கொண்டுவந்தனர். (33) க்ஞாதி த்ரோஹத்தினின்றும் பயந்தவரும், தர்மபுத்திரருமான யுதிஷ்டிரர் அந்தத் தனத்தினுல் யாகத்துக்குவேண்

युधिष्ठिरः। वाजिमेधैस्त्रिभिर्भीतो यज्ञैः समयजद्धरिम् ॥ ३४ ॥ आहूतो भगवान्राज्ञा याजयित्वा द्विजैर्नृपम्। उवास कतिचिन्मासान्सुहृदां प्रिय-काम्यया ॥ ३५ ॥ ततो राज्ञाभ्यनुज्ञातः कृष्णया सह बन्धुभिः। ययौ द्वारवतीं ब्रह्मन्सार्जुनो यदुभिर्वृतः ॥ ३६ ॥

इति श्रीमद्भागवते महापुराणे प्रथमस्कन्धे परीक्षिज्जन्माद्युत्कर्षो नाम द्वादशोऽध्यायः॥ १२ ॥

டிய ஸாமக்ரீகளே ஸம்பாதித்துக்கொண்டு மூன்று அஸ்வமேதயாகங் களினுல் ஹரியான ஸ்ரீகிருஷ்ணனே நன்கு ஆராதித்தார். (34) அரசனுல் அழைக்கப்பட்ட பகவானன ஸ்ரீகிருஷ்ணன் ப்ராம்ஹண ர்களேக் கொண்டு அரசனுக்கு யாகத்தைச் செய்துவைத்து ஸ்ரீ ஹிருத்துக்களுக்கு ப்ரியத்தைச் செய்யும் விருப்பத்துடன் சில மாதங்கள் அங்கு வஸித்தார். (35) ஹே ப்ரும்ஹன்! தர்மபுத் திரராலும், பந்துக்களுடன் கூடின திரௌபதியினுலும் விடை யளிக்கப்பட்டவராய் அர்ஜுனனுடன்கூட யாதவர்கள் புடைசூழ அங்கிருந்து துவாரகைக்குச் சென்ருர். (36) (எ–று)

இவ்விதம் ஸ்ரீமத்பாகவத மஹாபுராண ப்ரதமஸ்கந்தத்தில் பரீக்ஷித்ஜன்மாதி உத்கர்ஷவர்ணனமென்ற பன்னிரண்டாவது அத்தியாயம் மூற்றிற்று.

பதிமூன்ருவது அத்தியாயம்.

(அ–ரை) निर्गमो धृतराष्ट्रस्य विदुरोक्त्या त्रयोदशे।
उक्तः पौत्राभिषेकेण वक्तुं राज्ञो महापथम् ॥ १ ॥

(க–ரை) இந்தப்பதிமூன்ருவது அத்தியாயத்தில் பேரனுக்குப் பட்டாபிஷேகம் செய்துவைத்து அரசன் மஹாப்ரஸ்தானத்தை யடைந்தார் என்பதைச் சொல்லவேண்டி விதுரருடைய உபதேசத் தினுல் திருதராஷ்டிரர் வெளியிற் சென்றவிதமான து சொல்லப்பட் டிருக்கிறது. (1) (எ–று)

अथ त्रयोदशोऽध्यायः ॥

सूत उवाच—विदुरस्तीर्थयात्रायां मैत्रेयादात्मनो गतिम्। ज्ञात्वाऽगाद्धास्तिनपुरं तयावाप्तविवित्सितः॥ १ ॥ यावतः कृतवान्प्रश्नान्क्षत्ता कौषारवाग्रतः। जातैकभक्तिर्गोविन्दे तेभ्यश्चोपरराम ह ॥ २ ॥ तं बन्धुमागतं दृष्ट्वा धर्मपुत्रः सहानुजः। धृतराष्ट्रो युयुत्सुश्च सूतः शारद्वतः पृथा॥३॥ गान्धारी द्रौपदी ब्रह्मन्सुभद्रा चोत्तरा कृपी। अन्याश्च जामयः पाण्डोर्ज्ञातयः ससुताः स्त्रियः॥ ४ ॥ प्रत्युज्जग्मुः प्रहर्षेण प्राणं तन्व इवागतम्। अभिसङ्गम्य विधिवत्परिष्वङ्गाभिवादनैः ॥५॥ मुमुचुः प्रेमबाष्पौघं विरहौत्कण्ठ्यकातराः राजा तमर्हयाञ्चक्रे कृतासनपरिग्रहम् ॥ ६ ॥ तं भुक्तवन्तमासीनं विश्रान्तं सुखमासने। प्रश्रयावनतो राजा प्राह तेषां च शृण्व-

---

ஸூதர் சொல்லலுற்றார்—விதுரர் தீர்த்தயாத்திரை செய்யும் பொழுது மைத்திரேயரிடமிருந்து ஆத்மாவுக்குப்புகலிடம் விஷ்ணு என்பதை அறிந்துகொண்டு அந்த ஆத்மகதியான ஹரியினுல் அறிய விருப்பப்பட்டயாவையும் அடைந்தவராய் (இனி அடையவேண்டு வது ஒன்றுமில்லை என்ற நிச்சயமுள்ளவராய்) ஹஸ்திநாபட்டினம் வந்து சேர்ந்தார்.(1) க்ஷத்தாவான விதுரர் மைத்திரேயருக்கு முன் னிலையில் எத்தனையோ கேள்விகளைக்கேட்டு (அவற்றுள் சில ப்ரஸ் னங்களுக்கு விடை கிடைத்ததிலிருந்த) கோவிந்தனிடமேற்பட்ட பக்தியையுடையவராய் (அதாவது:—கிருதார்த்தராய்) மீதமுள்ள கேள்விகளிலிருந்து ஓய்ந்தார் (அதற்குப் பிறகு எந்தக்கேள்விகளுக் கும் பதிலை எதிர்பார்க்க வில்லை.) (2) ஹே ப்ரம்ஹன் சௌன கரே! பந்துவான அவர்வந்ததைக் கண்டு தம்பிகளுடன் கூடின தர்மபுத்திரரும், திருதராஷ்டிரரும், யுயுத்ஸுவும், ஸஞ்ஜயரும், கிருபரும், குந்தியும், காந்தாரியும், திரௌபதியும், சுபத்திரையும் உத்தரையும், துரோணரின் பாரியையான கிருபியும், மற்றுமுள்ள ஞாதிஸ்திரீகளும், பாண்டுவின் ஞாதிகளும், புத்திரர்களுடன்கூடின மற்றுமுள்ள ஸ்திரீகளும் திருப்பிவந்த ப்ராணனைச் சரீரங்கள் போலச் சந்தோஷத்துடன் எதிர்கொண்டு சென்று, முறைப்படி ஆலிங்கனம் அபிவாதனம் இவற்றால் மரியாதைசெய்து, பிரிவாற்ற மையினுல் பரவசப்பட்டவர்களாய் அன்புமயமான கண்ணீரை

ताम् ॥ ७ ॥ युधिष्ठिर उवाच—अपि स्मरथ नो युष्मत्पक्षच्छायासमेधि-
तान्। विपद्गणाद्विषाग्न्यादेर्मोचिता यत्समातृकाः॥८॥ कया वृत्त्या वर्तितं
वश्चरद्भिः क्षितिमण्डलम्। तीर्थानि क्षेत्रमुख्यानि सेवितानीह भूतले ॥९॥
भवद्विधा भागवतास्तीर्थीभूताः स्वयं विभो। तीर्थीकुर्वन्ति तीर्थानि
स्वान्तःस्थेन गदाभृता ॥ १० ॥ अपि नः सुहृदस्तात बान्धवाः कृष्णदेवताः।
दृष्टाः श्रुता वा यदवः स्वपुर्यां सुखमासते ॥ ११ ॥ इत्युक्तो धर्मराजेन

வடியவிட்டனர். அரசரான தர்மபுத்திரர் ஆஸனத்திலுட்கார்ந்த அந்த விதுரரைப் பூஜித்தார். (3–6) போஜனஞ்செய்து சுகமாக ஆஸனத்திலுட்கார்ந்து களைப்பாறின அவரைப்பார்த்து தர்மபுத்திரர் மிக்கவணக்கத்துடன் முற்கூறியவர்கள் கேட்டுக்கொண்டிருக்கும்பொழுது சொல்லத்தொடங்கினர். (7)

யுதிஷ்டிரர் சொல்லலுற்றார்— தங்களுடைய *பக்ஷபாத நிழலினுல் நன்குவளர்க்கப்பட்டவர்களான எங்களை நினைவில் வைத்துக் கொண்டிருக்கின்றீர்களா ?. நாங்கள் தாயுடன்கூட, துரியோதனனுல் கொடுக்கப்பட்டவிஷம், அரக்கு மாளிகையிலிட்ட நெருப்பு இவற்றை ஆதியாகக் கொண்ட ஆபத்துக் கூட்டத்திலிருந்து தாங்கள் காட்டின பக்ஷபாதத்தினுலன்றே விடுவிக்கப்பட்டோம். (8) பூமண்டலத்தில் ஸஞ்சரித்தவர்களான உங்களால் எந்தக் காரியத்தினுல் தேஹமானது ரக்ஷிக்கப்பட்டது. இந்தப் பூமண்டலத்திலுள்ள க்ஷேத்திரங்களை முக்கியங்களாகவுடைய எந்தத் தீர்த்தங்கள் ஸேவிக்கப்பட்டன. (9) (*)ஹே விபோ! தங்களது உள்ளத்திலிருக்கின்ற கதாதரனுன பகவானுல் ஸ்வயம் தீர்த்தர்களான (இயற்கையில் பரிசுத்தர்களான) தங்கள்போன்ற பாகவதர்கள் பாபிகளான ஜனங்களின் ஸம்பந்தத்தினுல் அசுத்தங்களான தீர்த்தங்களையன்றே பரிசுத்தப்படுத்துகின்றனர். (10) ஹே தாத! கிருஷ்ணனைத் தேவ

---

* பறவைகள் அதிகம் ஸ்னேஹத்தினுல் தங்கள் குழந்தைகளை இரக்கைகளின் நிழலினுல் எவ்விதம் காக்குமோ அவ்விதம் தங்களால் காக்கப்பட்டோம் என்பது கருத்து.

(*) தாங்கள் தீர்த்தாடனஞ்செய்தது தங்களுக்காகவன்று. பின்னே யோவெனில் தீர்த்தங்களைப் பரிசுத்தப்படுத்தவேண்டியே என இதனுல் சொல்லுகிறார்.

सर्वं तत्समवर्णयत्। यथानुभूतं क्रमशो विना यदुकुलक्षयम्॥ १२॥ नन्वप्रियं दुर्विषहं नृणां स्वयमुपस्थितम्। नावेदयेत्सकरुणो दुःखितान्द्रष्टुमक्षमः॥ १३॥ कश्चित्कालमथावात्सीत्सत्कृतो देववत्सुखम्। भ्रातुर्ज्येष्ठस्य श्रेयस्कृत्सर्वेषां प्रीतिमावहन्॥ १४॥ अबिभ्रदर्यमा दण्डं यथावदघकारिषु। यावद्बभार शूद्रत्वं शापाद्वर्षशतं यमः॥ १५॥ युधिष्ठिरो लब्धराज्यो दृष्ट्वा पौत्रं कुलंधरम्। भ्रातृभिर्लोकपालाभैर्मुमुदे परया

தையாகக் கொண்டவர்களும், நமது பந்துக்களும், சுஹிருத்துக்களுமான யாதவர்கள் தங்களது பட்டினத்தில் சுகமாக இருக்கின்றனரா? தங்களால் பார்க்கப்பட்டனரா? அல்லது கேட்கவாவது பட்டனரா? என்றூர்.(11) இவ்விதம் தர்மராஜனல் கேட்கப்பட்ட விதுரர் யாதவகுலத்தின் நாசத்தைத்தவிர்த்து தன்னல் எவ்விதமெல்லாம் அனுபவிக்கப்பட்டதோ அவ்விதமே அவையாவையும் முறையே வர்ணித்தார்.(12)[*]கருணையுடன் கூடினவனும், ஆனதுபற்றியே துக்கமடைந்தவர்களைக் கண்ணுற் காணப்பொறுதவனுமான மனிதன், மனிதர்களுக்கு எதிர்பாறுது உண்டானதும் ஆயினும் பொருக்கவியலாததுமான அப்ரியத்தைத் தெரிவிக்கத் துணியமாட்டானன்றே?.

பிறகு தேவன் போலப் பூஜிக்கப்பட்டவராகவும், ஜ்யேஷ்ட ப்ராதாவான திருதராஷ்டிரருக்குத் தத்துவத்தை யுபதேசித்துக் கொண்டும், யாவருக்கும் ப்ரீதியை யுண்டுபண்ணிக் கொண்டும் கொஞ்சகாலம் ஸுகமாக அங்குவஸித்துவந்தார்(14) மாண்டவ்ய ரென்ற மஹருஷியினுடைய †சாபத்தினுல் யமன், நூறுக்கணக்

---

[*] யாதவகுல நாசத்தைச்சொல்லாததற்குக் காரணத்தை இதனுல் சொல்லுகிறூர். †ஒருஸமயம் திருடர்களை விரட்டிச்செல்லும் ராஜ ஸேவகர்கள் தவஞ்செய்து கொண்டிருக்கும் மாண்டவ்ய மஹருஷியின் அருகில் வந்து அங்கு பதுங்கியிருந்த திருடர்களையும் அவர்களுடன்கூட மாண்டவ்யரையும் சேர்த்துக்கட்டி அரசனுடைய அருகில் கொண்டுவந்து நிறுத்தினர். உடனே அரசனது ஆக்ஞையினுல் யாவரையும் தூக்குமரத்திலேற்றினர். பிறகு அரசன் ருஷியை இன்னுரெனவறிந்துகொண்டு சூலத்தினின்றும் இரக்கித் தன்னை மன்னிக்கும்படி வேண்டினன். பிறகு முனி யமனுலகம் சென்று கோபத்துடன் "என்னையேன் சூலத்திலேற்றினாய்?" என்று கேட்டார். அதற்கு யமன் "நீர் குழந்தையாக

श्रिया ॥ १६ ॥ एवं गृहेषु सक्तानां प्रमत्तानां तदीहया। अत्यक्रामदविज्ञातः कालः परमदुस्तरः॥ १७ ॥

विदुरस्तदभिप्रेत्य धृतराष्ट्रमभाषत। राजन्निर्गम्यतां शीघ्रं पश्येदं भयमागतम् ॥ १८ ॥ प्रतिक्रिया न यस्येह कुतश्चित्कर्हिचित्प्रभो। स एव भगवान्कालः सर्वेषां नः समागतः॥ १९ ॥ येन चैवाभिपन्नोऽयं प्राणैः प्रियतमैरपि। जनः सद्यो वियुज्येत किमुतान्यैर्धनादिभिः॥ २० ॥ पितृभ्रातृसुहृत्पुत्रा हतास्ते विगतं वयः। आत्मा च जरया ग्रस्तः परगेहमुपा-

---

காண வருஷங்களைத் தன்னுட்கொண்ட் எத்துணை காலம் சூத்திரத்தன்மையை யடைந்திருந்தாரோ, அத்துணை காலம் பாபஞ் செய்த ஜனங்களுக்கு அர்யமா (ஸூரியன்) சிக்ஷையை விதித்து வந்தார். (15) ராஜ்யத்தை யடைந்த தர்மபுத்திரர் வம்சத்தை நிலை நிருத்தும் பௌத்திரனைக் கண்டு லோகபாலர்களுக்கொப்பான ப்ராதாக்களுடனும், மேலான ஐச்வரியத்துடனும் கூடினவராய் ஸந்தோஷத்தையடைந்தார்.(16) இம்முறையாகக் குடும்பங்களிலீடுபட்டு குடும்ப ஸம்பந்தமான வியாபாரத்திலுல் ஆத்ம ப்ரயோஜன விஷயத்தில் தவறினவர்களான பாண்டவர்களுக்கு மிக்கத் தாண்டுதற்கரிதான காலமானது அறியப்படாமலே கடந்துவிட்டது. (17)

விதுரர் அதையறிந்துகொண்டு திருதராஷ்டிரரைப் பார்த்துப் பின்வருமாறு சொல்லத் தொடங்கினர். ஹே ராஜன்! சீக்கிரம் வெளியேறும். இதோ வந்திருக்கின்ற பயத்தைப்பாரும். (18) ஹே ப்ரபோ! எதற்கு ஒன்றினுலும் ஒருபொழுதும் பதில் செய்யவியலாதோ பகவானுகிற அதேகாலமானது நம்மெல்லோருக்கும் நெருங்கிவிட்டது. (19) இந்தக் காலத்திலுல் விழுங்கப்பட்ட இந்த ஜனம் மிக்க ப்ரியங்களான ப்ராணங்களினுல் கூட விடுபடும் பொழுது மற்றுமுள்ள தனம் முதலியவற்றினுல் விடுபடுவதில்

இருக்குங்கால் தட்டாரப் பூச்சியைப் பிடித்து ஈர்க்கில் கோத்தீர் அதற்காகத்தான்" என்றான். அதைக்கேட்டு மாண்டவ்யர் "இளமையில் அறியாது செய்தபாபத்துக்காக இத்துணைகடுமையான சிக்ஷையை நீவிதித்தமையின் சூத்திர யோனியிற் பிறக்கக்கடவாய்" எனச் சபித்தார். அதனுல் யமன் சூத்திரயோனியில் விதுரராகப் பிறந்தார். என்ற வேறு புராணக்கதையை இங்குகண்டுகொள்க.

ससे ॥२१॥ अहो महीयसी जन्तोर्जीविताशा यया भवान्। भीमेनावर्जितं पिण्डमादत्ते गृहपालवत् ॥ २२ ॥ अग्निर्निसृष्टो दत्तश्च गरो दाराश्च दूषिताः। हृतं क्षेत्रं धनं येषां तद्दत्तैरसुभिः कियत् ॥ २३ ॥ तस्यापि तव देहोऽयं कृपणस्य जिजीविषोः। परैत्यनिच्छतो जीर्णो जरया वाससी इव ॥ २४ ॥ गतस्वार्थमिमं देहं विरक्तो मुक्तबन्धनः। अविज्ञातगतिर्जह्यात्स वै धीर उदाहृतः॥ २५ ॥ यः स्वकात्परतो वेह जातनिर्वेद आत्मवान्। हृदि कृत्वा हरिं गेहात्प्रव्रजेत्स नरोत्तमः॥ २६ ॥ अथोदीचीं दिशं यातु स्वैरज्ञातगतिर्भवान्। इतोर्वाक्प्रायशः कालः पुंसां गुणविकर्षणः॥

சொல்லவேண்டுவது என்ன இருக்கிறது. (20) பிதா, ப்ராதா, மித்திரன் புத்திரர்கள்யாவரும் போய்விட்டனர். உமக்கோ வயதும் ஆகிவிட்டது. தேஹமோ ஜரையினுல் (மூதுமையினுல்) விழுங்கப் பட்டுவிட்டது. வஹிப்பதோ பிறர்வீடு. (21) எந்தப் பீமஸேனனுல் உமது புத்திரர்கள் கொல்லப்பட்டனரோ அந்தப் பீமஸேனன் கொடுத்த பிண்டத்தை நாய்போல நீர் சாப்பிடுகின்றீர். ஆகவே ப்ராணிகளுக்கு ஜீவிதத்தில் ஆசையதிகம் என்பதில் ஸந்தேகமில்லை. இது வெகு ஆச்சரியம். (22) எவர்களுடைய அரக்குமாளிகையில் நெருப்பு மூட்டப்பட்டதோ, அன்னத்தில் விஷமும் கலக்கப்பட்ட தோ, பத்நியும் பலரறிய ஸபையில் மானபங்கம் செய்விக்கப்பட்டா ளோ, பூமியும் பணமும் கொள்ளையிடப்பட்டதோ, அவர்களால் கொடுக்கப்பட்ட ஆயுளினுல் யாதுபயன்?. (23) இவ்விதம் நீர் கிடைத்ததைவிட மனமில்லாதவருகவும், உயிர்வாழ விரும்பினவரு கவும் இருப்பினுங்கூட மூதுமையினுல் மூப்பையடைந்த இந்தத் தேஹமானது விரும்பாவிடினுங்கூட வஸ்திரங்கள்போலத் தேய்ந்தே விடப்போகிறது. ஆகவே தீரனாக ஆவீராக. (24) எவன் தனம், புத்திரன் முதலியவர்களிடத்தில் அபிமானத்தைவிட்டு விரக்தனாகி பிறரால்அறியப்படாத அரண்யகமனத்தையுடையவனுய் யசஸ், தர்மம் முதலிய சொந்தமான பயனைதுவுமற்ற இந்தத்தேஹத்தை எவ்விடத் திலேனும் விடுவானே அவனே தீரனெனச்சொல்லப்படுகிறான்.(25) எவன் ஸ்வயமாகவோ, பிறருபதேசத்தாலோ இந்தத் தேஹத்தில் வைராக்கியத்தை யடைந்தவனுயும், மனுஷ்யதர்மமுள்ளவனுயும்

एवं राजा विदुरेणानुजेन प्रज्ञाचक्षुर्बोधितो ह्याजमीढः। छित्त्वा स्वेषु स्नेहपाशान्दृढिम्नो निश्चक्राम भ्रातृसंदर्शिताध्वा ॥ २८ ॥ पतिं प्रयान्तं सुबलस्य पुत्री पतिव्रता चानुजगाम साध्वी। हिमालयं न्यस्तदण्डप्रहर्षं मनस्विनामिव सत्संप्रहारः॥ २९ ॥ अजातशत्रुः कृतमैत्रो हुताग्निर्विप्रान्न-त्वा तिलगोभूमिरुक्मैः। गृहं प्रविष्टो गुरुवन्दनाय न चापश्यत्पितरौ सौबलीं च ॥ ३० ॥ तत्र सञ्जयमासीनं पप्रच्छोद्विग्नमानसः। गावल्गणे क्व नस्तातो वृद्धो हीनश्च नेत्रयोः॥ अम्बा च हतपुत्रार्ता पितृव्यः क्व गतः

ஆகி ஹரியை மனத்தில் தியானித்துக் கொண்டு துறவியாக வாகின் ருஜே அவனே நரோத்தமனுக வாகிறுன். (26) புருஷர்களின் தைரிபம் தயை முதலியவற்றைப் பெரும்பாலும் நாசமாக்கக்கூடிய காலமானது தற்காலமிருந்து அருகில் வரப்போகிறது. ஆகவே நீர் சொந்த ஜனங்களாலறியப்படாத கதியையுடையவராய் வடதிக்கை நோக்கிச் செல்லும் என்றூர். (27) குருடனும், அஜமீடவம்சத் திற் பிறந்தவருமான திருதாஷ்டிர ராஜன் இவ்விதம் தம்பியான விதுரரா லுபதேசிக்கப்பட்டவராய்ச் சொந்த ஜனங்களிடத்தில் வேரூன்றின ஸ்னேஹபாசங்களைப் போக்கிக்கொண்டு ப்ராதாவினுல் காண்பிக்கப்பட்ட வழியையுடையவராய் வெளிக்கிளம்பினுர். (28) தீரர்களுக்கு போரில் சூரர்களின் அடியானதுபோல, வைராக்கியத் தையடைந்தவர்களுக்கு மிக்க ஸந்தோஷத்தைத் தருகின்ற ஹிமா லயத்தைக்குறித்துச் செல்லுகின்ற பதியைப் பதிவ்ரதையும், ஸாத் வியுமான சுபல ராஜகுமாரியான காந்தாரியும் பின்தொடர்ந்தாள். (29) அஜாத சத்துருவான தர்மபுத்திரர் மித்ரதைவத்யமான ஸந்தியாவந்தனத்தைச் செய்துமுடித்துக்கொண்டும், அக்னிஹோத் திரத்தைச் செய்துமுடித்துக்கொண்டும், எள்ளு, பசு, பூமி, ஸுவர் ணம் இவற்றினுல் ப்ராம்ஹணர்களைப் பூஜித்து அவர்களை வணங்கி யும், குருக்களை வந்தனம் செய்யவேண்டி கிருஹத்தில் ப்ரவேசித் தார். அங்கு விதுரர் திருதராஷ்டிரர் இவர்களையும், காந்தாரியை யும் காணவில்லை. (30) அதனுல் கலங்கின மனதுள்ளவராய், அவ் விடத்திலுட்கார்ந்து கொண்டிருக்கின்ற ஸஞ்ஜயரைப் பார்த்து ஹே கவல்கணபுத்திரான ஸஞ்ஜய! இரண்டு கண்களுமற்றவரும், வயது

सुहृत्॥ ३१ ॥ अपि मय्यकृतप्रज्ञे हतबन्धुः स भार्यया। आशंसमानः शमलं गङ्गायां दुःखितोऽपतत्॥३२॥ पितर्युपरते पाण्डौ सर्वान्नः सुहृदः शिशून्। अरक्षतां व्यसनतः पितृव्यौ क्व गतावितः॥३३॥ सूत उवाच— कृपया स्नेहवैक्लव्यात्सूतो विरहकर्शितः। आत्मेश्वरमचक्षाणो न प्रत्याहाति पीडितः॥ ३४ ॥ विमृज्याश्रूणि पाणिभ्यां विष्टभ्यात्मानमात्मना। अजातशत्रुं प्रत्यूचे प्रभोः पादावनुस्मरन्॥ ३५ ॥ सञ्जय उवाच—नाहं वेद व्यवसितं पित्रोर्वः कुलनन्दन। गान्धार्या वा महाबाहो मुषितोऽस्मि महात्मभिः॥ ३६ ॥ अथाजगाम भगवान्नारदः सहतुम्बुरुः। प्रत्युत्थायाभिवाद्याह सानुजोऽभ्यर्चयन्मिव॥ ३७ ॥

மூதிர்ந்தவருமான எங்கள் பிதாவும், கொல்லப்பட்டுப்போன புத்திரர்களை யுடையவளும், ஆனதுபற்றியே பீடிதையுமான தாயாரும் (காந்தாரியும்) எங்கே? ஸுஹிருத்தான விதுரர் எங்கு சென்றார். அறிவை இழந்தவனுன என்னிடத்தில் ஏதேனும் அபராதத்தைக்கண்டு (பொறுதவராய்) கொல்லப்பட்ட புத்திரன் முதலிய பந்துக்களையுடைய அவர் துக்கித்தவராய் பாரியையுடன் கூட கங்கையில் விழுந்துவிட்டாரா என்னே? (31–32) பாண்டுவான பிதாமரித்ததும் குழந்தைகளும், ஸுஹிருத்துக்களுமான எங்கள் யாவரையும் கஷ்டத்திலிருந்து எவர்கள் ரக்ஷித்தனரோ அந்தப் பிதிரு ஸஹோதரர்கள் இங்கிருந்து எங்குசென்றனர் என்றார். (33) ஸூதர் சொல்லலுற்றார்—கருணையினுலும், ஸ்னேஹத்தினுலேற்பட்ட மனத்தளர்ச்சியினுலும் மிக்கப் பீடிக்கப்பட்டவரும், தனது ஈசனுன அரசனைக் காணுது விரஹத்தினுல் களைத்தவருமான அந்த ஸஞ்ஜயர் பதில்சொல்லாதிருந்தார் (34) பிறகு கண்ணீரைத் துடைத்துக் கொண்டும், மனத்தைப் புத்தியினுல் அடக்கிக்கொண்டும், ப்ரபுவான திருதராஷ்டிரருடைய சரணங்களை நினைத்துக்கொண்டும் தர்மபுத்திரருக்குப் பதில் சொல்ல வாரப்பித்தார். (35)

ஸஞ்ஜயர் சொல்லலுற்றார்—ஹே குலநந்தன! மஹாபாகோ! உங்கள் பிதாக்களுடையவோ, காந்தாரியினுடையவோ முயர்ச்சியை நான் அறிந்திலேன். நான் மஹாத்மாக்களான அவர்களினுல் ஏமாற்

युधिष्ठिर उवाच—नाहं वेद गतिं पित्रोर्भगवन्क्व गतावितः। अम्बा वा हतपुत्रार्ता क्व गता च तपस्विनी॥ कर्णधार इवापारे भगवान्पार दर्शकः॥ ३८॥ अथाबभाषे भगवान्नारदो मुनिसत्तमः। मा कञ्चन शुचो राजन्यदीश्वरवशं जगत्॥ ३९॥ लोकाः सपाला यस्येमे वहन्ति बलि-मीशितुः। स संयुनक्ति भूतानि स एव वियुनक्ति च॥ ४०॥ यथा गावो नसि प्रोतास्तन्त्यां बद्धाः स्वदामभिः। वाक्तन्त्यां नामभिर्बद्धा वहन्ति बलिमीशितुः॥ ४१॥ यथा क्रीडोपस्कराणां संयोगविगमाविह। इच्छया

றப்பட்டவனுக இருக்கின்றேன் என்றார். (36) பிறகு பகவானை நாரதர் தும்புருவுடன் கூட அங்கு வந்தார். எழுந்து நமஸ்கரித்து தம்பிகளுடன் கூட தர்மபுத்திரர் அவரைப் †பூஜிப்பவர்போலச் சொல்லத்தொடங்கினர். (37) தர்மபுத்திரர் சொல்லுற்றார்—ஹே பகவன்! எனது பிதாக்கள் போனவழியை நான் அறிகிலேன். இங்கிருந்து எங்கு சென்றனர். புத்திரர்களை இழந்தவளும், ஆனதுபற்றியே துக்கிதையும், சோகிக்கத்தக்கவளுமான எனது அன்னையும் எங்கு சென்றிருக்கின்றாள். கறையற்ற ஸமுத்திரத்தில் கப்பலோட்டிபோல சோகமாகிற இந்தக்கடலின் கறையை பகவானை நீரேகாண்பிக்கக்கூடியவர். ஆனதுபற்றி எனக்கு இதைச் சொல்லவேண்டும் என்றார். (38) பிறகு முனிச்ரேஷ்டரும் பகவானுமான நாரதர் "ஹே ராஜன்! ஒருவரையும்பற்றி துக்கத்தையடையாதேயும். ஜகத்தானது ஈச்வரனுடைய வசத்திலன்றே இருக்கின்றது. லோகபாலர்களுடன் கூடின இந்த ஜனங்கள் எந்த ஈச்வரனுக்குப் பூஜையைச்செலுத்துகின்றனவோ அவரே ப்ராணிகளைச் சேர்த்துவைக்கிறார். அவரே பிரித்தும் விடுகிறார். காளை மாடுகள் மூக்குக்குத்தி அதில் கயிறு கோக்கப்பட்டு பெரிய புணையல் கயிற்றில் தமது கயிற்றினால் கட்டப்பட்டனவாய்க் கொண்டு தமது எஜமானனது பலியை எவ்விதம் சுமக்கின்றனவோ, இவ்விதமே ஜீவர்கள் விதி நிஷேதரூபமான வேதவாக்காகிற கயிற்றினாலும், ப்ராமஹணன், ப்ரம்ஹசாரி என்றதாதி பெயர்களினாலும், கட்டப்பட்டனவாய்க்கொண்டு ஈசிதாவான பரமேச்வரனுக்குப்

---

† சோகவேகத்தினால் பூஜிப்பவர்போல் பேசினாரேயொழிய பூஜிக்கவில்லை என்பது கருத்து.

क्रीडितुः स्यातां तथैवेशेच्छया नृणाम् ॥ ४२ ॥ यन्मन्यसे ध्रुवं लोकमध्रुवं वा नचोभयम् । सर्वथा हि न शोच्यास्ते स्नेहादन्यत्र मोहजात् ॥ ४३ ॥ तस्माज्जह्यङ्ग वैक्लब्यमज्ञानकृतमात्मनः । कथं त्वनाथाः कृपणा वर्तेरंस्ते च मां विना ॥ ४४ ॥ कालकर्मगुणाधीनो देहोऽयं पाञ्चभौतिकः । कथमन्यांस्तु गोपायेत्सर्पग्रस्तो यथा परम् ॥ ४५ ॥ अहस्तानि सहस्तानामपदानि

பலியைச் சுமக்கின்றனர். (39–41) விளையாட்டுக் கருவிகளின் சேர்க்கையும், பிரிவும் விளையாடுபவனுடைய இச்சையையொட்டி எவ்விதம் ஏற்படுகின்றனவோ, அவ்விதமே மனிதர்களின் சேர்க்கையும் பிரிவும் ஈச்வரேச்சையிலேயே ஏற்படுகின்றன. (42) *இந்த ஜனத்தை ஜீவரூபத்திலும் நிலைத்ததென்றே, தேஹரூபத்திலும் நிலையற்றதென்றே, ப்ரம்ஹரூபத்திலோ அநிர்வசனீயத் தன்மையிலுமோ நிலைத்ததுமன்று நிலையாததுமன்று என்றே, சேதனு சேதனும்சத்திலும் நிலைத்ததாகவும், நிலையற்றதாகவு மூள்ளது என்றே எண்ணுவாயேயானால் எவ்வழியிலும் அவர்கள் சோகிக்கத் தகாதவர்களே ஆவர். நான் என்றும் என்னுடையது என்றுமான மோஹத்தாலுண்டான ஸ்னேஹத்தைத் தவிர்த்து சோகத்துக்குக் காரணமே கிடையாது. அந்த ஸ்னேஹமோ அக்ஞானத்தை மூல மாகவுடையது. (43) ஆகவே ஹே அங்க! நாதனற்றவர்களும், கிருபணர்களுமான அவர்கள் நானில்லாவிடில் எவ்விதம் ஜீவிப்பர் என அக்ஞானத்தினுற் செய்யப்பட்ட மனக்குழப்பத்தை விட்டுவிடு வீராக. (44)

ஐந்து பூதங்களின் காரியமான இந்தத் தேஹமானது, காலம் கர்மம் குணம் இவற்றுக்கு அதீனமாக இருப்பதால் மலைப்பாம் பினுல் விழுங்கப்பட்டவன் பிறரைப் போல மற்றவர்களை எவ்விதம் காப்பாற்றும். ஒருபொழுதும் காப்பாற்றாது. (45) கையுடன் கூடின மனித ஜீவர்களுக்கு கையில்லாத பசுபக்ஷ்யாதி ஜீவன்கள் தேஹதாரணத்துக்கு நிமித்தங்களாகவாகின்றன. நாற்கால் ப்ராணி களுக்குப் புல்முதலிய சரீரத்தையடைந்த ஜீவன்கள் தேஹதாரணத்

---

* ஈசுவராதீனமாக இருப்பதால் சோகப்படுவது பொருந்தாது என முன்னர் சொல்லப்பட்டது. இப்பொழுது லோகதத்துவத்தை விசாரிக் குங்கால் சோகத்துக்கு விஷயமே கிடையாது என உபதேசிக்கிறார்.

चतुष्पदाम्। फल्गूनि तत्र महतां जीवो जीवस्य जीवनम् ॥ ४६ ॥ तदिदं भगवान्राजन्नेक आत्मात्मनां स्वदृक्। अन्तरोऽनन्तरो भाति पश्य तं माय-योरुधा ॥ ४७ ॥ सोऽयमद्य महाराज भगवान्भूतभावनः। कालरूपोऽव-तीर्णोऽस्यामभावाय सुरद्विषाम् ॥ ४८ ॥ निष्पादितं देवकृत्यमवशेषं प्रती-क्षते। तावद्यूयमवेक्षध्वं भवेद्यावदिहेश्वरः ॥ ४९ ॥

धृतराष्ट्रः सह भ्रात्रा गान्धार्या च स्वभार्यया। दक्षिणेन हिमवत ऋषीणामाश्रमं गतः ॥ ५० ॥ स्रोतोभिः सप्तभिर्या वै स्वर्धुनी सप्तधा व्यधात्। सप्तानां प्रीतये नाना सप्तस्रोतः प्रचक्षते ॥ ५१ ॥ स्ना-

---

துக்கு நிமித்தங்களாகவாகின்றன. அவற்றுக்குள்ளும் பெரிய சரீர முள்ள ஜீவன்களுக்குச் சிறியசரீரமுள்ள ஜீவன்கள் தேஹதாரணத் துக்கு நிமித்தங்களாகுவாகின்றன. ஆகவே ஒரு ஜீவனுக்கு மற்றொ ருஜீவன் தேஹதாரணத்துக்கு நிமித்தமாகவாகிறது என்பது தெளி வாகிறது. (46) ஹே ராஜன்! ஸ்வப்ரகாசனும், எல்லா ஆத்மாக் களுக்கும் ஆத்மாவும், ஏகனுமான யாதொருபகவானுண்டோ அவரே கையற்றது, கையுள்ளது இவற்றை ஆதியாகவுடைய முற்கூறிய இந்த ஜகத்தாகவும், உள்ளிலும் வெளியிலுமிருப்பவராகவும், மாயையினால் பலவாகவும் தோற்றுகிறார் என நீ கண்டுகொள்ளு (47) ஹே மஹா ராஜ! பூதங்களை விருத்திசெய்பவரும், காலத்தை ஸ்வரூபமாகவுடை யவருமான அந்த இந்தப் பகவான் இப்பொழுது அஸுரர்களை அழிக்கவேண்டி இந்தப் பூமியில் அவதரித்திருக்கிறார். (48) தேவர் களின் காரியமானது செய்துமுடிக்கப்பட்டு விட்டது. எஞ்சிய காரியத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார். எதுவரை ஈஸ்வ வரன் இங்கு இருப்பாரோ அதுவரை நீங்களும் ஜீவனத்தை எதிர் பாருங்கள். (49)

திருதராஷ்டிரரோ ப்ராதாவான விதுரருடனும், தனது பாரி யையான காந்தாரியுடனும் கூட ஹிமயமலைக்குத் தெற்கிலுள்ள ருஷிகளின் ஆச்ரமத்தை யடைந்துவிட்டார். (50) ப்ரஸித்தி பெற்ற யாதொரு ஆகாசகங்கையுண்டோ அது ஸப்தருஷிகளின் ப்ரீதிக்குவேண்டி தனிப்பட்டதான ஏழுபிரவாஹங்களினால் தன்னை ஏழுவிதமாகச் செய்துகொண்டது. ஆனதுபற்றி அந்தத் தீர்த்

त्वानुसवनं तस्मिन्हुत्वा चाग्नीन्यथाविधि। अब्भक्ष उपशान्तात्मा स आस्ते विगतैषणः ॥ ५२ ॥ जितासनो जितश्वासः प्रत्याहृतषडिन्द्रियः। हरिभावनया ध्वस्तरजःसत्त्वतमोमलः ॥ ५३ ॥ विज्ञानात्मनि संयोज्य क्षेत्रज्ञे प्रविलाप्य तम्। ब्रह्मण्यात्मानमाधारे घटाम्बरमिवाम्बरे ॥ ५४ ॥ ध्वस्तमायागुणोदर्को निरुद्धकरणाशयः। निवर्तिताखिलाहार आस्ते स्थाणुरिवाचलः। तस्यान्तरायो मैवाभूः संन्यस्ताखिलकर्मणः॥ ५५ ॥ स वा अद्यतनाद्राजन्परतः पञ्चमेऽहनि। कलेबरं हास्यति स्वं तच्च भस्मी-

---

தத்தை ஸப்தஸ்ரோதஸ் என்கின்றனர். (51) அவர் அந்தத் தீர்த்தத்தில் காலை, மத்யான்ஹம், மாலை என்ற காலங்களில் ஸ்னானஞ் செய்தும், முறைப்படி அக்னிகளிலும் ஹோமஞ்செய்தும், ஜலத்தையே குடித்துக்கொண்டும், ஒடுங்கின மனதுள்ளவராகவும், புத்திராதி ஏஷணைகளை விட்டவராகவும் இருக்கிறார். (52) மேலும், ஆஸன ஜயமுள்ளவராகவும், ப்ராணனை ஜயித்தவராகவும், த்வக், சக்ஷுஸ், ச்ரோத்ரம், ஜிஹ்வா, க்ராணம், மனஸ் என்ற ஆறு இந்திரியங்களை அதத்தற்குரிய விஷயங்களினின்றும் இழுத்து அதன தன் ஸ்வரூபத்தில் மட்டும் நிறுத்தினவராகவும், ஹரியின் பாவனை (தாரணை) யினால் போக்கப்பட்ட ரஜஸ் ஸத்வம் தமஸ் என்ற மலங்களை யுடையவராகவும், அஹங்காரத்துக்கு நிமித்தமான மனதை ஸ்தூலதேஹத்திலிருந்து பிரித்து விக்ஞானத்மாவான புத்தியில் லயிக்கச்செய்தும், அந்த விக்ஞானத்மாவான புத்தியை திருப்யமான அசேதனம்சத்தினின்றும் பிரித்து த்ரஷ்டாவான க்ஷேத்ரக்ஞனுடன் ஒன்றுபடுத்தியும், அந்த க்ஷேத்திரக்ஞனை த்ரஷ்ட்ரம்சத்தினின்றும் பிரித்து குடாகாசத்தைப் பெரிய ஆகாசத்தில் போல ஸர்வத்துக்கும் ஆதாரமான ப்ரம்ஹத்தினிடத்தில் லயப்படுத்தியும், மாயாகுணங்களின் வாஸனையற்றவராகவும், கண் முதலிய இந்திரியங்களையும், மனதையும் அடக்கிக்கொண்டவராகவும், ஆனது பற்றியே இந்திரியங்களினால் விஷயங்களின் க்ரஹணமற்றவராகவும், கட்டைபோல அசையாதவராகவுமிருக்கிறார். ஹே ராஜன்! ஸகல கர்மங்களையும் விட்டவரான அவருக்கு இடையூறு விளைவிப்பவராக ஆகாதீர். (53–55) அவரோ இதினிருந்து மேலுள்ள ஐந்தாவது

भविष्यति ॥ ५६ ॥ दह्यमानेऽग्निभिर्देहे पत्युः पत्नी सहोटजे। बहिः स्थिता पतिं साध्वी तमग्निमनुवेक्ष्यति ॥५७॥ विदुरस्तु तदाश्चर्यं निशाम्य कुरुनन्दन। हर्षशोकयुतस्तस्माद्गन्ता तीर्थनिषेवकः ॥ ५८ ॥ इत्युक्त्वाथारुहत्स्वर्गं नारदः सहतुम्बुरुः। युधिष्ठिरो वचस्तस्य हृदि कृत्वाऽजहाच्छुचः ॥ ५९ ॥

इति श्रीमद्भागवते महापुराणे प्रथमस्कन्धे विदुरोपदेशेन धृतराष्ट्र मोक्षवर्णनं नाम त्रयोदशोऽध्यायः ॥ १३ ॥

நாளில் சொந்தமான சரீரத்தை விடப்போகிறார். அந்தச் சரீரமும் சாம்பலாக வாகப்போகிறது (56) பர்ணசாலையுடன் கூடப் பர்த் தாவினுடைய தேஹமானது அக்னிகளினால் பொசுக்கப்படும் பொ ழுது வெளியிலிருக்கின்றவளும் பதிவிரதையும், பத்னியுமான காந் தாரியானவள் அந்த அக்னியில் பிரவேசிக்கப்போகிறாள் (57) ஹே குருநந்தன! விதுரர் அந்த ஆச்சரியத்தைக் கண்ணுற்று ஹர்ஷம் சோகம் இவற்றுடன் கூடினவராய் தீர்த்தங்களை ஸேவிக்க வெண் ணங்கொண்டு அங்கிருந்து கிளம்பப்போகிறார். (58) என்று சொல் லிப் பிறகு நாரதர், தும்புரு என்பவருடன்கூட ஸ்வர்க்கத்தை (ஆகா சத்தை) அடைந்தார். தர்மபுத்திரர் அவருடைய வார்த்தையை மனத்தில் வாங்கிச் சோகத்தைவிட்டார். (59) (எ–று)

இவ்விதம் ஸ்ரீமத்பாகவத மஹாபுராண ப்ரதமஸ்கந்தத்தில் விதுரரது உபதேசத்தினால் திருதராஷ்டிரர் மோக்ஷமடைந்ததை வர்ணித்தல் என்ற பதிமூன்றுவது அத்தியாயம் முற்றிற்று.

பதினான்காவது அத்தியாயம்.

(அ–கை) चतुर्दशे त्वरिष्टानि दृष्ट्वा राजा विशङ्कितः।
अशृणोदर्जुनात्कृष्णतिराधानमितीर्यते ॥ १ ॥

(க–ரை) அசுபக்குறிகளைக் கண்டு சங்கைகொண்ட அரசன் அர்ஜுனனிடமிருந்து ஸ்ரீகிருஷ்ணன் மறைந்ததைக் கேட்டார் என இந்தப் பதினான்காவது அத்தியாயத்தில் வர்ணிக்கப்படுகிறது.

अथ चतुर्दशोऽध्यायः ॥

सूत उवाच—संप्रस्थिते द्वारकायां जिष्णौ बन्धुदिदृक्षया। ज्ञातुं च पुण्यश्लोकस्य कृष्णस्य च विचेष्टितम् ॥ १ ॥ व्यतीताः कतिचिन्मासास्तदा नायात्ततोऽर्जुनः। ददर्श घोररूपाणि निमित्तानि कुरूद्वहः ॥ २ ॥ कालस्य च गतिं रौद्रां विपर्यस्तर्तुधर्मिणः। पापीयसीं नृणां वार्तां क्रोधलोभानृतात्मनाम् ॥ ३ ॥ जिह्मप्रायं व्यवहृतं शाठ्यमिश्रं च सौहृदम्। पितृमातृसुहृद्भ्रातृदंपतीनां च कल्कनम् ॥ ४ ॥ निमित्तान्यत्यरिष्टानि काले त्वनुगते नृणाम्। लोभाद्यधर्मप्रकृतिं दृष्ट्वोवाचानुजं नृपः ॥ ५ ॥ युधिष्ठिर उवाच—संप्रेषितो द्वारकायां जिष्णुर्बन्धुदिदृक्षया। ज्ञातुं च पुण्यश्लोकस्य कृष्णस्य च विचेष्टितम् ॥ ६ ॥ गताः

ஸூதர் சொல்லலுற்றார்— பந்துக்களைப் பார்க்க விருப்பங் கொண்டும், புண்ணியஶ்லோகனை ஶ்ரீகிருஷ்ணனுடைய சேஷ்டிதத்தையும் அபிப்பிராயத்தையும் அறியவேண்டியும் துவாரகைக்கு அர்ஜுனன் சென்று சிலமாதங்கள் கழிந்தன. அப்பொழுதும் அங்கிருந்து அர்ஜுனன் திரும்பி வரவில்லை. குருஶ்ரேஷ்டரான தர்மபுத்திரர் பயங்கரமான தோற்றத்தையுடைய அசுபக்குறிகளைக் கண்டார். (1–2) அரசனை தர்மபுத்திரர் ருதுக்களின் தர்மமாறுபாட்டையுடைய காலத்தின் பயங்கரமான கதியையும், ஜனங்கள் குரோதம், லோபம், பொய் இவற்றில் மனமுள்ளவர்களாய் செய்யும் பாபமான ஜீவிகையையும், அதிகம் கபடம் நிறைந்த வியவஹாரத்தையும், வஞ்சனம் கலந்தசிநேஹத்தையும், பிதா, மாதா, ஸுஹிருத், ப்ராதா, தம்பதிகள் இவர்களுக்குத் புத்திராதிகளான தமது ஸம்பந்திகளுடன் நேர்ந்த கலஹத்தையும், அனுகூலமான காலத்திலுண்டான மிக்க கெடுதல்களான நிமித்தங்களையும், மனிதர்களுக்கு லோபம் முதலிய அதர்மமுள்ள ஸ்வபாவத்தையும் கண்டு பீமஸேனனைப்பார்த்துச் சொல்லத்தொடங்கினர். (3–5)

தர்மபுத்திரர் சொல்லலுற்றார்— பந்துக்களைப் பார்க்குமெண்ணத்துடனும், புண்ணியஶ்லோகனை ஶ்ரீகிருஷ்ணனுடைய காரியத்தையும் அபிப்பிராயத்தையும் அறியவேண்டியும் அர்ஜுனன் துவாரகைக்கு அனுப்பப்பட்டான். (6) ஹே பீமஸேன! இப்

सप्ताधुना मासा भीमसेन तवानुजः। नायाति कस्य वा हेतोर्नाहं वेदेदमञ्जसा ॥ ७ ॥ अपि देवर्षिणादिष्टः स कालोऽयमुपस्थितः। यदात्मनोऽङ्गमाक्रीडं भगवानुत्सिसृक्षति ॥ ८ ॥ यस्मान्नः संपदो राज्यं दाराः प्राणाः कुलं प्रजाः। आसन्सपत्नविजयो लोकाश्च यदनुग्रहात् ॥ ९ ॥ पश्योत्पान्नरव्याघ्र दिव्यान्भौमान्सदैहिकान्। दारुणान् शंसतोऽदूराद्भयं नो बुद्धिमोहनम् ॥१०॥ ऊर्वक्षिबाहवो मह्यं स्फुरन्त्यङ्ग पुनः पुनः। वेपथुश्चापि हृदय आराद्धास्यन्ति विप्रियम् ॥११॥ शिवैषोद्यन्तमादित्यमभिरौत्यनलानना। मामङ्ग सारमेयोऽयमभिरौति ह्यभीरुवत् ॥१२॥ शस्ताः कुर्वन्ति

பொழுதோ ஏழுமாதங்களாகிவிட்டன. உனது தம்பி என்ன காரணத்தினல் திரும்பிவரவில்லை என்பதை நான் தெளிவாய் அறியமுடியாதவனாகவிருக்கிறேன் (7) எந்த ஸ்ரீகிருஷ்ணன் நிமித்தமாக நமக்கு ஸம்பத்துக்களும், ராஜ்யமும், பத்நியும், ப்ராணன்களும், குலமும், ப்ரஜைகளும், சத்துருஜயமும் ஏற்பட்டனவோ, எவருடைய அனுக்கிரஹத்தினல் உலகங்களும் வசப்பட்டனவாகவாயினவோ அந்தப் பகவான் "தனது க்ரீடைக்கு ஸாதனமான அங்கத்தை(மனுஷ்ய நாட்டியத்தை)விட்டுவிட விரும்புகிறார்" என எந்தக் காலமானது தேவருஷியான நாரதராலுபதேசிக்கப்பட்டதோ அந்தக்காலமானது (பகவான் சரீரத்தை மறைத்துக்கொள்ளும் காலமானது) அருகில்வந்துவிட்டதா என்னே? (8–9) ஹே நரவ்யாக்ர! புத்திக்கு மயக்கத்தைத் தரக்கூடியபயம் அருகிலிருக்கு என்பதைச் சொல்லுகின்றனவும், குரூரங்களும், ஆகாசத்திலுண்டானவைகளும், பூமியிலுண்டானவைகளும், தேஹத்திலுண்டான வைகளுமான அசுபக் குறிகளைப்பார். (10) அவற்றுள் ஹே அங்க! இடது தடை இடதுகண் இடதுகை இவைகள் அடிக்கடி துடிக்கின்றன. மனத்தில் நடுக்கமும் உண்டாகின்றது. இவை எனக்கு ஸமீபித்தில் கெடுதலைத் தரப்போகின்றன. (11) இந்தக் குள்ளநரியானது அக்னியை வாயிலுல் கக்கிக்கொண்டு உதயமாகின்ற ஸூரியனை எதிரில் பார்த்துக்கொண்டு ஊளையிடுகிறது. ஹே அங்க! இந்த நாயானது கொஞ்சமும் சங்கையில்லாமல் என்னைப் பார்த்து அழுதுகொண்டு குரைக்கின்றது. (12) புண்யங்களான பசு முதலியன என்னை

मां सव्यं दक्षिणं पशवोऽपरे । वाहांश्च पुरुषव्याघ्र लक्षये रुदतो मम ॥१३॥ मृत्युदूतः कपोतोऽयमुलूकः कम्पयन्मनः । प्रत्युलूकश्च कुह्वानैर-निद्रौ शून्यमिच्छतः ॥ १४ ॥ धूम्रा दिशः परिधयः कम्पते भूः सहाद्रिभिः । निर्घातश्च महानासीत्साकं च स्तनयित्नुभिः ॥ १५ ॥ वायुर्वाति खरस्पर्शो रजसा विसृजंस्तमः । असृग्वर्षन्ति जलदा बीभत्समिव सर्वतः ॥ १६ ॥ सूर्य हतप्रभं पश्य ग्रहमर्दं मिथो दिवि । ससङ्कुलैर्भूतगणैर्ज्वलिते इव रोदसी ॥ १७ ॥ नद्यो नदाश्च क्षुभिताः सरांसि च मनांसि च । न ज्वलत्यग्निराज्येन कालोऽयं किं विधास्यति ॥ १८ ॥ न पिबन्ति स्तनं

இடமாகச் சுற்றிச் செல்லுகின்றன. மற்றுமுள்ள கழுதை முதலியன என்னவலமாகச் சுற்றிச்செல்லுகின்றன. ஹே புருஷவ்யாக்ர! என்னுடைய குதிரைகள் அழுவதை நான் காண்கிறேன். (13)

இந்தக் கபோதமானது(மாடப்புறுவானது)மிருத்யுவைத் தெரிவிக்கிறது. மனதை நடுங்கும்படி செய்கின்ற இந்தக் கோட்டானும், அதன் சத்துருவான காக்கையும் தூங்காமல் கெட்ட சப்தங்களினுல் ஜகத்தைச் சூன்யமாக்க விருப்புகின்றன. (14) திக்குகள் மங்கலாக விருக்கின்றன. கோட்டைகள் (உலகை மறைக்கின்றன.) மலைகளுடன் கூடப் பூமியானது ஆடுகிறது. மேகமில்லாமல் பெரிய இடிவிழுதலானது கர்ஜிதங்களுடன்கூட உண்டாகிறது. (15) காற்றுனது கொடூரமான ஸ்பரிசத்தையுடையதாய்க் கொண்டும், புழுதியினுல் அதிகமாக இருளை யுண்டுபண்ணிக்கொண்டும் வீசுகிறது. மேகங்கள் நாலாபக்கங்களிலும் வெறுக்கத் தக்கபடி ரக்தத்தை வர்ஷிக்கின்றன. (16) ஸூரியன் காந்தியற்றிருப்பதையும், ஆகாசத்தில் கிரஹங்கள் ஒன்றுக்கொன்று சண்டையிடுவதையும், மிக்கநெருக்கங்களாக இருக்கின்ற ருத்திரகணங்களினுல் ஆகாசமும் பூமியும் ஜ்வலிப்பனப் போலிருப்பதையும் பாரு. (17) கிழக்கு நோக்கிச்செல்லும் நதிகளும், மேற்கு நோக்கிச்செல்லும் நதங்களும், பெரியஸரஸ்ஸுகளும், மனதுகளும் கலங்கி இருக்கின்றன. ஆஜ்யத்தினுலும் அக்னியானது ஜ்வலிப்பதில்லை ஆகவே இந்தக் காலமானது என்னசெய்யப்போகிறதோ? (18) கன்றுகள் தாயின் மடியில் ஊட்டுவதில்லை. தாய்ப்பசுக்களும் பாலைப்பெருக

वत्सा न दुह्यन्ति च मातरः। रुदन्त्यश्रुमुखा गावो न हृष्यन्त्यृषभा व्रजे॥ १९॥ दैवतानि रुदन्तीव स्विद्यन्ति ह्युच्चलन्ति च। इमे जनपदा ग्रामाः पुरोद्यानाकराश्रमाः। भ्रष्टश्रियो निरानन्दाः किमघं दर्शयन्ति नः॥ २०॥ मन्य एतैर्महोत्पातैर्नूनं भगवतः पदैः। अनन्यपुरुषश्रीभिर्हीना भूर्हतसौभगा॥ २१॥ इति चिन्तयतस्तस्य दृष्टारिष्टेन चेतसा। राज्ञः प्रत्यागमद्ब्रह्मन्यदुपुर्याः कपिध्वजः॥ २२॥ तं पादयोर्निपतितमयथापूर्वमातुरम्। अधोवदनमब्बिन्दून्मुञ्चन्तं नयनाब्जयोः॥ २३॥ विलोक्योद्विग्नहृदयो विच्छायमनुजं नृपः। पृच्छति स्म सुहृन्मध्ये संस्मरन्नारदेरितम्॥

விடுவதில்லை. பசுக்கள் கண்களில் ஜலத்தை வடியவிட்டுக்கொண்டு அழுகின்றன. கோகுலத்திலுள்ள காளைமாடுகள் ஸந்தோஷிப்பதில்லை. (19) ஆலயங்களிலுள்ள பகவத்விக்ரஹங்கள் கண்ணீர் வடிப்பனபோல வியர்வையுள்ளனவாய்க்கொண்டு அசைகின்றன. இந்தத் தேசங்களும், கிராமங்களும், பட்டினம், உத்யானம், பொன் விளையுமிடம், ஆச்ரமம் இவைகளும் காந்தியற்றனவாகவும், ஆனந்தமற்றனவாகவும், இருந்துகொண்டு நமக்கு எம்மாதிரியான துக்கத்தைத் தெரிவிக்கின்றனவோ? (20) இந்தப் பெரிய அசுபக்குறிகளைக் கொண்டு இந்தப் பூமியானது, வேறுபுருஷனிடம் ஸம்பவிக்காத வஜ்ரம் அங்குசம் முதலிய சோபையை யுடையவைகளான பகவானுடைய அடிவைப்புகளற்றதாகவும் ஆனதுபற்றியே போக்கப்பட்ட ஸௌபாக்கியத்தை யுடையதாகவும் ஆகிவிட்டது என நான் எண்ணுகிறேன். இது நிச்சயம். (21) ஹே ப்ரம்ஹன்! நேரில் காணப்பட்ட அரிஷ்டத்தையுடைய மனத்தினால் அந்த அரசன் இவ்விதம் சிந்தித்துக் கொண்டிருக்குங்கால் கபித்வஜனான அர்ஜுனன் துவாரகையிலிருந்து திரும்பிவந்தான். (22) வழக்கம் போலில்லாது கால்களில் விழுந்தவனும், துக்கத்தையடைந்தவனும், முகத்தைக் கீழில் தொங்கவிட்டுக் கொண்டு கண்களினின்றும் ஜலத்துளிகளை வடிக்கின்றவனும், சரீரத்தில் சோபையற்றவனுமான தம்பியை (அர்ஜுனனை) அரசர் பார்த்து, நடுங்கின ஹிருதயமுடையவராய் நாரதரால் சொல்லப்பட்டதை நினைத்துக்கொண்டு சுஹிருத்துக்களின் நடுவில் கேட்கத் தொடங்கினர். (23–24)

युधिष्ठिर उवाच—कच्चिदानर्तपुर्यां नः स्वजनाः सुखमासते। मधुभोजदशार्हार्हसात्वतान्धकवृष्णयः॥२५॥ शूरो मातामहः कच्चित्स्वस्त्यास्ते वाऽथ मारिषः। मातुलः सानुजः कच्चित्कुशल्यानकदुन्दुभिः॥२६॥ सप्त स्वसारस्तत्पत्न्यो मातुलान्यः सहात्मजाः। आसते सस्नुषाः क्षेमं देवकीप्रमुखाः स्वयम्॥२७॥ कच्चिद्राजाऽऽहुको जीवत्यसत्पुत्रोऽस्य चानुजः। हृदीकः ससुतोऽक्रूरो जयन्तगदसारणाः॥ २८॥ आसते कुशलं कच्चिद्ये च शत्रुजिदादयः। कच्चिदास्ते सुखं रामो भगवान्सात्वतां प्रभुः॥ २९॥ प्रद्युम्नः सर्ववृष्णीनां सुखमास्ते महारथः। गम्भीररयोऽनिरुद्धो वर्धते भगवानुत॥ ३०॥ सुषेणश्चारुदेष्णश्च साम्बो जाम्बवतीसुतः। अन्ये च

யுதிஷ்டிரர் சொல்லலுற்றார்—துவாரகையில் மதுக்கள், போஜர்கள், தசார்ஹர், அர்ஹர், ஸாத்வதர், அந்தகர், விருஷ்ணிகள் என்ற நமதுபந்துக்கள் யாவரும் ஸுகமாக இருக்கின்றனரா? (25) நமது மாதாமஹரும், பூஜ்யருமான *சூரர் ஸுகமாக இருக்கின்றாரா? அம்மானன வஸுதேவர் தம்பியுடன்கூட சுகமாக இருக்கின்றாரா? (26) அவருடைய பத்நிகளும், நமது அம்மாமிகளும், ஸ்வயம் ஸஹோதரிகளுமான தேவகீ முதலிய ஏழுபேர்களும், புத்திரர்களுடன் கூடவும், நாட்டுப்பெண்களுடன் கூடவும், க்ஷேமமாக இருக்கின்றனரா?. (27) அஸாதுவான புத்திரனையுடைய ராஜாவான உக்கிரஸேனர் உயிருடனிருக்கின்றாரா? இவருடைய தம்பியான தேவகனும், புத்திரனன கிருதவர்மாவுடன் கூடின ஹிருதீகரும், அக்ரூரரும், ஜயந்தன் கதன் ஸாரணன் இவர்களும், சத்துருஜித்தை ஆதியாகக்கொண்ட மற்றும் எவர்களுண்டோ அவர்களும் க்ஷேமமாக இருக்கின்றனரா? யாதவர்களுக்கு ப்ரபுவும், பகவானுமான பலராமன் சுகமாக இருக்கின்றாரா? (28–29) எல்லா யாதவர்களுக்குள்ளும் மஹாரதனன ப்ரத்யும்னன் சுகமாக இருக்கின்றாரா? யுத்தத்தில் கம்பீரமான வேகத்தையுடைய பகவானன அநிருத்தன் ஸந்தோஷித்துக் கொண்டிருக்கின்றாரா?. (30) சுஷேணனும், சாருதேஷ்ணனும், ஜாம்பவதியின் புத்திரனன ஸாம்பனும், கிருஷ்ணகுமாரர்களுக்குள் சிறந்தவர்களான மற்றவர்

---

* இவர் குந்தியின்பிதா.

कार्ष्णिप्रवराः सपुत्रा ऋषभादयः ॥ ३१ ॥ तथैवानुचराः शौरेः श्रुतदेवोद्धवादयः। सुनन्दनन्दशीर्षण्या ये चान्ये सात्वतर्षभाः॥३२॥ अपि स्वस्त्यासते सर्वे रामकृष्णभुजाश्रयाः। अपि स्मरन्ति कुशलमस्माकं बद्धसौहृदाः ॥ ३३ ॥ भगवानपि गोविन्दो ब्रह्मण्यो भक्तवत्सलः। कच्चित्पुरे सुधर्मायां सुखमास्ते सुहृद्वृतः ॥ ३४ मङ्गलाय च लोकानां क्षेमाय च भवाय च। आस्ते यदुकुलाम्भोधावाद्योऽनन्तसखः पुमान्॥३५॥ यद्बाहुदण्डगुप्तायां स्वपुर्यां यदवोऽर्चिताः। क्रीडन्ति परमानन्दं महापौरुषिका इव ॥ ३६ ॥ यत्पादशुश्रूषणमुख्यकर्मणा सत्यादयो द्व्यष्टसहस्रयोषितः। निर्जित्य सङ्ख्ये त्रिदशांस्तदाशिषो हरन्ति वज्रायुधवल्लभोचिताः ॥ ३७ ॥

களும், புத்திரர்களுடன் கூடின ருஷபன் முதலியோரும், அவ்வி தமே ஸ்ரீகிருஷ்ணனுடைய வேலைக்காரர்களான ஸ்ருததேவன் உத்தவர் முதலியோரும், ஸுநந்தனையும் நந்தனையும் தலைவர்களாகக் கொண்ட மற்றுமுள்ள யாதொரு யாதவ ஸ்ரேஷ்டர்களுண்டோ அவர்களும், ராமகிருஷ்ணர்களின் புஜங்களை யாஸ்ரயித்தவர்களான யாவரும் சுகமாக இருக்கின்றனரா? நம்மிடம் நிலைத்த ஸ்னேஹமுள்ளவர்களாய்க் கொண்டு நமது க்ஷேமத்தை நினைக்கின்றனரா? (31–33) ஆத்யனான எந்தப் புருஷன் ஸஹாயபூதனான பலராமனுடன் கூட உலகங்களின் சுபத்துக்குவேண்டியும், கிடைத்ததைக் காப்பாற்றவேண்டியும், விருத்திக்குவேண்டியும் யதுகுலமாகிறஸமுத்திரத்தில் வஸித்து வருகின்றாரோ, எவருடைய பாகுதண்டத்தினுல் ரக்ஷிக்கப்பட்ட சொந்தமான பட்டினத்தில் யாதவர்கள் மற்றவர்களினுல் பூஜிக்கப்பட்டவர்களாய்க்கொண்டு வைகுண்டநாதனுடைய வேலைக்காரர்கள்போல மேலான ஆனந்தமுண்டாகும்படி விளையாடுகின்றனரோ, எவருடைய சரணகைங்கரியமாகிற சிறந்தகர்மத்தினுல் ஸத்யபாமையை ஆதியாகவுடைய பதினாயிரம் ஸ்திரீகள் யுத்தத்தில் தேவர்களை ஜயித்து இந்திரபத்னியான சசீதேவித்கு யோக்கியங்களும் தேவபோக்கியங்களுமான பாரிஜாதம் முதலியவற்றைக் கொண்டுவந்தனரோ, எவருடைய புஜதண்டங்களின் மஹிமையை அண்டிப்பிழைக்கின்றவர்களான யதுவீரர்கள் எங்கிருந்தும் பயமற்றவர்களாய்க் கொண்டு பலாத்காரமாகக்

यद्बाहुदण्डाभ्युदयानुजीविनो यदुप्रवीरा ह्यकुतोभया मुहुः। अधिक्रमन्त्यङ्घ्रिभिराहृतां बलात्सभां सुधर्मां सुरसत्तमोचिताम् ॥ ३८ ॥

कच्चित्तेऽनामयं तात भ्रष्टतेजा विभासि मे। अलब्धमानोऽवज्ञातः किंवा तात चिरोषितः ॥ ३९ ॥ कच्चिन्नाभिहतोऽभावैः शब्दादिभिरमङ्गलैः। न दत्तमुक्तमर्थिभ्य आशया यत्प्रतिश्रुतम् ॥४०॥ कच्चित्त्वं ब्राह्मणं बालं गां वृद्धं रोगिणं स्त्रियम्। शरणोपसृतं सत्त्वं नात्याक्षीः शरणप्रदः ॥ ४१ ॥ कच्चित्त्वं नागमोऽगम्यां गम्यां वाऽसत्कृतां स्त्रियम्। पराजितो वाथ भवान्नोत्तमैर्नासमैः पथि ॥ ४२ ॥ अपिस्वित्पर्यभुङ्क्थास्त्वं संभो-

---

கொண்டு வரப்பட்டதும் தேவஶ்ரேஷ்டர்களுக்கு உசிதமான து மான சுதர்மை என்ற ஸபையில் தங்களுடைய கால்களினுல் அடிக் கடி ஏறுகின்றனரோ, பக்தவத்ஸலனும் ப்ராம்ஹணப்ரியனும் பக வானுமான அந்தக்கோவிந்தனும் சுஹிருத்துக்களால் சூழப்பட்ட வராய்த் தனதுபட்டினத்தில் சுதர்மை என்ற ஸபையில் சுகமாக வசித்து வருகின்றரா?. (34–38)

ஹே தாத! நாசமடைந்த தேஜஸ்ஸுள்ளவனுக எனக்குத் தோற்றுகின்றனையே? உனது சரீரத்துக்கு ஆரோக்கியந்தானு? ஹே தாத! பந்துக்கள் வீட்டில் வெகுகாலம் வசித்தமைபற்றி அவர் களிடமிருந்து மரியாதையை யடையாதவனுய் அவமதிக்கப்பட் டனையா? அல்லது ப்ரேமையற்ற ஜனங்களால் கொடூரங்களான சப் தாதிகளினுல் அடிபடாதிருக்கின்றனையா? அல்லது யாசித்தவர்களுக் குத் "தருகிறேன்" என வாக்கை அளிக்கவில்லையா? அல்லது எவ்வி தம் ஆசையேற்படுகிறதோ அவ்விதம் தருகிறேன் என எது ப்ரதிக் ஞை செய்யப்பட்டதோ அதை யாசகர்களுக்குக் கொடாதிருக்கின் றனையா? எவர்க்கும் அபயத்தைத் தருபவனுன நீ, சரண்புகுந்த ப்ராம்ஹணனையும், பாலனையும், பசுவையும், கிழவனையும், ரோகி யையும், ஸ்திரீயையும், அல்லது சரண்புகுந்த வேறு எந்த பராணி யையும் பரித்யாகஞ் செய்யாதிருக்கின்றனையா? வேறுஸ்திரீயினிட மும், ராஜஸ்வலையான சொந்தஸ்திரீயினிடமும் நீ செல்லாதிருக்கின் றனையா? வழியில் ஸமமானவர்களினுலோ தாழ்ந்தவர்களினுலோ

ज्यान्वृद्धबालकान्। जुगुप्सितं कर्म किञ्चित्कृतवान्न यदक्षमम्॥ ४३॥ कच्चित्प्रेष्ठतमेनाथ हृदयेनात्मबन्धुना। शून्योऽस्मि रहितो नित्यं मन्यसे तेऽन्यथा न रुक्॥ ४४॥

इति श्रीमद्भागवते महापुराणे प्रथमस्कन्धे युधिष्ठिरवितर्ककाले द्वारकातः अर्जुनागमनवर्णनं नाम चतुर्दशोऽध्यायः॥ १४॥

अथ पञ्चदशोऽध्यायः॥

सूत उवाच—एवं कृष्णसखः कृष्णो भ्रात्रा राज्ञा विकल्पितः। नाना शङ्कास्पदं रूपं कृष्णविश्लेषकर्शितः॥ १॥ शोकेन शुष्यद्धृदनहृत्सरोजो

தோல்வியடையும்படி செய்யப்படாதிருக்கின்றனையா? அல்லது—போஜனம் செய்விக்கத்தக்கவர்களான குழந்தைகளையும் கிழவர்களையும் விலக்கிவிட்டு நீ சாப்பிட்டாயா? வெறுக்கத்தக்கதும், செய்யத்தகாததுமான கர்மம் எதுவோ அதை நீ செய்யாதிருக்கின்றனையா? எப்பொழுதும் ப்ரியதமனும், அந்தரங்கனும், ஆத்ம பந்துவுமான ஸ்ரீகிருஷ்ணனைவிட்டுப் பிரிந்துவிட்டேன் என்றதால் சூன்யனாகிவிட்டதாய் எண்ணுகின்றாயா என்னை? இல்லாவிடில் உனக்கு (இத்தகைய) பீடையேற்படுவதற்கு இடமில்லை என்றார். (44) (எ–று)

இவ்விதம் ஸ்ரீமத்பாகவத மஹாபுராண ப்ரதமஸ்கந்தத்தில் தர்மபுத்திரருக்குண்டான ஸந்தேஹகாலத்தில் துவாரகையிலிருந்து அர்ஜுனனுடைய ஆகமனத்தை வர்ணித்தல் என்ற பதிநான்காவது அத்தியாயம் முற்றிற்று.

பதினைந்தாவது அத்தியாயம்.

(அ–கை) कलिप्रवेशमालक्ष्य धुरं न्यस्य परीक्षिति।
आरुरोह नृपः स्वर्गमिति पञ्चदशोऽब्रवीत्॥ १॥

(க–ரை) கலியின் ப்ரவேசத்தைக் கண்டு ராஜ்யபாரத்தைப் பரீக்ஷித்தினிடம் ஒப்புவித்து தர்மபுத்திரர் ஸ்வர்க்கத்தையடைந்தாரெனப் பதினைந்தாவது அத்தியாயத்தில் உபதேசிக்கப்படுகிறது. (1)

हतप्रभः। विभुं तमेवानुध्यायन्नाशक्नोत्प्रतिभाषितुम् ॥२॥ कृच्छ्रेण संस्तभ्य शुचः पाणिनाऽऽमृज्य नेत्रयोः। परोक्षेण समुन्नद्धप्रणयौत्कण्ठ्यकातरः ॥३॥ सख्यं मैत्रीं सौहृदं च सारथ्यादिषु संस्मरन्। नृपमव्रजमित्याह बाष्पगद्गदया गिरा ॥ ४ ॥ अर्जुन उवाच—वञ्चितोऽहं महाराज हरिणा बन्धुरूपिणा। येन मेऽपहृतं तेजो देवविस्मापनं महत् ॥ ५ ॥ यस्य क्षणवियो-

---

ஸூதர் சொல்லலுற்றார்—ஸ்ரீகிருஷ்ணனுடைய பிரிவினல் இளைத்தவனுகச் செய்யப்பட்டவனும், ஸ்ரீகிருஷ்ணனுடைய தோழனும், பலதறப்பட்ட சங்கைகக்கு ஆஸ்பதமான ரூபத்தைக் கண்டு ப்ராதாவான தர்மபுத்திரரால் இவ்விதம் பலவிதமாக ஊஹித்துக் கேட்கப்பட்டவனுமான அர்ஜுனன், சோகத்தினல் வாடின முகம் ஹிருதயம் இவையாகிற தாமரஸபுஷ்பத்தையுடையவனுயும், காந்தியற்றவனுயுமாகி ப்ரபுவான அந்தக் கிருஷ்ணனையே அடிக்கடி தியானித்துக்கொண்டு பதில் சொல்லச்சக்தியற்றவனுகவானுன். (1–2) கண்களினின்றும் வழிந்த யாதொரு சோகக்கண்ணீருண்டோ அவற்றைக் கண்களிலேயே கஷ்டப்பட்டு நிறுத்திக்கொண்டும், உடம்பில் வழிந்ததைக் கையினல் துடைத்துக்கொண்டும் கண்ணில் காணுதுமறைந்த ஸ்ரீகிருஷ்ணன் நிமித்தமாக ஏற்பட்ட அதிக ப்ரீதிபூர்வகமான பிரிவாற்றுமையினல் கலங்கினவனுய்க் கொண்டும், ஸாரத்யம் முதலியவற்றில் அவர் காட்டின ஸக்கியத்தையும், மைத்திரியையும் (உபகாரத்தையும்) பதிலுபகாரத்தை எதிர்பாருது இருத்தலையும் மனத்தில் எண்ணிக்கொண்டும், கண்ணீரினல் தொண்டை யடைக்கப்பட்டமைபற்றித் தழுதழுத்த வார்த்தையுடன் தமையனை அரசனைப் பார்த்துப் பின்வருமாறு சொல்லத் தொடங்கினன். (3–4) அர்ஜுனன் சொல்லலுற்றன்—ஹே மஹாராஜ! என்னை வஞ்சிக்கின்றவரான எவரால், தேவர்களையும் ஆச்சரியப்படும்படி செய்யக்கூடியதும் பெரிதுமான என்னுடைய சக்தியானது அபஹரிக்கப்பட்டதோ பந்துரூபியான அந்த ஹரியினல் நான் வஞ்சிக்கப்பட்டேன். (5) ப்ராணனற்ற இந்தப் பிதா முதலியோரின் தேஹமானது பிணம் என்று சொல்லப்படுவது எவ்விதமோ அவ்விதமே எவருடைய க்ஷணவியோகத்தினல் இந்த உலகமானது

गेन लोको ह्यप्रियदर्शनः। उक्थेन रहितो ह्येष मृतकः प्रोच्यते यथा॥ ६ ॥
यत्संश्रयाद्द्रुपदगेहमुपागतानां राज्ञां स्वयंवरमुखे स्मरदुर्मदानाम्। तेजो हृतं खलु मयाभिहतश्च मत्स्यः सज्ञीकृतेन धनुषाऽधिगता च कृष्णा॥७॥
यत्सन्निधावहमु खाण्डवमग्नयेऽदामिन्द्रं च सामरगणं तरसा विजित्य। लब्धा सभा मयकृताद्भुतशिल्पमाया दिग्भ्योऽहरन्नृपतयो बलिमध्वरे ते॥८॥
यत्तेजसा नृपशिरोङ्घ्रिमहन्मखार्थे आर्योऽनुजस्तव गजायुतसत्त्ववीर्यः। तेनाहृताः प्रमथनाथमखाय भूपा यन्मोचितास्तदनयन्बलिमध्वरे ते ॥ ९ ॥

அப்ரியமான பார்வையை யுடையதாகவாகிறதோ, *துருபதராஜனுடைய கிருஹத்தையடைந்தவர்களும், ஸ்வயம் வரத்தின் ஆரம்பத்தில் காமத்தினுல் அதிகம் மதங்கொண்டவர்களுமான அரசர்களுடைய ப்ரபாவமானது எவருடைய ஆஸ்ரயபலத்தினுல் வில்லை எடுத்ததிலிருந்தே போக்கப்பட்டதோ, பிறகு நாணேற்றின வில்லினுல் யந்திரத்துக்குமேல் சுத்துகின்ற மத்ஸ்யக்குறியானது என்னுல் அடிக்கப்பட்டதோ, திரௌபதியும் அடையப்பட்டாளோ, எவருடைய ஸன்னிதியில் நான் தேவக்கூட்டங்களுடன் கூடின இந்திரனப் பலத்தினுல் ஜயித்துக் காண்டவவனத்தை அக்னிக்குக் கொடுத்தேனே, அத்புத சில்பரூபமான மாயையையுடையதும், மயனுல் செய்யப்பட்டதுமான ஸபையானது அடையப்பட்டதோ, உமது ராஜஸூயயாகத்தில் அரசர்கள் திக்களிலிருந்து கப்பத்தைத் தானே கொண்டுவந்தனரோ, (*)எவருடைய தேஜஸ்ஸினுல் உமது தம்பியும், பதினுயிரம் யானைக்கொப்பான உத்ஸாஹசக்தியையும்,வலுவையும் உடையவரும் பூஜிக்கத்தக்கவருமான பீமஸேனன், அரசர்களின் தலையில் காலைவைத்த ஜராஸந்தனை ராஜஸூயத்துக்குவேண்டிக் கொன்றுரோ, அவனைக்கொன்று மஹாபைரவனைப் பூஜிக்கவேண்டி அந்த ஜராஸந்தனுல் கொண்டுவரப்பட்ட அரசர்கள் விடுவிக்கப்பட்டமையால் அவர்கள் உமது யாகத்தில் கப்பத்தைக்கொண்டு

---

* இது முதல் பத்துசுலோகங்களினுல் பகவானுல் செய்யப்பட்ட உபகாரங்களை ஸ்மரிக்கிறுன்.

(*) இந்த 8-வதுசுலோகமானது விருத்தமாக இருப்பதாயும் ஆயினும் வியாக்கியானஞ் செய்வதாயும் ஸ்ரீதராசாரியர் சொல்லுகிறுர்.

पत्न्यास्तवाधिमखकल्पमहाभिषेकश्लाघिष्ठचारुकबरं कितवैः सभायाम्।
स्पृष्टं विकीर्य पदयोः पतिताश्रुमुख्या यैस्तत्स्त्रियोऽकृत हतेशविमुक्तकेशाः
॥ १० ॥ यो नो जुगोप वनमेत्य दुरन्तकृच्छ्राद्दुर्वाससोऽरिविहितादयुताग्र-

---

வந்தனரோ, ஸ்மரணத்தினுல் அப்பொழுதே ப்ராப்த்தரான ஸ்ரீகிருஷ்ணனைவணங்கும்பொழுது அவருடைய கால்களில் முகத்தினின்றும் விழுந்தகண்ணீரையுடையவளான உமது பத்நியினுடைய, ராஜஸூய யாகத்தையொட்டிச் செய்யப்பட்ட மஹாபிஷேகத்தினுல் வெகு சிலாக்கியமானதும், அழகு பொருந்தினதுமான தலைமுடியானது துஷ்டர்களான எந்ததுச்சாஸனன் முதலியோரால் அவிழ்க்கப்பட்டு இழுக்கப்பட்டதோ அந்தத் துச்சாஸனன் முதலியோரின் ஸ்திரீகள் தமது பர்த்தாக்கள் கொல்லப்பட்டமைபற்றி அவிழ்க்கப்பட்ட தலைமயிரையுடையவர்களாக (எவரது உதவியால்) நம்மால் செய்யப்பட்டனரோ, [*]பதினாயிரம் சிஷ்யர்களுக்கு முந்திப் பங்க்தியில்

---

[1]பாரதத்தில் பின்வருமாறு கதைகாணப்படுகிறது—அதாவது:—ஒரு நாள் துரியோதனன் துர்வாஸமஹரிஷிக்கு ஆதித்யம் செய்தான். அதனுல் ஸந்தோஷித்த அம்முனி "வேண்டியவரனைக் கேட்டுக்கொள்" என்றார். துர்வாஸஸ்ஸின் சாபத்தினுல் பாண்டவர்கள் நசித்துவிடுவர் என மனத்தில் நிச்சயித்துக்கொண்டு அவரைப் பார்த்து "ஹேமுனே! தர்மபுத்திரர் எங்கள் குலத்தில் முக்கியமானவர், ஆனதுபற்றித் தாங்கள் இதே பதினாயிரம் சிஷ்யர்களுடன் அவருக்கு அதிதியாகப் போக வேண்டும். ஆனல் திரௌபதி வாடாதபடி அவள் சாப்பிட்டபிறகே தாங்கள் போகவேண்டும்" என்றான். பிறகு அவ்விதமே துர்வாஸஸ் வந்ததும் தர்மபுத்திரர் மிக்க ஆதரவுடன் மாத்யான்ஹிகத்தைச் செய்து கொண்டு வாருங்கள் என்றார். இவ்விதம் சொல்லப்பட்ட முனிக்கூட்டமானது அகமர்ஷண ஸ்நானஞ் செய்யவேண்டி ஜலத்தில் முழுகிற்று. அப்பொழுது கவலைகொண்ட திரௌபதியினுல் நினைக்கப்பட்ட மாத்திரத்தில் ஸ்ரீகிருஷ்ணன் தனது மடியிலிருக்கின்ற ஸ்ரீருக்மிணியைக்கூடத் தள்ளிவிட்டு அதே க்ஷணத்தில் பக்தவாத்ஸல்யத்தினுல் ஓடிவந்தார். திரௌபதி நடந்த ஸமாசாரத்தைச் சொன்னதும் "ஹே த்ரௌபதி! எனக்குப் பசியாக இருக்கிறது. முதலில் எனக்குச் சாப்பாடுபோடு" என்றார். அதற்கு அவள் ஹே ஸ்வாமின்! ஸூரியன் கொடுத்த அக்ஷய பாத்திரத்தில் நான் சாப்பிடும்வரை அன்னம் வளர்ந்துவருமாயினும் எல்

भुग्यः। शाकान्नशिष्टमुपयुज्य यतस्त्रिलोकीं तृप्तामंस्त सलिले विनिमग्न-सङ्घः॥ ११॥

यत्तेजसाथ भगवान्युधि शूलपाणिर्विस्मापितः स गिरिशोऽस्त्रमदा-न्निजं मे। अन्येऽपि चाहममुनैव कलेवरेण प्राप्तो महेन्द्रभवने महदासना-र्धम्॥ १२॥ तत्रैव मे विहरतो भुजदण्डयुग्मं गाण्डीवलक्षणमरातिवधाय देवाः। सेन्द्राः श्रिता यदनुभावितमाजमीढ तेनाहमद्य मुषितः पुरुषेण

புஜிக்கின்றவரான யாதொரு துர்வாஸஸ் உண்டோ அவர் நிமித்த மாக எவர் வனத்துக்குவந்து அக்ஷயபாத்திரத்தில் எஞ்ஜியுள்ள கீரையாகிற அன்னத்தை யுட்கொண்டு எதை யுட்கொண்டதனல் ஜலத்தில் ஸ்னனத்துக்காக முழுகின ருஷிகளின் கூட்டமானது முவ்வுலகையும் திருப்தியுள்ளதாக எண்ணிற்றே அவ்விதம் செய்து சத்துருவான துரியோதனனுற் செய்யப்பட்ட தாண்டமுடியாத கஷ்டத்திலிருந்து நம்மை காப்பாற்றினரோ, மேலும், எவருடைய தேஜஸ்வினல் சூலபாணியான பகவான், யுத்தத்தில் பார்வதி யுடன்கூட ஆச்சரியத்தை யடைந்தவராய்க் கொண்டு தன்னுடைய பாசுபதாஸ்திரத்தை எனக்குக் கொடுத்தாரோ, மற்றுமுள்ள லோக பாலர்களும் தமது அஸ்திரங்களைக் கொடுத்தனரோ, மஹேந்திரனு டைய வீட்டில் இதே சரீரத்துடன் இந்திரனுடைய பெரிய ஆஸனத் தின் பாதியை நான் அடைந்தேனே? ஹே அஜமீட=யுதிஷ்டிர! அந்த ஸ்வர்க்கத்திலேயே நான் விளையாடிக்கொண்டிருக்கும்பொழுது எவரால் சக்தியுள்ளதாகச் செய்யப்பட்டதும், காண்டீவத்தை அடையாளமாகவுடையதுமான எனது இரண்டு புஜங்களையும் இந் திரனுடன் கூடின தேவர்கள், நிவாதகவசர் முதலிய சத்துருக்களின்

லாருக்கும் போஜனமளித்து நான் சாப்பிட்டாகிவிட்டமையால் அதில் அன்னமில்லை என்றுள். அதுகேட்ட பகவான் வெகு நிர்ப்பந்தமாக அக்ஷயபாத்திரத்தைக் கொண்டுவரச்செய்து அதின் கழுத்தில் ஒட்டிக் கொண்டிருக்கும் கீரையைச்சாப்பிட்டு "இதனல் விச்வாத்மாவான பக வான் ப்ரீதியையடையட்டும்" என்றார். பிறகு முனிக்கூட்டத்தைப் போஜனத்துக்கு அழைக்கும்படி பீமஸேனனை அனுப்பினர். அந்த முனிக் கூட்டமானது வீணில் பாகஞ்செய்யும்படி செய்தோமே அதனல் என்ன வருமோ எனப்பயந்து ஓட்டம் பிடித்தது என்றும்.

भूम्ना ॥ १३ ॥ यद्बान्धवः कुरुबलाब्धिमनन्तपारमेको रथेन ततरेऽहमतीर्ण-सत्त्वम्। प्रत्याहृतं बहु धनं च मया परेषां तेजास्पदं मणिमयं च हृतं शिरोभ्यः॥ १४ ॥ यो भीष्मकर्णगुरुशल्यचमूष्वदभ्रराजन्यवर्यरथमण्डल-मण्डितासु। अग्रेचरो मम विभो रथयूथपानामायुर्मनांसि च दृशा सह ओज आच्छत्॥ १५ ॥ यद्दोष्षु मा प्रणिहितं गुरुभीष्मकर्णद्रौणित्रिगर्त-शलसैन्धवबाह्लिकाद्यैः। अस्त्राण्यमोघमहिमानि निरूपितानि नो पस्पृशुर्नृ-

---

வதத்துக்குவேண்டி ஆஸ்ரயித்தனரோ, எங்கும் நீக்கமற நிறைந் துள்ளவரான அந்தப் புருஷனுல் நானிப்பொழுது வஞ்சிக்கப்பட் டேன். (6–13) எந்தக் கிருஷ்ணனைப் பந்துவாகவுடைய நான் தாண்டுதற்கியலாத பீஷ்மாதிகளாகிற திமிங்கலாதிகளை யுடையதும், காம்பீரியத்தினுலும், தைசத்தினுலும் எல்லையற்றதுமான கௌரவ சேனையாகிற ஸமுத்திரத்தைத் தேரினுல் ஒருவனுகவே தாண்டி னேனே, எவரைப் பந்துவாகக்கொண்ட என்னுல் சத்துருக்க ளால் அபஹரிக்கப்பட்ட கோ (பசு) ரூபமான தனமானது திருப் பிக் கொண்டுவரப்பட்டதோ, சத்துருக்களின் தலைகளிலிருந்து அவர்களின் ப்ரபாவத்துக்குக் காரணமான முண்டாசும், வெகு தனமுள்ள மணிமயமான கிரீடமும் மோஹனுஸ்திரத்தினுல் மோ ஹிக்கச் செய்து அபஹரிக்கப்பட்டதோ, ஹே விபோ! பீஷ்மர், கர்ணன், குருவான துரோணர், சல்யன் இவர்களின் சைன்னி யங்கள் அனேகம் சிறந்த அரசர்களின் தேர்க் கூட்டங்களினுல் அலங்கரிக்கப்பட்டனவாக விருக்கும் பொழுது எந்தக் கிருஷ்ணன் எனக்கு முன்னுல் தேர்ப்பாகனுக இருந்துகொண்டு தனது திருஷ் டியினுலேயே அந்த ரத யூதபர்களின் ஆயுளையும், மனதையும்=உத் ஸாஹ சக்தியையும், ஸஹஸ்ஸை (சரீரபலத்தை) யும், ஓஜஸ்ஸை (அஸ்திராதி ஸாமர்த்தியத்தை) யும் அபஹரித்தாரோ, எவருடைய புஜங்களில் ஸ்தாபிக்கப்பட்டவனுன என்னை, குருவான துரோணர், பீஷ்மர், கர்ணன், அஸ்வத்தாமா, த்ரிகர்த்ததேசாதிபதியான சுசர் மா, சல்யன், ஜயத்ரதன், சந்தனுவின் ப்ராதாவான பாஹ்லிகன், முதலியோரால் ப்ரயோகிக்கப்பட்டனவும், வீண்போகாத மஹி மையை யுடையனவுமான அஸ்திரங்கள், நரஸிம்ஹ பக்தனுன ப்ரஹலாதனை ஹிரண்யகசிபுவின் அஸ்திரங்கள்போலத் தொடாது

हरिदासमिवासुराणि ॥ १६ ॥ सौत्ये वृतः कुमतिनात्मद ईश्वरो मे यत्पाद-पद्ममभवाय भजन्ति भव्याः। मां श्रान्तवाहमरयो रथिनो भुविष्ठं न प्राह-रन्यदनुभावनिरस्तचित्ताः ॥ १७ ॥ नर्माण्युदारुचिरस्मितशोभितानि हे पार्थ हेऽर्जुन सखे कुरुनन्दनेति। संजल्पितानि नरदेव हृदिस्पृशानि स्मर्तुर्लुठन्ति हृदयं मम माधवस्य ॥ १८ ॥ शय्यासनाटनविकत्थनभोजना-दिष्वैक्याद्वयस्य ऋतवानिति विप्रलब्धः। सख्युः सखेव पितृवत्तनयस्य

இருந்தனவோ, புருஷனும் பூமாவுமான அவரால் நான் வஞ்சிக்கப் பட்டேன். (14–16)

ம்ரேஷ்டர்கள் மோக்ஷத்துக்குவேண்டி எவருடைய சரணா விந்தத்தைப் பஜிக்கின்றனரோ, * ஜயத்ரதவதகாலத்தில் களைத்த குதிரைகளையுடையவனும், ஜலந்தேடவேண்டி தேரிலிருந்து பூமி யில் வந்தவனுமான என்னைச் சத்துருக்களான ரதிகர்கள் எவரது மஹிமையினல் மயக்கப்பட்ட சித்தத்தை யுடையவர்களாய் அடிக் காதிருந்தனரோ ஆத்மாவைக்கொடுத்தவரும், ஈச்வரனுமான அவர் கெட்ட புத்தியுள்ளவனுன என்னல் தேரோட்டும் விஷயத்தில் வரிக்கப்பட்டாரே? இது பெருத்த குற்றமன்றே? (17) ஹே நரதேவ! உதாரமாயும் (கம்பீரமாயும்) அழகுபொருந்தியதாயுமுள்ள புன்சிரிப்பினல் சோபிதங்களான மாதவனுடைய விளையாட்டுவார்த் தையும், அதுபோல வேறுகாரிய ஸமயங்களில் சொல்லப்பட்டன வும் தேனெழுகும் அக்ஷரங்களையுடையனவும், மனத்தைக் கவரக் கூடியனவுமான ஹே பார்த்த! ஹே அர்ஜுன! ஹே ஸகே! ஹே குருநந்தன! என்ற மாதவனின் வார்த்தைகள் நினைக்கும் என்னு டைய மனத்தைக்கலக்குகின்றனவே?. (18) படுக்கை, ஆஸனம், வெளியில் ஸஞ்சாரம், தற்புகழ்ச்சி செய்துகொள்ளல், சாப்பிடல் முதலியவற்றை நாங்களிருவரும் ஒன்றுயிருந்து செய்வது வழக்க

---

* ஜயத்ரதவதகாலத்தில் குதிரைகள் ஜலபானஞ் செய்யாது களைத் திருப்பதைக் கண்டு தேரிலிருந்து பூமியில் வந்து பாணங்களினல் பூமி யைப் பிளந்து ஜலத்தை அர்ஜுனன் ஸம்பாதித்தான். அப்பொழுது சத்துருக்கள் கிருஷ்ணனுடைய மஹிமையினல் மயங்கின புத்தியை யுடையவர்களாய் அர்ஜுனன்மீது அம்புபோடாதிருந்தனர்.

सर्वं सेहे महान्महितया कुमतेरघं मे ॥ १९ ॥ सोऽहं नृपेन्द्र रहितः पुरुषोत्तमेन सख्या प्रियेण सुहृदा हृदयेन शून्यः। अध्वन्युरुक्रमपरिग्रहमङ्ग रक्षन्गोपैरसद्भिरबलेव विनिर्जितोऽस्मि ॥ २० ॥ तद्वै धनुस्त इषवः स रथो हयास्ते सोऽहं रथी नृपतयो यत आनमन्ति। सर्वं क्षणेन तदभूदसदीशरिक्तं भस्मन्हुतं कुहकराद्धमिवोप्तमूष्याम् ॥ २१ ॥

राजंस्त्वयाभिपृष्टानां सुहृदां नः सुहृत्पुरे। विप्रशापविमूढानां निघ्नतां मुष्टिभिर्मिथः ॥ २२ ॥ वारुणीं मदिरां पीत्वा मदोन्मथितचेतसाम्। अजान-

---

மாதலால் ஒருஸமயம் அதில் ஸ்ரீகிருஷ்ணன் தவறினதைக் கண்டு "ஹே தோழனை கிருஷ்ண! (*)நீ நிரம்பவும் ஸத்யத்துடன் கூடினவன்" என வக்ரமான வார்த்தையினல் இகழப்பட்டபோதிலுங்கூட அதிகம் ஐகமத்தியமிருந்ததையொட்டி மஹானனை அவர் தோழனுடைய குற்றத்தைத் தோழன் பொருப்பதுபோலும், புத்திரனுடைய குற்றத்தைப் பிதாபொருப்பது போலும் கெட்டபுத்தியுள்ள என்னுடைய குற்றத்தைப் பொருத்தாரே?. (19) ஹே ந்ருபேந்திர! அந்த நான் ஸகாவும், ப்ரியனும், ஸ்ரீஹிருத்துமான புருஷோத்தமனை விட்டுப் பிரிந்தேன். அதனல் ஹிருதய சூன்யனாகி (மூர்ச்சிதப்ராயனாக) ஆகிவிட்டேன். ஹே அங்க! உருக்கிரமனனை பகவானுடைய பதினாயிரம் ஸ்திரீகளை ரக்ஷிக்கின்ற நான் நீசர்களான கோபாலர்களால் ஸ்திரீபோல் ஜயிக்கப்பட்டேன். (20) எவை என்னிடமிருப்பனபற்றி அரசர்கள் என்னை வணங்கினரோ அதே தனுஸ், அதே பாணங்கள், அதே தேர், அதே நான் தேராளி, அவையாவும் ஈசனனை கிருஷ்ணனில்லாது போகவே நல்ல மந்திர விதானங்களுள்ளதாயினுங்கூட சாம்பலில் செய்த ஆஹுதிபோலும், அதிகம் ப்ரீதியுள்ளவனுயினுங்கூட மாயாவியான புருஷனிடமிருந்து அடையப்பட்ட பொருள் போலும், நன்கு உழுது செப்பனிட்டபோதிலும் களார் பூமியில் விதைக்கப்பட்ட விதைபோலும், அஸத்தாக=காரியத்துக்குப்பயன்படாததாக, வாகிவிட்டது. (21)

ஹே ராஜன்! ஸ்ரீஹிருத்தான கிருஷ்ணனுடைய பட்டினத்தில் (துவாரகையில்) உம்மால் கேட்கப்பட்டவர்களும், ப்ராம்ஹண

(*) பொய்த்துப் போனவனைப்பார்த்து நிரம்பவும் ஸத்யவான் என்று சொல்லுவது வக்ரோக்தியாகும்.

तामिवान्योन्यं चतुःपञ्चावशेषिताः॥ २३ ॥ प्रायेणैतद्भगवत ईश्वरस्य विचेष्टितम्। मिथो निघ्नन्ति भूतानि भावयन्ति च यन्मिथः॥ २४ ॥ जलौकसां जले यद्वन्महान्तोऽदन्त्यणीयसः। दुर्बलान्बलिनो राजन्महान्तो बलिनो मिथः॥ २५ ॥ एवं बलिष्ठैर्यदुभिर्महद्भिरितरान्विभुः। यदून्यदुभिरन्योन्यं भूभारान्संजहार ह॥ २६ ॥ देशकालार्थयुक्तानि हृत्तापोपशमानि च। हरन्ति स्मरतश्चित्तं गोविन्दाभिहितानि मे ॥२७॥ एवं चिन्तयतो जिष्णोः

சாபத்தினுல் மதிமயக்கத்தை யடைந்தவர்களும், வருணனுல் அனுப்பப்பட்ட மத்யத்தைக் குடித்து அதனுலேற்பட்ட மதத்தினுல் அழிக்கப்பட்ட சித்தத்தை யுடையவர்களும் ஒருவரை யொருவர் அறியாதவர்கள்போல கழிக்கோரைகளினுல் ஒருவரை யொருவர் அடித்துக் கொண்டவர்களுமான நமது சுஹிருத்துக்களுக்குள் நாலோ, ஐந்தோ பேர்கள்தான் எஞ்சியிருக்கின்றனர். (22–23) ப்ராணிகள் ஒருவரை யொருவர் கொல்லுவதும், ஒருவரை யொருவர் காப்பதும் யாதுண்டோ இது பெரும்பாலும் ஈச்வரனுன பகவானுடைய சேஷ்டிதமே(செய்கையே)யாகும். (24) ஹே ராஜன்! ஜலத்தில் வஸிக்கும் மீன்களுக்குள் பெரிய மீன்கள் சிறிய மீன்களையும், வலுவுள்ளவர்கள் வலுவற்றவர்களையும், மஹான்களும் வலுவுள்ளவர்களும் ஒருவருக் கொருவரையும் எவ்விதம் அழிக்கின்றனரோ, இவ்விதமே விபுவான பகவான் பலிஷ்டர்களான பாண்டவர்களைக் கொண்டு துர்ப்பலர்களான துரியோதனன் ஜராஸந்தன் முதலியோரைக் கொன்றும், யாதவர்களைக் கொண்டு மற்றவர்களான சால்வன் முதலியோரைக் கொன்றும், யாதவர்களைக் கொண்டே யாதவர்களை பரஸ்பரம் கொன்றும் பூமியின் சுமையை இரக்கியிருக்கிறார். (25–26) தேசம் காலம் இவற்றுக்கேற்ற பொருளுள்ளனவும், மனத்திலுள்ள பீடையைச் சாந்தமாக்குகின்றனவுமான கோவிந்தனுடைய வசனங்கள் அவற்றை நினைக்கும் என்னுடைய மனதைக் கொள்ளைகொள்ளுகின்றன. (27) [*]இவ்விதம் மிக்க ஆழ்ந்த ஸ்னேஹத்தினுல் ஸ்ரீகிருஷ்ணனுடைய சரணாரவிந்தத்தைச் சிந்திக்கின்ற அர்ஜுனனுடைய புத்தியானது சாந்தை

---

[*]இந்த 28-வது சுலோகம் முதல் சூதபௌராணிகர் சொல்லுவது.

कृष्णपादसरोरुहम्। सौहार्देनातिगाढेन शान्तासीद्विमला मतिः॥ २८॥ वासुदेवाङ्घ्र्यनुध्यानपरिबृंहितरंहसा। भक्त्या निर्मथिताशेषकषायधिषणोऽर्जुनः॥ २९॥ गीतं भगवता ज्ञानं यत्तत्संग्राममूर्धनि। कालकर्मतमोरुद्धं पुनरध्यगमत्प्रभुः॥ ३०॥ विशोको ब्रह्मसंपत्त्या संछिन्नद्वैतसंशयः। लीनप्रकृतिनैर्गुण्यादलिङ्गत्वादसंभवः॥ ३१॥ निशम्य भगवन्मार्गं संस्थां यदुकुलस्य च। स्वःपथाय मतिं चक्रे निभृतात्मा युधिष्ठिरः॥ ३२॥

யாயும் (சோகமற்றதாயும்) விமலையாயும் (வைராக்கியமுள்ளதாயும்) ஆகிவிட்டது. (28) வாஸுதேவனுடைய சரணங்களின் தியானத்தினல் விருத்திசெய்யப்பட்ட வேகத்தையுடைய பக்தியினல் வேருடன் களையப்பட்ட காமாதிஸமஸ்த வாஸனையையுமுள்ள புத்தியையுடையவனும், விபுவுமான அர்ஜுனன் யுத்தத்தின் ஆரம்பத்தில் பகவானுலுபதேசிக்கப்பட்டதும், காலத்தினுலும், கர்மங்களினுலும் தமஸ்ஸினுலும் (போகாபி நிவேசத்தினுலும்) மறைக்கப்பட்டதுமான யாதொரு க்ஞானமுண்டோ அதைத் திரும்பவும் அடைந்துவிட்டான். (29–30) †ப்ரம்ஹ ஸம்பத்தியினல் (வேதாந்த ப்ரவணமூலம் ப்ரம்ஹமாக நானிருக்கிறேன் என்ற க்ஞானத்தினல்) ப்ரகிருதிலயமும் (அக்ஞான நாசமும்) அதுகாரணமாகவுண்டான குணங்களின் நிவிருத்தியும் உண்டானமையின் லிங்கசரீர நாசமேற்பட்டு அதனல் ஸ்தூலசரீரத்தோற்றமானது இல்லாதுபோகவே அதிலிருந்து த்வைதரூபமான ஸம்சயமானது அடியோடுவிலகிச் சோகமற்றவனுக வாகிவிட்டான். (31)

தர்மபுத்திரர் பகவானுடைய வழியைக் கண்டும் யாதவகுலத்தின் நாசத்தைக்கேட்டும், (நாரதராற் சொல்லப்பட்டதை நினைவுக்குக் கொண்டுவந்தும்) நிஸ்சலமான சித்தமுள்ளவராகவாகி ஸ்வர்

---

† ஞானத்தின் பலன் இதனுலுபதேசிக்கப்படுகிறது. சோகத்துக்குக் காரணம் த்வைதப்ரமம். அதற்குக் காரணம் தேஹம். அதற்குக் காரணம் லிங்கதேஹம். அதற்குக் காரணம் குணங்கள். அவற்றுக்குக் காரணம் அவித்யையாகும். ஆகவே ஞானத்தினல் அவித்யையாகிற அக்ஞானம் நாசமடைந்ததும் அவித்யையைக் காரணமாகக் கொண்ட குணங்கள் முதலியன முறையே நசித்துவிடுகின்றன என வுபதேசிக்கப்படுகிறது.

पृथाप्यनुश्रुत्य धनञ्जयोदितं नाशं यदूनां भगवद्गतिं च ताम्। एकान्त-भक्त्या भगवत्यधोक्षजे निवेशितात्मोपरराम संसृतेः॥ ३३॥ यया हरञ्भुवो भारं तां तनुं विजहावजः। कण्टकं कण्टकेनेव द्वयं चापीशितुः समम् ॥ ३४॥ यथा मत्स्यादिरूपाणि धत्ते जह्याद्यथा नटः। भूभारः क्षपितो येन जहौ तच्च कलेबरम् ॥ ३५॥

यदा मुकुन्दो भगवानिमां महीं जहौ स्वतन्वा श्रवणीयसत्कथः। तदाऽहरेवाप्रतिबुद्धचेतसामधर्महेतुः कलिरन्ववर्तत ॥ ३६॥ युधिष्ठिर-

---

க்ககமனத்தையும் பொருட்டு புத்தியைச்செலுத்தினர். (32) குந்தியம்மாளும் அர்ஜுனனுற் சொல்லப்பட்ட யதுக்களின் நாசத்தையும், அறிதற்கியலாத பகவத்கதியையும் கேட்டு அதோக்ஷஜனனபகவானிடத்தில் நிலைத்தபக்தியினுல் செலுத்தப்பட்ட மனஸ்ஸையுடையவளாய் ஸம்ஸாரபந்தத்தினின்றும் ஓய்ந்தாள் (அதாவது:— தேஹத்தை விட்டாள்.) (33) ‡முள்ளினுல் முள்ளைப் போக்குவதுபோல அஜனன பகவான் எந்த யாதவரூபமான சரீரத்தினுல் பூமியின் பாரரூபமான மற்ற சரீரத்தையும் போக்கினரோ, யாதவர்கள் ரூபமான சரீரமும், பூமிக்குப் பாரபூதர்களான அரசர்களின் சரீரமும் ஆகிய இரண்டும் அழிக்கும் விஷயத்தில் ஈச்வரனுக்கு ஸமமானதே யாகும். (34) சொந்தமான ரூபத்துடனிருக்கும் நடன் வேறுரூபங்களை எடுப்பதும் அவற்றை மறைத்துக்கொள்ளுவதும் எவ்விதமோ, ஆண்டவன் மத்ஸ்யாதிரூபங்களை எடுத்துத் திரும்பவும் அவற்றை மறைத்துக் கொள்ளுவதும் எவ்விதமோ, அவ்விதமே எந்தச் சரீரத்தினுல் பூமியின் சுமையானது போக்கப்பட்டதோ அந்தச் சரீரத்தையும் மறைத்துக் கொண்டார். (35) ச்ரவணஞ் செய்யத்தக்கதும், சிறந்ததுமான, கதையையுடைய வரும், பகவானுமான முகுந்தன் தனது ஸ்ரீமூர்த்தியுடன்கூட எப்பொழுது இந்தப் பூமியை விட்டாரோ (இந்தப் பூமியினின்றும்

---

‡ யாதவர்களைக் காட்டிலும் பகவானுக்கு வைலக்ஷண்யமானது அடிக்கடி சொல்லப்பட்டபோதிலுங்கூட அதை யறிந்து கொள்ளாமல் யாதவஸாம்யத்தைச் சொல்லுகின்ற மந்தபுத்தியுள்ளவர்களைக் குறித்து வைலக்ஷண்யத்தை இரண்டு சுலோகங்களினுல் தெளிவுபடுத்துகிறார்.

स्तत्परिसर्पणं बुधः पुरे च राष्ट्रे च गृहे तदात्मनि। विभाव्य लोभानृत-
जिह्महिंसनाद्यधर्मचक्रं गमनाय पर्यधात् ॥ ३७ ॥ स्वराट् पौत्रं विनयिन-
मात्मनः सुसमं गुणैः। तोयनीव्याः पतिं भूमेरभ्यषिञ्चद्गजाह्वये ॥ ३८ ॥
मथुरायां तथा वज्रं शूरसेनपतिं ततः। प्राजापत्यां निरूप्येष्टिमग्नीनापिब-
दीश्वरः ॥ ३९ ॥ विसृज्य तत्र तत्सर्वं दुकूलवलयादिकम्। निर्ममो
निरहंकारः संछिन्नाशेषबन्धनः ॥ ४० ॥ वाचं जुहाव मनसि तत्प्राण इतरे

தனது ஸ்ரீமூர்த்தியை பறைத்துக் கொண்டாரோ) அதே தினத்தில் *அவிவேகிகளுக்கு அதர்ம ஹேதுவான கலியானது (*)பின்தொடர்ந்து வந்தது. (36) அப்பொழுது புத்திமானான யுதிஷ்டிரர், லோபம், பொய், கௌடில்யம், ஹிம்ஸை முதலிய அதர்மசக்கிரத்தையுடைய அந்தக் கலியின் ப்ரவிருத்தியைப் பட்டினத்திலும், ராஜ்யத்திலும், வீட்டிலும், தன்னிடத்திலும் கண்டுகொண்டு ஸ்வர்க்க கமனத்தையும்பொருட்டு நிஸ்சயம் செய்துகொண்டார். (37) ஸ்வராட்டான தர்மபுத்திரர் குணங்களால் தனக்கு நிக்க ஒத்தவனும், வணக்கமுள்ளவனுமான பௌத்திரனே நாலாபக்கங்களிலுமுள்ள ஸமுத்திர ஜலத்தையே நீவியாக (ஒட்டியாணமாக) உடைய பூமிக்குப் பதியாக ஹஸ்தினாபட்டினத்தில் அபிஷேகம் செய்து வைத்தார். (38)

அதுபோல அநிருத்தனின் புத்திரனான வஜ்ரனையும் சூரஸேன தேசத்துக்குப் பதியாக மதுரையில் அபிஷேகம் செய்துவைத்தார். பிறகு எல்லாப் பொருளையும் பரித்யாகஞ்செய்வதில் ஸமர்த்தரான தர்மபுத்திரர் ப்ராஜாபத்யேஷ்டியைச் செய்து அக்னிகளை ஆத்ம ஸமாரோபணஞ் செய்துகொண்டார். (39) வெண்பட்டு பொன் வளை இவற்றை ஆதியாகவுடைய அவையாவையும் அவ்விடத்தில் விட்டு நன்கு போக்கப்பட்ட ஸகல உபாதிகளையு முடையவராயும், ஆனதுபற்றியே தேஹத்தில் நான் என்ற எண்ணத்தையும், வெளி

---

*அவிவேகிகளுக்குக் கலி ப்ரபுவேயன்றி விவேகிகளுக்கு ப்ரபுவன்று என்பது இதனால் பெறப்பட்டது. (*) முன்னரே அம்சமாக ப்ரவேசத்தை யடைந்த கலிக்குப் பகவான் மறைந்தபிறகு பூர்ணப்ரவேசம் ஏற்பட்டது என்பதுகருத்து.

च तम्। मृत्यावपानं सोत्सर्गं तं पञ्चत्वे ह्यजोहवीत्॥ ४१ ॥ त्रित्वे हुत्वाथ पञ्चत्वं तच्चैकत्वेऽजुहोन्मुनिः। सर्वमात्मन्यजुहवीद्ब्रह्मण्यात्मानमव्यये ॥४२॥ चीरवासा निराहारो बद्धवाङ्मुक्तमूर्धजः। दर्शयन्नात्मनो रूपं जडोन्मत्त पिशाचवत् ॥ ४३ ॥ अनवेक्षमाणो निरगादश्रृण्वन्बधिरो यथा। उदीचीं प्रविवेशाशां गतपूर्वां महात्मभिः। हृदि ब्रह्म परं ध्यायन्नावर्तेत यतो गतः ॥ ४४ ॥ सर्वे तमनु निर्जग्मुर्भ्रातरः कृतनिश्चयाः। कलिनाऽधर्ममित्रेण

யிலுள்ளவற்றில் என்னுடையது என்ற எண்ணத்தையும் விட்ட வராயும் கொண்டு, வாக்கையும் அதன் காரியமான சப்தத்தையும் மனஸ்ஸில் ஹோமஞ்செய்தார். மனதையும் அதன் காரியமான ஸங்கல்பத்தையும் ப்ராணனிலும், ப்ராணனையும் அதன் காரியமான பஹிர் கமனத்தையும் அபானனிலும், உத்ஸர்க்கமென்ற காரியத் துடன்கூடின அபானனை அதற்கு அபிமானி தேவதையான மிருத்யு விலும், அந்த மிருத்யுவை பஞ்சபூதகாரியமான தேஹத்திலும் ஹோமஞ்செய்தார். தேஹத்துக்கு மரணமே யொழிய ஆத்மாவுக் கில்லையென வெண்ணினார். (40–41) முனியான தர்மபுத்திரர் பஞ்சபூதகாரியமான தேஹத்தை குணத்ரயத்தில் ஹோமஞ்செய்து பிறகு அம்மூன்று குணங்களையும் ஒன்றான அவித்யையில் ஹோ மஞ்செய்து ஸர்வாரோபத்துக்கும் காரணமான அவித்யையை ஆத் மா (ப்ரத்யகாத்மா) வினிடத்திலும் அந்த ஆத்மாவை அவ்யயமான ப்ரம்ஹத்தினிடத்திலும் ஹோமஞ் செய்தார். (42) மரயுரியை வஸ்திரமாகவுடையவராகவும், ஆஹாரமில்லாதவராகவும், மௌனி யாகவும், தொங்கின தலைமயிரையுடையவராகவும், ஜடன் போலும், பித்தன்போலும், பிசாசம்போலும் தனது ரூபத்தைக் காண்பித்துக் கொண்டும், தப்பி முதலியோரை எதிர்பாராதவராகவும், செவிடன் போல எதையும் காதில் வாங்காதவராகவும் வெளிக்கிளம்பி மன தில் பரம்ப்ரம்ஹத்தைத் தியானித்துக் கொண்டும், எந்தத்திக்கை யடைந்தவன் திரும்புவதில்லையோ அப்பேர்ப்பட்டதும் மஹாத் மாக்களினால் முன்னர் போகப்பட்டதுமான வடக்குதிக்கில் பிரவே சித்தார். (43–44)

அதர்மத்தை மித்திரனாகவுடைய கலியினால் பூமியிலுள்ளப்ர ஜைகள் தொடப்பட்டதைக் கண்டு ஸ்வர்க்கமனத்தில் செய்யப்

दृष्ट्वा स्पृष्टाः प्रजा भुवि ॥४५॥ ते साधुकृतसर्वार्था ज्ञात्वाऽऽत्यन्तिकमात्मनः। मनसा धारयामासुर्वैकुण्ठचरणाम्बुजम् ॥ ४६ ॥ तद्ध्यानोद्रिक्तया भक्त्या विशुद्धधिषणाः परे। तस्मिन्नारायणपद एकान्तमतयो गतिम् ॥ ४७ ॥ अवापुर्दुरवापां त असद्भिर्विषयात्मभिः। विधूतकल्मषाः स्थानं विरजेनात्मनैव हि ॥ ४८ ॥ विदुरोपि परित्यज्य प्रभासे देहमात्मवान्। कृष्णावेशेन तच्चित्तः पितृभिः स्वक्षयं ययौ ॥ ४९ ॥ द्रौपदी च तदाज्ञाय पतीनामनपेक्षताम्। वासुदेवे भगवति ह्येकान्तमतिराप तम् ॥ ५० ॥ यः

பட்ட நிஶ்சயத்தையுடையவர்களான எல்லா ப்ராதாக்களும் அந்தத் தர்மபுத்திரரைப் பின்தொடர்ந்தனர். (45) நன்கு அனுஷ்டிக்கப் பட்ட தர்மாதிகளான எல்லாப் புருஷார்த்தங்களையு முடையவர் களான அவர்கள் வைகுண்டனுன பகவானுடைய சரணாரவிந்தமே தான் ஆத்மாவுக்குச் சரணம் (ரக்ஷகம்) எனவறிந்து கொண்டு அதையே மனத்தினுல் தரித்தனர். (46) அந்தச் சரணாரவிந்தத் தியானத்தினுல் பெருக்கையடைந்த பக்தியினுல் விசுத்தமான புத்தி யையுடையவர்களும், ஆனதுபற்றியே போக்கப்பட்ட கல்மஷத்தை யுடையவர்களுமான அவர்கள் மேலான அந்த நாராயண ஸ்வரூபத் தில், விஷயத்தில் செலுத்தின புத்தியை யுடையவர்களான அஸா துக்களால் அடைதற்கரிதானதும் சுத்தமான ஆத்மஸ்வரூபத்து டனே அவஸ்தான ரூபமானதுமான கதியை (இரண்டறக்கலத்தலை) அடைந்தனர். (47–48) மனோஜயமுள்ளவரான விதுரரும், தீர்த் தாடனஞ் செய்து கொண்டு ப்ரபாஸதீர்த்தத்தையடைந்து ஶ்ரீகிருஷ் ணனிடம் சித்தத்தை ப்ரவேசிக்கச்செய்து தன்மயமான சித்தமுள்ள வராய் தேஹத்தைப் பரித்யாகஞ்செய்து அப்பொழுது அழைத்துக் கொண்டு போகவந்தவர்களான பிதிருக்களுடன் கூட தனது அதி காரஸ்தானத்தை (யமபதவியை) அடைந்தார். (49) திரௌபதி யும் அப்பொழுது பதிகளுக்குத் தன்னைக் குறித்து விருப்பமில்லா திருத்தலை அறிந்து கொண்டு வாஸுதேவனுன பகவானிடத்தில் நிலைத்த புத்தியையுடையவளாய் அவரையடைந்தாள். (50) எவன் மிக்கமேஷமத்தைத் தரக்கூடியதும், பரிசுத்தமுமான பகவத்ப்ரியர் களான பாண்டுபுத்திரர்களின் இம்மாதிரியான யாதொரு முக்தி

श्रद्धयैतद्भगवत्प्रियाणां पाण्डोः सुतानामिति संप्रयाणम्। शृणोत्यलं स्वस्त्ययनं पवित्रं लब्ध्वा हरौ भक्तिमुपैति सिद्धिम्॥ ५१॥

इति श्रीमद्भागवते महापुराणे प्रथमस्कन्धे पाण्डवस्वर्गारोहणं नाम पञ्चदशोऽध्यायः॥ १५॥

अथ षोडशोऽध्यायः॥

सूत उवाच—ततः परीक्षिद्द्विजवर्यशिक्षया महीं महाभागवतः शशास ह। यथा हि सूत्यामभिजातकोविदाः समादिशन्विप्र महद्गुणस्तथा॥ १॥ स उत्तरस्य तनयामुपयेम इरावतीम्। जनमेजयादींश्चतुर-

---

யுண்டோ இதை ப்ரத்தையுடன் ப்ரவணஞ் செய்கின்றானே அவன் ஹரியினிடத்தில் பக்தியை அடைந்து முடிவில் முக்தியையும் அடைந்து விடுகிறான். (51) (எ—று)

இவ்விதம் ஸ்ரீமத்பாகவத மஹாபுராண ப்ரதமஸ்கந்தத்தில்
பாண்டவஸ்வர்க்காரோஹண நிரூபணமென்ற
பதினைந்தாவது அத்தியாயம் முற்றிற்று.

பதினாறுவது அத்தியாயம்.

(அ—கை) ततश्च षोडशे भूमिधर्मयोः कलिखिन्नयोः।
संवादे वर्ण्यते प्राप्तिः पालकस्य परीक्षितः॥ १॥

(க—ரை) பிறகு பதினாறுவது அத்தியாயத்தில் கலியினால் பீடையையடைந்தவர்களான பூமி தர்மம் இவர்களின் ஸம்வாத காலத்தில் பூமி தர்மம் இவற்றைப் பரிபாலனஞ்செய்கின்ற பரீக்ஷித்தின் ப்ராப்த்தியானது வர்ணிக்கப்படுகிறது. (1) (எ—று)

ஸூதர் சொல்லலுற்றார்—ஹே விப்ர! பிறகு மஹாபாகவதரான பரீக்ஷித்து ஜாதகர்மஸமர்த்தர்கள் ஜனனகாலத்தில் எவ்விதமுபதேசித்தனரோ அத்தகைய சிறந்த குணங்களையுடையவராய்க் கொண்டு சிறந்த ப்ராம்ஹணர்களின் உபதேசப்படி பூமியை ஆண்டு

स्तस्यामुत्पादयत्सुतान्॥ २ ॥ आजहाराश्वमेधांस्त्रीन्गङ्गायां भूरिदक्षिणान्। शारद्वतं गुरुं कृत्वा देवा यत्राक्षगोचराः॥ ३ ॥ निजग्राहौजसा वीरः कलिं दिग्विजये क्वचित्। नृपलिङ्गधरं शूद्रं घ्नन्तं गोमिथुनं पदा ॥४॥ शौनक उवाच—कस्य हेतोर्निजग्राह कलिं दिग्विजये नृपः। नृदेवचिह्नधृक् शूद्रः कोऽसौ गां यः पदाहनत्॥ ५ ॥ तत्कथ्यतां महाभाग यदि कृष्णकथाश्रयम्। अथवास्य पदाम्भोजमकरन्दलिहां सताम् ॥६॥ किमन्यैरसदालापैरायुषो यदसद्व्ययः। क्षुद्रायुषां नृणामङ्ग मर्त्यानामृतमिच्छताम्॥ ७ ॥ इहोपहूतो भगवान्मृत्युः शामित्रकर्मणि। न कश्चिन्म्रियते तावद्यावदास्त इहान्तकः॥ ८ ॥ एतदर्थं हि भगवानाहूतः परमर्षिभिः। अहो नृलोके

வந்தார். (1) அவர் உத்தரனுடைய பெண்ணன இராவதியை விவாஹஞ் செய்து கொண்டார். அவளிடம் ஜனமேஜயன் முதலிய நான்கு புத்திரர்களையுண்டுபண்ணினார். (2) எந்த யாகங்களில் தேவர்கள் கண்ணால் காணக்கூடியவர்களாக இருந்தனரோ அத் தகைய அதிகம் தக்ஷிணையையுடைய மூன்று அஸ்வமேதங்களை கிருபாசாரியரைக் குருவாகச் செய்துகொண்டு கங்கைக் கரையில் செய்துமுடித்தார் (3) ஒரு ஸமயம் திக்விஜயஞ்செய்யுங்காலத்தில் அரசருக்குரிய வேஷத்தைத் தரித்தவனும், ஆயினும் சூத்திரனும், கோமிதுனத்தைக் காலினாலுதைக்கின்றவனுமான கலியை தனது சக்தியினால் ஜயித்தார். (4) சௌனகர் சொல்லலுற்றார்—ஹே மஹாபாக! திக்விஜயகாலத்தில் அரசன் என்ன காரணத்துக்காகக் கலியை அடக்கினார் காலினால் பசுவை எவன் உதைத்தானோ ராஜவேஷம் தரித்த அந்தச் சூத்திரன் யார்? (5) ஸ்ரீகிருஷ்ணனுடைய கதையையாஸ்ரயித்ததாகவோ, அல்லது இவரது சரணாரவிந்த மகரந்தபானஞ் செய்கின்ற ஸாதுக்களின் கதையை யாஸ்ரயித்ததாகவோ அது இருக்குமாயின் எங்களுக்குச் சொல்ல வேண்டுமென்றார். (6) ஹே அங்க! எவற்றினால் ஆயுளுக்கு வீணனாசமானது ஏற்படுமோ அந்த அஸத்துக்களைப் பற்றின வார்த்தைகளினால் அற்பமான ஆயுளையுடையவர்களும், மரிக்கும் ஸ்வபாவமுள்ளவர்களும், மோக்ஷத்தில் விருப்பமுள்ளவர்களுமான மனிதர்களுக்கு என்ன பயன்? (7) இந்த ஸத்திரயாகத்தில் பசுஹிம்ஸனத்துக்கு

पीयेत हरिलीलामृतं वचः॥ ९ ॥ मन्दस्य मन्दप्रज्ञस्य वयो मन्दायुषश्च वै। निद्रया ह्रियते नक्तं दिवा च व्यर्थकर्मभिः॥ १० ॥ सूत उवाच—यदा परीक्षित्कुरुजाङ्गले वसन्कलिं प्रविष्टं निजचक्रवर्तिते। निशम्य वार्तामनति प्रियां ततः शरासनं संयुगशौण्डिराददे ॥ ११ ॥ स्वलंकृतं श्यामतुरङ्गयो-जितं रथं मृगेन्द्रध्वजमाश्रितः पुरात्। वृतो रथाश्वद्विपपत्तियुक्तया स्व-सेनया दिग्विजयाय निर्गतः॥ १२ ॥ भद्राश्वं केतुमालं च भारतं चोत्तरा-न्कुरून्। किं पुरुषादीनि वर्षाणि विजित्य जगृहे बलिम्॥ १३ ॥ तत्र तत्रोप

வேண்டி பகவானை யமன் அழைக்கப்பட்டிருக்கிறார். எதுவரை யமன் இங்கு வஹிக்கிறாரோ அதுவரை ஒருவரும் மரணத்தை யடையார். (8) ஹரியின் லீலையாகிற அமுதத்தையுடைய ஆஸ் சரியமான வார்த்தையானது மனிதவுலகில் பானஞ்செய்யப்பட லாம் என்பதாய் இதற்குவேண்டியேயன்றே பரமர்ஷிகளினால் யம பகவான் அழைக்கப்பட்டார். (9) (ஹரிலீலாமுதபானஞ்செய்யா விடில் இவனுடைய ஜீவனமே பயனற்றது. ஏன்?) சோம்பேறி யும், அற்பமான அறிவையுடையவனும், மந்தமான ஆயுளையுடைய வனுமான மனிதனுக்கு இரவிலுள்ள ஆயுளானது தூக்கத்தினால் அபஹரிக்கப்பட்டுவிடுகிறது. பகலிலுள்ள ஆயுளானது பயனற்ற கர்மங்களினால் அபஹரிக்கப்பட்டுவிடுகின்றதன்றே என்றார். (10)

ஸூதர் சொல்லலுற்றார்—யுத்தத்தில் சூரனை பரீக்ஷித்து தனது ஸைனியினால் ரக்ஷிக்கப்பட்ட குருஜாங்கலதேசத்தில் வஹிக் கும்பொழுது கலிநுழைந்ததை எப்பொழுதுக் கேட்டாரோ அப் பொழுது *நிரம்பவும் பிரியமில்லாத அந்த ஸமாசாரத்தைக் கேட்டு துஷ்டர்களையடக்குவதற்கு வேண்டிவில்லைக் கையிலெடுத்தார். (11) நன்கு அலங்கரிக்கப்பட்டதும், கருத்த குதிரைகள் கட்டப்பட்ட தும், சிங்கக்கொடியையுடையதுமான தேரிலேறிக் கொண்டு தேர் குதிரை யானை காலாள் இவற்றுடன் கூடின தனது ஸைனியினால் சூழப்பட்டவராய் திக்விஜயத்துக்கு வேண்டி பட்டினத்திலிருந்து

---

* யுத்தம் நேர்ந்ததுபற்றி ஒருபக்கத்தில் ஸந்தோஷமும், கலிப்ரவே சித்ததிலிருந்து மற்றொருபக்கத்தில் அதிருப்தியும் அவருக்குண்டாயிற்று என்பது கருத்து.

श्रृण्वानः स्वपूर्वेषां महात्मनाम्। प्रगीयमानं च यशः कृष्णमाहात्म्यसूचकम्॥ १४॥ आत्मानं च परित्रातमश्वत्थाम्नोऽस्त्रतेजसः। स्नेहं च वृष्णिपार्थानां तेषां भक्तिं च केशवे॥ १५॥ तेभ्यः परमसंतुष्टः प्रीत्युज्जृम्भितलोचनः। महाधनानि वासांसि ददौ हारान्महामनाः॥ १६॥

सारथ्यपारषदसेवनसख्यदौत्यवीरासनानुगमनस्तवनप्रणामम्। स्निग्धेषु पाण्डुषु जगत्प्रणतिं च विष्णोर्भक्तिं करोति नृपतिश्चरणारविन्दे॥१७॥ तस्यैवं वर्तमानस्य पूर्वेषां वृत्तिमन्वहम्। नातिदूरे किलाश्चर्यं यदासीत्तन्निबोध मे॥ १८॥ धर्मः पदैकेन चरन्विच्छायामुपलभ्य गाम्। पृच्छति

களம்பினர். (12) (*)பத்ராஶ்வவர்ஷத்தையும், கேதுமாலவர்ஷத்தையும், பாரதவர்ஷத்தையும், உத்தரகுருவர்ஷத்தையும், கிம்புருஷாதிகளானவர்ஷங்களையும், ஜயித்துக் கப்பத்தைப் பெற்றார். (13) ஆங்காங்குள்ளவர்களால் கானஞ் செய்யப்படுகின்றதும், ஶ்ரீகிருஷ்ணனுடைய மாஹாத்மியத்தைச் சூசிப்பிக்கின்றதுமான மஹாத்மாக்களான தனது பூர்வபுருஷர்களின் யசஸ்ஸைக் கேட்டுக்கொண்டும், அஶ்வத்தாமாவினுடைய அஸ்திரதேஜஸ்ஸிலிருந்து தான் காப்பாற்றப்பட்டதையும், யாதவர்களுக்கும் பாண்டவர்களுக்குமுள்ள ஸ்னேஹத்தையும், அவ்விருவர்க்கும் ஶ்ரீகிருஷ்ணனிடத்திலிருந்த பக்தியையும் கேட்டுக் கொண்டும், பெரிய மனஸ்ஸையுடைய பரீக்ஷித்து பரமஸந்துஷ்டராசவும், ப்ரீதியினால் மலர்ந்த கண்களையுடையவராகவுமாகி அந்த ஜனங்களுக்குமிக்கவிலையுயர்ந்த வஸ்திரங்களையும், முக்தாஹாரங்களையும் கொடுத்தார். (14–16) மேலும், அன்பர்களான பாண்டவர்கள் விஷயத்தில் விஷ்ணுவான பகவான் செய்த ஸாரத்தியம், ஸபாத்யக்ஷனுகவிருத்தல், கைங்கரியம், ஸக்யம், தூதுசெல்லுதல், வீராஸனப், (இரவில் கையில் கத்திதாங்கி விழித்துக்கொண்டு நிற்றல்) பின்பற்றிச்செல்லல், ஸ்துதி, நமஸ்காரம் இவற்றையும், பகவத்விஷயத்தில் உலகத்தவர் செய்யும் நமஸ்காரத்தையும் கேட்டு பரீக்ஷித்ராஜன் ஶ்ரீவிஷ்ணுவின் சரணாரவிந்தத்தில்

(*) ஸமுத்திரத்தை யொட்டி கிழக்கிலுள்ள வர்ஷம் பத்ராச்வமென்றும், மேற்கிலுள்ளது கேதுமாலம் என்றும், தெற்கிலுள்ளது பாரதம் என்றும், வடக்கிலுள்ளது உத்தரகுரு என்றும் சொல்லப்படும்.

स्माश्रुवदनां विवत्सामिव मातरम् ॥ १९ ॥ धर्म उवाच—कच्चिद्भद्रेऽनाम-
यमात्मनस्ते विच्छायासि म्लायतेषन्मुखेन। आलक्षये भवतीमन्तराधिं
दूरेबन्धुं शोचसि कञ्चनाम्ब ॥ २० ॥ पादैर्न्यूनं शोचसि मैकपादमात्मानं
वा वृषलैर्भोक्ष्यमाणाम्। अहो सुरादीन्हृतयज्ञभागान्प्रजा उतस्विन्मघव-
त्यवर्षति ॥ २१ ॥ अरक्ष्यमाणाः स्त्रिय उर्वि बालान् शोचस्यथो पुरुषादै-
रिवार्तान्। वाचं देवीं ब्रह्मकुले कुकर्मण्य ब्रह्मण्ये राजकुले कुलाग्र्यान् ॥२२॥
किं क्षत्रबन्धून्कलिनोपसृष्टान्ब्राष्ट्राणि वा तैरवरोपितानि। इतस्ततो वाशन-

---

பக்தியைச் செய்தார். (17) அந்த அரசன் இவ்விதம் முன்னோர்க
ளின் நடத்தையை ஒவ்வொரு தினமும் பின்பற்றி நடக்குங்கால்
ஸமீபகாலத்தில் எந்த ஆஸ்சரியம் நிகழ்ந்தீதா அதை என்னிட
மிருந்து தெரிந்துகொள்ளும். (18) விருஷபரூபமான தர்மமானது
ஓரேகாலினுல் நடந்துகொண்டு, காந்தியற்றதும், கன்றையிழந்த
தாய்போலக் கண்ணீரை வழியவிடுகின்றதுமான கோரூபத்தை
யெடுத்த பூமியைக்கண்டு அதைக்கேட்கத் தொடங்கிற்று. (19)

தர்மம் சொல்லலுற்றது—ஹே பத்ரே! ஹே அம்ப! உனது
சரீரத்துக்கு வியாதியில்லாதிருக்கின்றதா? (வெளிப்படையான
வியாதியொன்றும் காணப்படவில்லைதான் ஆயினும்) சோபையற்ற
வளாக இருக்கின்றனை. ஸ்வல்பம் வாடின உனது முகத்தைக்
கொண்டு உள்ளில் மனோவியாதியுள்ளவளாக உன்னை நான் ஊஹிக்
கிறேன். வெகுதூரத்திலுள்ள பந்துவான எவரைக் குறித்து சோ
கிக்கின்றனை?. (20) மூன்றுபாதங்களற்றவனும் ஆனதுபற்றியே
ஒரே பாதத்துடன் கூடினவனுமான என்னைக் குறித்து சோகப்படு
கின்றனையா? அல்லது சூத்திரர்கள் உன்னையனுபவிக்கப்போவதை
நினைத்து சோகிக்கின்றனையா? அல்லது அபஹரிக்கப்பட்ட யக்ஞ
பாகங்களையுடைய தேவர்களைக் குறித்து சோகிக்கின்றனையா? யாக
மில்லாதுபோகவே இந்திரன் மழையைப்பெய்யாதபொழுது ப்ரஜை
களைக்குறித்து சோகிக்கின்றனையா?(21) ஹே பூமி! இனி பர்த்தாக்
களால் ஸ்திரீகள் ரக்ஷிக்கப்படப்போவதில்லையென்பதை யுத்தே
சித்து சோகிக்கின்றனையா? அல்லது இனி பிதா முதலியோரால்
குழந்தைகள் ரக்ஷிக்கப்படப்போவதில்லையென்பதையுத்தேசித்துச்

पानवासः स्नानव्यवायोन्मुखजीवलोकम् ॥२३॥ यद्वाम्ब ते भूरिभरावतार-कृतावतारस्य हरेर्धरित्रि। अन्तर्हितस्य स्मरती विसृष्टा कर्माणि निर्वाण-विडम्बितानि ॥ २४ ॥ इदं ममाचक्ष्व तवाधिमूलं वसुन्धरे येन विकर्शि-तासि। कालेन वा ते बलिनां बलीयसा सुरार्चितं किं हृतमम्ब सौभगम् ॥

धरण्युवाच—भवान्हि वेद तत्सर्वं यन्मां धर्मानुपृच्छसि। चतुर्भि-र्वर्तसे येन पादैर्लोकसुखावहैः ॥ २६ ॥ सत्यं शौचं दया क्षान्तिस्त्यागः सन्तोष आर्जवम्। शमो दमस्तपः साम्यं तितिक्षोपरतिः श्रुतम् ॥ २७ ॥

சோகிக்கின்றனையா? அல்லது அஸுரர்களினுற் போல அதே பிதா மூதலியோரால் பீடிக்கப்படும் குழந்தைகளை யுத்தேசித்துச் சோகிக் கின்றனையா? துராசாரமுள்ள ப்ராம்ஹணகுலத்தில் ஸரஸ்வதிதேவி (வேதவாக்கு) இருக்கப்போவதை நினைத்துச் சோகிக்கின்றனையா? அல்லது உத்தமகுலத்தவர்களான ப்ராம்ஹணர், ராஜ குலத்தில் ஸேவகர்களாக இருக்கப் போவதை நினைத்துச் சோகிக்கின்றனை யா?. (22) கலிஷியாப்த்தர்களான க்ஷத்திரியாபசதர்களை நினைத் துச் சோகிக்கின்றனையா? அல்லது அந்த க்ஷத்திரியாபசதர்களால் அழிக்கப்பட்ட தேசங்களைக் குறித்துச் சோகிக்கின்றனையா? அல் லது இங்குமங்குமாக நிஷேதசாஸ்திரத்தைப் பொருட்படுத்தாமல் ஆஹாரவிஷயத்திலும், பானவிஷயத்திலும், வஸ்திரவிஷயத்திலும், ஸ்நானவிஷயத்திலும், சிற்றின்பவிஷயத்திலும் ப்ரவிருத்திக்கப் போகின்ற ஜீவஸமூஹத்தை நினைத்துச் சோகிக்கின்றனையா?. (23) அல்லது தாயான ஹே பூமியே! உனக்கேற்பட்ட அதிகமான சுமையை இரக்கவேண்டி அவதரித்தவரும், பிறகு மறைந்தவரு மான ஸ்ரீஹரியினது மோக்ஷசுகத்தையும் பரிஹஸிக்கத்தக்க கர் மங்களை நினைத்துக் கொண்டு அவரால் விடப்பட்டவளாய் சோகிக் கின்றனையா? (24) ஹே வசுந்தரே! எதனால் நீ இளைத்தவளாக இருக்கின்றனையோ இந்த உனது மனோவியாதியின் காரணத்தை எனக்குச் சொல்லுவாயாக. ஹே அம்ப! தேவர்களாலும் பூஜிக் கப்பட்ட உன்னுடைய ஸௌபாக்கியமானது பலசாலிகளுக்குள் மிக்கவலுப்பொருந்திய காலத்தினால் அபஹரிக்கப்பட்டதா என்னை? என்றார். (25)

ज्ञानं विरक्तिरैश्वर्यं शौर्यं तेजो बलं स्मृतिः। स्वातन्त्र्यं कौशलं कान्ति र्धैर्यं मार्दवमेव च ॥ २८ ॥ प्रागल्भ्यं प्रश्रयः शीलं सह ओजो बलं भगः। गाम्भीर्यं स्थैर्यमास्तिक्यं कीर्तिर्मानोऽनहङ्कृतिः ॥ २९ ॥ एते चान्ये च

பூமி சொல்லலுற்றாள்—ஹே தர்ம! என்னிடம் எதைக் கேட்கின்றனையோ அவையாவையும் நீயே அறிவாயன்றோ. எவர் நிமித்தமாக நீ உலகுக்குச் சுகத்தைத்தருகின்ற நான்கு பாதங்களுடன் கூட இருக்கின்றாயோ, எவரிடத்தில் ஸத்யமும்=உண்மைபேசலும், சௌசமும்=சுத்தத்தன்மையும், தயையும்=பிறர் துக்கத்தைப்பொறுமையும், க்ஷாந்தியும்=கோபம் ப்ராப்த்தமானபோது சித்தத்தையடக்குதலும், த்யாகமும்=யாசகர்களுக்கு வேண்டுவனவற்றைக் கொடுத்தலும், ஸந்தோஷமும்=எதிலும் போதுமென்ற எண்ணமும், ஆர்ஜவமும்=கபடமில்லாதிருத்தலும், சமமும்=மனத்தில் சாஞ்சல்யமின்மையும், தமமும்=வெளி இந்திரியங்களில் சாஞ்சல்யமின்மையும், தபஸும்=ஸ்வதர்மானுஷ்டானமும், ஸாம்யமும்=சத்துருமித்திரனே இல்லாதிருத்தலும், திதிக்ஷையும்=பிறரது அபராதத்தைப்பொருத்தலும், உபரதியும்=லாபம் கிடைத்தபோதிலும் அதில் பற்றின்மையும், ச்ருதமும்=சாஸ்திர விசாரமும், ஞானமும்=ஆத்ம விஷயமான ஞானமும், விரக்தியும்=வைராக்கியமும், ஐச்வர்யமும்=அடக்கியாளும் திறமையும், சௌர்யமும்=யுத்தத்தில் உத்ஸாஹமும், தேஜஸ்ஸும்=ப்ரபாவமும், பலமும்=ஸமர்த்தத்தன்மையும், ஸ்மிருதியும்=செய்யத்தக்கதும், செய்யத்தகாததுமான காரியத்தை ஆலோசித்தறியும் தன்மையும், ஸ்வாதந்திரியமும்=பிறர்க்குட்படாதிருத்தலும், கௌசலமும்=காரியத்தில் நிபுணனாகவிருத்தலும், காந்தியும்=ஸௌந்தரியமும், தைரியமும்=கலங்காததன்மையும், மார்த்தவமும்=சித்தத்தில் காடின்யமற்றிருத்தலும், ப்ராகல்ப்யமும்=ஸமயோசிதமான புத்தித்தோற்றமுள்ள தன்மையும், ப்ரஸ்ரயமும்=வினயமும், சீலமும்=நல்ல ஸ்வபாவமும், ஸஹஸ்ஸும்=மனஸ்ஸின் திறமையும், ஓஜஸ்ஸும்=ஞானேந்திரியங்களின் திறமையும், பலமும்=கர்மேந்திரியங்களின் பாடவமும், பகமும் = போகத்துக்கு இருப்பிடமாக இருத்தலும், காம்பீர்யமும்=கலங்காத தன்மையும், ஸ்தைரியமும்=சாஞ்சல்யமற்றிருத்தலும், ஆஸ்திக்யமும்=ஸ்ரத்தை

भगवन्नित्या यत्र महागुणाः । प्रार्थ्या महत्त्वमिच्छद्भिर्न वियन्ति स्म कर्हिचित् ॥ ३० ॥ तेनाहं गुणपात्रेण श्रीनिवासेन सांप्रतम् । शोचामि रहितं लोकं पाप्मना कलिनेक्षितम् ॥ ३१ ॥ आत्मानं चानुशोचामि भवन्तं चामरोत्तमम् । देवान्पितॄनृषीन्साधून्सर्वान्वर्णांस्तथाश्रमान् ॥ ३२ ॥ ब्रह्मादयो बहुतिथं यदपाङ्गमोक्षकामास्तपः समचरन्भगवत्प्रपन्नाः । सा श्रीः स्ववासमरविन्दवनं विहाय यत्पादसौभगमलं भजतेऽनुरक्ता ॥ ३३ ॥ तस्याहमब्जकुलिशाङ्कशकेतुकेतैः श्रीमत्पदैर्भगवतः समलङ्कृताङ्गी । त्रीनत्यरोच

யும், கீர்த்தியும்=யசஸ்ஸும், மானமும்=பூஜ்யனுகவிருத்தலும், அனஹம்கிருதியும்=கர்வமற்றிருத்தலும் ஆகிய இவையும், ப்ரம்ஹண்யத்துவம், சரண்யத்துவம் இவற்றை ஆதியாகக் கொண்ட மற்றுமுள்ள மஹாகுணங்களும் ஒருபொழுதுமழியாது எந்தப் பகவானிடத்தில் நித்யங்களாகவும், மஹத்துவத்தை இச்சிக்கின்றவர்களால் ப்ரார்த்திக்கத் தக்கனவாகவும் இருக்கின்றனவோ ஸத்குணங்களுக்கு இருப்பிடமான அந்த ஸ்ரீநிவாஸனுல் இதுபோழ்துவிடப்பட்டதும், பாபஹேதுவான கலியினுல் பார்க்கப்பட்டதுமான உலகைக்குறித்து சோகத்தை யடைகிறேன். (26–31) மேலும், என்னையும், தேவச்ரேஷ்டனை உன்னையும், தேவர்களையும், பிதிருக்களையும், ருஷிகளையும், ஸாதுக்களையும், எல்லா வர்ணங்களையும், அவ்விதமே ஆச்ரமங்களையும் குறித்தும் சோகத்தையடைகிறேன்.(32) பெரியோர்களால் ஆச்ரயிக்கப் பட்டவர்களாயினுங்கூட ப்ரம்ஹதேவன் முதலியோர் எந்த லக்ஷ்மியினுடைய கடைக்கண் பார்வையில் விருப்பமுள்ளவர்களாய்க்கொண்டு வெகுகாலம் தவஞ் செய்தனரோ, அந்த லக்ஷ்மியானவள் தனக்கு இருப்பிடமான தாமரை வனத்தைக்கூட விட்டுவிட்டு எவருடைய சரணலாவண்யத்தை மிக்க ஆவலுள்ளவளாய் ஸேவிக்கின்றனளோ, அப்ஜரேகை, குலிசரேகை, அங்குசரேகை, துவஜரேகை இவற்றுக்கு ஆச்ரயங்களான அந்தப் பகவானுடைய சோபையுடாய்ந்த பாதந்நியாஸங்களினுல் நன்கு அலங்கரிக்கப்பட்ட அங்கத்தையுடையவளான நான் அந்தப் பகவானிடமிருந்து ஸம்பத்தையடைந்து மூன்று உலகங்களையும்விட மேலாக விளங்கினேன். பிறகு அந்த விபூதிக்கு நாச

उपलभ्य ततो विभूतिं लोकान्स मां व्यसृजदुत्स्मयतीं तदन्ते ॥ ३४ ॥ यो वै ममातिभरमासुरवंशराज्ञामक्षौहिणीशतमपानुददात्मतन्त्रः । त्वां दुःस्थमूनपदमात्मनि पौरुषेण संपादयन्यदुषु रम्यमबिभ्रदङ्गम् ॥ ३५ ॥ का वा सहेत विरहं पुरुषोत्तमस्य प्रेमावलोकरुचिरस्मितवल्गुजल्पैः । स्थैर्यं समानमहरन्मधुमानिनीनां रोमोत्सवो मम यदङ्घ्रिविटङ्कितायाः ॥ ३६ ॥ तयोरेवं कथयतोः पृथिवीधर्मयोस्तदा । परीक्षिन्नाम राजर्षिः प्राप्तः प्राचीं सरस्वतीम् ॥ ३७ ॥

इति श्रीमद्भागवते महापुराणे प्रथमस्कन्धे पृथ्वीधर्मसंवाद निरूपणं नाम षोडशोऽध्यायः ॥ १६ ॥

காலமானது ப்ராப்த்தமானபொழுது அதிகம் கர்வங்கொண்டவ ளான என்னை அவர் விட்டுவிட்டார். (33–34) மேலும், எவர் ஆஸுரமான வம்சத்திலுதித்த அரசர்களின் நூற்றுக்கணக்கான அக்ஷௌஹிணீரூபமான என்னுடைய அதிகச்சுமையை போக்கினரோ, ஸ்வதந்திரனான எவர் கால்களில் குறைவுள்ளவனும், ஆனது பற்றியே கெட்ட நிலையிலுள்ளவனுமான உன்னை ப்ரயத்தினத்தினால் உனது ஸ்வரூபத்தில் பூர்ணமான பாதமுள்ளவனாகச்செய்யவேண்டி யாதவர்களிடத்தில் அழகிய அங்கத்தைத் தரித்தாரோ, எவர் ப்ரேமையுடன் கூடின பார்வை, அழகிய புன்சிரிப்பு, இனிமையான வார்த்தை இவற்றால் ஸத்யபாமை முதலிய ஸ்திரீகளின் கர்வத்துடன் கூடின வணக்கமற்ற தன்மையைப்போக்கினரோ, எவருடைய சரணத்தினால் அலங்கரிக்கப்பட்டவளான எனக்கு ஸஸ்யாதிகளென்ற வியாஜமாக மயிர்க்குச்சலானது உண்டாயிற்றோ, புருஷோத்தமரான அவருடைய பிரிவை எவள்தான் பொருப்பாள். (35–36) கிழக்குநோக்கி யோடுகின்ற ஸரஸ்வதீ நதிக்கறையிலுள்ள குருக்ஷேத்திரத்தில் அந்தப் பூதேவியும், தர்மதேவதையும் இவ்விதம் பேசிக்கொண்டிருக்கும்பொழுது பரீக்ஷித்தென்ற ராஜருஷியானவர் அங்குவந்து சேர்ந்தார். (37) (எ–று)

இவ்விதம் ஸ்ரீமத்பாகவத மஹாபுராண ப்ரதமஸ்கந்தத்தில் பருதிவீ தர்மஸம்வாத நிரூபணமென்ற பதினாறுவது அத்தியாயம் முற்றிற்று.

अथ सप्तदशोऽध्यायः ॥

सूत उवाच—तत्र गोमिथुनं राजा हन्यमानमनाथवत्। दण्डहस्तं च वृषलं ददृशे नृपलाञ्छनम्॥ १॥ वृषं मृणाळधवलं मेहन्तमिव बिभ्यतम्। वेपमानं पदैकेन सीदन्तं शूद्रताडितम्॥ २॥ भृशं शूद्रपदाहताम्। विवत्सां साश्रुवदनां क्षामां यवसमिच्छतीम्॥ ३॥ पप्रच्छ रथमारूढः कार्तस्वरपरिच्छदम्। मेघगम्भीरया वाचा समारोपितकार्मुकः॥ ४॥ कस्त्वं मच्छरणे लोके बलाद्धंस्यबलान्बली। नरदे-

---

பதினேழாவது அத்தியாயம்.

(அ—கை) ततस्सप्तदशे राज्ञः कलेर्निग्रह उच्यते।
तस्यैवं वीर्यभाजोपि वैराग्यं वक्तुमद्भुतम्॥ १॥

(கரை) இத்தகைய வீர்யத்தை படைந்திருந்தபோதிலுங்கூட அந்தப் பரீக்ஷித்ராஜனுக்கு நேர்ந்த அத்புதமான வைராக்கியத்தைச் சொல்லவேண்டி அவர் செய்த கலியின் நிக்ரஹமானது இந்தப் பதினேழாவது அத்தியாயத்தில் சொல்லப்படுகிறது. (1) (எ—று)

ஸூதர் சொல்லலுற்றார்—அந்தக் குருக்ஷேத்திரத்தில் ரக்ஷகனில்லாததைப் போல ஹிம்ஸிக்கப்படுகின்ற பசுவையும், விருஷபத்தையும், ராஜவேஷமுள்ளவனும் தடியைக் கையிலுடையவனுமான சூத்திரனையும் பரீக்ஷித்ராஜன் பார்த்தார். (1) தாமரைத் தண்டுபோல வெளுத்ததும், பயத்தினால் மூத்திரம் விடுவதுபோலிருப்பதும், உடல் நடுக்கமுள்ளதும், ஒரே காலினால் கஷ்டத்தையடைகின்றதும், சூத்திரனால் அடிக்கப்பட்டதுமான விருஷபத்தையும், (2) தர்மத்துக்கு ஸாதனமான ஹவிஸ்ஸைத் தரக்கூடியதும், மிக்க துக்கத்தை யடைந்ததும், சூத்திரனுடைய காலினாலுதைக்கப்பட்டதும், கன்றற்றதும், கண்ணீர் வடிப்பதும், இளைத்ததும், புல்லை விரும்புகின்றதுமான பசுவையும், (3) பார்த்துப் பொன்னாலான ஸாமக்ரீகளையுடைய தேரிலேறின அரசன் நாணேற்றின வில்லைக் கையிலுடையவனாய் மேகம்போலக் கம்பீரமான வார்த்தையினால் கேட்கலானான். (4) என்னால் ரக்ஷிக்கப்படும் உலகில் பல மற்றவர்களைப் பலாத்காரமாக ஹிம்ஸிக்கின்றனையே? அத்தகைய

वोऽसि वेषेण नटवत्कर्मणाऽद्विजः ॥ ५ ॥ कस्त्वं कृष्णे गते दूरं सह गाण्डीवधन्वना । शोच्योऽस्यशोच्यान्रहसि प्रहरन्वधमर्हसि ॥ ६ ॥ त्वं वा मृणाळधवलः पादैर्न्यूनः पदा चरन् । वृषरूपेण किं कश्चिद्देवो नः परिखेदयन् ॥ ७ ॥ न जातु पौरवेन्द्राणां दोर्दण्डपरिरम्भिते । भूतलेऽनुपतन्त्यस्मिन्विना ते प्राणिनां शुचः ॥ ८ ॥ मा सौरभेयानुशुचो व्येतु ते वृषळाद्भयम् । मा रोदीरम्ब भद्रं ते खलानां मयि शास्तरि ॥ ९ ॥ यस्य राष्ट्रे प्रजाः सर्वास्त्रस्यन्ते साध्व्यसाधुभिः । तस्य मत्तस्य नश्यन्ति कीर्तिरायुर्भगो गतिः ॥ १० ॥ एष राज्ञां परो धर्मो ह्यार्तानामार्तिनिग्रहः । अत एनं वधि-

---

வலுவுள்ள நீ யார்? நடன்போல வேஷத்தால் மட்டும் அரசனுகவும், செய்கையினுலோ சூத்திரனுகவும் இருக்கின்றனேயே?. (5) காண்டீவத்தை வில்லாகவுடைய அர்ஜுனனுடன்கூட ஸ்ரீகிருஷ்ணன் மறைந்ததும் நிரபராதிகளை ரஹஸ்யத்தில் எந்த நீ ஹிம்ஸிக்கின்றனேயோ அந்த நீ குற்றவாளியாகின்றனை? ஆனதுபற்றிக் கொல்லத்தக்கவனுகின்றனை. ஆகவே நீ யார்?. (6) தாமரைத்தண்டுபோல வெளுத்தும், மூன்றுகால்களற்றும், ஒருகாலினுல் ஸஞ்சரித்துக் கொண்டுமிருக்கும் நீதான் யார்? எங்களைக் கஷ்டப்படுத்த வேண்டி விருஷபரூபமெடுத்த யாதோவொருதேவனு?. (7) கௌரவேந்திரர்களுடைய பாகுதண்டத்தினுல் நன்கு ரக்ஷிக்கப்பட்ட இந்தப் பூதலத்தில் உன்னுடைய கண்ணீரைத்தவிர்த்து வேறு ப்ராணிகளின் கண்ணீர் ஒருபொழுதும் விழுந்ததில்லை. (8) ஹே காமதேனுவின் புத்திரனே! சோகப்படாதே? சூத்திரனிடமிருந்து உனக்குண்டான பயமானது விலகட்டும். ஹே அம்ப! துஷ்டர்களைச் சிக்ஷிக்கின்றவனுன நான் ஜீவித்திருக்கும் பொழுது உனக்கு நன்மைதான் உண்டாகும். ஆகையால் அழாதே. (9) ஹே நல்லவளே! எவனது ராஜ்யத்தில் எல்லாப்ரஜைகளும் அஸாதுக்களினுல் பயமுறுத்தப் படுகின்றனரோ, மதங்கொண்ட அந்த அரசனுடைய கீர்த்தியும், ஆயுளும், ஐஸ்வரியமும், நற்கதியு(பரலோகமு)ம் நசித்துவிடுகின்றன.(10) கஷ்டப்படுகின்ற ஜனங்களின் கஷ்டத்தைப் போக்குதல் என்பது யாதுண்டோ இதுவன்றே அரசர்களின் மேலான தர்மமாகும். ஆகவே ப்ராணிகளுக்குத் துரோஹஞ்செய்பவனும்,

ष्यामि भूतद्रुहमसत्तमम् ॥११॥ कोऽवृश्चत्तव पादांस्त्रीन्सौरभेय चतुष्पद। मा भूवंस्त्वादृशा राष्ट्रे राज्ञां कृष्णानुवर्तिनाम् ॥ १२ ॥ आख्याहि वृष भद्रं वः साधूनामकृतागसाम्। आत्मवैरूप्यकर्तारं पार्थानां कीर्तिदूषणम् ॥ १३ ॥ जनेऽनागस्यघं युञ्जन्सर्वतोऽस्य च मद्भयम्। साधूनां भद्रमेव स्यादसाधुदमने कृते ॥ १४ ॥ अनागस्स्विह भूतेषु य आगस्कृन्निरङ्कुशः। आहर्तास्मि भुजं साक्षादमर्त्यस्यापि साङ्गदम् ॥ १५ ॥ राज्ञो हि परमो धर्मः स्वधर्मस्थानुपालनम्। शासतोऽन्यान्यथाशास्त्रमनापद्युत्पथानिह ॥ १६ ॥

धर्म उवाच—एतद्वः पाण्डवेयानां युक्तमार्ताभयं वचः। येषां गुणगणैः कृष्णो दौत्यादौ भगवान्कृतः॥ १७ ॥ न वयं क्लेशबीजानि यतः

மிக்க அஸாதுவுமான இவனைக் கொல்லப்போகிறேன். (11) நான்கு கால்களுடனிருந்த ஹே காமதேனுவின் புத்திரனே! உன்னுடைய மூன்று கால்களையும் வெட்டினவன் யார்? கிருஷ்ணனது வழியைப் பின்பற்றுபவர்களான அரசர்களின் ராஜ்யத்தில் உன் போன்ற துக்கிதர்கள் இருக்கலாகாது. (12) ஹே விருஷபமே! நிரபராதிகளும், ஸாதுக்களுமான உங்களுக்கு க்ஷேமமுண்டாகட்டும். உனது கால்களைவெட்டி உருவமாறுபாட்டையுண்டாக்கினவனும், பார்த்தர்களின் கீர்த்தியைத் தூஷித்தவனுமான மனிதனைச் சொல்லு. (13) எவன் நிரபராதியான ஜனத்துக்குத் துக்கத்தையுண்டுபண்ணுகின்றானோ இவனுக்கு என்னிடமிருந்து எல்லாவிஷயத்திலும் பயமானது உண்டாகட்டும். அஸாதுவானவன் அடக்கப்பட்டதும் ஸாதுக்களுக்கு க்ஷேமமானது தானுகவே உண்டாகும். (14) இந்தப் பூதலத்தில் குற்றமற்ற ப்ராணிகளிடத்தில் எவன் நிரங்குசனுய்க் குற்றத்தைச்செய்கின்றானோ, அவன் ஸாக்ஷாத் தேவனுயினுங்கூட தோள்வளையுடன்கூடின அவனது கையை நான் துண்டித்து விடப்போகின்றேன். (15) ஆபத்தில்லாத காலத்தில் ஸ்வதர்மத்தை விட்டு நடக்கின்ற அதர்மிஷ்டர்களைச் சாஸ்திரப்படி சிக்ஷிப்பதும், ஸ்வதர்மத்திலிருக்கின்ற ப்ரஜைகளைப் பரிபாலஞ் செய்வதும் அரசனுக்கு மேலான தர்மமாகவன்றோ வாகிறது என்றார். (16)

स्युः पुरुषर्षभ। पुरुषं तं विजानीमो वाक्यभेदविमोहिताः॥ १८ ॥ केचि-
द्विकल्पवसना आहुरात्मानमात्मनः। दैवमन्ये परे कर्म स्वभावमपरे
प्रभुम् ॥ १९ ॥ अप्रतर्क्यादनिर्देश्यादिति केष्वपि निश्चयः। अत्रानुरूपं
राजर्षे विमृश स्वमनीषया ॥ २० ॥ सूत उवाच—एवं धर्मं प्रवदति स

தர்மம் சொல்லலுற்றது—எவர்களுடைய குணக் கூட்டங்களி னுல் பகவானுன ஸ்ரீகிருஷ்ணன் தூதுசெல்லுதல் முதலிய காரியத் தில் ஏவப்பட்டாரோ அத்தகைய பாண்டுவின் வம்சத்திலுதித்தவர் களான உங்களுக்கு துக்கிதர்களுக்கு அபயந்தரும் இந்த வார்த்தை யானது பொருத்தமானதே. (17) நாங்களோ ப்ராணிகளுக்கு எந் தப் புருஷனிடமிருந்து கிலேசமுண்டாகக் கூடிய காரணங்கள் ஏற் பட்டனவோ அந்தப் புருஷனை யறியோம். வாதிகளின் வாக்கிய பேதங்களினுல் மோஹிதர்களாகவன்ரோ இருக்கின்ரோம். (18) (அந்த வாக்கிய பேதங்களான) *சிலநாஸ்திகர்கள் தனக்குத்தானே ப்ரபுவே தவிற பிறரில்லை என்கின்றனர். வேறுதைவக்ஞர்கள் நவக் கிரஹாதிரூபமான தேவதையை ப்ரபுவாகச் சொல்லுகின்றனர். வேறுசில மீமாம்ஸகர்கள் கர்மத்தைப் பிரபுவாகச் சொல்லுகின்ற னர். (*)வேறுசில லௌகாயதிகர்கள் ஸ்வபாவத்தை ப்ரபுவாகச் சொல்லுகின்றனர். (19) ஈஸ்வரனை யங்கீகரிக்கும் சிலரிடத்தில், மனத்துக்கு விஷயமாக வாகாதவரும், வாக்குக்கெட்டாதவருமான ஈஸ்வரனிடமிருந்தே எல்லாமுண்டாகிறது என்ற நிஸ்சய (ஸித் தாந்த) மானது இருக்கிறது. ஹே ராஜர்ஷே! இதுவறை கூறிய மதங்களுள் பொருத்தமான ஸித்தாந்தத்தைச் சொந்தமான புத்தி யினுல் நீரே ஆலோசித்தறிந்துகொள்ளும். (20) ஹே த்விஜஸத் தம! இவ்விதம் தர்மமானது சொல்லும் பொழுது சக்கிரவர்த்தி

---

* विकल्पवसना:=கெட்டயுக்திகளினுல் சூழப்பட்டவர்களான நா ஸ்திகர்கள் என்று பொருள். அவர்கள் சொல்லுவதாவது—மனிதர் விஷயத்தில் தேவதைகளுக்கு ப்ரபுத்துவம் கிடையாது. ஏன்? தேவ தைகள் கர்மாதீனர்களாக இருப்பதாலென்க. கர்மாக்களும் ப்ரபுக் களன்று. அவை தனக்கு அதீனங்களாகவும், அசேதனங்களாகவு மிருப் பதாலென்க. ஆகவே தானேதான் தனக்கு ப்ரபு என்பதாம்.

(*) லௌகாயதிகர் என்பவர் புத்தசிஷ்யரில் ஒருவர்.

सम्राड् द्विजसत्तम। समाहितेन मनसा विखेदः पर्यचष्ट तम् ॥ २१ ॥ राजोवाच—धर्म ब्रवीषि धर्मज्ञ धर्मोऽसि वृषरूपधृक्। यदधर्मकृतः स्थानं सूचकस्यापि तद्भवेत् ॥२२॥ अथवा देवमायाया नूनं गतिरगोचरा। चेतसो वचसश्चापि भूतानामिति निश्चयः॥ २३ ॥ तपः शौचं दया सत्य मिति पादाः प्रकीर्तिताः। अधर्मांशैस्त्रयो भग्नाः स्मयसङ्गमदैस्तव ॥२४॥ इदानीं धर्म पादस्ते सत्यं निर्वर्तयेद्यतः। तं जिघृक्षत्यधर्मोऽयमनृतेनैधितः कलिः॥ २५ ॥ इयं च भूर्भगवता न्यासितोरुभरा सती। श्रीमद्भिस्तत्पद-

---

யான அந்தப் பரீக்ஷித்ராஜன் நிலைத்தமனஸ்ஸினுல் மோஹத்தைப் போக்கிக்கொண்டு அதைப்பார்த்துச் சொல்லத்தொடங்கினர். (21)

அரசர் சொல்லலுற்றார்—ஹே தர்மக்ஞ! அதர்மம் செய்தவனுக்கு எந்த நரகாதிஸ்தானமுண்டோ அதுவேதான் அவனை நேரில் சொன்னவனுக்கும் வரும். ஆகவே "கெடுதல் செய்தவனை யறிந்திருந்த போதிலுங்கூட அவனை நேரில் குறிப்பிடலாகாது" என்ற தர்மத்தையொட்டி நீ பேசுகின்றனை. ஆனதுபற்றி விருஷப ரூபமெடுத்த தர்மமாகவே நீ ஆகின்றனை. (22) அல்லது தேவனுன பகவானுடைய மாயையின் கதியானது ப்ராணிகளின சித்தத்துக் கும், வார்த்தைக்கும் நிஸ்சயமாக எட்டாதது என்பது திண் ணம். (23) [*]தவம், சௌசம், தயை, ஸத்யம் என்ற நான்கும் தர்மத்தின் பாதங்களாகச் சொல்லப்பட்டிருக்கின்றன. ஸ்மயம்= கர்வம், ஸ்திரீகளின் ஸங்கம், மத்யபானுதிகளினுல் மதம் இவையா கிற அதர்மாம்சங்களினுல் உனது பாதங்களின் மூன்று பாகங்கள் நாசமாக்கப்பட்டன. (24) ஹே தர்ம! இந்தக் கலியில் எதனுல் புருஷன் உன்னை ஸம்பாதிப்பானே அந்த உனது பாதங்களின் நான்காவது அம்சமே அந்த நான்காவது அம்சத்திலும் ஸத்யமொன் றேதான் எஞ்ஜி யிருக்கிறது. அதையும் (ஸத்தியத்தையும்) பொய் யினுல் விருத்திசெய்யப்பட்ட இந்த அதர்மரூபமான கலியானது

---

[*] இது தர்மம் எனத்தெரிந்து கொண்டபிறகு அதற்கு இயற்கை யிலமைந்துள்ள பாதங்களைத் தானும் சொல்லித் தர்மபாதவியவஸ்தை யை இதுமுதல் இரண்டு சுலோகங்களினுலுபதேசிக்கிறார்.

न्यासैः सर्वतः कृतकौतुका ॥ २६ ॥ शोचत्यश्रुकला साध्वी दुर्भगेवोज्झिताधुना। अब्रह्मण्या नृपव्याजाः शूद्रा भोक्ष्यन्ति मामिति ॥ २७ ॥

அழிக்க இச்சிக்கிறது†. (25) பகவானை ஸ்ரீகிருஷ்ணனல் ஒருவருக்கொருவர் மூலம் போக்கப்பட்ட அதிகமான பாரத்தை (சுமையை) யுடையதும், சோபைவாய்ந்த அவருடைய அடிவைப்புகளினல் நாலாபக்கங்களிலும் செய்யப்பட்ட ஸந்தோஷம் மங்களம் இவற்றையுடையதும், ஸாத்வியுமான இந்தப் பூமியும் அவரால் விடப்பட்டதாய்க் கொண்டு "ப்ராம்ஹண பக்தியற்றவர்களும், க்ஷத்திரியர்கள்போல வேஷம் பூண்டவர்களுமான சூத்திரர்கள் என்னை யனுபவிக்கப்போகின்றனர்" என்பதாய் கண்ணீரைவடியவிட்டுக்கொண்டு சோபையற்றவள் போலத் துக்கத்தை யடைகிறுள். (26–27)

---

† 'கிருதயுகத்தில் தர்மமானது ப்ரத்யேகம் நான்கு அம்சங்களுள்ள தவம், சௌசம், தயை, ஸத்யம் என்ற நான்கு பாதங்களுடன் கூடினதாகவே இருந்தது. திரேதாயுகத்தில் நான்கு பாதங்களுக்குள்ளும் ஸ்மய (கர்வ)த்தினல் தபஸ்வின் நான்கிலொருபாகமும், ஸங்கத்தினல் சௌசத்தின் நான்கிலொருபாகமும், மதத்தினல் தயையின் நான்கிலொருபாகமும், பொய்யினல் ஸத்யத்தின் நான்கிலொருபாகமும், நாசமாக்கப்பட்டது. துவாபரயுகத்திலோ ஸ்மய (கர்வ) த்தினல் தபஸ்வின் எஞ்ஜிய மூன்றுபாதங்களுள் இரண்டு பாதங்களும், ஸங்கத்தினல் சௌசத்தின் எஞ்ஜிய மூன்றுபாதங்களுள் இரண்டுபாதங்களும், மதத்தினல் தயையின் எஞ்ஜிய மூன்று பாதங்களுள் இரண்டு பாதங்களும், பொய்யினல் ஸத்தியத்தின் எஞ்ஜிய மூன்றுபாதங்களுள் இரண்டு பாதங்களும் நாசமாக்கப்பட்டன. இந்தக் கலியுகத்திலோ தவம், சௌசம், தயை, ஸத்தியம் இவற்றின் நான்காவது அம்சமே எஞ்ஜியிருக்கிறது. தவம் முதலியவற்றின் அந்த நான்காவது அம்சத்திலும் ஸத்தியத்தின் நான்காவது அம்சமே எஞ்ஜியிருக்கிறது. அதையும் கலியானது முடிவில் அடியோடு அழித்து விடப்போகிறது. எனப் பிரித்துப் பொருள்கொள்ளவேண்டும்' என ஸ்ரீதரீயத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அதற்கு ஆதாரமாக வேறிடத்தில் "त्रेतायां धर्मपादानां तुर्यांशो हीयते शनैः। अधर्मपादैरनृतहिंसाऽसन्तोष विग्रहैः॥ என்றவசனமும் ப்ரமாணமாகக்காட்டப்பட்டிருக்கிறது. இந்தச் சுலோகத்திலுள்ள असन्तोष என்ற பதத்துக்கு அஸந்தோஷ ஹேதுவான கர்வமும், विग्रह என்ற பதத்துக்கு சண்டைக்கு ஹேதுவான ஸ்திரீ ஸங்கமும் பொருள் எனக் கண்டு கொள்ளவேண்டுமென்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

इति धर्मं महीं चैव सान्त्वयित्वा महारथः। निशातमाददे खड्गं कलयेऽधर्महेतवे ॥ २८ ॥ तं जिघांसुमभिप्रेत्य विहाय नृपलाञ्छनम्। तत्पादमूलं शिरसा समागाद्भयविह्वलः॥ २९ ॥ पतितं पादयोर्वीक्ष्य कृपया दीनवत्सलः। शरण्यो नावधीच्छ्लोक्य आह चेदं हसन्निव ॥ ३० ॥ राजोवाच—न ते गुडाकेशयशोधराणां बद्धाञ्जलेर्वै भयमस्ति किञ्चित्। न वर्तितव्यं भवता कथंचन क्षेत्रे मदीये त्वमधर्मबन्धुः॥ ३१ ॥ त्वां वर्तमानं नरदेवदेहेष्वनुप्रवृत्तोऽयमधर्मपूगः। लोभोऽनृतं चौर्यमनार्यमंहो ज्येष्ठा च माया कलहश्च दम्भः॥ ३२ ॥ न वर्तितव्यं तदधर्मबन्धो धर्मेण सत्येन च

இவ்விதம் மஹாரதனன பரீக்ஷித்ராஜன் தர்மத்தையும், பூமியையும் ஸமாதானப்படுத்திவிட்டு அதர்மத்துக்குக் காரணமான கலியைக் கொல்லவேண்டி கூர்மைவாய்ந்த கத்தியைக் கையிலெடுத்தான்.(28) அவர் தன்னைக் கொல்லவிரும்புவதை யறிந்து கலியானவன் பயத்தினுல் நடுங்கினவனுய் ராஜவேஷத்தை விட்டு அவரது பாதமூலத்தில் தலையினுல் வணங்கினுன். (29) நல்லகீர்த்திக்குத் தகுதியானவனும், சரண்யனும், தீனவத்ஸலனும், வீரனுமான பரீக்ஷித் மஹாராஜன் கால்களில் விழுந்தவனைக் கொல்லாது விடுத்துச் சிரிப்பவன் போல இதைச் சொல்லத்தொடங்கினுன். (30)

அரசன் சொல்லலுற்றனன் — அர்ஜுனனுடைய யசஸ்ஸைத் தரிக்கின்ற எங்களிடத்தில் அஞ்ஜலிபந்தம் செய்த உனக்குக் கொஞ்சமும் பயமுண்டாகவே வேண்டாம். நீயோ அதர்மத்தைப் பந்துவாசவுடையவன். ஆனதுபற்றி என்னுடைய க்ஷேத்திர(ராஜ்ய)த்தில் ஸ்வல்ப அம்சத்தாலுங்கூட நீ வஸிக்கலாகாது (31) அரசர்களின் தேஹத்திலிருக்கின்ற உன்னை அனுஸரித்து, லோபமும், பொய்யும், திருட்டும், கெட்டஸ்வபாவமும், ஸ்வதர்மபரித்யாகமும், அலக்ஷ்மியும், கபடமும், சண்டையும், வெளிவேஷம் போடுதலுமாகிய இந்த அதர்மக் கூட்டமானது பின்தொடர்ந்து வருகிறது. (32) அதர்மத்தைப் பந்துவாகவுடைய ஹே கலியே! தர்மத்துடனும், ஸத்தியத்துடனும் இருக்கவேண்டிய எந்த ப்ரம்ஹாவர்த்த (ஆர்யாவர்த்த) தேசத்தில் யாகவிஸ்தாரவிஷயத்தில் நிபுணர்களான பெரியோர்கள் யாகங்களினுல் யக்ஞேஸ்வரனை ஆராதிக்கின்

वर्तितव्ये। ब्रह्मावर्ते यत्र यजन्ति यज्ञैर्यज्ञेश्वरं यज्ञवितानविज्ञाः॥ ३३ ॥ यस्मिन्हरिर्भगवानिज्यमान इज्यामूर्तिर्यजतां शं तनोति। कामानमोघान्स्थिरजङ्गमानामन्तर्बहिर्वायुरिवैष आत्मा॥ ३४ ॥ सूत उवाच—परीक्षितैवमादिष्टः स कलिर्जातवेपथुः। तमुद्यतासिमाहेदं दण्डपाणिमिवोद्यतम्॥

कलिरुवाच—यत्र क्वचन वत्स्यामि सार्वभौम तवाज्ञया। लक्षये तत्र तत्रापि त्वामात्तेषुशरासनम्॥ ३६ ॥ तन्मे धर्मभृतां श्रेष्ठ स्थानं निर्देष्टु-

---

றனரோ, அந்த ப்ரம்ஹாவர்த்ததேசத்தில் யாகத்தினால் ஆராதிக்கப் படுகின்றவரும், யாகத்தையே மூர்த்தியாகவுடையவரும், உள்ளில் ப்ராணரூபத்துடனிருந்த போதிலும் வெளியிலுமிருக்கும் வாயு போலஸ்தாவரஜங்கமங்களான ப்ராணிகளுக்கு ஆத்மாவும், ஸர்வேஶ்வரனுமான ஹரியானவர் யாகஞ்செய்பவர்களுக்குச் சுகத்தையும், வீண்போகாதகாமங்களையும் தருகிறார். ஆதலால் நீ அங்கிருக்கக் கூடாது என்றார். (33–34) ஸூதர் சொல்லலுற்றார்— பரீக்ஷித்தினால் இவ்விதம் கட்டளையிடப்பட்ட அந்தக் கலிபுருஷன் உடம்பிலுண்டான நடுக்கமுடையவனாய்க் கொண்டு கொல்லுவதற்குத் தயாராக இருக்கும் யமனைப் போல உயரத்தூக்கப்பட்ட கத்தியையுடையவரான அந்தப் பரீக்ஷித்தைப் பார்த்துப் பின்வருமாறு சொல்லத்தொடங்கினான். (35)

கலிபுருஷன் சொல்லலுற்றான்—ஹே ஸார்வபௌம! இங்கு வஸிக்கக்கூடாது என்ற உமது ஆக்ஞையை யொட்டி ஏதாவது ஓரிடத்தில் வஸிக்கப்போனாலும் அந்த அந்த விடத்திலும் கையிலெடுக்கப்பட்ட வில்லையுடைய உம்மையே காண்கிறேன். (36) ஆனதுபற்றி, தர்மத்தை ரக்ஷிப்பவர்களுள் சிறந்த ஹே அரசனே! உமது உத்தரவை அனுஷ்டிக்கின்றவனுய் எந்த இடத்திலேயே நிஶ்சலனுக வஸிப்பேனே ‡அந்த ஸ்தானத்தை எனக்குக் காண்பிப்பீராக என்றான். (37) ஸூதர் சொல்லலுற்றார்—ப்ரார்த்திக்கப்

---

‡ ஸ்தாவரஜங்கமங்கள்யாவும் உமது ப்ரஜைகளாதலாலும், எல்லாப் பூமியிலுமே உமது அதிகாரம் நடப்பதாலும் எங்கும் எனக்கு இடமில்லாமல் போகிறது. ஆகவே நிர்ப்பயனுய் நான் வஸிக்கக்கூடிய இடத்தை எனக்கு நீர் காட்டவேண்டும் என்பது கருத்து.

महसि। यत्रैव नियतो वत्स्य आतिष्ठंस्तेऽनुशासनम्॥ ३७॥ सूत उवाच—अभ्यर्थितस्तदा तस्मै स्थानानि कलये ददौ। द्यूतं पानं स्त्रियः सूना यत्राधर्मश्चतुर्विधः॥ ३८॥ पुनश्च याचमानाय जातरूपमदात्प्रभुः। ततोऽनृतं मदं कामं रजो वैरं च पञ्चमम्॥ ३९॥ अमूनि पञ्च स्थानानि ह्यधर्मप्रभवः कलिः। औत्तरेयेण दत्तानि न्यवसत्तन्निदेशकृत्॥ ४०॥ अथैतानि न सेवेत बुभूषुः पुरुषः क्वचित्। विशेषतो धर्मशीलो राजा लोकपतिर्गुरुः॥ ४१॥ वृषस्य नष्टांस्त्रीन्पादांस्तपः शौचं दयामिति। प्रतिसंदध आश्वास्य महीं च समवर्धयत्॥ ४२॥ स एष एतर्ह्यध्यास्त

பட்ட அரசன், எந்த விடத்தில் சூதாட்டம், மத்யபானம், ஸ்திரீஸேவை, ப்ராணிகளின் வதம் என்ற நான்குவிதமான அதர்மம் நடக்கிறதோ அந்த ஸ்தானங்களை அப்பொழுது அந்தக் கலிக்குக் கொடுத்தான்.(38) ப்ரபுவான அரசன், "முற்கூறிய நான்குவிதமான அதர்மமும் எந்த ஒன்றிலேயே அடங்குமோ அந்த ஸ்தானத்தைத்தாரும்" எனத்திரும்பவும் யாசிக்கின்ற கலிக்கு ஸுவர்ணத்தை ஸ்தானமாகக் கொடுத்தார். அந்த ஸுவர்ணத்தை ஸ்தானமாகக்கொடுத்ததன்மூலம் பொய்யையும், மதத்தையும், காமத்தையும் (ஸ்தரீஸங்கத்தையும்) ரஜஸ்ஸையும் (ரஜோகுணத்தை மூலமாகவுடைய ஹிம்ஸையையும்) ஐந்தாவதான வைரத்தையும் கலிக்குக்கொடுத்தார். (39) அதர்மத்தைத் தனது உத்பத்திக்குக் காரணமாகவுடைய கலியானவன் உத்தரையின் குமாரனை பரீக்ஷித்திலல் கொடுக்கப்பட்ட இந்த ஐந்துஸ்தானங்களிலும் அவருடைய உத்திரவுப்படி வஸித்துவந்தான். (40) ஆனதுபற்றி விருத்தியில் விருப்பமுள்ள புருஷனே, தர்மசீலனை அரசனே, உலகங்களுக்கு பதியான குருவோ இவ்வைந்தையும் விசேஷமாக ஸேவிக்கலாகாது*. (41) நஷ்டங்களான தவம், சௌசம், தயை என்ற தர்மத்தின் மூன்றுபாதங்களையும் திரும்பவு முண்டுபண்ணி, பூமியையும் ஸமாதானப் படுத்தி நன்கு விருத்தியை யடையச்செய்தார். (42) அந்த இந்தப் பரீக்ஷித்து அரண்யத்தில் ப்ரவேசிக்க விருப்பங்கொண்ட பாட்டனை

---

* இங்கு ஸ்திரீ, ஸுவர்ணம் இவற்றில் விசேஷமாகப் பற்றுக் கொள்ளலாகாது என்று பொருள் கொள்ளவேண்டும்.

आसनं पार्थिवोचितम्। पितामहेनोपन्यस्तं राज्ञारण्यं विविक्षता ॥ ४३ ॥ आस्तेऽधुना स राजर्षिः कौरवेन्द्रश्रियोल्लसन्। गजाह्वये महाभागश्चक्रवर्ती बृहच्छ्रवाः॥ ४४ ॥ इत्थं भूतानुभावोऽयमभिमन्युसुतो नृपः। यस्य पालयतः क्षोणीं यूयं सत्राय दीक्षिताः॥ ४५ ॥

इति श्रीमद्भागवते महापुराणे प्रथमस्कन्धे कलिनिग्रहवर्णनं नाम सप्तदशोऽध्यायः॥ १७ ॥

தர்மபுத்திர அரசனுல் ஒப்படைக்கப்பட்டதும், அரசர்களுக்கு உசித மூமான ஹிம்ஹாஸனத்தில் இப்பொழுது வீற்றிருக்கிறூர். (43) ராஜ்யலக்ஷ்மியினுல் ப்ரகாசிக்கின்றவரும், மஹாபாகரும், சக்கிரவர்த்தியும், பெரிய கீர்த்திலய யுடையவரும், கௌரவேந்திரருமான அந்த ராஜருஷியானவர் ஹஸ்திநபட்டினத்தில் இதற்கு ஸமீபகாலத்தில் வஹித்துவந்தார். (44) எவர் பூமியைப் பரிபாலனஞ்செய்யுங்கால் நீங்கள் ஸத்திரயாகத்தை யனுஷ்டிக்க முயர்ச்சித்தீர்களோ அபிமன்யுவின் புத்திரனை இந்த அரசன் இத்தகைய மஹிமையுள்ளவராவார் என்றூர். (45) (எ–று)

இவ்விதம் ஸ்ரீமத்பாகவத மஹாபுராண ப்ரதமஸ்கந்தத்தில் கலி நிக்ரஹவர்ணனமென்ற பதினேழாவது அத்தியாயம் முற்றிற்று.

பதினெட்டாவது அத்தியாயம்.

(அ–கை) राज्ञस्त्वष्टादशे तस्य ब्रह्मशापो निरूप्यते।
स चानुग्रह एवास्य जातो वैराग्यमावहन् ॥ १ ॥

(க–ரை) இந்தப் பதினெட்டாவது அத்தியாயத்தில் அந்தப் பரீக்ஷித்ராஜனுக்கு நேர்ந்த ப்ராம்ஹணசாபமானது சொல்லப்படுகிறது. வைராக்கியத்தை யுண்டுபண்ணின அந்தச் சாபமும் இவருக்கு அனுக்கிரஹமாகவே ஆயிற்று. (1) (எ–று)

अथ अष्टादशोऽध्यायः ॥

सूत उवाच—यो वै द्रौण्यस्त्रविप्लुष्टो न मातुरुदरे मृतः। अनुग्रहाद्भगवतः कृष्णस्याद्भुतकर्मणः॥ १ ॥ ब्रह्मकोपोत्थिताद्यस्तु तक्षकात्प्राणविप्लवात्। न संमुमोहोरुभयाद्भगवत्यर्पिताशयः॥ २ ॥ उत्सृज्य सर्वतः सङ्गं विज्ञाताजितसंस्थितिः। वैयासकेर्जह्नौ शिष्यो गङ्गायां स्वं कलेवरम् ॥३॥ नोत्तमश्लोकवार्तानां जुषतां तत्कथामृतम्। स्यात्संभ्रमोऽन्तकालेऽपि स्मरतां तत्पदाम्बुजम् ॥ ४ ॥ तावत्कलिर्न प्रभवेत्प्रविष्टोऽपीह सर्वतः।

ஸூதர் சொல்லலுற்றார்—*எவர் தாயின் வயற்றிலிருக்குங் கால் அஸ்வத்தாமாவின் அஸ்திரத்தினுல் பொசுக்கப்பட்ட போதிலுங்கூட அத்புதமான கர்மாவையுடையவரும், பகவானுமான ஸ்ரீகிருஷ்ணனுடைய அனுக்கிரஹத்தினுல் சாகவில்லையோ, (1) பகவானிடத்தில் செலுத்தப்பட்ட சித்தமுள்ளவராக இருப்பதுபற்றி எவர் ப்ராம்ஹண கோபத்தினுல் தூண்டப்பட்ட தக்ஷகனிடமிருந்து நேர்ந்த ப்ராண நாசமூலமுண்டான அதிகம் பயத்தினுல் மயங்கவில்லையோ, (2) அவர் எல்லா விஷயங்களிலுமுள்ள பற்றையொழித்து சுகாசாரியரின் சிஷ்யராகவாகி ஹரியினுடைய தத்துவத்தையறிந்து கொண்டு தனது சரீரத்தைக் கங்கைக்கரையில் பரித்யாகஞ் செய்தார். (3) உத்தமஸ்லோகனை பகவானுடைய வார்த்தையையே வார்த்தையாக (ஜீவனஹேதுவாக) உடையவர்களும், அவருடைய கதாமிருகத்தை யனுபவிக்கின்றவர்களும், அவருடைய சரணாரவிந்தத்தை நினைப்பவர்களுமான பக்தர்களுக்கு மரணகாலத்திலுங்கூட மயக்கமுண்டாகமாட்டாதன்றே. (4) மஹானும் அபிமன்யுவின் குமாரனுமான (*)சக்கிரவர்த்தியானவர் எதுவரை பூமியில் பதியாக

---

* பரீக்ஷித்தின் அத்யாச்சரியமான முக்தியைச் சொல்லுவான் கருதி அவ்விதமேற்படலாம் என்ற எண்ணமுண்டாவதற்கு வேண்டி அவருடைய ஆச்சரியமான பிறவியை நினைஊட்டுகிறார்.

(*) चतुर्योजनपर्यन्तं शासिता नृप ईरितः। तस्माच्छतगुणो यो हि स ज्ञेयो मण्डलेश्वरः॥ तस्माद्दशगुणो यश्च राजेन्द्रः स प्रकीर्तितः। राजेन्द्राणां पञ्चलक्षं चक्रवर्ती प्रशास्ति यः॥ நான்கு யோஜனை தூரமுள்ள பூமியை எவன் ஆளுகிறானே அவன் நீநுபன் எனப்படுவான். நானூறு யோஜனைதூரமுள்ள பூமியை

यावदीशो महानुर्व्यामाभिमन्यव एकराट् ॥ ५ ॥ यस्मिन्नहनि यर्ह्येव भगवानुत्ससर्ज गाम् । तदैवेहानुवृत्तोऽसावधर्मप्रभवः कलिः ॥६॥ नानुद्वेष्टि कलिं सम्राट् सारङ्ग इव सारभुक् । कुशलान्याशु सिद्ध्यन्ति नेतराणि कृतानि यत् ॥ ७ ॥ किं नु बालेषु शूरेण कलिना धीरभीरुणा । अप्रमत्तः प्रमत्तेषु यो वृको नृषु वर्तते ॥८॥ उपवर्णितमेतद्वः पुण्यं पारीक्षितं मया । वासुदेवकथोपेतमाख्यानं यदपृच्छत ॥ ९ ॥ या याः कथा भगवतः कथ-

---

விருக்கின்றாரோ அதுவரை நாலாபக்கத்திலும் பிரவேசித்தபோதிலுங்கூட கலியானவன் உலகைத் தன்வசப்படுத்தச் சக்தனாகவாகவில்லை. (5) எந்தத் தினத்தில் எந்த க்ஷணத்தில் பகவான் பூமியை விட்டாரோ அந்த க்ஷணத்திலேயே அதர்மத்துக்குக் காரணமான இந்தக் கலியும்கூட ப்ரவேசித்து விட்டான். (6) தேனை எடுக்கும் வண்டுபோல ஸாரத்தைக் கிரஹிப்பவரான சக்கிரவர்த்தியானவர் கலியைத் துவேஷிக்கவில்லை. இந்தக் கலியுகத்திலோ புண்ணிய காரியங்கள் ஸங்கல்பமாத்திரத்திலேயே பலனைத் தருகின்றன. பாபகாரியங்களோ ஸங்கல்பமாத்திரத்தில் தமது பலனைத் தருவதில்லை. பாபகாரியங்கள் செய்யப்பட்டால்தான் தமது பலனைத் தருகின்றன. (7) எந்தக்கலி ஜாக்கிரதையற்ற மனிதர்களிடத்தில் சென்ஞய்போல வெகு ஜாக்கிரதையுள்ளவனுப் ப்ரவிருத்திக்கின்றானே தீரர்க(விவேகிக)ளிடத்தில் பயந்தவனும் அவிவேகிகளிடத்தில் சூரனுமான அந்தக்கலியினால் என்ன செய்துவிடமுடியும். (8) வாஸுதேவனுடைய கதையுடன் கூடின எந்தப் பரீக்ஷித்கதையை நீங்கள் கேட்டீர்களோ புண்ணியமான இந்தக் கதையானது உங்களுக்கு என்னால் கூறப்பட்டது. (9) சொல்லத்தகுந்த பெரிய கர்மங்களையுடையவரான பகவானுடைய குணம் கர்மம் இவற்றை விஷயமாகக் கொண்ட கதைகள் எவை எவையுண்டோ அவைகளை கேஷ

ஆளுபவன் மண்டலேசுவரனுவான். நான்காயிரம் யோஜனை தூரமுள்ள பூமியை ஆளுபவன் ராஜேந்திரனுவான். ஐந்து லக்ஷம் ராஜேந்திரர்களை ஆளுபவன் சக்கிரவர்த்தி எனப்படுவான். (இங்கு கூறிய யோஜனம் என்பது 10 மையில்தூரம் என்று சிலரும், 8 மையிலென்று சிலரும் சொல்லுகின்றனர்.) என ப்ரம்ஹவைவர்த்தபுராணத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

नीयोरुकर्मणः। गुणकर्माश्रयाः पुम्भिः संसेव्यास्ता बुभूषुभिः॥ १० ॥ ऋषय ऊचुः—सूत जीव समाः सौम्य शाश्वतीर्विशदं यशः। यस्त्वं शंससि कृष्णस्य मर्त्यानामृतं हि नः॥११॥ कर्मण्यस्मिन्ननाश्वासे धूमधूम्रात्मनां भवान्। आपाययति गोविन्दपादपद्मासवं मधु ॥ १२ ॥ तुलयाम लवेनापि न स्वर्गं न नापुनर्भवम्। भगवत्सङ्गिसङ्गस्य मर्त्यानां किमुताशिषः ॥१३॥ को नाम तृप्येद्रसवित्कथायां महत्तमैकान्तपरायणस्य। नान्तं गुणानामगुणस्य जग्मुर्योगेश्वरा ये भवपाद्ममुख्याः ॥ १४ ॥ तन्नो भवान्वै भगवत्प्र-

---

மத்தையடைய விரும்புகின்ற புருஷர்களால் ஸேவிக்கத் தக்கன என்றூர். (10)

ருஷிகள் சொல்லலுற்றனர்—ஹே ஸௌம்ய! சூத! எந்த நீர் மனிதர்களுக்கு மரணத்தை நிவிருத்திசெய்கின்றதான ஸ்ரீகிருஷ்ணனுடைய விசுத்தமான யசஸ்ஸை எங்களுக்குச் சொல்லுகின்றீரோ அந்த நீர் நீண்டவருஷங்கள் முழுதும் ஜீவித்திருப்பீராக. (11) எவ்வித அங்கக்குறைவும் நேராதபடி அனுஷ்டித்து விட்டோமென கம்புவதற்கு இடமில்லாத இந்த ஸத்திரயாகத்திலேற்பட்ட புகையினுல் அழுக்கடைந்த சரீரத்தை யுடையவர்களான எங்களே ஸ்ரீகோவிந்த சரணாரவிந்தத்திலுள்ள இனிப்பான தேனைப் பானஞ்செய்யும்படி நீர் செய்கின்றீர். (12) விஷ்ணு பக்தர்களின் ஸங்கத்தின் அற்பகாலத்துடன், ஸ்வர்க்கத்தையும் ஸமமாக எண்ணமாட்டோம். மோக்ஷத்தையும் ஸமமாக எண்ணமாட்டோம். இவ்விதமிருக்க மனிதர்களின் பயனற்ற ராஜ்யாதிகளே ஸமமாக எங்ஙனம் எண்ணுவோம். (13) சிறந்த மஹான்களுக்கு மேலான ஆஸ்ரயமாக இருப்பவரும், ப்ராகிருதங்களான குணங்களற்றவருமான பகவானிடமுள்ள கல்யாணகுணங்களின் முடிவை, சிவன் ப்ரம்ஹா இவர்களே ஆதியாகக்கொண்ட யாதொரு யோகேஸ்வரர்களுண்டோ அவர்களே நிஸ்சயிக்க முடியாதவர்களாக விருக்கின்றனரோ அவருடைய கதையிலுள்ள ரஸத்தை யறிந்த எவன் தான் அதுபோதும் என எண்ணுவான். (14) ஆகவே ஹே வித்வன்! எங்கள் நடுவில் பகவானே ப்ரதானனுக (ஸேவ்யராக) வுடைய நீரே, சிறந்த மஹனீயர்களுக்கு நிஸ்சிதமான ஆஸ்ரயமாகவுள்ள

धानो महत्तमैकान्तपरायणस्य। हरेरुदारं चरितं विशुद्धं शुश्रूषतां नो वितनोतु विद्वन्॥ १५॥ स वै महाभागवतः परीक्षिद्येनापवर्गाख्यमदभ्रबुद्धिः। ज्ञानेन वैयासकिशाब्दितेन भेजे खगेन्द्रध्वजपादमूलम्॥ १६॥ तन्नः परं पुण्यमसंवृतार्थमाख्यानमत्यद्भुतयोगनिष्ठम्। आख्याह्यनन्तचरितोपपन्नं पारीक्षितं भागवताभिरामम्॥ १७॥

सूत उवाच—अहो वयं जन्मभृतोऽद्य हास्म वृद्धानुवृत्त्यापि विलोमजाताः। दौष्कुल्यमाधिं विधुनोति शीघ्रं महत्तमानामभिधानयोगः॥ १८॥

ஹரியினுடைய உதாரமும் விசுத்தமுமான சரிதத்தைகேட்க ஆவல் கொண்ட எங்களுக்கு விரித்துரைப்பீராக. (15) மஹாபாகவதரும், விசாலமான புத்தியை யுடையவருமான அந்தப் பரீக்ஷித்ராஜன் வியாஸகுமாரரான சுகாசாரியராலுபதேசிக்கப்பட்ட எந்த க்ஞான ஸாதனமான ஆக்கியானத்திலுல் மோக்ஷமென்ற பெயரை யுடைய தான கருடத்துவஜனுன பகவானுடைய பாதமூலத்தை யடைந் தாரோ மேலான புண்ணியமானதும் (சித்த சுத்தியைத் தரக்கூடிய தும்) அத்யத்புதமான க்ஞானயோகத்தில் முடிவை யடையக்கூடி யதும் (சிறந்த ஞானயோகத்துக்கு ஸாதனமானதும்) அனந்த னுடைய சரித்திரங்களுடன் கூடினதும், பாகவதர்களுக்கு மிக்கப் பிடித்ததும், பரீக்ஷித்துக்குச் சுகராலுபதேசிக்கப் பட்டதுமான அந்த ஆக்கியானத்தை (ஸ்ரீமத்பாகவதத்தைத்) தெளிவாக எங்களுக் குச் சொல்லுவீராக என்றனர். (16–17)

ஸூதர் சொல்லலுற்றூர்—சிறந்த மஹான்களுடன் நேர்ந்த உலகவியவஹாரரூபமான ஸம்பந்தமானது கெட்டகுலத்தில் பிறந்த தன்மூலம் நேர்ந்தமனப்பீடையைச் சீக்கிரம் போக்கிவிடும். ஆனது பற்றி நாம் [*]ப்ரதிலோமஜாதியிற் பிறந்தவர்களாக இருந்தபோதி லுங்கூட பெரியோர்களான தங்களுடைய ஆதரவினுல் (அல்லது

---

[*] विलोमजाताः=என்பதுமூலம். இதற்கு ப்ரதி லோமஜாதியிற் பிறந்தவர் என ஸ்ரீதராசாரியர் பொருள் கூறியிருக்கிறூர். மேலும், मन्ये त्वां विषये वाचां स्नातमन्यत्र छान्दसात् (பா–ஸ்க–1. அத்–4–சு–13) உம்மை வேதவாக்கியங்களைத் தவிர்த்து மீதமுள்ளவாக்கில் நிபுண ராக எண்ணுகிறேன் என்றும், कस्मादसाविमान्विप्रानध्यास्ते प्रतिलोमजः

कुतः पुनर्गृणतो नाम तस्य महत्तमैकान्तपरायणस्य। योऽनन्तशक्तिर्भग-
वाननन्तो महद्गुणत्वाद्यमनन्तमाहुः॥ १९ ॥ एतावतालं ननु सूचितेन गुणै-
रसाम्यानतिशायनस्य। हित्वेतरान्प्रार्थयतो विभूतिर्यस्याङ्घ्रिरेणुं जुषतेऽन-
भीप्सोः ॥ २० ॥ अथापि यत्पादनखावसृष्टं जगद्विरिञ्चापहृतार्हणाम्भः।
सेशं पुनात्यन्यतमो मुकुन्दात्को नाम लोके भगवत्पदार्थः ॥ २१ ॥ यत्रानु-

---

ஞானவ்ருத்தரான ஸ்ரீசுகாசாரியருடைய ஸேவையினால்) இப்பொ
ழுது ஸபலமான பிறவியை யுடையவர்களாகவே ஆகிவிட்டோம்.
இதுவேகு ஆஸ்சரியமும் ஸந்தோஷகரமுமாகும். (18) எந்தப்
பகவான் அனந்தமான=எல்லையற்ற, சக்திகளையுடையவரோ, ஸ்வ
ரூபத்தினாலும் அனந்தரோ, மஹான்களால் கானஞ்செய்யப்படுகின்ற
குணங்களை யுடையவராக இருத்தல்பற்றி எவரைக் குணத்தினாலும்
அனந்தராகச் சாஸ்திரங்கள் சொல்லுகின்றனவோ, மஹத்தமர்
களுக்கு நிலைத்த ஆஸ்ரயபூதரான அவருடைய நாமத்தை அடிக்கடி
சொல்லுகின்றவர்க்குச் சிறந்த மஹான்களுடன் நேர்ந்த உலகவியவ
ஹாரரூபமான ஸம்பந்தமானது கெட்டகுலத்தில் பிறந்ததன்மூல
மேற்படும் மனப்பீடையைப் போக்குகிறது என்பதைச் சொல்லவும்
வேண்டுமோ?. (19) லக்ஷ்மியானவள் தன்னை ப்ரார்த்திக்கின்ற
ப்ராம்ஹாதிகளை விட்டுத் தன்னை வேண்டாதவராயினுங்கூட எவரு
டைய சரணதூளியை ப்ரீதியுடன் ஸேவிக்கின்றாளோ அவருடைய
குணங்களுடன் மற்றவர்க்கு ஸாம்யமுமில்லை, உயர்வுமில்லை என்ற
க்ஞானம் யாதுண்டோ இவ்வளவு சூசனமே போதுமானதன்
றே.(20) மேலும், எவருடைய பாதங்களிலுள்ள நகங்களினின்றும்
வெளிவந்ததும் ப்ரம்ஹதேவனால் ஸமர்ப்பிக்கப்பட்டதுமான அர்க்
யோதகமானது மஹாதேவனுடன்கூடின ஜகத்தைப் பரிசுத்தப்
படுத்துகிறதோ, எவரிடத்தில் பக்திசெய்கின்றவர்கள் தீர்களாக

(பா. ஸ்க. 10. அத். 78. சுலோ. 24) ப்ரதிலோமஜாதியிற்பிறந்த இவர்
ப்ராம்ஹணர்களுக்கு மேலான ஆஸனத்திலிருப்பது தகுமோ? என்றும்
சொன்னதிருந்து நைமிசாரண்யவாஸிகளான சௌனகாதிகளுக்குப்
புராணங்களை யுபதேசித்த ரோமஹர்ஷணரும், அவருடைய புத்திரரான
உக்ரஸ்ரவஸ்ஸும் ब्राह्मण्यां क्षत्रियात्सूतः என்றபடி ப்ரதிலோமஜாதியிற்
பிறந்தவரேயாவர் என்பதும் தெளிவாகிறது.

रक्ताः सहसैव धीरा व्यपोह्य देहादिषु सङ्गमूढम्। व्रजन्ति तत्पारमहंस्यमन्त्यं यस्मिन्नहिंसोपशमः स्वधर्मः ॥ २२ ॥ अहं हि पृष्टोऽर्यमणो भवद्भिराचक्ष आत्मावगमोऽत्र यावान्। नभः पतन्त्यात्मसमं पतत्रिणस्तथासमं विष्णुगतिं विपश्चितः ॥ २३ ॥

एकदा धनुरुद्यम्य विचरन्मृगयां वने। मृगाननुगतः श्रान्तः क्षुधितस्तृषितो भृशम् ॥ २४ ॥ जलाशयमचक्षाणः प्रविवेश तमाश्रमम्। ददर्श मुनिमासीनं शान्तं मीलितलोचनम् ॥ २५ ॥ प्रतिरुद्धेन्द्रियप्राणमनोबुद्धिमुपारतम्। स्थानत्रयात्परं प्राप्तं ब्रह्मभूतमविक्रियम् ॥ २६ ॥ विप्र-

---

ஆகி தேஹாதிகளில் நிலைத்தஸங்கத்தை அப்பொழுதே போக்கிக் கொண்டு, எந்தப் பரமஹம்ஸத்தன்மையில் அஹிம்ஸையும், உபசமமும் (வைராக்கியமும்) ஸ்வாபாவிக தர்மமோ ஸர்வோத்தமமான அந்தப் பரமஹம்ஸத்தன்மையை யடைகின்றனரோ, அந்த முகுந்தனைக் காட்டிலும் உலகில் பகவான் என்ற பதத்தின் பொருளாக வேறு எவர்தானிருக்க முடியும். (21–22) ஹே அர்யமர்களே! மூன்று வேதஸ்வரூபமான சூரியர்களே! உங்களால் கேட்கப்பட்ட நான் இவ்விஷயத்தில் எனது புத்திக்கு எவ்வளவு எட்டுமோ அவ்வளவு சொல்லுகிறேன். பக்ஷிகள் தனது சக்திக்குத் தக்கபடி ஆகாசத்தில் எவ்விதம் பறக்கின்றனவோ அவ்விதமே தான் வித்வான்களும் தனது சக்திக்கேற்றபடி விஷ்ணுவின் லீலையைச் சொல்லுகின்றனர். (23)

ஒருஸமயம் பரீக்ஷித்ராஜன் வேட்டையாடுவதற்குவேண்டி வில்லைக் கையிலெடுத்துக்கொண்டு மிருகங்களைப் பின்தொடர்ந்து ஓடிக்களைத்தவனும் மிகவும் பசியும் தாஹமுமுள்ளவனும் ஆகி ஜலமிருக்குமிடத்தைக் காணுதவனுய் ப்ரவிஸ்தமான ஆஸ்ரமத்தில் ப்ரவேசித்தான். அந்த ஆஸ்ரமத்தில் இருகண்களையும் மூடிக்கொண்டு சாந்தராக உட்கார்ந்திருப்பவரும், ஒடுக்கப்பட்ட இந்திரியம், ப்ராணன் மனஸ், புத்தி இவற்றை யுடையவரும், ஆனதுபற்றியே எவ்விதவியாபாரமுமற்றவரும், ஜாக்கிரம் ஸ்வப்பினம் சுஷுப்தி என்ற மூன்று ஸ்தானங்களைக் கடந்து நான்காவதான பதத்தையடைந்தவரும், ப்ரம்ஹபூதரும், ஆனதுபற்றியே அவிக்ரியரும், நாலாபக்கங்

कीर्णजटाच्छन्नं रौरवेणाजिनेन च । विशुष्यत्तालुरुदकं तथाभूतमया-
चत ॥ २७ ॥ अलब्धतृणभूम्यादिरसंप्राप्तार्घसूनृतः । अवज्ञातमिवात्मानं
मन्यमानश्चुकोप ह ॥ २८ ॥ अभूतपूर्वः सहसा क्षुत्तृड्भ्यामर्दितात्मनः ।
ब्राह्मणं प्रत्यभूद्ब्रह्मन्मत्सरो मन्युरेव च ॥ २९ ॥ स तु ब्रह्मऋषेरंसे गता-
सुमुरगं रुषा । विनिर्गच्छन्धनुष्कोट्या निधाय पुरमागमत् ॥ ३० ॥ एष
किं निभृताशेषकरणो मीलितेक्षणः । मृषासमाधिराहोस्विदकिं नु स्या-
त्क्षत्रबन्धुभिः ॥ ३१ ॥ तस्य पुत्रोऽतितेजस्वी विहरन्बालकोऽर्भकैः ।
राज्ञाऽघं प्रापितं तातं श्रुत्वा तत्रेदमब्रवीत् ॥ ३२ ॥ अहो अधर्मः पालानां

களிலும் பாவியுள்ள ஜடைகளிலும், மான்தோலிலும் மறைக்
கப்பட்டவருமான சமீகரென்ற முனியைக் கண்டான். மிக்க
வறண்ட கடைவாயை யுடையவனுய் அந்நிலையிலுள்ள அவரிடம்
ஜலத்தை யாசித்தான். (24–27) அங்கு தர்ப்பாஸனத்தையோ
உட்காருவதற்குறிய பூமி முதலியவற்றையோ அடையாதவனுயும்,
பூஜை ப்ரியவசனம் இவற்றையோ அடையாதவனுயுமாகித் தன்னை
அலக்ஷியஞ் செய்துவிட்டதாக வெண்ணிக் கொண்டு கோபத்தை
யடைந்தான். (28) ஹே ப்ரம்ஹன்! பசிதாஹம் இவற்றுல் பீடிக்
கப்பட்ட தேஹமுள்ள அரசனுக்கு இதுவரை நேரிடாதகோபமும்,
பொறுமையும் உடனே ப்ராம்ஹணரிட முண்டாயிற்று. (29)
அங்கிருந்து திரும்பின அவனே கோபத்தினுல் உயிரற்ற பாம்பை
வில்லின் நுனியாலெடுத்து ப்ரம்ஹருஷியின் தோளில் போட்டு
விட்டுப் பட்டினத்துக்குக் கிளம்பினன். (30) இவர் நிஸ்சலமான
ஸர்வேந்திரியங்களையு முடையவராய் கண்களை மூடிக்கொண்டு
இருக்கின்றூரா? அல்லது க்ஷத்திரியர் வந்தாலும் நமக்கென்ன,
போனலும் நமக்கென்ன என்ற அலக்ஷியத்தினுல் பொய்யான
ஸமாதியிலிருக்கின்றூரா? என அரசன் அறியவேண்டியே அவ்வி
தம செய்தான். (31) அதிகம் தபஸ்சக்தியுள்ளவனும், குழந்தை
களுடன் விளையாடுகின்றவனும், பாலகனுமான சிருங்கி என்ற
பெயருள்ள அவருடைய புத்திரன் அரசனல் பிதா தீங்கிழைக்கப்
பட்டதைக் கேட்டு அந்தக் குழந்தைகளின் நடுவில் இதைச் சொல்
லலுற்றன். (32) காப்பவர்களான அரசர்கள் தர்மத்தை மீறி நடப்

पीत्वां बलिभुजामिव । स्वामिन्यघं यद्दासानां द्वारपानां शुनामिव ॥ ३३ ॥ ब्राह्मणैः क्षत्रबन्धुर्हि द्वारपालो निरूपितः । स कथं तद्गृहे द्वाःस्थः स भाण्डं भोक्तुमर्हति ॥ ३४ ॥ कृष्णे गते भगवति शास्तर्युत्पथगामिनाम् । तद्भिन्नसेतूनद्याहं शास्मि पश्यत मे बलम् ॥ ३५ ॥ इत्युक्त्वा रोषताम्राक्षो वयस्यानृषिबालकान् । कौशिक्याप उपस्पृश्य वाग्वज्रं विससर्ज ह ॥ ३६ ॥ इति लङ्घितमर्यादं तक्षकः सप्तमेऽहनि । दङ्क्ष्यति स्म कुलाङ्गारं चोदितो मे ततद्रुहम् ॥ ३७ ॥

ततोऽभ्येत्याश्रमं बालो गले सर्पकलेवरम् । पितरं वीक्ष्य दुःखार्तो मुक्तकण्ठो रुरोद ह ॥ ३८ ॥ स वा आङ्गिरसो ब्रह्मन् श्रुत्वा सुतविलाप-

---

பது அந்யாயமாகவாகும். தனது யஜமானனிடத்தில் அடிமை களின் பாபாசரணமானது யாதுண்டோ அது கொழுத்த காக்கை களுடையவும், வாயிலைக் காக்கும் நாய்களுடையவும் கெட்டசெய் கையைப் போலவேயாகும். (33) பராம்ஹணர்களால் க்ஷத்திரியன் வாயிற்காப்பவனுகவன்றே நிரூபிக்கப்பட்டிருக்கிறன். வாயிலிலிருக் கும் அவன் அந்த யஜமானனுடைய கிருஹத்தில் சட்டியிலிருக்கும் அன்னத்தைச் சாப்பிடுவதற்கு எவ்விதம் அர்ஹனுவான். (34) கெட்டவழி செல்லுகின்றவர்களைச் சிக்ஷிப்பவரும் பகவானுமான ஸ்ரீகிருஷ்ணன் மறைந்ததும் அதன் பிறகு வறையறையை மீறின வர்களான அரசர்களை நான் இப்பொழுது சிக்ஷிக்கிறேன். எனது தபோபலத்தைப் பாருங்கள். (35) என்று தோழர்களான ருஷி குமாரர்களைப் பார்த்துச் சொல்லிவிட்டு கோபத்தினுல் சிவந்த கண் ணுள்ளவனுய் கௌசிகியின் ஜலத்தில் ஆசமனஞ் செய்து வாக்வஜ் ரத்தை=(வஜ்ராயுதம்போல நாசஞ்செய்யக்கூடிய சாபத்தைச்) செய் தான். (36)

இவ்விதம் எனது பிதாவுக்குத் தீங்கிழைத்தவனும், தனது முறையை விட்டுவிலகினவனும் குலத்துக்கு நெருப்புப்போன்றவனு மான மனிதனை என்னுல் ஏவப்பட்ட தக்ஷகன் ஏழாவது நாளில் கடிக் கப்போகின்றன் என்றன். (37) அந்த ருஷி குமாரன் அங்கிருந்து ஆச்ரமத்துக்குவந்து கழுத்தில் ஸர்ப்பத்தின் உடலையுடைய பிதா வைக்கண்டு துக்கத்தினுல் பீடிக்கப்பட்டவனுய் வாய்விட்டு அழத்

नम्। उन्मील्य शनकैर्नेत्रे दृष्ट्वा स्वांसे मृतोरगम् ॥ ३९ ॥ विसृज्य पुत्रं पप्रच्छ वत्स कस्माद्धि रोदिषि। केन वा ते प्रतिकृतमित्युक्तः स न्यवेदयत्॥ ४० ॥ निशम्य शप्तमतदर्ह नरेन्द्रं स ब्राह्मणो नात्मजमभ्यनन्दत्। अहो बतांहो महदज्ञ ते कृतमल्पीयसि द्रोह उरुर्दमो धृतः॥ ४१ ॥ न वै नृभिर्नरदेवं पराख्यं संमातुमर्हस्यविपक्वबुद्धे। यत्तेजसा दुर्विषहेण गुप्ता विन्दन्ति भद्राण्यकुतोभयाः प्रजाः ॥ ४२ ॥ अलक्ष्यमाणे नरदेवनाम्नि रथाङ्गपाणावयमङ्ग लोकः। तदा हि चोरप्रचुरो विनङ्क्ष्यत्यरक्ष्यमाणोऽविवरूथवत्क्षणात्॥४३॥ तदद्य नः पापमुपैत्यनन्वयं यन्नष्टनाथस्य वसोर्विलु-

---

தொடங்கிவிட்டான்.(38) ஹே ப்ரம்ஹன்! அந்த ஆங்கிரஸோ புத்திரனுடைய அழுகையைக்கேட்டு மெதுவாய்க் கண்களைத் திறந்து கொண்டு தனது தோளில் இறந்த பாம்பைக்கண்டு அதைக் கீழே தள்ளிவிட்டுப் புத்திரனைப்பார்த்து ஹே வத்ஸ! எதற்காக அழுகின்றனை? எவனுல் உனக்கு அபகாரம் செய்யப்பட்டது என்று கேட்டார். இவ்விதம் கேட்கப்பட்ட அவன் நடந்ததைச் சொன்னன். (39–40) சாபஞ்செய்யத் தகாதவரான நரேந்திரன் சபிக்கப்பட்டதைக் கேட்டு அந்த ப்ராம்ஹணன் புத்திரனை வெறுக்கலானர். ஹே மூட! அந்தோ உன்னுல் மஹத்தான பாபமானது செய்யப்பட்டுவிட்டது. அல்பம் அபராதம் செய்தவனிடத்தில் அதிகமான சிக்ஷையானது விதிக்கப்பட்டுவிட்டதே. (41) ஹே பக்குவப்படாத புத்தியையுடையவனே! பிறரால் பொறுக்கவியலாத எவனுடைய தேஜஸ்வினுல் காப்பாற்றப்பட்ட ப்ரஜைகள், எங்கிருந்தும் பயமற்றவர்களாய் க்ஷேமத்தை யடைகின்றனரோ அத்தகைய விஷ்ணுவென்ற பெயரையுடைய நரதேவனை ஸாமான்ய மனிதர்களுடன் ஸமமாக நீ எண்ணுவது பொருந்தாது. (42) ஹே அங்க! நரதேவன் என்ற பெயரையுடைய மஹாவிஷ்ணுவானவர் உலகில் எப்பொழுது காணப்படவில்லையோ அப்பொழுது இந்த உலகமானது ரக்ஷிப்பவனற்ற ஆட்டுமந்தையானது போலத் திருடன் அதிகமாகவாகி அதேக்ஷணத்தில் நாசத்தை யடைந்துவிடும். (43) நஷ்டனுன நாதனையுடைய உலகினுடைய தனத்தைத் திருடுகின்ற திருடர் முதலியோர் மூலமாக இப்பொழுது எந்தப்

म्पकात्। परस्परं घ्नन्ति शपन्ति वृञ्जते पशून्स्त्रियोऽर्थान्पुरुदस्यवो जनाः ॥ ४४ ॥ तदार्यधर्मश्च विलीयते नृणां वर्णाश्रमाचारयुतस्त्रयीमयः। ततोऽर्थकामाभिनिवेशितात्मनां शुनां कपीनामिव वर्णसङ्करः॥ ४५ ॥ धर्मपालो नरपतिः स तु सम्राड् बृहच्छ्रवाः। साक्षान्महाभागवतो राजर्षिर्हयमेधयाट्। क्षुत्तृट्श्रमयुतो दीनो नैवास्मच्छापमर्हति ॥ ४६ ॥ अपापेषु स्वभृत्येषु बालेनापक्वबुद्धिना। पापं कृतं तद्भगवान्सर्वात्मा क्षन्तुमर्हति ॥ ४७ ॥ तिरस्कृता विप्रलब्धाः शप्ताः क्षिप्ता हतापि वा। नास्य तत्प्रतिकुर्वन्ति तद्भक्ताः प्रभवोऽपि हि ॥ ४८ ॥ इति पुत्रकृतांघेन सोऽनुतप्तो महामुनिः।

பாபமானது ஏற்படப்போகிறதோ அந்தப்பாபம் நம் நிமித்தமாக ஏற்படுவதால் நம்மையே வந்தடையப்போகிறது. அதிகம் திருடர்களை யுடையவர்களான ஜனங்கள் ஒருவரையொருவர் கொல்லுவர். ஒருவரையொருவர் கொடூரமாகப் பேசுவர். பசுக்களையும், ஸ்திரீகளையும், பொருள்களையும் திருடுவர். (44) அப்பொழுது வர்ணம் ஆஸ்ரமம் இவற்றுக்குறிய ஆசாரத்துடன் கூடினதும், மூன்று வேதஸ்வரூபமுமான ஸதாசாரமானது நசித்துவிடும். அதனால் அர்த்தம் காமம் இவற்றில் அதிகப் பற்றையடைந்த மனமுள்ள ஜனங்களுக்கு, நாய்களுக்கும் குரங்குகளுக்கும் போல வர்ணஸாங்கர்யமானது உண்டாகிவிடப்போகிறது. (45) தர்மத்தைக் காப்பவனும், சக்கிரவர்த்தியும், பெருத்த கீர்த்தியையுடையவனும், ஸாக்ஷாத்மஹாபாகவதனும், ராஜர்ஷியும், அச்வமேத யாகஞ்செய்தவனுமான அந்த ராஜனே பசி தாஹம் இவற்றாலேற்பட்ட ச்ரமமுள்ளவனாகவும் தீனனாகவு மிருந்ததால் நமது சாபத்துக்குத் தகுதியுடையவனேயன்று. (46)

பாபமற்றவர்களானத் தனது பக்தர்களிடத்தில் அபக்வபுத்தியுள்ளபாலனால் யாதொரு பாபமானது செய்யப்பட்டதோ அதை ஸர்வாத்மாவான பகவான் பொறுத்துக் கொள்ளுவாராக. (47) அந்த விஷ்ணுபக்தர்கள் நிந்திக்கப்படினும், வஞ்சிக்கப்படினும், அவமதிக்கப்படினும், அடிக்கப்படினும்கூட பதில் செய்யதிறமையுள்ளவர்களாக இருந்தபோதிலும் தன்னை ஹிம்ஸித்தவனுக்கு அந்த ஹிம்ஸாரூபமான பதிலைச் செய்யமாட்டார்கள் என்றார். (48)

स्वयं विप्रकृतो राज्ञा नैवाघं तदचिन्तयत् ॥ ४९ ॥ प्रायशः साधवो लोके परैर्द्वन्द्वेषु योजिताः। न व्यथन्ति न हृष्यन्ति यत आत्माऽगुणाश्रयः॥५०॥

इति श्रीमद्भागवते महापुराणे प्रथमस्कन्धे विप्रशापोपलम्भन वर्णनं नामाष्टादशोऽध्यायः ॥ १८ ॥

अथैकोनविंशोऽध्यायः ॥

सूत उवाच—महीपतिस्त्वथ तत्कर्म गर्ह्यं विचिन्तयन्नात्मकृतं सुदुर्मनाः। अहो मया नीचमनार्यवत्कृतं निरागसि ब्रह्मणि गूढतेजसि ॥ १ ॥

புத்திரனுற்செய்யப்பட்ட அபராத நிமித்தமாக இவ்விதம் பஸ்சாத்தாபத்தையடைந்த அந்த மஹாமுனியானவர் தான் அரசனுல் தீங்கிழைக்கப்பட்டபோதிலுங்கூட அந்தக் குற்றத்தைச் சிந்திக்கவேயில்லை. (49) உலகில் ஸாதுக்கள் பிறரால் சுகதுக்காதிகளையடையும்படி செய்விக்கப்பட்ட போதிலுங்கூட ஆத்மாவானவன் சுகதுக்காதிகளுக்கு ஆஸ்ரயனுகவாவதில்லை என்ற அனுபவமிருப்பதால் கஷ்டத்தையும் அடைவதில்லை. ஸந்தோஷத்தையும் அடைவதில்லை.

இவ்விதம் ஸ்ரீமத்பாகவத மஹாபுராண ப்ரதமஸ்கந்தத்தில் ப்ராம்ஹண சாபப்ராப்திவர்ணனம் என்ற பதினேட்டாவது அத்தியாயம் முற்றிற்று.

பத்தொன்பதாவது அத்தியாயம்.

(அ—கை) प्रायोपविष्टे गङ्गायां राज्ञि योगिजनावृते।
शुकस्यागमनं तत्र प्रोक्तमेकोनविंशके ॥ १ ॥

(க—ரை) கங்கைக் கறையில் அரசன் ப்ராயோபவேசத்தையடைந்தபொழுது யோகிகளான ஜனங்களால் சூழப்பட்ட அந்தக் கங்கைக் கறையில் சுகரின் வருகையானது பத்தொன்பதாவது அத்தியாயத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. (1) (எ—று)

ஸுதர் சொல்லலுற்றார்—பிறகு அரசனே தன்னுல் செய்யப்பட்ட நிந்திக்கத்தக்க அந்தக் காரியத்தை நினைத்துக் கொண்டு

ध्रुवं ततो मे कृतदेवहेलनाद्दुरत्ययं व्यसनं नातिदीर्घात्। तदस्तु कामं त्वघनिष्कृताय मे यथा न कुर्यां पुनरेवमद्धा ॥ २ ॥ अद्यैव राज्यं बलमृद्धकोशं प्रकोपितब्रह्मकुलानलो मे। दहत्वभद्रस्य पुनर्न मे भूत्पापीयसी धीर्द्विजदेवगोभ्यः॥३॥ स चिन्तयन्नित्थमथाऽशृणोद्यथा मुनेः सुतोक्तो निर्ऋतिस्तक्षकाख्यः। स साधु मेने नचिरेण तक्षकानलं प्रसक्तस्य विरक्तिकारणम् ॥ ४ ॥ अथो विहायेमममुं च लोकं विमर्शितो हेयतया पुरस्तात्। कृष्णा-

---

கலங்கின மனதுள்ளவனுகவானுன். அந்தோ! மறைந்த தேஜஸ் ஸையுடையவரும், நிரபராதியுமான ப்ராம்ஹணன் விஷயத்தில் அயோக்கியன் போல என்னுல் பாபமானது செய்யப்பட்டு விட்டதே? (1) செய்யப்பட்ட ப்ராம்ஹணுவமான ரூபமான அந்தப் பாபத்திலிருந்து போக்கவியாத துக்கமானது வருவது நிஶ்சயம். அந்தத் துக்கமானது நான் செய்தபாபத்தின் ப்ராயஶ்சித்தத்துக்கு வேண்டி வெகுஸமீபகாலத்துக்குள் எனக்கே நேரில் பூர்ணமாகவும், எவ்விதமானுல் திரும்பவும் நான் இவ்விதம் செய்யேனே அவ்விதமும் வரட்டும். (2) * கெட்டவனுன என்னுடைய நிறைந்த கோசத்தையுடைய ராஜ்யத்தையும், ஸேனையையும் கோபமூட்டப்பட்ட ப்ராம்ஹணகுலமாகிற நெருப்பானது இப்பொழுதே போசுக்கிவிடட்டும். எனக்குத் திரும்பவும் ப்ராம்ஹணர், தேவர், பசு இவர்களையும் பொருட்டு பாபமானபுத்தியானது உண்டாகாதிருக்கட்டும். (3) இவ்விதம் சிந்திக்கின்ற அந்த அரசன் பிறகு முனியின் புத்திரனுல் ஏழாவது தினத்தில் வரும்படி தூண்டப்பட்டவனும் தக்ஷகன் எனப்பெயர் கொண்டவனுமான மிருத்யுவை சமீகாலனுப்பப்பட்ட சிஷ்யன் மூலம் கேட்டான். அவ்விதம் கேட்ட அவன் விஷயத்தில் மிகப்பற்றுள்ள தனக்கு விரைவில் விரக்தியேற்படுவதற்குக் காரணமான தக்ஷகனுடைய விஷாக்னியை நல்லதென்றே எண்ணினுன். (4) பிறகு ராஜ்யத்தை ஆளும்பொழுதே ஹேயமாக (பரித்யாகஞ் செய்யத்தக்கதாக) நிஶ்சயிக்கப்பட்ட இந்த உலகத்தையும் அந்த வுலகத்தையும் இப்பொழுது பரித்யாகஞ் செய்து

---

* இவ்விதம் நேரில் தனக்கே வியஸனத்தை ப்ரார்த்தித்துக் கொண்டு அதற்கு முந்தி வேறு சிலவற்றையும் ப்ரார்த்திக்கிறூர்.

ङ्घ्रिसेवामधिमन्यमान उपाविशत्प्रायममर्त्यनद्याम ॥ ५ ॥ या वै लसच्छ्री-तुलसीविमिश्रकृष्णाङ्घ्रिरेण्वभ्यधिकाम्बुनेत्री । पुनाति लोकानुभयत्र सेशा-न्कस्तां न सेवेत मरिष्यमाणः ॥ ६ ॥ इति व्यवच्छिद्य स पाण्डवेयः प्रायोपवेशं प्रति विष्णुपद्याम् । दध्यौ मुकुन्दाङ्घ्रिमनन्यभावो मुनिव्रतो मुक्तसमस्तसङ्गः ॥ ७ ॥ तत्रोपजग्मुर्भुवनं पुनाना महानुभावा मुनयः सशिष्याः । प्रायेण तीर्थाभिगमापदेशैः स्वयं हि तीर्थानि पुनन्ति सन्तः ॥ ८ ॥ अत्रिर्वसिष्ठश्च्यवनः शरद्वानरिष्टनेमिर्भृगुरङ्गिराश्च । पराशरो

விட்டு ஸ்ரீகிருஷ்ணனுடைய சரணஸேவையையே ஸர்வபுருஷார்த் தங்களையும் காட்டிலும் அதிகமானதாக எண்ணிக்கொண்டு ப்ராயத் தை=ஆஹாரமின்மையைக் கைக்கொண்டு (ஆஹாரஞ்செய்வதில்லை என்ற திருட நிஸ்சயத்துடன்) கங்கைக்கறையில் (*)படுத்துக்கொண் டான். (5) எந்தக் கங்கையானது விளங்குகின்ற காந்தியை யுடைய துளஸியுடன் கலந்த ஸ்ரீகிருஷ்ண சரணதூளிகளினால் மிக்க மேன்மைபெற்ற ஜலத்தைப்பெருக்கிக் கொண்டு லோகபாலர் களுடன் கூடின உலகங்களை உள்ளிலும் வெளியிலும் பரிசுத்தப் படுத்துகிறதோ அந்தக் கங்கையை சமீபத்தில் மரிக்கப்போகின்ற எவன்தான் ஸேவிக்காதிருப்பான். (6) பாண்டுவின் வம்சத்திற் பிறந்த அந்தப் பரீக்ஷித் ராஜன் கங்கைக் கறையில் ப்ராயோபவேசத் தைப் பற்றி இவ்விதம் நிஸ்சயித்துக் கொண்டு வேறிடத்தில் புத்தி யைச் செலுத்தாதவனாகவும், முனிகளின் விரதத்தை யடைந்தவனா கவும், எல்லாவிதமான ஸங்கத்தையும் விட்டவனாகவுங் கொண்டு ஸ்ரீகிருஷ்ணனுடைய சரணத்தைத் தியானித்தான். (7)

அப்பொழுது மஹானுபாவர்களும், உலகைப் பரிசுத்தஞ் செய்கின்றவர்களுமான முனிகள் சிஷ்யர்களுடன் கூட அவரைப் பார்க்கவேண்டி வந்தனர். ஸாதுக்கள், தாங்கள் தீர்த்தயாத்திரை செய்தல் என்ற வியாஜங்களினால் பெரும்பாலும் தீர்த்தங்களையே யன்றோ பரிசுத்தப்படுத்துகின்றனர். (8) அத்ரி, வஸிஷ்டர், ச்ய வனர், சரத்வான், (கிருபாசாரியரின் பிதா) அரிஷ்டநேமி, பிருகு, அங்கிரஸ், பராசரர், காதியின் புத்திரரான விஸ்வாமித்திரர், பிறகு

(*) உட்கார்ந்துகொண்டான் என்றும் சிலர் சொல்லுகின்றனர்.

गाधिसुतोऽथ राम उतथ्य इन्द्रप्रमदेध्मवाहौ ॥ ९ ॥ मेधातिथिर्देवल आर्ष्टिषेणो भारद्वाजो गौतमः पिप्पलादः । मैत्रेय और्वः कवषः कुम्भयोनिर्द्वैपायनो भगवान्नारदश्च ॥ १० ॥ अन्ये च देवर्षिब्रह्मर्षिवर्या राजर्षिवर्या अरुणादयश्च । नानार्षेयप्रवरान्समेतानभ्यर्च्य राजा शिरसा ववन्दे ॥ ११ ॥ सुखोपविष्टेष्वथ तेषु भूयः कृतप्रणामः स्वचिकीर्षितं यत् । विज्ञापयामास विविक्तचेता उपस्थितोऽग्रेऽभिगृहीतपाणिः ॥ १२ ॥

राजोवाच—अहो वयं धन्यतमा नृपाणां महत्तमानुग्रहणीयशीलाः । राज्ञां कुलं ब्राह्मणपादशौचाद्दूराद्विसृष्टं बत गर्ह्यकर्म ॥ १३ ॥ तस्यैवमेऽ-

---

பரசுராமர், உதத்தியர், இந்த்ரப்ரமதர், இத்மவாஹர், மேதாதிதி, தேவலர், ஆர்ஷிஷேணர், பாரத்வாஜர், கௌதமர், பிப்பலாதர், மைத்ரேயர், ஔர்வர், கவஷர், கும்பயோனியான அகஸ்த்யர், பகவானான வியாஸர், நாரதர், மற்றுமுள்ள சிறந்த தேவர்ஷி ப்ரம்ஹர்ஷிகள், சிறந்த ராஜர்ஷிகள், அருணரை ஆதியாகக்கொண்ட ருஷிகள், ஆகிய பலர் வந்தனர். ராஜாவான பரீக்ஷித்து வந்தவர்களான ருஷி ப்ரவரத்தில் சேர்ந்த பெரியோர்களைத் தலையினால் வணங்கினர். (9–11) பிறகு அவர்கள் ஸுகமாகவுட்கார்ந்தபொழுது திரும்பவும் நமஸ்கரித்து சுத்தமான சித்தமுள்ளவனுகவும் இருகைகளையும் கூப்பிக்கொண்டும் அவர்களுக்கு எதிரில் நின்று கொண்டு தன்னால் செய்யும்படி தீர்மானிக்கப்பட்ட ப்ராயோபவேசனுதிகாரியம் யுக்தமா? அல்லது அயுக்தமா? என விக்ஞாபனஞ் செய்து கொண்டார். (12)

ராஜன் சொல்லலுற்றார்— சிறந்த மஹான்களால் அனுக்கிரஹிக்கத்தக்க ஸ்வபாவத்தை யுடையவர்களான நாங்கள் அரசர்களுக்குள் மிக்கமிக்க பாக்கியம் பெற்றவர்களாகவே ஆகிவிட்டோம். இது வெகு ஆச்சரியம். (அரசர்களுக்கோ மஹான்களாலனுக்கிரஹிக்கத்தக்க ஸ்வபாவம் வாய்ப்பது மிக அரிது. ஏன்?) அரசர்களின் குலமானது ப்ராம்ஹணர்களின் *கால் அலம்பும் ஜலத்தைக்காட்டி

---

* "दूरादुच्छिष्टविण्मूत्रपादाम्भांसि समुत्सृजेत्" வீட்டுக்கு வெகு தூரத்தில் மலம் மூத்திரம், கால் அலம்பும் ஜலம் இவற்றை விடவேண்டும் என்று ஸ்மிருதியிருப்பதால் மஹான்கள் அந்த ஸ்மிருதிவசனத்தை

घस्य परावरेशो व्यासक्तचित्तस्य गृहेष्वभीक्ष्णम्। निर्वेदमूलो द्विजशाप-रूपो यत्र प्रसक्तो भयमाशु धत्ते ॥ १४ ॥ तं मोपयातं प्रतियन्तु विप्रा गङ्गा च देवी धृतचित्तमीशे। द्विजोपसृष्टः कुहकस्तक्षको वा दशत्वलं गायत

லும்கூட வெகு தூரம் விலக்கப்பட்டதாகவும், நிந்தியமான கர்மத்தையுடையதாகவும் அன்றே இருக்கிறது. (13) (மூற்கூறியபடி) நிந்தியமான கர்மத்தை யுடையவனும், பாபாத்மாவும், இடையறுது கிரஹங்களில் ஈடுபட்ட சித்தமுள்ளவனுமான எனக்கு (பகவத் ப்ராப்த்தி யேற்படவேண்டி) வைராக்கியத்தை மூலமாக (ப்ராப்த்தி ஸாதனமாக) வுடையவரான பராவரேசனே (*)எந்தச் சாபம் ஏற்பட்டதும் கிரஹங்களின் பற்றையடைந்தவன் சீக்கிரமாகப் பயத்தையடைந்துவிடுவானே? அந்த ப்ராம்ஹணசாப ரூபமாகவும், ஆகிவிட்டார்.(14) ஹே ப்ராம்ஹணர்காள்! உத்தமர்களால் அனுக்கிரஹிக்கத்தக்க சீலமுள்ளவனும், சரணாகதனுமான என்னை ஈசனிடத்தில் செலுத்தப்பட்ட சித்தத்தையுடையவரை அறியுங்கள். தேவதாரூபமுள்ள கங்கையும் அறியட்டும். ப்ராம்ஹணனை சிருங்கியினால் அனுப்பப்பட்ட தக்ஷகன் வேறுவேஷத்தினால் தன்னை

யொட்டி மலம் மூத்திரம் காலலம்பும் ஜலம் இவைகளைத்தங்களது ஆச்ரமத்தில் வெகுதூரத்திலேயே தான்விடுவர். இந்த ராஜகிருஹமோ ஆச்ரமத்துக்கு வெகுதூரத்திலுள்ள பாதசௌச ஜலஸ்தலத்தைக் காட்டிலும் கூட வெகுதூரத்திலேயே விலக்கப்பட்டிருக்கிறது. அதாவது:—ஆச்ரமத்திலுள்ள பாதசௌச ஜலஸ்தலத்தைவிட ராஜகிருஹமானது வெகுதூரமாகவே எண்ணப்பட்டிருக்கிறது. பாதசௌச ஜலஸ்தலத்திலும் ராஜகிருஹமானது இருக்கமுடியாதன்றே என்பது பொருள். ஆகவே எல்லாவிதத்திலும் ராஜகிருஹம் அபரிசுத்தமே யாகிறது என்பது பெறப்பட்டது. மேலும், என்போன்றவன் விஷயத்தில் நிந்தியமான கர்மமுள்ளதாகவே இருக்கிறது. இதிலிருந்தும் ராஜகிருஹம் அபரிசுத்தமானது என்பதில் தடையில்லை. இவ்விதமிருந்தபோதிலும் உங்களுடைய அனுக்கிரஹம் எனக்கு ஏற்பட்டிருப்பதால் நான் மிக்கத் தன்னியலுகவே ஆகிவிட்டேன் என்பதில் தடையுண்டோ என்பது கருத்து.

(*) பகவானையடைவதற்கு விஷயவைராக்கியம் வேண்டும். வைராக்கியத்துக்கோ பயம் காரணமாகிறது. ஆகவே அதற்கு வேண்டி ஆண்டவன் ப்ராம்ஹணசாபத்தை ஏற்படுத்தினர் என்பது பொருள்.

विष्णुगाथाः ॥ १५ ॥ पुनश्च भूयाद्भगवत्यनन्ते रतिः प्रसङ्गश्च तदाश्रयेषु। महत्सु यां यामुपयामि सृष्टिं मैत्र्यस्तु सर्वत्र नमो द्विजेभ्यः ॥ १६ ॥ इति स्म राज्ञाध्यवसाययुक्तः प्राचीनमूलेषु कुशेषु धीरः। उदङ्मुखो दक्षिणकूल आस्ते समुद्रपत्न्याः स्वसुतन्यस्तभारः ॥ १७ ॥ एवं च तस्मिन्नरदेवदेवे प्रायोपविष्टे दिवि देवसङ्घाः। प्रशस्य भूमौ व्यकिरन्प्रसूनैर्मुदा मुहुर्दुन्दुभयश्च नेदुः ॥ १८ ॥ महर्षयो वै समुपागता ये प्रशस्य साध्वित्यनुमोदमानाः। ऊचुः प्रजानुग्रहशीलसारा यदुत्तमश्लोकगुणाभिरूपम् ॥१९॥ न वा इदं राजर्षिवर्य चित्रं भवत्सु कृष्णं समनुव्रतेषु। येऽध्यासनं राजकि-

---

மறைத்துக் கொண்டு கடிக்கட்டும் (இதற்குப் பதிலொன்றும் செய்யப்போவதில்லை.) (நீங்கள் மட்டும்) எனது தேஹவியோக மேற்படும்வரை விஷ்ணுவின் கதைகளைக் கானஞ்செய்யுங்கள். (15) நான் எந்த எந்தப் பிறவியை யடைவேனோ அந்த அந்தப் பிறவியிலும் அனந்தனான பகவானிடத்தில் பக்தியும், அவனை யாஸ்ரயமாகவுடைய மஹான்களிடத்தில் சிறந்த ஸங்கமும் ஸர்வஜீவர்களிடத்திலும் மைத்ரியும் திரும்பவும் எனக்கு உண்டாகட்டும். அதற்கு வேண்டி ப்ராம்ஹணர்களுக்கு நமஸ்காரமிருக்கட்டும் என்றான்.

இவ்விதமான நிஸ்சயத்துடன் கூடினவனும், தனது புத்திரனான ஜனமேஜயனிடம் ஸமர்ப்பிக்கப்பட்ட ராஜ்யபாரத்தையுடையவனும், தீரனுமான அரசன் கங்காநதியின் தெற்குக் கறையில் கிழக்கு நுனியாகப் போடப்பட்ட குசங்களில் வடக்கு நோக்கின முகமுள்ளவனாய் உட்கார்ந்தான். (17) இவ்விதம் அந்த ராஜாதிராஜனை பரீக்ஷித்து ப்ராயோபவேசத்தைச் செய்தபொழுது ஆகாசத்திலுள்ளத் தேவக் கூட்டங்கள் ஸந்தோஷத்துடன் அவரைப் புகழ்ந்து பூமியில் புஷ்பங்களினால் வர்ஷித்தனர். அவர்களால் வாசிக்கப்பட்ட தேவதுந்துபிகளும் அடிக்கடி முழங்கின. (18) ப்ரஜைகளுக்கு அனுக்கிரஹம் செய்வதில் உறுதியான ஸ்வபாவத்தையுடையவர்களும், அங்கு வந்தவர்களுமான யாதொரு மஹரிஷிகளுண்டோ அவர்களும் நல்லது நல்லது எனக் கொண்டாடி உத்தமச்லோகனான பகவானுடைய குணங்களினால் சுந்தரமான யாதொரு வார்த்தையுண்டோ அதைச் சொல்லினர். (19) ஹே ராஜர்ஷிவர்ய! எந்த உனது பாட்டன்மார்கள் பகவானுடைய

रीटजुष्टं सद्यो जहुर्भगवत्पार्श्वकामाः ॥ २० ॥ सर्वे वयं तावदिहास्महेऽद्य कलेवरं यावदसौ विहाय। लोकं परं विरजस्कं विशोकं यास्यत्ययं भागवत प्रधानः॥ २१ ॥ आश्रुत्य तद्दषिगणवचः परीक्षित्समं मधुच्युद्गरु चाव्यलीकम्। आभाषतैनानभिनन्द्य युक्तं शुश्रूषमाणश्चरितानि विष्णोः॥ २२ ॥ समागताः सर्वत एव सर्वे वेदा यथा मूर्तिधरास्त्रिपृष्ठे। नेहाथवामुत्र च कश्चनार्थ ऋते परानुग्रहमात्मशीलम् ॥ २३ ॥ ततश्च वः पृच्छ्यमिमं विपृच्छे विश्रम्य विप्रा इतिकृत्यतायाम्। सर्वात्मना म्रियमाणैश्च कृत्यं शुद्धं च तत्रामृशताभियुक्ताः ॥ २४ ॥

ஸாமீப்யத்தையடைய விருப்பங்கொண்டவர்களாய் அரசர்களின் கிரீடங்களினுல் ஸேவிக்கப்பட்ட ஹிம்ஹாஸனத்தை உடனேயே விட்டனரோ ஸ்ரீகிருஷ்ணனை நன்கு ஆஸ்ரயித்தவர்களான அத்தகைய உங்களிடத்தில் இது ஆஸ்சரியமேயன்று. (20) பாகவதப்ரதானனை இந்தப் பரீக்ஷித்து சரீரத்தைவிட்டு மாயாஸம்பந்தமற்றதும், சோகமற்றதுமான பரலோகத்தை எப்பொழுது அடையப்போகின்றாரோ அதுவரை நாமெல்லோரும் இங்கு இருப்போமாக என்றனர். (21) பரீக்ஷித்ராஜன் ஸமம்=பக்ஷபாதமற்றதும், அமுதத்தையொழுகவிடுகின்றதும், ஆழ்ந்த கருத்துள்ளதும், ஸத்யமுமான ருஷிக்கூட்டங்களின் வார்த்தையைக் கேட்டு விஷ்ணுவின் சரித்திரங்களைக் கேட்கவெண்ணங்கொண்டவராய் இவர்களைக் கொண்டாடிப் பொருத்தமான வார்த்தையைச் சொன்னார். (22) நாலா பக்கங்களிலிருந்தும் இங்குவந்தவர்களான நீங்கள் யாவருமே மூன்று வுலகங்களுக்கும் மேலேயுள்ள ஸத்தியலோகத்தில் மூர்த்திதரங்களாக விருக்கின்ற வேதங்களுக்கு ஒப்பானவர்களே யாவீர். சொந்த ஸ்வபாவமாகவமைந்த பரானுக்கிரஹத்தைத் தவிர்த்து உங்களுக்கு இம்மையிலோ, மறுமையிலோ வேறுப்ரயோஜனமொன்றுமில்லை. (23) பரானுக்கிரஹ சீலர்களாக நீங்களிருப்பதுபற்றி ஹே விப்ரர்காள்! இனிச்செய்யவேண்டிய இதை விஸ்வாஸத்துடன் உங்களிடம் கேட்கிறேன் அதாவது:—எல்லா அவஸ்தைகளிலும் எது செய்யத்தகுந்ததோ? அதிலும் விசேஷமாக மரிக்கும் தருணத்திலுள்ளவர்களால் எது செய்யத்தகுந்ததோ சுத்தமான=பாபஸம்பந்தமற்ற

तत्राभवद्भगवान्व्यासपुत्रो यदृच्छया गामटमानोऽनपेक्षः। अलक्ष्यलिङ्गो निजलाभतुष्टो वृतस्त्रिबालैरवधूतवेषः॥२५॥ तं द्व्यष्टवर्षं सुकुमारपादकरोरुबाह्वंसकपोलगात्रम्। चार्वायताक्षोन्नसतुल्यकर्णसुभ्राननं कम्बुसुजातकण्ठम्॥ २६ ॥ निगूढजत्रुं पृथुतुङ्गवक्षसमावर्तनाभिं वलिवल्गूदरं च। दिगम्बरं वक्त्रविकीर्णकेशं प्रलम्बबाहुं स्वमरोत्तमाभम्॥ २७ ॥ श्यामं

தான, அதை மஹான்களான நீங்கள் ஆலோசித்தறிவீர்களாக என்றார். (24) அவ்விதம் அவர் கேட்டதும் அந்த மஹரிஷிகளுள் சிலர் யாகத்தையும், சிலர் யோகத்தையும், சிலர் தபஸ்ஸையும், சிலர் தானத்தையும் பற்றி விவாதித்துக் கொண்டிருக்குங்கால் பூமியில் ஆங்காங்கு ஸஞ்சரிக்கின்றவரும், எதிலும் விருப்பமற்றவரும், ஆத்ம ரமாதிலிங்கம் (அடையாளம்) எதுவுமற்றவரும், ஆத்மானந்தானுபவத்தினுல் ஸந்தோஷத்தை யடைந்தவரும், ஸ்திரீகளினுலும் பாலர்களினுலும் சூழப்பட்டவரும், ஜனங்களினுல் வெறுக்கப் பட்டவருடைய வேஷத்தையுடையவரும் பகவானுமான வியாஸ குமாரர் (ஸ்ரீசுகாசாரியர்) பவத்ஸங்கல்பத்தை யொட்டி ப்ராப்தரானர். (25) பதினறு வயதுள்ளவரும், மிக்க அழகுபொருந்திய இரண்டு பாதங்கள் இரண்டுகைகள் இரண்டு தொடைகள் இரண்டு புஜங்கள் இரண்டு தோள்கள் இரண்டு கன்னங்கள் சரீரம் இவற்றையுடையவரும், அழகுவாய்ந்தனவும் நீண்டனவுமான இரண்டு கண்களையும், உயர்ந்த மூக்கையும், ஒரேமாதிரியாகவுள்ள இரண்டு காதுகளையும் அழகிய புருவங்களையும் உடைய முகத்தையுடையவரும், சங்கம்போல மூன்று கோடுகளமைந்ததும் நல்ல அமைப்புள்ளதுமான கழுத்தை யுடையவரும், மாம்ஸத்தினுல் நன்கு மறைக்கப்பட்ட ஜத்ருக்களை (கழுத்தின் கீழ்பாகத்திலிருக்கின்ற இரண்டு எலும்புகளை) யுடையவரும், விரிந்ததும் உயர்ந்ததுமான மார்பையுடையவரும், சுழல்போன்ற நாபியை (உந்தியை) யுடையவரும், குறுக்கில் அமைந்துள்ள மூன்று மடிப்புகளினுல் அழகுவாய்ந்த வயிற்றையுடையவரும், திக்குகளையே வஸ்திரமாகவுடையவரும், சுருண்டும் காலாபக்கங்களிலும் பரந்துமிருக்கின்ற கேசங்களையுடையவரும், முழங்கால்வரை தொங்குகின்ற கைகளையுடையவரும், சிறந்ததேவர்களுக்குள் உத்தமரான ஹரிக்குத் துல்யமான காந்தி

सदापीच्यवयोऽङ्गलक्ष्म्या स्त्रीणां मनोज्ञं रुचिरस्मितेन। प्रत्युत्थितास्ते मुनयः स्वासनेभ्यस्तल्लक्षणज्ञा अपि गूढवर्चसम् ॥ २८ ॥ स विष्णुरातोऽतिथय आगताय तस्मै सपर्यां शिरसाजहार। ततो निवृत्ता ह्यबुधाः स्त्रियोऽर्भका महासने सोपविवेश पूजितः ॥२९॥ स संवृतस्तत्र महान्महीयसां ब्रह्मर्षिराजर्षिदेवर्षिसङ्घैः। व्यरोचतालं भगवान्यथेन्दुर्ग्रहर्क्षतारानिकरैः परीतः ॥ ३० ॥ प्रशान्तमासीनमकुण्ठमेधसं मुनिं नृपो भागवतोऽभ्युपेत्य। प्रणम्य मूर्ध्नावहितः कृताञ्जलिर्नत्वा गिरा सूनृतयान्वपृच्छत ॥ ३१ ॥

யையுடையவரும், யௌவனமத்தியிலிருப்பவரும், எப்பொழுதுமே மிக்கவுத்தமமான வயஸ்வினால் (யௌவனத்தினால்) அமைந்த சரீரகாந்தியினாலும், அழகிய புன்சிரிப்பினாலும் ஸ்திரீகளின் மனத்துக்குப் பிடித்தவருமான அவரைக்கண்டு மறைக்கப்பட்ட தேஜஸ்ஸையுடையவராயினும்கூட அவரது லக்ஷணங்களை யறிந்தவர்களான அந்த முனிகள் தத்தமது ஆஸனத்தினின்றும் எழுந்தனர். (26–28) அந்த விஷ்ணுராதரானவர் (பரீக்ஷித்தானவர்) வந்த அந்த அதிதிக்குச் சிரஸ்வினால் பூஜையைச் செய்தார். பிறகு மூடர்களான ஸ்திரீகளும் குழந்தைகளும் திரும்பிச் சென்றனர். பூஜிக்கப்பட்ட அவரும் சிறந்த ஆஸனத்திலுட்கார்ந்தார். (29) அவ்விடத்தில் ப்ரம்ஹர்ஷிகளுடையவும் ராஜர்ஷிகளுடையவும் தேவர்களுடையவும் கூட்டங்களினால் நன்கு சூழப்பட்டவரும், மஹான்களுக்கெல்லாம் மஹானும், பகவானுமான அந்தச் சுகாசாரியர், சுக்கிரன் முதலிய கிரஹங்களாலும், அச்வினீ முதலிய நக்ஷத்திரக் கூட்டங்களினாலும் சூழப்பட்ட சந்திரன்போல அதிகம் பிரகாசித்தார். (30) பாகவதரான அரசன், ப்ரசாந்தரும், ஆஸனத்திலுட்கார்ந்தவரும், எல்லாவிஷயங்களிலும் தடையற்ற மேதையை (சமயோசிதத்தோற்றத்தை) யுடையவரும், முனியுமான சுகாசாரியரை நோக்கித் தலையினால் முதலில் வணங்கி ஸாவதான சித்தனாகி இருகைகளையும் கூப்பிக்கொண்டு மறுபடியும் (கேள்விகேட்பதற்கு வேண்டி) நமஸ்கரித்து இனிமையான வார்த்தையினால் கேட்கத்தொடங்கினர்.(31)

ஹே ப்ரம்ஹன்! உங்களால் கிருபையுடன் அதிதிரூபத்தினால் யோக்கியர்களாக்கப்பட்டமை பற்றி க்ஷத்திரியாபசதர்களான நாங்

अहो अद्य वयं ब्रह्मन्सत्सेव्याः क्षत्रबन्धवः। कृपयातिथिरूपेण भवद्भिस्तीर्थकाः कृताः ॥ ३२ ॥ येषां संस्मरणात्पुंसां सद्यः शुद्ध्यन्ति वै गृहाः। किं पुनर्दर्शनस्पर्शपादशौचासनादिभिः ॥ ३३ ॥ सान्निध्यात्ते महायोगिन्पातकानि महान्त्यपि। सद्यो नश्यन्ति वै पुंसां विष्णोरिव सुरेतराः॥ ३४ ॥ अपि मे भगवान्प्रीतः कृष्णः पाण्डुसुतप्रियः। पैतृष्वस्रेयप्रीत्यर्थं तद्गोत्रस्यात्तबान्धवः॥ ३५ ॥* अन्यथा तेऽव्यक्तगतेर्दर्शनं नः कथं नृणाम्। नितरां म्रियमाणानां संसिद्धस्य वनीयसः॥ ३६ ॥ अतः

---

* अभिप्रस्थापितो नूनं कारुण्याविष्टचेतसा। कृष्णेनैवेत्यहं मन्ये भक्तानां शमभीप्सता ॥ ३६ ॥ इति क्वचित्पुस्तके अधिक पाठो दृश्यते ॥

கள் இப்பொழுது ஸாதுக்களால் ஸேவிக்கத் தக்கவர்களாகவே ஆகி விட்டோம். இது வெகு ஆஸ்சரியம். (32) எவர்களின் ஸ்மரணத்தினுல் புருஷர்களின் கிருஹங்கள் அப்பொழுதே பரிசுத்தியை யடைகின்றனவோ அத்தகைய உங்களுடைய தர்சனம் ஸ்பர்சம் பாதசௌசம் ஆஸனம் முதலியவற்றினுல் பரிசுத்தியேற்படுவதில் சொல்லவும் வேண்டுமோ? (33) ஹே மஹாயோகின்! விஷ்ணுவின் ஸான்னித்யத்தினுல் அஸுரர்கள் போல தங்களுடைய ஸான்னித்யத்தினுல் மஹாபாதகங்களும் கூட அப்பொழுதே நஸித்து விடுவதில் ஸந்தேஹமுண்டோ? (34) அத்தையின் பிள்ளையினிடமுள்ள ப்ரீதிக்குவேண்டி அக்குலத்தில் பிறந்த என்விஷயத்தில் பந்துக்கள் செய்யவேண்டிய காரியத்தை செய்தவரும், பாண்டுவின் புத்திரர்களிடம் ப்ரீதியுள்ளவரும், பகவானுமான ஸ்ரீகிருஷ்ணன் என்னிடமும் ப்ரீதியுள்ளவராகவே இருக்கிறார். (அவரால் அனுப்பப்பட்டே தாங்கள் இங்கு வந்தீர்கள் என்று ஊஹிக்கிறேன் என்பது கருத்து.) (35) அவ்விதமில்லாவிடில் (ஸ்ரீகிருஷ்ண ப்ரஸாதமில்லாவிடில்) அறியவியலாத கதியையுடையவரும், நன்கு ஸ்வரூபஸ்திதியை யடைந்தவரும், பரந்த நோக்கத்துடன் வேண்டுவனவற்றைக் கேட்டுக்கொள் என என்னைத் தூண்டுகின்றவருமான தங்களுடைய தரிசனமானது மரிக்கும் ஸமயத்திலுள்ள மனிதர்களான எங்களுக்கு அதிகமாக எப்படிக் கிடைக்கும். (ஒருபொழுதும் கிடைக்கமாட்டாது.) (36) ஆகவே மரிக்கின்றவனை புருஷனுக்கு

पृच्छामि संसिद्धिं योगिनां परमं गुरुम्। पुरुषस्येह यत्कार्यं म्रियमाणस्य सर्वथा॥ ३७॥ यच्छ्रोतव्यमथो जप्यं यत्कर्तव्यं नृभिः प्रभो। स्मर्तव्यं भजनीयं वा ब्रूहि यद्वा विपर्ययम्॥ ३८॥ नूनं भगवतो ब्रह्मन्गृहेषु गृहमेधिनाम्। न लक्ष्यते ह्यवस्थानमपि गोदोहनं क्वचित्॥३९॥ सूत उवाच— एवमाभाषितः पृष्टः स राज्ञा श्लक्ष्णया गिरा। प्रत्यभाषत धर्मज्ञो भगवान्बादरायणिः॥ ४०॥

इति श्रीमद्भागवते महापुराणे पारमहंस्यां संहितायां प्रथमस्कन्धे शुकागमन निरूपणं नाम एकोनविंशोऽध्यायः॥ १९॥

इति प्रथमस्कन्धः समाप्तः॥

எல்லாவிதத்தாலும் எது அவஶ்யமாய் செய்யத்தக்கதோ அதை யோகிகளுக்கெல்லாம் மேலான குருவும் சிஷ்யர்களுக்கு நன்கு ஹித்தியைத் தரக்கூடியவருமான உம்மைக் கேட்கிறேன். (37) மேலும், ஹே ப்ரபோ! மனிதர்களினுல் எது கேட்கத்தக்கதோ, அல்லது எது ஜபிக்கத்தக்கதோ, எது செய்யத்தக்கதோ, எது ஸ்மரிக்கத்தக்கதோ, எது பஜிக்கத்தக்கதோ, எது கேட்கவோ, ஜபிக்கவோ, செய்யவோ, ஸ்மரிக்கவோ, பஜிக்கவோ தகாததோ அதையும் சொல்லுவீராக. (38) [*]ஹே ப்ரம்ஹன்! கிருஹஸ்தர்களின் வீட்டில் தங்களுடைய இருப்பானது காணப்படமாட்டாது. ஒரு ஸமயம் காணப்படினும்கூட மாடுகறப்பதற்கு ஏற்படும் காலம் எவ்வளவோ அவ்வளவுமட்டுமேதான் காணப்படும் என்றூர். (39) இவ்விதம் அரசரான பரீக்ஷித்தினுல் இனிமையான வார்த்தையினுல் அபிமுகமாக்கப்பட்டு கேள்வி கேட்கப்பட்டவரும் ஸகல தர்மங்களையும் அறிந்தவரும் பகவானுமான சுகாசாரியரானவர் பதில் சொல்லத் தொடங்கினர். (40) (எ–று)

இவ்விதம் ஶ்ரீமத்பாகவத மஹாபுராண ப்ரதமஸ்கந்தத்தில் ஶ்ரீசுகாகமன நிரூபணமென்ற பத்தொன்பதாவது அத்தியாயம் முற்றிற்று.

முதலாவது ஸ்கந்தமும் முற்றிற்று.

---

[*] தங்களுடைய தரிசனம் மறுபடியும் கிடைப்பது அரிதாகையால் இப்பொழுதே சொல்லவேண்டுமென இதனுல் சொல்லுகிறூர்.

நாராயணீயம்.

முதலாவது தசகம்.

(அ–கை) ஸகலஸஹிருதயர்களாலும் கொண்டாடத்தக்க கீர்திையயுடையவரும், பரமபாகவதோத்தமருமான நாராயணகவியான வர், பாகவதார்த்தத்தை யனுஸரித்ததும் நாராயணீயம் என்ற பெயரையுடையதுமான ஸ்தோத்திர ரத்தினத்தைச் செய்யத் தொடங்குவான் கருதி இந்த முதவாவது சுலோகத்திலுல் ஸ்துதிக்கப்படுபவரான பரதேவதையின் அனுஸ்மரணரூபமான மங்களத்தைச் செய்கிறார்—

सान्द्रानन्दावबोधात्मकमनुपमितं कालदेशावधिभ्यां
निर्मुक्तं नित्यमुक्तं निगमशतसहस्रेण निर्भास्यमानम् ।
अस्पष्टं दृष्टमात्रे पुनरुरुपुरुषार्थात्मकं ब्रह्मतत्त्वं
तत्तावद्भाति साक्षाद्गुरुपवनपुरे हन्त भाग्यं जनानाम् ॥

(ப–ரை) **सान्द्रानन्दावबोधात्मकम्**—**सान्द्र** = கனீ பூதங்களான **आनन्द**=ஆனந்தம் **अवबोध**=ஞானம் இவற்றை **आत्मकम्**=ஸ்வரூபமாகவுடையதும், **अनुपमितम्**=தனக்கு ஒப்பிட்டு சொல்லக்கூடிய இரண்டாவது பொருளற்றதும், அதாவது:—அத்விதீயமும், **काल-देशावधिभ्याम्**=காலத்தினுனும் தேசத்தினுலும் ஏற்பட்ட அவதிகளி (பரிச்சேதங்களி) னுல் **निर्मुक्तम्**=விடுபட்டதும், அதாவது:—கால தேச பரிச்சேதமற்றதும், **नित्यमुक्तम्**—**नित्य** = மூக்காலத்திலுமழி வுள்ள பொருளைவிட வேறுபட்டதும், தான்மூக்காலத்திலுமழிவற்றதும் **मुक्तम्**=அவித்யை அதன்காரியம் இவற்றின் ஸம்பந்தமற்றதும், **निगमशतसहस्रेण**—**निगम**=உபநிஷத்துக்களின் **शतसहस्रेण**= நூறுகளினுலும் ஆயிரங்களினுலும் அதாவது:—அநேகம் உபநிடதங்களினுல், **अस्पष्टम् (यथा तथा)**=தெளிவாக இல்லாதபடி **निर्भास्यमानम्**=விளக்கப்படுகின்றதும், அதாவது:—உபக்ரமோபஸம்ஹாராதிகளான தாத்பரிய லிங்கங்களைக் கொண்டு லக்ஷணமுறையாலுபதேசிக்கப் படுகின்றதும், **दृष्टमात्रे पुनः**=ப்ரத்யக்ஷமாகக் காணப்பட்டமாத்திரத்திலோ வெனில் **उरुपुरुषार्थात्मकम्**=பெரிய புருஷார்த்த ஸ்வரூபமாகவுள்ளதும் அதாவது:—பரமபுருஷார்த்த

மான மோக்ஷஸ்வரூபமாகவுள்ளதுமான **ब्रह्मतत्त्वम्**=ப்ரம்ஹதத்துவ மானது **यत्**=யாதொன்றுண்டோ **तत् तावत्**=அதுவே **गुरुपवनपुरे**= குருவாயூரில் **साक्षाद्भाति**=ப்ரத்யக்ஷமாக ப்ரகாசிக்கிறது. **जनानाम्**= ஜனக்களுக்கு நேர்ந்த **भाग्यम्**=பாக்யமானது **हन्त**=ஆச்சரியப்படக் கூடியதாகவேயாகிறது. (1) (எ–று)

(அ–கை) மங்களாசரணரூபமான முதலாவது சுலோகத்தி னுல் விஷயம் ப்ரயோஜனம் இரண்டும் ஒருவாறு கிடைக்குமாயி னும் இந்தச் சுலோகத்தினுல் அவற்றைத் தெளிவாகச் சொல்லு கிறார்—

एवं दुर्लभ्यवस्तुन्यपि सुलभतया हस्तलब्धे यदन्यत्
तन्वा वाचा धिया वा भजति बत जनः क्षुद्रतैव स्फुटेयम्।
एते तावद्वयन्तु स्थिरतरमनसा विश्वपीडापहृत्यै
निश्शेषात्मानमेनं गुरुपवनपुराधीशमेवाश्रयामः ॥ २ ॥

(ப–ரை) **दुर्लभ्यवस्तुन्यपि**=கஷ்டப்பட்டு அடைவதற்கோ அறி வதற்கோ யோக்யமான வஸ்துகூட **एवम्**=முற்கூறிய முறைப்படி **सुलभतया**=அனாயாஸமாக **हस्तलब्धे**=கைக்குக்கிட்டியதாக விருக்கும் பொழுது **जनः**=ஜனமானது **तन्वा**=சரீரத்தினுலோ, **वाचा**=வாக்கி னுலோ, **धिया वा**=புத்தியினுலோ **अन्यत्**=வேறு தைவத்தையோ, விஷயாதியையோ **भजति**=ஸேவிக்கிறது என்பது **यत्**=யாதுண்டோ **तत्**=அது **बत**=வருந்தத்தக்கதேயாகும். ஜனங்களின் **इयम्**=இந்த **क्षुद्रता**=பயனற்ற ப்ரவிருத்தியானது **स्फुटैव**=வெகு தெளிவானதே யாகும். **एते**=இந்த **वयन्तावत्तु**=நாங்களோவெனில் [**तथा क्षुद्रतां न कुर्मः**=அத்தகைய அற்பத்தன்மையைச் செய்யோம்] பின்னேயோ வெனில் **स्थिरतरमनसा**=இவருடைய பஜனந்தான் மேலானது என மிக்கநிலைத்த நிஶ்சயத்தையடைந்த மனத்தினுல் **विश्वपीडापहृत्यै**=ஆத் யாத்மிக ஆதிபௌதிக ஆதிதைவிகரூபமான ஸமஸ்ததுக்கங்களு டையவும் நிவிருத்திக்கு வேண்டி **निश्शेषात्मानम्**=சராசரரூபமான ஸகலப்ரபஞ்சத்துக்கும் ஆத்மபூதனான **एनम्**=இந்த **गुरुपवनपुराधीश-मेव**=குருவாயூருக்குப் பதியான ஸ்ரீகோபாலனையே **आश्रयामः**= பஜிக்கின்றோம். (2) (எ–று)

குறிப்பு—**विश्वपीडापहत्यै** என்றதால் ப்ரயோஜனமும் **गुरुपवन-पुराधीशम्**=என்றதால் விஷயமும் சொல்லப்பட்டது. (எ–று)

(அ–கை) இவ்விதம் விஷயம் ப்ரயோஜனம் இவைகளைச் சொல்லி ஸ்ரோதாக்களுக்கு ருசியையுண்டாக்கிப் பின்னர் பகவது பாஸனையில் அவர்களுக்கு ஸித்தியேற்பட வேண்டி பகவத்ஸ்வ ரூபத்தை வர்ணிக்கின்றவராய் ஆண்டவனை ஸ்துதிக்கிறார்—

सत्वं यत्तत्पराभ्यामपरिकलनतो निर्मलं तेन तावत्
भूतैर्भूतेन्द्रियैस्ते वपुरिति बहुशः श्रूयते व्यासवाक्यम् ।
तत्स्वच्छत्वात् यदच्छादितपरसुखचिद्गर्भनिर्भासरूपं
तस्मिन् धन्या रमन्ते श्रुतिमतिमधुरे सुग्रहे विग्रहे ते ॥

(ப–ரை) **तत्** = ப்ரஸித்தமானதும், **पराभ्याम्** = தனக்கு மேலுள்ள ரஜஸ்தமோகுணங்களுடன் **अपरिकलनत:**=கலப்பில்லாமை பற்றி **निर्मलम्**=சுத்தமுமான **सत्वम्**=ஸத்வகுணமானது **यत्**=பாதண்டோ **तेन तावत्**=அந்த ஸத்வகுணத்திலேயே **भूतै:**=மஹாதாதிக்கிரமமாக உண்டானவைகளான **भूतेन्द्रियै:**=ஐந்து மஹாபூதங்கள் இந்திரியங்கள் (ப்ராணன்) இவற்றால் **ते**=உம்முடைய **वपु:**=ஸ்ரீமூர்த்தியானது [**स्वेच्छया**=ஸ்வஸங்கல்பத்தினால் **विरचि-तम्**=செய்யப்பட்டது] **इति** = என **व्यासवाक्यम्**=உமது அம்சபூதரான வியாஸருடைய வாக்கியமானது. **बहुश:** = *பலவிடங்களில் **श्रूयते**=அறியப்படுகிறது. **तत्**=அவ்விதம் பலவிடங்களில் கூறப்பட்டதும், **स्वच्छत्वात्**=ஸ்படிகம் போல நிர்மலமாக இருப்பதுபற்றி **अच्छादितपरसुखचिद्गर्भनिर्भासरूपम्**—(*)**अच्छादित** = பிறவற்றினால்

---

* அவையாவன—"जगृहे पौरुषं रूपम्" என்றும், "विशुद्धं सत्वमूर्जितम्" என்றும், "सत्वं विशुद्धं क्षेमाय" என்றும், "नारायणकलात्मकम्" என்றும், "श्रेयांसि तत्र खलु सत्वतनोर्नृणां स्यु:" என்றுமாம்.

(*) சுத்த ஸத்வமயமான சரீரமானது அதிஸ்வச்சமாக–மிகத்தெளிவாக, இருப்பதுபற்றி அதில் ப்ரவேசித்த பரமானந்த சைதன்னியத்தினால் ப்ரகாசப்படுத்தப்படவேண்டிய ஜடாம்சமானது திரஸ்கரிக்க(நீக்க)ப்பட்டபடியால் பரமானந்த சைதன்யரூபமாகவே அந்தச் சரீரமாகிவிட்டது என்பது கருத்து. இவ்விதமே அமிருததாரங்கிணீ என்றக் கிரந்தத்

மறைக்கப்படாத **परसुखचित्** = பரமானந்த சைதன்னியரூபமான ப்ரம்ஹத்தை **गर्भ**=உள்ளிலுடையதும், ஆனதுபற்றியே **निर्भास-रूपम्**=மிக்க ப்ரகாசிக்கின்றதுமான ரூபத்தையுடைய **वपुः**=ஸ்ரீமூர்த்தியானது **यत्**=யாதுண்டோ, **श्रुतिमतिमधुरे**—**श्रुति**=ஸ்ரவணத்திலும் **मति**=மனனத்திலும் **मधुरे**=இனிப்பானதும் அதாவது:— எல்லா இந்திரியங்களுக்கும் ஆனந்தத்தைத் தரக்கூடியதும், ஆனதுபற்றியே **सुग्रहे**=அனாயாஸமாக மனத்தில் வாங்கக்கூடியதுமான [*]**तस्मिन्**= அந்த **ते**=உம்முடைய **विग्रहे**=ஸ்ரீமூர்த்தியில் **धन्याः**=பக்திமார்க்கத்திலீடுபட்ட மஹான்கள் **रमन्ते**=ரமிக்கின்றனர். (3) (எ—று)

(ஆ—கை) இவ்விதம் பகவானுடைய சுத்த ஸத்வமயமான ஸ்ரீமூர்த்தியை யுபதேசித்து அந்த மூர்த்திக்கு நிஷ்கள ப்ரம்ஹாபேதத்தை இந்த ஸ்லோகத்தினாலுபதேசிக்கிறார். மேலும், நான்கு விசேஷணங்களினால் ப்ரம்ஹத்தை ஸமுத்திரத்துக்கு ஸமமாகவும் சொல்லுகிறார்—

निष्कंपे नित्यपूर्णे निरवधिपरमानन्दपीयूषरूपे
निर्लीनानेकमुक्तावलिसुभगतमे निर्मलब्रह्मसिंधौ।
कल्लोलोल्लासतुल्यं खलु विमलतरं सत्वमाहुस्तदात्मा
कस्मान्नो निष्कलस्त्वं सकल इति वचस्त्वत्कलास्वेव भूमन्॥

(ப—ரை) **भूमन्**=எங்கும் நிறைந்த ஹே கிருஷ்ண!, **निष्कंपे**= நிர்விகாரமும், (ஸமுத்திரபக்ஷத்தில் கலக்கமுடியாததும் = அதாவது:— கம்பீரமும்) **नित्यपूर्णे**=அகண்டமும், (மழைக்காலத்தில் பல நதீ ஜலம் வந்தகாலத்திலும், கோடைக்காலத்தில் ஜலம்வராத காலத்திலும் ஒரேவிதமாக இருப்பதும்) **निरवधिपरमानन्दपीयूषरूपे**—**निर-वधि**=தேசகாலவஸ்துபரிச்சேதமற்ற, **परमानन्द** = பரமானந்தமாகிற

திலும், "त्वद्बपुरतिस्वच्छतया स्वस्मिन् प्रतिफलता चिदानन्दैकरसेन ब्रह्मणा तिरस्कृत-जाड्यं चिदानन्दैकरसमेव भवति" என்றதாலுபதேசிக்கப்பட்டிருக்கிறது.

[*] "सवा अयं ब्रह्ममहद्भिमृग्यम्" என்றும், "कृष्णस्तु भगवान् स्वयम्" என்றும், "यन्मित्रं परमानन्दं पूर्णं ब्रह्म सनातनम्" என்றுமான வசனங்களினால் பரசிதபின்னமாகச் சொல்லப்பட்ட ஸ்ரீமூர்த்தியில் என்பது பொருள்.

पीयूष=முக்தர்களினுல் அனுபவிக்கத்தகுந்த அமுதத்தின் **रूपे**=ஸ்வரூபமானதும், (**निरवधि** = எல்லையற்றதும் **परम**=மாலை சந்தனம் ஸ்திரீ இவர்கள் மூலமுண்டாகும் சுகத்துக்கு மேல்பட்டதுமான **आनन्द**=ஆனந்தத்தையுடைய **पीयूष**=அமிருதத்தின் **रूपे**=உத்பத்தியை யுடையதும்) **निर्लीनानेकमुक्तावलिसुभगतमे**—**निर्लीन**=இரண்டறக் கலந்தவர்களான **अनेकमुक्त**=பலமுக்தர்களின் **आवलि**=கூட்டத்தினுல் **सुभगतमे**=மிக்க மனோஹரமானதுமான அதாவது:—மற்றவர்க்கும் மோகேச்சையை யுண்டுபண்ணக்கூடியதுமான (தன்னுளொடுங்கின முத்துக்கூட்டங்களினுல் சோபிக்கின்றதுமான) **निर्मल ब्रह्मसिंधौ**—**निर्मल**=மாயை அதன் காரியம் இவற்றின் ஸம்பந்தமற்ற, **ब्रह्म**=ப்ரம்ஹமாகிற **सिंधौ**=ஸமுத்திரத்தில் (நிர்மல=கலங்காத ப்ரம்ஹம் போன்ற ஸமுத்திரத்தில்) உள்ள **कल्लोलोल्लासतुल्यम्** = அலைகளின் தோற்றத்துக்குத் துல்யமாகவும், **विमलतरं खलु**=மிகச் சுத்தமாகவுமன்றே **सत्वम्**=ஸத்வத்தை **आहु:**=ஆசிரியர் சொல்லுகின்றனர். ஆகவே **तदात्मा**=அந்த ஸத்வத்தை ஸ்ரீமூர்த்தியாகவுடைய, **त्वम्**=நீர் **निष्कल:**=நிஷ்கலராக **कस्मात्**=யாதுகாரணத்தினுல் **नो**=இல்லாதிருப்பீர். **सकल:** = அவயவத்துடன் கூடினவர் **इति** = என்ற **वच:**=வசனமானது **त्वत्कलास्वेव**=உமது அம்சாவதாரங்களிலேயே தான் ப்ரயோகிக்கப்படுகிறது. ஆகவே நீர் நிஷ்களப்ரம்ஹமேயாவீர் என்பது பொருள். (4) (எ—று)

(அ—கை) இவ்விதம் பகவன் மூர்த்தியானது சுத்தஸத்வமயம் என்பதைச்சொல்லி இந்தச் சுலோகத்தினுல் அது வெளியில் தோற்றமடையும் க்ரமத்தை உபதேசிக்கிறார்—

निर्व्यापारोऽपि निष्कारणमज भजसे यत्क्रियामीक्षणाख्यां
तेनैवोदेति लीना प्रकृतिरसतिकल्पापि कल्पादिकाले ।
तस्याः संशुद्धमंशं कमपि तमतिरोधायकं सत्वरूपं
सत्वं धृत्वा दधासि स्वमहिमविभवाकुण्ठ वैकुण्ठ रूपम् ॥

(ப—ரை) **अज !**=ஹே விஷ்ணே! **त्वम्**=நீர் **निर्व्यापारोपि**=க்ரியையற்றவராக இருந்தபோதிலுங்கூட **निष्कारणम्**=எவ்வித ப்ரயோஜனமுமில்லாமல் **ईक्षणाख्याम्**=மாயாப்ரேரண ரூபமான **क्रियाम्**=க்ரியையை **भजसे**=அங்கீகரிக்கிறீர் என்பது **यत्**=யாதுண்டோ (அதா

வதுः—அயஸ்காந்த மணியானது தான் எவ்வித க்ரியையுமற்றதாயி னுங்கூட தனது ஸன்னிதி மாத்திரத்திலேயே உலோகத்தை எவ்விதம் இழுக்கிறதோ அவ்விதமே இங்கும் காண்க.) तेनैव=அந் தக் காரணத்திலேயே लीला=ப்ரம்ஹதேவனின் நூறுவயதின் முடிவில் உம்மிடமொடுங்கின असतिकल्पापि=பெரும்பாலும் அஸத் தாக இருந்தபோதிலுங்கூட=ஸத்துமின்றி அஸத்துமின்றி ஸத் அஸத் இவ்விரண்டுக்கும் வேறுபட்ட ஸ்வரூபமுள்ளதாக அதாவது:— அநிர்வசனீயமாக இருந்தபோதிலுங்கூட प्रकृतिः=மாயையானது कल्पादिकाले—कल्प=கல்பங்களுடைய=ப்ரம்ஹதேவனின் தினங்களு டைய आदिकाले=முதலாவது திரைப்பகாலத்தில் அதாவது:—ப்ரம் ஹதேவனது ப்ரளயத்தின் அவஸானத்தில் उदेति=ப்ரகாசத்தையடை கிறது. हे वैकुण्ठ!=ஹே விகுண்ட நிலய! सः=அந்த மாயா ப்ரே கரான त्वम्=நீர் अतिरोधायकम्=உமது ஸ்வரூபத்துக்கு மறைவைத் தராததும் संशुद्धम्=மிக்க சுத்தமானதும், सत्वरूपम्=ஸத்வகுணரூப மானதுமான तस्याः=அந்த மாயையினுடைய कमपि=யாதோவொரு तम्=அந்த अंशम्=அம்சத்தை धृत्वा=பிரித்தெடுத்துக் கொண்டு स्व-महिमविभवाकुण्ठ!—स्वमहिम = சொந்தமான யோகைச்வரியமாகிற विभव=சக்தியினல் अकुण्ठ=குறைவற்ற ஹே ப்ரபோ! रूपम्=லீலா விக்ரஹத்தை दधासि=தரிக்கின்றீர்=எடுத்துக்கொள்ளுகின்றீர். (5)

(தா—ம்) பகவான் சரீரமுள்ளவராக இருப்பின் அவருக்கும் ஸம்ஸார ப்ராப்த்திவருமே? என்ற ஆசங்கையேற்பட அதைவிலக்க வேண்டி மூலத்தில் अतिरोधायकम् என்றும், संशुद्धम् என்றும் இரண்டு விசேஷணங்கள் கொடுக்கப்பட்டன. அதாவது:—சுத்த ஸத்துவரூபமான மாயையின் அம்சமானது அதிக ஸ்வச்சமானதால் அது சைதன்யத்தை மறைப்பதாகவாவதில்லை. ஆகவே சுத்த ஸத் துவமயமான லீலாவிக்கிரஹத்தில் நான் என்றும் என்னுடையது என்றுமான அபிமானமானது ஸம்பவிப்பதில்லையாதலால் அஹம் மமாபிமானத்தை நிமித்தமாகக்கொண்ட ஸம்ஸாரமானது பகவானி டத்தில் ஸம்பவிக்கவேமாட்டாது என்பது கருத்து. மேலும், சரீர ஸம்பந்தமானது ஸமானமாக இருந்தபோதிலுங்கூட ஜீவன் ஸம் ஸாரத்தையடைவதும், ஈச்வரன் ஸம்ஸாரத்தையடையாதிருப்பதும் எங்ஙனம்? என்ற ஆசங்கை ப்ராப்த்தமாகவே அதை விலக்கவேண்டி

மூலத்தில் **स्वमहिमविभवाकुण्ठ !** என்று சொல்லப்பட்டது. இதிலி ருந்து ஜீவன் மாயைக்கு ஆதீனனாக இருப்பதுபற்றி ஸம்ஸாரத்தை யடைகிறான் என்றும், ஈஸ்வரனே ஸ்வாதீனமான மாயையினால் லீலா விக்ரஹத்தையங்கீகரித்தவனாய்க்கொண்டு ப்ரபஞ்ச ஸிருஷ்டி யாதி லீலைகளைச் செய்வதால் அவருக்கு ஸம்ஸாரமானது கிடை யாது என்றும் சொன்னதாக ஏற்பட்டது. (5) (எ–று)

(அ–கை) இப்பொழுது பகவன்மூர்த்தியின் ஸௌந்தரியத்தை இரண்டு ஸ்லோகங்களினால் வர்ணிக்கிறார்—

तत्ते प्रत्यग्रधाराधरललितकलायावळीकेळिकारं
लावण्यस्यैकसारं सुकृतिजनदृशां पूर्णपुण्यावतारम् ।
लक्ष्मीनिश्शङ्कलीलानिलयनममृतस्यन्दसन्दोहमन्तः
सिञ्चत्सञ्चिन्तकानां वपुरनुकलये मारुतागारनाथ ॥६॥

(பதவுரை) **मारुतागारनाथ !** = குருவாயூரில் வஸிக்கும் நாத னனே ஹே கிருஷ்ண ! **प्रत्यग्रधाराधरललितकलायावळीकेळिकारम्**— **प्रत्यग्रधाराधर**=புதிதான நீருண்டமேகத்தினுடையவும் **ललितकला-यावळी**=அழகிய காசாம்பூவின் கூட்டத்தினுடையவும் **केळिकारम्**= லீலையைச் செய்கின்றதும் (அதாவது:—புதிதான நீருண்டமேகம் போலும் புதிதான காசம்பூவின் கூட்டம் போலும் நீலநிறமானதும் என்றும்.) **लावण्यस्यैकसारम्**=லாவண்யமென்ற பொருளின் கேவல ஸாராம்சத்தினால் மட்டும் செய்யப்பட்டதும், **सुकृतिजनदृशाम्**— **सुकृतिजन**=பலாபிஸந்தியின்றி அனுஷ்டிக்கப்பட்ட ஸகலவிஹித கர்மங்களையுமுடைய ஜனங்களின் **दृशाम्**=கண்களுக்கு விஷயமான **पूर्णपुण्यावतारम्**=பூர்ண புண்ணியத்தின் அவதார பூதமும் (அதா வது:—ஸுகிருதி ஜனங்களின் கண்களினால் அனுபவிக்கத் தகுந்த படி புண்ய ப்ரவாஹமே பகவன்மூர்த்தியின் உருவமுள்ளதாகப் பரி ணமத்தை யடைந்திருக்கிறது என்பதுகருத்து.) **लक्ष्मीनिश्शङ्कली-लानिलयनम्**=லக்ஷ்மீதேவியினது எவ்வித சங்கையுமற்ற லீலைக்கு இருப்பிடமானதும், **सञ्चिन्तकानाम्**=உபாஸகர்களின் **अन्तः**=ஹிருத யத்தில் **अमृतस्यन्दसन्दोहम्** = அமிருதப் பெருக்கின் கூட்டத்தை **सिञ्चत्**=உண்டு பண்ணுகின்றதும், (அதாவது:—உபாஸகர்களின்

ஹிருதயத்தை ப்ரம்ஹானந்தாமிருதத்ரவத்திலுல் நனைத்து ஸகல ஸந்தாபத்தையும் போக்குகின்றதும் என்றும்.) ஆன **ते**=உம்முடைய **तत्**=அந்த சுத்தஸத்துவாத்மகமான, **वपुः**=ஸ்ரீமூர்த்தியை **अनुकलये**=இடையறாது நினைக்கின்றேன். (6) (எ–று)

(அ–கை) மேலும்—

कष्टा ते सृष्टिचेष्टा बहुतरभवखेदावहा जीवभाजा-
मित्येवं पूर्वमालोचितमजित मया नैवमद्याभिजाने ।
नो चेज्जीवाः कथं वा मधुरतरमिदं त्वद्वपुश्चिद्रसार्द्रं
नेत्रैः श्रोत्रैश्च पीत्वा परमरससुधांभोधिपूरे रमेरन् ॥ ७ ॥

(ப–ரை) हे **अजित**!=எவராலும் எதனாலும் ஜயிக்கப்படாதவரே! **जीवभाजाम्**—**जीव**=லிங்கசரீத்தை **भाजाम्**=அடைந்தவர்களுக்கு அதாவது:—லிங்கசரீரத்தில் தாதாத்மிய ஸம்பந்தத்தை யடைந்தவர்களுக்கு **बहुतरभवखेदावहा**=அதிகங்களான பவகேதங்களை=ஜனனமரணதுக்கங்களை, தருவதுபற்றி **ते**=உம்முடைய **सृष्टि-चेष्टा**=ஸிருஷ்டி லீலையானது **कष्टा**=கஷ்டமானது **इत्येवम्**=என்றிவ்விதமாக **मया**=மூடபுத்தியுள்ள என்னால் **पूर्वम्**=முன்னர், **आ-लोचितम्** = சிந்திக்கப்பட்டது. **अद्य** = இப்பொழுது **एवम्**=இவ்விதம் **न जाने** = நினைக்கின்றேனில்லை. இப்பொழுது மனதானது உமது ரூபானுபவத்திலீடுபட்டிருக்குங்கால் நீர் பரமோபகாரம் செய்ததாகவே நிச்சயிக்கிறேன் என்பது கருத்து. **नोचेत्**=உம்மிடத்தில் லயித்த ஜீவர்களையும், அவர்களுக்குப் போக்கியமான ப்ரபஞ்சத்தையும் ஸிருஷ்டிக்காவிடில் **जीवाः**=ஜீவர்கள் **चिद्रसार्द्रम्**=சிதானந்தாமிருதத்ரவத்திலுல் உள்ளிலும் வெளியிலும் வியாப்தமானதும், **मधुरतरम्**=மிக்க இனிப்பானதுமான **इदम्**=இந்த **त्वद्वपुः**=உமது ஸ்ரீமூர்த்தியை **नेत्रैः**=நேத்திரங்களினாலும், **श्रोत्रैश्च**=ச்ரோத்திரங்களினாலும் **पीत्वा**=பானஞ்செய்து=உமது தரிசனம் ச்ரவணம் உபாஸனம் கதாச்ரவணம் இவை வாயிலாக ஹிருதயத்தில் வாங்கி, **परमरससुखांभोधिपूरे**=பரமானந்தாமிருத ஸமுத்திரத்தில் **कथम्**=எப்படி **रमेरन्**=ரமிப்பர். அதாவது:—முழுகுதல் வெளிக்கிளம்புதல் புரோக்ஷித்துக் கொள்ளுதல் ருசிபார்த்தல் முதலியகாரியத்தைச் செய்வர் என்றும். (7) (எ–று)

(அ–கை) இவ்விதம் லோகோத்தரமான பகவானிடமுள்ள ஸௌந்தரிய குணத்தைச் சொல்லி லோகோத்தரமான பலந்தரும் தன்மையை இதனாலுபதேசிக்கிறார்—

नम्राणां सन्निधत्ते सततमपि पुरस्तैरनभ्यर्थितान-
प्यर्थान् कामानजस्रं वितरति परमानन्दसान्द्रां गतिञ्च।
इत्थं निश्शेषलभ्यो निरवधिकफलः पारिजातो हरे त्वं
क्षुद्रं तं शक्रवाटीद्रुममभिलषति व्यर्थमर्थिव्रजोऽयम् ॥ ४ ॥

றுக்கெல்லாம் மிக்க ஸ்தூலமானது. (23–24) (*)முறையே ப்ருதிவீ, அப்பு, தேஜஸ், வாயு, ஆகாசம் அஹந்தத்துவம், மஹத்தத்துவம் என்ற ஏழுவிதமான ஆவரணத்துடன் கூடினதும், அண்ட கோசத்தினுள்ளிலிருக்கின்றதுமான இந்தச் சரீரத்தில் இருக்கின்ற யாதொரு வைராஜபுருஷனை (ஹிரண்யகர்ப்பாந்தர்யாமியான) பகவானுண்டோ இவரே (ஹிரண்யகர்ப்பாந்தர்யாமியான பகவானே) தாரணைக்கு முக்கியமான விஷயமாகவாகிறார். (25) [*]ப்ரபஞ்சஸ்ரஷ்டாவான இந்த வைராஜபுருஷனுக்குப் பாதாள லோகத்தைப் பாதமூலமாக (உள்ளங்காலாக) வும், ரஸாதலத்தை பார்ஷ்ணியாகவும்=பாதத்தின பின்பாகமாசவும்,ப்ரபதமாகவும்=பாதத்தின் முன்பாகமாகவும், மஹாதலத்தைக் குதிகால்களாகவும், தலாதலத்தைக் கணுக்கால்களாகவும் வேதங்கள் சொல்லுகின்றன. (26) ஹே மஹீபதே! விஸ்வத்தைச் சரீரமாகக்கொண்ட அவருக்கு சுதலத்தை இரண்டு ஜானுக்களாகவும்(முழங்கால்களாகவும்)விதலம் அதலம் என்ற இரண்டு உலகங்களையும் இரண்டு துடைகளாகவும், (அதாவது:—துடையின கீழ்பாகத்தை விதலமாகவும், மேல்பாகத்தை அதலமாகவுமாம்) பூதலத்தை அவருடைய பின்தட்டாகவும், ஆகாசப்ரதேசத்தை உந்தியாகிற ஸரஸ்ஸாகவும், வேதங்கள் சொல்லுகின்றன. (27)

(*) உபலக்ஷணமுறையால் விராட்தேஹம் தாரணைக்கு விஷயமாக முன்னர் சொல்லப்பட்டது. விராட் ஜீவநியந்தாவான பகவானிடத்திலேயே தாரணை செய்யவேண்டுமென இதனுலுபதேசிக்கிறார்.

[*] விராட்தேஹம், அதில் அபிமானமுள்ள ஹிரண்யகர்ப்பராகிற ஜீவன், அவற்றுக்கு அந்தர்யாமியான பகவான் இம்மூன்றையும் ஒன்றாக்கி உபாஸனம் செய்யவேண்டும் என இந்தச் சுலோகத்தினுலுபதேசிக்கிறார்.

तपो रराटीं विदुरादिपुंसः सत्यं तु शीर्षाणि सहस्रशीर्ष्णः॥ २८ ॥ इन्द्रादयो बाहव आहुरस्राः कर्णौ दिशः श्रोत्रममुष्य शब्दः। नासत्यदस्रौ परमस्य नासे घ्राणोऽस्य गन्धो मुखमग्निरिद्धः॥ २९ ॥ द्यौरक्षिणी चक्षुरभूत्पतङ्गः पक्ष्माणि विष्णोरहनी उभे च। तद्भ्रूविजृम्भः परमेष्ठिधिष्ण्यमापोऽस्य तालू रस एव जिह्वा॥ ३० ॥ छन्दांस्यनन्तस्य शिरो गृणन्ति दंष्ट्रा यमः स्नेहकला द्विजानि। हासो जनोन्मादकरी च माया दुरन्तसर्गो यदपाङ्गमोक्षः॥ ३१ ॥ व्रीडोत्तरोष्ठोऽधर एव लोभो धर्मः स्तनोऽधर्म-

---

ஜ்யோதிஸ்ஸுகளின் ஸமூஹமான ஸ்வர்க்கலோகத்தை மார்புப் பிரதேசமாகவும், மஹர்லோகத்தை இவருக்குக் கழுத்தாகவும் ஜனலோகத்தை இவருக்கு முகமாகவும் சொல்லுகின்றன. தபோலோகத்தை ஆதிபுருஷனுக்கு நெத்தியாகவும், ஸத்யலோகத்தையோ ஆயிரக்கணக்கான தலையையுடைய இவருக்குத் தலைகளாகவும் எண்ணுகின்றன. (28) இந்திரனே ஆதியாகக்கொண்ட தேவர்கள் இவருடைய கைகளாகவும், திக்குகள்=நம்போன்வர்களின் ஸ்ரோத்திரத்துக்கு அபிமானி தேவதைகள், காதுகளாகவும், நம்போன்றவர்களின் காதுக்கு விஷயமான சப்தம் ஸ்ரோத்திரேந்திரியமாகவும், அஸ்வினீ தேவர்கள் ஆண்டவனுக்கு மூக்குகளாகவும், நம்போன்றவர்களால் அனுபவிக்கப்படும் மணமானது இவருக்கு க்ராணேந்திரியமாகவும், பிரகாசிக்கின்ற அக்னியானது முகமா(வாயா)கவும், (29) அந்தரிக்ஷலோகமானது நேத்திரகோளகமாகவும், சூரியன், கண் என்ற இந்திரியமாகவும், இரவு பகல் என்ற இரண்டும் விஷ்ணுவுக்கு இமைமயிர்களாகவும், ப்ரம்ஹலோகமானது அவருடைய புருவ நெரிச்சலாகவும், நம்போன்றவர்களா லனுபவிக்கப்படும் ஜலமானது தாலுவாகவும், (ஜிஹ்வேந்திரியமிருக்குமிடம்) ரஸமானது ஜிஹ்வையாகவும், ஜிஹ்வேந்திரியமாகவும், சொல்லப்பட்டிருக்கிறது. (30) வேதங்களே அனந்தனான பகவானுக்குத் தலையாகவும்=ப்ரம்ஹரந்திரமாகவும், யமனே தந்திப்பற்களாகவும், நம்போன்றவர்களுக்குப் புத்திராதிகளிடமேற்படும் ஸினேஹலேசங்களே பற்களாகவும், ஜனங்களுக்கு மயக்கத்தைத் தருகின்றமாயையை(அவருடைய)மந்தஹாஸமாகவும், முடிவற்ற ஸிருஷ்டியென்பது யாதுண்டோ அதை

पथोऽस्य पृष्ठः। कस्तस्य मेढ्रं वृषणौ च मित्रौ कुक्षिः समुद्रा निरयोऽस्थिसङ्घाः॥ ३२ ॥

नद्योऽस्य नाड्योऽथ तनूरुहाणि महीरुहा विश्वतनोर्नृपेन्द्र। अनन्तवीर्यः श्वसितं मातरिश्वा गतिर्वयः कर्म गुणप्रवाहः॥३३॥ ईशस्य केशान्विदुरम्बुवाहान्वासस्तु संध्यां कुरुवर्य भूम्नः। अव्यक्तमाहुर्हृदयं मनश्च स चन्द्रमाः सर्वविकारकोशः॥ ३४ ॥ विज्ञानशक्तिं महिमामनन्ति सर्वात्मनोऽन्तःकरणं गिरित्रम्। अश्वाश्वतर्युष्ट्रगजा नखानि सर्वे मृगाः पशवः श्रोणिदेशे ॥३५॥ वयांसि तद्वय्याकरणं विचित्रं मनुर्मनीषा मनुजो निवासः।

அவருடைய கடைக்கண் பார்வையாகவும், சொல்லுகின்றன. (31) வெட்கமானது மேல் உதடாகவும், லோபமே கீழுதடாகவும், தர்மமானது ஸ்தனமாகவும், அதர்மமார்க்கமானது இவருடைய பிருஷ்டபாகமாகவும், ப்ரஜாபதியானவர் அவருடைய ஆண்குறியாகவும், மித்திராவருணர் என்ற தேவர்கள் †விருஷணங்களாகவும், ஸமுத்திரங்கள் வயிராகவும், மலைகள் எலும்புக் கூட்டங்களாகவும், சொல்லப்படுகின்றன. (32)

ஹே நரேந்திர! நதிகள் விஶ்வத்தைச்சரீரமாயுடைய இவருடைய நரம்புகளாகவும், பிறகு மரங்கள் உரோமங்களாகவும், அனந்தமான வீரியத்தையுடைய வயஸ்ஸானது=காலமானது=கமனாகவும்=நடையாகவும், காற்றானது மூச்சாகவும், குணப்ரவாஹரூபமான ஸம்ஸாரமானது க்ரீடையாகவும், (33) ஹே குருவர்ய! மேகங்களே வியாபகரான ஈஶ்வரனுடைய கேசங்களாகவும், ஸந்தியாகாலத்தை வஸ்திரமாகவும், அறிவிக்கின்றன. அவ்யக்தமென்றப்ரதானத்தை ஹிருதயமாகவும், ஸர்வவிகாரங்களுக்கும் ஆஶ்ரயபூதனும் ப்ரஹ்மித்தனுமான சந்திரனே மனஸ்ஸாகவும் சொல்லுகின்றன. (34) மஹத்தத்துவத்தை ஸர்வாத்மாவான இவருடைய விக்ஞானசக்தியாக (சித்தமாக) வும், ஶ்ரீருத்திரனே அஹங்காரமாகவும், குதிரை, கோவேறுகழுதை, ஒட்டகம், யானை இவற்றை நகங்களாகவும், எல்லாப்பசுக்களையும் மிருகங்களையும் இவருடைய இடைப்ரதேசமாகவும் சொல்லுகின்றன. (35) பக்ஷிகள் அவருடைய விசித்திரமான

---

† ஆண்குறிக்குக் கீழிலுள்ள இரண்டு விரைகள் விருஷணங்களெனப்படும்.

गन्धर्वविद्याधरचारणाप्सरः स्वरस्मृतीरसुरानीकवीर्यः॥ ३६ ॥ ब्रह्माननं क्षत्रभुजो महात्मा विड्ऊरुरङ्घ्रिश्रितकृष्णवर्णः। नानाभिधाभीज्यगणोपपन्नो द्रव्यात्मकः कर्मवितानयोगः॥ ३७ ॥ इयानसावीश्वरविग्रहस्य यः सन्निवेशः कथितो मया ते। संधार्यतेऽस्मिन्वपुषि स्थविष्ठे मनः स्वबुद्ध्या न यतोऽस्ति किञ्चित् ॥ ३८ ॥ स सर्वधीवृत्त्यनुभूतसर्व आत्मा यथा स्वप्नजनेक्षितैकः। तं सत्यमानन्दनिधिं भजेत नान्यत्र सज्जेद्यत आत्मपातः॥३९॥

इति श्रीमद्भागवते महापुराणे द्वितीयस्कन्धे महापुरुषसंस्थानानुवर्णनं नाम प्रथमोऽध्यायः ॥ १ ॥

சில்பநைபுண்யமாகவும், ஸ்வாயம்புவரான மனுவானவர் புத்தியாகவும், புருஷன் இருக்குமிடமாகவும், கந்தர்வர் வித்யாதரர் சாரணர் அப்ஸரஸ் இவர்கள் ஷட்ஜம் முதலிய ஸ்வரங்களின் ஸ்மிருதிகளாகவும், அஸுரசேனை வீரியமாகவும் சொல்லப்படுகின்றன. (36) மஹாத்மாவான அவருக்கு ப்ராம்ஹணன் முகமாகவும், க்ஷத்திரியன் புஜங்களாகவும், வைஶ்யன் துடையாகவும், சூத்திரன் கால்களாகவும் ஆவர். பலதறப்பட்ட பெயரையுடைய வஸுருத்ர ஆதித்யரென்ற தேவக்கூட்டங்களுடன் கூடினதும் திரவியஸாத்யமுமான யக்ஞப்ரயோகமானது இவருடைய கர்மமாகவாகும். (37) ஈஶ்வர சரீரத்தினுடைய யாதொரு அவயவ அமைப்பானது என்னால் உனக்குச் சொல்லப்பட்டதோ அவர் இவ்வளவு அவயவ அமைப்பு உள்ளவரே ஆகிறார். இதற்குப்புறம்பாக அணுவுமில்லை. இந்த ஸ்தூலமான ஈஶ்வரசரீரத்தில் முமுக்ஷுக்களினால் தமது புத்திகொண்டு மனஸ்ஸானது ஸ்தாபிக்கப்படுகிறது. (38) †ஒருவனே *ஸ்வப்பினஜனங்களைப் பார்ப்பதுபோல ஸமஸ்தமான புத்தி

---

† இவ்விதம் சித்தத்தின் ஸ்தைரியத்துக்குவேண்டி விராட்தேஹம், ஜீவன், அந்தர்யாமி இவர்களையொன்றாக்கி உபாஸனம் செய்யவேண்டுமென வுபதேசிக்கப்பட்டது. அவ்வுபாஸனத்தில் தேஹம் ஜீவன் இரண்டையும் அந்தர்யாமியான ஈச்வரனிடத்தில் ஐக்யப்படுத்தி அவரே உபாஸிக்கத்தக்கவர் என இந்தச்சுலோகத்திலுபதேசிக்கப்படுகிறது. *ஒரு ஜீவனே ஸ்வப்பினத்தில் வெகு தேஹங்களைக் கல்பித்துக்கொண்டு அந்

अथ द्वितीयोऽध्यायः ॥

श्रीशुक उवाच—एवं पुरा धारणयात्मयोनिर्नष्टां स्मृतिं प्रत्यवरुध्य तुष्टात्। तथा स सर्जेदममोघदृष्टिर्यथाप्ययात्प्राग्व्यवसायबुद्धिः ॥ १ ॥

விருத்திகளினுலும் அனுபவிக்கப்பட்ட ஸர்வபதார்த்தங்களையு முடையவரான அவரே ஸர்வத்துக்கும் ஆத்மாவாகவாகிறார். ஆகவே முக்காலத்திலு மழிவற்றவரும் ஆனந்த நிதியுமான அவரையே பஜிப்பாயாக. வேறிடத்தில் பற்றை யடையாதே. அதனுல் ஆத் மாவுக்கு ஸம்ஸாரமே தானேற்படும் என்றார். (39) (எ—று)

இவ்விதம் ஸ்ரீமத்பாகவத மஹாபுராண த்விதீயஸ்கந்தத்தில் மஹாபுருஷ ஸம்ஸ்தான வர்ணனம் என்ற முதலாவது அத்தியாயம் முற்றிற்று.

இரண்டாவது அத்தியாயம்.

(அ—கை) द्वितीये तु ततस्थूलधारणातो जितं मनः।
सर्वसाक्षिणि सर्वेशे विष्णौ धार्यमितीर्यते ॥ १ ॥
दृश्यालम्बनरूपैवमुक्ता वैराजधारणा।
इहोच्यते तु तत्साध्या सर्वान्तर्यामिधारणा ॥ २ ॥

(க—ரை) முற்கூறிய ஸ்தூலஸ்வரூபதாரணைமூலம் ஜயிக்க= (தன்வசப்படுத்த) ப்பட்ட மனதை ஸர்வஸாக்ஷியும் ஸர்வேசனு மான விஷ்ணுவினிடத்தில் செலுத்தவேண்டுமென இந்த இரண்டா வது அத்தியாயத்தி லுபதேசிக்கப்படுகிறது (1) இவ்விதம் முன் னர் சொல்லப்பட்ட வைராஜதாரணையானது திருப்பயாலம்பன ரூபமானது. இந்த அத்தியாயத்திலோ அதன் பலனுகவான ஸர் வாந்தர்யாமிதாரணையானது சொல்லப்படுகிறது. (2) (எ—று)

மேலும், முதல் சுலோகத்தினுல் முன்னர் சொல்லப்பட்ட வைராஜதாரணையினுலுண்டாகும் வேறுபலனும் சொல்லப்படுகிறது.

தந்த இந்திரியங்களினுல் ஸர்வத்தையும் பார்ப்பது எவ்விதமோ அவ்வித மே இங்கும் காண்க.

शाब्दस्य हि ब्रह्मण एष पन्था यन्नामभिर्ध्यायति धीरपार्थैः। परिभ्रमंस्तत्र न विन्दतेऽर्थान्मायामये वासनया शयानः॥ २॥ अतः कविर्नामसु याव-दर्थः स्यादप्रमत्तो व्यवसायबुद्धिः। सिद्धेऽन्यथाऽर्थे न यतेत तत्र परिश्रमं

ஸ்ரீசுகர் சொல்லலுற்றார்—ப்ரம்ஹதேவன் இம்மாதிரியான தாரணையினல் ஸந்தோஷத்தையடைந்த ஹரியினிடமிருந்து ப்ரளய ஸமயத்தில் நஷ்டமான நினைவையடைந்து வீண்போகாத திருஷ்டி-யை யுடையவராயும், நிஶ்சிதமான புத்தியை யுடையவராயுங் கொண்டு ப்ரளயத்துக்கு முந்தி இந்த ப்ரபஞ்சமானது எவ்வித மிருந்ததோ அவ்விதம் ஸிருஷ்டித்தார்*. (1) (*)பயனற்றவை களான ஸ்வர்க்கம் முதலிய பெயர்களினல் கர்மாதிகாரியினுடைய புத்தியானது அந்தந்த வஸ்துவிஷயகமான இச்சையைச் செய்கிறது என்பது யாதுண்டோ இதுவேயன்றோ கர்மகாண்டரூபமான வேதத்தினது வழியாக விருக்கிறது. (கர்மாதிகாரியோ) மாயாமய மான அந்த வழியில் ஸ்வப்பினங்காண்பவன் போல சுழலுகின்ற வனுய்ப் புருஷார்த்தங்களை அடைவதில்லை. அதாவது:—அந்தந்த உலகையடைந்தபோதிலுங்கூட நிர்த்துஷ்டமான ஸுகத்தையடை வதில்லை என்றும். (2) [*]ஆனதுபற்றி (மூக்காலமும் கண்ட) கவியானவன் பெயரளவிலுள்ள போக்கியவஸ்துக்களில் எவ்வளவு பொருளினல் தேஹதாரணமானது ஏற்படுமோ அவ்வளவு பொரு ளைமட்டும் அனுபவிப்பவனுகவும், அப்பொருளிலும் பற்றில்லாத வனுகவும், இது சுகமன்று என்ற நிஶ்சித புத்தியுள்ளவனுகவும் இருக்கவேண்டும். அப்பொழுதுங்கூட தேஹதாரணத்துக்கு மட் டும் வேண்டிய அந்தப் பொருளானது இவனது முயற்சியின்றியே கிடைத்துவிடும் பொழுது அவ்விஷயத்தில் யத்தினம் செய்வதில்

---

* ஆகவே இந்தத் தாரணையினல் ப்ரபஞ்சஸிருஷ்டி ஸாமர்த்திய மானது உண்டாகிறது என்பது பெறப்பட்டது. (*) இத்தகைய உபா ஸனுபலனிலிருந்துங்கூட விரக்தியையடைந்தவனுக்கே சுத்தாத்மதாரணை யில் அதிகாரமேற்படும் ஆதலால் வைராக்கியமேற்படவேண்டி ஸமஸ்த மான கர்மபலனையும் நிந்திக்கிறார். [*] அங்ஙனமாயின் கர்மபலனையே முற்றிலும் பரித்யாகஞ்செய்வதால் அப்பொழுதே தேஹமானது நசித்து விடுமே எனின்? அதற்குப்பதில் சொல்லுகிறார்.

तत्र समीक्षमाणः॥ ३ ॥ सत्यां क्षितौ किं कशिपोः प्रयासैर्बाहौ स्वसिद्धे हग्युपबर्हणैः किम्। सत्यञ्जलौ किं पुरुधान्नपात्र्या दिग्वल्कलादौ सति किं दुकूलैः॥ ४ ॥ चीराणि किं पथि न सन्ति दिशन्ति भिक्षां नैवाङ्घ्रिपाः परभृतः सरितोऽप्यशुष्यन्। रुद्धा गुहाः किमजितोऽवति नोपसन्नान्क-स्माद्भजन्ति कवयो धनदुर्मदान्धान्॥ ५ ॥ एवं स्वचित्ते स्वत एव सिद्ध आत्मा प्रियोऽर्थो भगवाननन्तः। तं निर्वृतो नियतार्थो भजेत संसारहेतू-

---

பரிஶ்ரமத்தை யாலோசித்துக் கொண்டு முயற்சி செய்யாதிருக்க வேண்டும். (3) அதைச்சொல்லுகிறேன் கேள்—ஆண்டவனுலேற் படுத்தப்பட்ட பூமியானது இருக்கும்பொழுது மெத்தைவிஷயமான ப்ரயாஸங்கள் எதற்கு?. இயற்கையிலமைந்த தோளானது இருக் கும்பொழுது தலையணைகளினுல் என்ன பயன்?. இரண்டு கைகளு மிருக்கும்பொழுது பலவிதமான போஜனபாத்திரத்தினுல் யாது பயன்?. திக்கும் மரவுறி முதலியதும் இருக்கும்பொழுது வெண் பட்டுகளினுல் யாதுபயன்?. (4) †கிழிந்ததுணிகள் வழியில் இல் லையா? பழங்கள் முதலியவற்றினுல் பிறரைப்போஷிக்கும் மரங்கள் பழம் முதலியவற்றின் ரூபமான பிக்ஷையைக்கொடுக்கவேயில்லையா? ஜீவநதிகளுங்கூட வறண்டுவிட்டனவா? மலையிலுள்ள குஹைகள் அடைக்கப்பட்டு விட்டனவா? எவராலும் எதனுலும் ஜயிக்கப் படாத ஹரியானவர் சரணுகதர்களை ரக்ஷிப்பதில்லையா என்னே? இவ்விதமிருக்க கவிகள் (மஹான்கள்) தனத்தினுலேற்பட்ட கெட்ட மதத்தினுல் விவேகமற்றவர்களை ஏன் ஸேவிக்கின்றனர். (5)

இவ்விதம் வைராக்கியத்தை யடைந்தவனுய் தனது சித்தத்தில் ஸ்வயமாகவே இருப்பவரும் ஆத்மாவாக இருப்பதுபற்றி ப்ரியரும், மூக்காலத்திலு மழிவற்றவரும், பகவானும்=பஜிக்கத்தக்க கல்யாண குணங்கள் நிறைந்தவரும், அனந்தரும்=நித்யரும் எவரோ அவனை, ஸ்வரூப நிஶ்சயமுள்ளவனுகவும் அவருடைய ஆனந்தானுபவத்தி

---

† திக்கு இருக்கு என்றால் இடையில் துணியில்லாதிருக்கவேண்டி வரும். மாவுறியோ, அன்னமோ, வாஸஸ்தானமோ யாசனையென்ற முயற்சியின்றி எவ்விதம் கிடைக்குமெனின்? அவ்விஷயத்தில் சொல்லு கிறார்.

परमश्च यत्र ॥ ६ ॥ कस्तां त्वनादृत्य परानुचिन्तामृते पशूनसतीं नाम युञ्जयात् । पश्यन्जनं पतितं वैतरण्यां स्वकर्मजान्परितापाञ्जुषाणम् ॥ ७ ॥ केचित्स्वदेहान्तर्हृदयावकाशे प्रादेशमात्रं पुरुषं वसन्तम् । चतुर्भुजं कञ्ज-रथाङ्गशङ्खगदाधरं धारणया स्मरन्ति ॥ ८ ॥ प्रसन्नवक्त्रं नलिनायतेक्षणं कदम्बकिञ्जल्कपिशङ्गवाससम् । लसन्महारत्नहिरण्मयाङ्गदं स्फुरन्महारत्न-किरीटकुण्डलम् ॥ ९ ॥ उन्निद्रहृत्पङ्कजकर्णिकालये योगेश्वरास्थापितपाद-

---

ஞல் சுகிதனுகவும் இருந்துகொண்டு பஜிக்கவேண்டும். இத்தகைய பகவத்பஜனத்தினுல் ஸம்ஸாரத்துக்கு ஹேதுவான அவித்யையின் நாசமானது ஏற்பட்டுவிடும். (6) விஷயசிந்தை மூலம் வைதரணியென்ற யமதர்மராஜனுடைய துவாரத்திலிருக்கின்ற நதிக்குத் துல்லியமான ஸம்ஸாரத்தில் விழுந்ததும், அவ்விடத்தில் சொந்த கர்மத்தாலுண்டான ஆத்யாத்மிகங்கள் முதலிய கிலேசங்களை யனுபவிக்கின்றதுமான ஜனத்தைப் பார்க்கின்ற எவன்தான் பசுக்களை= கர்மஜடர்களை, தவிர்த்து சிறந்த ஹரியின் தாரணையை அலக்ஷியம் செய்துவிட்டு, அஸத்தான விஷய சிந்தையைச் செய்வான். (7) ‡முற்கூறியவைராஜதாரணை செய்பவர்களைக் காட்டிலும் சிறந்தவர் களும் அந்தர்யாமியான பகவானுடைய ஸ்வரூபத்தில் தாரணை செய்கின்றவர்களுமான சிலர், தமது தேஹத்தின் நடுவிலிருக்கின்ற ஹிருதயத்திலுள்ள ஆகாசத்தில் அந்தர்யாமி ரூபத்துடன் வஸிப்பவரும், ஒட்டையளவுள்ள ஹிருதயத்தில் ப்ரகாசிப்பதுபற்றி ஒட்டையளவுள்ளவரும், நான்கு கைகளுள்ளவரும், தாமரஸபுஷ்பம், சக்கிரம், சங்கம், கதை இவற்றைக் கைகளிலுடையவருமான புருஷனைத் தாரணையினுல் ஸ்மரிக்கின்றனர். (8) தெளிந்த முகமுள்ளவரும், தாமரை இதழ்போல நீண்டகண்களை யுடையவரும், கதம்ப புஷ்பத்திலுள்ள தாதுபோலப் பொன்னிறங்களான வஸ்திரங்களை யுடையவரும், பிரகாசிக்கின்ற சிறந்த ரத்தினங்களையுடையனவும் பொன்மயங்களுமான தோள்வளைகளை யுடையவரும், ஜ்வலிக்கின்ற சிறந்த ரத்தினமயங்களான கிரீடம் குண்டலம் இவற்றையுடையவரும். (9) மலர்ந்த ஹிருதயமாகிற தாமரஸபுஷ்பத்தின் கர்ணி

---

‡ அதே தாரணையை விசேஷணங்களுடன் கூட ஆறு சுலோகங்களினுலுபதேசிக்கிறார்.

पल्लवम्। श्रीलक्ष्मणं कौस्तुभरत्नकंधरमम्लानलक्ष्म्या वनमालयाचितम् ॥१०॥ विभूषितं मेखलयाङ्गुलीयकैर्महाधनैर्नूपुरकङ्कणादिभिः। स्निग्धामलाकुञ्चितनीलकुन्तलैर्विरोचमाननहासपेशलम् ॥ ११ ॥ अदीनलीलाहसितेक्षणोल्लसद्भ्रूभङ्गसंसूचितभूर्यनुग्रहम्। ईक्षेत चिन्तामयमेनमीश्वरं यावन्मनो धारणयाऽवतिष्ठते ॥ १२ ॥

एकैकशोऽङ्गानि धियानुभावयेत्पादादि यावद्धसितं गदाभृतः। जितं जितं स्थानमपोह्य धारयेत्परं परं शुद्ध्यति धीर्यथा यथा ॥ १३ ॥ यावन्न

கையாகிற (தாதாகிற) ஆலயத்தில் யோகேஶ்வரர்களினுல் நன்கு ஸ்தாபிக்கப்பட்ட சரணபல்லவங்களை யுடையவரும், ஶ்ரீதேவியாரையே யடையாளமாகவுடையவரும், வாடாத வனமாலையினுல் அலங்கரிக்கப்பட்டவரும், கழுத்தில் கௌஸ்துப ரத்தினத்தை யுடையவரும், (10) ஒட்டியாணத்தினுலும், மிக்கவிலையுள்ள மோதிரங்களினுலும் பாதஸரம் கங்கணம் முதலியவற்றினுலும் அலங்கரிக்கப்பட்டவரும், பளபளப்புள்ளனவும் அழுக்கற்றனவும் சுருண்டனவுமான தலையிலுள்ள உரோமங்கள்மூலம் ப்ரகாசிக்கின்ற முகத்திலுள்ள மந்தஹாஸத்தினுல் அழகுவாய்ந்தவரும், (11) கம்பீரமாயுள்ள லீலாஹஸிதத்துடன் பார்க்குங்கால் ப்ரகாசிக்கின்ற புருவங்களின் அசைத்தலினுல் நன்கு சூசிப்பிக்கப்பட்ட அதிகமான அனுக்கிரஹத்தை யுடையவரும், சிந்தைக்குத் தக்கபடி ஆவிர்ப்பாவத்தை யடைகின்றவருமான இந்த ஈஶ்வரனை, எதுவரை மனதானது ஸமமாக (ஸ்திரமாக) நிற்குமோ அதுவரை தாரணையினுல் பார்க்கவேண்டும். (12)

* கதாதரனை பகவானுடைய பாதந் தொடங்கி மந்தஹாஸம் முடியவுள்ள ஒவ்வொரு அங்கங்களையும் புத்தியினுல் அடிக்கடி தியானிக்கவேண்டும் புத்தியானது எவ்வளவுக்கெவ்வளவு சுத்தியை (சலனமற்றிருத்தலை) யடைகிறதோ அவ்வளவுக்கவ்வளவு யத்தினமின்றியே தோற்றத்தையடைந்த பாதம் முதலிய ஸ்தானத்தை

---

* 8-வது சுலோகம் முதல் 12-வதுசுலோகம் முடியவுள்ள 6சுலோகங்களினுல் தாரணையைச்சொல்லி இந்த 13-வது சுலோகத்தினுல் அவருடைய தியானத்தை யுபதேசிக்கிறார்.

जायेत परावरेऽस्मिन्विश्वेश्वरे द्रष्टरि भक्तियोगः। तावत्स्थवीयः पुरुषस्य रूपं क्रियावसाने प्रयतः स्मरेत ॥ १४ ॥ स्थिरं सुखं चासनमाश्रितो यतिर्यदा जिहासुरिममङ्ग लोकम्। काले च देशे च मनो न सज्जयेत्प्राणं नियच्छेन्मनसा जितासुः॥ १५ ॥ मनः स्वबुद्ध्याऽमलया नियम्य क्षेत्रज्ञ

(அவயவத்தை) விட்டு (அவ்விஷயமான தியானத்தைவிட்டு) மேன் மேலுள்ள ஜங்கை ஜானுமுதலிய அவயவத்தைத் தியானித்தல் வேண்டும். (13) பராவரரும்=ப்ரம்ஹாதிகளுக்கும் மேல்பட்ட வரும், விஶ்வேஶ்வரரும், ஸர்வஸாக்ஷியுமான இந்தப் பகவானிடத் தில் ப்ரேமாத்மகமான பக்தியோகமானது எதுவரை யுண்டாக வில்லையோ அதுவரை புருஷனு பகவானுடைய ஸ்தூலமான ரூபத்தை, நியமத்தில் பற்றுள்ளவனுய் (*)ஆவஶ்யகமான கர்மா னுஷ்டானத்தைச் செய்தபிறகு நினைத்துவரவேண்டும்.[*] (14)

† ஹே ராஜன்! இம்மாதிரியுள்ள யதியானவர் எப்பொழுது இந்தத் தேஹத்தை விடுவதற்கு விரும்புகின்ரூரோ அப்பொழுது தேச(புண்ணியக்ஷேத்திர)த்திலும், காலத்தி (உத்தராயணம் முதலி யவற்றி) லும், மனப்பற்றையடையலாகாது. (யோகிக்கு யோக மானது ஹித்திக்குக் காரணமே யொழிய தேசமும் காலமுமன்று எனத்திருட நிஶ்சயமுள்ளவனுய்க் கொண்டு) ஸ்திரமும் சுகமு மான ஆஸனத்திலிருந்து கொண்டும், இந்திரியஜயத்தை யடைந்து கொண்டும் ப்ராணனை (வாயுவை ப்ராணயாமத்தினுல்) அடக்க வேண்டும். (15) தீரனுகவுள்ளவன் தோஷமற்ற புத்தியினுல் மனதை அடக்கி (ஸங்கல்பரூபமான மனதை நிஶ்சயாத்மகமான புத்தியிலொடுக்கி) இந்த நிஶ்சயரூபமான புத்தியை க்ஷேத்திரக்ஞ (புத்தியாதி ஸாக்ஷியி) னிடத்தில் லயப்படுத்தவேண்டும். அந்த

(*) இதனுல் கர்மானுஷ்டானமானது பக்தியோகத்துக்கு ஸாத னம் என்பது பெறப்பட்டது. [*] இந்தச் சுலோகத்தினுல் முன்னர் சொன்ன வைராஜதாரணையானது இந்தத் தியானத்துக்கு அங்கம் என் பது பெறப்பட்டது. † இதுவரை மரணம் ஸமீபித்துள்ள மனிதன் செய்யவேண்டிய காரியத்தை யுபதேசித்து, இப்பொழுது ஸ்வயமே தேஹத்தைவிட விரும்புகின்ற மனிதன் செய்யவேண்டிய காரியத்தை இதுமுதல் 4½ சுலோகங்களினுலுபதேசிக்கிரூர்.

एतां निनयेत्तमात्मनि। आत्मानमात्मन्यवरुध्य धीरो लब्धोपशान्तिर्विरमेत कृत्यात् ॥ १६ ॥ न यत्र कालोऽनिमिषां परः प्रभुः कुतो नु देवा जगतां य ईशिरे। न यत्र सत्त्वं न रजस्तमश्च न वै विकारो न महान्प्रधानम् ॥१७॥ परं पदं वैष्णवमामनन्ति तद्यन्नेति नेतीत्यतदुत्सिसृक्षवः। विसृज्य दौरा-

---

க்ஷேத்திரக்ஞனை ஆத்மாவினிடத்தில் (த்வம்பதலக்ஷ்யத்தில்) லயப் படுத்தவேண்டும். அந்தச் சுத்த ஆத்மாவை ஆத்மாவினிடத்தில்= தத்பதலக்ஷ்யமான சுத்த ப்ரம்ஹத்தினிடத்தில் "ப்ரம்ஹமேநான்" என்ற பாவனையால் இரண்டறக்கலக்கச்செய்து நிர்விருதியை (ப்ரம் ஹாத்மைக்யானுபவத்தாலுண்டான சுகத்தை) யடைந்தவனுய்க் கொண்டு செய்யவேண்டிய காரியத்திலிருந்து ஓய்வை யடைய வேண்டும். (இதற்குப் பிறகு அடையவேண்டுவது ஒன்றுமில்லை யாதலால் ஒன்றை மற்றொன்றில் ஒடுக்க வேண்டியகாரியமெதுவும் ஸம்பவிக்க இடமில்லை என்பது கருத்து.) (16) எந்த ஆத்மஸ்வ ரூபத்தில் தேவர்களுக்கெல்லாம் மேலான ப்ரபுவான காலங்கூட எதையும் செய்யத்திறமை யுள்ளதாகவாவதில்லையோ அந்த ஆத்ம ஸ்வரூபத்தில் (ஏதாவதொருகாரியத்தைச் செய்வதற்கு) தேவர்கள் எவ்விதம் சக்தர்களாவர். எந்தத் தேவர்கள் ப்ராகிருத ஜகத்விஷ யத்தில் ஐஸ்வரியமுடையவர்களோ அந்தத் தேவநியம்யர்களான ப்ராணிகளுக்கு (ஆத்மஸ்வரூபத்தில்) சக்திகிடையாது என்பதைச் சொல்லவும் வேண்டுமோ?. (தேவர்கள் ஏன் சக்தரல்லர் எனின்?) எந்த ஆத்மஸ்வரூபத்தில் ஸத்துவகுணமில்லையோ? ரஜோகுணமும் தமோகுணமும் இல்லையோ, அஹங்காரத்துவமில்லையோ, மஹத்தத் துவமும், ப்ரகிருதியென்ற ப்ரதானமுமில்லையோ (அதாவது:—ஸத் துவாதிகளான எவ்வித உபாதிகளுமில்லையோ) அந்த ஆத்மஸ்வரூப விஷயத்தில் தேவாதிகளுக்கு நியமனசக்திபேறப்பட இடமேது?(17) (உபாதியற்றிருத்தல் எவ்விதமெனில்) யாதுகாரணத்தினுல் ஆத்மா வைவிட வேறுபட்ட பொருளை "இதில்லை" "இதில்லை" எனப் பரித்யாகஞ் செய்யவிரும்புகின்றவர்கள் தேஹாதிகளிலுள்ள ஆத்ம புத்தியைவிட்டு பூஜ்யரான விஷ்ணுவினுடைய ஸ்வரூபத்தை (சுத்த வியாபகபரமாத்ம ஸ்வரூபத்தை) இடையறுது மனத்தினுல் ஆலிங் கனம் (அனுஸந்தானம்) செய்து கொண்டு பிறவற்றில் பற்றை

त्म्यमनन्यसौहृदा हृदोपगुह्यार्हपदं पदे पदे॥ १८ ॥ इत्थं मुनिस्तूपरमेद्धयव स्थितो विज्ञानदृग्वीर्यसुरन्धिताशयः। स्वपार्ष्णिनापीड्य गुदं ततोऽनिलं स्थानेषु षट्सून्नमयेज्जितक्लमः॥ १९ ॥ नाभ्यां स्थितं हृद्यधिरोप्य तस्मादु-दानगत्योरसि तं नयेन्मुनिः। ततोऽनुसंधाय धिया मनस्वी स्वतालुमूलं

யொழித்தவர்களாய் எந்த ஸ்வரூபத்திலேயே இருக்கின்றனரோ, அதுவியாபகபரமாத்மாவின் ஸ்வரூபமும், ஆனதுபற்றியே எல்லாவற்றுக்கும்பரமும்=ஸ்ரேஷ்டமுமாகுமெனச் சுருதிகளுபதேசிக்கின்றனவோ அக்காரணம்பற்றியேயாம். (18)

விக்ஞான (சாஸ்திர) த்தினுல் உண்டான ப்ரம்ஹாத்மைக்யக்ஞானத்தின் வீரியத்தினுல் முற்றிலும் போக்கப்பட்ட விஷயவாஸனையையுடையவரும், இவ்விதம் ப்ரம்ஹபாவத்தினுல் மட்டும் நிலைத்திருப்பவருமான ‡முனியோவெனில் ஸ்வரூபத்திலொடுங்க வேண்டும். அதாவது:—தனது குதிகாலினுல் குதத்தை (மூலாதாரத்தை) நிரோதம் செய்து பிறகு சிரமமற்றவராய் வாயுவை நாபி, ஹிருதயம், மார்பு, தாலுமூலம், புருவத்தின்நடு, ப்ரம்ஹரந்திரம் என்ற ஆறுஸ்தானங்களில் மேன்மேல் கொண்டுபோக வேண்டும். (19) அதாவது:—நாபியில்= மணிபூரகஸ்தானத்தில், இருக்கும் வாயுவை ஹிருதயத்தில்=அனுஹதசக்கிரத்தில், ஏற்றி அங்கிருந்து உரஸ்ஸில்=கழுத்துக்குக் கீழுள்ள தேசத்திலிருக்கும் விசுத்தி சக்கிரத்தில் அந்த வாயுவை ப்ரம்ஹநாடீ வழியாக கொண்டு போக வேண்டும். மனோஜயத்தை யடைந்த முனியானவர் (ப்ரம்ஹக்ஞானியானவர்) அந்தவாயுவைப் புத்தியினுல் அனுஸந்தானஞ்செய்து அந்த விசுத்தி சக்கிரத்திலிருந்து தனது தாலுமூலத்தை=அதே விசுத்திசக்கிரத்தின்

---

‡ மூலத்தில் मुनिस्तु=(முனியோவெனில்) என तु என்ற சப்தத்தைப் பிரயோகித்திருப்பதிலிருந்து “यदि प्रयास्यन्नृप पारमेष्ठ्यम्” என்ற 22-வது சுலோகத்தில் சொல்லப்படும் காமனையுள்ளவரைவிட இவருக்கு வேறு விசேஷமானது சொல்லப்பட்டதாகவாகிறது. அதாவது:—இவர் தத்துவமஸ்யாதி மஹாவாக்கியமூலமேற்பட்ட ப்ரம்ஹாத்மைக்கிய ஸாக்ஷாத்காரத்தை யடைந்து மனத்திலுள்ள வாஸனையை யொழித்தவர். அங்கு சொல்லப்படுபவரோ லோகவிசேஷ ப்ராப்த்தியில் ஆசைகொண்டு பகவதுபாஸனம் மட்டும் செய்தவர் என்பது கருத்து.

शनकैर्नयेत ॥ २० ॥ तस्माद्भ्रुवोरन्तरमुन्नयेत निरुद्धसप्तायतनोऽनपेक्षः । स्थित्वा मुहूर्तार्धमकुण्ठदृष्टिर्निर्भिद्य मूर्ध्न्विसृजेत्परं गतः॥ २१ ॥

यदि प्रयास्यन्नृप पारमेष्ठ्यं वैहायसानामुत यद्विहारम् । अष्टाधिपत्यं गुणसन्निवाये सहैव गच्छेन्मनसेन्द्रियैश्च ॥ २२ ॥ योगेश्वराणां गतिमाहुरन्तर्बहिस्त्रिलोक्याः पवनान्तरात्मनाम् । न कर्मभिस्तां गतिमाप्नुवन्ति

நுனிப்பிரதேசத்தை, மெதுவாக அடையும்படி செய்ய வேண்டும். (20) அந்த நுனிப்ரதேசத்திலிருந்து வாயுவை புருவங்களின் நடுப்ரதேசத்தை=ஆக்ஞாசக்கிரத்தை, அடையும்படி செய்ய வேண்டும். பிறகு பிராணனுடைய வழிகளான இரண்டு ஸ்ரோத்திரங்கள், இரண்டு நேத்திரங்கள், இரண்டு மூக்குகள், வாய் என்ற இந்த ஏழுகளையும் அடைத்துக் கொண்டு (அவ்வழியாக ப்ராணன் வெளிச் செல்லாதபடி செய்துகொண்டு) எதிலும் அபேக்ஷையில்லாதவனுயின் குறையாத ப்ரம்ஹாத்மைக்ய ஸாக்ஷாத்காரத்தையுடையவனுய் அந்த ஆக்ஞாசக்கிரத்திலேயே அரைமுஹூர்த்தம் இருந்து பிறகு பரம்ப்ரம்ஹத்தில் இரண்டறக் கலந்து ப்ரம்ஹரந்திரஸ்தானத்தைப் பிளந்துகொண்டு தேஹம் இந்திரியம் இவற்றை விட வேண்டும். (இதுவே ஸத்யோமுக்தியெனப்படும்.) (21)

*ஹே ந்ருப! ப்ரம்ஹதேவனுடைய பதத்தை=ஸ்தானமான ஸத்தியலோகத்தை, அடையப்போகின்றவனுயிருந்தாலும், அல்லது குணத்ரய ஸமுதாயாத்மகமான ப்ரம்ஹாண்டம் முழுதிலுமுள்ள அணிமாமுதலிய எட்டுவித சக்திகளையுடைய ஸித்தபுருஷர்களின் க்ரீடாஸ்தானம் யாதுண்டோ அதை அடையப்போகின்றவனுக இருந்தாலும் மனத்துடனும் இந்திரியங்களுடனும் கூடவேதான் செல்லவேண்டும். (22) வாயுவுக்குள் நுழையக்கூடிய லிங்கசரீரத்தை யுடையவர்களான யோகேஸ்வரர்களுக்குப் பூலோகம், புவர்லோகம் ஸுவர்லோகம் என்ற இம்மூன்று வுலகங்களுக்கும் உள்ளிலும் அவற்றுக்கு வெளியிலுள்ள மஹர்லோகம், ஜனலோகம், தபோலோகம் ஸத்யலோகம் இவற்றிலும் கதியானது=செல்லுத

---

* இதுமுதல் க்ரமமுக்தியேற்படும் முறையை 10 சுலோகங்களினுலுபதேசிக்கிறார்.

विद्यातपोयोगसमाधिभाजाम् ॥ २३ ॥ वैश्वानरं याति विहायसा गतः सुषुम्नया ब्रह्मपथेन शोचिषा। विधूतकल्कोऽथ हरेरुदस्तात्प्रयाति चक्रं नृप शैशुमारम् ॥ २४ ॥ तद्विश्वनाभिं त्वतिवर्त्य विष्णोरणीयसा विरजेनात्मनैकः। नमस्कृतं ब्रह्मविदामुपैति कल्पायुषो यद्विबुधा रमन्ते। २५ ॥ अथो अनन्तस्य मुखानलेन दंदह्यमानं स निरीक्ष्य विश्वम्। निर्याति

லானது, உண்டு எனப் பெரியார் சொல்லுகின்றனர். வித்யை= உபாஸனம், தபஸ்=பாகவததர்மம், அஷ்டாங்கயோகம், ஸமாதி= க்ஞானம், இவற்றை யடைந்தவர்களுடைய கதியானது யாதுண் டோ அதைக் கர்மங்களினுல் அடையமுடியாது. (23)

(*)ஹே ந்ருப! ஆகாசத்தினுல் அதிலும் ப்ரம்ஹலோகஞ் செல்லும் வழியினுல் செல்லுகின்றவனுய்க் கொண்டு ஜ்யோதிர் மயமான ஸுஷும்ஞ நாடியினுதவியினுல் முதலில் அக்னியபிமானி தேவதையை யடைகிறான். பிறகு போக்கப்பட்டமலங்களையுடைய வனுய் (அதாவது:—ஒருவிடத்திலும் பற்றற்றவனுய்) அதற்கு மேலிருக்கின்றதும், ஹரியின் ஸம்பந்தமுள்ளதும் (நாராயணதிஷ் டிதமானதும்) [*]சிசுமாரனே யாஸ்ரயித்ததுமான ஜ்யோதிஸ்சக் கரத்தையடைகிறான். (அதாவது:—சிசுமாரசக்கரத்திலுள்ள ஆதி த்யன் முதல் த்ருவன் முடியவுள்ள பதங்களையடைகிறான்.) (24) சூரியாதிகளான ப்ரபஞ்சத்துக்கு ஆஸ்ரயமாகவுள்ள அந்த விஷ்ணு வின் சக்கரத்தைக் கடந்து (இதற்குமேல் ஸ்வர்க்கலோகவாஸி களுக்குக் கதிகிடையாதாகையால்) ஒருவனுகவே, சூக்ஷ்மமானதும், எவ்விததோஷமுமற்றதுமான லிங்கசரீரத்துடன் பிறரால் நமஸ்கரிக் கப்பட்டதும் மஹாகல்பம் முடிய ஆயுளுள்ளவர்களான பிருகு முதலிய மஹருஷிகளால் ரமிக்கப்படுவதுமான ப்ரம்ஹவித்துக் களுக்குறிய ஸ்தானத்தை (மஹர்லோகத்தை) அடைகிறான். (25) அதற்குப் பிறகு கல்பத்தின் முடிவில் அவன் ஆதிசேஷனுடைய வாயிலிருந்துண்டான நெருப்பினுல் ஸமஸ்தமும்=பூலோகம், புவர்

(*) அந்தக் கதியை "वैश्वानरं याति" என்ற எட்டு சுலோகங் களினுல் சொல்லுகிறார். [*] இந்தச் சிசுமாரனைப் பற்றி ஐந்தாவது ஸ்கந்தத்தில் சொல்லப்போகிறார்.

सिद्धेश्वरजुष्टधिष्ण्यं यद्वैपरार्ध्यं तदु पारमेष्ठ्यम् ॥ २६ ॥ न यत्र शोको न जरा न मृत्युर्नार्तिर्न चोद्वेग ऋते कुतश्चित् । यच्चित्ततोदः कृपयाऽनिदंविदां दुरन्तदुःखप्रभवानुदर्शनात् ॥ २७ ॥ ततो विशेषं प्रतिपद्य

லோகம், ஸ்வர்லோகம் என்ற மூவ்வுலகமும், நன்கு பொசுக்கப் படுவதையும் தான்வஹிக்கும் மஹர்லோகத்திலும் அந்தச் சூடுவரு வதையும் கண்டு ஹித்தேஸ்வரர்களால் ஸேவிக்கப்பட்ட திஷ்ண்யங் களை=விமானங்களை, யுடையதும், இரண்டு பரார்த்தகாலம் வரை நிலைத்திருப்பதுமான ப்ரம்ஹதேவனுடைய ஸ்தானம் யாதண்டோ அந்தச் சிறந்தஸ்தானத்தை யடைகிறான். (26) பகவதுபாஸனம் செய்யாதவர்களுக்கு, முடிவற்றதுக்கத்தைத்தருகின்ற பிறவியானது அடிக்கடி காணப்படுவதிலிருந்து பகவதுபாஸனமார்க்கத்தில் ப்ர விருத்திக்காதவர்கள் விஷயத்திலுண்டான கிருபை காரணமாக ஏற் பட்ட மானஸிகமான துக்கம் யாதண்டோ இந்த ஒன்றைத்த விர்த்து இந்த ப்ரம்ஹலோகத்தில் வஸிப்பவற்குச் சோகமுமில்லை, மூப்புமில்லை, மரணமுமில்லை, வேறு துக்கமுமில்லை, பயமுமில்லை யன்றோ†. (27) ‡அந்த ப்ரம்ஹலோகத்திலிருந்து விசேஷத்தை

---

† ப்ரம்ஹலோகம் சென்றவர்கள் மூன்றுவிதர்களாவர். (1) அச்வ மேதம் முதலிய சிறந்த புண்ணிய கர்மங்களைச்செய்து அங்குசெல்லுபவர். இவர்கள் கல்பத்தின் முடிவில் புண்ணிய கர்மத்தின் தாரதம்மியத்தை யொட்டி ஆதிகாரிகஸ்தானத்தை யடைகின்றனர். (2) ஹிரண்யகர்ப் பாதிகளினுபாஸனத்திலுல் சென்றவர். இவர்கள் ப்ரம்ஹதேவனுடன் கூட மஹாகல்பத்தின் முடிவில் முக்தியை யடைகின்றனர். (3) பகவது பாஸனுபலத்திலுல் சென்றவர். இவர்கள் தமது இச்சைப்படி ப்ரம் ஹாண்டத்தைப் பிளந்துகொண்டு வைஷ்ணவமான பதத்தை (ஸ்ரீவை குண்டத்தை) யடைகின்றனர்.

‡ அவர்களுள் 3-வதான பகவதுபாஸகர்கள் ப்ரம்ஹாண்டத்தைப் பிளந்து கொண்டு செல்லும் முறையைச் சொல்லத் தொடங்குகிறார். அங்கு பின்வரும் முறைகாணத்தக்கது. அதாவது:—ஈசுவராதிஷ்டித மான ப்ராகிருதியினுடைய ஒரு அம்சத்திலுல் மஹத்தத்துவமானது உண் டாகிறது. அதனுடைய அம்சத்திலுல் அஹந்தத்துவமுண்டாகிறது. அதனுடைய அம்சத்திலுல் சப்ததன்மாத்திரை வாயிலாக ஆகாசமுண்டா

निर्भयस्तेनात्मनाऽऽपोऽनलमूर्तिरत्वरन्। ज्योतिर्मयो वायुमुपेत्य काले वाय्वात्मना खं बृहदात्मलिङ्गम्॥ २८॥ घ्राणेन गन्धं रसनेन वै रसं रूपं

யடைந்து = லிங்கதேஹத்திலுல் *பிருதிவ்யாத்மகனுக விருத்தலே யடைந்து, நிர்ப்பயனுய்=எவ்விதம் சொல்லப்போகிறேரும் என்ற சங்கையற்றவனுய், அந்தப் பிருதிவீ ரூபத்துடன், அத்துடன் இடையறுது கலந்து நிற்கின்ற (*)ஜலாத்மகனுக விருத்தலேயும், அதன் பிறகு தேஜஸ் சரீரமுள்ளவனுக விருத்தலேயும் அடைந்து வேகமற்றவனுய்=ஜலத்திலுல் நனேவோ, தேஜஸ்வினுல் தாஹமோவரும் என்ற சங்கையில்லாதபடியால் அந்த ரூபதில் தனக்கு இஷ்டமான

கிறது. அதன் அம்சத்திலுல் ஸ்பர்சதன்மாத்திரை வாயிலாக வாயுவுண்டாகிறது. அதன் அம்சத்திலுல் ரூபதன்மாத்திரை வாயிலாகத் தேஜஸ்ஸுண்டாகிறது. அதன் அம்சத்திலுல் ரஸதன்மாத்திரை வாயிலாக ஜலமுண்டாகிறது. அதன் அம்சத்திலுல் கந்த தன்மாத்திரை வாயிலாகப் பூமியுண்டாகிறது. இவையாவும் ஒன்றுசேர்ந்து பதினுன்கு உலகரூபமான விராட் சரீரமுண்டாகிறது. ஐம்பது கோடியோஜனை விசாலமுள்ள அந்த விராட் சரீரத்துக்கு அண்டகடாஹம் என்ற சப்தத்தால் சொல்லப்படுகின்ற பிருதிவியே கோடியோஜனை விசாலமுள்ள முதலாவது ஆவரணமாகவாகிறது. ஐம்பது கோடியோஜனை விசாலமுள்ள தென்றும் சிலர் இதைச் சொல்லுவர். இவ்விதமாயின் முன் சொன்ன விராட் சரீரமானது இதற்குத் தக்கபடி யோஜனை அதிகமுள்ளதாகக் கொள்ளவேண்டும். அதன் பிறகு ஜலாதிகளின் பரிணமங்களாக எந்த அம்சங்கள் சொல்லப்பட்டனவோ அவை ஒன்றைவிட மற்றொன்று பத்துப் பத்துமடங்கு அதிகமான யோஜனை விசாலமுள்ளனவாகவாகும். எட்டாவதான ப்ருகிருதி ரூபமான ஆவரணமோ வியாபகமாக—எங்கும் நிறைந்திருப்பதாக, வாகும் என்றும். ஆகவே இவ்விதமுள்ள பிருதிவியாதி ஆவரணங்களைப் பிளந்துகொண்டு அவற்றைக் கடந்து, இந்தப் பகவதுபாஸகன் வைகுண்டம் செல்லும் முறையானது சொல்லப்படுகிறது என்று கொள்ளவும்.

* பிருதிவியோடு கூடத்தானும் இரண்டறக் கலந்து நின்று என்று பொருள். (*) ஜலத்துடன் கூடத்தானும் இரண்டறக் கலந்து நின்று எனறு பொருள். இவ்விதமே மேலுள்ள தேஜஸ், வாயு, ஆகாசம், அஹங்தத்துவம், மஹத்தத்துவம் முதலியவற்றிலும் காண்க.

तु दृष्ट्वा श्वसनं त्वचैव । श्रोत्रेण चोपेत्य नभोगुणत्वं प्राणेन चाकूतिमुपैति योगी ॥ २९ ॥ स भूतसूक्ष्मेन्द्रियसन्निकर्षं मनोमयं देवमयं विकार्यम् । संसाद्य गत्या सह तैन याति विज्ञानतत्त्वं गुणसन्निरोधम् ॥ ३० ॥

போகத்தை யனுபவிக்கின்றவனுய், ஜ்யோதிர் மயனுக இருந்து கொண்டு போகத்தின் முடிவுகாலத்தில் வாய்வாத்மகனுக விருத்தலை யடைந்து அந்த வாயுரூபத்தினுல் பரமாத்மாவின் மூர்த்தியாக உபாஸனு சாஸ்திரங்களிற் சொல்லப்பட்ட ஆகாசாத்மகனுக விருத்தலை யடைந்து (28) பிறகு கிராணேந்திரியத்தினுல் கந்தமென்ற விஷயாத்மகனுகவிருத்தலையும், பிறகு ரஸனேந்திரியத்தினுல் ரஸமென்ற விஷயாத்மகனுகவிருத்தலையும், பிறகு சக்ஷுரிந்திரியத்தினுல் ரூபாத்மகனுகவிருத்தலையும், பிறகு த்வகிந்திரியத்தினுல் ஸ்பர்சமென்ற விஷயாத்மகனுகவிருத்தலையும், பிறகு ஸ்ரோத்திரேந்திரியத்தினுல் ஆகாசத்தின் குணமான சப்தாத்மகனுகவிருத்தலையும், பிறகு ப்ராணனுல்=அந்தந்தக் கர்மேந்திரியத்தினுல், ஆகூதியையும்=அவ்வவற்றின் கிரியாரூபமாக விருத்தலையும், யோகியானவன் அடைகிறன். (29) [*]அந்த யோகியானவன் †பூதஸூக்ஷ்மங்களுக்கும் இந்திரியங்களுக்கும் லயஸ்தானமான (பூதசூக்ஷ்மங்களும் இந்திரியங்களும் ஒடுங்குமிடமான) தாமஸராஜஸஸாத்விகரூபமான விகார்யத்தை=அஹந்தத்வமாகவிருத்தலை, யடைந்து இத்தகைய கமனத்தினுல் அந்த அஹந்தத்துவத்துடன் கூடவே மஹத்தத்துவத்துவமாகவிருத்தலை யடைகிறன். பிறகு எல்லாகுணங்களு மொடுங்குமிடமான தும் (ஈஸ்வராதிஷ்டிதமுமான) ப்ரதானமாகவிருத்தலை யடைகிறன். (30) அந்த ப்ரதானரூபத்தினுல் ஆனந்தமயனுக = அதிகமான ஆனந்த

---

[*] ஆகவே இவ்விதம் இரண்டு சுலோகங்களினுல் ஸ்தூலமாயும் சூக்ஷ்மமாயுமுள்ள பூதங்களைக் கடக்கும் முறை சொல்லப்பட்டது: இனி அவற்றுக்கு ஆவரணமாகவுள்ள அஹந்தத்துவத்தை யடைந்து மஹத்தத்துவத்தை யடையும் முறையானது சொல்லப்படுகிறது. † தாமஸம், ராஜஸம், ஸாத்விகம் என அஹந்தத்துவம் மூன்றுவிதமாகவாகும். அவற்றுள் தாமஸத்திலிருந்து பூதசூக்ஷ்மங்களும், ராஜஸத்திலிருந்து பஹிர்முகங்களான பத்து இந்திரியங்களும், ஸாத்விகத்திலிருந்து மனதும் இந்திரியாபிமானி தேவதைகளும் உண்டாகின்றன. அவையாவும் தத்தமது காரணங்களில் ஒடுங்குகின்றன என்பது முறை.

तेनात्मनात्मानमुपैति शान्तमानन्दमानन्दमयोऽवसाने। एतां गतिं भागवतीं गतो यः स वै पुनर्नेह विषज्जतेऽङ्ग ॥ ३१ ॥ एते सृती ते नृप वेदगीते त्वयाभिपृष्टे ह सनातने च। ये वै पुरा ब्रह्मण आह पृष्ट आराधितो भगवान्वासुदेवः॥ ३२ ॥ न ह्यतोऽन्यः शिवः पन्था विशतः संसृताविह।

மூள்ளவனுக, ஆகி ப்ரகிருதி மூதலிய உபாதிகளின் முடிவில் சாந்தமான=எவ்வித விகாரமுமற்றவரான, ஆனந்தஸ்வரூப பரமாத்மாவை அடைகிறான். ஹே அங்க! இந்தப் பகவத்ஸம்பந்தமான கதியை யடைந்தவன் எவனே அவன் மறுபடியும் இங்கு திரும்புவதில்லை. (31)

ஹே ந்ருப! ஆராதிக்கப்பட்டு ப்ரஸ்னம் செய்யப்பட்டவரும் பகவானுமான வாஸுதேவன் முன்னர் ப்ரம்ஹதேவனுக்கு வேதங்களாலுபதேசிக்கப்பட்டனவும் ஆனதுபற்றியே பழமையானவுமான எந்த முறைகளையுபதேசித்தாரோ அந்த இவைகளே உன்னாலும் கேட்கப்பட்டன.‡ (32) பகவத் ப்ரீதிஜனகமான எந்தக்

---

‡ "अनपेक्षो निर्भिद्य मूर्धन्विसृजेत्परं गतः" என்றதால்யாதொரு ஸத்யோமுக்தியானது சொல்லப்பட்டதோ அது ஒரு முறையாகும், "यदि प्रयास्यन्" என்றதாதியால் சொல்லப்பட்ட க்ரமமுக்தியானது இரண்டாவது முறையாகும். ஆகவே ஸத்யோமுக்தி, க்ரமமுக்தி என்ற இவ்விருமுறைகளும் வேதத்திலுல் சொல்லப்பட்டனவேயொழிய என்னுல் ஊஹித்துச்சொல்லப்பட்டனவன்று. அதாவது:— "यदा सर्वे प्रमुच्यन्ते कामायेऽस्य हृदि श्रिताः। अथ मर्त्योऽमृतो भवत्यत्र ब्रह्म समश्नुते" என்றதால் ஸத்யோமுக்தியும், "तेऽर्चिषमभिसंभवन्ति" என்றதாதியால் க்ரமமுக்தியும் வேதத்திலுல் சொல்லப்பட்டிருப்பதால் அவற்றையே நானும் உனக்கு உபதேசித்தேன் என்றும். அல்லது இந்தச் சுலோகத்துக்கு வேறுவிதமாயும் பெருள்கொள்ளலாம். அதாவது:— "ब्रूहि यद्वा विपर्ययम्" என ஆதியில் ராஜனுல் தக்ஷிணயனமார்க்கமும், "यच्छ्रोतव्यम्" என்றதாதியால் க்ரமமுக்திவிஷயமான மார்க்கமும் கேட்கப்பட்டிருக்கிறது. அதற்கேற்ப "न कर्मभिस्तां गतिमाप्नुवन्ति" என்றதால் தக்ஷிணயனமார்க்கமும் ஒருவாறு சூசிப்பிக்கப்பட்டதாகவாகும். "यदि प्रयास्यन्" என்றதால் உத்தராயண மார்க்கமோ நேரில் சொல்லவும்பட்டது. ஆகவே 'உன்னுல் கேட்கப்பட்ட தக்ஷிணயன உத்தராயண ரூபங்களான இவ்விரண்டுமார்க்கங்களே வேதங்களில் சொல்லப்பட்டிருக்கின்றன. அவற்றையே பக

वासुदेवे भगवति भक्तियोगो यतो भवेत् ॥ ३३ ॥ भगवान्ब्रह्म कात्स्न्र्येन त्रिरन्वीक्ष्य मनीषया । तदध्यवस्यत्कूटस्थो रतिरात्मन्यतो भवेत् ॥ ३४ ॥ भगवान्सर्वभूतेषु लक्षितः स्वात्मना हरिः। दृश्यैर्बुद्ध्यादिभिर्द्रष्टा लक्षणै-रनुमापकैः॥ ३५ ॥ तस्मात्सर्वात्मना राजन्हरिः सर्वत्र सर्वदा । श्रोतव्यः

கர்மத்திலிருந்து பகவானுன வாஸுதேவனிடத்தில் ப்ரேமாத்மக மான பக்தியோகமானது உண்டாகுமோ அந்தக் கர்மயோகத் தைக் காட்டிலும் சிறந்த வேறுவழியானது இந்த ஸம்ஸாரத்தில் நுழைந்தவனுக்குக் கிடையாதன்றே? (33) பகவானுன ப்ரம்ஹ தேவன் ஏகாக்ரசித்தராக இருந்துகொண்டு மூன்றுதடவை வேதத் தைப்பூராவாக விசாரித்தறிந்து எதனுல் பரமாத்மாவான பாகவா னிடத்தில் பக்தியானது உண்டாகுமோ அதைத் தனது புத்தி யினுல் நிச்சயித்தார். (பகவானிடத்தில் பக்தியையுண்டாக்கக் கூடிய கர்மயோகமே ஸர்வவேதங்களுக்குள்ளும் ஸாரமானது என நிச்சயித்தார் என்றும்.) (34) *திருஷ்யங்கள் மூலமேற்படும் லக்ஷணங்களினுலும் = (அதாவது:—திருஷ்யங்களான ஜடப்பொ ருள்களின் ப்ரகாசமானது ஸ்வப்ரகாசனுன த்ரஷ்டாவில்லாவிடில் பொருந்தாது என்ற அர்த்தாபத்தி ப்ரமாணமூலமாக ஏற்படுகின்ற ஸ்வப்ரகாச அந்தர்யாமி லக்ஷணங்களினுலும் என்றும்) அன்வய வியாப்தி மூலம் அனுமிதி ஜனகங்களான புத்தியாதிகளினுலும் (அதாவது:—"புத்தி முதலியன தன்னைவிட வேறுன கார்த்தாவி னல் தூண்டப்படுவன, காரணங்களாக இருப்பதால், வாச்சி முதலி யனபோலவாம்" என்ற அன்வய வியாப்த்திமூலமாக அனுமிதியைத் தருகின்ற புத்தியாதிகளினுலும்) ஸர்வஸ்வதந்திரனும் ஸர்வக்ஷேத்ர க்ஞனும் அந்தர்யாமியுமான பகவான் ஸர்வபூதங்களிலும் காணப்பட் டிருக்கிறூர். அவர் ஸர்வஸ்வதந்திரரான ஹரியேயாவர். (35) ஹே ராஜன்! ஆனதுபற்றிப் பகவானுன ஹரியானவர் எல்லாவிதத்தினு

வான் ப்ரம்ஹதேவனுக்கு முன்னர் உபதேசித்துமிருக்கிறூர்' என்று ஸ்ரீ ஸுகாசாரியார் பதிலளித்ததாய்க் கொள்ளவும்.

* முன்னர் அனுபூதமான பொருளில் ஆசையுண்டாவதை நாம் கண்டிருக்கிறேம். அனுபவிக்கப்படாத பகவானிடத்தில் பற்றுண்டா வது எங்ஙனம் எனின்? அதற்கு இதனுல் பதில் சொல்லுகிறூர்.

कीर्तितव्यश्च स्मर्तव्यो भगवान्नृणाम् ॥ ३६ ॥ पिबन्ति ये भगवत आत्मनः सतां कथामृतं श्रवणपुटेषु संभृतम्। पुनन्ति ते विषयविदूषिताशयं व्रजन्ति तच्चरणसरोरुहान्तिकम् ॥ ३७ ॥

इति श्रीमद्भागवते महापुराणे द्वितीयस्कन्धे पुरुषसंस्थानानुवर्णनं नाम द्वितीयोऽध्यायः॥ २ ॥

லும் மனிதர்களால் எல்லாவிடத்திலும் எப்பொழுதும் ஸ்ரவணஞ் செய்யத்தக்கவராகவும், கீர்த்தனஞ்செய்யத்தக்கவராகவும், ஸ்மரிக்கத் தக்கவராகவும் ஆகிறார். (36) ஸாதுக்களுக்கு ஆத்மாவாக ப்ரகாசிக் கின்ற பகவானுடைய கதாம்ருதத்தை எவர்கள் தொன்னேபோன்ற காதுகளில் நிறப்பிக்கொண்டு பானஞ்செய்கின்றனரோ அவர்கள் சப் தாதி விஷயங்களினுல் அழுக்குள்ளதாக்கப்பட்ட சித்தத்தைப் பரி சுத்தமாக்கிக்கொண்டு அவருடைய சரணாரவிந்தத்தின் ஸமீபத்தை அதாவது:—ஸ்ரீவிஷ்ணுபதத்தையடைகின்றனர் என்றார். (37)

இவ்விதம் ஸ்ரீமத்பாகவத மஹாபுராண த்விதீயஸ்கந்தத்தில்
புருஷஸம்ஸ்தானுவர்ணனமென்ற இரண்டாது
அத்தியாயம் முற்றிற்று.

நாராயணீயம்.

இரண்டாவது ஸ்கந்தார்த்த ஸங்கிரஹம்

(அ–கை) இப்பொழுது இரண்டாவது ஸ்கந்தத்திற் சொல் லிய அர்த்தத்தை யாஸ்ரயித்து பகவன்மூர்த்தி பேதம், அவற் றினுபாஸனம், அவற்றினுல் வரும்பலன் முதலியவற்றைச் சொல்ல வெண்ணங்கொண்டு முதலில் அதில் தனக்கு அதிகாரம் லித்திக்க வேண்டி ஆரோக்கியத்தை ப்ரார்த்திக்கிறார்—

कल्यतां मम कुरुष्व तावतीं कल्यते भवदुपासनं यया।
स्पष्टमष्टविधयोगचर्यया पुष्टयाऽऽशु तव तुष्टिमाप्नुयाम्॥३१॥

(ப–ரை) **यया**=எத்தகைய ஸாமர்த்தியத்தினுல் **भवदुपासनम्**= உம்முடைய உபாஸனமான து **कल्यते**=அனுஷ்டிக்கப்படுமோ **ताव-**

तीम्=அத்தகைய **कल्पताम्**=ஸாமர்த்தியத்தை **मम**=எனக்கு **कुरुष्व**= செய்வீராக. (அவ்விதம் தாங்கள் அருள்புரிந்தால்) **पुष्टया**=பூர்ணமான அங்கங்களுடன் கூடின **अष्टविधयोगचर्यया** = எட்டுவிதமான யோகானுஷ்டானத்தினல் **तव**=உம்முடைய **तुष्टिम्**=ப்ரீதியை **आप्नुयाम्**=அடைந்துவிடுவேன். **स्पष्टम्**=இது நிஸ்சிதம். (31) (எ–று)

(அ–கை) ஆயினும் இப்பொழுது எனது சக்திக்கேற்றபடி யோகத்தை அனுஷ்டிக்கிறேன் எனச் சொல்லுகிறார்—

ब्रह्मचर्यदृढतादिभिर्यमैराप्लवादिनियमैश्च पाविताः ।
कुर्महे दृढममी सुखासनं पङ्कजाद्यमपि वा भवत्पराः ॥ ३२ ॥

(ப–ரை) **भवत्पराः**=உம்மையே ப்ரதானமாகக் கொண்டவர்களான **अमी**=இந்த நாங்கள் **ब्रह्मचर्यदृढतादिभिः**=ப்ரம்ஹசரியத்தின் நிலைத்தலே ஆதியாகக்கொண்ட அஹிம்ஸை, ஸத்தியம், அஸ்தேயம், அபரிக்ரஹம் முதலிய **यमैः** = யமமென்ற யோகாங்கங்களினலும், **आप्लवादिनियमैश्च—आप्लव**=சௌசத்தை ஆதியாகக்கொண்ட ஸந்தோஷம், தபஸ், ஸ்வாத்யாயம், ஈஸ்வரப்ரணிதானம் ஆகிய நியமமென்ற யோகாங்கங்களினலும் **पाविताः सन्तः**=பரிசுத்தமாக்கப்பட்டவர்களாய்க்கொண்டு **पङ्कजाद्यम्** = பத்மாஸனத்தை ஆதியாகக்கொண்ட ஸ்வஸ்திகம் முதலிய ஆஸனத்தையோ **अपि वा**=அல்லது **सुखासनम्**= ஸ்திரமாயும் சுகமாயுமுள்ள வேறு ஆஸனத்தையோ **दृढम्**=நிஸ்சிதமாக **कुर्महे**=செய்து கொள்ளுவோமாக. (32) (எ–று)

(அ–கை) ஆஸனம் நிலைத்த பிறகு ப்ராணயாமத்தைச் செய்வதாகச் சொல்லுகிறார்—

तारमन्तरनुचिन्त्य सन्ततं प्राणवायुमभियम्य निर्मलाः ।
इन्द्रियाणि विषयादथापहृत्यास्महे भवदुपासनोन्मुखाः ॥३३॥

(ப–ரை) **तारम्**=ப்ரணவத்தை **अन्तः**=உள்ளில் **अनुचिन्त्य**=தைலதாரைபோலும், மணியின் நாதம்போலும் இடையறாது சிந்தித்து அதாவது:—இடையில் வேறு தோற்றமெதுவும் கலக்காமல் தொடர்ந்த ப்ரணவத்யான ப்ரவாஹத்தையே செய்துகொண்டு **प्राणवायुम्**=ப்ராணவாயுவை **अभियम्य**=பூரகம் ரேசகம் கும்பகம் என்ற இவற்றினல் ஜயித்து **निर्मलाः**=விலகின ராகாதிகளான அழுக்குகளை

யுடையவர்களாகவாகி **इन्द्रियाणि**=இந்திரியங்களை **विषयात्**=அதத்தற் குறிய விஷயத்திலிருந்து **अपहृत्य**=இழுத்து, அதாவது:—ப்ரத்யாஹாரம் என்ற யோகாங்கத்தை யனுஷ்டித்துக்கொண்டு **अथ**=பிறகு **भवदुपासनोन्मुखा:**=தாரணை முதலிய உமது உபாஸனையில் நோக்கமுள்ளவர்களாய், தாரணை தியானம் ஸமாதி இவற்றை முறையே யடைய விருப்பங்கொண்டவர்களாய் **आस्महे**=இருப்போமாக. (33)

(அ—கை) க்ரமப்ராப்தமான தாரணையையுபதேசிக்கிறார்—

अस्फुटे वपुषि ते प्रयत्नतो धारयेम धिषणां मुहुर्मुहुः ।
तेन भक्तिरसमन्तरार्द्रतामुद्वहेम भवदङ्घ्रिचिन्तकाः ॥ ३४ ॥

(ப—ரை) **अस्फुटे**=தெளிவாகத்தோன்றுத **ते**=உம்முடைய **वपुषि**=ஸ்ரீமூர்த்தியில் **प्रयत्नतः**=முபற்சியுடன் **मुहुर्मुहुः**=அடிக்கடி **धिषणाम्**=புத்தியை **धारयेम**=நிலைக்கச் செய்வோமாக. **तेन**=அத்தகைய தாரணானுஷ்டானத்தினுல் **भक्तिरसम्**=பக்தியாகிற ரஸத்தையும், **अन्तरार्द्रताम्**=அதன் அனுபவரூபமான சித்தத்தினுருக்கத்தையும் **उद्वहेम**=அடைவோமாக. அதிலிருந்து **भवदङ्घ्रिचिन्तकाः**=உமது சரணத்தைச் சிந்திக்கின்ற பரமபாகவதர்களாக [**भवेम**=ஆவோமாக.] (34)

(அ—கை) தியானயோகத்தைச் சொல்லுகிறார்—

विस्फुटावयवभेदसुन्दरं त्वद्वपुः सुचिरशीलनावशात् ।
अश्रमं मनसि चिन्तयामहे ध्यानयोगनिरतास्त्वदाश्रयाः॥३५॥

(ப—ரை) **विस्फुटावयवभेदसुन्दरम्**=மிகத் தெளிவான அவயவபேதத்தையுடையதும் ஆனதுபற்றியே அழகு வாய்ந்ததுமான **त्वद्वपुः** = உமது ஸ்ரீமூர்த்தியை **सुचिरशीलनावशात्** = வெகுகாலம் தாரணை தியானம் இவற்றின் அப்யாஸங்களைச் செய்யும் வாயிலாக **अश्रमं यथा तथा**=சிரமமின்றியே **मनसि**=மனத்தில் **चिन्तयामहे**=சிந்திப்போமாக. அதனுல் **ध्यानयोगनिरताः**=உமது ப்ராப்திக்கு உபாயமான தியான யோகத்தில் மிக்கப் பற்றுள்ளவர்களாகவாகி **त्वदाश्रयाः**=உமது பக்தர்களாக [**भवेम**=ஆகிவிடுவோமாக.] (35) (எ—று)

(அ—கை) இதனுல் ஸவிகல்ப ஸமாதியை ப்ரார்த்திக்கிறார்—

ध्यायतां सकलमूर्तिमीदृशीमुन्मिषन्मधुरताहृतात्मनाम् ।
सान्द्रमोदरसरूपमान्तरं ब्रह्म रूपमयि तेऽवभासते ॥ ३६ ॥

(ப–ரை) **अयि !**=ஹே பகவன் ! **ते**=உம்முடைய **ईदृशीम्**=இம் மாதிரியான **सकलमूर्तिम्**=ஸகுணஸ்வரூபத்தை **ध्यायताम्**=தியானிக் கின்றவர்களும் **उन्मिषन्मधुरताहृतात्मनाम्**—**उन्मिषत्**=அபிவ்யக்தியை யடைந்த **मधुरता**=ஸ்ரீமூர்த்தியின் ஸௌபாக்கியத்தினால் **हृत**=அப ஹரிக்கப்பட்ட **आत्मनाम्**=மனதையுடையவர்களுமான எங்களுக்கு **सान्द्रमोदरसरूपम्**=ஸாந்த்ராநந்தரஸ ரூபமானதும் **ते**=உம்முடைய **रूपम्**=ஸ்வரூபபூதமுமான **ब्रह्म**=ப்ரம்ஹமானது **आन्तरम्**=மனத்தி னலறியக்கூடியதாக **अवभासते** = ப்ரகாசத்தையடைகிறது. க்ஞாதா க்ஞானம் க்ஞேயம் என்ற த்ரிபுடீரூபத்துடன் பின்னமாயும் அபின் னமாயும் தோற்றத்தையடைகிறது. இதனால் ஸவிகல்பஸமாதியா னது சொல்லப்பட்டதாகவாகிறது. மண்ணினால் செய்யப்பட்ட யானையில் "இது யானை" யென்ற தோற்றமேற்பட்டபோதிலுங்கூட மண்ணின் தோற்றமும் ஏற்படுவது எவ்விதமோ இவ்விதமே ப்ரம் ஹமானது த்வைதப்ரபஞ்சரூபமாகத் தோற்றத்தையடைந்தபோதி லுங்கூட அத்வைதமாகவும் இந்நிலையில் தோற்றத்தையடைகிறது என்பது பெறப்பட்டது. (36) (எ–று)

(அ–கை) இப்பொழுது நிர்விகல்ப ஸமாதியின் ஸ்வரூபத் தைக் காட்டுகிறார்—

तत्समास्वदनरूपिणीं स्थितिं त्वत्समाधिमयि विश्वनायक ।
आश्रिताः पुनरतः परिच्युतावारभेमहि च धारणादिकम् ॥

(ப–ரை) **अयि विश्वनायक !**=ஹே ஜகன்னாத! **तत्समास्वदनरूपि-णीम्**—**तत्**=அந்த ப்ரம்ஹத்தினுடைய **समास्वदन**=நன்கு அனுபவத் தின் **रूपिणीम्**=ஸ்வரூபமானதும் **स्थितिम्**=க்ஞாதா, க்ஞேயம் இரண் டுக்கும் (*)க்ஞானரூபத்துடன் அவஸ்தான ரூபமானதுமான **त्व-त्समाधिम्**=உம்மை விஷயமாகக் கொண்ட நிர்விகல்ப ஸமாதியை

(*) உப்புக்கட்டியை ஜலத்தில் கரைத்ததும் அது ஜலமாத்திரமா கவே ஆனபொழுது உப்பின் தனியான தோற்றமானது இல்லாது ஜல மாத்திரமாகவே கண்ணுக்கு எவ்விதம் தோற்றுகிறதோ, இவ்விதமே நிர் விகல்பஸமாதிகாலத்தில் க்ஞாதா, க்ஞேயம் என்ற இரண்டும் க்ஞான ஸ்வரூபமான ப்ரம்ஹத்துடன் கலந்து ப்ரம்ஹமாத்திரமாகவே தோற்று கிறது என்பது கருத்து.

आश्रिता:=அடைந்தவர்களான நாங்கள் **अत:**=இந்நிலையிலிருந்து **[*]परिच्युतौ सत्याम्**=நழுவுதலேற்பட்டதும் **पुन:**=மறுபடியும் **धारणादिकम्**=தாரணை தியானம் ஸமாதி இவற்றை **आरभे महि**=ஆரம்பம் செய்யக்கடவோமாக. (37) (எ–று)

(அ–கை) ஸமாதி ஜயமேற்பட்டதும் ப்ராப்தமாகும் ஜீவன் முக்திநிலையை இதனாலுபதேசிக்கிறார்—

इत्थमभ्यसननिर्भरोल्लसत्त्वत्परात्मसुखकल्पितोत्सवाः ।
मुक्तभक्तकुलमौळितां गताः सञ्चरेम शुकनारदादिवत् ॥

(ப–ரை) [**वयम्**=நாங்கள்] **इत्थमभ्यसननिर्भरोल्लसत्त्वत्परात्मसुखकल्पितोत्सवास्सन्तः—इत्थम्**=இதுவரை சொன்னபடி **अभ्यसन**=தாரணை தியானம் ஸமாதி இவற்றின் அப்பியாஸத்தினால் **निर्भर**=அதிகமாக **उल्लसत्**=ஆவிர்பாவத்தையடைந்த **त्वत्परात्मसुख**=உமது ஸ்வரூபபூதமான பரப்ரம்ஹானுபவ மூலமேற்பட்ட ஸுகத்தினால் **कल्पित**=அமைந்த **उत्सवा:**=ஸந்தோஷத்தை யுடையவர்களாய்க் கொண்டும், **मुक्तभक्तकुलमौळिताम्**=முக்தர், பக்தர் இவர்களின் ஸமூஹத்துக்கு ப்ரதானமுக விருத்தியை **गतास्सन्त:**=அடைந்தவர்களாய்க் கொண்டும். **शुकनारदादिवत्**=சுகர் நாரதர் முதலியவர்போல **सञ्चरेम**=ஸஞ்சரிப்போமாக. (38) (எ–று)

குறிப்பு—ப்ரம்ஹ ஸாக்ஷாத்காரமேற்பட்டதும் அக்ஞானம், அதன் காரியமான ஸஞ்சிதகர்மங்கள், ஸம்சயவிபர்யயங்கள் ஆகிய இவையாவும் பாதிக்கப்பட்டு விடுவதால் ப்ரம்ஹநிஷ்டர்கள் ஸமஸ்தமான பந்தங்களுமற்றவர்களாகவாகிவிடுகின்றனர் தானுயினும் ப்ரா

---

[*] நிர்விகல்பஸமாதிக்கு லயம், விக்ஷேபம் கஷாயம், ரஸாஸ்வதம் இவை ரூபங்களான நான்கு விக்னங்களுண்டு. அவற்றுள் லயமாவது—நித்திரை, விக்ஷேபமாவது பிறவற்றைப் பற்றுதல், கஷாயமாவது விஷயவாஸனையினுல் ஸ்தம்பித்துவிடல், ரஸாஸ்வாதமாவது ஸவிகல்ப ஸமாதியிலுண்டான ஆனந்தானுபவம் இவையாம். ஆகவே இந்தத் தோஷங்களினுல் நிர்விகல்ப ஸமாதியிலிருந்து நழுவுதலேற்படுமாயின் திரும்பவும் தாரணை தியானம் ஸமாதி இவற்றையே ஆரம்பிக்க வேண்டும் என்பது பெறப்பட்டது. எப்பொழுது சித்தமானது இந்தத் தோஷமற்றதாய் அந்நிலையிலிருந்து அசையாது ப்ரம்ஹமாத்திரமாக ஆகிறதோ அப்பொழுது அந்நில நிர்விகல்பஸமாதி எனப்படுகிறது என்றும்.

ரப்தகர்மங்கள் எதுவரை முடியாதிருக்கின்றனவோ அதுவரை முந்தின வாஸனையினுல் கர்மங்களின் அனுஷ்டானமும், அவற்றின் பலானுபவமும் இருக்கவேதான் செய்யும். ஆனுல் "இது இந்திர ஜாலம்" எனவறிந்தவன் அந்த இந்திர ஜாலத்தைப் பார்ப்பினுங் கூட உண்மை யென்ற எண்ணத்துடன் அதைப் பார்க்கமாட்டான் அதுபோலவே இந்த முக்தர்களும், உலக வியவஹாரம் ப்ரம்ஹக்ஞானத்தால் பாதிக்கப்பட்டிருப்பதால் அதை உண்மையானதன்று எனப் பார்க்கின்றவர்களாய் ப்ராரப்த்தகர்ம நாசமேற்படும்வரை கொஞ்சகாலம் உலகில் ஸஞ்சரித்தே வருவர். இதுவேதான் ஜீவன் முக்தாவஸ்தையெனப்படுகிறது. சுகர், நாரதர் முதலியோர் அந்த ஜீவன் முக்தாவஸ்தையை அடைந்தவர்களாவர். ஆகவே ஹே பகவன்! நாங்களும் உமது கிருபைக்குப் பாத்திரர்களாகவாவோமாயின் அத்தகைய ஜீவன் முக்த நிலையையடைந்து உலகில் ஸஞ்சரித்து வருவோம். (எ–று)

(அ–கை) நாரதாதிகளுக்கு ப்ராரப்த்தகர்ம நாசமேற்பட்டதும் தேஹபாதமிருப்பினுங்கூட வேறு தேஹப்ராப்த்தியானது பாகவதாதிகளில் சொல்லப்பட்டிருப்பதால் ப்ரம்ஹ க்ஞானத்துக்குப் பிறகு ப்ராரப்த்த கர்மத்தின் முடிவில் முக்தியேற்படுகிறது என்று சொன்னது எவ்விதம் பொருந்தும் எனவாசங்கித்து ஸமாதி ஜயத்தையடைந்த அத்தகைய மஹான்களுக்குத் தமது இஷ்டப்படிக்கான கதியுண்டு என்பதை இது முதல் ஏழு சுலோகங்களினுலுப தேசிக்கிறார்—

त्वत्समाधिविजये तु यः पुनर्मङ्क्षु मोक्षरसिकः क्रमेण वा ।
योगवह्यमनिलं षडाश्रयैरुन्नयत्यज सुषुम्नया शनैः ॥ ३९ ॥

(ப–ரை) **अज** !=ஹே அஜ! **त्वत्समाधिविजये**—**त्वत्**=உம்மிடத்தில் செய்யப்பட்ட **समाधि**=ஸமாதியின்=(சித்தை காக்கிரியத்தின்) **विजये**=விஜயமானது=காற்றில்லாத விடத்திலுள்ள **விளக்குப்போல** அனுயாஸமாக நீண்டகால மிருத்தலானது, ஏற்பட்டதும் **यः पुनः**=எவர் **मङ्क्षु**=சீக்கிரமாகவே **मोक्षरसिकः**=மோக்ஷத்தில் பற்றுள்ளவரோ, அதாவது:—ஸத்யோமுக்தியில் ஆக்ரஹ (வேக) முடையவரோ, **वा**=அல்லது, **यः**=எவர் **क्रमेण**=க்ரமமுக்தியில் ஆக்ரஹ(வேக)

முடையவரோ அவ்விருவரும் **योगवश्यम्**—**योग**=ப்ராணயாமதகி னல் **वश्यम्**=வசப்பட்ட **अनिलम्**=வாயுவை **षडाश्रयै:**=*மூலாதாரம், ஸ்வாதிஷ்டானம், மணிபூரகம் அனுஹதம், விசுத்தி, ஆக்ஞா என்ற ஷடாதாரங்கள் மூலம் **सुषुम्नया**=சுஷும்ன நாடிவழியாக **शनै:**=க்ரம மாய் **उन्नयति**=மூர்த்தஸ்தானத்தையடையுப்படி செய்கிறார். (39)

(அ—கை) சுஷும்ன நாடி வழியாக ப்ராணவாயுவை மூர்த்த ஸ்தானத்துக்குக் கொண்டுவருதல் க்ரமமுக்தியை யடைகின்றவர்க் கும், ஸத்யோமுக்தியை யடைகின்றவர்க்கும பொதுவாகவுள்ளது. இதற்குப் பிறகு வித்தியாஸமுண்டு என்பதை இதனால் சொல்லு கிறார்—

लिङ्गदेहमपि सन्त्यजन्नथो लीयते त्वयि परे निराग्रहः ।
ऊर्ध्वलोककुतुकी तु मूर्धतः सार्धमेव करणैर्निरीयते ॥ ४० ॥

(ப—ரை) **निराग्रह:**=ஸத்யோமுக்தியில் ஆக்ரஹம்(ஆவல்)உள் ளவர் **अथो**=பிறகு அதாவது:—வாயுவை மூர்த்தஸ்தானத்துக்குக் கொண்டுவந்து அரை முஹூர்த்தம் அங்கு தங்கும்படி செய்தபிறகு **लिङ्गदेहमपि**=ஸ்தூலசரீரம், லிங்கசரீரம் இரண்டையும், **सन्त्यजन्**= திரும்பவும் வராதிருப்பதற்குவேண்டி நன்கு பரித்யாகஞ்செய்து **परे**=பரப்ரம்ஹரூபமான **त्वयि**=உம்மிடத்தில், **लीयते**=இரண்டறக் கலக்கிறார். அதாவது:—ஜ்யோதிஸ்ஸானது ஜ்யோதிஸ்ஸில் கலப் பதுபோல உம்முடன் கலக்கிறார் என்றும். **ऊर्ध्वलोककुतुकी तु**= ப்ரம்ஹாதிலோகானுபவத்தில் ஆவல் கொண்டவரோவெனில் **कर-णैस्सार्धम्**=இந்திரியங்களுடன் கூடவே அதாவது:—பஞ்சப்ராணன் மனஸ் புத்தி பத்து இந்திரியங்கள் இவற்றின் ஸமுதாயரூபமான லிங்கசரீரத்துடன் கூடவே என்றும். **मूर्धत:**=ப்ரம்ஹரந்ரத்தைப் பிளந்துகொண்டு **निरीयते**=செல்லுகிறார். அதாவது:—ப்ரம்ஹரந் ரத்தின் உள்ளிலிருக்கின்ற ஸுஷும்ன நாடிக்கும் சூரியனுடைய கிரணங்களுக்கும் ஸம்பந்தமானது நித்யமாக இருப்பதால் ஜீவன் அவ்வழியாக ப்ரம்ஹரந்ரத்தை யடைந்து அங்கிருந்து வெளிக்

---

* மூலாதாரம் முதல் ஆக்ஞை முடியவுள்ள 6 ஸ்தானங்கள் இன் னின்ன வென்பதை பாகவதம் 11வது ஸ்கந்தமொழி பெயர்ப்பில் 176-வது பக்கத்திற் காண்க.

கிளம்புகின்ற சூரிய கிரணங்களுடன் கூட வெளியிற் செல்லுகின்றான் என்றும். (40) (எ–று)

(அ–கை) இதன் பிறகு அக்னியாதிகளான ஆதிவாஹிகதேவதைகளைக் கடந்து செல்லும் முறையை யுபதேசிக்கிறார்—

अग्निवासरवळर्क्षपक्षगैरुत्तरायणजुषा च दैवतैः।
प्रापितो रविपदं भवत्परो मोदवान् ध्रुवपदान्तमीयते॥ ४१ ॥

(ப–ரை) **अग्निवासरवळर्क्षपक्षगैः**=அக்னி, பகல், சுக்கிலபக்ஷம் இவற்றை யடைந்த **दैवतैः**=தேவதைகளினாலும், **उत्तरायणजुषा**=உத்தராயணமாகிற ஆறுமாஸங்களை யடைந்த தேவதையினாலும் **रवि-पदम्**=ஜ்யோதிர்ம சக்கிரரூபமான சூரியமண்டலத்தை **प्रापितः**=அடைவிக்கப்பட்ட ஜீவன் **भवत्परः**=உம்மையே ப்ரதானமாகக் கொண்டும் **मोदवान्**=அந்தந்த தேவதைக்குத் துல்லியமான போகானுபவத்தினால் ஸந்தோஷாதிசயமுள்ளவனுய்க் கொண்டும் **ध्रुवपदान्तम्**=த்ருவலோகத்தின் முடிவு எல்லைவரை **ईयते**=செல்லுகிறான். (41) (எ–று)

குறிப்பு:— அக்னி முதலிய தேவர்கள், இந்த ஜீவனைக் கையிலுள்ள பொம்மையைப் போலத்தூக்கிச் சென்று ப்ரம்ஹலோகத்தில் சேர்க்கின்றனர். அதாவது:-முதலில் அக்னியபிமானி தேவதையானது ஸ்வேச்சையாகச் சரீரத்தை விட்டு சூரியனுடைய கிரணம் வழியாக வெளியேறின ஜீவனை அக்னிலோகம் வழியாக அழைத்துச் சென்று பகலுக்கு அபிமானியான தேவதையின் கையில் சேர்க்கிறது. அந்தப் பகலபிமானி தேவதையானது உத்தராயணரூபமான ஆறுமாஸங்களுக்கு அபிமானியான தேவதையின் கையில் சேர்க்கிறது. அந்தத் தேவதையானது ஸம்வத்ஸராபினி தேவதையின் கையில் சேர்க்கிறது. அந்தத் தேவதையோ தேவலோகம் வழியாகக் கொண்டுபோய் வாயுதேவதையின்கையில் சேர்க்கிறது. அந்தவாயுதேவதையோ தனது லோகம் வழியாசு அழைத்துச் சென்று ஆதித்யன் என்ற தேவதையின் கையில் சேர்க்கிறது. அந்த ஆதித்யதேவதையோ தனது மண்டலம் வழியாகச்செல்லும் ஜீவனைத் தனது லோகம் வழியாகக்கொண்டுபோய் சந்திர தேவதையின் கையில் சேர்க்கிறது. அந்தச் சந்திரதேவதையோ தனது லோகம் வழியாக அழைத்துச் சென்று வித்யுத் என்ற லோகத்தையடையச்

செய்கிறது. அங்கிருந்து துருவலோகம் முடியச்செல்லுகிறான் என்று சொன்னதாகக் கொள்ளவும். (எ–று)

आस्थितोऽथ महरालये यदा शेषवक्त्रदहनोष्मणार्द्यते ।
ईयते भवदुपाश्रयस्तदा वेधसः पदमतः पुरैव वा ॥ ४२ ॥

(ப–ரை) **अथ**=த்ருவனுடைய பதத்தை யடைந்தபிறகு **महरालये**=கல்பம் முடிய ஆயுளுள்ளவர்களான ப்ருக்வாதி மஹருஷிகளின் நிவாஸஸ்தானமான மஹர்லோகத்தில் **आस्थितः**=சுகமாக வஸிக்கின்றவனுய் **यदा**=எந்தக்காலத்தில் **शेषवक्त्रदहनोष्मणा—शेषवक्त्र**=ஆதிசேஷனுடைய வாயிலிருந்து மூவ்வுலகங்களையும் பொசுக்கவேண்டி வெளிவந்த மேல் நோக்கின ஜ்வாலையுள்ள **दहन**=அக்னியின் **ऊष्मणा**=சூட்டினுல் **अर्द्यते**=பீடிக்கப்படுகின்றனே=அக்னியினுல் மூவ்வுலகமும் பொசுக்கப்படுவதைக் கண்டு அந்தத் தீயின் வெப்பத்தினுல் எப்பொழுது பீடிக்கப்படுகின்றனே, **तदा**=அப்பொழுது **भवदाश्रयः**=உம்மையே சரண்புகுந்தவன், **वेधसः**=ப்ரம்ஹதேவனின் **पदम्**=ஸ்தானத்தை **ईयते** = அடைகிறான். பிருக்வாதி மஹருஷிகளுடன் கூட ஜனலோகத்தையும் தபோலோகத்தையும் தாண்டி ப்ரம்ஹதேவனின் ஸபையை யடைகிறான். **वा**=அல்லது **अतः पुरैव**=ஆதிசேஷனுடைய முகத்தினின்றும் வெளிவந்த அக்னியினுல் பீடையேற்படுவதற்கு முந்தியே தனது இஷ்டப்படியாவது ப்ரம்ஹ ஸபையை யடைகிறான். (42) (எ–று)

குறிப்பு—இந்த உபாஸக ஜீவன் சீக்கிரமாக அந்த ப்ரம்ஹ ஸபையை யடைய விரும்புவானுயின் அப்பொழுது வித்யுத்லோகம் வரைவந்த இவனை, ப்ரம்ஹதேவனின் ஆக்ஞையை யொட்டிவந்த அமானவபுருஷனெருவன் வித்யுத்லோகமார்க்கத்தினுலும் இந்திரன் ப்ரஜாபதி இவர்களினுலக வழியினுலும் அழைத்துப்போய் விரஜா நதியைத் தாண்டுவித்து ப்ரம்ஹலோகத்தை யடையச்செய்விக்கிறான். அங்கு இவன் திவ்யசரீரமுள்ளவனுகவாகிறான். (எ–று)

(அ–கை) பின்னர் ப்ரம்ஹலோகத்தை யடைந்தவர்களுக்கு வரும் இரண்டுவிதமான கதியைச் சொல்லுகிறார்—

तत्र वा तव पदेऽथवा वसन् प्राकृतप्रळय एति मुक्तताम् ।
स्वेच्छया खलु पुरापि मुच्यते संविभिद्य जगदण्डमोजसा ॥

(ப–ரை) இவ்விதம் ஸத்தியலோகத்தை யடைந்தவன் **तत्रवा**= அந்த ப்ரம்ஹலோகத்திலாவது, **अथवा**=அல்லது **तव**=உம்முடைய (*)**पदे**=விஷ்ணுலோகத்திலாவது **वसन्**=வஸிக்கின்றவனுய் **प्राकृत-प्रळये सति**=ப்ரகிருதிகாரியங்களான மஹத் அஹங்காரம் பஞ்சதன் மாத்திரை முதலியவற்றுக்குத் தத்தமது காரணங்களில் லயமேற் பட்டபொழுது **मुक्तताम्**=முக்தனுக விருத்தலை, **एति**=அடைகிறுன். அதாவது:—ப்ரம்ஹதேவனுடன் கூட முக்தனுக வாகி ப்ரம்ஹமாத் திரமாக வாகிறுன். அல்லது **जगदण्डम्**=ப்ரம்ஹாண்டத்தை **ओज-सा**=தனது யோகபலத்தினுல் **संविभिद्य**=நன்கு பிளந்துகொண்டு **स्वेच्छया**=தனதிஷ்டப்படி மனது இந்திரியம் இவற்றை அங்கு பரித் யாகம் செய்துவிட்டு **पुरापि**=ப்ராகிருத ப்ரளயத்துக்கு முந்தியே **मुच्यते**=முக்தியை யடைந்துவிடுகிறுன். (43) (எ–று)

(அ–கை) இனி ப்ரம்ஹாண்டபேதனம் செய்யும் முறையை யுபதேசிக்கிறுர்—

तस्य च क्षितिपयोमहोनिलद्योमहत्प्रकृतिससप्तकावृतीः ।
तत्तदात्मकतया विशन् सुखी याति ते पदमनावृतं विभो ॥

(ப–ரை) **विभो !**=ஹே விபோ! **तस्य**=அந்த ப்ரம்ஹாண்டத் தினுடைய **क्षितिपयोमहोनिलद्योमहत्प्रकृतिसप्तकावृतीश्च**=பூமி, ஜலம், தேஜஸ், காற்று, ஆகாசம், [*] மஹத்தத்துவம், ப்ரகிருதி=மாயா, என்ற ஏழு ஆவரணங்களையும் **तत्तदात्मकतया**=அதனதன் ஸ்வரூப மாகவிருத்தல் மூலம் **विशन्**=ப்ரவேசித்தவனுயும் (அந்தந்த ஆவரண சரீரகனுகத் தானிருந்துகொண்டும்) **सुखी**=அந்தந்தவிடத்தில் ஒப்

(*) இவ்விதம் சொன்ன இந்தக் கவியின் கருத்து பின்வருமாறு— ஸத்தியலோகத்துக்குள்ளிலேயே ப்ரம்ஹா விஷ்ணு, மஹாதேவன் இவர் களின் லோகங்களிருக்கின்றன. ப்ரம்ஹவிஷ்ணு சிவோபாஸகர்கள் அந் தந்த லோகங்களையடைந்து அவரவர்க்கு ஸமானங்களான போகங்களை யனுபவிக்கின்றனர் என்றும்.

[*] **महत्**=என்றதால் உபலக்ஷணமுறையால் அஹந்தத்துவத் தையும் சேர்த்துப் பொருள் கொள்ளவேண்டும். இதனுல் ஐந்துபூதங்கள் அஹந்தத்துவம் மஹத்தத்துவம் என்ற இவை ஏழும் ஏழு ஆவரணங்களா கவும் ப்ரகிருதியானது எட்டாவது ஆவரணமாகவும் ஏற்பட்டது.

अथ तृतीयोऽध्यायः ॥

श्रीशुक उवाच—एवमेतन्निगदितं पृष्टवान्यद्भवान्मम । नृणां यन्म्रिय-माणानां मनुष्येषु मनीषिणाम् ॥ १ ॥ ब्रह्मवर्चसकामस्तु यजेत ब्रह्मणस्प-

---

பற்ற சுகத்தை யனுபவித்துக்கொண்டும் முடிவில் ப்ராணன் இந்திரியங்கள் இவற்றை அதனதன் காரணங்களில் ஒடுக்கிப் பிறகு அந்த ஆவரணங்களும் அற்றுவிடவே **अनावृतम्**=எவ்வித ஆவரணமுமற்ற **ते**=உம்முடைய **पदम्**=ஸ்வரூபத்தை=ப்ரம்ஹமாத்திரமாக இருத்தலை **याति**=அடைகிறான். (44) (எ–று)

(அ–கை) இவ்விதம் முக்தியை யடைந்தவன் திரும்பவும் ஸம்ஸாரத்தையடைவதில்லை என்பதைத் தெரிவிக்கிறார்—

अर्चिरादिगतिमीदृशीं व्रजन् विच्युतिं न भजते जगत्पते ।
सच्चिदात्मक भवद्गुणोदयानुच्चरन्तमनिलेश पाहि माम् ॥४५॥

(ப–ரை) **सच्चिदात्मक !**=ஸத்சித்ரூபியான ! **अनिलेश !**=குருவாயூருக்கு ஈசனே ! **ईदृशीम्**=இம்மாதிரியான **अर्चिरादिगतिम्**=அர்ச்சிஸ்ஸை முதலில்கொண்ட கதியை **व्रजन्**=அடைந்த ஜீவன் **विच्युतिम्**=திரும்பி வருதலை **न भजते**=அடைவதில்லை. **जगत्पते !**=ஜகத்பதியான ஹே கிருஷ்ண ! **भवद्गुणोदयान्**=உமது குணைதயங்களை **उच्चरन्तम्**=சொல்லுகின்ற **माम्**=எனை **पाहि**=ஆதிவியாதி ஸங்கடங்களிலிருந்து காப்பீராக. (45) (எ–று)

இவ்விதம் அஷ்டாங்கயோக வர்ணனமும், யோகஸித்தி வர்ணனமும் என்ற ஐந்து ஸ்லோகங்கள் அதிகமுள்ள
நான்காவது தசகம் முற்றிற்று.

மூன்றுவது அத்தியாயம்.

(அ–கை) **तृतीये विष्णुभक्तेस्तु वैशिष्ट्यं शृण्वतो मुनेः ।**
भक्त्युद्रेकेण तत्कर्मश्रवणाद्र ईर्यते ॥ १ ॥

(க–ரை) இந்த மூன்றுவது அத்தியாயத்தில் முனியான சுகாசாரியரிடமிருந்து விஷ்ணுபக்தியின் மேன்மையைக்கேட்கின்ற பரீ

तिम्। इन्द्रमिन्द्रियकामस्तु प्रजाकामः प्रजापतीन्॥ २॥ देवीं मायां तु श्रीकामस्तेजस्कामो विभावसुम्। वसुकामो वसून्रुद्रान्वीर्यकामोऽथ वीर्यवान॥ ३॥ अन्नाद्यकामस्त्वदितिं स्वर्गकामोऽदितेः सुतान्। विश्वान्देवान्राज्यकामः साध्यान्संसाधको विशाम्॥ ४॥ आयुष्कामोऽश्विनौ देवौ पुष्टिकाम इलां यजेत्। प्रतिष्ठाकामः पुरुषो रोदसी लोकमातरौ॥ ५॥

க்ஷித் ராஜனுக்குப் பக்திப்பெருக்குடன் விஷ்ணுவின் சரித்திரத்தை ஸ்ரவணஞ் செய்வதிலுள்ள ஆதரவின் ஆவஸ்ய கதையானது சொல்லப்படுகிறது. (1) (எ–று)

ஸ்ரீசுகர் சொல்லலுற்றார்—ஏதோ வொரு புண்ணியகர்ம விசேஷத்தினல் மனுஷ்யப் பிறவியையடைந்த ஜீவர்களுக்குள் புத்திமான்களுடையவும், அதிலும் மரிக்கும் தருணத்திலுள்ள மனிதர்களுடையவுமான எந்தக் கிருத்யத்தைப் பற்றி நீ என்னைக் கேட்டனையோ அந்த இது இவ்விதமென அதாவது:—ஹரிகதாஸ்ரவணரூபமென, உனக்கு என்னல் சொல்ல (விதிக்க) ப்பட்டது. (1) ப்ரம்ஹதேஜஸ்ஸில் காமனையுள்ளவன் வேதத்துக்குப் பதியான ப்ரம்ஹதேவனையும், இந்திரியங்களின சக்தியாதிக்கியத்தில் காமனையுள்ளவன் இந்திரனையும், ப்ரஜையில் காமனையுள்ளவன் தக்ஷர் முதலிய ப்ரஜாபதிகளையும் ஆராதிக்கவேண்டும். (2) ஸ்ரீயில் காமனையுள்ளவன் துர்க்காதேவியையும், தேஜஸ்ஸில் காமனையுள்ளவன் அக்னியையும், தனத்தில் காமனையுள்ளவன் வஸுக்களையும், வீர்ய(ப்ரபாவ)த்தில் காமனையுள்ளவன் வீரியமுள்ளவனுக (இந்திரியஜயமுள்ளவனுக) இருந்துகொண்டு ஏகாதச ருத்திரர்களையும் ஆராதிக்கவேண்டும். (3) அன்னத்திலும், பக்ஷ்யத்திலும் காமனையுள்ளவன் அதிதியையும், ஸ்வர்க்கத்தில் காமனையுள்ளவன் அதிதியின் புத்திரர்களான துவாதசாதித்யர்களையும், ராஜ்யத்தில் காமனையுள்ளவன் விஸ்வதேவர்களையும், ப்ரஜைகளை ஸ்வாதீனமாக்க விருப்பமுள்ளவன் ஸாத்தியர்களையும். (4) ஆயுர்விருத்தியில் காமனையுள்ளவன் அஸ்வினீதேவர்களையும், தேஹபுஷ்டியில் காமனையுள்ளவன் பூமிக்கு அபிமானிதேவதையையும், ஒரு ஸ்தானத்தில் நிலைத்திருக்க விரும்புகின்ற புருஷன் லோகமாதாக்களான த்யாவாபூமீ என்ற தேவதைகளையும், ஆராதிக்கவேண்டும். (5) நல்ல ரூபத்தில் காமனையுள்ள

रूपाभिकामो गन्धर्वान्स्त्रीकामोऽप्सर उर्वशीम् । आधिपत्यकामः सर्वेषां यजेत परमेष्ठिनम् ॥ ६ ॥ यज्ञं यजेद्यशस्कामः कोशकामः प्रचेतसम् । विद्याकामस्तु गिरिशं दाम्पत्यार्थ उमां सतीम् ॥ ७ ॥ धर्मार्थ उत्तमश्लोकं तन्तुं तन्वन्पितॄन्यजेत् । रक्षाकामः पुण्यजनानोजस्कामो मरुद्गणान् ॥ ८ ॥ राज्यकामो मनून्देवान्निर्ऋतिं त्वभिचरन्यजेत् । कामकामो यजेत्सोममकामः पुरुषं परम् ॥ ९ ॥ अकामः सर्वकामो वा मोक्षकाम उदारधीः । तीव्रेण भक्तियोगेन यजेत पुरुषं परम् ॥ १० ॥ एतावानेव यजतामिह

வன் கந்தர்வர்களையும், சிறந்த ஸ்திரீயில் விருப்பமுள்ளவன் அப்ஸரஸ்ஸான ஊர்வசியையும், எல்லாவற்றுக்கும் ஆதிபத்யத்தில் காமனையுள்ளவன் ப்ரம்ஹதேவனையும், (6) யசஸ்ஸில் காமனையுள்ளவன் யக்ஞாபிமானியான விஷ்ணுவையும், கோசத்தில் (பணக்குவியலில்) காமனையுள்ளவன் வருணனையும், வித்யையில் காமனையுள்ளவன் மஹாதேவனையும், தம்பதிகளுக்குள் பரஸ்பரப்ரீதியை விரும்புகின்றவன் ஸதியான உமையவளையும், ஆராதிக்கவேண்டும். (7) தர்மத்தில் காமனையுள்ளவன் உத்தமஶ்லோகனான விஷ்ணுவையும், ஸந்ததிவிருத்தியில் விருப்பமுள்ளவன் பிதிருக்களையும், எந்தத் தீங்கும் வராதிருக்க விரும்புகின்றவன் யக்ஷர்களையும், வலுவில் விருப்பமுள்ளவன் தேவக்கூட்டங்களையும் ஆராதிக்கவேண்டும். (8) ராஜ்யத்தை விருக்கவிரும்புகின்றவன் மன்வந்தரபாலகர்களான தேவர்களையும், சத்துருமரணத்தில் விருப்பமுள்ளவன் நிருருதி என்ற ராக்ஷஸனையும், போகத்தில் விருப்பமுள்ளவன் ஸோமன் என்ற தேவனையும், வைராக்கியத்தில் விருப்பமுள்ளவன் ப்ரகிருதி ஸம்பந்தமற்ற புருஷனையும் ஆராதிக்கவேண்டும். (9)

ஏகாந்த பக்தனாகவோ, இதுவரை சொல்லப்பட்டதும் சொல்லப்படாததுமான ஸர்வபதார்த்தங்களிலும் காமனையுள்ளவனாகவோ, மோக்ஷத்தில் காமனையுள்ளவனாகவோ உள்ள உதாரபுத்திபடைத்தவன் தீவ்ரமான பக்தியோகத்தினால் எங்கும் நீக்கமற நிறைந்த பரமாத்மாவை ஆராதிக்கவேண்டும். (10) தனிப்பட்ட அந்தந்தத் தேவதைகளை யஜிப்பவர்க்கு அதன்மூலம் பகவதர்களின் ஸங்கமேற்பட்டு பகவானிடத்தில் நிலைத்த பக்தியானது உண்டாகிறது

निःश्रेयसोदयः। भगवत्यचलो भावो यद्भागवतसङ्गतः॥ ११ ॥ ज्ञानं यदा प्रतिनिवृत्तगुणोर्मिचक्रमात्मप्रसाद उत यत्र गुणेष्वसङ्गः। कैवल्यसंमतपथस्त्वथ भक्तियोगः को निर्वृतो हरिकथासु रतिं न कुर्यात् ॥ १२ ॥

शौनक उवाच—इत्यभिव्याहृतं राजा निशम्य भरतर्षभः। किमन्यत्पृष्टवान्भूयो वैयासकिमृषिं कविम् ॥ १३ ॥ एतच्छुश्रूषतां विद्वन्सूत नोऽर्हसि भाषितुम्। कथा हरिकथोदर्काः सतां स्युः सदसि ध्रुवम् ॥१४॥ स वै भागवतो राजा पाण्डवेयो महारथः। बालक्रीडनकैः क्रीडन्कृष्णक्रीडां य आददे ॥ १५ ॥ वैयासकिश्च भगवान्वासुदेवपरायणः। उरुगाय-

---

என்பது யாதுண்டோ இதுவேதான் பரமபுருஷார்த்தத்தின் லாபமாகவாகும். மற்ற ஸ்வர்க்காதிபலன் உபயோகமற்றதாகவாகும்.(11) எந்த ஹரிகதைகள் மூலம் குணோர்மிகளாகிற ராகத்வேஷாதி ஸமூதாயத்துக்கு எல்லாவிஷயங்களினின்றும் நிவிருத்தியும், அதன்மூலம் க்ஞானமுமுண்டாகிப் பிறகு மனத்தில் தெளிவும், அந்த மனத் தெளிவு காரணமாய் விஷயங்களில் வைராக்கியமும், பிறகு கைவல்ய மென்றே யாவராலு மொப்பப்பட்ட வழியான பக்தியோகமும் உண்டாகிறதோ அந்த ஹரிகதைகளில் ப்ரவணதிகளினுல் சுகத்தை யடைந்த எவன்தான் ஆசையையடையாதிருப்பான் என்றூர். (12)

சௌனகர் சொல்லலுற்றூர்—பரதம்ரேஷ்டனான அரசன் இவ்விதம் சுகாசாரியராற் சொல்லப்பட்டதைக்கேட்டு வியாஸகுமாரரும் கவியும், சப்தப்ரம்ஹ நிஷ்ணுதருமான ருஷியை (ப்ரம்ஹக்ஞானியான சுகரை) திரும்பவும் வேறு எதைக் கேட்டார். (13) ஹேவித்வன்! சூத! கேட்க ஆவல் கொண்ட எங்களுக்கு இதைச் சொல்ல நீரே தகுந்தவராகவாகிறீர். ஸாதுக்களான பாகவதர்களின் ஸபையில் பகவத்கதையை உத்தரபலனுகவுடைய கதைகள் (ஸம்பாஷணைகள்) ஏற்படுவது நிஸ்சயமன்றே? (14) குழந்தைகளுக்குரிய விளையாட்டுக் கருவிகளுடன் விளையாடின எவர் ஸ்ரீகிருஷ்ணனுடைய பூஜாதிரூபமானவிளையாட்டையே பின்பற்றினரோ பாண்டுவின் வம்சத்திற் பிறந்தவரும், மஹாரதருமான அந்த அரசரோ பரமபாகவதராவார். (15) பகவானான வியாஸகுமாரரோ வாஸுதேவனிடத்திலேயே ஈடுபட்டவர். ஆகவே இத்தகைய ஸாதுக்

गुणोदाराः सतां स्युर्हि समागमे ॥ १६ ॥ आयुर्हरति वै पुंसामुद्यन्नस्तं च यन्नसौ। तस्यर्ते यत्क्षणो नीत उत्तमश्लोकवार्तया ॥ १७ ॥ तरवः किं न जीवन्ति भस्त्राः किं न श्वसन्त्युत। न खादन्ति न मेहन्ति किं ग्राम्यपशवोऽपरे ॥ १८ ॥ श्वविड्वराहोष्ट्रखरैः संस्तुतः पुरुषः पशुः। न यत्कर्णपथोपेतो जातु नाम गदाग्रजः ॥१९॥ बिले बतोरुक्रमविक्रमान्ये न शृण्वतः कर्णपुटे नरस्य। जिह्वाऽसती दार्दुरिकेव सूत न चोपगायत्युरुगायगा-

---

களின் ஸமாகமத்தில் (சேர்க்கையில்) உருகாயனை பகவானுடைய குணங்களினால் சிறந்தவைகளான கதைகள் நடந்திருக்குமன் றே. (16) *எவன் ஒருக்ஷணகாலத்தையாவது உத்தமச்லோகனை பகவானுடைய லீலாச்ரவணமூலம் போக்குகின்றானே அவனது ஆயுளைத்தவிர்த்து மற்றவர்களின் ஆயுளை உதயமாகின்றவனும் அஸ்தமனமடைகின்றவனுமான இந்தச் சூரியன் (வீணாகவே) அபஹரித்துவிடுகிறான். (17) (*)மரங்கள் ஜீவிக்கவில்லையா? (அவற்றுக்கு ச்வாஸமில்லையே எனின்?) துருத்திகள் மூச்சுவிடவில்லையோ? (அவற்றுக்கு ஆஹாராதிகள் இல்லையே எனின்?) கிராமத்திலுள்ள பசுக்களும், பசு தல்லியர்களான பிறரும் ஆஹாராதிகளை யுட்கொள்ளவில்லையா? வீரியத்தை வெளிவிடவில்லையா? (18) எவனுடைய கர்ண மார்க்கத்தைக் கதாக்ரஜனை பகவான் ஒரு பொழுதேனும் அடையவில்லையோ, அவன் நாய்க்கும், மலம் தின்னும் பன்றிக்கும், ஒட்டகைக்கும் கழுதைக்கும் ஒப்பான புருஷரூபமான பசுவேயாவான். (19)

[*]மனிதனுடைய எந்தக்கர்ணபுடங்கள் உருக்ரமனை பகவானுடைய லீலைகளைக் கேட்கவில்லையோ அவை பயனற்ற ஓட்டைகளே யாகும். ஹே சூத! உருகாயனை பகவானுடைய கதைகளைச் சொல்லாத கெட்ட நாக்கானது வீணாகக் கூச்சலிடும் தவக்

---

* மேலும் வீணாகவே செல்லுகின்ற ஆயுளை ஹரியின் கதையினால் ஸபலமாகச் செய்வீராக என மூன்று சுலோகங்களினாலுபதேசிக்கிறார். (*) ஜீவித்திருத்தலே அவர்களது ஆயுளின் பலனாகவாகாதோ எனின்? ஆகாது என்கிறார். [*] பக்தியற்றவனுடைய அங்கங்களும் வீணே என இது முதல் ஐந்து சுலோகங்களினால் உபதேசிக்கிறார்.

था:॥ २० ॥ भार: परं पट्टकिरीटजुष्टमप्युत्तमाङ्गं न नमेन्मुकुन्दम्। शावौ करौ नो कुरुत: सपर्यां हरेर्लसत्काञ्चनकङ्कणौ वा॥ २१ ॥ बर्हायिते ते नयने नराणां लिङ्गानि विष्णोर्न निरीक्षतो ये। पादौ नृणां तौ द्रुमजन्मभाजौ क्षेत्राणि नानुव्रजतो हरेर्यौ॥ २२ ॥ जीवञ्शवो भागवताङ्घ्रिरेणुं न जातु मर्त्योऽभिलषेत यस्तु। श्रीविष्णुपद्या मनुजस्तुलस्या: श्वसन् शवो यस्तु न वेद गन्धम्॥ २३ ॥ तदश्मसारं हृदयं बतेदं यद्गृह्यमाणैर्हरिनामधेयै:। न विक्रियेताथ यदा विकारो नेत्रे जलं गात्ररुहेषु हर्ष:॥ २४ ॥

களையின் நாக்குப்போலவேயாகும். (20) தலையானது பட்டுவஸ்திரத்தினாற் செய்யப்பட்ட முண்டாசுடனும், கிரீடத்துடனும் கூடினதாக இருந்தபோதிலுங்கூட முகுந்தனை வணங்காவிடில் கேவலம் சுமையேயாகும். கைகள் விளங்குகின்ற பொன்மயமான கங்கணங்களை யுடையனவாயினுங்கூட ஹரியினது பூஜையைச் செய்யாவிடில் அவை பிணத்தின் கைகளே யாகும். (21) மனிதர்களின் எந்தக் கண்கள் விஷ்ணுவின் மூர்த்திகளைப் பார்க்கவில்லையோ அவை மயில்தோகையிலுள்ள கண்களேயாகும். மனிதர்களின் எந்தப் பாதங்கள் ஹரியினது க்ஷேத்திரங்களை யடையவில்லையோ அவை மரத்தின் வேருக்குத் துல்லியங்களேயாகும்.(22) எந்த மனிதன் பாகவதர்களின் சரணதூளியில் ஒருபொழுதேனும் ஆவல்கொள்ளாதிருக்கின்றானே அவன் உயிருடனிருக்கும் பிணமேயாவான். எந்த மனிதன் ஸ்ரீவிஷ்ணுவின் சரணத்தில் ஸம்பந்தத்தையடைந்த துளஸியினுடைய மணத்தை முகராதிருக்கின்றானே அவன் மூச்சுவிடுகின்ற பிணமேயாவான். (23) எந்த ஹிருதயமானது, கேட்கப்படுகின்ற ஹரியின் நாமதேயங்களினால் நேத்திரத்தில் ஜலம், சரீரத்திலுள்ள உரோமங்களில் சிலிர்ப்பு என்ற விகாரமானது (மாறுபாடானது) எப்பொழுது காணப்படுகிறதோ அப்பொழுதுகூட. உருக்கத்தையடையாதிருக்குமோ அந்த இந்தச் சித்தமானது கல்லுப்போலக் கடினமானதேயாகும். கஷ்டம். (24) ஹேஅங்க! நீர் மனத்துக்கு ப்ரியமானவார்த்தையைப் பேசுகின்றீர். ஆதலால் பாகவதப்ரதானரும் ஆத்மவித்யாநிபுணரும் வியாஸகுமாரருமான சுகாசாரியர் அரசனால் நன்கு கேட்கப்பட்டவராய்க்கொண்டு

अथाभिधेह्यङ्ग मनोनुकूलं प्रभाषसे भागवतप्रधानः। यदाह वैयासकिरात्म विद्याविशारदो नृपतिं साधुपृष्टः॥ २५ ॥

इति श्रीमद्भागवते महापुराणे द्वितीयस्कन्धे श्रोतृश्रद्धानिरूपणं नाम तृतीयोऽध्यायः ॥ ३ ॥

अथ चतुर्थोऽध्यायः ॥

सूत उवाच—वैयासकेरिति वचस्तत्त्वनिश्चयमात्मनः। उपधार्य मतिं कृष्ण औत्तरेयः सतीं व्यधात् ॥१॥ आत्मजायासुतागारपशुद्रविण-बन्धुषु। राज्ये चाविकले नित्यं विरूढां ममतां जहौ ॥ २ ॥ पप्रच्छ चेम-

---

அரசனைப்பார்த்து எதைச் சொன்னீரோ அதை எங்களுக்குச்சொல் லும் என்றார். (25) (எ–று)

இவ்விதம் ஸ்ரீமத்பாகவத மஹாபுராண த்விதீயஸ்கந்தத்தில் ஸ்ரோத்ருஸ்ரத்தா நிரூபணம் என்ற மூன்றுவது அத்தியாயம் முற்றிற்று.

நான்காவது அத்தியாயம்.

(அ–கை) तुर्ये परीक्षिता पृष्टं सृष्ट्यादि हरिचेष्टितम्।
शुकेन ब्रह्मतत्पुत्रसंवादेनोपवर्ण्यते ॥ १ ॥

(க–ரை) இந்த நான்காவது அத்தியாயத்தில் பரீக்ஷித்தினால் கேட்கப்பட்ட ஸிருஷ்டியை ஆதியாகக்கொண்ட ஹரியின் சேஷ்டிதமானது, ப்ரம்ஹதேவனுக்கும் அவருடையபுத்திரருக்கும் நடந்த ஸம்வாத வர்ணனத்தை முன்னிட்டு ஸ்ரீசுகாசாரியரால் வர்ணிக்கப் படுகிறது. (1) (எ–று)

சூதர் சொல்லலுற்றார்—உத்தரையின் குமாரனை பரீக்ஷித் ராஜன் வியாஸ குமாரரான சுகாசாரியரின் ஆத்மதத்வ நிஶ்சாயக மான இம்மாதிரியான வார்த்தையை மனத்தில் வாங்கி ஸ்ரீகிருஷ்ண னிடத்தில் மாறுத புத்தியைச்செலுத்தினர்.(1) சரீரம், பத்நீ, புத்தி ரன், வீடு, யானைமுதலிய பசு, பணம், பந்து, பரிபூர்ணமான ராஜ்யம் இவற்றில் எப்பொழுதும் வேரூன்றின மமதாபிமானத்தை விட்டு

मेवार्थं यन्मां पृच्छत सत्तमाः। कृष्णानुभावश्रवणे श्रद्दधानो महामनाः॥३॥ संस्थां विज्ञाय संन्यस्य कर्म त्रैवर्गिकं च यत्। वासुदेवे भगवति आत्मभावं दृढं गतः॥ ४ ॥ राजोवाच—समीचीनं वचो ब्रह्मन्सर्वज्ञस्य तवानघ। तमो विशीर्यते मह्यं हरेः कथयतः कथाम् ॥ ५ ॥ भूय एव विवित्सामि भगवानात्ममायया। यथेदं सृजते विश्वं दुर्विभाव्यमधीश्वरैः॥६॥ यथा गोपायति विभुर्यथा संयच्छते पुनः। यां यां शक्तिमुपाश्रित्य पुरुशक्तिः परः पुमान्। आत्मानं क्रीडयन्क्रीडन्करोति विकरोति च ॥ ७ ॥ नूनं भगवतो ब्रह्मन्हरेरद्भुतकर्मणः। दुर्विभाव्यमिवाभाति कविभिश्चापि

விட்டார். (2) ஹே ஸத்தமர்காள்! சிறந்த மனதுள்ளவரும் ஸ்ரீகிருஷ்ணலீலாஸ்ரவணத்தில் ஸ்ரத்தையுள்ளவருமான அரசன் மரணத்தை யறிந்துகொண்டும், தர்மார்த்தகாமரூபமான கர்மம் யாதுண்டோ அதைப் பரித்தியாகஞ் செய்துவிட்டும், வாஸுதேவனை பகவானிடத்தில் நிலைத்த ஆத்மபாவத்தை யடைந்தவராய்க் கொண்டும் என்னிடம் எதை நீங்கள் கேட்டீர்களோ இந்த ஹரி லீலாரூபமான அர்த்தத்தையே சுகரிடம் கேட்டார். (3–4) அரசன் சொல்லலுற்றார்—ஹே ப்ரம்ஹன்! அனக! ஸர்வக்ஞரான நீர் ஹரியினுடைய கதையைச் சொல்லும்பொழுது என்னுடைய அக்ஞானமானது நாசமடைகிறது. ஆகவே உமது வார்த்தையானது வெகு வெகு சிலாக்கியமானதேயாகும். (5) ப்ரம்ஹாதிதேவர்களாலும் கூட ஊஹித்தறியவியலாத இந்த ப்ரபஞ்சத்தைப் பகவான் தனதுமாயையினுல் எவ்விதம் ஸிருஷ்டிக்கிறார் என்பதையும், அதிகம் சக்தியுள்ளவரும் புருஷோத்தமருமான விபுவான ஈஸ்வரன் எந்த எந்தச் சக்தியையவலம்பித்துக்கொண்டு எவ்விதம் காக்கிறார் என்பதையும், திரும்பவும் எவ்விதம் தன்னுள் ஒடுக்கிக்கொள்ளுகிறார் என்பதையும், க்ரீடைசெய்கின்றவராய் என்ன செய்கிறார் என்பதையும், தனது ஆத்மாவை ப்ரம்ஹாதிரூபத்துடன் க்ரீடிக்கச் செய்கின்றவராய் எவ்விதம் பற்பலகாரியத்தைச் செய்கிறார் என்பதையும் மறுபடியுமே அறிந்துகொள்ள ஆவலுள்ளவனாக இருக்கின்றேன். (6–7) ஹே ப்ரம்ஹன்! அத்புதமான கர்மத்தையுடையவரான ஹரியினுடைய லீலையானது கவிகளாலுங்கூட

चेष्टितम् ॥ ८ ॥ यथा गुणांस्तु प्रकृतेर्युगपत्क्रमशोऽपि वा। बिभर्ति भूरि-शस्त्वेकः कुर्वन्कर्माणि जन्मभिः॥ ९ ॥ विचिकित्सितमेतन्मे ब्रवीतु भगवान्यथा। शाब्दे ब्रह्मणि निष्णातः परस्मिंश्च भवान्खलु॥ १० ॥ सूत उवाच—इत्युपामन्त्रितो राज्ञा गुणानुकथने हरेः। हृषीकेशमनुस्मृत्य प्रतिवक्तुं प्रचक्रमे॥ ११ ॥

श्रीशुक उवाच—नमः परस्मै पुरुषाय भूयसे सदुद्भवस्थाननिरोधलीलया। गृहीतशक्तित्रितयाय देहिनामन्तर्भवायानुपलक्ष्यवर्त्मने॥ १२ ॥

ஊஹித்தறியவியலாதது போல விளங்குகின்றது என்பது நிஷ்கிதம். (8) பகவான் புருஷரூபத்தினுல் ஒருவராகவிருந்துகொண்டு ஸிருஷ்டியாதி கர்மங்களைச் செய்வதற்காக ஓரேஸமயத்தில் ப்ரகிருதியின் குணங்கள் யாவையும் கிரஹிப்பதும், ப்ரம்ஹாத்ய வதாரங்களினுல் பலராகவாகி கர்மங்களைச் செய்யவேண்டி கிரமமாகவே பிரகிருதியினுடைய குணங்களைக் கிரஹிப்பதும் எப்படி? (9) பகவானுன நீரோ சப்தப்ரம்ஹ (வேத)த்தில் விசாரத்தினுல் தேற்சிபெற்றவராகவும், பரப்ரம்ஹத்தினிடம் மூதிர்ந்த அனுபவமுள்ளவராகவுமிருப்பதால் இந்த எனது ஸந்தேஹத்துக்கு உள்ளபடி பதில் சொல்லவேண்டும் என்ரூர். (10)

சூதர் சொல்லலுற்ரூர்—ஹரியினுடைய குணங்களைச் சொல்லும் விஷயமாய் இவ்விதம் அரசனுல் ப்ரார்த்திக்கப்பட்ட சுகாசாரியர் ஹிருஷீகேசனைத் தியானித்துக்கொண்டு பதில் சொல்லவாரம்பம் செய்தார். (அதாவது:—தேவதை குரு இவர்களின் நமஸ்காரத்தைச் செய்துகொண்டு ஆரம்பிக்கத் தொடங்கினர் என்பது பொருள்.) (11) ஸ்ரீசுகர் சொல்லலுற்ரூர்—அபரிமிதமான மஹிமையுள்ளவராக இருப்பதுபற்றி பரனும்=ஸர்வோத்தமரும், அதாவது:—ப்ரபஞ்சத்தின் ஸிருஷ்டிஸ்திதிலயங்களில் நிமித்தமான லீலையினுல் கிரஹிக்கப்பட்டமூன்று †சக்திகளையுடையவரும், ஜீவர்களுக்கு அந்தர்யாமியும், ஆனதுபற்றி காணமுடியாத மார்க்கத்தை

---

† ப்ரம்ஹதேவனின் ரூபத்தினுல் ரஜோகுணத்தையும், ஸ்ரீருத்ரருடைய ரூபத்தினுல் தமோகுணத்தையும், விஷ்ணுவின் ரூபத்தினுல் ஸத்துவகுணத்தையும் கிரஹித்தவர் என்பது கருத்து.

भूयोनमः सद्व्रजिनच्छिदेऽसतामसंभवायाखिलसत्त्वमूर्तये। पुंसां पुनः परम हंस्य आश्रमे व्यवस्थितानामनुमृग्यदाशुषे ॥ १३ ॥ नमो नमस्तेऽस्त्वृषभाय सात्वतां विदूरकाष्ठाय मुहुः कुयोगिनाम्। निरस्तसाम्यातिशयेन राधसा स्वधामनि ब्रह्मणि रंस्यते नमः॥ १४ ॥ यत्कीर्तनं यत्स्मरणं यदीक्षणं यद्वन्दनं यच्छ्रवणं यदर्हणम्। लोकस्य सद्यो विधुनोति कल्मषं तस्मै सुभद्रश्रवसे नमो नमः॥ १५ ॥ विचक्षणा यच्चरणोपसादनात्सङ्गं व्युदस्योभयतोऽन्तरात्मनः। विदन्ति हि ब्रह्मगतिं गतक्लमास्तस्मै सुभद्रश्रवसे

யுடையவருமான புருஷனுக்கு நமஸ்காரம். (12) தர்மமார்க்கத்திலுள்ள ஸாதுக்களின் பாபத்தை (துக்கத்தை) ப்போக்குகின்றவரும், அதர்மத்தில் பற்றுள்ளவர்களான அஸாதுக்களின் நாசத்துக்குக் காரணபூதரும், பரிபூர்ணமான ஸத்துவகுணமயமான மூர்த்தியையுடையவரும், ‡பாரமஹம்ஸ்யரூபமான ஆஶ்ரமத்தில் நிலைபெற்றவர்களான புருஷர்களுக்கு அனுத்மபரித்யாக பூர்வகமாய் அடிக்கடி தேடத்தகுந்த ஆத்மதத்துவத்தைத் தருபவருமான பகவானுக்குத் திரும்பவும் நமஸ்காரம். (13) ஸத்வகுணஸம்பன்னர்களான பக்தர்களை அடிக்கடி காப்பவரும், பக்தியற்றவர்களான கெட்டயோகிகளுக்கு வெகுதூரத்திலிருப்பவரும், ஒப்புயர்வற்ற ஐஶ்வரியத்தினுல் ஸ்வஸ்வரூபமான ப்ரம்ஹத்தினிடத்தில் ரமிப்பவருமான உமக்கு அடிக்கடி நமஸ்காரம். (14) *எவருடைய கீர்த்தனமும், எவருடைய ஸ்மரணமும், எவருடைய தரிசனமும், எவருடைய நமஸ்காரமும், எவருடைய பூஜனமும் உலகின் பாபத்தை அப்பொழுதே போக்குமோ மிக்கமங்களமான கீர்த்தியையுடைய அவருக்கு அடிக்கடி நமஸ்காரம். (15) விவேகிகள் எவருடைய சரணபஜனத்தினுல், மனத்திலிருந்து இம்மை மறுமை இரண்டிலுமுள்ள பற்றைப் போக்கிக்கொண்டு ப்ரயாஸையற்றவர்களாய் ப்ரம்ஹகதியை (ஸ்வரூபத்தை) யடைகின்றனரோ மிக்கமங்களமான யசஸ்ஸுள்ள அந்த பகவானுக்கு அடிக்கடி நமஸ்காரம். (16)

---

‡ ப்ரத்யகாத்ம நிஷ்டாரூபமான * எல்லா ஸாதனங்களையும் விட பக்திக்கு இருக்கும் மேன்மையை நினைத்துக்கொண்டு இரண்டு சுலோகங்களினுல் நமஸ்கரிக்கிறார்.

नमो नमः॥ १६ ॥ तपस्विनो दानपरा यशस्विनो मनस्विनो मन्त्रविदः सुमङ्गलाः। क्षेमं न विन्दन्ति विना यदर्पणं तस्मै सुभद्रश्रवसे नमो नमः॥१७॥ किरातहूणान्ध्रपुलिन्दपुल्कसा आभीरकङ्का यवनाः खसादयः। येऽन्ये च

தபஸ்விகளும், தானம் செய்பவர்களும், யசஸ்விகளும், யோகிகளும், மந்திரமறிந்தவர்களும், ஸதாசாரபரர்களும் எவரிடம் அவற்றை அர்ப்பணஞ் செய்யாவிடில் க்ஷேமத்தை யடையமாட்டார்களோ மிக்கமங்களமான கீர்த்தியுள்ள அவருக்கு அடிக்கடி நமஸ்காரம். (17) (*)கிராதர், ஹூணர், ஆந்த்ரர், புளிந்தர், புல்கஸர், ஆபீரர், கங்கர், யவனர், கஸர் முதலியோரும், மற்றும் கர்மத்

(*) இங்கு சொல்லிய கிராதர் முதலிய ஒன்பது பேர்களும் இன்னின்னர் என்பது விஜயத்வஜ டீகையிலிருப்பதாக வம்சீதரீய டீகையில் பின்வருமாறு சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது:—(1) சபரனுக்குப் பாரசவியினிடம் பிறந்தவன் கிராதன் எனப்படுவான். வைச்யனுக்குப்ராம்ஹணஸ்திரீயினிடம் பிறந்தவன் வைதேஹன். இந்த வைதேஹனுக்குப் புலயஸ்திரீயினிடம் பிறந்தவன் ஹூணன் எனப்படுவான். வைதேஹனுக்கே வைதேஹஸ்திரீயினிடம் பிறந்தவன் ஆந்த்ரன் எனப்படுவான். இன்னரென வறியப்படாத ப்ராம்ஹணஜாதிகளுக்குண்டாகி மத்யபானஞ்செய்து திரியும் புருஷனுக்கு முற்கூறிய கிராதியினிடம் பிறந்தவன் புளிந்தன் எனப்படுவான். நிஷாதனுக்கு சூத்ரஜாதிஸ்திரீயினிடம் பிறந்தவன் புல்கஸன் எனப்படுவான். ப்ராம்ஹணனுக்கு வைச்யஜாதிஸ்திரீயினிடம் பிறந்தவன் அம்பஷ்டன் எனப்படுவான். ப்ராம்ஹணனுக்கு அந்த அம்பஷ்ட ஸ்திரீயினிடம் பிறந்தவன் ஆபீரன் எனப்படுவான். கங்கர்களும் நீசஜாதியிற் பிறந்தவர்களேயாவர். கங்கஜாதிபுருஷனுக்கு வேசியினிடத்திற் பிறந்தவன் யவனன் எனப்படுவான். இவர்கள் தாடி மீசையுள்ளவர்கள். கஸர் என்பவரும் நீசஜாதியிற் சேர்ந்தவரேயாவர். இவ்விதமே தருவிந்தர், தோம்பன் முதலிய நீசஜாதிகளும் மூலத்திலுள்ள ஆதி என்ற பதத்திலுல் சொல்லப்படுவர் என்றும். மூலத்தில் शुद्धयन्ति=என்றதால் பாபநிவிருத்தி மட்டும் சொல்லப்படுமேயொழிய அந்தந்த ஜாதிநிவிருத்தி சொல்லப்படமாட்டாது. ஏன்? விதுரர், சூதபௌராணிகர், தர்மவியாதர் முதலியோருக்கு எத்தனை பாகவத ஸம்பந்தமிருந்தும்,ஸ்வயம்பக்தர்களாக இருந்தும் அந்தந்த ஜாதிநிவிருத்தி ஏற்பட்டதாகச் சொல்லப்படாததே அதன் காரணமாகும்.

पापा यदुपाश्रयाश्रयाः शुध्यन्ति तस्मै प्रभविष्णवे नमः॥ १८॥ स एष आत्मात्मवतामधीश्वरस्त्रयीमयो धर्ममयस्तपोमयः। गतव्यलीकैरजशङ्करादिभिर्वितर्क्यलिङ्गो भगवान्प्रसीदताम् ॥ १९ ॥ श्रियः पतिर्यज्ञपतिः प्रजापतिर्धियां पतिर्लोकपतिर्धरापतिः। पतिर्गतिश्चान्धकवृष्णिसात्वतां प्रसीदतां मे भगवान्सतां पतिः॥२०॥ यद्ब्रूचनुध्यानसमाधिधौतया धियानुपश्यन्ति हि तत्त्वमात्मनः। वदन्ति चैतत्कवयो यथारुचं स मे मुकुन्दो भगवान्प्रसीदताम् ॥२१॥ प्रचोदिता येन पुरा सरस्वती वितन्वताऽजस्य सतीं स्मृतिं

தால் பாபிகளுமான எவர்களுண்டோ அவர்களும், எவரை யாஸ்யித்த பக்தர்களே யாஸ்ரயித்தவர்களாய் சுத்தியை (பாப நிவிருத்தியை)யடைகின்றனரோ ஸர்வசக்தரான அந்தப்பகவானுக்கு அடிக்கடி நமஸ்காரம். (18) ஆத்மவான்களுக்கு=தீரர்களுக்கு, ஆத்மாவும்=ஆத்மாவாக உபாஸிக்கத் தகுந்தவரும், ஸர்வ நியந்தாவும், மூன்று வேதஸ்வரூபியும், தர்மமயரும், தபோமயரும், (வேதம், தர்மம், தபஸ் என்ற மார்க்கங்களால் உபாஸிக்கத்தக்கவரும்) கபட மற்றவர்களும் பக்தர்களுமான ப்ரம்ஹதேவன் சங்கரன் முதலியோர்களினால் அத்யாஸ்சரியத்துடன் பார்க்கத்தக்க ஸ்ரீமூர்த்தியையுடையவருமான அந்தப்பகவான் ப்ரஸாதத்தை=அனுக்கிரஹத்தை,ச் செய்யட்டும். (19) லக்ஷ்மீபதியும், யக்ஞபதியும், ப்ரஜைகளுக்குப் பதியும், புத்திவிருத்திகளுக்குப் பதியும்=ப்ரேரகரும், லோகபதியும், பூமிக்குப்பதியும், அந்தகர், விருஷ்ணிகள், யாதவர் இவர்களுக்குப் பதியும், ஆபத்காலத்தில் ரக்ஷகரும், ஸாதுக்களுக்குப் பதியுமான பகவான் எனக்கு அனுக்கிரஹம் செய்யட்டும். (20) கவிகள் எவருடைய சரணத்யானமாகிற ஸமாதியினால் சுத்தஞ்செய்யப்பட்ட புத்தியினால் அவரவருடைய ருசிக்குத்தக்கபடியே இந்தப்பரமாத்மதத்துவத்தைத் தியானிக்கவும் பிறர்க்குபதேசிக்கவும் செய்கின்றனரோ அந்த முகுந்தனை பகவான் என் விஷயத்தில் ப்ரஸாதமுள்ளவராக இருக்கட்டும்.(21) கல்பத்தின் ஆதியில் ப்ரம்ஹதேவனுடைய ஹிருதயத்தில் ஸிருஷ்டிவிஷயமான நினைவைச்செய்கின்றவரான எவரால் ஏவப்பட்டதும் சொந்தமான=தனக்குமட்டுமுள்ள, லக்ஷணங்களையுடையதுமான வேதரூபமான வாக்கானது ப்ரம்ஹதேவனுடைய

हृदि। स्वलक्षणा प्रादुरभूत्किलास्यतः स मे ऋषीणामृषभः प्रसीदताम् ॥ २२ ॥ भूतैर्महद्भिर्य इमाः पुरो विभुर्निर्माय शेते यदमूषु पूरुषः। भुङ्क्ते गुणान्षोडश षोडशात्मकः सोऽलंकृषीष्ट भगवान्वचांसि मे ॥ २३ ॥ नमस्तस्मै भगवते व्यासायामिततेजसे। पपुर्ज्ञानमयं सौम्या यन्मुखाम्बुरुहासवम् ॥ २४ ॥ एतदेवात्मभू राजन्नारदाय विपृच्छते। वेदगर्भोऽभ्यधात्साक्षाद्यदाह हरिरात्मनः॥ २५ ॥

इति श्रीमद्भागवते महापुराणे द्वितीयस्कन्धे वक्तृश्रद्धानिरूपणं नाम चतुर्थोऽध्यायः॥ ४ ॥

வாயிலிருந்து வெளிவந்ததோ, ருஷிகளுக்குள் = க்ஞானதானஞ் செய்பவர்களுக்குள், சிறந்த அந்தப் பகவான் என் விஷயத்தில் ப்ரஸாதமுள்ளவராக இருக்கட்டும். (22) விபுவான எவர் ஆகாசாதி மஹாபூதங்களினுல் இந்தச் சரீரங்களை ஸிருஷ்டித்து இந்தச் சரீரங்களில் யாதுகாரணத்தினுல் புருஷனுக=அந்தர்யாமியாக வஸிக்கின்றாரோ, எவர் பதினொரு இந்திரியங்கள் ஐந்து மஹாபூதங்கள் இவைகளாகிற பதினாறுபதார்த்தங்களுக்கு ஆத்மாவாக இருந்து கொண்டு முற்கூறிய 16 பதார்த்தங்களைப் பாலனமுஞ்செய்கின்றாரோ அந்தப் பகவான் என்னுடைய வாக்குகளை அலங்கரிக்கட்டும். (23) ஸௌம்யர்களான வைசம்பாயனர் முதலிய சிஷ்யர்கள் எவருடைய முகாரவிந்தத்திலிருந்து வெளிவந்த க்ஞானமயமான தேனைப்பானஞ் செய்தனரோ அளவிடவியலாத தேஜஸ்ஸையுடையவரும் பகவானுமான அந்த வியாஸருக்கு நமஸ்காரம். (24) ஹே ராஜன்! ஹரியானவர் நேரில் எதைத் தனக்கு உபதேசித்தாரோ இதையே [*]வேதகர்ப்பரான ப்ரம்ஹதேவன் (நீ கேட்கின்ற விஷயத்தைப்பற்றியே) ப்ரஶ்னஞ் செய்கின்ற நாரதருக்கு உபதேசித்தார் என்றார்.

இவ்விதம் ஸ்ரீமத்பாகவத மஹாபுராண த்விதீயஸ்கந்தத்தில் வக்த்ருஶ்ரத்தா நிரூபணமென்ற நான்காவது அத்தியாயம் முற்றிற்று.

---

[*] உத்பத்தி ஸமயத்திலேயே வேதத்துடன் பிறந்தவர் என்பது கருத்து.

अथ पञ्चमोऽध्यायः ॥

नारद उवाच—देव देव नमस्तेऽस्तु भूतभावन पूर्वज। तद्विजानीहि यज्ज्ञानमात्मतत्त्वनिदर्शनम् ॥ १ ॥ यद्रूपं यदधिष्ठानं यतः सृष्टमिदं प्रभो। यत्संस्थं यत्परं यच्च तत्तत्त्वं वद तत्त्वतः॥ २ ॥ सर्वं ह्येतद्भवान्वेद भूत-भव्यभवत्प्रभुः। करामलकवद्विश्वं विज्ञानावसितं तव ॥ ३ ॥ यद्विज्ञानो यदाधा ो यत्परस्त्वं यदात्मकः। एकः सृजसि भूतानि भूतैरेवात्ममा-

---

ஐந்தாவது அத்தியாயம்.

(அ—கை) पञ्चमे नारदेनाथ पृष्टः सृष्ट्यादि वक्तयजः।
हरेर्लीलां विराट्सृष्टिं कालकर्मादिशक्तिभिः ॥ १ ॥

(க—ரை) நாரதரால் கேட்கப்பட்ட ப்ரம்ஹதேவன் விராட்டி யாதிரூபமான ஹரியின் லீலையையும், காலம் கர்மம் முதலிய சக்தி களினுல் விராட்ஸிருஷ்டியையும் உபதேசிக்கிறார் என இந்த ஐந்தா வது அத்தியாயத்தில் சொல்லப்படுகிறது. (1) (எ—று)

நாரதர் சொல்லலுற்றார்—பூதங்களை யுண்டு பண்ணினவரும் ஆனதுபற்றியே யாவர்க்கும் முந்தியுண்டானவருமான ஹே தேவ தேவ! உமக்கு நமஸ்காரம். ஆத்மதத்துவத்தை நிஸ்சயமாகத் தெரி விக்கக்கூடிய க்ஞானமானது (ஞானஸாதனமானது) யாதுண்டோ அதை விளக்கமாக உபதேசிப்பீராக. (1) ஹே ப்ரபோ! இந்த ப்ரபஞ்சமானது எதனுல் ப்ரகாசப்படுத்தப் படுகிறதோ, எதை யாஸ்ரயித்திருக்கிறதோ, எதனுல் ஸிருஷ்டிக்கப்பட்டதோ, எதில் லயத்தையடைகிறதோ, எதர்க்கு அதீனமாக இருக்கிறதோ, எதை ஆத்மாவாகவுடையதோ அதனுடைய உண்மையை உள்ளபடி உப தேசிப்பீராக. (2) நீரோ, ஜனித்தது, ஜனிக்கப்போகிறது. ஜனித் துக்கொண்டிருக்கிறது ஆகிய யாவற்றுக்கும் ப்ரபுவாகவிருப்பதால் இவையாவையும் அறிவீர். லோகமானது அங்கை நெல்லிக்கனி போல உமது தனித்தக்ஞானத்தினுல் நிஸ்சயிக்கப்பட்டே இருக் கிறது. (3) நீர் எவரிடமிருந்து விக்ஞானத்தை யடைந்தீர், எவரை ஆதாரமாகவுடையவர்? எவருக்கு அதீனராக இருக்கிறீர். எவரை ஆத்மாவாகவுடையவர். நீரோ ஒருவராகவே இருந்து

यया ॥ ४ ॥ आत्मन्भावयसे तानि न पराभावयन्स्वयम्। आत्मशक्तिमव-
ष्टभ्य ऊर्णनाभिरिवाक्रमः॥ ५ ॥ नाहं वेद परं ह्यस्मिन्नापरं न समं विभो।
नामरूपगुणैर्भाव्यं सदसत्किञ्चिदन्यतः॥ ६ ॥ स भवानचरद्घोरं यत्तपः
सुसमाहितः। तेन खेदयसे नस्त्वं परां शङ्कां प्रयच्छसि ॥ ७ ॥ एतन्मे
पृच्छतः सर्वं सर्वज्ञ सकलेश्वर। विजानीहि यथैवेदमहं बुद्ध्येऽनुशा-
सितः॥ ८ ॥ ब्रह्मोवाच—सम्यक्कारुणिकस्येदं वत्स ते विचिकित्सितम्।

உமது மாயையினுல் பூதங்களைக் கொண்டு பிராணிகளை ஸிருஷ்டிக்
கிறீர். (4) †நீர் பராபவத்தை யடையாதவராய்க் கொண்டும்,
ஸ்ரமமற்றவராய்க் கொண்டும், எட்டுக்கால் பூச்சியானது தனது
சக்தியைக் கொண்டு மட்டுமே ஸிருஷ்டிப்பதுபோல அந்த ப்ராணி
களை (ஸிருஷ்டித்து) த்தன்னிடத்திலேயே காப்பாற்றுகிறீர். (5)
ஆகவே ஹே விபோ! இந்த ப்ரபஞ்சத்தில் உம்மைக்காட்டிலும்
உத்தமமானதுமில்லை. அதமமானதுமில்லை, ஸமமானதுமில்லை.
மனுஷ்யன் முதலிய பெயருடனும், இரண்டு காலுள்ளதாயிருத்தல்
முதலிய ரூபத்துடனும், வெண்மை முதலிய குணங்களுடனும்
உண்டாக்கப்படுவதும், ஸ்தூலசூக்ஷ்மரூபமானதுமான பொருள்
யாவும் உம்மைகாட்டிலும் வேறிடமிருந்துண்டாவதாகவு மெண்ண
வில்லை. பின்னேயோவெனில் உம்மிடமிருந்துண்டாவதாகவே நான்
எண்ணுகிறேன். (6) அந்த நீரோ மனம் முதலியவற்றை நன்கு
அடக்கிக்கொண்டு கொடூரமான தவத்தைச் செய்கின்றீர் என்பது
யாதுண்டோ அதனுல் உமக்கும் மேலானவர் இருக்கிறார் என்ற
ஸந்தேஹத்தை யுண்டாக்குகிறீர். ஆனதுபற்றி நீர் எங்களை மயங்
கும்படி செய்தவராக ஆகிறீர். (7) ஸர்வக்ஞரும், ஸகலத்துக்கும்
ஈச்வரருமான ஹே ப்ரம்ஹன்! நான் உம்மாலுபதேசிக்கப்பட்ட
வனுய்க் கொண்டு இதை எவ்விதம் தெரிந்துகொள்ளுவேனே அவ்
விதம் கேட்கின்ற எனக்கு இவை யாவையும் தெளிவாகவுபதேசிப்
பீராக என்றார். (8)

---

† எனக்கோ நீரே ஸர்வஸ்வதந்திரரான பரமேச்வரன் என்ற
எண்ணமுண்டாகிறது. ஆனுல் நீரும் தவஞ்செய்வதிலிருந்து உமக்கும்
மேலாக ஒருவர் இருப்பதாக சங்கை யேற்படுவதால் இவ்விதம் கேட்க
வேண்டிவருகிறது என 4½ சுலோகங்களினுல் சொல்லுகிறார்.

यदहं चोदितः सौम्य परधर्मप्रदर्शने ॥ ९ ॥ नानृतं तव तच्चापि यथा मां प्रब्रवीषि भोः। अविज्ञाय परं मत्त एतावत्त्वं यतो हि मे ॥ १० ॥ येन स्वरोचिषा विश्वं रोचितं रोचयाम्यहम्। यथार्कोऽग्निर्यथा सोमो यथर्क्षग्रह-

---

ப்ரம்ஹதேவன் சொல்லுற்றார்—ஹே வத்ஸ! பகவானுடைய சக்தியை ப்ரகாசப்படுத்தல் ரூபமான தர்மத்தில் உன்னுல் ப்ரவிருத்திக்கும்படி செய்யப்பட்டவனுக நான் ஆவதால் ஸந்தேஹ பூர்வகமான இந்த உனது ப்ரஸ்னமானது என்னிடம் கருணையுடனேயே கேட்கப்பட்டதாகவாகிறது. ஆகவே இது வெகுஸ்லாக்கியமானதே யாகும்‡. (9) *ஹே புத்ர! உண்மையான ஈஸ்வரனுக என்னை நீ சொல்லுகின்றாய். இவ்விதம் சொல்லத்தக்க ப்ரபாவமானது எக்காரணம்பற்றி எனக்கிருக்கின்றதோ அக்காரணம் பற்றி அந்த உனது வார்த்தையானது முற்றிலும் பொய்யானதன்று. ஆனுல் என்னைக்காட்டிலும் பரனுன ஈஸ்வரனை அறியாமல் பேசுகின்றனை. ஆகவே அவருக்கும் எனக்குமுள்ள ஸாம்யத்தையொட்டி உனக்கு இந்த ப்ரமம் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே இது தெரிந்துசொன்னபொய்யாக ஒருபொழுது மாகமாட்டாது. (10) (*)சைதன்யத்தினுல் ப்ரகாசப்படுத்தப்படுவதையே சூரியன் ப்ரகாசப்படுத்துவதுபோலும், சைதன்யத்தினுல் ப்ரகாசப்படுத்தப்படுவதையே அக்னி ப்ரகாசப்படுத்துவதுபோலும், சந்திரன் ப்ரகாசப்படுத்துவதுபோலும், நக்ஷத்திரங்கள், கிரஹங்கள், வேறு தாரைகள்

---

‡ நீ உண்மையையறிய ஆவல் கொண்டவனுயினும் என்விஷயத்தில் மேலான கருணையைச் செய்தவனுகவே ஆகிவிட்டாய் என்பதுபொருள்.

* "एकः सृजसि भूतानि" என்ற தாதியால் என்னையே ஈஸ்வரனுக நீ சொன்னது யாதுண்டோ இது பொய்யல்ல. அவ்விதம் உன்னை மயங்கும்படி செய்யக்கூடிய ப்ரபாவம் என்னிடமிருக்கவேதான் செய்கிறது. ஆனுல் இது எனக்கும் மேலாக ஈசுவரனிருப்பதை அறியாமையால் சொன்ன வார்த்தையாதலால் அதைப் பொய்யென்று சொல்லமுடியாது என இதனுல் சொல்லுகிறார்.

(*) அங்ஙனமாயின் அந்த ஈச்வரன் யார் எனின்? பக்தியுடன் அவரை நமஸ்காரித்துக் கொண்டே மூன்று சுலோகங்களினுல் பதில் சொல்லுகிறார்.

तारकाः॥ ११ ॥ तस्मै नमो भगवते वासुदेवाय धीमहि। यन्मायया दुर्जयया मां ब्रवन्ति जगद्गुरुम्॥ १२ ॥ विलज्जमानया यस्य स्थातुमीक्षा-पथेऽमुया। विमोहिता विकत्थन्ते ममाहमिति दुर्धियः॥ १३ ॥

द्रव्यं कर्म च कालश्च स्वभावो जीव एव च। वासुदेवात्परो ब्रह्मन्न चान्योऽर्थोऽस्ति तत्त्वतः॥ १४ ॥ नारायणपरा वेदा देवा नारायणाङ्गजाः।

இவைகள் ப்ரகாசப்படுத்துவதுபோலும், எவரதுஸ்வரூபசைதன்னியத்தினுல்ப்ரகாசப்படுத்தப்பட்டதையே நான் விருஷ்டியினுல் அபிவ்யக்தமாகச் செய்கின்றேனே, எவருடைய ஜயிக்கவியலாத மாயையினுல் ஜனங்கள் மோஹத்தை யடைந்தவர்களாய்க்கொண்டு என்னை ஜகத்குருவாகச் சொல்லுகின்றனரோ அந்த வாஸுதேவனுக்கு மனத்தினுல் நமஸ்காரத்தைச் செய்கின்றேம். (11–12) "தனது கபடத்தை இவர் அறிவார்" என்பதாய் எவருடைய திருஷ்டி வழியில் இருப்பதற்கு விசேஷித்து ஜ்ஜையையடைந்திருக்கின்றதோ (அதாவது:—எந்தப் பகவானிடத்தில் தனது காரியத்தைச் செய்யாதிருக்கின்றதோ) அந்தப்பகவானுடைய இந்த மாயையினுல் மிக்க மோஹிக்கும்படி செய்யப்பட்ட நம் போன்ற கெட்டபுத்தியுள்ளவர்கள் எவர்களோ (அவித்யையினுல் மறைக்கப்பட்ட க்ஞானமுள்ளவர்கள் எவர்களோ) அவர்களே நான் என்றும், என்னுடையது என்றுமான எண்ணங்கொண்டு தற்புகழ்ச்சி செய்துகொள்ளுகின்றனர் [*] (13) ஹே ப்ரம்ஹன் நாரத! †உபாதான காரணங்களான மஹாபூதங்களாகிற தாவியமும், உத்பத்திக்கு நிமித்தமான கர்மமும், குணங்களுக்குச் சலனத்தைத்தரும் காலமும், ஜகத்ரூபமான பரிணமத்துக்குக் காரணமான ஸ்வபாவமும், கர்மபல போக்தாவான ஜீவனும், வாசு

---

[*] இதனுல் "यद्रूपम्=எவ்விதஸ்வரூபமுள்ளவர்" என்ற கேள்விக்குப் பதில் சொல்லப்பட்டதாகவாகிறது. † இவ்விதம் சொன்னதிலிருந்து தன்னைவிடவேறான ஈசுவரனை நிரூபணஞ்செய்து இப்பொழுது "यदधिष्ठानम्=என்றதாதி" ஒன்பது ப்ரச்னங்களுக்கு அவரேதான் அதிஷ்டானுதியான யாவுமாகிறார் எனப் பதில் சொல்லவேண்டி அவரை விட அன்னியமாக ஒன்றுமில்லை என்பதை இந்தச் சுலோகத்தினுலுபதேசிக்கிறார்.

नारायणपरा लोका नारायणपरा मखाः॥ १५ ॥ नारायणपरो योगो नारायणपरं तपः। नारायणपरं ज्ञानं नारायणपरा गतिः॥ १६ ॥ तस्यापि द्रष्टुरीशस्य कूटस्थस्याखिलात्मनः। सृज्यं सृजामि सृष्टोऽहमीक्षयैवाभिचोदितः॥ १७ ॥ सत्त्वं रजस्तम इति निर्गुणस्य गुणास्त्रयः। स्थितिसर्ग-

---

தேவனைக் காட்டிலும் அதிகமும் அன்னியமுமான பொருளாக இல்லை. (வாசுதேவனே எல்லாமாகவும் தோற்றத்தையடைகிறார் என்பது கருத்து) (14)

வேதங்கள் நாராயணனையே ‡காரணமாகவுடையன. அல்லது வேதங்கள் நாராயணனைப் பரமாக (தனது கருத்துக்கிசைந்த பொருளாக) வுடையன. தேவர்களும் நாராயணனுடைய அங்கத்திலிருந்து உண்டானவர்கள். ஸ்வர்க்காதி உலகங்களும் நாராயணபரங்கள். அதாவது:—அவருடைய ஸ்வரூபானந்தத்தின் அம்சமாகவானவைகள். யாகங்களும் நாராயணபரங்கள். அதாவது:—அவரையடைவதற்கு ஸாதனமாகவுள்ளவைகள் (15) ப்ராணயாமாதியோகமானது நாராயண பரமானது. ப்ராணயாமத்தாலேற்படக் கூடியதும், சித்தத்தை ஒருமுகப்படுத்தல் ரூபமானதுமான தவமும், நாராயணபரமானது. தவத்தினாலுண்டாகின்ற க்ஞானமும் நாராயணபரமானது. அந்த ஞானத்தின் பலனும் நாராயணபரமானது. (அதாவது:—முற்கூறியவை யாவும் நாராயணாதீனமானது.)* (16) (*)அவரால் விருஷ்டிக்கப்பட்ட நான் அவராலேயே ஏவப்பட்டவனுய் அவரது கடாக்ஷத்தினாலேயே, ஸர்வஸாக்ஷியும், ஸர்வ நியந்தாவும், கூடஸ்தனும், அகிலத்துக்கும் ஆத்மபூதருமான அவருடைய விருஜ்யமான பொருளையே விருஷ்டிக்கிறேன். (17) [*]உண்மையில் விபுவான ஈச்வரன் எவ்வித குணஸம்பந்தமும்

---

‡ ஈச்வரன் ருக்வேதாதி சாஸ்திரங்களுக்குக் காரணமாகவுள்ளவர் என்றதனால் ஈசுவரவிஷயத்தில் ப்ரமாணமும், ஸர்வக்ஞத்வமும் சொல்லப்பட்டதாகவாகிறது. * இதனால் "यद्धीनम्" என்பதற்குப் பதில் சொல்லப்பட்டதாகவாகிறது. (*) அங்ஙனமாயின் உமது காரியம் என்னே எனின்? அதற்கு இதனால் பதில் சொல்லப்படுகிறது.

[*] ஜீவன் என்றும் ஈச்வரன் என்றுமான பேதம் எதனாலேற்படுகிறது? எதன்மூலம் நீர் நியம்யராகவும், அவர் நியந்தாவாகவும் ஆகிறீர்

निरोधेषु गृहीता मायया विभोः॥ १८ ॥ कार्यकारणकर्तृत्वे द्रव्यज्ञानक्रिया-श्रयाः। बध्नन्ति नित्यदा मुक्तं मायिनं पुरुषं गुणाः॥ १९ ॥ स एष भगवां-ल्लिङ्गैस्त्रिभिरेभिरधोक्षजः। स्वलक्षितगतिर्ब्रह्मन्सर्वेषां मम चेश्वरः॥ २० ॥ कालं कर्म स्वभावं च मायेशो मायया स्वया। आत्मन्यदृच्छया प्राप्तं

அற்றவராயினுங்கூட ஸத்துவம் ரஜஸ் தமஸ் என்ற மூன்று குணங்களையும் ஸ்திதி, ஸிருஷ்டி, ப்ரளயம் இவற்றுக்குவேண்டி அவரே ஸ்வாதந்திரியத்தை முன்னிட்டு மாயாமூலம் கிரஹிக்கிறார். (18) அந்தக்குணங்கள் த்ரவியங்களான மஹாபூதங்களுக்கும், ஜ்ஞானங்களான தேவதைகளுக்கும், க்ரியைகளான இந்திரியங்களுக்கும் ஆஸ்ரயங்களாக=காரணங்களாக, இருந்துக்கொண்டு எப்பொழுதும் முக்தனுக = குண ஸம்பந்தமற்றவனுக, இருந்தபோதிலுங்கூட மாயைக்கு விஷயனான ஜீவனைக் காரியமான அதிபூதத்தன்மையிலும், காரணமான அத்யாத்மத்தன்மையிலும், கர்த்தாவான அதிதைவத்தன்மையிலும்† பந்தப்படுத்துகின்றன. (19) ஆனதுபற்றி ஹேப்ரம்ஹன் !=நாரத ! ஜீவஸ்வரூபத்துக்கு ஆவாரகங்களான இந்தக் குணங்களாகிற உபாதிகளினுல் நன்கு காணப்படாத தனது தத்துவத்தை யுடையவரும், அதோக்ஷஜனும்=மாயையைத் தன்வசமாக்கினவரும், ஆன அந்த இந்த பகவான் யாவர்க்கும் எனக்கும் ஈஸ்வரனுக=நியந்தாவாக, ஆகிறார். (20) ‡விவிதமாக=பலதறப்பட்ட ப்ரபஞ்சமாக, ஆவதற்கு எண்ணங்கொண்ட மாயேசனை=(வசிகிருதமாயனை) பகவான், தன்னிடத்தில் யதிருச்சையினுல்= (தனது ஸங்கல்பத்தினுல்) ப்ராப்தமானதும், ஸிருஷ்டிகாலம் என்ற வியவஹாரத்துக்கு ஹேதுவானதும், குணங்களின் ஸ்வரூபத்தில் சலனத்தைத் தருவதுமான காலத்தையும், ஜீவர்களின் அதிருஷ்ட

என்ற ஆசங்கை ப்ராப்தமாகவே ஜீவேச்வரவிபாகத்துக்குரிய காரணத்தை இதுமுதல் மூன்று சுலோகங்களினுலுபதேசிக்கிறார். † அதாவது:— மாயை மூலம் அந்தந்த விஷயங்களில் அபிமானத்தையடைந்த ஜீவனுக்கு பந்தமானதுண்டாகிறது. ஈசுவராச்ரிதமாக மாயையிருந்தபோதிலுங்கூட அவருக்கு எவ்வித அபிமானமுமில்லாமைபற்றி அவருக்குப் பந்தமேற்பட இடமில்லை என்பது கருத்து. ‡ இதனுல் அவர் ப்ரபஞ்ச ஸிருஷ்டி செய்யும் முறையுபதேசிக்கப்படுகிறது.

विबुभूषुरुपाददे ॥ २१ ॥ कालाद्गुणव्यतिकरः परिणामः स्वभावतः। कर्मणो जन्म महतः पुरुषाधिष्ठितादभूत् ॥ २२ ॥ महतस्तु विकुर्वाणाद्रजः सत्त्वोपबृंहितात्। तमःप्रधानस्त्वभवद्द्रव्यज्ञानक्रियात्मकः॥ २३ ॥ सोऽहंकार इति प्रोक्तो विकुर्वन्समभूत्त्रिधा। वैकारिकस्तैजसश्च तामसश्चेति

மான கர்மத்தையும், அவற்றின் பரிணமத்துக்கு ஹேதுவான ஸ்வபாவத்தையும் ஏற்கிறார். (அவற்றை யுதவிகாரணமாக அங்கீகரிக்கிறார்.) (21) புருஷனை ஈஸ்வரனுல் *அதிஷ்டிதமான காலத்தினுல் குணங்களுக்கிருந்த ஸாம்யாவஸ்தையின் விலகுதலும், புருஷாதிஷ்டிதமான ஸ்வபாவத்தினுல் பரிணமமும்=(வேறு ரூபப்ராப்த்தியும்) புருஷாதிஷ்டிதமான கர்மத்தினுல் மஹத்தத்துவத்தின் உத்பத்தியும் உண்டாயிற்று. (22) (*)ரஜோகுண ஸத்வகுணங்களின் ஆதிக்யத்தையுடையதும், மாறுபாட்டையடைகின்றதுமான மஹத் தத்துவத்திலிருந்து மஹாபூதங்கள், இந்திரியாபிமானி தேவதைகள், இந்திரியங்கள் இவைரூபமானதும், தமோகுணத்தை ப்ரதானமாகவுடையதுமான பொருள் உண்டாயிற்று. (23) அறியும் திறமையையுடைய ஹே நாரத! அஹங்தத்துவமென்று சொல்லப்பட்ட அந்தப்பொருளானது வேறு ரூபத்தை யடையத்தொடங்கினதாய்க் கொண்டு வைகாரிக=(ஸாத்விக) மென்றும், தைஜஸ=(ராஜஸ) மென்றும், தாமஸமென்றுமாக மூன்றுவிதமாகவாயிற்று. இந்த அஹங்காரத்தின் பேதமானது [*]த்ரவ்யசக்தியென்றும், க்ரி

---

* ஈச்வரனுடைய இச்சையையொட்டி ப்ரவிருத்திக்கினற காலத்திலிருந்து என்பது பொருள். இவ்விதமே மேலுள்ள விடங்களிலும் பொருள் கொள்க. (*) மஹத்தத்துவமானது க்ரியாசக்தி க்ஞான சக்தி இரண்டுமுள்ளதாக இருப்பதுபற்றி குணத்ரயங்களுமுள்ளதாக இருந்தபோதிலும் அவற்றுள் ரஜஸ்ஸத்துவ குணங்களுக்கு ஆதிக்யமிருப்பதாக கொள்ளவேண்டும். அஹந்தத்துவமோ மறைவைக்கொடுப்பதாக இருப்பதுபற்றி தமோகுணத்தின் ஆதிக்யமுள்ளதென்றும் கொள்ளவேண்டும். [*] மஹாபூதரூபமான த்ரவியத்தில் சக்தியையுடையது த்ரவிய சக்தியெனப்படும். க்ரியாரூபங்களான இந்திரியங்களில் சக்தியையுடையது க்ரியாசக்தி எனப்படும். ஞானரூபங்களான தேவதைகளில் சக்தியையுடையது ஞானசக்தியெனப்படும்.

यद्भिदा। द्रव्यशक्तिः क्रियाशक्तिर्ज्ञानशक्तिरिति प्रभो ॥२४॥ तामसादपि भूतादेर्विकुर्वाणादभून्नभः। तस्य मात्रा गुणः शब्दो लिङ्गं यद्द्रष्टृदृश्ययोः॥ २५ ॥ नभसोऽथ विकुर्वाणादभूत्स्पर्शगुणोऽनिलः। परान्वयाच्छब्द

யாசக்தியென்றும், ஞானசக்தியென்றும் சொல்லப்படுகிறது. (தாமஸாஹங்காரம் த்ரவ்ய சக்தி என்றும், வைகாரிகாஹங்காரம் ஞான சக்தியென்றும், தைஜஸாங்காரம் க்ரியாசக்தி என்றும் சொல்லப்படும்.) (24) வேறு ரூபமாக மாறத்தொடங்கினதும், பூதாதியானதும் தமோகுண ப்ரதானமானதுமான அஹந்தத்துவத்திலிருந்து ஆகாசமானது உண்டாயிற்று. †த்ரஷ்டாவான புருஷன், திருஷ்யமானபொருள் இரண்டையும் எது தெரிவிக்கின்றதோ அந்தச் சப்த ரூபமான குணமானது ஆகாசத்தினுடைய சூக்ஷ்மமான ரூபமாகவாகிறது‡ (25) பிறகு மாறுதலையடையத்தொடங்கின ஆகாசத்திருந்து ஸ்பர்சம் என்ற அஸாதாரண குணத்தையுடைய காற்றானது உண்டாயிற்று. காரணமான ஆகாசத்தின் அன்வயம்=தொடர்பு, இருப்பதால் அந்தக் காற்றானது காரணத்தின் குணமான சப்தமுள்ளதாகவும், ப்ராணன் என்ற தேஹதாரணத்துக்கும், ஓஜஸ் ஸென்ற இந்திரிய பலத்துக்கும், ஸஹஸ் என்ற மநோபலத்துக்கும், பலமென்ற சரீரவலுவுக்கும் ஹேதுவாகவுமாகிறது. இவை

† சுவற்றினுல் மறைக்கப்பட்ட புருஷனொருவன் உறத்து "யானை யானை" எனக் கத்தினதும் எவன் யானையைப் பார்க்கின்றானே, எந்த யானை அவனுல் பார்க்கப்படுகின்றதோ அவ்விரண்டையும் சப்தமானது தெரிவிப்பதாக வாவதால் இவ்விதம் சொல்லப்பட்டது.

‡ தாமஸாஹந்தத்துவத்திலிருந்து முதலில் சப்ததன்மாத்திரையும், பிறகு ஆகாசமும் உண்டாவதாக ஆங்காங்கு சொல்லப்படுகிறது. இங்கு முதலில் ஆகாசமும் பிறகு குணமான சப்ததன்மாத்திரையு மூண்டாவதாகச் சொன்னது எங்ஙனமெனின்? அந்த சப்தமோ அந்த ஆகாசத்தினுடைய சூக்ஷ்மரூபமாகவாகும். அது குணமும், அதற்குமட்டுமுள்ள இதரவியாவர்த்தக தர்மமுமாகும். ஆகவே வியாவர்த்தகதர்மமான சப்தம் வாயிலாக ஆகாசமானது உண்டாயிற்று என்று சொன்னதாக ஏற்பட்டது. இவ்விதமே மேலுள்ள விடங்களிலும் ஸ்பர்சாதிரூபமான சூக்ஷ்ம குணத்துடன் ஸ்தூலமான வாயுமுதலியன உண்டாயினவென்று பொருள் கொள்ளவும்.

वांश्च प्राण ओजः सहो बलम् ॥ २६ ॥ वायोरपि विकुर्वाणात्कालकर्मस्वभावतः। उदपद्यत तेजो वै रूपवत्स्पर्शशब्दवत् ॥ २७ ॥ तेजसस्तु विकुर्वाणादासीदम्भो रसात्मकम्। रूपवत्स्पर्शवच्चाम्भो घोषवच्च परान्वयात् ॥ २८ ॥ विशेषस्तु विकुर्वाणादम्भसो गन्धवानभूत्। परान्वयाद्रसस्पर्शशब्दरूपगुणान्वितः॥ २९ ॥ वैकारिकान्मनो जज्ञे देवा वैकारिका दश। दिग्वातार्कप्रचेतोऽश्विवह्नीन्द्रोपेन्द्रमित्रकाः॥ ३० ॥ तैजसात्तु विकु-

---

அந்த வாயுவுக்கே லிங்கமாகவுமாகும். (26) காலம் கர்மம் ஸ்வபாவம் இவைமூலம் மாறுதலையடையத் தொடங்கின வாயுவிலிருந்து தனது அஸாதாரண குணமான ரூபமுள்ளதும், காரணங்களான வாயு ஆகாசம் இவற்றின் அன்வயம=தொடர்ப்பு, இருப்பதன்மூலம் அவற்றின் குணங்களான ஸ்பர்சமும் சப்தமும் உள்ளதுமான தேஜஸ்ஸான து உண்டாயிற்று. (27) வேறு ரூபத்தையடையத் தொடங்கின தேஜஸ்வஸிலிருந்து தனது அஸாதாரண குணமான ரஸமுள்ள ஜலமானது உண்டாயிற்று. காரணங்களான தேஜஸ் வாயு ஆகாசம் இவற்றின் அன்வயமிருப்பதன் மூலம் அந்த ஜலமானது காரணங்களின் குணங்களான ரூபமுள்ளதாகவும், ஸ்பர்சமுள்ளதாகவும், சப்தமுள்ளதாகவும் ஆகும். (28) மாறுதலையடைகின்ற ஜலத்திலிருந்து தனது அஸாதாரண குணமான கந்தமுள்ள விசேஷமென்ற பூமியானது உண்டாயிற்று. அந்த விசேஷமென்ற பூமியானது காரணங்களான ஜலம் தேஜஸ் வாயு ஆகாசம் இவற்றின் அன்வயமிருப்பதன் மூலம் ரஸமென்ற குணமுள்ளதாகவும், ரூபமென்ற குணமுள்ளதாகவும், ஸ்பர்சமென்ற குணமுள்ளதாகவும், சப்தமென்ற குணமுள்ளதாகவும் ஆகும். (29)

ஸாத்விகாஹங் தத்துவத்திலிருந்து மனதும் (அதற்கு அதிஷ்டாதாவான சந்திரனும்) உண்டாயின. (சுரோத்திரம், த்வக், சக்ஷுஸ், ஜிஹ்வை, க்ராணம் என்ற க்ஞானேந்திரியங்களுக்கு அதிஷ்டாதாக்களான) திக், வாதர், அர்க்கர், ப்ரசேதஸ், அஸ்வினீதேவர் என்ற தேவர்களும், (வாக், பாணி, பாத, பாயு, உபஸ்தம் என்ற கர்மேந்திரியங்களுக்கு அதிஷ்டாதாக்களான) வன்ஹி, இந்திரன், உபேந்திரன், மித்திரன், ப்ரஜாபதி என்ற தேவர்களும் ஆகஇப்பதின்மரும் ஸாத்விகாஹங் தத்துவத்திலிருந்து உண்டானவர்

वाणादिन्द्रियाणि दशाभवन्। ज्ञानशक्तिः क्रियाशक्तिर्बुद्धिः प्राणस्तु तैजसौ। श्रोत्रं त्वग्घ्राणदृग्जिह्वावाग्दोर्मेढ्राङ्घ्रिपायवः॥ ३१॥

यदैतेऽसङ्गता भावा भूतेन्द्रियमनोगुणाः। यदायतननिर्माणे न शेकुर्ब्रह्मवित्तम॥ ३२॥ तदा संहत्य चान्योन्यं भगवच्छक्तिचोदिताः। सदसत्त्वमुपादाय चोभयं ससृजुर्ह्यदः॥ ३३॥ वर्षपूगसहस्रान्ते तदण्डमुदकेशयम्। कालकर्मस्वभावस्थो जीवो जीवमजीवयत्॥ ३४॥ स एव

களே யாவர். (30) வேறு ரூபத்தையடையத்தொடங்கின ராஜஸாஹங்காரத்திலிருந்து ஸ்ரோத்ரம், த்வக், க்ராணம், சக்ஷுஸ், ஜிஹ்வா என்ற க்ஞானேந்திரியங்களும், வாக், பாணி, உபஸ்தம், பாதம், பாயு என்ற கர்மேந்திரியங்களுமான பத்து இந்திரியங்கள் உண்டாயின க்ஞானசக்தியான புத்தியும், க்ரியாசக்தியான ப்ராணனும் ராஜஸாஹங்காரத்தின் காரியங்களாக இருப்பனபற்றி க்ஞானம், க்ரியை இவற்றின் விசேஷ ரூபங்களான இந்திரியங்களும் ராஜஸாஹங்காரத்துவத்தின் காரியங்களேயாகும். (31) ப்ரம்ஹவித்துக்களுக்குள் சிறந்தவரான ஹே நாரத! பூதங்கள், இந்திரியங்கள், மனஸ் அவற்றின் குணங்கள் ஆகிய இந்தப்பொருள்கள் எப்பொழுது ஒன்றுடன் மற்றொன்று கலக்காதனவாக இருந்தனவோ ஆனதுபற்றியே எப்பொழுது தங்களுக்கு ஆயதனமான சரீரத்தின் நிர்மானவிஷயத்தில் அசக்தங்களாக=திறமையற்றனவாக, வாயினவோ அப்பொழுது பகவானுடைய சக்தியினால் தூண்டப்பட்டனவாய்க்கொண்டு ஒன்றுடன் மற்றொன்று கலந்து ப்ரதானமாகவும் (அங்கியாகவும்) குணமாகவும் (அங்கமாகவும்) இருக்கும் தன்மையை யாஸ்ரயித்துக் கொண்டு ஸமஷ்டிவ்யஷ்டி ரூபமான இந்தச் சரீரத்தை (அண்டத்தை) ப்படைத்தன. (32–33) அனேகம் வருஷங்களைத் தன்னுள் கொண்ட ஆயிரத்தின் முடிவில் (அதாவது:–ஆயிரம் வருஷங்களின் முடிவில்) ப்ரளய ஜலத்தில் மிதக்கின்றதும் அசேதனமுமான அந்த அண்டத்தை, காலம் கர்மம், ஸ்வபாவம் இவற்றுக்கு அதிஷ்டாதாவானவரும், ஸர்வத்தையும் ஜீவனுள்ளதாகச் செய்கின்றவருமான பரமாத்மா, (தனது ப்ரவேசத்தினால்) ஜீவனுள்ளதாகச் செய்தார். (34) அந்த இந்தப் புருஷன் அண்டத்தைப் பிளந்து

पुरुषस्तस्मादण्डं निर्भिद्य निर्गतः। सहस्रोर्वङ्घ्रिबाह्वक्षः सहस्राननशीर्षवान्॥ ३५॥ यस्येहावयवैर्लोकान्कल्पयन्ति मनीषिणः। कट्यादिभिरधः सप्त सप्तोर्ध्वं जघनादिभिः॥ ३६॥ पुरुषस्य मुखं ब्रह्म क्षत्रमेतस्य बाहवः। ऊर्वोर्वैश्यो भगवतः पद्भ्यां शूद्रोऽभ्यजायत॥ ३७॥ भूर्लोकः कल्पितः पद्भ्यां भुवर्लोकोऽस्य नाभितः। हृदा स्वर्लोक उरसा महर्लोको महात्मनः॥ ३८॥ ग्रीवायां जनलोकश्च तपोलोकः स्तनद्वयात्। मूर्धभिः सत्यलोकस्तु ब्रह्मलोकः सनातनः॥ ३९॥ तत्कट्यां चातलं कल्पमूरुभ्यां

கொண்டு ஆயிரக்கணக்கான துடை, பாதம், கை, கண் இவற்றையுடையவராகவும் ஆயிரக்கணக்கான முகம் தலை இவற்றையுடையவராகவும் அந்த அண்டத்திலிருந்து வெளிவந்தார். (35)

வித்வான்கள் ப்ரம்ஹாண்டத்தின் நடுவில் குணமயமான ரூபத்தையுடையவரான எவருடைய *கடி முதலிய அவயவங்களினுல் கீழுள்ள அதலம் முதலிய ஏழு உலகங்களையும், ஜகனம் முதலிய ஏழு அவயவங்களினுல் மேலுள்ள பூராதி ஏழு உலகங்களையும் கல்பிக்கின்றனரோ, (36) புருஷசப்தவாச்யனும் பகவானுமான எந்த இவருடைய முகமானது ப்ராம்ஹண ஜாதியோ, (முகத்திலிருந்து ப்ராம்ஹணஜாதியுண்டாயிற்றே) தோள்கள் க்ஷத்ரியஜாதியோ, (தோட்களிலிருந்து க்ஷத்ரிய ஜாதியானது உண்டாயிற்றே) துடைகள் வைச்யஜாதியோ, துடைகளிலிருந்து வைச்ய ஜாதியானது உண்டாயிற்றே) பாதங்களிலிருந்து சூத்திர ஜாதியுண்டாயிற்றே (37) மஹாத்மாவான எவருடைய பாதங்களினுல் (பாதம் முதல் கடிவரையுள்ள அங்கங்களினுல்) பூர்லோகமும், (பாதாளம் முதல் பூர்லோகம் முடியவுள்ளலோகமும்) எந்த இவருடைய நாபி (உந்தி) யினுல் புவர்லோகமும், மனஸ்வினுல் ஸ்வர்க்கலோகமும், மார்பினுல் மஹர் லோகமும், கழுத்தினுல் ஜனலோகமும், சப்தம் செய்கின்ற இரு உதடுகளினுல் தபோலோகமும், தலைகளினுல் ஸத்ய லோகமும் (நித்யமான வைகுண்ட லோகமும்) கல்பிக்கப்பட்டதோ. (38–39) விபுவான எவருடைய கடிப்பிரதேசத்தினுல் அந்த

---

* அடித்துடைக்குப் பின்பக்கத்திலுள்ளது கடி என்றும், முன்பக்கத்திலுள்ளது ஜகனம் என்றும் சொல்லப்படும்.

वितलं विभोः। जानुभ्यां सुतलं शुद्धं जङ्घाभ्यां तु तलातलम् ॥ ४० ॥ महातलं तु गुल्फाभ्यां प्रपदाभ्यां रसातलम्। पातालं पादतलत इति लोकमयः पुमान् ॥४१॥ भूर्लोकः कल्पितः पद्भ्यां भुवर्लोकोऽस्य नाभितः। स्वर्लोकः कल्पितो मूर्ध्ना इति वा लोककल्पना ॥ ४२ ॥

इति श्रीमद्भागवते महापुराणे द्वितीयस्कन्धे जननिरूपणं नाम पञ्चमोऽध्यायः ॥ ५ ॥

அதலலோகமும், துடைகளினுல் விதல லோகமும், முழங்கால்களினுல் சுத்தமான சுதலலோகமும், ஜங்கைகளினுல் தலாதல லோகமும், குதிகால்களினுல் மஹாதலலோகமும், பாதநுனிகளினுல் ரஸாதலலோகமும், புறங்கால்களினுல் பாதாளலோகமும் கல்பிக்கப் படுகின்றனவோ அவர் இவ்விதம் லோகமயனன புருஷனுவார். (40–41) இவருடைய பாதங்களினுல் பூர்லோகமும், நாபியினுல் புவர்லோகமும் கல்பிக்கப்பட்டதாகவாகும். தலையினுல் ஸ்வர்லோகமும் கல்பிக்கப்பட்டதாகவாகும் என இவ்விதமாவது லோககல்பனை செய்துகொள்ளலாம்.(*) (42) (எ–று)

இவ்விதம் ஸ்ரீமத்பாகவத மஹாபுராண த்விதீயஸ்கந்தத்தில் ஜனனநிரூபணமென்ற ஐந்தாவது அத்தியாயம் மூற்றிற்று.

ஆறுவது அத்தியாயம்.

(அ–கை) षष्ठे विराड्विभूतिश्च प्रोक्ताऽध्यात्मादिभेदतः।
दृढीकृतश्च पूर्वोक्तं सर्वं पुरुषसूक्ततः ॥ १ ॥

(க–ரை) இந்த ஆறுவது அத்தியாயத்தில் அத்யாத்மாதிபேத மூலம் விராட்விபூதியை யுபதேசித்து முந்தின அத்தியாயத்தில்

(*) பொதுவாய் இந்த அத்தியாயத்தில் லோககல்பனையானது உபாஸனைக்கு வேண்டியே சொல்லப்பட்டது அந்தந்த உலகங்களை விராட் ரூபியான பதவதங்கமாகத் தியானிக்கவேண்டுமென்பது பெறப்பட்டது. பொதுவாய் உலகங்கள் 14என்றும், 7 என்றும், மூன்று என்றும் மூன்று விதமாகச் சொல்லப்படுவதுண்டு. அம்மூன்று விதத்தை யொட்டியும் இந்த அத்தியாயத்தில் உபாஸனம் சொல்லப்பட்டிருக்கிறது.

अथ षष्ठोऽध्यायः ॥

ब्रह्मोवाच—वाचां वह्नेर्मुखं क्षेत्रं छन्दसां सप्त धातवः। हव्यकव्यामृतान्नानां जिह्वा सर्वरसस्य च ॥ १ ॥ सर्वासूनां च वायोश्च तन्नासे परमायने। अश्विनोरोषधीनां च घ्राणो मोदप्रमोदयोः॥ २ ॥ रूपाणां तेजसां चक्षुर्दिवः सूर्यस्य चाक्षिणी। कर्णौ दिशां च तीर्थानां श्रोत्रमाकाश

சொல்லப்பட்டயாவும் புருஷசூக்ததத்தைக் கொண்டு திருடப்படுத்தவும் பட்டிருக்கிறது. (1) (எ–று)

ப்ரம்ஹா சொல்லலுற்றார்—நம்போன்றவர்களின் வாகிந்திரியங்களுக்கும், அவற்றுக்கு அதிஷ்டாதாவான அக்னிதேவனுக்கும் அவருடைய முகமானது க்ஷேத்திரமாக (உத்பத்திஸ்தானமாக) ஆகும். காயத்ரீ, உஷ்ணிக், அனுஷ்டுப், ப்ருஹதீ, பங்க்தி, த்ரிஷ்டுப், ஜகதீ என்ற எழுச் சந்தஸ்ஸுகளுக்கும் அவருடைய த்வக், அஸிருக், மாம்ஸம், மேதஸ், அஸ்தி, மஜ்ஜா, சுக்ரம் என்ற ஏழு தாதுக்களும் க்ஷேத்திரமாக (உத்பத்திஸ்தானங்களாக) ஆகும். தேவர்களுக்குக் கொடுக்கப்படும் அன்னத்துக்கும், பிதிருக்களுக்குக் கொடுக்கப்படும் அன்னத்துக்கும், இவ்விருவருக்கும் கொடுத்து எஞ்ஜின மனிதர்களின் அன்னத்துக்கும், அவ்விதமே திதிப்பு, உப்பு, உவர்ப்பு, துவர்ப்பு, கசப்பு, புளிப்பு என்ற ஆறுரஸங்களுக்கும் (நம்போன்றவர்களின் ரஸனேந்திரியத்துக்கும், அதற்கு அதிஷ்டாதாவான வருணனுக்கும்) இவருடைய நாக்கானது உத்பத்திஸ்தானமாகவாகும். (1) நம்போன்றவர்களிடமுள்ள எல்லா வாயுக்களுக்கும், வெளியிலுள்ள வாயுவுக்கும் அவருடைய நாஸிகைகள் முக்கியமான உத்பத்திஸ்தானங்களாகவாகும். அஸ்வினீதேவர்களுக்கும், ஓஷதிகளுக்கும், பொதுவாகவும் தனிப்பட்டுமுள்ள மணங்களுக்கும் அவருடைய க்ராணேந்திரியமானது உத்பத்திஸ்தானமாகவாகும். (2) ரூபங்களுக்கும், அவற்றை ப்ரகாசப்படுத்துகின்ற தேஜஸ்ஸுகளுக்கும் அவருடைய சக்ஷுரிந்திரியமும், ஸ்வர்க்கத்துக்கும் சூரியனுக்கும் அவருடைய †நேத்திரகோளகங்

---

† இந்திரியங்கள் எந்த இடத்திலிருந்து தமது காரியங்களைச் செய்கின்றனவோ அவ்விடம் கோளகமெனப்படும்.

शब्दयोः॥ ३ ॥ तद्वात्रं वस्तुसाराणां सौभगस्य च भाजनम्। त्वगस्य स्पर्शवायोश्च सर्वमेधस्य चैव हि ॥४॥ रोमाण्युद्भिज्जजातीनां यैर्वा यज्ञस्तु संभृतः। केशश्मश्रुनखान्यस्य शिलालोहाभ्रविद्युताम् ॥ ५ ॥ बाहवो लोकपालानां प्रायशः क्षेमकर्मणाम्। विक्रमो भूर्भुवः स्वश्च क्षेमस्य शरणस्य च ॥ ६ ॥ सर्वकामवरस्यापि हरेश्चरण आस्पदम्। अपां वीर्यस्य सर्गस्य पर्जन्यस्य प्रजापतेः॥ ७ ॥ पुंसः शिश्न उपस्थस्तु प्रजात्यानन्द-

---

களும், திக்குகளுக்கும் தீர்த்தங்களுக்கும அவருடைய ஸ்ரோத்திர கோளங்களும், ஆகாசம் சப்தம் இவற்றுக்கு அவருடைய ஸ்ரோத் திரேந்திரியமும் உத்பத்திஸ்தானமாகவாகும். வஸ்துக்களிலுள்ள ஸாரமான அம்சங்களுக்கு அவருடையசரீரமான து உத்பத்திஸ்தான மாகவாகும். (3) ஸ்பர்சத்துக்கும், வாயுவுக்கும் எல்லா யாகத்துக் கும் இவருடைய த்வக்கான து உத்பத்திஸ்தானமாகவாகும். எந்த விருக்ஷங்களிலுல் யாகமான து நன்கு அனுஷ்டிக்கப்படுகிறதோ அந்த விருக்ஷஜாதிகளுக்கு அவருடைய உரோமங்கள் உத்பத்தி ஸ்தானமாகவாகும். (4) மேகங்களுக்கு இவருடைய தலமயிரும், மின்னல்களுக்கு இவருடைய மீசைகளும், கற்பாறை உலோகம் இவற்றுக்கு முறையே பாதம், கை இவற்றிலுள்ள நகங்களும் உத் பத்தி ஸ்தானமாகவாகும். பெரும்பாலும் பாலனரூபமான காரி யத்தை யுடையவர்களான லோக பாலர்களுக்கு இவருடைய கைகள் உத்பத்திஸ்தானங்களாகின றன. (5)

பூலோகம் புவர்லோகம் ஸுவர்லோகம் இவற்றுக்கு இவரு டைய பாதந்யாஸமான து=அடிவைப்பான து, உத்பத்திஸ்தானமாக வும், க்ஷேமத்துக்கும் (கிடைத்ததைக் காப்பாற்றுதலுக்கும்) சர ணத்துக்கும் (பயத்திலிருந்து காப்பாற்றலுக்கும்) ஸமஸ்தமான காம வரணத்துக்கும் ஹரியினுடைய சரணமான து ஆஸ் பதமாகவாகும். (6) ஜலத்துக்கும், சுக்கிரத்துக்கும், ஹிருஷ்டிக் கும், மேகத்துக்கும் விராட்புருஷனுடைய ஆண்குறியும், ஸந்த திக்குவேண்டி செய்யப்படும் ஸம்போகத்தினாலுண்டாகும் தாப நிவிருத்திக்கு அவருடைய உபஸ்தமென்ற இந்திரியமும் உத்பத்தி ஸ்தானமாக வாகின்றது. (7) ஹே நாரத! யமனுக்கும், மித்திர னுக்கும், மலத்தை வெளிவிடுவதற்கும் அவருடைய பாயு என்ற

निर्वृतेः॥ ७॥ पायुर्यमस्य मित्रस्य परिमोक्षस्य नारद। हिंसाया निर्ऋते-
र्मृत्योर्निरयस्य गुदः स्मृतः॥ ८॥ पराभूतेरधर्मस्य तमसश्चापि पश्चिमः।
नाड्यो नद्यनदीनां तु गोत्राणामस्थिसंहतिः॥ ९॥ अव्यक्तरससिन्धूनां
भूतानां निधनस्य च। उदरं विदितं पुंसो हृदयं मनसः पदम्॥१०॥ धर्मस्य
मम तुभ्यं च कुमाराणां भवस्य च। विज्ञानस्य च सत्त्वस्य परस्यात्मा

இந்திரியமும், ஹிம்ஸைக்கும் அலக்ஷ்மிக்கும் மிருத்யுவுக்கும் நரகத்துக்கும் அவருடைய குதமென்ற ஸ்தானமும் உத்பத்திஸ்தானங்களாக வாகின்றன. (8) அவமானத்துக்கும் அதர்மத்துக்கும் அக்ஞானத்துக்கும் அவருடைய பிருஷ்டபாகமும், மேற்கு நோக்கிச்செல்லுகின்ற ஆறுகளுக்கும் கிழக்குநோக்கிச் செல்லுகின்ற நதிகளுக்கும் அவருடைய நரம்புகளும், மலைகளுக்கு அவருடைய எலும்புகளின் கூட்டமும் உத்பத்திஸ்தானங்களாக வாகின்றன.(9) ப்ரதானம், அன்னதிகளின் ஸாரம், ஸமுத்திரம், ப்ராணிகள் இவற்றின் லயத்துக்கு விராட்புருஷனுடைய வயிறுனது ஸ்தானமாக வாகிறது. நம்போன்றவர்களின் லிங்க (சூக்ஷ்ம) சரீரத்துக்கு அவருடைய ஹிருதயமானது ஸ்தானமாகவாகிறது. (10) தர்மத்துக்கும் எனக்கும் உனக்கும் ஸனகாதிகளான குமாரர்களுக்கும் ருத்திரனுக்கும் விக்ஞானத்துக்கும் ஸத்துவத்துக்கும் பரனான விராட் புருஷனுடைய சித்தமானது ஸ்தானமாகவாகிறது. (11)

†நானும், நீயும், ஸ்ரீருத்திரனும், உனக்கு முன்னுண்டான இந்த ஸனகாதி முனிகளும், தேவர், அஸுரர், மனிதர், யானைகள்,

---

† பொன்னுற் செய்யப்பட்ட குண்டலமானது பொன்னைவிட எவ்விதம் வேறுபட்டதாகவாவதில்லையோ இவ்விதமே ஸர்வகாரணரான பரமேசுவரனிடமிருந்துண்டான ப்ரபஞ்சமானது அவரைக் காட்டிலும் வேறுபட்டதன்று. அவரோ ஸர்வநியந்தாவும், ஸர்வ ப்ரகாசகரும் நித்ய முக்தரும் ஆவார் என வுபதேசிக்கப்பட்டதாக ஏற்பட்டது. இதையே புருஷஸூக்தத்தினாலும் திருடப்படுத்தவேண்டி सहस्रशीर्षा என்ற பாதிருக்கினுடையவும், ब्राह्मणोऽस्य मुखमासीत् என்றதாதி மூன்று ருக்குகளுடையவும் அர்த்தமானது முந்தின அத்தியாயத்திலேயே வுபதேசிக்கப்பட்டது. पुरुषएवेदं सर्वम् என்ற ருக்கினுடைய அர்த்தமானது $3\frac{1}{2}$ சுலோகங்களினாலுபதேசிக்கப்படுகிறது.

परायणम् ॥ ११ ॥ अहं भवान्भवश्चैव त इमे मुनयोऽग्रजाः। सुरासुरनरा नागाः खगा मृगसरीसृपाः॥ १२ ॥ गन्धर्वाप्सरसो यक्षा रक्षोभूतगणोरगाः। पशवः पितरः सिद्धा विद्याध्राश्चारणा द्रुमाः॥ १३ ॥ अन्ये च विविधा जीवा जलस्थलनभौकसः। ग्रहर्क्षकेतवस्तारास्तडितस्तनयित्नवः॥ १४ ॥ सर्वं पुरुष एवेदं भूतं भव्यं भवच्च यत्। तेनेदमावृतं विश्वं वितस्तिमधि तिष्ठति ॥ १५ ॥ स्वधिष्ण्यं प्रतपन्प्राणो बहिश्च प्रतपत्यसौ।

பறவைகள், மிருகங்கள், பாம்புகள், கந்தர்வர், அப்ஸரஸ், யக்ஷர், ராக்ஷஸர், பூதகணங்கள், மார்பினால் ஊர்ந்துசெல்லும் பிராணிகள், பசுக்கள், பிதிருக்கள், ஸித்தர், வித்தியாதரர், சாரணர், மரங்கள், ஜலம் தரை ஆகாசம் இவ்விடங்களில் வஸிக்கின்ற மற்றுமுள்ள பலதரப்பட்ட ஜீவன்கள், செவ்வாய் முதலிய கிரஹங்கள், அச்வினீ முதலிய நக்ஷத்திரங்கள், தூமகேது முதலிய வால்நீண்ட நக்ஷத்திரங்களாகிற கேதுக்கள், மற்றுமுள்ள நக்ஷத்திரங்கள், மின்னல்கள், மேகங்கள், சென்றது நிகழ்வது வரப்போவதுமாகியவை எவையுண்டோ இது, ஆகிய இவையாவும் புருஷனே = புருஷசப்தவாச்யனான பகவானே, யாகும். அந்தப் புருஷனால் இந்த ஜகத்தானது மறைக்கப்பட்டிருக்கிறது. அவர் *அதிகமாக (எந்தப் பரிமாணத்தையும் கடந்தவராக) எல்லாவற்றிலும் பரவி நிற்கிறார். (15) ப்ராணசப்தத்தினால் சொல்லப்படும் இந்தச் சூரியன் தனது மண்டலத்தைப் பிரகாசப்படுத்திக்கொண்டு வெளியிலும் எவ்விதம் ப்ரகாசத்தைத்தருகின்றாரோ இவ்விதமே இந்தப் புருஷசப்தவாச்யனான பகவானும், விராட்தேஹத்தை ப்ரசாசப்படுத்திக் கொண்டு ப்ரம்ஹாண்டத்துக்கு உள்ளிலும் வெளியிலும் ப்ரகாசத்தைத் தருகிறார். (16) ஹே ப்ரம்ஹன்!=நாரத! மரணத்தைத் தரக்கூடிய கர்மபலனைக் கடந்தவராக இருப்பதுபற்றி அபயமான

---

* वितस्तिमधितिष्ठति என்பது மூலம். वितस्ति, अधि तिष्ठति எனப் பிரித்துக்கொண்டு वितस्तिम्=விதஸ்தியை अधि=கடந்து. அதாவது:— விதஸ்தி முதலிய பரிமாணத்தைக் கடந்து तिष्ठति = பரவிநிற்கிறார். என்று ஸ்ரீதரீயத்தில் உரை எழுதப்பட்டிருக்கிறது. இதையே அடுத்த சுலோகத்தினால் திருஷ்டாந்தமூலம் விளக்குகிறார்.

एवं विराजं प्रतपंस्तपत्यन्तर्बहिः पुमान्॥ १६ ॥ सोऽमृतस्याभयस्येशो मर्त्यमन्नं यदत्यगात्। महिमैष ततो ब्रह्मन्पुरुषस्य दुरत्ययः॥ १७ ॥ पादेषु

அமிருதத்வத்துக்கும்=ஸ்வரூபானந்தத்துக்கும், அவர் ஈஸ்வராக வாகிறார். ஆனதுபற்றி ப்ரபஞ்சாத்மகராக இருந்தபோதிலுங்கூட அமிருதத்துக்கும் ஈசனுகுதல் என்ற அவருடைய மஹிமையானது அபாரமானதேயாகும். (17)

அரசன் சொல்லலுற்றார்—ஹே ப்ரம்ஹன்! குணதீதரான பகவானுடைய குணங்களைச் சொல்லும் விஷயத்தில் ப்ரம்ஹதேவனுலேவப்பட்டவரும், வாசுதேவனுக்கொப்பான ச்ஞானமுள்ளவருமான நாரதர் யார்யாருக்கு எவ்வெவ்விதம் உபதேசித்தார்.(1) தத்துவமறிந்தவர்களுக்குள் சிறந்தவரே! அத்புதமான வீர்யத்தையுடையவரான ஹரியினுடைய கதைகளோ உலகுக்குச் சிறந்த மங்களங்களைத் தரக்கூடியன. ஆகவே இந்த தத்துவத்தை அறிந்துகொள்ள விரும்புகிறேன். (2) ஹே மஹாபாக! நான் வேறு எதிலும் பற்றற்றமனதை ஸ்வாத்மாவான ஸ்ரீகிருஷ்ணனிடத்தில் †செலுத்திச் சரீரத்தை எவ்விதம் விடுவேனோ அதற்குத்தக்கபடி உபதேசிப்பீராக.(3) ‡தனதுசரித்திரத்தை ஸ்ரத்தையுடன் ஸ்ரவணஞ்செய்பவருடையவும், சொல்லுபவருடையவும் ஹிருதயத்தில் வெகு சீக்கிரமான காலத்தில் பகவான் ப்ரவேசித்துவிடுகிறார்.(4) சொந்தமான பக்தர்களின் ஹிருதயகமலத்தில் காதுகளின் ஓட்டைவழியாகப் பிரவேசித்தவரான ஸ்ரீகிருஷ்ணன் ஜலத்தின் அழுக்கைச்சரத்காலம் போக்குவதுபோல ஹிருதயத்திலுள்ள எல்லாப் பாபத்தையும் போக்கிவிடுகிறார்*. (5) பாபஸம்பந்தமற்ற மனதையுடையவனும்,

---

†பகவானிடத்தில் மனஸ்ஸைச்செலுத்துவதற்கு நான் செய்யவேண்டிய முயற்சி என்னை? என்பது கருத்து. ‡ சிரத்தையுடன் பகவத்கதாச்ரவணஞ்செய்பவர்க்கு அம்முயர்ச்சி கூட வேண்டுவதில்லை என இதனால் சொல்லுகிறார். *குடத்திலுள்ள வண்டல் ஜலத்தில் தேத்தாங்கொட்டையை அரைத்துக் கலந்தால் அந்த ஜலம் மட்டும் தெளிந்துவிடும். ஆனால்

मूलं न मुञ्चति । मुक्तसर्वपरिक्लेशः पान्थः स्वशरणं यथा ॥ ६ ॥ यद्-धातुमतो ब्रह्मन्देहारम्भोऽस्य धातुभिः । यदृच्छया हेतुना वा भवन्तो जानते यथा ॥ ७ ॥ आसीद्यदुदरात्पद्मं लोकसंस्थानलक्षणम् । यावानयं

ராகத்வேஷாதிகளாகிற கிலேசங்களினின்றும் விடுபட்டவனுமான புருஷன், வெகுகாலம் வெளியிலலைந்து திரும்பிவந்தவன் தனது வீட்டை எவ்விதம் விடமாட்டானோ அவ்விதமே ஸ்ரீகிருஷ்ணனுடைய பாதமூலத்தை விடமாட்டான். (6) (*)ஹே ப்ரமஹன்! மஹாபூத ஸம்பந்தமற்றவனான இந்த ஜீவனுக்கு ஆகாசாதி மஹாபூதங்களினால் தேஹமேற்படுகிறது என்பது யாதுண்டோ இது நிமித்தமின்றியே ஏற்படுகிறதா? அல்லது யாதேனும் காரணமூல மேற்படுகிறதா? இதைத் தாங்கள் உள்ளபடி அறிவீர்களாதலால் எனக்கு அதைச்சொல்லவேண்டும். (7) [*]உலகின் அமைப்பையே ஸ்வரூபமாகவுடைய பத்மமானது (தாமரைப்பூவானது) எவருடைய வயிற்றி(நாபியி)லிருந்து உண்டாயிற்றோ அந்த ஈச்வரன், தன்னுள்ளடங்கின அவயவங்களினால் இந்த ஜீவன் எத்துணை எண்ணுள்ள

வண்டல் குடத்தின் அடியில் அடங்கிக்கிடக்குமேயொழிய வேறிடம் போகாது. எப்பொழுதேனும் ஜலத்தைக் கலக்கினால் அதே வண்டல் மறுபடியும் அந்த ஜலத்துடன் கலக்கும். மழைக்காலத்தில் கலங்கின நதியின் ஜலமோ முற்கூறிய முறையினால் தெளிய இடமில்லை. ஆயினும் சரத்காலம் வந்தால் ஒரே ஸமயத்தில் எல்லா ஜலமும் தெளிந்துவிடுகிறது. அதுபோலவே தவம் தானம் முதலியவற்றினால் சிலருடைய சித்தம் ஒருவாறு தெளிந்தபோதிலும், எல்லாருடைய சித்தமும் தெளிவதில்லை. மேலும் யாதேனுமொரு காரணத்தை முன்னிட்டு அது அசுத்தப்படவுங்கூடும். கதாச்ரவண கீர்த்தன மூலம் பகவான் சித்தத்தில் ப்ரவேசித்தாலோ ஒரே ஸமயத்தில் எல்லாருடைய சித்தமும் தெளிந்து அதிலிருந்து எல்லாவிதமான பாபமும் விலகிவிடுகிறது என்பது सलिलस्य यथा शरत् என்ற திருஷ்டாந்தத்தினால் சொல்லப்பட்டதாகக் கொள்ளவும். (*) இவ்விதம் ச்ரவணஞ்செய்வதில் தனக்குள்ள ஆவலை வெளியிட்டு ஸந்தேஹித்த விஷயங்களைப்பற்றிக் கேட்கிறார். [*] யாதொரு ஈச்வரனுண்டோ அவரும் ஜீவனுக்கொப்பான தேஹமுள்ளவராகவே சொல்லப்பட்டார். ஆகவே அவருக்குள்ள விசேஷம் யாது? எனக் கேட்கிறார்.

वै पुरुष इयत्तावयवैः पृथक्। तावानसाविति प्रोक्तः संस्थावयववानिव ॥ ८ ॥ अजः सृजति भूतानि भूतात्मा यदनुग्रहात्। ददृशे येन तद्रूपं नाभिपद्मसमुद्भवः॥ ९ ॥ स चापि यत्र पुरुषो विश्वस्थित्युद्भवाप्ययः। मुक्त्वात्ममायां मायेशः शेते सर्वगुहाशयः॥ १० ॥ पुरुषावयवैर्लोकाः सपालाः पूर्वकल्पिताः। लोकैरमुष्यावयवाः सपालैरिति शुश्रुम ॥ ११ ॥ यावान्कल्पो विकल्पो वा यथा कालोऽनुमीयते। भूतभव्यभवच्छब्द आयु-

---

அவயவங்களுடன் கூடினவனே, அத்துணை என்ணுள்ள அவயவங்களுடன் கூடினவனென்றும், அவயவங்களின் அமைப்புள்ளவர்போலும் அவயவமுள்ளவர் போலும் இருக்கிறார் என்றும் சொல்லப்பட்டார். (ஆகவே ஜீவனைவிட இவருக்குள்ள விசேஷம் யாது?) (8) பகவானுடைய நாபி கமலத்திலிருந்து உண்டானவரும், பூதங்களுக்கு=வியஷ்ட்யுபாதிகளான ப்ராணிகளுக்கு, ஆத்மாவும், (நியந்தாவும்) ஆன, ப்ரம்ஹதேவன் எவரது அனுக்கிரஹத்தினல் அந்த பகவத்ரூபத்தைக் கண்டாரோ, எவருடைய அனுக்கிரஹத்தினல் பூதங்களை=வ்யஷ்ட்யுபாதிகளான ப்ராணிகளை, ஸிருஷ்டிக்கின்றாரோ (அந்த ப்ரம்ஹதேவனுக்கும், அவருக்கு அனுக்கிரஹித்த ஈச்வரனுக்கும் விசேஷமிருந்தே தீரவேண்டும். அது யாது?) (9)

†ப்ரபஞ்சத்தின் ரக்ஷணம் உத்பத்தி ப்ரளயம் இவற்றுக்குக் காரணமானவரும், எல்லா ப்ராணிகளுடையவும் ஹிருதயகுஹையில் வஸிப்பவரும், மாயைக்கு நியந்தாவுமான அந்தப் புருஷனும், தன மாயையை விடுத்து எங்கு சயனித்துக்கொண்டிருக்கிறார்? அதாவது:—எந்த ரூபத்துடனிருக்கிறார்? (10) புருஷனுடைய அவயவங்களினுல் லோகபாலர்களுடன் கூடின உலகங்கள் கல்பிக்கப்பட்டன என்று முன்னரும் லோகபாலர்களுடன் கூடின உலகங்களினுல் இந்தப்புருஷனுடைய அவயவங்கள் ஏற்படுவதாக இப்பொழுதும் உமது வாயிலிருந்தே நாங்கள் கேட்டோம்‡. (11) மஹா கல்பம்

---

† இதனுல் வேறு கேள்வி கேட்கப்படுகிறது. ‡ புருஷனுடைய அவயவங்களில் உலககல்பனை செய்யவேண்டுவதாகச் சொன்னதும், உலகங்களில் புருஷனுடைய அவயவகல்பனை செய்யவேண்டுவதாகச் சொன்னதும் எப்படிப் பொருந்தும் என்பது அரசனுடைய ஸந்தேஹம்.

मानं च यत्सतः॥ १२ ॥ कालस्यानुगतिर्या तु लक्ष्यतेऽण्वी बृहत्यपि। यावत्यः कर्मगतयो यादृशीर्द्विजसत्तम ॥ १३ ॥

यस्मिन्कर्मसमावायो यथा येनोपगृह्यते। गुणानां गुणिनां चैव परिणाममभीप्सताम् ॥ १४ ॥ भूपातालककुब्व्योमग्रहनक्षत्रभूभृताम्। सरित्समुद्रद्वीपानां संभवश्चैतदोकसाम् ॥१५॥ प्रमाणमण्डकोशस्य बाह्याभ्यन्तरभेदतः। महतां चानुचरितं वर्णाश्रमविनिश्चयः॥ १६ ॥ अवतारानुचरितं यदाश्चर्यतमं हरेः। युगानि युगमानं च धर्मो यश्च युगेयुगे॥ १७ ॥

எத்துணை காலமுள்ளது. அவாந்தரகல்பம் எத்துணை காலமுள்ளது. சென்றது என்றும், நிகழ்வது என்றும், வருவது என்றுமான சப்தத்தையுடைய (சப்தத்தாற் சொல்லப்படுகின்ற) காலத்தை ஊஹித்தறிந்து கொள்ளுவது எப்படி? ஸத்துக்கு=ஸ்தூலமான தேஹத்தையுடைய மனிதன் பிதிருக்கள் தேவர்கள் முதலியவற்றுக்கு, ஆயுளின் ப்ரமாணம் எவ்வளவு? (12) ஹே த்விஜஸத்தம! அணுவாயும், பெரிதாயுமுள்ள காலத்தின் ப்ரவிருத்தியையறிந்து கொள்ளுவது எப்படி? கர்மங்களினுல் அடையக்கூடிய ஸ்தானங்+ள் எத்துணை? அவை எம்மாதிரியுள்ளன? (13) ஸத்துவாதி குணங்களின் பரிணமமான தேவாதி சரீரத்தையடைய விருப்பங்கொண்ட குணிகளான ஜீவர்களுக்குள் எந்தப் பரிணமத்தில் (சரீரத்தில்) புண்ணியபாபகர்மங்களின் ஸமுதாயமேற்படுகிறது? அது ஏற்படும் முறையாது? எவ்விதம் அனுஷ்டித்த எந்தக் கர்மத்தினுல் எந்த அதிகாரியானவன் தேவாதிப் பிறவியையடைகிறான்? (14) பூமி, பாதாளம், திக்கு, ஆகாசம், கிரஹம், நக்ஷத்திரம், மலை, நதி, ஸ்முத்திரம், த்வீபம் (தீவு) இவற்றினுத்பத்தி எப்படி? இவற்றைச் சரீரமாகவுடைய ப்ராணிகளினுத்பத்தி எப்படி? (15) உள்ளும் வெளியுமான பேதத்தையொட்டி அண்டகோசத்தின் ப்ரமாணம் எப்படி? மஹான்களின் சரித்திரம் என்னை? ப்ராம்ஹணதிவர்ணங்களுடையவும் ப்ரம்ஹசர்யாதி ஆஸ்ரமங்களுடையவும் நிஸ்சயம் எப்படி? (16) ஒவ்வொரு யுகந்தோரும் மிக்க ஆஸ்சரியம் வாய்ந்த ஹரியினுடைய அவதாரசரித்திரம் என்னை? யுகமென்பது என்னை? யுகங்களின் அளவும் தர்மமும் யாது? (17) மனிதர்களின் பொது

नृणां साधारणो धर्मः सविशेषश्च यादृशः। श्रेणीनां राजर्षीणां च धर्मः कृच्छ्रेषु जीवताम् ॥ १८ ॥ तत्त्वानां परिसंख्यानं लक्षणं हेतुलक्षणम्। पुरुषाराधनविधिर्योगस्याऽऽध्यात्मिकस्य च ॥१९॥ योगेश्वरैश्वर्यगतिर्लिङ्गभङ्गस्तु योगिनाम्। वेदोपवेदधर्माणामितिहासपुराणयोः॥ २० ॥ संप्लवः सर्वभूतानां विक्रमः प्रतिसंक्रमः। इष्टापूर्तस्य काम्यानां त्रिवर्गस्य च यो विधिः॥ २१ ॥ यश्चानुशायिनां सर्गः पाषण्डस्य च संभवः। आत्मनो बन्धमोक्षौ च व्यवस्थानं स्वरूपतः॥२२॥ यथाऽऽत्मतन्त्रो भगवान्विक्रीड-

---

வான தர்மமும் வர்ணஸ்ரமவிசேஷத்தைமுன்னிட்ட தர்மமும் எம் மாதிரியானது? அவரவர்களுக்குறிய தொழில்கொண்டு ஜீவிக்கும் ஜனங்களுக்கு வியவஹாரத்தை வறையறுக்கும் தர்மமும், ப்ரஜை களின் பாலனவிஷயத்தில் அதிகாரமுள்ளவர்களான ராஜர்ஷிகளின் தர்மமும், ஆபத்காலத்தில் ஜீவிக்கும் ப்ராணிகளின் தர்மமும் என்னை? (18) ப்ரகிருதி முதலிய தத்துவங்களின் எண் எவ்வ ளவு? அவை அந்தந்த காரியத்துக்கு ஹேதுவாகவாவதற்குறிய லக்ஷணம் என்னை? பகவதாராதன முறை என்னை? ஆத்மதர்ச னத்துக்கு ஸாதனமான அஷ்டாங்க யோகத்தின் விதி என்னை?(19) யோகேஸ்வரர்களுக்கு அணிமா முதலிய ஐஸ்வரியத்திலுல் வரும் அர்ச்சிராதி மார்க்கம் யாது? யோகிகளுக்கு லிங்கசரீரத்தின் பங்கம் (நாசம்) ஏற்படுவது எப்படி? ருக்வேதம் முதலிய வேதங் களுடையவும், ஆயுர்வேதம் முதலிய உபவேதங்களுடையவும், தர்மசாஸ்திரங்களுடையவும், இதிஹாஸம், புராணம் இவற்றினு டையவும் ஸ்வரூபம் என்னை? (20) எல்லாப்ராணிகளுடையவும் உத்பத்தியும், ஸ்திதியும், ப்ரளயமும் எப்படி? இஷ்டமென்ற வைதிகமான யாகாதிகர்மங்களுடையவும், பூர்த்தமென்ற ஸ்மார்த்த கர்மங்களுடையவும், அவற்றுள் காம்யமான அக்னிஹோத்ராதி களுடையவும் விதி என்னை? தர்மார்த்த காமங்களுக்குள் விரோ தமில்லாதிருத்தல் எப்படி? (21) உபாதி லயத்தையடைந்த ஜீவர்களுடையவும், பாஷண்ட (வைதிக ஸம்ஸ்காரம் பெறு தவ) னுடையவும் உத்பத்தி எப்படி? ஜீவனுக்கு வரும் பந்த மோக்ஷங்களும், அவற்றைக் கடந்து அவன் ஸ்வரூபத்துடன் நிற்ற

त्यात्ममायया। विसृज्य वा यथा मायामुदास्ते साक्षिवद्विभुः॥ २३ ॥ सर्वमेतच्च भगवन्पृच्छते मेऽनुपूर्वशः। तत्त्वतोऽर्हस्युदाहर्तुं प्रपन्नाय महामुने ॥ २४ ॥ अत्र प्रमाणं हि भवान्परमेष्ठी यथात्मभूः। परे चेहानुतिष्ठन्ति पूर्वेषां पूर्वजैः कृतम् ॥ २५ ॥ न मेऽसवः परायन्ति ब्रह्मन्ननशनादमी। पिबतोऽच्युतपीयूषमन्यत्र कुपिताद्द्विजात् ॥ २६ ॥ सूत उवाच—स उपामन्त्रितो राज्ञा कथायामिति सत्पतेः। ब्रह्मरातो भृशं प्रीतो विष्णुरातेन संसदि ॥ २७ ॥ प्राह भागवतं नाम पुराणं ब्रह्मसंमितम्। ब्रह्मणे भगव-

---

லும் எப்படி? (22) பகவான் ஸ்வதந்திரனுகத் தனது மாயையுடன் விளையாடுவது எப்படி? ப்ரளயத்தில் விபுவான பகவான் மாயையை விலக்கிவிட்டு ஸாக்ஷிபோல விலகியிருப்பது எப்படி? (23) மஹாமுனே! ஹே பகவன்! ப்ரஸ்னஞ்செய்கின்றவனும், ப்ரபன்னனுமான எனக்கு இவையாவையும் உள்ளபடிக்கிரமமாக உபதேசிப்பீராக. (24) இவ்விஷயத்தில் ஆத்மபூவான=பரமாத்மாவினிடமிருந்துண்டான, ப்ரம்ஹதேவன்போல நீர் ப்ரமாணமாகவாகிறீர். உம்மைத்தவிர்த்து மற்றவர்களோ (தத்துவத்தையறியாதவர்களாய்) முன்னுள்ளவர்களுக்கு முன்னுள்ளவர்களாற் செய்யப்பட்டதையே அனுஷ்டித்துவருகின்றனர். (ஆனதுபற்றி அவர்கள் வார்த்தை ப்ரமாணமாகவாகமாட்டாது.) (25) ஹே ப்ரம்ஹன்! கோபத்தையடைந்த ப்ராம்ஹணனைத் தவிர்த்து ஆஹாரமின்மை முதலிய எதனுலும் அச்யுதனுடைய கதாமிருதத்தைப் பானஞ்செய்கின்ற என்னுடைய இந்த ப்ராணன்கள் கலக்கத்தையடையா என்றூர். (26) சூதர் சொல்லலுற்றூர்—அந்தச் சபையில் விஷ்ணுராதரான அரசனுல் ஸத்ரூபியும் பதியுமான பகவானுடைய கதை விஷயத்தில் இவ்விதம் கேட்கப்பட்ட அந்த ப்ரம்ஹராதரான சுகர் மிக்க ப்ரீதியையடைந்தவராய் *ப்ரம்ஹ கல்பமானது வந்தபொழுது ப்ரம்ஹதேவனுக்குப் பகவானுல் சொல்லப்பட்டதும், வேத துல்யமானதும் பாகவதம் என்ற பெயருள்ளதுமான புராணத்தைச் (*)சொல்லத்

---

* விருஷ்டியினுதியிலுள்ள கல்பம் ப்ரம்ஹகல்பமெனப்படும்.

(*) பாகவதத்தைச்சொல்லும் வாயிலாகவே அரசன் கேட்ட கேள்விகளுக்குப் பதில் சொல்லத்தொடங்கினர் என்று பொருள்.

त्प्रोक्तं ब्रह्मकल्प उपागते ॥ २८ ॥ यद्यत्परीक्षिदृषभः पाण्डूनामनुपृच्छति।
आनुपूर्व्येण तत्सर्वमाख्यातुमुपचक्रमे ॥ २९ ॥

इति श्रीमद्भागवते महापुराणे द्वितीयस्कन्धे प्रश्नविधिर्नाम
अष्टमोऽध्यायः ॥ ८ ॥

अथ नवमोऽध्यायः ॥

श्रीशुक उवाच—आत्ममायामृते राजन्परस्यानुभवात्मनः। न घटे-
तार्थसंबन्धः स्वप्नद्रष्टुरिवाञ्जसा ॥ १ ॥ बहुरूप इवाभाति मायया बहु-

---

தொடங்கினர். (27–28) பாண்டவ ஸ்ரேஷ்டனான பரீக்ஷித்து எதை எதைக்கேட்டாரோ அவையாவையும் முறையே சொல்லத் தொடங்கினர். (29) (எ–று)

இவ்விதம் ஸ்ரீமத்பாகவத மஹாபுராண த்விதீயஸ்கந்தத்தில் ப்ரஶ்னவிதி என்ற எட்டாவது அத்தியாயம் முற்றிற்று.

ஒன்பதாவது அத்தியாயம்.

(அ–கை) राजप्रश्नोत्तरं वक्ष्यन् ब्रह्मणे हरिणोदितम्।
कथयामास नवमे शुको भागवतं पुनः ॥ १ ॥

(க–ரை) ஸ்ரீசுகாசாரியர் அரசனுடைய கேள்விகளுக்குப் பதில் சொல்லப் போகின்றவராய்க் கொண்டு ப்ரம்ஹதேவனுக்கு ஹரியினால் சொல்லப்பட்ட பாகவதத்தைச் சொன்னார் என ஒன்பதாவது அத்தியாயத்தில் சொல்லப்படுகிறது. (1) (எ–று)

ஸ்ரீசுகர் சொல்லத்தொடங்குகிறார்–†ஹே ராஜன்! ஸ்வப்பினம் காண்பவனுக்குநித்ராரூபமான மாயை இல்லாவிடில் ஸ்வப்பினதேஹஸம்பந்தமானது எவ்விதம் ருஜுவாகப் பொருந்தாதோ, அவ்விதமே ப்ரகிருத்யாதிகளைவிட வேறுபட்டவனும் அனுபவ (க்ஞான) ஸ்வரூபனு

---

† முந்தின 8-வது அத்தியாயத்திலுள்ள यदधातुमतः என்ற 7-வது சுலோகத்தால் ஜீவனுக்கு எப்படி தேஹஸம்பந்தம் வருகிறது என்று கேட்டதற்கு இதனால் பதில் சொல்லுகிறார்.

रूपया। रममाणो गुणेष्वस्या ममाहमिति मन्यते ॥२॥ यर्हि वाव महिम्नि स्वे परस्मिन्कालमाययोः। रमेत गतसंमोहस्त्यक्त्वोदास्ते तदोभयम् ॥३॥ आत्मतत्त्वविशुद्ध्यर्थं यदाह भगवानृतम्। ब्रह्मणे दर्शयन्रूपमव्यलीकव्रताहृतः॥ ४ ॥ स आदिदेवो जगतां परो गुरुः स्वधिष्ण्यमास्थाय सिसृक्षयै

மான ஆத்மாவுக்குப் பரமாத்மாவான ஹரியினுடைய மாயை இல்லாவிடில் தேஹாதிபதார்த்தங்களுடன் ஸம்பந்தமானது ஸம்பவிக்க மாட்டாது. (1) ‡பலதறப்பட்ட ரூபமுள்ள மாயையினால் வெகு ரூபனாகவும்=பாலன் யுவா முதலிய ரூபமுள்ளவனாகவும் தேவன் மனிதன் முதலிய ரூபமுள்ளவனாகவும், தோற்றத்தையடைகிறான். ஆனதுபற்றியே இந்த மாயையின் குணங்களான தேஹாதிகளில் ரமிக்கின்றவனுய் அவற்றில் நான் என்றும் என்னுடையது என்றுமான அபிமானத்தை யடைகிறான். (2) *எப்பொழுது காலம் மாயை இவ்விரண்டுக்கும் வேறுபட்டதும், சொந்தமாகவேயுள்ளதுமான மஹிமையில் (ஸ்வரூபத்தில்) ரமிக்கின்றானோ அப்பொழுது மோஹம் நீங்கி நான் என்றும் என்னுடையது என்றுமான இரண்டையும் விட்டுப் பரிபூர்ண ரூபத்துடனிருக்கிறான். (3) பகவான் கபடமற்ற தவத்தினால் ஸேவிக்கப்பட்டவராய்க்கொண்டு தன்னைப் பஜிக்கின்ற ப்ரம்ஹதேவனுக்கு சைதன்யகனமான ரூபத்தைக் காண்பித்துக் கொண்டு எதையுபதேசித்தாரோ அது ஜீவனுடைய ஸ்வரூப சுத்தியைத் தருவதற்குப் போதுமானதே யாகும்.(*) (4) [*]ஆதிதேவனும், ஜகத்துக்குப் பக்திரஹஸ்யத்தை யுபதேசித்த

---

‡ ஸம்ஸாரமும் மாயையினால் தான் எனச்சொல்லுகிறார். *ஆகவே பக்தியோகத்தினால் நான், என்னுடையது என்ற அபிமானத்தை நீக்கினதும் மோக்ஷமும்கிடைத்துவிடுகிறது என இதனாலுபதேசிக்கிறார். (*)ஜீவனுக்கு அவித்யையினால் பொய்யான தேஹாதி ஸம்பந்தம் ஏற்படுகிறது. ஈச்வரனுக்கோ யோகமாயையினால் சைதன்னியகனமான லீலா விக்ரஹத்தின் ஆவிர்ப்பாவம் ஏற்படுகிறது. ஆகவே ஈச்வரவிக்ரஹத்தில் செய்யப்படும் பக்தியினால் ஜீவனுக்கு மோக்ஷமேற்படுகிறது என்பது கருத்து. [*]பகவத் பஜனத்தினாலேயே தத்துவக்ஞானமுண்டாகிறது என்பதை விரித்துரைக்கப்போகின்றவராய் ப்ரம்ஹதேவனுக்கும் அவருடைய பஜனத்தினால் தான் தத்வக்ஞானமுண்டாயிற்று என்பதைக் காட்டுவதற்காகக் கதையைச் சொல்லுகிறார்.

क्षत । तां नाध्यगच्छद्दृशमत्र संमतां प्रपञ्चनिर्माणविधिर्यया भवेत् ॥ ५ ॥ स चिन्तयन्द्व्यक्षरमेकदाम्भस्युपाशृणोद्द्विर्गदितं वचो विभुः। स्पर्शेषु यत्षोडशमेकविंशं निष्किञ्चनानां नृप यद्धनं विदुः॥ ६ ॥ निशम्य तद्वक्तृ-दिदृक्षया दिशो विलोक्य तत्रान्यदपश्यमानः। स्वधिष्ण्यमास्थाय विमृश्य तद्धितं तपस्युपादिष्ट इवादधे मनः॥ ७ ॥ दिव्यं सहस्राब्दममोघदर्शनो

பரமகுருவுமான அந்த ப்ரப்ஹுதேவன் தனது ஸ்தானமான பத்மத் தையடைந்து (அதாவது:—அந்தப் பத்மம் எங்கிருந்து மூளைத்தது என்பதைக் காணவேண்டி முதலில் ஜலத்தில் முழுகித்தேடியும் அதைக் காணுதவராய் அங்கிருந்து திரும்பித் தனதிருப்பிடமான பத்மத்தையடைந்து என்றும்) ஸ்ருஷ்டிக்கவேண்டுமென்ற விருப் பத்துடன் ஆலோசனைசெய்தார். ஆயினும் எந்த க்ஞானத்தினல் ப்ரபஞ்சத்தின் ஸிருஷ்டிமுறையானது அறியப்பட்டதாகவாகுமோ இந்த ப்ரபஞ்ச ஸிருஷ்டிவிஷயத்தில் எவ்வித மாறுதலுமற்றதான அந்த க்ஞானத்தை அடையாதவராகவே ஆனர். (5) ஹே ந்ருப! ஸிருஷ்டியைப்பற்றிச் சிந்திக்கின்றவிபுவான அந்த ப்ரம்ஹுதேவன் ஒருஸமயம் 'க' முதல் 'ம' முடியவுள்ள எழுத்துக்களுள் பதினுறுவ தான த என்ற எழுத்தும் இருபத்தொன்றுவதான ப என்ற எழுத் தும் உள்ளது எதுவோ, எதை நிஷ்கிஞ்சனர்களுக்கு=(எதிலுமபி மான மற்றவர்களுக்கு) த்தனமாக வறிகின்றனரோ அத்தகையதும் இரண்டெழுத்துள்ளதும், இரண்டுதடவை சொல்லப்பட்டதுமான (தப தப என்ற) வார்த்தையை ஜலத்தில் தனதருகில் கேட்டார்.†

அதைக்கேட்டு அவ்வார்த்தை சொன்னவரைப் பார்க்கவெண் ணங்கொண்டவராய் (அங்கிருந்து கிளம்பி) திக்குகளில் தேடி அங்கு வேறொன்றையும் காணுது திரும்பவும் தனதிருப்பிடம் வந்து எவராலோ நேரிலுபதேசிக்கப்பட்டவர்போல அதை (தபஸ்

---

† ப்ரம்ஹுதேவன் பகவன் நாபிகமலத்திலிருந்து கொண்டு ப்ரபஞ் சத்தை ஸிருஷ்டிப்பது எப்படி? என வாலோசிக்குங்கால் तप, तप, தவஞ் செய் தவஞ்செய் என இரண்டு எழுத்துள்ளவார்த்தையை இரண்டுதடவை சொல்லக்கேட்டார். அது நிஷ்கிஞ்சனர்களுக்குத் தனமாகவுமாகும். அதாவது:—அதைச் செய்பவர் தபோதனர் என அழைக்கப்படுகின்ற னர் என்றும்.

जितानिलात्मा विजितोभयेन्द्रियः। अतप्यत स्माखिललोकतापनं तपस्तपीयांस्तपतां समाहितः। तस्मै स्वलोकं भगवान्सभाजितः संदर्शयामास परं न यत्परम् ॥ ८ ॥ व्यपेतसंक्लेशविमोहसाध्वसं स्वदृष्टवद्भिर्विबुधैरभिष्टुतम्। प्रवर्तते यत्र रजस्तमस्तयोः सत्त्वं च मिश्रं न च कालविक्रमः ॥ ९ ॥ न यत्र माया किमुतापरे हरेरनुव्रता यत्र सुरासुरार्चिताः। श्यामा-

---

ஸை) தனக்கு ஹிதமானதாக நிஸ்சயித்துக் கொண்டு தவத்தில் மனதைச் செலுத்தினர். (7) தவஞ்செய் தவஞ்செய் என்ற வார்த்தையில் பழுதுபடாத அறிவையுடையவரும், ப்ராணன் மனது இரண்டையும் ஜயித்தவரும், க்ஞானேந்திரியங்கள் கர்மேந்திரியங்கள் இரண்டையும் ஜயித்தவரும், தவஞ்செய்பவர்களுக்குள் சிறந்த தபஸ்வியுமான ப்ரம்ஹதேவன் மனதடக்கமுள்ளவராய் தேவவருஷத்தில் ஆயிரம் வருஷங்கள் எல்லாவுலகுக்கும் ப்ரகாசத்தைத் தருகின்ற தவத்தைச் செய்தார். அவ்விதமுபாஸிக்கப்பட்ட பகவான் எதைக் காட்டிலும் சிறந்ததாக மற்றொன்று கிடையாதோ அத்தகைய சிறந்த தனது உலகை (வைகுண்டத்தை) அவருக்குக் காண்பித்தார். (8)

‡எந்த வைகுண்டமானது அவித்யாதிகளான கிலேசங்களும் தேஹாதிகளில் மோஹமும், மரணம் முதலியவற்றினின்றும் பயமும் அற்றதோ, எது நல்ல புண்ணியஞ் செய்தவர்களான தேவர்களினுல் நாலாபக்கங்களிலு மிருந்து கொண்டு ஸ்துதிக்கப்பட்டதோ, எந்தவுலகில் ரஜோகுணமும் தமோகுணமும், இவ்விரண்டுங்கலந்த ஸத்வகுணமும், காலத்தினுலேற்படுமை நாசமும் கிடையாதோ, (9) எந்தவுலகில் மாயைகிடையாதோ அங்கு (மாயைகாரணமாக வுண்டாகின்ற) ராகத்வேஷாதிகள் கிடையாதெனச் சொல்லவும் வேண்டுமோ, எந்த வுலகில் ஹரியின் பார்ஷதர்கள், தேவர் அஸுரர் இவர்களால் பூஜிக்கப்பட்டவர்களும், *இந்திர நீல மணிக் கொப்பானவர்களும் ஆனதுபற்றியே ப்ரகாசிக்கின்றவர்

---

‡ அதே வைகுண்டலோகத்தை ஐந்து சுலோகங்களினுல் வர்ணிக்கிறார். *दशदोषविनिर्मुक्तः श्याम इन्द्रमणिः स्मृतः॥ என்றகோசத்தையொட்டி श्याम=என்ற பதத்துக்கு இவ்விதம் உரையெழுதப்பட்டது.

वदाताः शतपत्रलोचनाः पिशङ्गवस्त्राः सुरुचः सुपेशसः॥ १० ॥ सर्वे चतुर्बाहव उन्मिषन्मणिप्रवेकनिष्काभरणाः सुवर्चसः। प्रवालवैदूर्यमृणालवर्चसः परिस्फुरत्कुण्डलमौलिमालिनः॥ ११ ॥ भ्राजिष्णुभिर्यः परितो विराजते लसद्विमानावलिभिर्महात्मनाम्। विद्योतमानः प्रमदोत्तमाद्युभिः सविद्युदभ्रावलिभिर्यथा नभः॥ १२ ॥ श्रीर्यत्र रूपिण्युरुगायपादयोः करोति मानं बहुधा विभूतिभिः। प्रेङ्खं श्रिता या कुसुमाकरानुगैर्विगीयमाना प्रियकर्म गायती॥ १३ ॥

களும், தாமரஸபுஷ்பம் போன்ற நேத்திரங்களை யுடையவர்களும், பொன்னிறமான வஸ்திரமுள்ளவர்களும், மிக்க வழகுவாய்ந்தவர் களும், மிக ஸுகுமாரமானவர்களும், (10) யாவரும் நான்கு கைகளுள்ளவர்களும், மிக்கவொளிநிறைந்த சிறந்த மணிகளையு டைய பதக்கங்களையும், வேறு ஆபரணங்களையுமுடையவர்களும், மிக்க தேஜஸ்ஸுள்ளவர்களும், பவழம் போலும் வைடூர்யம் போலும் தாமரைத் தண்டுபோலும் நிறமுள்ளவர்களும், சுற்றிலும் ப்ரகாசிக்கின்ற குண்டலங்களையும், கிரீடங்களையும், மாலைகளையு முடையவர்களும் ஆக இருக்கின்றனரோ (11) எந்த வுலகமானது மஹாத்மாக்களான பார்ஷதர் முதலியோரின் சிறந்த காந்தியுள்ள அழகிய விமானக்கூட்டங்களினாலும், சிறந்த ஸ்திரீகளின் காந்தி களினாலும், (*)மின்னல்களுடன் கூடின மேகக்கூட்டங்களினால் ஆகாசமானது போல சுற்றிலும் மிக்க ப்ரகாசிக்கிறதோ, (12) எந்த வுலகில், சிறந்த மூர்த்தியுடன் கூடினவைளும், ஊஞ்ஜலிலே றிக்கொண்டபொழுது (பூவின் மணத்தில் ஆசைகொண்ட) வஸந்த காலத்திய வண்டுகளினால் அதிகம் கானஞ்செய்யப்படுகின்றவ ளும், (அதன் மூலம்) ப்ரியனான ஹரியினுடைய கர்மத்தை (லீலை யை) க் கானஞ்செய்கின்றவள் போலிருக்கின்றவளுமான லக்ஷ்மி யானவள் பலதறப்பட்ட சிறந்த ஸாமக்ரிகளைக்கொண்டு உருகாய னான பகவானுடைய சரணங்களில் பலவிதமான பூஜையைச் செய்கின்றாளோ, (13) அந்த வைகுண்டத்தில், எல்லாப் பக்தர்

(*) இங்கு மின்னல்கள்போல ஸ்தரீகளும், மேகக்கூட்டங்கள்போல விமானக்கூட்டங்களும், ஆகாசம்போல வைகுண்ட லோகமுமிருப்பதாய்க் காண்க.

ददर्श तत्राखिलसात्वतां पतिं श्रियः पतिं यज्ञपतिं जगत्पतिम्। सुनन्दनन्दप्रबलार्हणादिभिः स्वपार्षदमुख्यैः परिसेवितं विभुम् ॥ १४ ॥ भृत्यप्रसादाभिमुखं दृगासवं प्रसन्नहासारुणलोचनाननम्। किरीटिनं कुण्डलिनं चतुर्भुजं पीताम्बरं वक्षसि लक्षितं श्रिया ॥१५॥ अध्यर्हणीयासनमास्थितं परं वृतं चतुःषोडशपञ्चशक्तिभिः। युक्तं भगैः स्वैरितरत्र चाध्रुवैः स्व एव धामन्रममाणमीश्वरम् ॥ १६ ॥ तद्दर्शनाह्लादपरिप्लुतान्तरो हृष्यत्तनुः प्रेमभराश्रुलोचनः। ननाम पादाम्बुजमस्य विश्वसृग्यत्पारमहंस्येन पथा-

---

களுக்கும் பதியும், ஸ்ரீயःபதியும், யக்ஞபதியும், ஜகத்பதியும், ஸுனந்தர் நந்தர், ப்ரபலர், அர்ஹணர் முதலிய தமது பார்ஷத ஸ்ரேஷ்டர்களினுல் சுற்றிலும் நின்று ஸேவிக்கப்பட்டவரும், விபு வும், (14) பக்தர்களுக்கு ப்ரஸாதஞ்செய்வதில் நோக்குள்ளவ ரும், அமுதம் போலப் பார்ப்பவருக்கு ஸந்தோஷத்தைத் தரும் கண்களையுடையவரும், தெளிந்த மந்தஹாஸம் சிவந்த கண் இவற் றை முகத்திலுடையவரும், கிரீடமுள்ளவரும், குண்டலமணிந்த வரும், நான்கு கைகளையுடையவரும், பொன்னிறமான வஸ்திரந் தரித்தவரும், மார்பிலிருக்கின்ற லக்ஷ்மியினுல் அலங்கரிக்கப்பட்ட வரும், (15) சிறந்த ஸிம்ஹாஸனத்தில் வீற்றிருப்பவரும், பர னும், ப்ரகிருதி புருஷன் பஹுத்தத்துவம், அஹந்தத்துவம் ஆகிய நான்கு சக்திகளினுலும், பதினேரு இந்திரியங்கள் ஐந்து மஹா பூதங்கள் ஆகிய பதினறு சக்திகளினுலும், ஐந்துபூத தன்மாத் திரைகளாகிற சக்திகளினுலும் சூழப்பட்டவரும், தன்னைவிட வேறான யோகிகளிடத்தில் நிலைத்திராதனவும் தன்னிடத்திலே யே எப்பொழுது மிருப்பனவுமான ஐச்வரியம், க்ஞானம், சக்தி, பலம், வீர்யம், தேஜஸ் இவற்றுடன் கூடினவரும், இவ்விதமிருந்த போதிலுங்கூட சொந்தமான ஸ்வரூபத்திலேயே ரமிப்பவரும், ஆனதுபற்றியே ஈச்வரனுமான அந்தப் பகவானைக்கண்டார். (16) ப்ரம்ஹதேவன், அவருடைய தரிசனத்தினுலுண்டான ஆனந் தம் நிறைந்த மனதுள்ளவராயும், மயிர்க்குச்சலையடைந்த சரீ ரத்தையுடையவராயும், ப்ரேமாதிக்கியத்தினுல் கண்களில் ஆனந்த பாஷ்யத்தை யுடையவராயுமாகி எந்தச் சரணாரவிந்தமானது பரம ஹம்ஸர்களுக்குறிய க்ஞானமார்க்கத்தினுல் அடையக்கூடியதோ

धिगभ्यते ॥ १७ ॥ तं प्रीयमाणं समुपस्थितं तदा प्रजाविसर्गे निजशासनार्हणम् । बभाष ईषत्स्मितरोचिषा गिरा प्रियः प्रियं प्रीतमनाः करे स्पृशन् ॥ १८ ॥ श्रीभगवानुवाच—त्वयाहं तोषितः सम्यग्वेदगर्भ सिसृक्षया । चिरं भृतेन तपसा दुस्तोषः कूटयोगिनाम् ॥ १९ ॥ वरं वरय भद्रं ते वरेशं माभिवाञ्छितम् । ब्रह्मन्श्रेयःपरिश्रामः पुंसो मद्दर्शनावधिः ॥ २० ॥ मनीषितानुभावोऽयं मम लोकावलोकनम् । यदुपश्रुत्य रहसि चकर्थ परमं तपः ॥ २१ ॥ प्रत्यादिष्टं मया तत्र त्वयि कर्मविमोहिते । तपो मे हृदयं

அந்த இவருடைய சரணாரவிந்தத்தை வணங்கினர். (17) அப்பொழுது ப்ரியனான பகவான் ப்ரீதியையடைந்தவரும், தனது உத்திரவுக்குத் தகுந்தவரும், ப்ரியருமான அந்த ப்ரம்ஹதேவனைக் கையில் பிடித்துக் கொண்டு மந்தஹாஸத்தினுலேற்பட்ட சோபையையுடைய வார்த்தையினுல் சொல்லவாரம்பித்தார். (18) ஸ்ரீ பகவான் சொல்லலுற்றார்—ஹே வேதகர்ப்ப ! கெட்ட யோகிகளினுல் ஸந்தோஷப்படுத்தவியலாத நான் ஸிருஷ்டிக்கவேண்டுமென்ற இச்சையேற்பட்டதன் நிமித்தம் வெகுகாலம் அனுஷ்டிக்கப்பட்ட தபோமூலம் உம்மால் நன்கு ஸந்தோஷப்படுத்தப்பட்டேன். (19) ஹே ப்ரம்ஹன் ! உமக்கு க்ஷேமமுண்டாகட்டும். வரனைக் கொடுக்கும் என்னிடம் வேண்டியவரனைக் கேட்டுக்கொள்ளும். பலனையடைவதற்கேற்ற ஸாதன பரிஸ்ரமமானது என்னுடைய தர்சனத்தை எல்லையாகவுடையது. (அதாவது:—என்னுடைய தரிசனத்தைக் காட்டிலும் அதிகமான பலனேகிடையாது என்றும்.) (20) ரஹஸ்யத்தில் "தவஞ்செய் தவஞ்செய்" என்ற எந்தவார்த்தையைக் கேட்டு மேலான தவத்தைச் செய்தீரோ இதுவும், என்னுடைய உலகிலுள்ளதைப் பார்த்தீர் என்பது யாதுண்டோ இதுவும் உமக்கு இதைத் தரவேண்டுமென்ற என்னுடைய இச்சையினது மஹிமையேயாகும். (21) ஹே அனக ! எந்தத் தபஸ்ஸானது என்னுடைய ஹிருதயமோ (அந்தரங்கமான சக்தியோ) நான் எந்தத் தபஸ்வின் ஸ்வரூபமோ அந்தத் தபஸ்ஸானது, நீர் ஸிருஷ்டியிஞரம் பத்தில் அதைச்செய்யும் விஷயத்தில் மோஹத்தை யடைந்

साक्षादात्माहं तपसोऽनघ ॥ २२ ॥ सृजामि तपसैवेदं ग्रसामि तपसा पुनः । बिभर्मि तपसा विश्वं वीर्यं मे दुश्चरं तपः ॥ २३ ॥

ब्रह्मोवाच—भगवन्सर्वभूतानामध्यक्षोऽवस्थितो गुहाम् । वेद ह्यप्रतिरुद्धेन प्रज्ञानेन चिकीर्षितम् ॥ २४ ॥ तथापि नाथमानस्य नाथ नाथय नाथितम् । परावरे यथा रूपे जानीयां ते त्वरूपिणः ॥ २५ ॥ यथात्ममायायोगेन नानाशक्त्युपबृंहितम् । विलुम्पन्विसृजन्गृह्णन्बिभ्रदात्मानमात्मना ॥ २६ ॥ क्रीडस्यमोघसङ्कल्प ऊर्णनाभिर्यथोर्णुते । तथा तद्विषयां धेहि मनीषां मयि माधव ॥ २७ ॥ भगवच्छिक्षितमहं करवाणि ह्यतन्द्रितः ।

தவராக இருந்தபொழுது என்னலுபதேசிக்கப்பட்டது. (22) இவ்வுலகைத் தபஸ்வினுலேயே நான் ஸிருஷ்டிக்கிறேன். தபஸ்ஸினுலேயே திரும்பவும் ஸம்ஹரிக்கிறேன். தபஸ்ஸினுலேயே உலகைப் பரிபாலனமும் செய்கிறேன். செய்தற்கரிதான தவமானது என்னுடைய சக்தியாகவாகும் என்றார். (23)

ப்ரம்ஹதேவன் சொல்லலுற்றார்—ஹே பகவன்! ஸர்வப்ராணிகளுக்கும் அதிஷ்டாதாவான நீர் ஹிருதயகுஹை (புத்தி) யில் இருந்துகொண்டு எவ்விதத் தடையுமற்ற க்ஞானத்தினுல் என்னுல் செய்யவிரும்பப்பட்டதை அறிவீர் தானுயினும், ஹே நாத! அரூபியான உம்முடைய ஸ்தூலமும் ஸூக்ஷ்மமுமான ரூபங்களை எவ்விதம் அறிந்து கொள்ளுவேனே அவ்விதம் யாசிக்கின்ற என்னுடைய யாசனையை நிறைவேற்றித்தருவீராக. (24–25) ஹே மாதவ! வீண்போகாத ஸங்கல்பமுடையவரான நீர் பலதறப்பட்ட சக்திகளினுல் விருத்திசெய்யப்பட்ட ப்ரபஞ்சத்தைச் சொந்தமான மாயையின் ஸம்பந்தத்தினுல் ஸம்ஹரித்துக் கொண்டும், பின்னர் பலவிதமாக ஸிருஷ்டித்துக் கொண்டும், பாலனஞ் செய்துக்கொண்டும் ஸ்வயமாகவே தன்னை ப்ரம்ஹாதிரூபமாக ப்ரகாசப்படுத்திக் கொண்டும் எட்டுக்கால் பூச்சியானது தன்னைத்தானே மறைத்துக் கொள்ளுவதுபோல எவ்விதம் விளையாடுகின்றீரோ அவ்விதம் அவ்விஷயமான புத்தியை எனக்குக் கொடுப்பீராக. (26–27) இம்மாதிரியான உம்முடைய அனுக்கிரஹத்தையடைந்த பிறகு நான் ப்ரஜா ஸிருஷ்டியைச் செய்தபோதிலுங்கூட அஹங்காராதிகளினுல்

नेहमानः प्रजासर्गं बध्येयं यदनुग्रहात् ॥ २८ ॥ यावत्सखा सख्युरिवेश ते कृतः प्रजाविसर्गे विभजामि भो जनम्। अविक्लवस्ते परिकर्मणि स्थितो मा मे समुन्नद्धमदोऽजमानिनः ॥ २९ ॥ श्रीभगवानुवाच—ज्ञानं परमगुह्यं मे यद्विज्ञानसमन्वितम्। सरहस्यं तदङ्गं च गृहाण गदितं मया ॥ ३० ॥ यावानहं यथाभावो यद्रूपगुणकर्मकः। तथैव तत्त्वविज्ञानमस्तु ते मदनुग्रहात् ॥ ३१ ॥ अहमेवासमेवाग्रे नान्यद्यत्सदसत्परम्। पश्चादहं यदेतच्च

பந்தத்தையடையமாட்டேனுதலால் பகவானுன உம்மால் கட்டளை யிடப்பட்ட இந்தக் காரியத்தைச் சோம்பலின்றி செய்யப்போகின் றேன். (28) ஹே ஈஶ! உம்மால் நான், உலகிலுள்ள தோழனுல் மற்றொரு தோழன் போலக் கைகுலுக்கல் முதலிய காரியத்தினுல் ஸம்மானிக்கப்பட்ட வனுய்க்கொண்டும் ப்ரஜா ஸிருஷ்டிரூபமான உமது ஸேவையிலிருந்துகொண்டும் தளர்ச்சியையடையாதவனுகவே எவ்வளவுகாலம் ஜனத்தை உத்தம மத்யமாதிபேதத்தினுல் ஸிருஷ்டிப்பேனே அவ்வளவுகாலம் நீர் காட்டின ப்ரேமை காரணமாக "நானும் ஜனனமற்றவன், ஸ்வதந்திரன்" என்ற எண்ணம் எனக் கேற்பட்டு அதன் மூலம் மதமானது ஸிருத்தியையடையாதிருக்கட் டும் என்றூர். (29)

ஸ்ரீபகவான் சொல்லுற்றூர்—மிக ரஹஸ்யமானதும், அனு பவத்துடன் கூடினதும், பக்தியுடன் கூடினதும் என்னுற்சொல்லப் பட்டதுமான சாஸ்திரீயமான க்ஞானத்தையும், அதனுடைய அங் கத்தையும் பெற்றுக்கொள்ளும். (30) [*]நான் எம்மாதிரியான ஸ்வரூபமுள்ளவனே, எம்மாதிரியான லக்ஷணமுள்ளவனே, எம்மா திரியான ரூபம் குணம் கர்மம் இவையுள்ளவனே அம்மாதிரி யாகவே உள்ள தத்துவஸாக்ஷாத்காரமானது என்னுடைய அனுக் கிரஹத்தினுல் உமக்குண்டாகட்டும். (31) †ஸிருஷ்டிக்கு முந்தி இருந்தவன் நானேயொழிய ஸ்தூலமும் ஸூக்ஷ்மமும் அவற்றுக்குக்

---

[*] உமது தர்சனத்தில் கூட அசக்தனன நான் ஞானத்தில் அதி காரியாக ஆவது எங்ஙனம் எனின்? அவ்விஷயத்தில் சொல்லுகிறூர்.

† இதையே தெளிவாயுபதேசிக்கின்றவராய் "यावान्" என்ற தாதியாற் சொல்லப்பட்டதின் பொருளை விளக்குகிறூர்.

योऽवशिष्येत सोऽस्म्यहम् ॥ ३२ ॥ ऋतेऽर्थं यत्प्रतीयेत न प्रतीयेत चात्मनि । तद्विद्यादात्मनो मायां यथा भासो यथा तमः ॥ ३३ ॥ यथा महान्ति भूतानि भूतेषूच्चावचेष्वनु । प्रविष्टान्यप्रविष्टानि तथा तेषु न तेष्वहम् ॥३४॥ एतावदेव जिज्ञास्यं तत्त्वजिज्ञासुनात्मनः । अन्वयव्यतिरेकाभ्यां यत्स्या-

---

காரணமான ப்ரதானமுமான பொருள் யாதுண்டோ அது ஒன்று மிருந்ததில்லை. அப்பொழுது ஸ்தூலசூக்ஷ்மகாரணுதியான பொருள் யாவும் என்னிடத்திலேயே லயத்தையடைந்திருப்பதால் நான் மட்டு மிருந்தேனேயொழிய வேறு எதையும் செய்தேனில்லை. ஸிருஷ்டிக்குப் பிறகும் யாதொரு இந்த ப்ரபஞ்சமுண்டோ அதாகவும் நானே இருக்கிறேன். ப்ரளயத்தில் எஞ்ஜியிருக்கும் பொருள் எதுவோ அதாகவும் நானே இருக்கிறேன். (32) ‡எதுகாரணமாய் உண்மையில்லாத பொருள் *(இன்னதெனச்சொல்லவியலாத பொருள்) அதிஷ்டானமான ஆத்மாவினிடத்தில், இரண்டு சந்திரன்போலத் தோற்றுகிறதோ, எதன்மூலம் ஸத்ரூபமான (முக்காலத்திலுமழிவற்ற) பொருளுங்கூட கிரஹங்களின் மத்தியிலிருக்கின்ற ராஹுவானதுபோலத் தோற்றத்தையடைவதில்லையோ அப்பொருளை ஆத்மாதிஷ்டிதமான மாயையென வறிந்துகோள்ளும். (33) (*)ஆகாசாதியான மஹாபூதங்கள் உயர்வுதாழ்வுள்ள (பலதறப்பட்ட) பௌதிக பதார்த்தங்களில் ஸிருஷ்டிக்குப் பிறகு காணப்படுவனபற்றி அவற்றில் ப்ரவேசமுள்ளனவாகத் தோன்றினபோதிலும் உபாதான காரணமாக இருப்பதன்மூலம் அவற்றில் முன்னரே இருப்பனபற்றி உண்மையில் ப்ரவேசத்தையடைவதில்லை என்பது எவ்விதமோ, இவ்விதமே நான் பூதபௌதிக பதார்த்தங்களில் ப்ரவேசித்தவனுகக் காணப்படினும் உண்மையில் அவற்றில் ப்ரவேசித்தவனன்று. (34)

---

‡ "यथात्ममायायोगेन" என்றதால் மாயையும் கேட்கப்பட்டிருப்பதாலும், பின்னர் சொல்லப்படுமிடத்தில் உபயோகப்படுவதாலும் மாயை இன்னதென்பதை இதனுலுபதேசிக்கிறார். * ஸத் என்றே அஸத் என்றே சொல்லவியலாததும் ஆனதுபற்றியே ஸதஸத்விலக்ஷணமுமான அதாவது:— அநிர்வசனீயமான பொருள் என்பது கருத்து.

(*) "यथाभावः = எம்மாதிரியான ஸத்தை=லக்ஷணமுள்ளவன்" என்று சொன்னதை இதனுல் விளக்குகிறார்.

त्सर्वत्र सर्वदा ॥ ३५ ॥ एतन्मतं समातिष्ठ परमेण समाधिना। भवान्कल्पविकल्पेषु न विमुह्यति कर्हिचित् ॥ ३६ ॥ श्रीशुक उवाच—संप्रदिश्यैवमजनो जनानां परमेष्ठिनम्। पश्यस्तस्य तद्रूपमात्मनो न्यरुणद्धरिः ॥ ३७ ॥ अन्तर्हितेन्द्रियार्थाय हरये विहितांजलिः। सर्वभूतमयो विश्वं ससर्जेदं स पूर्ववत् ॥ ३८ ॥ प्रजापतिर्धर्मपति

---

[*] அன்வயவ்யதிரேகங்களினுல் எது எல்லாவிடங்களிலும் எப்பொழுதுமிருக்குமோ இவ்வளவேதான் ஆத்மதத்துவத்தையறிய விருப்பமுள்ளவனுல் அறிந்துகொள்ளக் கூடியதாகவாகும். (35) இந்த என்னுடைய மதத்தை மேலான சித்தைகாக்ரியத்துடன் ஆலோசித்துப் பாரும். அவ்விதம் பார்க்கும் நீர் கல்பங்களிலுள்ள பலதறப்பட்ட ஸிருஷ்டிவிஷயத்தில் ஒருபொழுதும் மோஹத்தை (நான் கர்த்தா என்ற எண்ணத்தை) யடையமாட்டீர் என்றார். (36)

ஸ்ரீசுகர் சொல்லலுற்றார்—அஜனான (நித்யரான) ஹரியானவர் ஜனங்களுக்கு மேலான ஆதிபத்யத்திலிருக்கும் ப்ரம்ஹதேவனுக்கு இவ்விதமுபதேசித்து அவர் பார்த்துக் கொண்டிருக்கும் பொழுதே தன்னுடைய அந்த ரூபத்தை மறைத்துக் கொண்டார். (37) ஸர்வபூதமயரான அந்த ப்ரம்ஹதேவன் ப்ரத்யக்ஷமான ரூபத்தை மறைத்துக் கொண்டவரான பகவானேயும் பொருட்டு அஞ்சலிபந்தம் செய்துவிட்டு இந்த ப்ரபஞ்சத்தை முன்போலவே ஸிருஷ்டித்தார். (38) தர்மபதியான ப்ரஜாபதியானவர் ஒரு ஸமயம் ப்ரஜைகளுக்கு க்ஷேமத்தைச் செய்யவேண்டுமென்ற விருப்

---

[*] காரியங்களில் காரணப் பொருளுக்குத் தொடர்பு யாதுண்டோ அது அன்வயமெனப்படும். காரியங்களை விட்டுக் காரணப் பொருளின் விலகிநிற்றல் யாதுண்டோ அது வ்யதிரேகமெனப்படும். அவ்விதமே ஜாக்ரம் முதலிய அவஸ்தைகளில் அவ்வவற்றின் ஸாக்ஷியாக ஆத்மாவினது தொடர்பு யாதுண்டோ அதுவும் அன்வயமெனப்படும். ஸமாதி முதலிய விடங்களில் அவஸ்தாத்ரய ஸம்பந்தமில்லாமல் ஆத்மாவின் தனித்து நிற்றல் என்பது யாதுண்டோ அது ஆத்மாவுக்கு வ்யதிரேகமாகும். ஆகவே இத்தகைய அன்வயவ்யதிரேக ரூபகாரணத்தினுல் எது எல்லாவிடத்திலும் எப்பொழுதுமிருப்பதாக அறியப்படுமோ அதுவே ஆத்மாவின் தத்துவம்—உண்மை என்பது பெறப்பட்டது.

रेकदा नियमान्यमान्। भद्रं प्रजानामन्विच्छन्नातिष्ठत्स्वार्थकाम्यया ॥ ३९ ॥ तं नारदः प्रियतमो रिक्थादानामनुव्रतः। शुश्रूषमाणः शीलेन प्रश्रयेण दमेन च ॥४०॥ मायां विविदिषन्विष्णोर्मायेशस्य महामुनिः। महाभागवतो राजन्पितरं पर्यतोषयत् ॥ ४१ ॥ तुष्टं निशाम्य पितरं लोकानां प्रपितामहम्। देवर्षिः परिपप्रच्छ भवान्यन्मानुपृच्छति ॥४२॥ तस्मा इदं भागवतं पुराणं दशलक्षणम्। प्रोक्तं भगवता प्राह प्रीतः पुत्राय भूतकृत् ॥ ४३ ॥ नारदः प्राह मुनये सरस्वत्यास्तटे नृप। ध्यायते ब्रह्म परमं व्यासायामिततेजसे ॥ ४४ ॥ यदुताहं त्वया पृष्टो वैराजात्पुरुषादिदम्। यथासीत्तदुपाख्यास्ये प्रश्नानन्यांश्च कृत्स्नशः॥ ४५ ॥

इति श्रीमद्भागवते महापुराणे द्वितीयस्कन्धे नवमोऽध्यायः ॥ ९ ॥

பங்கொண்டவராய் அத்தகைய ஸ்வப்ரயோஜனேச்சையினுல் யமங்களையும், நியமங்களையும் அனுஷ்டித்தார். (39) †ஹே ராஜன்! புத்திரர்களுக்குள் மிக்கப்ரியமானவரும், பக்தரும், மஹாபாகவதரும், மஹாமுனியுமான நாரதர், மாயேசனுன பகவானுடைய மாயையையறிய ஆவல்கொண்டு பிதாவான ஹிரண்யகர்ப்பரை ஸேவிக்கின்றவராய்ச்சீலத்தினுலும், வணக்கத்தினுலும், தர்மத்தினுலும் சந்தோஷப்படுத்தினர்.(40–41) தேவர்ஷியானவர் உலகங்களுக்கு ப்ரபிதாமஹனும், தனது பிதாவுமான ப்ரம்ஹதேவன் ஸந்துஷ்டராக விருப்பதையறிந்துகொண்டு, நீர் எதை என்னிடம் கேட்டீரோ. இதையே அவரிடம் கேட்டார். (42) பூதங்களைப் படைத்தவரான ப்ரம்ஹதேவன் ப்ரீதராக இருந்துகொண்டு பகவானு லுபதேசிக்கப்பட்டதும், பத்துலக்ஷணமுள்ளதுமான இந்தப் பாகவதபுராணத்தை அந்தப் புத்திரனுக்கு உபதேசித்தார். (43) ஹே நிருப! ஸரஸ்வதியின் கரையிலுட்கார்ந்துகொண்டு பரம்ப்ரம்ஹத்தைத் தியானஞ் செய்கின்றவரும், அளவிடமுடியாத தேஜஸ்ஸுள்ளவரும் முனியுமான வியாஸருக்கு நாரதருபதேசித்தார். (44) "வைராஜ புருஷனிடமிருந்து இந்த ப்ரபஞ்சமானது எவ்விதமுண்டாயிற்று"

---

† இதற்குப் பிறகே முற்கூறிய ப்ரம்ஹதேவ நாரத ஸம்வாதமேற்பட்டது எனவுபதேசிக்கிறார்.

अथ दशमोऽध्यायः ॥

श्रीशुक उवाच—अत्र सर्गो विसर्गश्च स्थानं पोषणमूतयः। मन्वन्तरेशानुकथा निरोधो मुक्तिराश्रयः॥ १ ॥ दशमस्य विशुद्ध्यर्थं नवानामिह लक्षणम्। वर्णयन्ति महात्मानः श्रुतेनार्थेन चाञ्जसा ॥ २ ॥ भूतमात्रेन्द्रिय

என நான் எதை உன்னுல் கேட்கப்பட்டேனே அதற்கும் மற்ற ப்ரஶ்னங்களுக்கும் தெளிவாகப் பதில் சொல்லுகிறேன் கேளும் என்றூர். (45) (எ—று)

இவ்விதம் ஸ்ரீமத்பாகவத மஹாபுராண த்விதீயஸ்கந்தத்தில் ஒன்பதாவது அத்தியாயம் முற்றிற்று.

பத்தாவது அத்தியாயம்.

(அ—கை) ततो भागवतव्याख्याद्वारैव दशमे स्फुटम्।
राजप्रश्नोत्तरं वक्तुमारेभे बादरायणिः ॥ १ ॥

(க—ரை) பிறகு பத்தாவது அத்தியாயத்தில் சதுஶ்ஶ்லோகீ பாகவதத்துக்கு வியாக்கியானஞ் செய்யும் வாயிலாகவே ராஜனுடைய ப்ரஶ்னத்துக்குத் தெளிவான பதில்சொல்லவேண்டி ஸ்ரீசுகாசாரியர் தொடங்குகிறூர். (1) (எ—று)

ஸ்ரீசுகர் சொல்லலுற்றூர்—இந்தப் பாகவதபுராணத்தில் ஸர்க்கம், விஸர்க்கம், ஸ்தானம், போஷணம், ஊதிகள், மன்வந்தரம், ஈசானுகதைகள், நிரோதம், முக்தி ஆஶ்ரயம் எனப் பத்துவிஷயங்கள் நிரூபிக்கப்படுகின்றன. (1) பத்தாவதான ஆஶ்ரயத்தினுடைய விசுத்திக்கு (தத்வக்ஞானத்துக்கு) வேண்டியே இங்கு மைத்ரேயர் முதலிய மஹாத்மாக்கள், ஸர்க்காதி ஒன்பதுகளுடையவும் ஸ்வரூபத்தைச் சுருதியினுலும் (ஸ்துதிசெய்யுமிடங்களில்) ஸாக்ஷாத்தாகவும், அந்தந்தக்கதைகளே வர்ணிக்குமிடங்களில் தாத்பர்ய விருத்தியினுலும் வர்ணிக்கின்றனர். (2) அவற்றுள் ஆகாசாதி மஹாபூதங்களுக்கும், சப்தாதிரூபமான தன்மாத்திரைகளுக்கும், இந்திரியங்களுக்கும் மஹத் அஹங்காரம் இவைகளாகிற புத்திக்கும், குணங்

धियां जन्म सर्ग उदाहृतः। ब्रह्मणो गुणवैषम्याद्विसर्गः पौरुषः स्मृतः॥३॥ स्थितिर्वैकुण्ठविजयः पोषणं तदनुग्रहः। मन्वन्तराणि सद्धर्म ऊतयः कर्मवासनाः॥ ४ ॥ अवतारानुचरितं हरेश्चास्यानुवर्तिनाम्। पुंसामीशकथाः प्रोक्ता नानाख्यानोपबृंहिताः॥ ५ ॥ निरोधोऽस्यानुशयनमात्मनः सह शक्तिभिः। मुक्तिर्हित्वान्यथा रूपं स्वरूपेण व्यवस्थितिः॥ ६ ॥ आभासश्च निरोधश्च यतश्चाध्यवसीयते। स आश्रयः परं ब्रह्म परमात्मेति शब्द्यते ॥ ७ ॥ योऽध्यात्मिकोऽयं पुरुषः सोऽसावेवाधिदैविकः। यस्तत्रोभय-

---

களின் பரிணுமத்தையொட்டிப் பரமேஸ்வரான ப்ரம்ஹத்தினிடமிருந்து விராட்ரூபமாகவும் நேரிலும் யாதொரு ஜன்மமுண்டோ அதுவே ஸர்க்கமெனப்படும். வைராஜ புருஷனுல் (ஹிரண்யகர்ப்பரால்) செய்யப்படும் சராசர ஸர்க்கமான து விஸர்க்க மெனப்படும். (3) வைகுண்டனுன பகவானுடைய விஜயமான து=தன்னுல் ஸிருஷ்டிக்கப்பட்ட ப்ராணிகளுக்கு அந்தந்த மரியாதாபாலன மூல மேற்படும் உத்கர்ஷமான து, ஸ்திதி=(ஸ்தானம்) எனப்படும். தனது பக்தர்கள் விஷயத்தில் அவர் செய்யும் அனுக்கிரஹமான து போஷணம் எனப்படும். அவரால் அனுக்கிரஹிக்கப்பட்ட மன்வந்தராதிபதிகளின் தர்மமான து மன்வந்தரம் எனப்படும். கர்மவாஸனைகள் ஊதிகள் எனப்படும். (4) ஹரியினுடையவும், இவரை அனுஸரிக்கின்ற புருஷர்களுடையவும அவதாரத்தையொட்டின ஸத்கதை ஈசகதை எனப்படும். இவை பலதறப்பட்ட. சரித்திரங்களினுல் விருத்தி செய்யப்பட்டன வாகவுமாகும். (5) ஹரியினுடைய யோக நித்திரைக்குப் பிறகு இந்த ஜீவனுக்குச் சக்திகளுடன்= உபாதிகளுடன், கூட ஏற்படும் லயமான து நிரோதம் எனப்படும். அவித்யையினுல் அத்யஸ்தமான கர்த்ருத்வ போக்த்ருத்வாதிகளைப் பரித்யாகம் செய்து ப்ரம்ஹஸ்வரூபமாக நிற்றலான து முக்தி எனப்படும். (6) ஆபாஸமும்=ஸிருஷ்டியும், நிரோதமும் = லயமும் எதனிடமிருந்து ஏற்படுவதாக ப்ரமாணங்களினுல் நிஸ்சயிக்கப்படுகிறதோ, பரம்ப்ரம்ஹமென்றும் பரமாத்மாவென்றும் பிரஸித்தமான அந்தப்பொருளே ஆஸ்ரயமெனச் சொல்லப்படுகிறது. (7)

विच्छेदः स स्मृतो ह्याधिभौतिकः ॥८॥ एकमेकतराभावे यदा नोपलभामहे। त्रितयं तत्र यो वेद स आत्मा स्वाश्रयाश्रयः ॥९॥ पुरुषोऽण्डं विनि

---

‡சக்ஷுராதி கரணாபிமானியும் த்ரஷ்டாவுமான யாதொரு ஜீவனுண்டோ இவனே ஆத்யாத்மிக புருஷனுவான். சக்ஷுராதிகளுக்கு அதிஷ்டாதாவான யாதொரு சூரியாதியுண்டோ இவனே ஆதிதைவிக புருஷனுவான். ஒரே சரீரத்தில் சக்ஷுராதிகோளகமென்றும், சப்தஸ்பர்சாதியான விஷயமென்றுமான இரண்டுவிதமான பேதத்தையுடைய புருஷன் (அன்னரஸமயமான சரீரம்) யாதுண்டோ இவனன்றே (சரீரமன்றே) ஆதிபௌதிக புருஷனுவான். (8) எப்பொழுது ஆத்யாத்மிகம் ஆதிதைவிகம் ஆதிபௌதிகம் ஆகிய இவற்றுள் *யாதேனுமொன்று இல்லையோ அப்பொழுது நாம் மற்றொன்றைக் காண்கின்றேமில்லை. ஆகவே இம்மூன்றையும் எவர் அறிவாரோ அவர்தான் ஆத்மாவும், தனக்குத்தானே ஆஸ்ரயமாக விருந்துகொண்டு பிறவற்றுக்கும் ஆஸ்ரயமாகவுமாகிறூர். (9) (*)இந்த வைராஜபுருஷன் ப்ரம்ஹாண்டத்தைப் பிளந்துகொண்டு எப்பொழுது வெளிவந்தாரோ அப்பொழுது ஸ்வயம்

---

‡ ஆச்ரயஸ்வரூபத்தை அபரோக்ஷானுபவத்திலுல் ஸ்பஷ்டமாகக் காட்டவேண்டி அத்யாத்மாதிபேதத்தை யுபதேசிக்கிறூர்.

* அதாவது:— திருச்யமான பொருள் இல்லாவிடில் அவற்றின் தோற்றமேற்படுவதைக் கொண்டு ஊஹிக்கப்படும் சக்ஷுராதி கரணங்களுடையவும், த்ரஷ்டாவினுடையவும் ஸித்தியேற்படமாட்டாது. இவ்விரண்டுமில்லாவிடில் கரணங்களின் ப்ரவிருத்தியைக் கொண்டு ஊஹிக்கப்படும் கரணங்களுக்கு அதிஷ்டாதாக்களான சூரியாதிகள் ஸித்திக்கமாட்டா. சூரியாதிகள் இல்லாவிடிலோ கரணங்கள் ப்ரவிருத்திக்கமாட்டா. கரணப்ரவிருத்தி யில்லாவிடிலோ திருச்யஸித்தி யேற்படமாட்டாது. ஆகவே இம்மூன்றையும் ஆலோசனரூபமான ப்ரத்யயத்திலுல் ஸாக்ஷியாக விருந்துகொண்டு எவர் பார்க்கின்றூரோ அவர்தான் ஸர்வத்துக்கும் ஆச்ரயபூதரான பரமாத்மாவாகவாகிறூர் என்றும்.

(*) இதுவரை சொல்லப்பட்ட அத்யாத்மாதிபேதத்தை விரிவாக வுபதேசிக்கவெண்ணங் கொண்டு வைராஜபுருஷனிடமிருந்து இந்த ப்ரபஞ்சமுண்டாகும் முறையை யுபதேசிக்கிறூர்.

र्भिद्य यदादौ स विनिर्गतः। आत्मनोऽयनमन्विच्छन्नपोऽस्राक्षीच्छुचिः शुचीः॥१०॥ तास्ववात्सीत्स्वसृष्टासु सहस्रपरिवत्सरान्। तेन नारायणो नाम यदापः पुरुषोद्भवाः॥ ११ ॥ द्रव्यं कर्म च कालश्च स्वभावो जीव एव च। यदनुग्रहतः सन्ति न सन्ति यदुपेक्षया॥ १२ ॥ एको नानात्व-मन्विच्छन्योगतल्पात्समुत्थितः। वीर्यं हिरण्मयं देवो मायया व्यसृजत्त्रिधा ॥ १३ ॥ अधिदैवमथाध्यात्ममधिभूतमिति प्रभुः। अथैकं पौरुषं वीर्यं

சுத்தமான அவர் தான்வஹிப்பதற்குற்ற ஸ்தானத்தில் விருப்பங் கொண்டு கர்ப்போதகமென்ற பெயருள்ள சுத்தமான ஜலத்தை ஹிருஷ்டித்தார். (10) தன்னுல் ஹிருஷ்டிக்கப்பட்ட அந்த ஜலத்தில் ஆயிரம் வருஷங்கள் முழுதும் வாஸஞ்செய்தார். யாதுகாரணத்தினுல் ஜலங்கள் புருஷனுன நரனிடமிருந்து உண்டாயினவோ அக்காரணத்தினுல் அந்த ஜலத்தில் வாஸஞ்செய்ததன் மூலம் அவர் [*]நாராயணன் என்ற பெயருள்ளவராகவும் ஆகிறூர். (11) †த்ரவ்யமும் = உபாதானகாரணமான ப்ருதிவீ முதலியனவும், நிமித்தங்களான கர்மங்களும், ஸமஷ்டி சூக்ஷ்மசரீராபிமானியும் போக்தாவுமான ஹிரண்யகர்ப்பஜீவனும், ஸ்வபாவமும் இவருடைய அனுப்பிரவேசத்தினுல் தமது காரியத்தைச் செய்யத்திறமை யுடையவைகளாகவாகின்றனவே யொழிய இவர் ப்ரவேசிக்காவிடில் ஆகமாட்டா. (12) ஒருவராக இருந்த அவர் பலவாகவாகவிருப்பங்கொண்டவராய் ‡யோகமாகிற படுக்கையிலிருந்து எழுந்து தனது மாயையினுல் (ஸங்கல்பத்தினுல்) ஹிரண்மயமான வீரியத்தை (ஹிரண்யம் போல அதிகப் பிரகாசமுள்ள கர்ப்பரூபமான தேஹத்தை) மூன்றுகப் பிரித்தார். (13)

ப்ரபுவானவர் பௌருஷமான = புருஷாதிஷ்டிதமான, ஓரே வீரியத்தை=கர்ப்பரூபமான தேஹத்தை, அதிதைவமென்றும், பிறகு

---

[*] "आपो नारा इति प्रोक्ता आपो वै नरसूनवः। अयनं तस्य ताः पूर्वं तेन नारायणः स्मृतः॥ என்ற வசனப்படி நார = நரனிடமிருந்துண்டான ஜலங்களை அயனமாக இருப்பிடமாகவுடையவர் என்பது பொருள்.

† ஸமஷ்டிவிராடந்தர்யாமியின் மஹிமையைச் சொல்லுகிறூர். ‡ யோகத்தினின்றும் கலைந்து என்று பொருன்.

त्रिधा भिद्यत तच्छृणु ॥ १४ ॥ अन्तःशरीर आकाशात्पुरुषस्य विचेष्टतः। ओजः सहो बलं जज्ञे ततः प्राणो महानसुः॥१५॥ अनुप्राणन्ति यं प्राणाः प्राणन्तं सर्वजन्तुषु। अपानन्तमपानन्ति नरदेवमिवानुगाः॥ १६ ॥ प्राणेन क्षिपता क्षुत्तृडन्तरा जायते प्रभोः। पिपासतो जक्षतश्च प्राङ्मुखं निरभिद्यत ॥ १७ ॥

मुखतस्तालु निर्भिन्नं जिह्वा तत्रोपजायते। ततो नानारसो जज्ञे जिह्वया योऽधिगम्यते ॥१८॥ विवक्षोर्मुखतो भूम्नो वह्निर्वाग्व्याहृतं तयोः।

அத்யாத்மமென்றும், அதிபூதமென்றும் மூன்றுவிதமாக எவ்விதம் பிரித்தாரோ அதை என்னிடம் கேட்டுத் தெரிந்துகொள்ளு. (14) புருஷன் கிரியாசக்தியுடன் பலதறப்பட்டசேஷ்டையைச் செய்யுங் கால் சரீரத்துக்குள்ளிருக்கின்ற ஆகாசத்திலிருந்து ஓஜஸ்ஸென்ற இந்திரியசக்தியுப, ஸஹஸ் என்ற மனஸ்சக்தியும், பலம் என்ற தேஹசக்தியும், சக்த்யாத்மகமான அந்தச் சூக்ஷ்மரூபத்திலிருந்து சூத்ராத்மா எனப்பெரிய ஸர்வப்ராணிகளுடைய முக்கிய ப்ராணனும் உண்டாயின. (15) அரசனை யண்டிப்பிழைக்கும் வேலைக்காரர்கள்போல ஸர்வஜந்துக்களிடத்திலும் உள்ள எல்லா இந்திரியங்களும் சேஷ்டையைச் செய்கின்ற ப்ராணனை அனுஸரித்தே தாங்களும் சேஷ்டையைச் செய்கின்றன. சேஷ்டையைச் செய்யாத இதை யனுஸரித்தே தாங்களும் சேஷ்டையைச் செய்யாதிருக்கின்றன. (16) சலனத்தைச் செய்கின்ற ப்ராணன் நிமித்தமாகவே ப்ரபுவுக்கு=விராட்ஜீவாபேதத்தை யடைந்தவர்க்கு, உள்ளில் பசி தாஹம் இவையுண்டாயின. பிறகு ஜலங்குடிக்க விரும்புகின்ற வரும் ஆஹாரத்தையுட்கொள்ள விரும்புகின்றவருமான அவருக்கு முதலில் வாயானது பிளந்தது. (வாய் என்ற பாகம் அண்டத்திலிருந்து தனியாய் தோன்றிற்று.) (17) வாயிலிருந்து தாலுவும் (நாக்கென்ற ஜிஹ்வேந்திரியமிருக்குமிடமும்) அங்கு ஜிஹ்வையென்ற இந்திரியமும், பிறகு ஜிஹ்வேந்திரியத்தினுல் அறியக்கூடிய பலவிதமான ரஸமும், (வருணன் என்றதேவதையும்) உண்டாயின. (18) பேசுவதற்கு இச்சையுள்ள பூமாவான அவருடைய முகத்திலிருந்து

जले वै तस्य सुचिरं निरोधः समजायत ॥ १९ ॥ नासिके निरभिद्येतां दोधूयति नभस्वति। तत्र वायुर्गन्धवहो घ्राणो नसि जिघृक्षतः ॥ २० ॥ यदात्मनि निरालोकमात्मानं च दिदृक्षतः। निर्भिन्ने ह्यक्षिणी तस्य ज्योतिश्चक्षुर्गुणग्रहः ॥ २१ ॥ बोध्यमानस्य ऋषिभिरात्मनस्तज्जिघृक्षतः। कर्णौ च निरभिद्येतां दिशः श्रोत्रं गुणग्रहः ॥ २२ ॥ वस्तुनो मृदुकाठिन्यलघुगुर्वोष्ण-

---

வன்ஹி என்ற தேவதையும், வாக் என்ற இந்திரியமும், *வன்ஹி வாக் இவ்விரண்டின் மூலம் வியாஹிருதமும்=சப்தமும் உண்டாயிற்று. ப்ராணவாயுவானது அதிகமாகச் சரீரத்திலோடும்பொழுது ஜலத்தில் வெகுகாலம் வஸிக்கும் அந்த விராட்டுக்கு நிரோதமானது=உள்ளில் நிலேசமானது, உண்டாயிற்று (ப்ரவாஸசலனமில்லாமிடில் காரிய நிர்வாஹம் முடியாதாகையால் அதற்குவேண்டி) ப்ரவாஸமோடுவதற்கு மார்க்கங்களான நாஸிகைகள் தோன்றின. கந்தத்தைக் கிரஹிக்கவிரும்புகின்ற அவருடைய அந்த நாஸிகையில் கந்தத்தைச் சுமக்கின்ற வாயுதேவதையும், கிராணமென்ற இந்திரியமும் உண்டாயின. (19–20) எப்பொழுது தேஹத்தினிடத்தில் ப்ரகாசமின்மையானது உண்டாயிற்றோ அப்பொழுது அவர் தேஹத்தையும் விஷயத்தையும் பார்க்க விருப்பங்கொள்ளுங்கால் கண்கள் (என்றகோளகங்கள்) தோன்றின. ஜ்யோதிஸ் என்ற சூரிய தேவதையும், ரூபத்தைக் கிரஹிக்கின்ற சக்ஷுரிந்திரியமும் தோன்றின. (21) அவர் வேதங்களினுல் போதிக்கப்படும் பொழுது அந்தத் தனது போதனத்தைக்கிரஹிக்கவிரும்பின அவருக்குக்காதுகள் (என்றகோளகங்களும்) திக்குகள் என்ற தேவதைகளும், சப்தமென்ற குணத்தைக் கிரஹிக்கின்ற ச்ரோத்திரமென்ற இந்திரியமும் வெளிவந்தன. (22) பொருளைப் பற்றின மெதுத்தன்மை கடினத்தன்மை, (*)லகுத்தன்மை, கனத்தன்மை, ஸ்வல்பம் சூடுள்ள

---

*மூலத்தில் त्वचः என்றதிலிருந்து வாகிந்திரியத்தின் கர்மமான வியவஹாரமானது இந்திரியம் தேவதை இவ்விருவருக்கும் அதீனமானது என்பது பெறப்பட்டது. (*) கையினுல் அசைக்கப்படுங்கால் லகுத்தன்மை குருத்தன்மை இவை அறியப்படுவதால் அவ்விரண்டும் த்வக் என்ற இந்திரியத்தின் விஷயங்கள் என்பது பௌராணிகர்களின் கொள்கை.

शीतताम्। जिघृक्षतस्त्वङ्निर्भिन्ना तस्यां रोममहीरुहाः। तत्र चान्तर्बहिर्वा तस्त्वचा लब्धगुणो वृतः ॥२३॥ हस्तौ रुरुहतुस्तस्य नानाकर्मचिकीर्षया। तयोस्तु बलमिन्द्रश्च आदानमुभयाश्रयम् ॥ २४ ॥ गतिं जिगीषतः पादौ रुरुहातेऽभिकामिकाम्। पद्भ्यां यज्ञः स्वयं हव्यं कर्मभिः क्रियते नृभिः ॥२५॥ निरभिद्यत शिश्नो वै प्रजानन्दामृतार्थिनः। उपस्थ आसीत्कामानां

தன்மை, சீதத்தன்மை இவற்றைக் கிரஹிக்க அவர் விரும்பின பொழுது தோல் என்ற கோளகமும், அதிலுள்ள உரோமங் களென்ற இந்திரியமும், மஹீருஹர்கள் என்ற தேவதைகளுமுண் தோன்றின. அந்தத்வக் என்ற இந்திரியத்தில், த்வகிந்திரியமூல மடையப்பட்ட ஸ்பர்சம் என்ற குணத்தையுடைய [*]வாயுவானது உள்ளிலும் வெளியிலும் சூழ்ந்துகொண்டு இருக்கிறது. (23)

அவர் பலதறப்பட்ட கர்மங்களைச் செய்யும் விருப்பத்துடன் கூடினவராக இருக்கும்பொழுது ஹஸ்தங்கள் (என்ற கோளகங்கள்) தோன்றின. அவ்விரண்டையு மொட்டியே பலம் என்ற இந்திரிய மும், இந்திரன் என்ற தேவதையும் இந்திரியம் தேவதை இரண் டையும் ஆஸ்ரயித்து ஆதானம் என்ற காரியமும் ஏற்பட்டன. (24) அவர் இஷ்டமான கமனத்தைச் செய்யவிரும்புங்கால், பாதங்கள் (கோளகங்கள்) தோன்றின. அந்தப் பாதங்களுடன் கூடவே யக்ஞ ரான விஷ்ணுவானவர் அவற்றுக்கு அதிஷ்டாதிரு தேவதை யாக அங்கிருந்தார். மனிதர்களால் செய்யப்படும் கதியினுல் அடையக்கூடிய யக்ஞார்த்தமான ஹவ்யரூபமான த்ரவ்யமென்ற விஷயமானது கதியென்ற கர்மசக்தியான இந்திரியத்துடன் கூட உண்டாயிற்று. (25) ப்ரஜை, ஆனந்தம்=ரதி, அமிருதம்= ஸ்வர்க்காதிகள் இவற்றில் விருப்பங்கொள்ளுங்கால் சிஸ்னம் (என்ற கோளகமானது) உண்டாயிற்று. அதில் உபஸ்தமென்ற

---

[*] த்வக் என்ற இந்திரியமே வெளியில் தினைவுடன் கூடின ஸ்பர் சத்தைக் கிரஹிக்குமாயின் லோம என்ற சப்தத்தாற் சொல்லப்படும். அப்பொழுது அதற்கு மரங்கள் தேவதைகளாகும். அதுவே உள்ளிலும் வெளியிலுமுள்ள ஸ்பர்சத்தைக் கிரஹிக்குமாயின் அப்பொழுது த்வக் என்ற சப்தத்தாற் சொல்லப்படும். அதற்கு வாயுவானது தேவதையாக வாகும் எனப்பிரித்துப் பொருள்கொள்க.

प्रियं तदुभयाश्रयम् ॥ २६ ॥ उत्सिसृक्षोर्धातुमलं निरभिद्यत वै गुदम्। ततः पायुस्ततो मित्र उत्सर्ग उभयाश्रयः ॥ २७ ॥ आसिसृप्सोः पुरः पुर्या नाभिद्वारमपानतः। तत्रापानस्ततो मृत्युः पृथक्त्वमुभयाश्रयम् ॥ २८ ॥ आदित्सोरन्नपानानामासन्कुक्ष्यन्त्रनाडयः। नद्यः समुद्राश्च तयोस्तुष्टिः पुष्टिस्तदाश्रये ॥ २९ ॥ निदिध्यासोरात्ममायां हृदयं निरभिद्यत। ततो

இந்திரியமும் (ப்ரஜாபதி என்றதேவதையும்) தோற்றத்தை யடைந்தன. காமங்களை (ஸ்திரீ போகத்தை) ஸம்பந்தித்துள்ள ப்ரியமானது=சுகமானது, அவ்விரண்டையும் ஆஸ்ரயித்து உண்டாயின. (26) உட்கொள்ளப்பட்ட அன்னதிகளின் அஸாரமான மலத்தை வெளியில் கழிக்க அவர் விரும்புங்கால் குதம் (என்ற கோளகமும்) பாயு என்ற இந்திரியமும், பிறகு மித்திரன் என்ற தேவதையும், பாயுமித்திரன் இரண்டையும் ஆஸ்ரயித்த உத்ஸர்க்கம் (வெளியில் விடல்) என்ற விஷயமும் உண்டாயின. (27) தேஹத்திலிருந்து வேறு தேஹங்களைச் சுற்றிலும் செல்ல அவர் விரும்புங்கால் நாபித்வாரம் (என்ற கோளகமானது) உண்டாயிற்று. அபானத்திலிருந்து கீழ்ச்சொல்ல விருப்புங்கால் அங்கு அபானம் என்ற இந்திரியமும், அதிலிருந்து ப்ராணுபானங்களை யாஸ்ரயித்த மரணமென்ற விஷயமும் உண்டாயிற்று. † (28) அவர் அன்னம் பானம் இவற்றைக் கிரஹிக்க விரும்புங்கால் குக்ஷி (வயிறு) என்ற அதிஷ்டானமும், அந்த்ரங்களும் (இந்திரியஸ்தானத்திலுள்ள அன்னத்தைக் கிரஹிக்கும் கரணமும்) நாடிகளும் (பானத்தைக் கிரஹிக்கும் கரணமும்) அந்த அந்த்ரம் நாடி இவற்றுக்குத் தேவதைகளான நதிகளும், ஸமுத்திரங்களும் உண்டாயின. அந்த்ரம் நாடி இரண்டையும் ஆஸ்ரயித்து துஷ்டியும்=உதரபூர்த்தியும், புஷ்டியும்=ஸ்தௌல்யமும் ஏற்படுகின்றன. (அதாவது:— அவர் அன்னத்தைக் கிரஹிக்கவிரும்புங்கால் குக்ஷி அந்த்ரம், ஸமுத்திரம் துஷ்டி இவைகளும், பானத்தைக் கிரஹிக்க விரும்புங்கால் குக்ஷி நாடி நதி புஷ்டி இவைகளும் உண்டாயின என்றும்.) (29) அவர் தனது மாயையைத் திருடமாகச் சிந்திக்க விரும்புங்கால்

---

† நாபியிலுள்ள ப்ராணுபானங்களின் ஸம்பந்தமானது விலகினால் மரணமேற்படுகிறதென்பது உலகப்பிரஸித்தமாக விருக்கிறது.

मनस्ततश्चन्द्रः सङ्कल्पः काम एव च ॥ ३० ॥ त्वक्चर्ममांसरुधिरमेदोम
ज्जास्थिधातवः । भूम्यप्तेजोमयाः सप्त प्राणो व्योमाम्बुवायुभिः ॥ ३१ ॥
गुणात्मकानीन्द्रियाणि भूतादिप्रभवा गुणाः । मनः सर्वविकारात्मा बुद्धि-

---

ஹிருதயம் (என்ற கோளகமானது) வெளிப்பட்டது. அதன் பிறகு மனதும், அதன் பிறகு சந்திரனும் அதன் பிறகு ஸங்கல்பமும், அதன் பிறகு காமமும், வெளிப்பட்டன. (30) ‡த்வக்(ஸ்தூலமான தோல்) சர்மம் (அதற்குமேலுள்ள சூக்ஷ்மமான தோல்) மாம்ஸம், ரக்தம், மேதஸ், மஜ்ஜை அஸ்தி (எலும்பு) என்ற ஏழுதாதுக்களும் *பூமி ஜலம் தேஜஸ் இவற்றின் காரியங்களாகும். ஆகாசம் ஜலம் வாயு இவற்றினால் ப்ராணன் தோற்றத்தையடைந்தது. (31)

இந்திரியங்கள், சப்தாதிகளான குணங்களில் ஆத்மாவை= ஸ்வபாவத்தை உடையன. அதாவது:—விஷயத்தில் நோக்காகிற ஸ்வபாவமுடையனவென்றும். சப்தாதி குணங்களோ பூதாதியான அஹங்காரத்திலிருந்து உண்டாகின்றன. (அதாவது:—சப்தாதி விஷயங்கள் அஹங்கார கல்பிதமான சோபனஸ்வபாவமுள்ளன வேயன்றி இயற்கையிலில்லை என்றும்.) மனதோ எல்லாவிகாரங் களுடையவும் ஸ்வரூபமாக இருக்கிறது. (அதாவது:—மனதானது தாமஸங்களான விஷயங்களில் ஸங்கல்பத்தையோ விகல்பத்தையோ செய்கின்றதேயொழிய "இது விடத்தக்கது" "இது அங்கீகரிக்கத் தக்கது" என்ற பகுத்தறிவை தருவதில்லை என்றும்.) புத்தியோ விக்ஞான ஸ்வரூபமுள்ளதாக இருக்கிறது. (அதாவது:—புத்தி யானது மனஸ்ஸினால் கல்பிக்கப்பட்ட தாமஸங்களான விஷயங் களை நிஸ்சயிக்கிறதேயொழிய இயற்கையில் ஆத்ம நிஸ்சயம் செய்வ தில்லை என்றும்) (32) பூமி முதலிய (பூமி, ஜலம், தேஜஸ், வாயு,

---

‡ இவ்விதம் அதிதைவாதிபேதத்தைப் பிரித்து உபதேசித்து அவற் றின் அம்சபூதங்களான தாது முதலியவற்றின் ஸ்வரூபத்தை இதுமுதல் இரண்டு சுலோகங்களினாலுபதேசிக்கிறார். * த்வக் முதல் எலும்பு முடிய வுள்ள ஏழு தாதுக்களும் பொதுவாய் பஞ்சபூதங்களின் காரியங்களாக இருந்தபோதிலுங்கூட வாயு ஆகாசம் இரண்டும் ஆஹாராதிரூபமாகத் தாதுவிருத்திக்குக் காரணமாகவாகாமையால் பூமி ஜலம் தேஜஸ் இவற் றின் காரியங்களாகமட்டும் சொல்லப்பட்டன.

विज्ञानरूपिणी ॥ ३२ ॥ एतद्भगवतो रूपं स्थूलं ते व्याहृतं मया । महादिभिश्चावरणैरष्टभिर्बहिरावृतम् ॥ ३३ ॥ अतः परं सूक्ष्मतममव्यक्तं निर्विशेषणम् । अनादिमध्यनिधनं नित्यं वाङ्मनसः परम् ॥ ३४ ॥ अमुनी भगवद्रूपे मया ते अनुवर्णिते । उभे अपि न गृह्णन्ति मायासृष्टे विपश्चितः ॥ ३५ ॥ स वाच्यवाचकतया भगवान्ब्रह्मरूपधृक् । नामरूपक्रिया धत्ते सकर्माकर्मकः परः ॥ ३६ ॥ प्रजापतीन्मनून्देवानृषीन्पितृगणान्पृथक् । सिद्धचारण-

---

ஆகாசம், அஹங்காரத்துவம், மஹத்தத்துவம் ப்ரகிருதி இவையாகிய) எட்டு ஆவரணங்களினுல் வெளியில் மறைக்கப்பட்டதும், ஸ்தூலமுமான இந்த பகவத்ரூபமானது என்னுல் உனக்குச் சொல்லப்பட்டது. (33) இதற்குக் காரணமாயுள்ள ஸமஷ்டி சூக்ஷ்மசரீரமோவெனில் அவ்யக்தமும்=எந்த இந்திரியங்களுக்கும் புலப்படாததும், நிர்விசேஷணமும்=வர்ணம் ஆகாரம் முதலியனவற்றதும், உத்பத்தி ஸ்திதிலயம் இவையற்றதும், நித்யமும்=எப்பொழுதும் ஒரே ரூபமுள்ளதும், வாக்கு மனஸ் இவற்றுக்குப் பரமானதும்=எட்டாததும், ஆகும். (34) என்னுலுனக்கு உபதேசிக்கப்பட்ட இந்தப் பகவத்ரூபங்கள் இரண்டும் மாயையினுல் ஸிருஷ்டிக்கப்பட்டமைபற்றி வித்வான்கள்=ப்ரம்ஹஸாக்ஷாத்காரத்தை யடைந்தவர்கள் இவற்றை உண்மையானதென அங்கீகரிப்பதில்லை. (35)

(*)அந்தப்பகவான் ப்ரம்ஹதேவனின் ரூபத்தைத்தரித்தவராய்க் கொண்டு தான்வாச்யமாகவும் வாசகமாகவுமிருப்பதால் (வாசகமாக இருப்பதன்மூலம்) நாமங்களை (பெயர்களை)யும், (வாச்யமாக இருப்பதன் மூலம்) ரூபங்களையும், கிரியைகளையும் தரிக்கிறார். மாயையினுல் கர்மாவுடன்=வியாபாரத்துடன், கூடினவராக இருப்பினும் உண்மையில் அகர்மகரும்=எவ்வித வியாபாரமுமற்றவரும், பரனுமேயாவார். (36) அதாவது:—ப்ரஜாபதிகளையும், (ப்ரஜாபதிகள் என்ற பெயர்களையும், அப்பெயரினுல் சொல்லப்படும் ரூபங்களையும்,

---

(*) "यद्रूपगुणकर्मकः" என ப்ரம்ஹதேவனுக்குப் பகவான் எதைச் சொன்னாரோ அதை விரித்துரைக்க வேண்டி ப்ரம்ஹாதி ரூபங்களையும் அவற்றின் கர்மங்களையும் இந்த 36-வது சுலோகம் முதல் 43-வதுசுலோகம் முடியவுள்ள 8 சுலோகங்களினுலுபதேசிக்கிறார்.

गन्धर्वान्विद्याध्रासुरगुह्यकान् ॥३७॥ किन्नराप्सरसो नागान्सर्पान्किंपुरुषो-
रगान्। मातृ रक्षःपिशाचांश्च प्रेतभूतविनायकान् ॥ ३८ ॥ कूश्माण्डोन्माद-
वेतालान्यातुधानान्ग्रहानपि। खगान्मृगान्पशून्वृक्षान्गिरीन्नृप सरीसृपान्
॥ ३९ ॥ द्विविधाश्चतुर्विधा येऽन्ये जलस्थलनभौकसः। कुशलाकुशला
मिश्राः कर्मणां गतयस्त्विमाः॥ ४० ॥

सत्त्वं रजस्तम इति तिस्रः सुरनृनारकाः। तत्राप्येकैकशो राजन्भि-
द्यन्ते गतयस्त्रिधा। यदैकैकतरोऽन्याभ्यां स्वभाव उपहन्यते ॥ ४१ ॥ स

